1.50

ஸ்ரீ:

# அஷ்டப்பிரபந்தம்

## விளக்கக் குறிப்புரையுடன்

CONNEMARA PUBLIC LIBRARY
28 JAN 1958
MADRAS

OFFICE OF THE ... BOOKS
1956
MADRAS

பதிப்பாசிரியர்:
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

பிரசுராலயம்:
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
53-56, பவழக்காரத் தெரு :: சென்னை-1

ஸ்ரீ :

# அஷ்டப்பிரபந்தம்

## விளக்கக் குறிப்புரையுடன்

பதிப்பாசிரியர் :
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

பிரசுராலயம் :
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
53-56, பவழக்காரத் தெரு :: சென்னை-1

ஸ்ரீ:

# அஷ்டப்பிரபந்தம்

## விளக்கக் குறிப்புரையுடன்

பதிப்பாசிரியர்:

வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

பிரசுராலயம்:

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

53-56, பவழக்காரத் தெரு, சென்னை-1.

பதிப்புரிமை] 1955 [விலை ரூ. 4

The Progressive Printers, Madras—1

# முன்னுரை

செந்தமிழ் இலக்கிய வரலாற்றில் பிற்காலச் சிற்றிலக்கியம் புனைந்த கவிஞருள் தலை சிறந்தவரெனப் போற்றுதற்குரிய தகுதி வாய்ந்தவர் திவ்விய கவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்னும் பேரறிஞர். இவர் அழகிய மணவாள தாசர் எனவும் வழங்கப்படுவர். இவரால் பாடப்பெற்ற சிற்றிலக்கியத் தொகுதியே அஷ்டப்பிரபந்தம் என்னும் இந்நூல். இதிலடங்கியுள்ள எட்டுப் பிரபந்தங்களும் கற்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கனிவுடையவை; அணி நலம் பலவும் வாய்ந்து திகழ்பவை; 'சொல் நோக்கும், பொருள் நோக்கும், தொடை நோக்கும், நடை நோக்கும், துறையின் நோக்கோடு எந்நோக்கும்' கொண்டு ஒளிரும் இலக்கியங்களாய்த் திகழ்பவை; பத்திச்சுவை கனிந்தவை.

தமிழ் பயிலும் மாணவர் முதற்கண் இச்சிற்றிலக்கியங்களை முறையாக ஆசிரியரிடம் பாடங்கேட்டுப் பயிற்சி பெறுவது பன்னெடுநாட்பழக்கமாய் இருந்து வருகிறது. இந்நூல்களில் ஈடுபட்டுப் பயில்பவர், தமிழ் மொழிப்பற்று மிகுதியும் உடையவராய், மேலும் மேலும் தமிழ்க்கடலிற்புகுந்து திளைக்கும் ஆர்வமுடையவராய்த் திகழ்வர் என்பது ஒருதலை.

இக்காரணங்கருதியே இந்நாளில் வித்துவான் தேர்விற்குப் பயிலும் மாணவர்க்கும் இப்பிரபந்தங்களுள் ஒவ்வொன்று பாடநூற்பட்டியிற் சேர்க்கப்பட்டு வருகின்றது.

இப்பிரபந்தங்களுள் சிலவற்றிற்குத் தமிழ்ப் பேரறிஞர்கள் இயற்றிய பழைய உரைகளும், அஷ்டப்பிரபந்தம் முழுவதற்கும் பிற்கால உரையாசிரியர்களுள் பேராசிரியர்களாய்த் திகழ்ந்த ஸ்ரீ சடகோப ராமானுசாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார் இருவரும் இயற்றிய உரையும் பல்லோராலும் பயிலப்பட்டு வந்தன. இந்நாள் அந்நூல்கள் கிடைக்கப் பெறாமையால், மாணவர்களுக்குப் பயன்படுதல் கருதி, யான் இப்பதிப்பை வெளியிடலாயிற்று.

இப்பதிப்பில் திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்து மாலை என்னும் இரு பிரபந்தங்களையும் சுருக்கமான அடிக்குறிப்புகளுடனும், ஏனைய ஆறு பிரபந்தங்களையும் விளக்கக் குறிப்புரையுடனும் பதிப்பித்துள்ளேன். இவை தமிழ் பயிலும் மாணவர்க்குப் பெரிதும் பயன்படலாமெனக் கருதுகின்றேன். மூல பாடம் கற்கும் மாணவர் முதற்கண் விளக்கக் குறிப்புரையுடன் கூடிய ஆறு பிரபந்தங்களைப் படித்தபின் முதலிரண்டு பிரபந்தங்களைப் படிப்பது நலமாகும்.

இதனை மாணவர் பதிப்பாக வெளியிட வேண்டும் என்னும் என் விருப்பத்திற்கு இணங்கி அழகிய பதிப்பாக வெளியிட்டரு ளிய ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தாரின் தமிழ்த்தொண்டு ஆர்வத் தைப் பெரிதும் பாராட்டுகின்றேன் !

கச்சியம்பதி,
1-11-55

மே. வீ. வே.

# நூலாசிரியர் வரலாறு

'தெய்வக் கவிஞர்' எனப் பொருள்படும் 'திவ்விய கவி' என்னும் தெய்வப்புலமைபெற்ற பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்னும் பெரியார் 'அஷ்டப்பிரபந்தம்' என வழங்கும் இந்நூலாசிரியர். 'அஷ்டப் பிரபந்தம் கற்றவன் அரைப்பண்டிதன்,' என்னும் வழக்காறு, அஷ்டப்பிரபந்தத்தின் சிறப்பினை உணர்த்துமுகத்தால், ஆசிரியரின் தமிழ்ப் புலமையையும் உணர்த்த எழுந்ததாகும். 'தமிழிற் புலமை பெற விரும்புகிறவர் இவ்வொரு நூலைக் கற்பதனால் அரைப்புலமை அமையப்பெறுவர்,' என்பதால், இந்நூலில் செந்தமிழ்க் கருவூலத்தில் அமைந்துள்ள பல நூற்கருத்துக்கள் பொதிந்துள்ளன என்பதை அறியலாம்.

இந்நூலில் அடங்கியுள்ள எட்டுப் பிரபந்தங்களில் ஆழ்வார்கள் அருளிச்செயலாகிய நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தின் பொருட்சிறப்பும், ஸ்ரீமந்நாதமுனிகள் உள்ளிட்ட குரு பரம்பரையினைச் சார்ந்த வைணவப் பெருமக்களின் அருளிச்செயல்களின் அரும்பொருள்களும் ஆங்காங்கே அமைந்திருப்பது கற்பார்க்குக் கழிபேருவகை விளைப்பதாகும்.

'சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்கும்
நடைநோக்குந் துறையி னோக்கோ
டென்னோக்குங் காணவிலக் கியமாவ
தன்றி,இதில் ஈடு பட்டோர்
நன்னோக்கும் புத்தியும்பத் தியும்பெறுவர் ;
முத்தியுண்டாம்'

என்னும் திருவரங்கக் கலம்பகத்தின் தனியன் இந்நூலின் சிறப்பை உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெள்ளிதிற் புலப்படுத்தும்.

ஐயங்கார் அழகிய மணவாள தாசர் என்றும் வழங்கப்படுவார். இவர் அந்தணர் குலத்தில் அவதரித்தவர் ; வீர வைணவர்; மறந்தும் புறந்தொழா மாந்தர் குழுவைச் சேர்ந்தவர் ; வைராக்கிய சீலர்.

'வானிட்ட கீர்த்தி வளர்கூரத் தாழ்வான்' எனத் தொடங்கும் திருவரங்கக் கலம்பகத்தில் உள்ள பட்டர் துதியாகிய காப்புச் செய்யுள், ஐயங்கார் 'பட்டர்' என்னும் பெரியார் பக்கல் ஆசிரயித்து அருங்கலை பயின்றவர் என்பதனைப் புலப்படுத்தும்.

ஐயங்கார் நிரம்பிய தமிழ்ப்புலமையுடன் உலகியல் அறிவும் பெற்றுத் திகழ்ந்தவர். இவர் கி. பி. 1623 முதல் 1659 வரை

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் என்னும் நாயக்கவமிசத்து அரசரின் அவையில் ஓர் அலுவலராய் அமர்ந்து சிறிது காலம் வாழ்க்கை நடத்தி வந்தார். ஆயினும், 'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே,' என்னும் அனுபவமொழிக்கு இணங்க, அல்லும் பகலும் இவர் உள்ளம் ஆண்டவன் திருவருளையே அவாவி நின்றது.

ஐயங்கார் ஒரு நாள் அலுவலில் ஈடுபட்டிருந்த போது திடீரெனத் தம் உத்தரியத்தைக் 'கிருஷ்ணா! கிருஷ்ணா!' என்று சொல்லிக்கொண்டே இரு கைகளாலும் கசக்கினர். அதைக் கண்ட அருகிருந்தார் சிலர், 'ஐயங்காரே, நீர் இங்ஙனம் செய்ததற்குக் காரணம் யாது? மன மயக்கமோ?' என்று கேட்டனர். ஐயங்கார், 'அன்பர்களே, திருவரங்கத்தில் நம் பெருமாள் திருத்தேரில் எழுந்தருளுகையில், பந்தம் பிடிப்பவர் கவனக்குறைவால் திரைச்சீலையில் தீப்பற்றியது! அதை அணைத்தற்காகவே இங்ஙனம் செய்தோம்!' என்று ஆவேசம் மேற்கொண்டவரைப்போல அறைந்தார்.

அதைக்கேட்ட அன்பர்கள், ஐயங்காருக்கு ஏதோ மனமாற்றம் ஏற்பட்டுள்ளது என்று கருதி, எள்ளி நகையாடினர்கள். இச்செய்தி திருமலை நாயக்கர் செவிக்கும் எட்டியது. நாயக்கரும் ஞானபத்தி வைராக்கியங்களிலே பற்றுடையவர் ஆதலின், மற்றவரைப்போல இச்செய்தி கேட்டு எள்ளி நகையாடாமல், திருவரங்கத்திற்கு ஆள் போக்கி உண்மை அறிந்துவரச் செய்து, ஐயங்காரிடத்து அளவிலாப் பெருமதிப்புடையவராய், அவரை அழைத்து, 'ஐயன்மீர், நீர் மகானுபாவராவீர்! உம் பெருமையறியாது இதுகாறும் உம்மை என் சபை அலுவலராக எண்ணித் தொண்டு கொண்ட என்னை மன்னித்தருள வேண்டும்! இனி நீவிர் என் சேவையிலிருந்து நீங்கி, உம் மனம் போலத் திருமாலுக்குத் தொண்டு செய்திரும். உம் வாழ்க்கைக்கு வேண்டுவன அனைத்தும் இவ்விடமிருந்து பெறலாம்,' எனக் கூறி வணங்கினர்.

ஐயங்கார், 'பெரியீர், பெரிய கோயில் தளிகைப் பிரசாதமும், ஆண்டவனைத் தியானித்திருக்க அங்கோரிடமும் ஏற்பாடு செய்வது அமையும்,' என்றனர். உடனே நாயக்கர் பெரிய கோயில் சலவைக்கல் மண்டபப் பிராகார வடமேற்கு மூலையில் ஐயங்கார் தங்கியிருத்தற்கு ஓர் அறையும், அவர் பசி தீரத் தளிகைப் பிரசாதமும் ஏற்பாடு செய்தனர்.

ஐயங்கார் அங்கிருந்து ஆண்டவன் திருத்தொண்டிலேயே அனவரதமும் ஈடுபட்டு, ஆண்டவன் புகழை அரிய பிரபந்தங்களால் வெளியிட்டு, ஆனந்தமுற்றிருந்தார். சீடர் பலர் அவரை

அடுத்து அருந்தமிழையும் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழியையும் அறிந்து மகிழ்வாராயினர்.

ஒரு நாள் ஐயங்கார் சீவைகுந்தநாதன் திருக்கோயிலின் முன்பு சேவித்துத் தம்மை மறந்து தியானித்திருக்கையில் கோயி லுக்குரிய நொண்டிப்பசுக் காலிடறி அவர்மேல் விழ, அவர் துன்புற்று,

"துளவ! துளவ!'எனச் சொல்லுஞ்சொற் போச்சே!
அளவில் நெடுமூச்சும் ஆச்சே!—முளரிக்
கரங்கால் குளிர்ந்தவே! கண்ணும்பஞ் சாச்சே!
இரங்காய் அரங்கா இனி!"

என்று சொல்லிக்கொண்டே திருநாட்டை அலங்கரித்தனர் என்பர் பெரியோர்.

ஐயங்காரின் மறந்தும் புறந்தொழா மாண்பினை உணராத சிலர், அவரைச் சிவநிந்தனை செய்தவர் எனத் தூற்றுவர். ஒருவர், 'நான் என் ஆண்டவனையே முழுமுதற்பொருளாக நம்புகிறேன். அவனே எனக்குப் புகலிடம். நான் மற்றவருக்குப் பொய்யடிமை செய்யேன்,' என்று வைராக்கிய சீலராய் இருப்பது வேறு; இழிந்த மனப்பான்மையால் எக்கடவுளரையும் ஏசி நிற்கும் நிலை வேறு; 'இதனைத் தெய்வம் ஒன்றென்றிரு,' என்னும் அறிஞர் வாக்கு அறிவுறுத்தும்.

இது பற்றியே புலவர் புராணம் பாடிய முருகதாச சுவாமிகள், மணவாளதாசர் வரலாற்றை விவரிக்கையில், 'இவரைச் சிவ நிந்தனை செய்தவர் என்று சிலர் ஏசுவர்; அங்ஙனம் ஏசுவார் பழுத்த சைவராகார்; நன்கு சிந்திக்குங்கால் இவருக்கு விரோத மனப்பான்மை இல்லையென்பது விளங்கும்,' என்னும் கருத்தால்,

'சிவனை நிந்தனை செய்தவ னேயென
இவனைச் சிற்சில் இளஞ்சைவர் ஏசுவர்;
அவன்றன் மாதவன் ஆகத்திற் பாதியென்
றுவந்து பாடிய பாக்களும் உள்ளவே.'

என்று சான்று பகர்கின்றார்.

'திருநரையூர் நம்பி மேகவிடு தூது' என்னும் பிரபந்தமும் திவ்வியகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இயற்றியதே. அந்தப் பிரபந்தமும் செந்தமிழ் வளங்கொழித்துத் திகழ்வதாகும்.

# பொருள் அடக்கம்


| பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திருவரங்கக் கலம்பகம் | .... | 1 |
| 2. | திருவரங்கத்து மாலை | .... | 38 |
| 3. | திருவரங்கத்தந்தாதி | .... | 57 |
| 4. | சீரங்கநாயகர் ஊசல் திருநாமம் | .... | 96 |
| 5. | திருவேங்கட மாலை | .... | 112 |
| 6. | திருவேங்கடத்தந்தாதி | .... | 158 |
| 7. | அழகர் அந்தாதி | .... | 206 |
| 8. | நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி | .... | 253 |
| | அருஞ்சொற்பொருள் அகராதி | .... | 302 |
| | செய்யுள் முதற்குறிப்பு அகராதி | .... | 322 |

ஸ்ரீ:

# அஷ்டப்பிரபந்தம்

## 1. திருவரங்கக் கலம்பகம்

### [தனியன்கள்]

1] நேரிசை வெண்பா [க

ஆழ்வார்முன் பின்னவர்க்கும் ஆமறைதந்[1] தார்தமிழால்
வாழ்வார் மணவாளர் மாண்பவருள்—தாழ்வாரும்
எம்போ லியர்க்கும் இரங்கியரங் கக்கலம்ப
கம்போதம் நல்கவைத்தார் காண்.

2] அறுசீர் ஆசிரிய விருத்தம் [உ

சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்கும்
நடைநோக்குந் துறையி னோக்கோ
டென்னோக்கும் காணவிலக் கியமாவ
தன்றி,இதில் ஈடு பட்டோர்
நன்னோக்கும் புத்தியும்பத் தியும்பெறுவர்;
முத்தியுண்டாம்; நானென் சொல்கேன்!
பன்னோக்க மணவாளர் பகர்அரங்கக் கலம்பகத்தைப்
பாரீர் பாரீர்!

---

பா—ம்: 1. மாமறை

'முன் ஆழ்வார் பின்னவர்க்கும் ஆம் மறை தமிழால் தந்தார்; மாண்பவருள் வாழ்வார்—மணவாளர்—தாழ்வு ஆரும் எம்போலியர்க்கும் போதம் நல்க இரங்கி, அரங்கக் கலம்பகம் வைத்தார்,' என இயைக்க.

'சொல் நோக்கும், பொருள் நோக்கும், தொடை நோக்கும், நடை நோக்கும், துறையின் நோக்கோடு, எந்நோக்கும் காண இலக்கியம் ஆவது அன்றி, இதில் ஈடுபட்டோர், நல் நோக்கும், புத்தியும், பத்தியும் பெறுவர்; முத்தி உண்டாம்; பல் நோக்க மணவாளர் பகர் அரங்கக் கலம்பகத்தை நான் என் சொல்கேன்! பாரீர், பாரீர்,' என இயைக்க.

## காப்பு :

### [ஆழ்வார் பன்னிருவர்]

3] கட்டளைக்கலித்துறை [௩

வேதம் தொகுத்துத் தமிழ்ப்பாடல் செய்த
விமலன், பொய்கை,
பூதன், மயிலையர் கோன், புகழ்ச் சேரன், புத்
தூரன், தொண்டர்
பாதம் தருந்துகள், மாமழி சைக்குமன்,
பாணன், மங்கை
நாதன், மதுர கவி, கோதை பாதங்கள்
நண்ணுதுமே.

4] நம்மாழ்வார் துதி : [௪

மறைப்பாற் கடலைத் திருநாவென்[1] மந்தரத்
தாற்கடைந்து
துறைப்பாற் படுத்தித் தமிழா யிரத்தின்
சுவையமிர்தம்
கறைப்பாம் பணைப்பள்ளி யான் அன்பர் ஈட்டம்
களித்தருந்த
நிறைப்பான் கழலன்றிச் சன்ம விடாய்க்கு
நிழலில்லையே!

5] இராமானுசர் துதி: [௫

பிடிக்கும் பரசம யக்குல வேழம் பிளிறவெகுண்
டிடிக்குங் குரற்சிங்க ஏறனை யான்எழு பாருமுய்யப்
படிக்கும் புகழெம் இராமா னுசமுனி பல்குணமும்
வடிக்கும் கருத்தினர்க் கேதிரு மாமணி மண்டபமே.

6] பட்டர் துதி : [௬

வானிட்ட கீர்த்தி வளர்கூரத் தாழ்வான் மகிழவந்த
தேனிட்ட தார்நம் பெருமாள் குமாரர் சிவனையயன்
தானிட்ட சாபம் துடைத்தாள் அரங்கர்சங் காழிபுயம்
நானிட்டன் என்றருள் பட்டர் பொன் தாள்கதி நந்தமக்கே.

---

பா—ம் : 1. திருநாவின்

## நூல் :

7] மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா [க

[தரவு]

சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசின் வீற்றிருக்கும்
நீர்பூத்த திருமகளும் நிலமகளும் அடிவருடச்
சிறைப்பறவை புறங்காப்பச் சேனையர்கோன் பணிகேட்ப
நறைப்படலைத் துழாய்மார்பில் நாயிறுபோல் மணிவிளங்க
அரியதா னவர்க்கடிந்த ஐம்படையும் புடைதயங்கக்
கரியமால் வரைமூளரிக் காடீன்று கிடந்தாங்குப்
பாயிரநான் மறைபரவப் பாற்கடலுள் பருமணிச்சூட்
டாயிரவாய்ப் பாம்பணைமேல் அறிதுயிலின் இனிதமர்ந்தோய்! 1

மண்ணகம் துயர்நீங்க வானகம் தொழுதேத்தக்
கண்ணகன் சோணாட்டுக் காவிரிவாய்ப் புளினத்துப்
பம்புகதிர் விசும்பிரவி பசும்புரவி வழிவிலங்கு
செம்பொன்மதில் ஏழுடுத்த திருவரங்கப் பெருங்கோயில்
ஆணிப்பொன் தகடுரிஞ்சும் அணிக்கதவ நீள்வாயில்
மாணிக்க வெயில்பரப்பும் வயிரமணி விமானத்துள்
மின்னிலங்கு தொடிவலய வியன்வலக்கை கீழ்கொடுத்துத்
தென்னிலங்கைத் திசைநோக்கித் திருநயனம் துயில்வோய்! கேள்: 2

[தாழிசை]

தேவராய்த் தேவர்க்கும் தெரியாத ஒளியுருவாய்
மூவராய் மூவர்க்குள் முதல்வனாய் நின்றாய்நீ.[1] 1

போற்றுவார் போற்றுவதுன் புகழ்ப்பொருளே ஆதலினால்,
வேற்றுவா சகமடியேன் விளம்புமா றறியேனால்! 2

பணித்தடங்கா இமையவர்க்கும் பங்கயத்தோன் முதலோர்க்கும்
புணித்தடங்காப் புகழ்அடியேன் பணித்தடங்கற் பாலதோ? 3

'யாம்கடவுள்' என்றிருக்கும் எவ்வுலகிற் கடவுளர்க்கும்
ஆழ்கடவுள் நீயென்றால் அஃதுனக்கு வியப்பாமோ? 4

அனைத்துலகும் அனைத்துயிரும் அமைத்தளித்துத் துடைப்பதுநீ
நினைத்தவினை யாட்டென்றால் நின்பெருமைக் களவாமோ? 5

ஒருதரிய உயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும்
ஒருதனிநா யகமென்றால் உன்புகழ்க்கு வரம்பாமோ? 6

---

பா-ம் :—1. நின்றோய் நீ

[அராகம்]

உருவென அருவென உளனென இலனென
அருமறை இறுதியும் அறிவரு நிலைமையை. 1

இவரிவர் இறையவர் எனமன வுறுதியொ
டவரவர் தொழுஅறு சமயமும் அருளினை. 2

கடுவளி கனல்புனல் ககனமொ டகலிடம்
உடுபதி கதிரவன் உருவமும் அருளினை. 3

கடிமலர் அடியிணை கருதினர் பெறுகென
அடிநடு முடிவற அருள்பர கதியினை. 4

[தாழிசை]

ஒருநாலு முகத்தவனோ டுலகீன்றாய் என்பரதுன்
திருநாபி மலர்ந்ததல்லால் திருவுளத்தில் உணராயால். 1

மேருகிரி உடலவுணன் மிடல்கெடுத்தாய் என்பரதுன்
கூருகிரே அறிந்ததல்லால், கோவே!நீ அறியாயால். 2

பன்றியாய்ப் படியெடுத்த பாழியாய் என்பரது
வென்றியார் உனதெயிற்றின் மென்றுகள்போன் றிருந்ததால். 3

அண்டமெலாம் உண்டையென்பர் அறியாதார்; ஆங்கவைநீ
உண்டருளும் காலத்தில் ஒருதுற்றுக் காற்றாவால். 4

[நாற்சீர் ஈரடி அம்போதரங்கம்]

நஞ்சமும் அமுதமும் நரகும் வீடுமாய்
வஞ்சமும் ஞானமும் மறப்பும் ஆயினை. 1

இருவினைப் பகுதியும் இன்ப துன்பமும்
கருணையும் வெகுளியும் கருத்தும் ஆயினை. 2

[முச்சீர் ஓரடி அம்போதரங்கம்]

அலைகடல் வயிறுக லக்கினை. 1
அவுணரை மதுகைய டக்கினை. 2
மலைகட களிறுவ தைத்தனை. 3
மலைதலை கவிழவெ டுத்தனை. 4

[இருசீர் ஓரடி அம்போதரங்கம்]

மண்ணை விண்டனை. 1
வெண்ணெய் உண்டனை. 2

மருதி டந்தனே. 3
எருத டர்ந்தனே. 4
உண்ணி றைந்தனே. 5
எண்ணி றந்தனே. 6
ஒருமை யாயினே. 7
பெருமை மேயினே. 8

[தனிச்சொல்]

எனவாங்கு

[ஆசிரியச்சுரிதகம்]

மலர்தலை யுலகத்துப் புலமை சான்ற
பதின்மரும் பணித்த பாடலோ தையொடு
முதுமறை கறங்க முரசம் ஆர்ப்ப
வலம்புரி பிளிறும் பொலம்புரி கோயில்
ஆழியஞ் செல்வ! ஆதியம் பரம!
வாழி வாழி! மாயோய் வாழி!
நெடியோய் வாழி! நின்மாட் டொன்றே
அடியேன் வெண்டுவ தஃதுநீ மறுக்கேல்:
பூவரும் அயன்முதல் யாவரும் அறியா
மூவுல களந்தநின் சேவடி வாழ்த்தித்
தொழுதகைத் தொண்டர்தம் தொண்டருள் சேர்க்காது,
எழுவகைத் தோற்றத் தின்னுப் பிறப்பின்
என்பொழியாக்கையுள் சேர்ப்பினும், அவர்பால்
அன்பொழி யாமை அருள்மதி எனக்கே.

8] நேரிசை வெண்பா [உ

எனக்கே திருவரங்க னேபிரான்; எம்மான்
தனக்கே அடிமை தமியேன்;—புனக்கேழ்
மருத்துளவோன் மேலன்றி மற்றொருவர் மேலென்
கருத்துளவோ ஆராயுங் கால்?

9] கட்டளைக்கலித்துறை [ங

காலா யிரம்முடி யாயிரம் ஆயிரம் கைபரப்பி
மேலா யிரந்தலை நாகம் கவிப்பவிண் பூத்தகஞ்சம்
போலாயி ரங்கண் வளரும் பிரான்பொன் னரங்கனென்றே
மாலாய் இரங்கவல் லார்க்கெய்த லாந்திரு வைகுந்தமே.

10] அறுசீர் ஆசிரிய விருத்தம்

வைகலந்த மூவிலைவேல் ஈசற்கும்
வாசவற்கும் வாசப் பூமேல்
மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கும்
மேலாவீற் றிருப்பர் மாதோ
பைகலந்த பாம்பணைமேல் திருவரங்கப்
பெருநகருள் பள்ளி கொள்ளும்
கைகலந்த நேமியான் திருநாமத்
தொருநாமம் கற்றார் தாமே.

11] எண்சீர் ஆசிரிய விருத்தம் [ரு

கற்றார் எனினும் பதினால் உலகும்
கண்டார் எனினும் தண்டா மிகுபற்று
அற்றார் எனினும் திருமால் அடியார்
அல்லா தவர்வீ டில்லா தவரே;
பொற்றா மரையாள் கணவன் துயிலும்
பொற்கோ யிலையே புகழ்வார் பணிவார்
மற்றார் எனினும் பெற்றார் அவரே
வானோர் திருமா மணிமண் டபமே.

12] எழுசீர் ஆசிரியச் சந்த விருத்தம் [சா

மண்டலமும் விண்டலமும் நின்றவட குன்றமும்
வளைந்தமலை யுங்க டலுமு
தண்டமும் அகண்டமும் அயின்றவர் துயின்றருள்
அரும்பதி விரும்பி வினவின்,
கொண்டல்குமு றுங்குடகி ழிந்துமத குந்தியகில்
கொண்டுநுரை மண்டி வருநீர்
தெண்டிரைதொ றுந்தரள முங்கனக முஞ்சிதறு
தென்றிருவ ரங்க நகரே.

[புயவகுப்பு]

13] நாற்பத்தெண்சீர் ஆசிரிய வண்ண விருத்தம்

நகுகதிர் வழங்கு தகடுபடு செம்பொன்
நவமணி குயின்ற தொடியணி யணிந்து
ககனவி லிடுநீல வெற்பொத் திருந்தன;
நறியபுது மன்றல் திசைமுழுதும் அண்ட

நறவுகுதி கொண்ட துளவணி அலங்கல்
மதுகரம் ஒருகோடி சுற்றப் புனைந்தன ;
நளினமட மங்கை குவலய மடந்தை
சனகன தணங்கு பொதுவர்மகள் என்றிவ்
வனிதையர் தனபாரம் மொத்தக் குழைந்தன ;
நதிபதி சுழன்று கதறிநுரை சிந்த
அரவக டுரிஞ்சி அலறஅல மந்து
வடவரை உடல்தேய நட்டுக் கடைந்தன ;

இகலியிரு குன்றில் இருசுட ரெழுந்து
பொருவதென விம்ப மதிமுகம் இலங்கும்
இருகுழை இருபா டலைப்பச் சிறந்தன ;
இணையற நிமிர்ந்து வலியொடு திரண்டு
புகழொடு பரந்து புழுகொடும் அளைந்து
கலவையின் அணிசேறு துற்றுக் கமழ்ந்தன ;
எதிரொருவர் இன்றி அகிலவுல குந்தன்
அடிதொழ இருந்த இரணியன் மடங்க
முரணிய வரைமார்பம் ஒற்றிப் பிளந்தன ;
எறிகடல் கலங்கி முறையிட வெகுண்டு
நிசிசரர் இலங்கை அரசொடு மலங்க
ஒருசிலை யிருகால் வளைத்துச் சிவந்தன ;

மிருகளவின் நின்ற விளவுகனி சிந்தி
மடியவிடு கன்று குணிலென எறிந்து
பறவையின் அகல்வாய்கி ழித்துப் பகிர்ந்தன ;
வெறிபடு குருந்தை முறிபட அடர்ந்து
குடநடம் மகிழ்ந்து குரவைகள் பிணைந்து
பொருதொழில் எருதேழு செற்றுத் தணிந்தன ;
வெடிபட முழங்கி யெழுமுகிலும் அண்ட
ரொடுநிரை தியங்க எறிதிவலை கண்டு
தடவரை குடையாவெ டுத்துச் சுமந்தன ;
விழிவடவை பொங்க எதிர்பொர நடந்த
களிறுளம் வெருண்டு பிளிறிட முனிந்து
புகர்முக இருகோடு பற்றிப் பிடுங்கின ;

அகலிடமும் உம்பர் உலகமும் நடுங்கி,
'அபயமடி'யெங்கள் அபயம்!'என வந்து
விழுதொறும் இடையூ றகற்றிப் புரந்தன ;
அருகுற விளங்கும் எறிதிகிரி சங்கம்

வெயிலொரு மருங்கும் நிலவொரு மருங்கும்
எதிரெதிர் கதிர்வீச விட்டுப் பொலிந்தன;
அருமறை துணிந்த பொருள்முடிவை இன்சொல்
அமுதொழுகு கின்ற தமிழினில் விளம்பி
அருளிய சடகோபர் சொற்பெற் றுயர்ந்தன;
அரவணை விரும்பி அறிதுயில் அமர்ந்த
அணிதிரு அரங்கர் மணிதிகழ் முகுந்தர்
அழகிய மணவாளர் கொற்றப் புயங்களே.

14] நேரிசை வெண்பா [அ

புயம்நான் குடையானைப் பொன்னரங்கத் தானை
அயனும் திருவுந்தி யானை—வியனும்
பரகதிக்குக் காதலாய்ப் பாடினேன் கண்டீர்
நரகதிக்குக் காணமல் நான்.

15] கட்டளைக்கலித்துறை [கூ

நானந்த வைகுந்த நாடெய்தி வாழிலென்?
ஞாலத்தன்றி
ஈனம் தவாத நிரயத்து வீழிலென்?
யானடைந்தேன்
கோனந்தன் மைந்தனை நான்முகன் தந்தையைக்
கோயில்அச்சு
தானந் தனையெனக் காரா அமுதை
அரங்கனையே.

16] எண்சீர் ஆசிரிய விருத்தம் [கo

அரவில் நடித்தானும் உரவில் ஒடித்தானும்
அடவி கடந்தானும் புடவி இடந்தானும்
குரவை பிணைத்தானும் பரவை அணைத்தானும்
கோசலை பெற்றானும் வீசலை உற்றானும்
முரனை அறுத்தானும் கரனை ஒறுத்தானும்
முத்தி அளித்தானும் அத்தி விளித்தானும்
பரம பதத்தானும் சரம விதத்தானும்
பாயல் வடத்தானும் கோயில் இடத்தானே.

17] கட்டளைக்கலித்துறை [கக

தானே தனக்கொத்த தாள்தா மரைக்குச்
சரண்புகுந்தாள்
ஆனேன்; இனியுன் அருளறி யேன்;என
தாருயிரே!
தேனே!என் தீவினைக் கோர்மருந் தே!பெருந்
தேவர்க்கெல்லாம்
கோனே! அரங்கத் தரவணை மேற்பள்ளி
கொண்டவனே!

[மேகவிடு தூது]

18] நேரிசை வெண்பா [கஉ

கொண்டல்காள்! உம்மைக் குறித்தே தொழுகின்றேன்!
அண்டர்கா ணுஅரங்கத் தம்மானைக்—கண்டு
மனத்துள் அவத் தைப்படுமென் மையல்எல்லாம் சொல்லிப்
புனத்துளவத் தைக்கொணரீர் போய்.

19] கலி விருத்தம் [கங

போயவனி யிற்சில புறச்சமயம் நாடும்
பேயறிவை விட்டெழு பிறப்பையும் அறுப்பீர்
ஆயனை அனந்தனை அனந்தசய னத்தெம்
மாயனை அரங்கனை வணங்கிமரு வீரே.

20] எண்சீர் ஆசிரிய விருத்தம் [கச

மருவு தந்தையும் குருவும் எந்தையும்
மருள்கெ டுப்பதும் அருள்கொ டுப்பதும்
உருகு நெஞ்சமும் பெருகு தஞ்சமும்
உரிய ஞானமும் பெரிய வானமும்
திருவ ரங்கனர் இருவர் அங்கனர்
செங்கண் மாயனர் எங்கள் ஆயனர்
அருள்மு குந்தனர் திருவை குந்தனர்
அமல நாதனர் கமல பாதமே.

21] வேறு [கரு

பாதியாய் அழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்

2

'ஆதியாய்! அரவணையாய்!' என்பா ராகில்,
அவரன்றோ யாம்வணங்கும் அடிகள் ஆவார்?
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதில்நான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே.

22] கட்டளைக்கலித்துறை [கசா

புலையாம் பிறவி பிறந்தென்செய் தோம்?பொன்னி
பொன்கொழிக்கும்
அலையார் திருவரங் கத்தெம்பி ரான்நம
தன்னையொடும்
தொலையாத கானம் கடந்தவந் நாள்தடந்
தோறும்புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்ில மேநெஞ்ச மே!கழல்
தீண்டுகைக்கே!

23] அறுசீர் ஆசிரிய விருத்தம் [கள

தீண்டா வழும்பும் செந்நீரும்
சீயும் நரம்பும் செறிதசையும்
வேண்டா நாற்றம் மிகுமுடலை
வீணே சுமந்து மெலிவேனோ?
நீண்டாய்! தூண்டா விளக்கொளியாய்
நின்றாய் ஒன்றாய்! அடியாரை
ஆண்டாய்! காண்டா வனமெரித்த
அரங்கா! அடியேற் கிரங்காயே!

[தவம்]

24] கலிநிலைத்துறை [கஅ

காயிலை தின்றும் கானில் உறைந்தும் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்காள்!
தாயினும் அன்பன் பூமகள் நண்பன் தடநாகப்
பாயல் முகுந்தன் கோயில் அரங்கம் பணிவீரே.

[இதுவுமது]

25] கட்டளைக் கலித்துறை [கக

வீரரங் காகிய ஐவரை மாற்றி விடவரவின்
போரரங் காக நடித்தபொற் றாள்பற்றிப் 'பொன்னிநன்னீர்ச்
சீரரங்கா! நின் தொழும்பன்,' என்றேசிந்தைசெய்யில், அது
கூரரங் காண்நெஞ்ச மே! வஞ்ச மாயக் கொடுவினைக்கே.

26] நேரிசை வெண்பா [உ0

கேசவனை யேசெவிகள் கேட்க; திருவரங்கத்
தீசனையே சென்னி இறைஞ்சிடுக; — நேசமுடன்
கண்ணனையே காண்கவிரு கண்; இணர்கொள் காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துகவென் வாய்.

[இரங்கல்]

27] அறுசீர் ஆசிரியச் சந்த விருத்தம் [உக

வாயினி ரங்கினை ஆரமெ றிந்தனை
வால்வளை சிந்தினை தண்
பாயலை யுந்தினை மாலைய டைந்தனை
பாரி லுறங்கிலையால்,
கோயில ரங்கனை மாகன கந்திகழ்
கோகன கம்பொலியும்
ஆயிழை நண்பனை நீயும்வி ரும்பினை
யாருநெ டுங்கடலே!

28] கலிநிலை வண்ணத்துறை [உஉ

பிரிவாற்றுமையால் வருந்திய தலைமகள் இரங்கல்:

கடல்வழி விடநிசி சரர்பொடி படவிரு கண்சிறி
வடகயி லையினெழு விடைதழு வியதும றந்தாரோ?
அடலர வமளியில் அறிதுயில் அமரும ரங்கேசர்
இடர்கெட வருகிலர் முருகலர் துளவுமி ரங்காரே!

29] நேரிசை வெண்பா [உங

இரங்கத் தனித்தனியே எய்துகின்ற துன்பத்
தரங்கத்தை எதால் தடுப்பீர், — 'அரங்கர்க்குக்
கஞ்சம் திருப்பாதம்; கார்மேனி,' என்றவர்பால்
நெஞ்சம் திருப்பாத நீர்?

[இரங்கல்]

30] பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம் [௨௪

நீரி ருக்கமட மங்கை மீர்! கிளிகள்
தாமி ருக்கமது கரமெலாம்
நிறைந்தி ருக்கமட வன்னம் முன்னம்நிரை
யாயி ருக்கவுரை யாமல்யான்,
'ஆரி ருக்கிலுமென் னெஞ்ச மல்லதொரு
வஞ்ச மற்றதுணை இல்லை,' என்
றுத ரத்தினொடு தூது விட்டபிழை
ஆரி டத்துரைசெய் தாறுவேன் ?
சீரி ருக்குமறை முடிவு தேடரிய
திருவ ரங்கரை வணங்கியே
திருத்து ழாய்தரில் விரும்பி யேகொடு
திரும்பி யேவருத லின்றியே
வாரி ருக்குமுலை மலர்ம டந்தையுறை
மார்பி லேபெரிய தோளிலே
மயங்கி யின்புறமு யங்கி யென்னையும
றந்து தன்னையும றந்ததே !

[வண்டு]

31] நேரிசை வெண்பா [௨௫

மறக்குமோ காவின் மதுவருந்தி, அப்பாற்
பறக்குமோ, சன்னிதிமுன் பாமோ,— சிறக்கத்
தருவரங்கள் கேட்குமோ, தாழ்க்குமோ நெஞ்சே!
திருவரங்கர் பாற்போன தேன் ?

[அம்மானை]

32] கலித்தாழிசை [௨௬

தேனமருஞ் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலர்காண் அம்மானை!
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே' யாமாகில்
சானகியைக் கொள்வாரோ தாரமாய் அம்மானை!
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை!

[நற்ருய் இரங்கல்]

33] பதினுன்கு சீர் ஆசிரிய விருத்தம் [உ.எ

மானை எய்தவர் இன்னம் என்மட
மானை எய்திலர் ; நேமியால்
மாலை தந்தவர் பைந்து ழாய்மது
மாலை தந்திலர் ; இந்திரன்
சோனை மாரி விலக்கி விட்டவர்
சொரிகண் மாரிவி லக்கிலார் ;
சுரர்க ளுக்கமு தங்கொ டுத்தவர்
சோதி வாயமு தங்கொடார் ;
தானை ஐவர்கொ டிக்க ளித்தவர்
தானை கொண்டத ளிக்கிலார் ;
சங்க ரற்கிர வைத்த டுத்தவர்
தைய லுக்கிர வைத்தடார் ;
ஆனை முன்வரும் அன்பு ளார்மூலை
யானை முன்வரும் அன்பிலார் ;
அணிய ரங்கர்ந டத்தும் நீதிய
நீதி யாக இருந்ததே !

34] எண்சீர் ஆசிரிய விருத்தம் [உ.அ

இருளினும் வெளியினும் மருளினும் தெருளினும்
இன்பமே அடையினும் துன்பமே மிடையினும்
ஒருவர்முன் புகழினும் இருவர்பின் பிகழினும்
ஊனிறந் தழியினும் யான்மறந் தொழிவனே,
சுருதியின் ரேலிடும் கரதலம் நாலொடும்
துவளுநூல் மார்பமும் பவளவாய் மூரலும்
திருவரங் கேசர்தம் சுருள்கருங் கேசமும்
செய்யநீள் முடியுமத் தூய்யசே வடியுமே ?

35] நேரிசை வெண்பா [உ.கூ

சேவடியால் மூவடிமண் தென்னரங்கத் தம்மான்! நீ
மாவலிபால் வாங்கியநாள் மண்ணுலகோ,—மூவுலகும்
வீசுங்கா லோ,வலிய வெவ்வினையேன் நெஞ்சமோ,
பேசுங்கால் ஏதோ பெரிது ?

[நாரை விடுதூது]

36] கட்டளைக் கலித்துறை [௩௦

பெருவரம் கேசவன் அல்லா தருள்செயும் பேரிலை;வே
றொருவரங் கேசற்றும் ஓதாரென் காதலை ; ஓடியெங்கும்
கருவரங் கேசலிக் கத்திரி வோர்க்குக் கருணைசெய்யும்
திருவரங் கேசற்கு நீசொல்ல வேண்டும் செழுங்குருகே!

[இரங்கல்]

37] எண்சீர் ஆசிரிய விருத்தம் [௩௧

குருகுறங்கு கானலே! கருநிறங்கொள் பானலே!
கொடியிருண்ட ஞாழலே! நெடியகண்டல் நீழலே!
பொருதரங்க வேலையே! நிருதர்அங்க மாலையே!
போதயின்ற கம்புளே! ஏதையின்றி யம்புகேன்!
திருவரங்கர் இணையிலா ஒருபுயங்க அணையிலே
திகழ்வலக்கை கீழதா முகிழ்மலர்க்கண் வளர்வதோர்
கருணைநம்பு வதனமும் அருணவிம்ப அதரமும்
காவிகொண்ட மேனியும் ஆவிகொண்டு போனவே!

[அரங்கன் பெருமை]

38] பன்னிரு சீர் ஆசிரிய விருத்தம் [௩௨

போனகம் பதினாலு புவனம் ; திருப்பள்ளி
பொறியரவ ணைப்பாற்கடல் ;
பூமடந் தையும்நில மடந்தையும் தேவியர் ;
புராதன மறைக்குமெட்டா
வானகம் பேரின்ப முடன்வீற் றிருக்குமிடம் ;
வாகனம் வயினதேயன் ;
மலர்வந்த நான்முகன் திருமைந்தன் ; அவன்மைந்தன்
மதிசூடி ; வாசவன்முதல்
தேனகும் தொடைமௌலி முப்பத்து முக்கோடி
தேவருன தேவல்செய்வோர் ;
திங்களும் பரிதியும் சங்கமும் திகிரியும் ;
திரிவனவும் நிற்பனவுமாம்
ஏனைமன் னுயிர்முழுதும் விளையாட நீவகுத்
திட்டபல மாயை;அதனால்,
எழிலரங் கந்துயிலும் எம்பிரான்! நின்பெருமை
யாவரே வாழ்த்துவாரே ?

[பிரிவாற்ருது வருந்தும் தலைவி இரங்கல்]

39] 'அவயவம் எழுதரிது', எனல் [௩௯

பன்னிரு சீர் ஆசிரிய விருத்தம்

வாழும் மவுலித் துழாய்மணமும்
மகரக் குழைதோய் விழியருளும்
மலர்ந்த பவளத் திருநகையும்
மார்பில் அணிந்த மணிச்சுடரும்
தாழும் முளரித் திருநாபித்
தடத்துள் அடங்கும் அனைத்துயிரும்
சரண கமலத் துமைகேள்வன்
சடையிற் புனலும் காணேனல்,
ஆழ முடைய கருங்கடலின்
அகடு கிழியச் சுழித்தோடி
அலைக்கும் குடகா விரிநாப்பண்
ஐவாய் அரவில் துயிலமுதை
ஏழு பிறப்பில் அடியவரை
எழுதாப் பெரிய பெருமானை
எழுத அரிய பெருமானென்
றெண்ணு தெழுதி யிருந்தேனே!

[இதுவும் அது.]

40] எண்சீர் ஆசிரிய விருத்தம் [௪௦

இருங்குங்கு மத்தோள் அரங்கேசர், முன்னாள்
இலங்காபு ரங்காவ லன்காலி னல்வீழ்
கருங்குன்று போல்மண்மு கங்குத்தி வீழக்
கண்டார், எனக்கின்று தண்டார் அளித்தால்,
மருங்கெங்கும் வம்போது வார்வாய டங்கும்;
வாடைக்கும் நிலமங்கை ஆடைக்கும் நோகேன்;
நெருங்குந்த னஞ்சந்த னம்பூச லாகும்;
நீளாதி ரா;மையல் மீளாதி ராதே!

[நெஞ்சொடு கிளத்தல்]

41] அறுசீர் ஆசிரிய விருத்தம் [௪௧

தேடு கின்றனை ஐம்பொறி களுக்கிரை:
தேடியும் கிடையாமல்

வாடு கின்றனை ; வீடுசென் றென்றினி
மருவுவை மடநெஞ்சே !
ஆடு கின்றிலை ; அழுகிலை ; தொழுகிலை
அரங்கனைக் கரங்கூப்பி ;
பாடு கின்றிலை நினைகிலை பதின்மர்தம்
பாடலின் படியாயே.

[செவியறிவுறூஉ]

42] எழுசீர் ஆசிரிய விருத்தம் [௩௬

ஆயினை மனையைச் சேயினைப் பிதாவை
அனத்தினைத் தனத்தினை விரும்பும்
பேயினை மறந்து நோயினை மூப்பைப்
பிறப்பினை இறப்பினைத் துடைப்பீர் !
ஆயனை முளரி வாயனை எங்கள்
அமலனைக் கமலனைப் பயந்த
தாயனை நெடிய மாயனை வடபால்
தரங்கனை அரங்கனைத் தொழுமே.

43] கட்டளைக்கலிப்பா [௩௭

தொழப்பெ ருதந்த வாரணத் தந்தமே ;
தொட்டி றுத்ததும் வாரணத் தந்தமே ;
வழுத்து தாள்முன் புவனங் கடந்ததே ;
மலர்ந்த வுந்தி புவனங்க டந்ததே ;
ஒழித்த துங்குழைச் சங்கரன் சாபமே ;
ஒசித்த துங்குழைச் சங்கரன் சாபமே ;
அழித்த தும்பொரு தானவ ரங்கமே ;
அரித ஞர்இனி தானவ ரங்கமே.

[திருநாம மகிமை]

44] நேரிசை ஆசிரியப்பா [௩௮

(உயிர் வருக்கமோனை)

அரங்க மாளிகைக் கருங்கடல் வண்ணனை
ஆலிமா முகிலை வாலி காலனை
இந்த ளூருறை எந்தைபெம் மானை
ஈசன் நான்முகன் வாசவன் தலைவனை

உள்ளுவார் உள்ளத் துள்ளுறை சோதியை
ஊரகம் நின்றருள் நீரகத் தடிகளை
எவ்வுள் மாயனைத் தெய்வநா யகனை
ஏர்மலி சிகரத்து நீர்மலை ஆதியை
ஐவாய் அரவில் அறிதுயில் அமலனை
ஒருகால் மொழியினும் ஒழிகுவை நெஞ்சே!
ஓதநீர் ஞாலத் துழலும்
ஔவியப் பிறப்பில் அழுந்திவா டுவதே.

[தோழி இரங்கல்]

45] பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம் [[illegible]

வாடி ஓட வனசம் அன்ன
இருகண் வெள்ளம் அருவிபோல்
மருவி யோட மதனன் வாளி
யுருவி யோட வாடையூ
டாடி யோட அன்றில் ஓசை
செவியில் ஓட வண்டுழாய்
ஆசை யோடும் எங்கள் பேதை
ஆவி யோடல் நீதியோ?
மோடி யோட அங்கி வெப்பு
மங்கி யோட ஐங்கரன்
முடுகி யோட முருக னோட
முக்க ணீசன் மக்களைத்
தேடி யோட வாண னயி
ரம்பு யங்கள் குருதிநீர்
சிந்தி யோட நேமி தொட்ட
திருவ ரங்க ராசரே!

[ஊர் உரைத்தல்]

46] எண்சீர் ஆசிரியச் சந்தவிருத்தம் [[illegible]

சருக ருந்தியைம் பொறிவ ருந்தருந்
தவர்கள் அண்டர்குஞ் சரமு கன்குகன்
பரிதி சந்திரன் சிவன யன்புரந்
தரனி ரந்தரம் பரவும் எந்தையூர்

குருகை தஞ்சைதென் கணபு ரங்குறுங்
குடிகு டந்தைவண் துவரை இந்தளூர்
திருவை குந்தமஞ் சனசி லம்பயிந்
திரபு ரஞ்செழுந் திருவ ரங்கமே.

47] தரவு கொச்சகக்கலிப்பா [சக

திருவரங்கம் திருக்கோயில் சேர்ந்துமது திருக்கோயில்
கருவறென்றும் வைகுந்தம் தயங்கொளிசேர் வைகுந்தம்;
ஒருமருங்கில் நந்துடையார் ஒழிந்தொர்சனனந்துடையார்;
மருவமறந் திருப்பீரே! வணங்கமறந் திருப்பீரே![1]

[சித்து]

48] கட்டளைக்கலிப்பா [சஉ

திருப்பொற் பாவைக்குக் கஞ்சம்பொன் னாக்கிய
சித்த ரேம்சுத்தக் காயா மலரென
உருப்பொற் பான திருவரங் கேசனூர்
ஊர கத்துநின் றூர்;சென் றிறைஞ்சினோம்;
இருப்புப் பாடகம் காட்டினர்; யாமவர்க்
கிரும்பை ஆடகம் ஆக்கினெம்; ஈயத்தை
நருக்கி வெள்ளிய தாகவு ருக்குவோம்;
நமது வித்தைக் கழுதே அருமையே.

[இதுவும் அது.]

49] கட்டளைக் கலித்துறை [சஙு

அரும்பித் தளையவிழ் நாள்மாலை மார்பன்
அரங்கனெங்கள்
பெரும்பித் தளையும் பிறப்பறுத் தாண்டபி
ரான்சித்தரேம்,
தரும்பித் தளையும் தராவும்பொன் னாக்கித்
தருவெமப்பா!
திரும்பித் தளையினும் நெய்பா லழுதினும்
சிந்தனையே.

1 .[வணங்க மறந்திருப்பீரே, திருவரங்கம் திருக்கோயில் சேர்ந்து உமது திருக்கு ஒயில், ஒரு மருங்கில் நந்து உடையார், என்றும் வைகும் தம் தயங்கு ஒளி சேர் வைகுந்தம் தருவர்; ஒழிந்தொர், சனனம் துடையார்; மருவ மறம் திருப்பீர்.]

50] நேரிசை வெண்பா [௪௪

சிந்திக்கத் தித்திக்கும் செவ்வாய் துவர்த்துப்பாம்
புந்திக்கு ளேயின் புளிமேவும் — நந்தம்
கருவரங்கம் கைத்தழலும் காவிரியின் ஊடே
திருவரங்கத் தேவளரும் தேன்.[1]

51] கட்டளைக் கலித்துறை [௪௫

தேனந்து சோலை அரங்கேசர் சேவடி
மேல்விசயன்
தானந்த நாளையிற் சாத்திய மாலையும்
தாள்விளக்கும்
வானந்த ருங்கங்கை நன்னீரும் சென்னியில்
வைக்கப்பெற்ற
ஆனந்தந் தானல்ல வோமுக்க ணன்மன் றுள்
ஆடுவதே ?

[தலைமகளது உருவெளிப்பாடு கண்ட
தலைமகன் இரங்கல்]

52] எண்சீர் ஆசிரிய விருத்தம் [௪௬

ஆடும் படநா கணைமேல் அணையும்
அமலன் கமலத் தவனும் சிவனும்
நாடும் திருமால் துயில்கோ யிலின்வாய்
நறைவார் பொழிலூ டுறைவார் அளகக்
காடும் குழையைச் சாடும் குவளைக்
கண்ணும் குதலைப் பண்ணும் கரியின்
கோடும் தரளத் தோடும் புருவக்
கோதண் டமுமே மூதண் டமுமே.

[கைக்கிளை]

53] எழுசீர் ஆசிரியச் சந்தவிருத்தம் [௪௭

அண்டமுழு துண்டவர் உமிழ்ந்தவர் இடந்தவர்
அளந்தவர் வளர்ந்த ருளுமா

---

1. [காவிரியின் ஊடு திருவரங்கத்தே வளரும் தேன், சிந்திக்கத் தித்திக்கும்; செவ்வாய் துவர்த் துப்பு ஆம்; புந்திக்குளே இன்பு உளிமேவும்; நந்தம் கரு அரங்கம் கைத்து அழலும். இதில் தித்திப்பு, துவர்ப்பு, உப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு என்னும் ஆறு சுவைகளின் பெயர்கள் அடுக்கி வந்துள்ள நயம் அறிக.]

சண்டபண ஐந்தலை அனந்தசய னம்திகழ்
தருந்திருவ ரங்கர் வரைமேல்
கண்டதொரு கொம்பதில் இரண்டுமக ரங்கள்ஒரு
கஞ்சம்இரு வெஞ்சி லைமணம்
கொண்டதொரு கொண்டல்இரு கெண்டைஒரு தொண்டைஇரு
கும்பம்ஒரு செம்ப ணிலமே.[1]

[தலைவி இரங்கல்]

54] அறுசீர் ஆசிரிய விருத்தம் [சஅ

செம்பொன ரங்கத்த ரங்கநீர்ச்
சீதள சந்திர வாவிசூழ்
கம்புளு டன்பயில் நாரைகாள்!
காதலை என்சொலி ஆறுவேன்!
வெம்பனி வந்தது; வந்தபின்
வேனிலும் வந்தது; வேனில்போய்ப்
பைம்புயல் வந்தது; சென்றநம்
பாதகர் வந்திலர் காணுமே!

[சம்பிரதம்]

55] பன்னிரு சீர் ஆசிரிய விருத்தம் [சகூ

காணாத புதுமைபல காட்டுவன்; கட்செவிகள்
எட்டையும் எடுத்தாட்டுவன்;
கடல்பருகு வன்;பெரிய கனகவரை யைச்சிறிய
கடுகினில் அடைத்துவைப்பன்;
வீறார வாரமூ தண்டமுற விளைவிப்பன்;
இரவுபகல் மாறாடுவன்;
விண்ணையும் மறைப்பன்;எழு மண்ணையும் எடுப்பன்;இவை
விளையாடும் விந்தையன்றால்;
நீணாக ணைப்பள்ளி யிற்றிருவ ரங்கத்து
நெடிதாழி துயிலும்பிரான்

1. [ஒரு கொம்பு-தலைமகள்; இரண்டு மகரங்கள்-மகரக்குழை அணிந்த இரு காதுகள்; ஒரு கஞ்சம் - முகம்; இரு வெஞ்சிலை - புருவம்; கொண்டல் - கூந்தல்; இரு கெண்டை - கண்கள்; ஒரு தொண்டை - உதடு; இரு கும்பம் - தனங்கள்; ஒரு செம்பணிலம்-கழுத்து இவ்வாறு உருவகம் காண்க.]

நெற்றிக்க ணனவனை நான்முகனை வாசவனை
நிமிருமிரு சுடரைமுதலாச்
சேணுடர் யாவரையும் அடிமைகொண் டவரவர்
சிரத்திற் பொறித்துவிட்ட
திருச்சக்க ரப்பொறியி லாதவொரு கடவுளைத்
தேடியினி முன்விடுவனே.

['இடம் அணித்து,' என்றல்]

56] எண்சீர் ஆசிரிய விருத்தம் [ருo

முன்னமேழ் புரவியார் இரவிகாய் வெயிலினால்
முத்தரும் பியகலா முழுமதித் திருமுகத்
தன்னமே! இன்னமோர் காவதம் போதுமேல்,
அகலுமிப் பாலை;அப் பாலரைக் காவதம்
என்னையா ளுடையவன் துயில்அரா அமளியும்
இலகுபொற் கோயிலும் இந்துவின் பொய்கையும்
புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம்
பூவிரித் துறையும்அக் காவிரித் துறையுமே

[தோழி தலைமகனது இரவுக்குறி விலக்கல்]

57] கட்டளைக் கலித்துறை [ருக

துறைமதி யாமல்இக் கான்யாறு நீந்திச்
சுரங்கடத்தல்
நிறைமதி யாளர்க் கொழுக்கமன் றால்;நெடு
மால்அரங்கத்
திறைமதி யாவரும் ஆரா அமிர்தன்ன
இந்துநுதற்
குறைமதி யாள்பொருட் டாற்கங்குல் வாரல்எம்
**கொற்றவனே!**

[மறம்]

58] எண்சீர் ஆசிரிய விருத்தம் [ருஉ

கொற்றவன்றன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா!
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்?
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும்!

மற்றதுதான் திருமுகமே ஆனால் அந்த
வாய்செவிகண் மூக்கெங்கே? மன்னர் மன்னன்
பெற்றவிள வரசானால் ஆலின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்கப் பேசு வாயே.

[இதுவும் அது.]

59] பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம் [௫௯

பேச வந்த தூத! செல்ல ரித்த வோலை செல்லுமோ?
பெருவ ரங்கள் அருள ரங்கர் பின்னை கேள்வர் தாளிலே
பாசம் வைத்த மறவர் பெண்ணை நேசம் வைத்து முன்னமே
பட்ட மன்னர் பட்ட தெங்கள் பதிபு குந்து பாரடா!
வாச லுக்கி டும்ப டல்க வித்து வந்த கவிகை;மா
மகுட கோடி திணைய ளக்க வைத்த காலும் நாழியும்;
வீசு சாம ரங்கு டிற்றெ டுத்த கற்றை; சுற்றிலும்
வேலி யிட்ட தவர்க ளிட்ட வில்லும் வாளும் வேலுமே.

60] நேரிசை வெண்பா [௬௦

வேலையுல கிற்பிறக்கும் வேலையொழிந் தோமில்லை;
மாலையரங் கேசனைநாம் மாலையினும்—காலையினும்
உன்னிநைந்தோம் இல்லை; உடலெடுத்த அன்றுமுதல்
என்னினைந்தோம் நெஞ்சே! இருந்து?

[இயலிடம் கூறல்]

61] அறுசீர் ஆசிரிய விருத்தம் [௬௧

இரும்புவனம் விரும்புவனம் அணியரங்கர்
பணியரங்கர் இமய நண்ப!
வருங்கொடியின் மருங்கொடியின் மனங்குழைக்கும்
கனங்குழைக்கும் அனங்கன் சாபக்
கரும்புருவம் பொரும்புருவம்; முத்தநகை
யொத்தன;கை காந்தள்; பூந்தேன்
மருங்குழலுங் கருங்குழலும்; முருகுவளை
இருகுவளை மழைக்கண் தாமே.[1]

---

1. [இரும் புவனம் விரும்பு வனம் அணி அரங்கர்-பணி அரங்கர் - இமய நண்ப! கனம் குழைக்கு வரும் கொடியின் மருங்கு ஒடியின் மனம் குழைக்கும்; புருவம், அனங்கன் சாபக் கரும்பு

[இதுவும் அது.]

62] பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம் [௫௬

மழைபிறை சிலைவேல் வள்ளையெள் ளிலவின்
மலர்முல்லை மதிவளை கழையாழ்
வாரிசம் கெளிறு தத்தைவாய் கலசம்
மணிவட பத்திரம் எறும்பூர்
அழகுநீர்த் தரங்கம் துடிசுழி அரவம்
அரம்பைஞெண் டிளவரால் ஆமை
அணிதரா சிணைகந் துகந்துகிர் தரளம்
அம்புயம் அரங்கநா டணையார்
குழல்நுதல் புருவம் விலோசனம் காது
நாசிவாய் நகைமுகம் கண்டம்
குலவுதோள் முன்கை அங்கைமெல் விரல்கள்
கூருகிர் கொங்கைகண் வயிறு
விழைதரும் உரோமம் வரையிடை உந்தி
விரும்பும்அல் குல்தொடை முழந்தாள்
மிளிர்கணைக் கால்கள் புறவடி பாடு
மென்குதி விரல்நகந் தாளே.[1]

---

உருவம் பொரும்; நகை, முத்தம் ஒத்தன; கை, காந்தள்; கருங் குழல், பூந்தேன் மருங்கு உழலும்; மழைக்கண், முருகு வளை இரு குவளை. 'கருங்குழைக்கும், கருங்குழலும்' என்பவற்றி லுள்ள உம்மைகள் இசை நிறைக்க வந்தன.]

1. [அரங்கநாடு அணையாராகிய தலைவியாரின் குழல், மழை; நுதல், பிறை; புருவம், வில்; விலோசனம், வேல்; காது, வள்ளை; நாசி, எள் (மலர்); வாய், இலவின் மலர்; நகை, முல்லை (மலர்); முகம், மதி; கண்டம், வளை; தோள், கழை; முன்கை, யாழ்; அங்கை, வாரிசம்; மெல் விரல்கள், கெளிறு; கூர் உகிர், தத்தை வாய்; கொங்கை, கலசம்; (முலைக்)கண், மணி; வயிறு, வடபத்திரம்; உரோமம், எறும்பு ஊர் அழகு; வரை, நீர்த்தரங்கம்; இடை, துடி; உந்தி, சுழி; அல்குல், அரவம்; தொடை, அரம்பை; முழந்தாள், ஞெண்டு; கணைக்கால், இளவரால்; புறவடி, ஆமை; பாடு, தராசு இணை; மெல்குதி, கந்துகம்; விரல், துகிர்; நகம், தரளம்; தாள், அம்புயம். ° இச்செய்யுள் பெயர் முறை நிரனிறைப் பொருள்கோள் அணி.]

[கைக்கிளை]

63] வியனிலை மருட்பா [ருள

தாளிரண்டும் பாரொன் றும்; தார்வாடும்; வேர்வாடும்;
வாளிரண்டுங் காதிரண்டில் வந்திமைக்கும்; கோளிரண்டும்
ஐவகைப் பூதம் அமைத்தருள் அரங்கர்
மைவளர் சோலை மலையில்
தெய்வம் அல்லளித் திருவுரு வினளே.

[ஊசல்]

64] எண்சீர் ஆசிரிய விருத்தம் [ருஅ

உருமாறிப் பலபிறப்பும் பிறந்துஞ் செத்தும்
ஊசலா டுவதடியேன் ஒழியும் வண்ணம்
கருமாயத் தென்னெஞ்சைப் பலகை யாக்கிக்
கருணையெனும் பாசத்தைக் கயிறுப் பூட்டி
மருமாலைத் துளவசைய ஆடிர் ஊசல்
மணிமகரக் குழையசைய ஆடிர் ஊசல்
திருமாது புவிமாதோ டாடிர் ஊசல்
திருவரங்க ராசரே! ஆடிர் ஊசல்.

65] கலிநிலைத்துறை [ருகூ

ஊசல் வடம்போல் ஊர்சக டம்போல் ஒழியாமே
நாசவு டம்போ டாவிசு ழன்றே நலிவேனோ?
வாசவ னும்போ தாசன னும்கூர் மழுவோனும்
நேசமு டன்சூழ் கோயில ரங்க நெடியோனே!

[தழை]

66] கட்டளைக் கலித்துறை [சு0

கேசத் தழைக்கும் மதயானை முன்புகின் றோன் அரங்கம்
பேசத் தழைக்குமென் அன்பனையாய்! பெருங் கற்பகத்தின்
வாசத் தழைக்கும் நறுந்தழை காணிது; மந்தத் தென்றல்
வீசத் தழைக்கும் தழைபோல் கெடாது; விலையில்லையே.

[முத்தம்]

67] எண்சீர் ஆசிரிய விருத்தம் [சுஎ

விலையான திலையென்று நீதந்த முத்தம்
வேய்தந்த முத்தாகில் வெறப்பா! வியப்பால்
இலையார்பு னற்பள்ளி நாராய ணன்பால்,
'எந்தாய்! அரங்கா!இ ரங்காய்,'எ னப்போய்த்
தலையாலி ரக்கும்ப ணிப்பாய்சு மக்கும்
தன்தாதை யவர்தாம ரைத்தாள் விளக்கும்
அலையாறு சூடும்பு ராணங்கள் பாடும்
ஆடும்பொ டிப்பூசி ஆனந்த மாயே.

[தவம்]

68] கட்டளைக்கலித்துறை [சுஅ

ஆனந்த மாயரங் கற்கே யுயிர்கள் அடிமையென்னும்
ஞானந்த லைஜம் பொறிவாசல் சாத்திநற் றூளைப்பற்றி
ஈனம் தரும்பற்றும் அற்றென் றும்யானென தென்னுமபி
மானம் தவிர்ந்திருப் பார்க்கிது போலில்லை மாதவமே.

[இதுவும் அது.]

69] எண்சீர் ஆசிரிய விருத்தம் [சுகூ

மாத வங்களென் றோத வங்களின்
மருவு சீவனென் றொருவ! நீபெரும்
பூத மல்லை;இந் திரிய மல்லை;ஐம்
புலனு மல்லை;நற் புந்தி யல்லைகாண்!
சீத ரன்பரந் தாமன் வாமனன்
திருவ ரங்கனுக் கடிமை நீ;உனக்
கேது மில்லையென் றறி;அ றிந்தபின்
ஈதின் மாதவம் இல்லை எங்குமே.

69. ['மா தவங்கள் என்று ஓது அவங்களில் மருவு சீவன்,' என்ற ஒருவ, நீ பெரும்பூதம் அல்லை; இந்திரியம் அல்லை; ஐம்புலனும் அல்லை; நல் புந்தி அல்லை; சீதரன் - பரந்தாமன் - வாமனன் - திருவரங்கனுக்கு அடிமை; உனக்கு ஏதும் இல்லை என்று அறி; அறிந்த பின், ஈதின் மாதவம் இல்லை. காண் - முன்னிலை அசைச் சொல்.]

## [தலைவி இரங்கல்]

70] கட்டளைக்கலித்துறை [௬௪

ஏங்காந்தள் அங்கைநல் லீர்!என்செய் கேன்!இரண்
டேந்திழையார்
தங்காந்தன் என்றறிந் தாலும்நில் லாது!
தரைக்கும்நெய்க்கும்
அங்காந்த செம்பவ ளத்தெம் பிரான்அரங்
கன் புயங்கள்
செங்காந்த மால்வரை யோ!இரும் போவென் றன்
சிந்தனையே!

## [களி]

71] பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம் [௬௫

சிந்தை யிற்குடி கொண்டி ருந்துதி
ருக்க றுத்தடி மைக்கொளும்
திருவ ரங்கர்பொ ருப்பு யர்ந்ததி
ருப்பு யம்புகழ் களியரேம்
புந்தி மிக்கது வந்து புக்கது
போத மாதர்கள் எழுவர்தம்
பூசை யேமக பூசை யென்றது
புதுமை யன்றிது புத்தர்காள்!
அந்த ரத்திமை யோர ருந்தும
ருந்தும் வெள்ளைய தன்றியே
அரிய சாதிகொ ளாத மானிடர்
அகலி டத்தினில் இல்லையே;
மந்தி ரத்தினி லாத தேவதை
வான கத்தினில் இல்லையே;
வடிவி லாதவை அண்ட கோளம்வ
ளைந்த வைப்பதில் இல்லையே.

72] குறளடி வஞ்சிப்பா [௬௬

இல்லறமெனத் துறவறமெனச்
சொல்லறம்பிற துணையன்றெனப்
பவக்கடலுள் துவக்கறுப்பான்
காவிரியிடைப் பூவிரிபொழில்

சிலமந்திகள் சினைதாவப்
பலதெங்கின் பழக்குலையுதிர
அடர்கமுகின் மிடறொடிதரத்
தேமாங்கனி சிதறுபுவிழ
முடப்பலவின் குடக்கனியுக
அரம்பைக்கனி வரம்பிற்புக
வயல்மருங்கின் மலர்ப்பொய்கையுள்
துயில்வலம்புரி துண்ணெனவுறத்
தாஅள்தாஅமரைத் தவிசுறைதரு
சூஉட்டோதிமம் பேஎட்டுடனெழ
மயிற்சேவல் மனங்களிப்பக்
குயிற்பேடைக் குலமொளிப்ப
மழைமுகிலென முழவதிர்தரு
திருவரங்கப் பெருநகருள்
அரவணைமிசை அறிதுயிலமர்ந்து
அருள்புரி,
திருநா ரணனைச் சேர்ந்தனம்
சரணா விந்தம் தஞ்சமென் றிரந்தே.

73] எழுசீர் ஆசிரிய விருத்தம் [சுஎ

இரவியை இரவில் மதியினை மதியுள்
இறையினை இறையும்எண் ணரிய
கரவனைக் கரவின் முனிவனை முனிவர்
கருத்தனைக் கருத்தனைத் துடைத்தாள்
பரமனைப் பரம பதத்தனைப் பதத்துள்
பாரனைப் பாரநத் தாதும்
அரவனை அரவின் அரங்கனை அரங்கத்
தடிகளை அடிகள்சே வியுமே.

[தலைவி இரங்கல்]

74] கட்டளைக்கலித்துறை [சுஅ

சேவிக்க வாழ்விக்கும் எங்கோன் அரங்கன்
திருக்கோயில்சூழ்
காவிற் கலந்தாசை தந்தேகி னார்நெஞ்சு
கல்நெஞ்சமோ!

வாவிப் புறத்தன்ன மே! இன்னம் ஏதோ
வரக்கண்டிலேன் !
பாவிக்கனேகம் தனிக்காலம் இந்தப்
பனிக்காலமே.

[குறம்]

75] அறுசீர் ஆசிரிய விருத்தம் [௬௯

காலமு ணர்ந்தகு றத்திநான்
கருதினை ஒன்றது சொல்லுவேன் :
பாலகன் உச்சியில் எண்ணெய்வார் ;
பழகிய தோர்கலை கொண்டுவா ;
கோலம லர்க்கையின் மங்கை! நின்
கொங்கைமு கக்குறி நன்றுகாண் !
ஞாலமு வந்திட நாளையே
நண்ணுவை நம்பெரு மாளையே.

[மேகவிடுதூது]

76] கட்டளைக்கலித்துறை [௭௦

பெருமாலை யார்க்குரைப் பேன்உமக் கேவிண்டு பேசினல்லால்
கருமாலை யாயெழுங் கார்க்குலங் காள்! தொண்டர் காற்பொடி தன்
திருமாலை கொண்ட திருமால் அரங்கர்தம் தெய்வத்துழாய்
மருமாலை வாங்கிவம் மின் அந்தி மாலை வருமுன்னமே.

77] நேரிசை வெண்பா [௭௧

முன்னம் பிறந்த பிறப்போ முடிவில்லை;
இன்னம் பிறப்பிக்க எண்ணுதே—தென்னரங்கம்
மேவிக் கிடந்தானே ! வீற்றிருக்கும் நின்பதத்தென்
ஆவிக் கிடந்தான் அருள்.

[தலைவி இரங்கல்]

78] பன்னிருசீர் ஆசிரிய விருத்தம் [௭௨

அரும்புன் னைகத் தடங்காவே !
அவாவென் ஆகத் தடங்காவே !

---

78. [அரும் புன்னைகத் தடங்காவே, அவா என் ஆகத்து அடங்காவே ! அம்போருகக்கண் பொரும் தேனே, அழும் நீர்

அம்போ ருகக்கண் பொருந்தேனே!
அழுநீர் உகக்கண் பொருந்தேனே;
பரம்புங் கடலூர் நாவாயே!
பாவிக் கடல்ஊர் நாவாயே;
பார்மீ துயர மறியலையே!
படுமென் துயரம் அறியலையே;
கருங்கண் கயலே! மாசுறவே!
கரைவேற் கயலே மாசுறவே;
கண்டற் போதுகு வாலுகமே!
கங்குற் போதுகு வால்உகமே;
குரும்பை தழைக்கும் கரும்பனையே!
குயில்வந் தழைக்குங் கரும்பனையே;
குருகீர்! நந்தம ரங்கரையே!
கொணரீர் நந்த மரங்கரையே.

79] நேரிசை ஆசிரியப்பா [எகூ

கரைபொரு தொழுகும் காவிரி யாறே;
ஆற்றிடைக் கிடப்பதோர் ஐந்தலை அரவே;
அரவம் சுமப்பதோர் அஞ்சன மலையே;
அம்மலை பூத்ததோர் அரவிந்த வனமே;
5. அரவிந்த மலர்தொறும் அதிசயம் உளவே:
கடல்விளிம் புடுத்த கண்ணகல் ஞாலம்
உடன்முழு தளந்த தொருதா மரையே;
வகிரிளம் பிறையான் வார்சடை தேங்கப்
பகிரதி கான்றதோர் பங்கே ருகமே;
10. யாவையும் யாரையும் படைக்க நான்முகக்
கோவை ஈன்றதோர் கோக னகமே;

---

உகக் கண் பொருந்தேனே! பரம்பும் கடல் ஊர் நாவாயே, பாவிக்கு அடல் ஊர் நா வாயே; பார்மீது உயர மறி அலையே, படும் என் துயரம் அறியலையே! கருங்கண் கயலே, மாசுறவே, கரைவேற்கு மாசு உறவே அயலே; கண்டல் போது உகு வாலுகமே, கங்குல்போது குவால் உகமே; குரும்பை தழைக்கும் கரும்பனையே, குயில் வந்து அழைக்கும் கரும்பனையே; குருகீர், நந்து அமர் அம் கரையே, கொணரீர் நந்தம் அரங்கரை. இக்கவி 'மடக்கு' என்னும் சொல் அணி.]

79. [இதனுள் பத்துத் தாமரைகளும் ஒன்பது அதிசயங் களும் வந்துள்ளமை காண்க.]

திருமகட் கினிய திருமனை யாகிப்
பருமணி யிமைப்பதோர் பதும மலரே ;
சடைத்தலை தாழ்த்துச் சங்கரன் இரப்ப
முடைத்தலை தவிர்த்ததோர் முளரிமா மலரே ;
ஆங்குமண் டோதரி அணிந்தமங் கலநாண்
வாங்கவில் வாங்கிய வனசமு மொன்றே ;
விரிந்தபுகழ் இலங்கை வேந்தற்குத் தென்றிசை
புரிந்தருள் மலர்ந்ததோர் புண்ட ரீகமே ;
மண்திணி ஞாலமும் வானமும் உட்பட
அண்டமுண் டுமிழ்ந்ததோர் அம்போ ருகமே ;
கடைசிவந் தகன்று கருமணி விளங்கி
இடைசில அரிபரந் தினியவாய் நெடியவாய்
இன்பந் தழீஇய இருபெருங் கமலம்
துன்பம் தழீஇய தொண்ட னேனையும்
உவப்புடன் ஒருகால் நோக்கிப்
பவக்கடல் கடக்கும் பரிசுபண் ணினவே.

[தலைவி இரங்கல்]

80] **கலிநிலைத்துறை** [௭௪

பண்கொண்ட வேய்ஊது செவ்வாய் அரங்கேசர் பைம்பொன்னிநாட்டு
எண்கொண்ட பேராசை தந்தார் மறந்தார்கொல் இசைவண்டுகாள் !
விண்கொண்ட மலைமீது விண்மாரி பொழிகின்ற விசைபோலவென்
கண்கொண்ட மலைமீது கண்மாரி பொழிகின்ற கார்காலமே ?

[கைக்கிளை — ஊர் வினாதல்]

81] **கட்டளைக்கலித்துறை** [௭௫

காரக மோ,நம் வடதிரு வேங்கடக் கார்வரையோ,
நீரக மோ,நெடு வானக மோ,துயில் நீடுபண்ணிப்
பேரக மோ,தென் றிருவரங் கப்பெருங் கோயிலென் னும்
ஊரக மோ,இடம் தண்காவில் நின்ற ஒருவருக்கே ?

82] வஞ்சித்துறை [எசு

ஒருநயம் பேசுவன் :
திருவரங் கேசர்தாள்
மருவுமின் ; நாசமாம்
கருமவன் பாசமே.

[தலைவி இரங்கல்]

83] எண்சீர் ஆசிரிய விருத்தம் [எஎ

பாசமாம் அடியர்பால் நேசமாம் அடிகளும்
பைம்பொனார் ஆடையும் செம்பொன்மா மேனியும்
ஆசையாம் மலருளாள் வாசமார் அகலமும்
அஞ்சலென் றருள்செயும் கஞ்சமும் கருணையின்
தேசுலா வதனமும் மாசிலா முறுவலும்
சீரிதாய் எழுதுகத் தூரிநா மமுமெனக்
கீசனார் திருவரங் கேசனார் திகிரியும்
இலகுவெண் சங்குமே உலகமெங் கெங்குமே.

['இடமணித்து,' என்றல்]

84] வஞ்சி விருத்தம் [எஅ

எங்கணும்நி றைந்துறையும் எம்பிரான்
கொங்கணுகி வண்டுமுரல் கோயில்சூழ்
உங்கள்வரை எங்கள்வரை ஒன்றியே
மங்கை!உன கொங்கைகளை மானுமே.

[தலைவி இரங்கல்]

85] கலிநிலைத்துறை [எகூ

மானார் கேசன் மேலார் மாலாய் வாழ்கோயில்
தேனார் காவிற் பூவா ராயுந் தேனேபோல்
நானா போகத் தின்பங் கண்டார் நான்வாடப்
போனார் வாரா தேதோ ஓதாய் போதாவே !

[மதங்கு]

86] அறுசீர் ஆசிரிய விருத்தம் [அ0

போதவெ னக்கெளி தானார் போதவ னுக்கரி தானார்
காதர ரங்கர்தி ருத்தாள் காடிய ரங்கின டக்கின்

ஓதும தங்கிந டித்தால் உள்ளம தங்கிய ரக்காம் ;
வேதம றைந்திட வல்லீர்! விரையம றைந்துவி டீரே.

[பாண்]

87] பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம் [அக

விடாது பூமடந்தை மார்வி ரும்ப ஆயர் மாதர்தோள்
வியந்து முன்ன யந்த வர்க்கு நிற்கும் எங்கள் கொங்கைதான்
அடாத தன்று பாண! இன்னம் அங்ங னன்றி இங்ஙனம்
அரங்கர் அன்பு கூர இன்ப மாக வல்ல அல்லவே
எடாதி ருக்கின் வாய்தி றக்கும் எங்கள் ஐயன் உச்சிதோய்
எண்ணெய் பட்ட மெய்யில் இட்ட முத்தும் உத்த ரீயமும்
படாமு கந்தி றந்த சைந்து மழலை வாயின் மணமறாப்
பசுந ரம்பு புடைப ரந்து பால்சு ரந்த முலையுமே.

[செவிலி இரங்கல்]

88] கட்டளைக்கலித்துறை [அஉ

முலைகொண்ட பால்மணம் வாய்மாறிற்
றில்லை ;அம் மொய்குழலோ
அலைகொண்ட தின்னமென் கையணை
யே;அலை யாழிவற்றச்
சிலைகொண்ட செங்கை அரங்கேசர்
தாள்கொண்ட தேசமெல்லாம்
விலைகொண்ட வாள்விழி யாள்சென்ற
வாறெங்ஙன் வெஞ்சுரமே?

[தலைமகன் தலைமகளது இயல் கூறல்]

89] எண்சீர் ஆசிரிய விருத்தம் [அங

வெஞ்ச மங்கருதும் கஞ்ச னும்எருதும்
வேழ மும்பரியும் வீழ முன்பொருதார்

---

86. [வேதம் அறைந்திட வல்லீர், போத எனக்கு எளிது ஆனீர்; போதவனுக்கு அரிது ஆனீர் - நாதர் அரங்கர் திருத்தாள் நாடி அரங்கில் நடக்கின், ஓதும் மதங்கி நடித்தால், உள்ள மது அங்கி அரக்கு ஆம்; (ஆகையால் நீவிர்) விரைய மறைந்து விடீர்.]

89. [எருது - எருதுருவம் கொண்ட ' அரிஷ்டாசுரன் ; வேழம் - (குவலயாபீடம் என்னும்) யானை; பரி - குதிரை வடிவு கொண்ட கேசி என்னும் அசுரன்.]

தஞ்சம் என்றவருக் கஞ்சல் என்றருளும்
தாயி லன்புடையார் கோயி லின்புடையார்
மஞ்சு வண்டினமும் துஞ்சு தண்டலைவாய்
வல்லி யொன்றதிலே எல்லி யுந்திகழும்
கஞ்ச முண்டதிலே நஞ்ச முண்டதிலே
கள்ளம் உண்டதுவென் உள்ளம் உண்டதுவே.

[தலைவி இரங்கல்]

90] எண்சீர் ஆசிரிய விருத்தம் [அசு

உண்டுமிழ் வாசமுடன் தண்டலை மாருதம்வந்
துலவிய சாளரமும் குலவிய வாள்நிலவும்
விண்டலர் பூவணையும் மென்பனி நீர்புழுகும்
வேனிலி லும்முதிரா வேனிலு மாகியவால்;
அண்டர்தொ ழும்பெருமாள் அம்புய மின்பெருமாள்
அருமறை யின்பெருமாள் அழகிய நம்பெருமாள்
புண்டரி கங்கமழும் தண்டுறை ஓதிமமே!
புன்னைகள் சிந்தலரே! இன்னமும் வந்திலரே!

[தலைவனைப்பிரிந்த தலைவி தென்றற்கு வருந்தி இரங்கல்]

91] வேற்றொலி வெண்டுறை [அ௭

இன்னிசை வேயினர் மன்னிய கோயிலை எய்தார்போல்
பொன்னிறை வால்அவர் போனவி டத்தினிற் போகாதோ
மின்னிய முகிற்றுளி என்றென் மேலெலாம்
வன்னியின் பொறிகளை வழங்கும் வாடையே?

[காலமயக்கு]

92] அறுசீர் ஆசிரிய விருத்தம் [அசா

'வாடை யாய்இரு பனியுமாய் வேனிலாய்
வந்தது கார்,'என்றே

91. [மின்னிய முகில் துளி என்று என் மேல் எலாம் வன்னியின் பொறிகளை வழங்கும் வாடை, இன்னிசை வேயினர் மன்னிய கோயிலை எய்தார்போல் பொன் னிறைவால் அவர் போன இடந்தனில் போகாதோ?]

5

பேடை மாமயிற் சாயலாய்! அன்பர்மேல்
பிழைகரு திடல்;செம்பொன்
ஆடை நாயகன் திருமகள் நாயகன்
அரங்கநா யகன்ஏறும்
ஓடை மா இது; மதமிது; பிளிறிய
ஒலியிது; மழையன்றே.

[தழை]

93] கட்டளைக்கலித்துறை [அ0

மழைபோல் மரகதம் போல்எம்பி ரான்வளர் கோயில்அன்னீர்!
பிழைபோம் இவர்க்கிதை யாருரைப் பார்?இவர் பின்வந்தெய்த
தழைபோய் உறைத்த வருத்தம் பொறுமைகொல் சங்கரன்பால்
உமைபோய் ஒதுங்க, முயல்போய் மதிபுக் கொளித்ததுவே?

[தலைவி இரங்கல்]

94] எண்சீர் ஆசிரிய விருத்தம் [அஅ

ஒளிக்கும் இரு சுடர்க்கவளம் விழுங்கும் பேழ்வாய்
உரும்முழக்கத் திந்திரவில் ஓடை நெற்றித்
துளிக்கும்மழை மதக்கொண்மூக் களிற்றை மின்னல்
தோட்டிமா ருதப்பாகர் துரக்கும் காலம்
அளிக்குலமும் களிக்குமயிற் குலமும் பாடி
ஆடுபொழில் திருவரங்கர் அணையாக் காலம்
விளிக்கும் அலைக் கருங்கடலும் ஒறுக்கும் காலம்
விளையேற்கு விழிகள்துயில் மேவாக் காலம்.

[தலைவி இரங்கல்]

95] அறுசீர் ஆசிரிய விருத்தம் [அக

மேவலர்வாழ் தென்னிலங்கை மலங்கவொரு
காலிருகால் விற்கு னித்தெய்
ஏவலர்வாழ் திருவரங்கத் தெமையிருத்திப்
போனவர்நாட் டில்லை போலும்

---

95. [இளவேனில் வர, கோவலர் வாய்க் குழலோசைக்கு ஆநிரைகள் செவி ஏற்கும் குறும்புன்மாலைப் பூ அலரின் மணம் பரப்பி வந்த பொதியத் தென்றல், மேவலர் வாழ் தென்னிலங்கை மலங்க ஒரு கால் வில் இருகால் குனித்து எய் ஏ வலர் வாழ் திருவரங்கத்து எமை இருத்திப் போனவர் நாட்டு இல்லை போலும்!]

கோவலர்வாய்க் குழலோசைக் காநிரைகள்
செவியேற்கும் குறும்புன் மாலைப்
பூவலரின் மணம்பரப்பி இளவேனில்
வரவந்த பொதியத் தென்றல்!

[தோழி இரங்கல்]

96] கட்டளைக்கலித்துறை [கூ0

தென்றலைக் குங்குமச் சேற்றைப் பொருள்சிறி யாள்பெரிய
துன்றலைக் குந்துடிக்கும்;என்செய்வாள் துயரால்அழைத்த
வன்றலைக் குஞ்சரம் காத்தாய்! இலங்கை மலங்கவளைத்
தன்றலைக் கும்சரத் தாய்!அரங் கா!அண்டர் ஆதிபனே!

[தலைவி கூற்று]

97] கட்டளைக்கலிப்பா [கூக

அண்டர் போற்றும் திருவரங் கேசனார்
அணிய ரங்கத் திருமுற்றம் எய்தினல்,
பண்டு போன வளையாழி வாங்குவேன்;
பாலி யாது பராமுகம் பண்ணினல்,
'தண்டும் வாளும் சிலையுமி ருக்கவே
சங்கும் ஆழியும் தாரும்,'என் பேன்;'அவை
தொண்ட ருக்கொற்றி வைத்தோம்,'என் றோதினல்,
துளவ மாலையைத் தொட்டுப் பறிப்பனே.

98] கலிநிலைத்துறை [கூஉ

தொட்டுண்ட தயிர்வெண்ணெய்க் கன்றாய்ச்சி
உரலோடு சூழ்ந்துகட்டக்
கட்டுண்டு கழலவிர கறியாமல்
இருந்தழுத கள்வன் யாரே?
கட்டுண்டான் அரங்கனெனக் கட்டுரைப்பார்
ஆறுலும் கங்கைசூடி
மட்டுண்ட கொன்றையரன் மலர்மேலான்
அறிவரிய வடிவன் அன்றே?

99] அறுசீர் ஆசிரிய விருத்தம் [கூ௩

வடியாத பவக்கடலும் வடிந்துமூல
மாயைகடந் தப்பாற்போய் வைகுந்தஞ்சேர்ந்

தடியார்கள் குழாம்கூடி உனதடிக்கீழ்
அடிமைசெயும் அக்காலம் எக்காலந்தான்?
கொடியாடும் மணிமாட அயோத்திமூதூர்
குடிதுறந்து திருவரங்கம் கோயில்கொண்ட
நெடியானே! அடியேனுன் முயற்சி இன்றி
நின்னருளே பார்த்திருப்பன் நீசனேனே.

100] கட்டளைக்கலித்துறை [௬௪

நீசச் சமணர்க்கும் சூனிய வாதர்க்கும் நீதியற்ற
பூசல் பவுத்தர்க்கும் சைவர்க்கும் யார்க்கும் புகலுகின்றேன்:
நாசப் படாவுயி ரெல்லா முதற்றந்த நாதன்கண்டீர்
ஆசற்ற சீரரங் கத்தாதி மூலத் தரும்பொருளே.

101] நேரிசை வெண்பா [௬௫

அரும்புண்ட ளிகத் தடியிணைக்கென் னெஞ்சம்
இரும்புண்ட நீராவ தென்றோ—விரும்பி
அறந்திருந்தும் கோயில் அரங்கா! உனைநான்
மறந்திருந்தும் மேற்பிறவா மல்?

102] தரவு கொச்சகக்கலிப்பா [௬௬

பிறவியெனும் கடலழுந்திப் பிணிபசியோ டிந்திரியச்
சுறவநுங்கக் கொடுவினையின் சுழலகப்பட் டுழல்வேனோ?
அறமுடையாய்! என்னப்பா! அரங்கா! என் னுருபிருக்
குறவுடையாய்! அடியேனை உயக்கொள்வ தொருநாளே?

103] எழுசீர் ஆசிரிய விருத்தம் [௬௭

ஒருபொருள் அல்லேன் இருவினை உடையேன்
உனதுதொண் டெனுந்துறை குளித்துன்
பெருகுதண் ணளியின் பாசந்தொட் டிழிந்து
பெரியதோர் முத்தியான் பெற்றேன்;
திருவும்மா மணியும் சங்கமும் ஏந்திச்
செய்யதா மரைபல பூத்துக்
கருநிற முடைத்தாய் நதிபொரு தரங்கம்
கலந்ததோர் கருணைவா ரிதியே!

104] கட்டளைக்கலித்துறை [௬௮

வாரி யரங்கம் வருதிருப் பாவைக்கும் மண்மகட்கும்
சீரியர் அங்கண் வளர்திருக் கோலமும் தென்றிருக்கா

வேரி அரங்க விமானமும் கோயிலும் மேவித்தொழார்
பூரியர்; அங்கவர் கண்ணிரண் டாவன புண்ணிரண்டே.

105] நேரிசை வெண்பா [௯௯

புண்ணார் உடற்பிறவி போதுமெனக் கும்;உனக்கும்
எண்ணா திருந்த தினிப்போதும்;—கண்ணா!
குழற்காளாய்! தென்னரங்கக் கோயிலாய்! நின்பொற்
கழற்காளாய் நின்றேனைக் கா.

106] அறுசீர் ஆசிரிய விருத்தம் [௧௦௦

காவிரிவாய்ப் பாம்பணைமேல் கருமுகில்போல்
கண்வளரும் கருணை வள்ளல்
பூவிரியும் துழாய்அரங்கர் பொன்னடியே
தஞ்சமெனப் பொருந்தி வாழ்வார்,
யாவரினும் இழிகுலத்தோர் ஆனாலும்
அவர்கண்டீர் இமையா நாட்டத்
தேவரினும் முனிவரினும் சிவனயனென்
றிருவரினும் சீரி யோரே.

107] எண்சீர் ஆசிரிய வண்ண விருத்தம் [௧௦௧

மழைமுகில் எனவே பணாமு கந்திகழ்
வரியர வணையே றிவாழ ரங்கர்தம்
எழில்பெறும் இருதா ளிலேக லம்பகம்
எனுமொரு தமிழ்மா லைதான்அ ணிந்தனன்
குழலிசை அளிமே வுகூரம் வந்தருள்
குருபரன் இருபா தபோத டைந்தவன்
அழகிய மணவா ளதாச னென்பவன்
அடியவர் அடிகூ டிவாழும் அன்பனே.

இது தம்மைப் பிறர் போல காந்தி கூறியது. இவ்வாறே
நம்மாழ்வார் முதலியவரும் கூறுதல் காண்க.

திருவரங்கக் கலம்பகம்

முற்றிற்று.

# 2. திருவரங்கத்து மாலை

## [சிறப்புப்பாயிரம்]

**108**] கட்டளைக்கலித்துறை [௧

மறைப்பொருளோ அச் சிரப்பொருளோ, மனுவேமுதலாம்
முறைப்பொருளோ இதி காச புராண முதுப்பொருளோ,
இறைப்பொருளோ, நம் பெருமா னுடைத்திரு வெட்டெழுத்தின்
உறைப்பொருளோ, மணவாளர்தம் மாலையின் உட்பொருளே! [1]

## [காப்பு]

**109**] திருவரங்கநாதரின் திருமேனி உறுப்புகளும் ஐம்படைகளும் [௨

நாளும் பெரிய பெருமாள் அரங்கர் நகைமுகமும்
தோளும் தொடர்ந்தென்னை ஆளும் விழியும் துழாய்மணக்கும்
தாளும் கரமும் கரத்திற்சங் காழியும் தண்டும்வில்லும்
வாளும் துணைவரு மேதமி யேனை வளைந்துகொண்டே.

## [நூல்]

**110**] வாழ்த்து [௧

திருவாழி! சங்கு திருவாழி வாழி! சிறந்தகொண்டல்
உருவாழி! யோகத் திருந்துயில் வாழி! உலகளந்த
மருவார் மதுமலர்த் தாள்வாழி! வாழி வணங்குமன்பர்
பெருவாழ் வனைய பெருமா ளரங்கப் பெருஞ்செல்வமே!

**111**] [௨

படுப்பவ ரைப்பணி மெல்லணை யாகப் பருவரையால்
தடுப்பவ ரைப்பண்டு மண்டுகல் மாரி தரணியிடந்
தெடுப்பவ ரைத்தம் அடியா ரிடும்பச் சிலைக்குழுத்தி
கொடுப்பவ ரைச்செம்பொற் கோயிலுள் ளேகண்டு கொண்டனனே.

**112**] [௩

ஆளா னவர்கண் களிகூர் அரங்கத் தரவணைமேல்
காளா சலமெனக் கண்டுகொண் டேன்மறை காணவொண்ணாத்
தாளா யிரஞ்செம்பொன் மாமுடி யாயிரம் தாமநெடுந்
தோளா யிரந்திருக் கண்ணா யிரங்கொண்ட சோதியையே.

---

1. இஃது அறிஞர் ஒருவர் அருளிச்செய்த தனியன்.

113] [௪
பூங்கா விரிப்புனற் கோயிலுள் ளேமிக்க போகமெல்லாம்
யாங்காண யோகத் துயில்கொண்ட வாறெள்ளும் எண்ணெயும்போல்
நீங்கா துலகத் துயிர்க்குயி ராகி நியாமகனாய்
ஓங்கார மாய்அதன் உட்பொரு ளாய்நின்ற ஒண்சுடரே.

114] [௫
கறங்காழி நாலெட் டிலக்கமி யோசனை ; கட்செவியின்
பிறங்காகம் மும்மை யிலக்கமி யோசனை ; பேருலகில்
இறங்காழி மேக மெனவே அரங்கத்தில் எந்தையதில்.
உறங்காகம் நீளமைந் தைம்பதி னாயிரம் யோசனையே.

115] [௬
பாற்கடல் நாலெட் டிலக்கமி யோசனை ; பாற்கடலுள்
மாற்கவி கோயில் அகலமும் ஈரைந்து ; வானளவும்
தீர்க்கமொ ரேழு ; திகழ்பணி மூன்று ; சிறந்தகலம்
ஏற்கவின் ஒன்றரை; உத்தமர் நீளம் இரண்டரையே.

116] [௭
அடித்தலம் அந்த அதலம்; பொருதிரை ஆழிவையம்
கடித்தலம்; நேமிக் கிரியுடை யாடை; கபாலிமுன்னாள்
மிடித்தல மந்த தொழித்தான் அரங்கன் விழியிருகோள் ;
முடித்தலம் அண்ட முகடினி யாமென் வொழிவதுவே !

117] [௮
திண்சுட ராழி யரங்கேசர் திக்குத் திருச்செவியில்
மண்கழ விற்சத்ய லோகம் சிரத்தில் மருத்துயிரில்
தண்கதிர் உள்ளத்தில் வானுந்தி யிற்செந் தரணிகண்ணில்
ஒண்கனல் இந்திரன் வாழ்முகப் போதில் உதித்தனரே.

118] [௯
புரமா யிரம்;திருக் கண்மல ராயிரம்; புண்டரிகக்
கரமா யிரம்;கழற் கால்மல ராயிரம்; கண்ணிமுடிச்
சிரமா யிரம்;திரு நாமமு மாயிரம்; செய்யகையில்
அரமா யிரங்கொண்ட திண்டிறல் ஆழி அரங்கருக்கே.

119] [௧௦
முன்னாள் விசும்பும் புவியும் திசையும் முறைவகுத்த
அந்நான் முகன்றன தாவியெல் லாம்மல ராசனையாம்
மின்னார் மழைமுகில் நன்னாக மீதில் விழிதுயில்கூர்
எந்நா தனுக்கொரு மூச்சென்று வேதம் இசைக்கின்றதே.

120] [கக
எண்ணிற் றிகிரிப் பிறப்பிட மானதும் எண்ணுமவர்
நண்ணிச் சிறக்க இருப்பிட மானதும் நாசமில்லா
விண்ணிற் பதிக்குக் கடைத்தலை யானதும் விண்ணவர்தம்
கண்ணிற் சிறந்ததும் மாநீ ரரங்கர்தங் கண்ணிலொன்றே.

121] [கஉ
புறக்குன்று புல்லிதழ்; முந்நீர் பிரசம்; பொருவில்செம்பொன்
நிறக்குன்று கன்னிகை; எண்கிரி தாது; நிலம் அதனுள்
பிறக்குந் துகள்;முது மாசுணம் நாளம்; பிரமன்வண்டு;
சிறக்கும் திகிரி அரங்கேசர் உந்திச் செழுமலர்க்கே.

122] [கங
இருகூல மும்பொரு மாநீர் அரங்கத்தில் எந்தை,அந்தண்
முருகூர் கமல முனியாய் வகுக்கும்; முறைமையினல்
புருகூத னுக்குத் திருத்தம்பி யாகிப் புரக்கும்;உமை
ஒருகூறு கொண்ட அரனாய் அழிக்கும் உகாந்தத்திலே.

123] [கச
வாரித் தலமும், குலபூத ரங்களும் வானும்,உள்ளே
பாரித்து வைத்தஇவ் வண்டங்கள் யாவும் படைக்கமுன்னாள்
வேரிப் பசுந்தண் டுழாயரங் கேசர் விபூதியிலே
மூரிப் புனலிற் குமிழிகள் போல முளைத்தனவே.

124] [கரு
நெடுங்கடல் நிற்பதும் நாயிறு காய்வதும் நிற்றலுங்கால்
ஒடுங்கி நடப்பதும் தண்கார் பொழிவதும் ஊழிதனில்
சுடுங்கனல் பற்றிச் சுடாதே யிருப்பதும் தும்பைபுனைந்
தடுங்கனல் ஆழி அரங்கேசர் தந்திரு வாணையினே.

125] [கசா
ஓலப் புனற்பொன்னி நன்னீர் அரங்கர் உகம்திரியும்
காலத் தினிற்கொள்ளை அண்டமெல் லாமுண்டு, காமர்பசுங்
கோலக் குழவி உருவாய் அகண்டமும் கோத்தவெள்ளத்
தாலத் திலையின் புடைக்கே துயில்வர் அகமகிழ்ந்தே.

126] [கஎ
தாற்றுக் கமுக வனஞ்சூழ் அரங்கர் சயனமுகக்
காற்றுப் புலரும் படிமுதல் வீசும்; கறைக்களத்தன்
நீற்றுச் சிவந்தெழும்; காராழித் தீச்சுடும்; நீள்கழலின்
ஆற்றுப் பெரும்பெருக் கண்டமெல் லாங்கொள்ளும் அந்தத்திலே.

127] [௧௮

ரின்னூல் பலபல வாயால் இழைத்துச் சிலம்பிபின்னும்
அந்நூல் அருந்தி விடுவது போல, அரங்கரண்டம்
பன்னூறு கோடி படைத்தவை யாவும் பழம்படியே
மன்னூழி தன்னில் விழுங்குவர் போத மனமகிழ்ந்தே.

128] [௧௯

பந்திக் கமலத் தடஞ்சூ ழரங்கர் படைப்பழிப்புச்
சிந்தித் திடுவதும் இல்லைகண் டீர்: அத் திசைமுகனோ
டுந்திக் கமலம் விரிந்தால் விரியும்; உகக்கடையில்
முந்திக் குவியில் உடனே குவியுமிம் மூதண்டமே.

129] [௨௦

அடந்தை நடந்தை வனஞ்சூழ் அரங்கத் தரவணைமேல்
கிடந்தனர்; துங்கக் கிரிமிசை நின்றனர்; கேழல்ஒன்றாய்
இடந்தனர்; மீள விழுங்கினர்; கான்றனர்; ஈரடியால்
கடந்தனர்; கைவழி மண்ணானை இந்தமண் காரணர்க்கே.

130] ஹம்ஸாவதாரச் சிறப்பு [௨௧

பின்னைக் கினிய பெருமாள் அரங்கர் பெறுதுபெற்ற
முன்னைப் பிரமனை வாழ்விக்க வேண்டிமுன் னாள்கவர்ந்த
அன்னத் திருவுரு வுள்ளே வளர்ந்ததற் கோர்அண்டமாம்
என்னச் சிறந்தது மூதண்டம்; யாமென் இயம்புவதே!

131] மச்சாவதாரச் சிறப்பு [௨௨

சூழிக் களிறுய்ய வெவ்வாய் முதலை துணித்தவுக்ர
பாழித் திகிரிப் படையரங் கேசர் படைப்பவன்றன்
ஊழிப் பொழுதொரு சேலாய் ஒருசெலு வுட்கரந்த
ஆழிப் பெரும்புனல் காணாது தேடுவர் அவ்விடத்தே.[1]

132] கூர்மாவதாரச் சிறப்பு [௨௩

பாட்டுக்கும் முத்தமிழ் வில்லிபுத் தூர்வரும் பாவைகுழற்
சூட்டுக்கும் நல்லவர் தென்னரங் கேசர், தொடுகடல்வாய்
மோட்டுக் கமடத் திருவுரு வாகி முதுமுதுகிற்
கோட்டுச் சயிலம் உழுவதென் னாத்துயில் கொண்டனரே.

---

1. 'திருமால் மச்சாவதாரஞ் செய்த காலத்தில் ஒரு செதிளில் அடங்கிய கடல் நீரில், வேதங்களையும் அவற்றைக் கவர்ந்து சென்று ஒளித்த சோமுகாசுரனையும் காணாமல் தேடுதலாகிய திருவிளையாட்டைச் செய்வர்,' என்பது இதன் கருத்து.

133] இதுவும் அது. [உச

திரிக்கின்ற பொற்குன் றழுந்தாம லாமைத் திருவுருவாய்
பரிக்கின்ற திற்பெரும் பாரமுண் டே? பண்டு நான்மறைநூல்
விரிக்கின்ற வுந்தி அரங்கேசர் தந்திரு மேனியின்மேல்
தரிக்கின் றதுமக ரக்கட லாடைத் தராதலமே.

134] இதுவும் அது. [உரு

ஓருரு வெற்பைத் தரித்தது; தானவ ரும்பருள்ளாய்
ஈருருநின் றுகடைந்தது; வேலை யதனிடையோர்
பேருரு இன்னமு தோடே பிறந்தது; பெண்மைகொண்டோர்
நாருரு நின்ற தரங்கா! இதுவென்ன நற்றவமே![1]

135] வராகாவதாரச் சிறப்பு [உசு

ஆருக் கிவரை அளவிட லாம்? தென் னரங்கரிந்தப்
பாருக் கரந்தை தவிர்ப்பதற் காகப் பழிப்பில்பெருஞ்
சீருற்ற செங்கட் கரும்பன்றி யாகித் திருக்குளம்பில்
மேருக் கணகண மாத்தலை நாளில் விளைதிப்பரே.

136] இதுவும் அது. [உஎ

மருமலர்க் கோயில் மடமான் விரும்பும் மதிலரங்கர்
பெருமையைப் பேசுவ தெப்படி நாம்? பிறை வாள்எயிற்றுக்
கருமுகிற் கோலப் பெரும்பன்றி யாய களேபரத்தின்
ஒருமயிர்க் காலடி யூடே கடல்புக் கொளித்தனவே.

137] இதுவும் அது. [உஅ

நிறக்குஞ் செழுஞ்சுடர்க் கோடும்இப் பாரும் நிசாமுகத்துச்
சிறக்கும் பிறையும் களங்கமும் போலும் எனின், சிறுகண்
மறக்குஞ் சரஞ்செற்ற மாயோன் அரங்கன் வராகமதாய்ப்
பிறக்கும் பிறப்பின் பெருமையெவ் வாறினிப் பேசுவதே?

138] நரசிம்மாவதாரச் சிறப்பு [உகூ

ஆடும் அரவில் துயிலரங் கேசன் அருமகற்கா
நீடும் தறியில் உதித்தில னேல், நிகி லப்பொருள்கள்
ஊடும் புறத்தினும் உண்மையெவ் வாறிவ் வுலகறியும்
'ஈடும் எடுப்புமில் லாவொரு தெய்வம் இவன்,' எனவே?

---

1. ஓருரு - கூர்மாவதாரம்; ஈருரு - அசுரருள் ஓர் அசுரனையும் தேவருள் ஒரு தேவனையும் கொண்ட இரண்டு திருமேனி; பேருரு - தன்வந்திரி என்னும் தேவரூபம்; நாருரு - மோகினி வடிவம்.

139] இதுவும் அது. [௩௦

மறந்த மறையும் மழுங்கிய மந்திர மும்மகமும்
இறந்ததெய் வங்களும் எல்லாமுன் எங்குறைந் தெங்கியன்ற!
அறந்தரும் கோயில் அரங்கனவ் வாளரிக் காளரியாய்ப்
பிறந்தபின் அன்றோ பிறந்து பெருகிப் பிறங்கியதே!

140] இதுவும் அது. [௩௧

அடிகண் டிலர்அத லத்தவர்; ஐம்முக னோடமரர்
கடிகண் டிலர்மலை வான் இவர்ந் தும்;கம லத்தயனர்
முடிகண் டிலரண்ட மாமுக டேறியும்; மூதுணர்ந்தோர்
படிகண் டிலரரங் கேசர்கொள் சிங்கப் படிதனக்கே.

141] இதுவும் அது. [௩௨

அறியின், அரங்கர்முன் ஆளரி யாகிய அப்பொழுது
கொறியின் அவுணர்தம் வெள்ளங்கள் கோடியும் கொன்றதிலோ
தறியின் வயிறின் தருவன்நெஞ் சுஞ்சர பத்துடனும்[1]
நெறியின் வகிர்ந்தபின் அன்றோ தணிந்தது நீள்சினமே?

142] வாமன திரிவிக்கிரமாவதாரச் சிறப்பு [௩௩

தாரேற்ற வெண்குடை மாவலி வார்க்கவும், தாமரைமேல்
சீரேற்ற தொல்நான் முகத்தோன் விளக்கவும், செம்பொன்முடிக்
காரேற்ற மேனி அரங்கேசர் கையும் கழலும்ஒக்க
நீரேற் றனவண் டிருக்குற வாகி நிமிர்ந்தவன்றே.

143] இதுவும் அது. [௩௪

தேமிக்க பச்சைத் துழாயரங் கேசர் திருக்குறளாய்த்
தாமிப் புவனம் கடந்தவந் நாள்மணற் சாகரஞ்சூழ்
பூமிப் புடையள விட்டபொற் றாமரைப் பூங்கழற்கு
நேமிச் சிலம்பு திருச்சிலம் பாகி நிலைபெற்றதே.

144] இதுவும் அது. [௩௫

பூமரு பொங்கர் புடைசூழ் அரங்கர் பொலங்கழலால்
பாமரு மூவுல குங்கொண்ட போது பழிப்பில்பெருங்
காமரு மோலிச் சிகாமணி யாகிக் கவுத்துவமாய்த்
தேமரு நாபியந் தாமரை யானது செஞ்சுடரே.

1. நரசிங்க மூர்த்தியின் வல்லமையை அடக்கக் கருதிச் சிவன் சரபமாகி வர, அம்மூர்த்தி சரபத்தை அழித்தனர் என்பர்.

145] இதுவும் அது. [௩௬

ஓதப் புனற்பொன்னி நன்னீர் அரங்கர் உலகளந்த
பாதத்து நீர்,விண் படியிலம் மூன்றிலும் பால்புரைவெண்
சீதத் தரங்கமந் தாகினி யாகிச் செழுங்கங்கையாய்
மேதக்க போக வதியாகி நாளும் விழுகின்றதே.

146] இதுவும் அது. [௩௭

ஓலப் புனலரங் கேசர்பொற் றாள்பட் டுடைந்தஅண்டம்
மேலக் கடாகத் தொளைவழி யாக விழும்புனல்போய்க்
கோலத் திருவுருக் கொண்டவந் நாள்குரம் பட்டுடைந்த
மூலக் கடாகத் தொளையால் விழுந்தது முற்புனற்கே.

147] பரசுராமாவதாரச் சிறப்பு [௩௮

மறிக்குங் கயற்கண்ணி பங்காளன் வாழ்வெள்ளி மால்வரையைப்
பறிக்குங் கபடன் பணைப்புய மோ,அவன் பைங்கடகம்
செறிக்கும் புயஞ்செற்ற ஆயிரந் திண்புய மோ,அவற்றைத்
தறிக்கும் திறமழு வோஅரங் கா!சயத் தாருடைத்தே?

148] தசரத ராமாவதாரச் சிறப்பு [௩௯

மாதண்டம் மேவும் கரத்தார் அரங்கர் வடமிதிலைக்
கோதண்ட வேகம் பிறப்பித்த போது குவட்டுவெள்ளி
வேதண்டம் மேய மழுவாளி நாணினன்; வென்றிகண்டு
மூதண்ட மஞ்சு மழுவாளி கோபம் முதிர்ந்ததுவே.

149] இதுவும் அது. [௪0

மாகம் பிலந்திக் கிமையோர் உலகம் மழுவுடையோன்
நாகம்நன் னுடள வாகப்பல் நாகம் நடுங்கஅம்பு
வேகங் கொடுதொட ரப்பறந் தோடியும் மீண்டுவந்து
காகம் சரணென்ன நம்பெரு மாளுயிர் காத்தனரே.

150] இதுவும் அது. [௪௧

மாதவர் உம்பர் பெருமாள் அரங்கர் வலியுணரா
தாதவன் மைந்தன் அயிர்த்தஅந் நாள்இலக் காயநெடும்
பாதவம் ஏழும் உடனே நெடுங்கணை பட்டுருவப்
பூதலம் ஏழும் எழுபா தலங்களும் புண்பட்டவே.

151] இதுவும் அது. [௪௨

ஒற்றைச் சரஞ்சுட்ட வுட்கடல் போற்புறத் தோலமிட
மற்றைக் கடல்வெந்த தெவ்வண்ண மோ,மத மாவழைக்க
அற்றைக் குதவும் அரங்கர்வெங் கோபத்தை அஞ்சியரன்
கற்றைச் சடையி னிடையே வெதும்பினள் கங்கையுமே.

152] இதுவும் அது. [சரு

கோங்குண்டு வண்டமர் தண்டார் அரங்கர்வெங் கோபமுடன்
பொங்குஞ் சரஞ்செய்த மாயமென் னேதன் புகழ்அடைய
மங்கும் படிக்கு மறஞ்செய் இராவணன் வாகினிகண்
டெங்கும் குரங்கெங்கும் ராமனென் றேங்கி இரிந்திடவே!

153] இதுவும் அது. [சச

பேரொத்த ஆயிரம் பேர்மடிந் தாற்பிறக் குங்கவந்தம்
நேரொத்த ஆடும்;அ தாயிர மாடின், நெடுஞ்சிலையின்
ஏரொத்த கிண்கிணி சற்றோ விடும்,அதொர் யாமமின்று
காரொத்த மேனி அரங்கர்தம் போரிற் கறங்கியதே.

154] இதுவும் அது. [சரு

சற்பத் துறங்கும் அரங்கா!உன் பாதந் தனையடைந்த
நற்பத் தருக்கொரு நாசமுண் டோ?நல மாமருத்தின்
வெற்பைக் கொணர்ந்த விறலனு மானும்அவ் வீடணனும்
கற்பத் தளவும் அழியா திருக்கவும் கற்பித்தையே.

155] இதுவும் அது. [சசு

ஆவும் பயமும் அமுதுமொப் பான அரங்கருக்கு
மேவும் புகழின்னும் மேவுங்கொ லோஅவர் மெய்யருளால்
தாவும் தரங்கத் தடஞ்சூழ் அயோத்திச் சராசரங்கள்
ஆவும் கிளையுடன் வைகுந்த லோகத்தில் ஆர்ந்திட்டவே.

156] பலராமாவதாரச் சிறப்பு [சஎ

ஒருதாய் இருந்து வருந்தவை தேகி யுடன்சுரத்தில்
ஒருதாய் சொலச்சென்ற தென்னரங் கா!வையம் உய்யும்வண்ணம்
ஒருதாய் உதரத்தில் ஓரறு திங்கள் உறைந்தபின்னை
ஒருதாய் வயிற்றில்வந் துற்றதெம் மாயம்? உரைத்தருளே.

157] இதுவும் அது. [சஅ

கதிபட்ட பொன்னி அரங்கேசர் ஆடு கருந்திரைநீர்
நதிபட்ட பாடு நவின்றிட லாகும்; நலங்கெழுகூர்
நுதிபட்ட கொட்டலத் தாலே யிழுத்திட நூற்றுவர்தம்
பதிபட்ட கண்கலக் கந்தெரி யாது பகருதற்கே.

158] கிருஷ்ணவதாரச் சிறப்பு [சகூ

பண்டு விழுங்கிய பாரும் திசையும் பனிக்கடலும்
சண்ட நெடுங்கிரித் தானமெல் லாஞ்சண்ப காடவிமேல்
மண்டு பெரும்புனல் சூழரங் கேசர்தம் வாய்மலருட்
கண்டு மருவினள் சீர்நந்த கோபர்தம் காதலியே.

159] கண்ணனது அகடிதகடனா சத்தி [௫௰
உன்னைக் களவில் உரலோடு கட்டிவைத் துன்னுடைய
அன்னைக் கொருத்தி அறிவித்த போதலை யாழிமங்கை
தன்னைப் புணர்ந்தருள் தாரரங் கா! அவள் தன்மருங்கில்
பின்னைக் கொடுசென்ற பிள்ளைமற் றாரென்று பேசுகவே.

160] கண்ணனது சர்வ வியாபகத்துவம் [௫௧
கடிக்குங் கரளப் பிறைவாள் எயிற்றுவெங் காளியன்மேல்
நடிக்கும் பெரிய பெருமாள் அரங்கர் நறைகமழ்பால்
குடிக்கும் களவுக்கு மாறுகொண் டேயொரு கோபிபற்றி
அடிக்கும் பொழுதிற் பதினால் உலகும் அடிபட்டவே.

161] தாமோதரன் மாயை [௫௨
ஆரம் தரும்பொன்னி சூழரங் கா! உன்றன் ஆய்ச்சிவெகு
தூரம் நெடுங்கயி றெல்லா மிசைசேர்த்து வைத்துமவை
ஈர மருங்கிற் குறைந்திடக் கண்பிசைந் தேங்குமவள்
வேரம் புயமுகங் கண்டள வான விநோதமென்னே!

162] கண்ணன் தயிர்த்தாழிக்கு முத்தி அருளல் [௫௩
சிந்திக்க நெஞ்சில்லை; நாவில்லை நாமங்கள் செப்ப; நின்னை
வந்திக்க மெய்யில்லை வந்திரு போதும்; மொய்ம் மாமலர்ப்பூம்
பந்தித் தடம்புடை சூழரங் கா! ததி பாண்டன்உன்னைச்
சந்தித்த நாள்முத்தி பெற்றதென்னோ தயிர்த் தாழியுமே?

163] கண்ணன் விளைத்த கண் மாயம் [௫௪
குன்றா விளைவுடன் வண்மை பருவம் குணங்களிவை
பொன்றா திருந்தகண் மாயமென்னோ பொன்னி சூழரங்கா!
அன்றாயர் தங்குல மைந்தர்க ளாயும் அலகில்இளங்
கன்றாயும் நாடொறும் சென்றுவந் தாடிய காலத்திலே!

164] கண்ணன் காட்டுத்தீயை விழுங்கியது [௫௫
நெடுங்கான் நிலத்துடன் கோவலர் தாம்மிக நின்று, 'நெஞ்சம்
நடுங்கா திமைத்திடும் கண்களெல் லாம்,' என்று நண்ணலர்மேல்
விடுங்கால நேமியங் கையரங் கா! கண் விழிக்குமுன்னே
சுடுங்கான நல்லனல் துற்றவம் மாயமென்? சொல்லுகவே.

165] கண்ணன் ஆயர்க்குப் பரமபதம் காட்டியது [௫௬
வானாடை ரிற்சிலர் சென்றுகண் டாரில்லை; மற்றதனிற்
போனாரில் மீளப் புவியில்வந் தாரில்லை; பூவின்மங்கை
ஆனாத செல்வத் திருவரங் கா! கொச்சை ஆயரெல்லாம்
மேனாள் பரம பதத்தினிற் போய்எங்ஙன் மீண்டதுவே?

166] கண்ணன் குழலிசை கேட்டுக் குவலயம் மகிழ்தல் [௫௭

கூனந் துலாவயற் கோயிலுள் ளேபள்ளி கொள்ளுமெங்கள்
ஆனந்த வாரி திருக்குழல் ஊத அறத்தடிந்த
கானம் தழைத்தன ; கால்வரை நெக்கன ; கார்முகில்தோய்
வானம் அயர்த்தன ; வையமெல் லாமெய்ம் மறந்தனவே.

167] கண்ணன் கோவியர் களிக்கக் குரவையாடல் [௫௮

ஊரும் திரைப்பொன்னி நன்னீர் அரங்க! உருப்பலவாய்க்
காரும் தடித்தும் கலந்தது போல்இடைக் கன்னியர்கள்
யாரும் களிக்க இடையிடை யேகலந் தின்பநலங்
கூரும் திருநடம் ஆடிய மாயமென் ? கூறுகவே.

168] கண்ணன் விளைத்த மாயை [௫௯

மின்போல் இடையிடை மாதரெல் லாமுன் றன் மெய்தழுவி
நன்போக சாகரத் துள்ளே முழுகவும் நாள்மலராள்
தன்போக மேமகிழ் தாரரங் கா! அண்டர் தாமவரை
அன்போ டணைத்துத் துயின்றதெம் மாயம் அறிந்திலமே!

169] அக்குரூரர் கண்ட அற்புதக் காட்சி [௬0

நீரில் புகும் ; கண்டு தேரினைப் பார்க்கும் ; நிறுத்தியபொன்
தேரில் தொழும்; பின்னை நீரினிற் காணும் சிறந்தபச்சைக்
காரின் திறமெய் அரங்கனும் சேடனும் கஞ்சவஞ்சன்
ஊரின் செலஉடன் போம் அக்கு ரூரன்றன் உள்மகிழ்ந்தே.

170] அண்டர் சபை இருக்கைகளில் ஆயரை அமர்த்தல் [௬௧

நாமம் மிகும்புகழ் யாதவர் வாழும் நகரில்உம்பர்
தாமரு வுஞ்சவை தத்தம ஆய தளையவிழும்
தேமரு பொங்கர் அரங்கேசர் உக்கிர சேனனுக்கு
மாமுடி வைக்கும் படிபடி மேற்கொடு வாவெனவே.[1]

---

1. 'கண்ணபிரானார் உக்கிரசேனனுக்கு முடி புனைந்தபோது தெய்வ சபையாகிய சுதர்மையைக் கொண்டுவர வாயுவுக்குப் பணிக்க, அவன்' அதனைக்கொண்டு வந்து மதுரையில் வைக்க, ஆயர் அச்சபையில் வீற்றிருந்தனர்,' என்பது இங்குக் குறிக்கப் பட்டது. 'சவை' என்றது சபையிலிருந்த இருக்கைகளை,

**171]** காலயவனன் படையெடுத்தபோது குடிகளைக் காத்தல் [௬௨

மறியா எழுந்திரை மாநீர் மதுரையில் மன்னவரைக்
குறியாத வன்படை வந்தவந் நாள்செழுங் கோகனகப்
பொறியா டரவணைத் தென்னரங் கா!ஒரு பூதருமங்
கறியா வகைத்துவ ராபதிக் கேயெங்ஙன் ஆக்கினையே?[1]

**172]** ஒன்னார் அறுபுரம் செற்றதன் உயர்வு [௬௩

நறைத்துள வம்புனை நம்பெரு மாள்விறல் நாம்சொல்வதோ?
மறைப்பரி பூட்டிய மாநிலத் தேரில்லை ; வாளெயிற்றின்
கறைப்பணி நாணுடை மேருவில் இல்லை ; கடும்பவனச்
சிறைத்தழல் அம்பில்லை ஒன்னார் அறுபுரம் செற்றதற்கே.

**173]** தேவர்கள் மோகித்து விழுதல் [௬௪

அருட்கொண்டல் அன்ன அரங்கர்சங் கோசையில் அண்டமெல்லாம்
வெருட்கொண் டிடர்பட மோகித்து வீழ்ந்தனர் வேகமுடன்
தருக்கொண்டு போகப் பொறாதே தொடரும் சதமகனும்
செருக்கொண்ட முப்பத்து முக்கோடி தேவருஞ் சேனையுமே.

**174]** கண்ணன் பதினாறாயிரம் பாவையரை மணத்தல் [௬௫

நிணக்கோல நேமித் திருவரங் கேச! நினக்கினிய
குணக்கோ கனகையும் கண்டன ளோமணிக் குன்றில்வைகும்
கணக்கோ தையர்பதி னாறா யிரவரைக் கைப்பிடிக்க
மணக்கோல மும்பதி னாறா யிரங்கொண்டு வாழ்ந்தவன்றே!

**175]** இல்லந்தோறும் இறைவன் தோற்றம் [௬௬

விடந்தோய் அரவில் துயிலரங் கேச! விசும்புமுட்ட
நடந்தோகை தன்னுடன் நாரதன் காண நகைக்குழத்து
வடந்தோய் வனமுலை எண்ணிரண் டாயிர மாதர்தங்கள்
இடந்தோறும் நின்றெழில் வேறாய் இருந்ததங் கெவ்வண்ணமே?

**176]** மாதவனை மயக்கிய மாயை [௬௭

பாவிக் கொணாத பெருமாள் விநோதம் பகருமதோ?
வாவிக்குள் நாரதன் நாரதி யாய்ஒரு மன்னவன்றன்
ஆவிக் குலக்கொடி யாய்நெடுங் காலத் தழிவிலின்பம்
மேவிக் குடும்பத் திடும்பையெல் லாமெய்தி விட்டனனே.

---

1. காலயவனன் வடமதுரை யாதவர்மேல் படையெடுத்து வந்த போது, கண்ணபிரானார் யாதவரனைவரையும் துவாரகையிற் கொண்டுபோய்ப் பாதுகாத்தனர் என்பர்.

177] கண்ணன் சங்கற்பத்தால் சகலமும் இயற்றல் [சஎஅ

தண்துள வம்புனை தாரரங் கா!ஐவர் தையலுக்கு
வண்துகில் ஒன்றவைக் கண்ணுற்ற போதுதன் மன்னர்முன்னே
கண்துளி சோரத் தொழுதுநின் பேர்கட் டுரைத்தபின்னை
ஒண்துகில் கோடி குவிந்ததெம் மாயம் உரிந்துரிந்தே ?

178] கண்ணன் கொண்ட விசுவரூபம் [சஎகூ

இசையளவு விட்ட அரங்கேசர் ஐவர்தம் ஏவலிற்போய்
வசையள விட்ட மகிபன்முன் னேவள ருந்திரள்தோள்
திசையள விட்டன ; பாரள விட்டன சேவடி;வான்
மிசையள விட்டன பொன்முடி ; மேலென் விளம்புவதே !

179] கண்ணன் ஆழியால் ஆதவனை மறைத்தது [எo

மாயிரு ஞாயிறு பாரதப் போரில் மறையஅங்கன்
பாயிருள் நீதந்த தென்னகண் மாயம் பவளநெற்றிச்
சேயுயர் மாமதில் சூழரங் கேச! திரண்டுதித்த
ஆயிரங் கோடி திவாகரர் போல்ஒளிர் ஆழிகொண்டே ?

180] ஆண்டவன் அகடிதகட்ன சாமர்த்தியம் [எக

நெட்டர வின்பெரு மூச்செழ வீசும் நெருப்பில்வெந்து
பட்ட கடம்பும் தழைத்தது; மீளப் பசுந்துளவின்
மட்டவிழ் தொங்கல் அரங்கர்பொன் தாள்பட வாளிவெந்தீச்
சுட்ட கருங்கட் டையும்பெற்ற தாருயிர்;[1] சொல்வதென்னே ?

181] மாண்ட மைந்தரை மீண்டும் கொணர்தல் [எஉ

தாளாற் சகங்கொண்ட தாரரங் கா!பண்டு சாந்திபன்சொல்
கேளாக் கடல்புக்க சேயினை மீட்டதும் கேதமுடன்
மாளாப் பதம்புக்க மைந்தரை மீட்டதும் மாறலவே
மீளாப் பதம்புக்க பாலரை நீயன்று மீட்டதற்கே !

182] ஆண்டவனது அளவில் ஆற்றல் [எங

பொருங்கே தன்படை மன்னரை மாய்த்துப் புவிமடந்தை
பெருங்கேதம் நீக்கி நடந்தது, மீளப் பிறங்குபுள்ளின்
வருங்கேச வன்சக்ர மாயோ னரங்கன் வரவிடுத்த
கருங்கேசம் ஒன்றுதன் இச்சையி லேசெய்த காரியமே.

1. அசுவத்தாமன் ஏவிய அம்பினால் கருகிப்போன உத்தரை வயிற்றுக் கருப் பிண்டமும் உயிர் பெற்றது.

183] வேதவியாச அவதாரச் சிறப்பு [௭௪

அராவணை யில்துயில் தென்னரங் கா!மறை யாயும்வண்ணம்
பராசரன் மாமக னாகிய நீபண்டு பாரதப்போர்
பொராவிழு நூற்றுவர் சேனையெல் லாம்புனற் கங்கைவெள்ளத்
தராதல மேல்வரக் காட்டிய வாதந்தை சந்திக்கவே!

184] கற்கியவதாரச் சிறப்பு [௭௫

தருமம் தவிர்ந்து பொறைகெட்டுச் சத்தியம் சாய்ந்துதலைய
தெருமந்து தன்பூ சனைமுழு துஞ்சிதை யக்கலியே
பொரும்அந்த காலக் கடையினில் எம்பொன் அரங்கனல்லால்
அருமந்த கற்கியென் றோரே அவைநிலை ஆக்குவரே?

185] அந்தரியாமித்துவச் சிறப்பு [௭௬

தெள்ளும் புனற்பொன்னி நன்னீர் அரங்கர் நிலாநிக்குமா
றெள்ளும் கரந்துறை எண்ணெயும் போல்எண்ணில் கோடியண்டத்
துள்ளும் புறம்பும் ஒழியாது நின்றும் உகங்கள்தொறும்
கொள்ளும் திருவுரு எல்லாம் அவரறி கோலங்களே.

186] தத்துவ உண்மை [௭௭

உம்பர்க் கரிய பெருமாள் அரங்கர்தம் உண்மையெல்லாம்
இம்பர்க் குலகில் வெளியிட்ட வேசரண் இல்லையென்றோர்
கும்பக் கடகயங் கூப்பிடச் சென்றதும், கோளரியாய்த்
தம்பத் துதித்ததும், தாழிக்கு வீட்டினைத் தந்ததுமே.

187 எம்பெருமானுக்கு அணை முதலியன [௭௮

போங்கர வென்பது மெல்லணை ; ஊர்திவெம் புள்ளரசு ;
பங்கய மின்னோடு பார்மகள் தேவி ; படைப்பவன்சேய் ;
கிங்கரர் விண்ணவர் ; சாதக நாடிறை ; கேழலொன்றாய்
அங்கண் நெடும்புவி எல்லாம் இடந்த அரங்கருக்கே.[1]

188] இதுவும் அது [௭௯

சிங்கா தனம்பொற் கிரி; திரு மஞ்சனம் தெய்வவிண்ணீர் ;
கொங்கார் தொடையுந் தாமம; சுடருடைக் கோள்விளக்கம் ;
பொங்காழி மண்திருப் போனகம் ஆக்கினார் புண்டரிகை
தங்கா தலர்நம் பெருமாள் அரங்கர் தமக்குமுன்னே.

1. திருவரங்கக் கலம்பகம், செய் ௫௨ நோக்குக.

189] தேவிமார்களின் சிறப்பு [௮0

தேமா மலர்க்கயம் சூழ்கோயில் மேவும் திருவரங்கர்
தாமா தரித்த திருத்தேவி மாரில் தரங்கவுடைப்
பூமாது நாளும் புரத்தே சுமந்து புரக்கும்; மலர்
மாமாது செல்வம் கொடுத்தே உயிர்களை வாழ்விக்குமே.

190] திருமந்திரச் சிறப்பு [௮௧

நம்பெரு மாளெழுத் தெட்டின் பெருமை நவிலுமதோ!
சம்பரன் மாயம், புரோகிதர் சூழ்வினை, தார்அணிவாள்
வெம்படை, மாசுணம், மாமத வேழம், விடம், தழல், கால்,
அம்பர மேமுத லானவை பாலனுக்[1] கஞ்சினவே!

191] துவாதசாக்கர மகாமந்திரச் சிறப்பு [௮௨

அத்தா அரங்கத் தமர்ந்தவ னே! எழுத் தாறிரண்டின்
வித்தாய நின்னருள் கொண்டல்ல வோவிளை வொன்றறியா
உத்தான பாதன் மகன்[2] சலி யாதுல குள்ளளவும்
எத்தா ரகைக்கும் முனிவர்க்கும் மேற்சென் றிருக்கின்றதே?

192] திருவாயுதங்கள் [௮௩

புடைக்கும் குடமுலைப் பூமக ளார்[3] தம் பொருட்டுமுந்நீர்
அடைக்கும் பெரிய பெருமா ளரங்க ரவர்கரத்துப்
படைக்கும் கமலம் அளிக்கும்; மின் ஞாழிப் படைபடைக்கும்;
துடைக்கும் கதை; முத்தி மாற்றாது நல்கும் சுரிசங்கமே.

193] திருச்சக்கரப்படை [௮௪

ஞாலத் திகிரி முதுநீர்த் திகிரி நடாத்துமிந்தக்
காலத் திகிரி முதலான யாவும் கடல்கடைந்து
நீலத் திகிரி அனையார் அரங்கர் நிறைந்தசெங்கைக்
கோலத் திகிரி தலைநா ளினிற்கொண்ட கோலங்களே.

194] இதுவும் அது. [௮௫

மோதித் திரைதவழ் நன்னீர் அரங்கர் முடிமுதலாம்
சாதிக் கதிர்மணிப் பேரணி யாகித் தனஞ்சயன்போர்
பேதித் திரவு பகலாக விண்ணிற் பிறழ்ந்துசெங்கேழ்
சோதித் திகிரி திருமேனி யெங்குஞ் சுடர்விடுமே.

---

1. பாலன்-பிரகலாதன், 2. உத்தானபாதன் மகன்-துருவன், 3. பூமகளார்-சீதாபிராட்டியார்.

195] திருவனந்தாழ்வான் [௮௬

ஓலாழி சூழ்புவி உச்சியில் ஏந்தும் ; உகக்கடையிற்
காலான நற்குண மூர்த்தியைக் காலும்;அக் காலமெல்லாம்
மேலா விளங்கும் புவிமீதில் என்றன் விழுத்துணையாம்
மாலாம் அரங்க மணவாளர் கண்துயில் மாசுணமே.

196] இதுவும் அது. [௮௭

சென்றால் குடையாம்; கடற்புணை யாம்;திருத் தீவிகையாம்;
நின்றால் இருதிருப் பாதுகை யாம்;நித் திரைக்கணையாம்;
குன்றா மணியொளி யாசன மாம்;புனை கோசிகையாம்;
அன்றா லிலையில் துயிலரங் கேசர்க் கரவரசே.

197] பெரிய திருவடி [௮௮

சிரம்,சே தனன்,விழி, தேகம், சிறை,பின் சிணை,பதம்கந்
தரம்,தோள்கள், ஊரு, வடிவம், பெயர்எசுர் சாமமுமாம்;
பரந்தே தமதடி யார்க்குள்ள பாவங்கள் பாற்றியருள்
சுரந்தே அளிக்கும் அரங்கர்தம் ஊர்திச் சுவணனுக்கே.[1]

198] சேனை முதலியார் [௮௯

ஆளில் அமரர் அரங்கேசர் சேவைக் கணுகுந்தொறும்
கோளின் திரளை விலக்கும் பிரம்பின் கொணைபடலால்
தோளில் அடித்தழும் புண்டச் சுரர்க்கச் சுரர்தொழலால்
தாளில் முடித்தழும் புண்டுநம் சேனைத் தலைவருக்கே.

199] சிறிய திருவடி [௯0

ஆதித் திருவெழுத் தைந்துடைத் தாயும் அராவணிந்தும்
சோதித் திருக்கண்கள் மூன்றுடன் தோன்றும் சுருதிசொன்ன
நீதிக் கிசைய நடவா மனிதரை நேமிகொண்டு
வாதித் தருளும் பெருமாள் அரங்கர்தம் வாகனமே.[2]

200] இதுவும் அது. [௯௧

வல்லாம் முலைத்திரு வின்பெரு மான்விட்ட வாகயம்போய்த்
தொல்லாழி நீரைக் கடந்தது தாளின் ; சுடரிரண்டுஞ்
செல்லாத வூரைத் திரிபுரம் கண்டது ; சேனைவெள்ளம்
எல்லாம் உயக்கொண் டதுமருந் தார்கிரி ஏந்திவந்தே.

---

1. கருடாழ்வான் வேதமயமானவன் என்பது இச்செய்யுளின் கருத்து. 2. அரங்கர்தம் வாகனம்-அனுமான். அனுமான் சிவபெருமானது அமிசம் என்பது கருத்து.

201] திருவைகுந்தம் [சுஉ

தொல்லை கமடத் தலம்;நவ கண்டம்;[1] தொடுகடல்நீர்;
எல்லைக் கிரி;தனக் கிப்புறத் தெண்கிரி; அப்புறத்தில்
மல்லைப் பரிதியின் மண்டலம்; நாகம்;அவ் வான்முகட்டூர்;
அல்அப் புறத்துவை குந்தம்பொற் கோயில் அரிக்கிடமே.

202] இதுவும் அது. [சுங

எந்த வுலகத்தும் மேலது;நித்திய இன்பத்தது;
பந்தம் நசிப்பது; நித்தரும் முத்தரும் பாரிப்பது;
முந்தை மறையினின் றல்லாதெத் தேவர்க்கும் முன்னவரி(து);
அந்த மிலதரங் கன்மேவு வைகுந்த மானதுவே.

203] திருப்பாற்கடல் [சுச

காவும் சுரபியும் சிந்தா மணியும் கடிக்கமலப்
பூவும் பணிலமும் பொங்கிள மாவும் புகர்த்தடக்கைம்
மாவும் பிறையும் அமுதமும் எங்ஙன் மதிலரங்கர்
மேவும் தரங்கக் கடலில்லை யாகிலிவ் விண்ணவர்க்கே?

204] ஏழு மதில்களும் திரவரங்க விமானமும் [சுரு

அருமறை ஓதிய ஓரெட் டெழுத்தும் அயன்படைத்த
இருநில மீதினில் யாவரும் காண இலங்குதுத்திக்
குருமணி நாகத்தில் எங்கோன் விழிதுயில் கொண்டருளத்
திருமதில் ஏழும் விமானமும் ஆகிச் சிறக்கின்றவே.[2]

205] இதுவும் அது. [சுசு

தாழா திபஞ்சொல்ல வந்தார் அரங்கர் தயங்குசெம்பொற்
கேழாம் விமானம் கிளர்செம்பொன் மேரு கிரிநிகர்த்த
ஏழா வரணத் திடையிடைத் தீவுகள் இவ்வனைத்தும்
சூழாறு மாகடல் எவ்வாறு நாமினிச் சொல்லுவதே?[3]

---

1. நவகண்டம்-வடபால்விதேகம், தென்பால்விதேகம், கீழ்பால்விதேகம், மேல்பால்விதேகம், வடபாலிரேவதம், தென்பாலிரேவதம், வடபாற்பாதம், தென்பாற்பரதம், மத்திமகண்டம் என்பனவாம்.

2. திருவெட்டெழுத்துள் பிரணவம் விமானமும், ஏனைய எழுத்தேழும் ஏழு மதில்களுமாயின என்பது கருத்து.

3. காவேரி கடலையும், ஏழு மதில்களுக்கு இடையிலுள்ள இடங்கள் கடலிலுள்ள ஏழு தீவுகளையும், இடையிலுள்ள விமானம் மேரு மலையையும் ஒக்கும் என்பது கருத்து.

206] சயனத் திருக்கோலம் [௯௭

ஞாலத் திகிரி பகலிர வாக நடத்துமிந்தக்
காலத் திகிரி நடக்கவற் றேவெங் கனலுமிழ்வாய்
ஆலப் பணியணை மீதே அரங்கத் தமர்ந்துறையும்
நீலக் கடல்கண் விழித்துறங் காவிடில் நிச்சமுமே?

207] இதுவுமது. [௯௮

தாமக் கடையுகத் துள்ளே விழுங்கித் தரித்தயமுஞ்
சேமப் புவனம் செரிக்குமென் றேசிவன் மாமுடிக்கு
நாமப் புனல்தந்த பொற்றாள் அரங்கர் நலஞ்சிறந்த
வாமத் திருக்கர மேலாக வேகண் வளர்வதுவே.

208] திருக்கைகள் [௯௯

கதிராரும் நீள்முடி சேர்ந்தகைப் போதெக் கடவுளர்க்கும்
அதிராசன் ஆனமை காண்மினென் றேசொல்லும்; ஆயபொன்மா
மதிலார் அரங்கர்பொன் தாளார் திருக்கரம் 'மற்றிதுவே
சதுரா னனன்முதல் எல்லா வுயிர்க்கும் சரண்,' என்னுமே.

209] வியூகமூர்த்தியே திருவரங்கநாதன் [௧௦௦

மோகத் துயில்புரி மெய்போலக் கண்ட முறையினுக்கிங்
கேகத் திருவுரு என்றறிந் தேன்இந் திரையை அன்போ
டாகத்து வைத்தருள் தென்னரங் கா! அங்கும் இங்கும்ஒக்கப்
போகத்துக் கொண்ட பணநாகம் ஒன்று பொறுத்தபின்னே.

210] எம்பெருமான் திருமேனியின் நீலநிறம் [௧௦௧

சோதித் திருவுரு ஆகாய மாகச் சுருதிநன் னூல்
சாதித்து நின்று தெளிந்துவிட் டேன்மிக்க தானவரைச்
சேதித்த நேமித் திருவரங் கா! சங்கை தீரவுன்றன்
ஆதித் திருவுரு வின்பே ரணிநிற மானபின்னே.[1]

211] ஆனந்த அனுபவம் [௧௦௨

ஓங்கார வட்டத்து மாசுணப் பாயில் உலகமுண்ட
பூங்கார் விழிக்குப் புலப்பட்ட தால்எப் பொழுதுமென்னை
நீங்கா திடர்செய்யும் தீவினை காள்! இனி நின்றுநின்று
தேங்காது, நீருமக் கானிடத் தேசென்று சேர்மின்களே!

---

1. இறைவன் எங்கும் நிறைந்தவனாதலால், அவன் நிறம் எங்கும் நிறைந்துள்ள ஆகாயத்தின் நீலநிறமே என்பது கருத்து.

212] இதுவும் அது. [௧௦௫

விண்ணிட்ட சோலை அரங்கத்து மேவிய மெய்ப்பொருளைக்
கண்ணிட்ட பார்வையிற் கட்டியென் கண்வரக் கண்டிடலாம்
புண்ணிட்ட வண்ணக் கிழியுட் பொதிந்து புறத்துவெள்ளை
மண்ணிட் டிலச்சினை யிட்டுவிள் ளாதுள்ளம் வைத்தனனே.

213] இதுவும் அது. [௧௦௬

கைத்துப் பழவினை தித்திக்க என்றன் கருத்தினுள்ளே
பைத்துத்தி மெத்தையின் மீதே துயிலும்பைங் கேழெறிந்து
மைத்துக் குளிர்ந்து மதுரித்து மெத்தென்று மாமணத்து
நெய்த்துப் புகர்த்து நிகர்க்கும்பொன் மேனி நெடுங்கடலே.

214] கருட சேவை [௧௦௭

தெள்ளா வரும்பொன்னி சூழரங் கா!ஒரு தேவரையும்
உள்ளா தெனதுள்ளம்;யானென்செய் வேன்!விண்ணில்ஓர்உவணப்
புள்ளாகி வேதப் பொருளாகி உன்னைத்தன் பொற்கழுத்தில்
கொள்ளா வருகின்ற கோலம்உள் ளேகண்டு கொண்டபின்னே.

215] இதுவும் அது. [௧௦௮

முன்பால் இலைமக வாகிய போதிந்த மூதண்டங்கள்
உன்பால் ஒடுங்கி இருந்தது போலும் உததிமங்கைக்
கன்பா! அரங்கத்தென் ஆரமு தே!அணு வாயிருந்தும்
என்பால் அகண்டமும் ஆகிய நீவந் திருக்கின்றதே.

216] பகவானைப் பிரார்த்தித்தல் [௧௦௯

வலைப்பால் விடம்பிணைக் கண்ணியர் போகத்தில் மாலுறுமென்
தலைப்பாற் கழலருள் தாரரங் கா!பல தாயர்தந்த
முலைப்பாற் கடலுன் திருக்கழல் ஆணிவெண் முத்தெறியும்
அலைப்பாற் கடலின் அளவாம் எனின்மற் றதுவுமன்றே.[1]

217] இதுவும் அது. [௧௦௮

தொடைமா றனும்தமிழ் சொல்மா றனும்தொழத் துத்திவெள்ளைக்
குடைமா சுணத்தில் துயிலரங் கேச! குலவுவைவேற்
படைமாறு கொண்டமைக் கண்ணியர் பால்வைத்த பாசநெஞ்சை
மடைமாறி உன்றன் திருவடிக் கேவர வைத்தருளே!

---

1. 'இனி ஒரு தாய் வயிற்றிற் பிறவாத வரம் தந்தருள வேண்டும்,' என்பது இதன் கருத்து.

218] அனன்னிய கதித்துவமும் பிரார்த்தனையும் [௧௦௯

கரணம் தளிர்ந்து விழிபோய்ச் சுழன்று கலங்குமென்றன்
மரணந் தனில்வந் துதவுகண் டாய்!கொற்ற வாளியொன்றால்
அரணம் கடந்தவன் காணா அரங்க!என் ஆருயிர்க்குன்
சரணம் சரணம் ஒழிந்தில்லை வேறித் தராதலத்தே!

219] ஒன்றிலும் பற்றின்மை [௧௧௦

நீடும் திகிரிப் படையாய்! உனைக்கற்று நின்னையென்றும்
பாடும் படிதமிழ்ப் பாடல்தந் தாய்;பழ நான்மறைநூல்
தேடும் திருவரங் கா!அடி யேனுயிர் செல்லுமந்நாள்
வீடும் தரவிருந் தாய்;எனக் கேதினி வேண்டுவதே?

220] அன்னியசேஷத்துவ நிவிருத்தி [௧௧௧

ஆவைக்கல் லாவை எதிரென்று சொல்லி அழுக்கடைந்த
நாவைப் பரிசுத்தம் பண்ணிய வேகஞ்சன் நஞ்சன்விட்ட
கோவைச் சகட்டைப் பகட்டைப் பொருதிய கோயிலில்வாழ்
தேவைப் பகர்ந்தசெஞ் சொற்றிரு நாமங்கள் சிற்சிலவே.[1]

221] நாந்திச் செய்யுள் [௧௧௨

முனிதக் கவிமொழி யாமங்கை வாழ்மண வாளவள்ளல்
புனிதக் கவிகொண்டு மாலைசெய் தான்புயல் போல்முழங்கும்
தொனிதக்க சங்கம்திருச்சக் கரஞ்சுடர் வாள்முசலம்
குனிதக்க சார்ங்கம் தரித்தார் அரங்கர்பொற் கோயிலுக்கே.[2]

1. 'திருநாமங்களுள் மிகச்சிலவே என் நாவைத்தூய்மைப் படுத்தின,' என்பது கருத்து.

2. இது தம்மைப் பிறர் போல நாந்தி கூறிய தற்சிறப்புப் பாயிரம்.

# 3. திருவரங்கத்தந்தாதி

## சிறப்புப் பாயிரம்

222] கட்டளைக் கலித்துறை [க

மணவாள் அரவிந்தை மார்நோக்க இம்மை மறுமையில்மா
மணவாளர் தம்பதம் வாய்த்திடும் கோயிலில் வந்தஅந்த
மணவாளர் பொற்றிருப் பாதாம் புயங்கட்கு மாலையென
மணவாளர் சூடும் யமகவந் தாதியை வாசிமினே.

223] காப்பு [உ

ஓராழி வெய்யவன் சூழல கேழ்உவந் தேத்தரங்கர்
காராழி வண்ணப் பெருமாளந் தாதிக்குக் காப்புரைக்கின்
சீராழி அங்கையிற் பொற்பிரம் பேந்திய சேனையர்கோன்
கூராழி சங்கம் திருக்கதை நாந்தகம் கோதண்டமே.

224] [ந

வையம் புகழ்பொய்கை பேய்பூதன் மாறன் மதுரகவி
ஐயன் மழிசைமன் கோழியர் கோன்அருட் பாண்பெருமாள்
மெய்யன்பர் தாற்பொடி விண்டுசித் தன்வியன் கோதைவெற்றி
செய்யங்கை வேற்கலி யன்தமிழ் வேதம் நிலைநிற்கவே.

225] [ச

சீதரன் பூமகள் சேனையர் கோன்தென் குருகைப்பிரான்
நாத முனியுய்யக் கொண்டார் இராமர்நல் ஆளவந்தார்
ஏதமில் வண்மைப் பராங்குச தாசர் எதித்தலைவர்
பாதம் அடைந்துய்ந்த ஆழ்வான்எம் பார்பட்டர் பற்றெமக்கே.

226] [ரு

திருமாலை யாண்டான் திருக்கோட்டி நம்பி திருவரங்கப்
பெருமா ளரையர் திருமலை நம்பி பெரியநம்பி
அருமால் கழல்சே ரெதிராசர் தாளிற்சிங் காதனராய்
விருமா ரியர்கள் எழுபத்து நால்வர்*என் வான்துணையே.

---

222. '(ஊலகீர்) கோயிலில் வந்த அந்தம் மணவாளர் பொன் திருப்பாத அம்புயங்கட்கு மாலை என மணவாளர் சூடும் யமக வந்தாதியை வாசிமின்: இம்மை மணம் வாள் அரவிந்தைமார் நோக்க, மறுமையில் மாமணவாளர்தம் பதம் வாய்த்திடும்,' என இயைக்க. இக்கவி அபியுக்தர் ஒருவர் இயற்றிய தனியன்.

* சிங்காதனர் எழுபத்து நால்வர் :

1. முதலியாண்டான், 2. கந்தாடையாண்டான், 3. மாருதிப்பெரியாண்டான், 4. மாற்றொன்றில்லா மாருதிச் சிறியாண்டான், 5. ஈசுவரவாண்

227] [சா

மாறன் பராங்கதி தந்தடி யேனை மருட்பிறவி
மாறன் பரான குழாத்துள்வைப் பான்றொல்லை வல்வினைக்கோர்
மாறன் பராமுகஞ் செய்யாம லென்கண் மலர்க்கண்வைத்த
மாறன் பராங்குசன் வாழ்கவென் னெஞ்சினும் வாக்கினுமே.

228] நூல் [எ

திருவரங் காவுறை மார்பா! திசைமுகன் சேவிப்பகந்
திருவரங் காதரித் தின்னிசை பாடத் திருக்கண்வளர்
திருவரங் கா!உன் பழவடி யேற்கருள் செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனைக் கேதொண்டு செய்வதற்கே.

---

227. 'மால் தன் பராங்கதி தந்து அடியேனை மருள் பிறவி மாறு அன்பரான குழாத்துள் வைப்பான் - தொல்லை வல்வினைக்கு ஓர் மாறன் - பராமுகம் செய்யாமல் என்கண் மலர்க்கண் வைத்த மாறன் பராங்குசன் - என் நெஞ்சினும் வாக்கினும் வாழ்க!' என இயைக்க.

228. 'திரு அரங்கு ஆ(க) உறை மார்பா! திசைமுகன் சேவிப்ப, கந்திருவர் அங்கு ஆதரித்து இன்னிசை பாடத் திருக்

---

டான், 6. ஜீயராண்டான், 7. ஆண்டுகொண்டான், 8. ஆள்கொண்டான், 9. ஈயுண்ணியாண்டான், 10. அம்மங்கியாண்டான், 11. சோமாசியாண்டான், 12. கூரத்தாழ்வான், 13. தெற்காழ்வான், 14. நெய்யுண்டாழ்வான், 15. ஈயுண்ணிப் பிள்ளையாண்டான், 16. மிளகாழ்வான், 17. அனந்தாழ்வான், 18. கோமடத்தாழ்வான், 19. வேதாந்தியாழ்வான், 20. மாடபூசையாழ்வான், 21. சேட்டலூராழ்வான், 22. கிடாம்பியாழ்வான், 23. உக்கலாழ்வான், 24. அரணபுரத்தாழ்வான், 25. உருப்பூட்டூராழ்வான், 26. சொட்டை நம்பி, 27. பிள்ளை திருமலை நம்பி, 28. தொண்டனூர் நம்பி, 29. மருதூர்நம்பி, 30. மழவூர்நம்பி, 31. திருக்குருங்குடி நம்பி, 32. முடும்பை நம்பி, 33. பராங்குச நம்பி, 34. வில்லிபுத்தூர் நம்பி, 35. வடுக நம்பி, 36. வங்கிபுரத்து நம்பி, 37. செடியெடுத்த நம்பி, 38. சொக்கத்தூர் நம்பி, 39. வங்கிபுரத்தாச்சி, 40. புண்டரீகாட்சர், 41. பராங்குச பட்டர், 42. சிறுபள்ளி தேவராச பட்டர், 43. கோவிந்த பட்டர், 44. நம்பியூர் அரங்கராச பட்டர், 45. உள்ளூர்ப்பெரிய பெருமாள் பட்டர், 46. வரந்தரும் பெருமாள் பட்டர், 47. எம்பார், 48. சிறிய கோவிந்தப் பெருமாள், 49. சுந்தரத்தோளுடையார், 50. குருகைப்பிரான் பிள்ளான், 51. ஆற்காட்டுப் பிள்ளான், 52. இராமானுசப் பிள்ளான், 53. திருமலை நல்லான், 54. வங்கிபுரத்தாச்சான், 55. கோமாண்டூராச்சான், 56. கிடாம்பியாச்சான், 57. கொங்கிலாச்சான், 58. ஈச்சம்பாடியாச்சான், 59. கணியனூர்ச்சிறியாச்சான், 60. மஞ்சப்பூர்ச் சிறியாச்சான், 61. என்னாச்சான், 62. எச்சான், 63. ஆசூரி ஆதிகேசவப் பெருமாள், 64. கிடாம்பிப் பெருமாள், 65. மகாமுனிப் பெருமாள், 66. அம்மங்கிப் பெருமாள், 67. பிள்ளை திருநறையூரரையர், 68. இராசமகேந்திரப் பெருமாளரையர், 69. பிள்ளை திருநாராயணபுரத்தரையர், 70. பிள்ளை திருக்குருங்குடியரையர், 71. பிள்ளை திருவாய் மொழியரையர், 72. திருவரங்கப் பெருமாளரையர், 73. ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர், 74. இராச நாராயணப் பெருமாளரையர்,

229] [௮

செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத் தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன் சிறிதமுது
செய்ய வளைக்கும் புவிக்குமங் காந்தசெவ் வாய்முகுந்தன்
செய்ய வளைக்குஞ் சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனமே.

230] [௯

தனமா தரஞ்சொற் குதலைப் புதல்வர் தரணியில்லம்
தனமா தரஞ்செயும் வாழ்வஞ்சி யே,'தஞ்சம் நீ'எனப்போந்
தனமா தரங்கிக்க வெற்பெடுத் தாய்!தண் ணனந்தசிங்கா
தன!மா தரங்கமுள் ளாய்!அரங் கா!முத்தி தந்தருளே.

231] [௧௦

தந்த மலைக்குமுன் னின்றபி ரானெதிர் தாக்கிவெம்போர்
தந்தம லைக்குமைத் தானரங் கேசன்தண் பூவினிடைத்
தந்தம லைக்குத் தலைவன்பொற் பாதஞ் சரணென் றுய்யார்
தந்தம லைக்கும் வினையால்நை வார்பலர் தாரணிக்கே.

---

கண் வளர் திருவரங்கா! உனக்கே தொண்டு செய்வதற்கு வரம் காதலித்தேன்; உன் பழ அடியேற்கு அருள் செய்ய எழுந்திரு,' என இயைக்க.

229. 'குரு இன்னருளால் செய்யவளைத் திருத்தாள் வணங்கி, செய்யவளைக்குலம் சூழ் அரங்கேசன் - அளைக்கும் புவிக்கும் அமுது செய்யச் சிறிது அங்காந்த செவ்வாய் முகுந்தன் - செய்ய வளைக்கும் சிலம்பு அணி பாதங்கள் சேர்ந்தனம்,' என இயைக்க.

230. 'ஆ தரங்கிக்க வெற்பு எடுத்தாய்! தண் அனந்த சிங்காதன! மா தரங்கம் உள்ளாய்! அரங்கா! தனமா தர், அம் சொல் குதலைப் புதல்வர், தரணி, இல்லம், தனம் ஆதரம் செ(ய்)யும் வாழ்வு அஞ்சி, 'நீயே தஞ்சம்!' எனப் போந்தனம்; முத்தி தந்தருள்,' என இயைக்க.

231. 'தாரணிக்குப் பலர், 'தந்தமலைக்கு முன்னின்ற பிரான்-எதிர் தாக்கி வெம்போர் தந்த ம(ல்)லைக் குமைத்தான் - தண் பூவின் தந்து இடை அமலைக்குத் தலைவன் - அரங்கேசன் பொன் பாதம் சரண்,' என்று உய்யார்; அலைக்கும் தம் தம் வினையால் நைவார்,' என இயைக்க.

232] [கக

தாரணி தானவன் பாலிரந் தான்சங்கம் வாய்வைத்தொன்னார்
தாரணி தானவஞ் செய்தா னரங்கன் தமர்கள்பொருந்
தாரணி தான வமரா வதியுந் தருநிழலுந்
தாரணி தான வயிரா வதமுந் தருகினுமே.

233] [கஉ

தருக்காவ லா!'என்று புல்லரைப் பாடித் தனவிலைமா
தருக்காவ லாய்,'மயி லே!குயி லே!'என்று தாமதராய்த்
தருக்காவ லாநெறிக் கேதிரி வீர்!கவி சாற்றுமின்;பத்
தருக்காவ லாயுதன் பின்தோன் றரங்கர்பொற் றாளிணைக்கே.

234] [கங

தாளத் தனத்தத்தைச் சொல்லிய ரால்வருந் தாழ்மலபா
தாளத் தனத்தத்தைத் தப்பகிற் பீர்!புடை தங்கியவே
தாளத் தனத்தத்தைத் தீர்த்தா னரங்கன் சகடுதைத்த
தாளத் தனத்தத்தை யாயுதன் பாதந் தலைக்கொண்மினே.

235] [கச

தலையிலங் காபுரஞ் செற்றா னரங்கனென் றாழ்சொற்புன்கு
தலையிலங் காதரஞ் செய்தபி ரான்சர ணன்றிமற்றோர்

232. 'தானவன்பால் தாரணி இரந்தான் - சங்கம் வாய் வைத்து ஒன்னார் தார் அணி அவம் செய்தான் - அரங்கன் தமர்கள், அணிது ஆன அமராவதியும், தரு நிழலும், தார் அணி தான அயிராவதமும் தருகினும், பொருந்தார்,' என இயைக்க. தானவன் - மகாபலி.

233. ''தருக் காவலா!' என்று புல்லரைப்பாடி, தனவிலைமாதருக்கு ஆவலாய், 'மயிலே! குயிலே!' என்று தாமதராய், தருக்கா, அ(ல்)லா நெறிக்கே திரிவீர்! பத்தருக்கா(க) அலாயுதன் பின்தோன்று அரங்கர் பொன்தாள் இணைக்கே கவி சாற்றுமின்,' என இயைக்க.

234 'தாளத் தனத் தத்தை சொல்லியரால் வரும் தாழ் மல பாதாளத்து அனத்தத்தைத் தப்ப கிற்பீர்! புடை தங்கிய வேதாளத்தன் அத்தத்தைத் தீர்த்தான் - சகடு உதைத்த தாளத்தன் - அத்தத்து ஐயாயுதன் - அரங்கன் பாதம் தலைக் கொண்மின்,' என இயைக்க.

235. 'தலை இலங்காபுரம் செற்றான் - என் தாழ்சொல் புன்குதலையில் ஆதரம் செய்த பிரான் - அரங்கன் சரண் அன்றி,

தலையிலங் காநின்ற கண்ணிலங் காண்கைக்குத் தாழுகைக்குத்
தலையிலங் காதிலங் கேட்கைக்கு வாயிலஞ் சாற்றுகைக்கே.

236] [கரு

கைக்குஞ் சரமன் றளித்தாய்! அரங்க!மண் காக்கைக்குமாய்க்
கைக்குஞ் சரம சரம்படைத் தாய்!கட னீறெழுத்து
கைக்குஞ் சர!மக ரக்குழை யாய்!எனைக் கைக்கொளுடல்
கைக்குஞ் சரம தசையிலஞ் சேலென்றென் கண்முன்வந்தே.

237] [கசா

வந்தனை யேற்றனை யென்புன்சொற் கொண்டனை வன்மனத்தே
வந்தனை யேற்றனை யாவையு மாயினை வான்றரவு
வந்தனை யேற்றனைத் தாநொத்த தாளில்வைப் பாய்பலித்து
வந்தனை யேற்றனைத் தீர்த்தாய்! அரங்கத்து மாதவனே!

238] [கஏ

மாதங்கத் தானை அரங்கனை வஞ்சன் இலங்கையிலே
மாதங்கத் தானை யிருதிங்கள் தாழ்த்துப்பின் வாம்பரிதேர்
மாதங்கத் தானை வலத்தானை முன்வதைத் தானைத்தன்பால்
மாதங்கத் தானைவைத் தானைவைத் தேனென் மதியகத்தே.

---

மற்று ஓர் தலை காண்கைக்கு இலங்காநின்ற கண் இலம்; தாழுகைக்குத் தலையிலம்; கேட்கைக்குக் காது இலம்; சாற்றுகைக்கு வாய் இலம்,' என இயைக்க. அங்கு - அசை.

236. 'கைக்குஞ்சரம் அன்று அளித்தாய்! அரங்க! காக்கைக்கும் மாய்க்கைக்கும் மண் சரம் அசரம் படைத்தாய்! கடல் நீறு எழுத் துகைக்கும் சர! மகரக் குழையாய்! உடல் கைக்கும் சரம தசையில் என் கண்முன் வந்து, 'அஞ்சேல்!' என்று எ(ன்)னைக் கைக்கொள்,' என இயைக்க.

237. 'ஏற்றனைப் பலித் துவந்தனைத் தீர்த்தாய்! அரங்கத்து மாதவனே! (என்) வந்தனை ஏற்றனை; என் புன்சொல் கொண்டனை; (என்) வன்மனத்தே வந்தனை ஏற்று, அ(ன்)னை யாவையும் ஆயினை; வான் தர உவந்தனையேல், த(ன்)னைத் தான் ஒத்த தாளில் வைப்பாய்,' என இயைக்க.

238. 'மாதங்கம் தானை அரங்கனை - வஞ்சன் இலங்கையிலே மா தங்கத் தான் ஐயிருதிங்கள் தாழ்த்து, பின் வா(வு)ம் பரி, தேர், மாதங்கம், தானை வலத்தானை முன் வதைத்தானை - (மாது அங்கத்தானைத் தன்பால் வைத்தானை) - என் மதியகத்து வைத்தேன்,' என இயைக்க.

239] [கஅ

மதிக்கவ லைப்புண்ட வெண்டயிர் போல மறுகுறுமென்
மதிக்கவ லைப்புண் தணிகின்றி லேன்மண்ணும் வானகமும்
மதிக்கவ லைப்புனல் சூழரங் கா!நின் மனத்தருடா
மதிக்கவ லைப்புன் பிறப்பினி மேலும் வருங்கொலென்றே!

240] [கக

வருந்துவ ரைப்பட்ட மங்கையர் எண்மர் மனங்களைக்க
வருந்துவ ரைப்பட்ட வாயரங் கேசனை வஞ்சப்பகை
வருந்துவ ரைப்பட்ட வேழமட் டானை மறந்துலகோர்
வருந்துவ ரைப்பட்ட ஈப்போல் மடந்தையர் மால்வலைக்கே.

241] [உ0

மாலைக்கல் லார மடவார்புண் ணுக்கையில் வாஞ்சைவைத்து
மாலைக்கல் லாரம் புலிக்குநை யாநிற்பர் மாய்விப்பதோர்
மாலைக்கல் லாரம் புயத்தாளில் வைக்கு மதிலரங்க
மாலைக்கல் லாரஞ் சலியாரென் னேசில மானிடரே!

242] [உக

மானிட ராக வரலரி தோர்மண் டலத்திநெறி
மானிட ராக மிலாதவ ராதன் மல யனூர்

---

239. 'மண்ணும் வானகமும் மதிக்க, அலைப்புனல் சூழ் அரங்கா! நின் மனத்து அருள் தாமதிக்க, 'வலைப் புன்பிறப்பு இனிமேலும் வருங்கொல்!' என்று மதிக்க அலைப்புண்ட வெள் தயிர்போல மறுகுறும் என் மதிக் கவலைப்புண் தணிகின்றிலேன்!' என இயைக்க.

240. 'துவரை வரும் பட்ட மங்கையர் எண்மர் மனங்களைக் கவரும் துவரைப்பட்ட வாய் அரங்க ஈசனை - வஞ்சப்பகைவர் உந்து வரைப்பட்ட வேழம் அட்டானை - மறந்து, உலகோர் ஐப்பட்ட ஈப்போல் மடந்தையர் மால் வலைக்கே வருந்துவர்,' என இயைக்க. (பட்டமங்கையர் எண்மர்: உருக்குமிணி, சத்தியபாமை, ஜாம்பவதி, சத்தியை, மித்திரவிந்தை, சுசீலை, உரோகிணி, இலட்சணை என்னும் கண்ணபிரானரின் பட்டத்துத் தேவிமார்).

241. 'சில மானிடர், மாலைக் கல்லாரம் மடவார் புண் ஆக்கையில் வாஞ்சை வைத்து, மாலைக்கு அல் ஆர் அம்புலிக்கு நையா நிற்பர்; மாய்விப்பது ஓர் மாலைக் கல்லார்; அம்புயத்தாளில் வைக்கும் மதில் அரங்கமாலைக் கல்லார்; என்னே!' என இயைக்க.

242. 'ஓர் மண்டலத்தின் மானிடராக வரல் அரிது; இடர் ஆகம் இ(ல்)லாதவர் ஆதல் (அரிது); நெறிமான் (ஆதல் அரிது);

மானிட ராகமத் தாலன்ப ராய வரங்கத்துளெம்
மானிட ராக மலரடிக் காட்படும் வாழ்வரிதே!

243] [உஉ

அரிதா மரைக்கணந் தோலுடுத் தாரய னூர்க்கரியான்
அரிதா மரைக்கணம் மான்றிருப் பாத மடைமின்சன்மம்
அரிதா மரைக்கணந் தங்கா துயிரவ னூர்வினவில்
அரிதா மரைக்கண மீர்த்தோடும் பொன்னி அரங்கமன்றே?

244] [உந

அரங்காது வார்கண்ணை கண்வள்ளை கோங்கின் அரும்புமங்கை
அரங்காது வார்முலை என்றைவர் வீழ்ந்தனர் ஆடரவின்
அரங்கா! துவார மிலாமணி யே!அணி யார்மதில்சூழ்
அரங்கா! துவாரகை யாய்! அடி யேனுன் அடைக்கலமே.

245] [உச

அடைக்கலந் தாயத் தவர்போல் உடலுறை ஐவரையும்
அடைக்கலந் தாயுல கங்கொண்ட தாள்களுக் கண்டமுண்டால்
அடைக்கலந் தாய்!அரங் கா!ஆயர் பாடியில் அன்றுநெய்பால்
அடைக்கலந் தாய்வைத்து வாய்நெரித் தூட்ட அழும்ஐயனே!

---

மலர் அயனூர் மான் இடர் ஆகமத்தால் அன்பர் ஆய அரங்கத்துள் எம்மான் இடம் ராகம் மலர் அடிக்கு ஆள்படும் வாழ்வு அரிதே!' என இயைக்க.

243. 'அரி[1], தாம் அரைக்கண் அம் தோல் உடுத்தார், அயனூர்க்கு அரியான் - அரி[2]-தாமரைக்கண் அம்மான் - திருப் பாதம் அடைமின்; சன்மம் அரிது ஆம்; உயிர் அரைக்கணம் தங்காது; அவன் ஊர் வினவில், அரி[3] தாம் மரைக்கணம்[4] ஈர்த்து ஓடும் பொன்னி அரங்கம் அன்றே?' என இயைக்க.

குறிப்பு: 1. இந்திரன், 2. திருமால், 3. சிங்கம், 4. தாவும் மான் கூட்டம்.

244. ''மங்கையர் கண், அரம் காது[1] வார் கணை; அம் காது வள்ளை;[2] வார்முலை[3] கோங்கின் அரும்பு,' என்று ஐவர்[4] வீழ்ந்தனர்; ஆடு அரவு இன் அரங்கா! துவாரம் இலா மணியே! அணி ஆர் மதில் சூழ் அரங்கா! துவாரகையாய்! அடியேன் உன் அடைக்கலம்,' என இயைக்க.

குறிப்பு: 1. அராவப்பட்ட, 2. வள்ளைக்கொடியின் இலை, 3. கச்சுப் பொருந்திய தனங்கள், 4. பஞ்சேந்திரியங்கள்.

245. 'அண்டம் உண்டு, ஆல் அடைக்[1]கலந்தாய்! அரங்கா! அன்று ஆயர்பாடியில் நெய் பாலடைக் கலம்[2] வைத்து, [illegible]

246] [உரு

'ஐய! மருந்திவை; உண்,' என்று மாதர் அட் டூட்டுஞ்செல்வம்
ஐய மருந்தினைப் போதே அவரின்பம் ஆதலினல்
ஐய மருந்தியக் கங்குறு காமுன் அரங்கற்கன்பாய்
ஐய மருந்தியும் வாழ்மின்கள்; மேலுமக் கானந்தமே.

247] [உசா

நந்த மரங்களை மாகட லேழும் நடுங்களய்த
நந்த மரங்களைப் பற்றுநெஞ் சே! வினை நையும்; முன்கை
நந்த மரங்களை யார்மயல் போம்; வரு நற்கதிவா
நந்த மரங்களை வாக்குமெஞ் ஞான்று நரகில்லையே.

248] [உள

நரகந் தரம்புவி யிம்மூன் றிடத்து நனிமருவு
நரகந் தரங்கித்து வெங்காலற் கஞ்சுவர் நாயகவா
நரகந் தரம்புட் பிடரே றரங்கர்நல் லாய்க்குலத்தி
நரகந் தரங்காமுற் றூரடி யார்க்கு நமனஞ்சுமே.

---

வாய்நெரித்து ஊட்ட, அழும் ஐயனே! தாயத்தவர்[3] போல் உடல் உறை ஐவரையும்[4] (யாம்) அடைக்கலம்;[5] தாய்[6] உலகம் கொண்ட தாள்களுக்கு அடைக்கலம்,' என இயைக்க.

குறிப்பு: 1. இலை, 2. பாலடையாகிய பாத்திரம், 3. பங்காளிகள், 4. பஞ்சேந்திரியங்கள், 5. கட்டுப்படுத்தோம், 6. தாவி.

246. 'மாதர், 'ஐய! இவை மருந்து;[1] உண்,' என்று அட்டு[2] ஊட்டும் செல்வம் ஐயம்;[3] அவர் இன்பம் அருந்தினைப்போதே; ஆதலினல், ஐ[4] அமரும் தியக்கம் குறுகாமுன் ஐயம்[5] அருந்தியும் வாழ்மின்கள்; மேல் உமக்கு ஆனந்தமே,' என இயைக்க.

குறிப்பு: 1. தேவாமிர்தம், 2. சமைத்து, 3. சந்தேகம். 4. கோழை, 5. பிச்சை.

247. 'நெஞ்சே! மரம்[1] (ஏழும்) நந்த[2]-களை மாகடல் ஏழும் நடுங்க எய்த நந்தம்[3] அரங்களைப் பற்று; வினை நையும்; முன் கை நந்து[4] அமர் அங்கனையார்[5] மயல் போம்; நல்கதி வா நம்[6] வரும்; தமர் அனைவர்க்கும் எஞ்ஞான்றும் நரகு இல்லை,' என இயைக்க. ஈற்றுஏகாரம் நிச்சயத்தைக் குறித்து நிற்பதால் தேற்றேகாரமாம்.

குறிப்பு: 1. மராமரம், 2. அழிய, 3. நம்முடைய 4. சங்கு 5. பெண்டிர், 6. பரமபதம்.

248. 'நரகு, அந்தரம், புவி, இம்மூன்று இடத்தும் நனி மருவுநர் அகம் தரங்கித்து வெங்காலற்கு அஞ்சுவர்; நாயக வாநர கந்தரம் புள் பிடர் ஏறு அரங்கர் நல் ஆய்க்குலத்து இநர்—தரங்கம் அகம் உற்றூர்—அடியார்க்கு நமன் அஞ்சும்,' என இயைக்க.

249] [௨௮

அஞ்சக் கரத்தலைக் கங்கைய னேற்றலு மஞ்சிறைய
அஞ்சக் கரத்தலைக் குண்டிகை யான்மண்டை யங்கைவிட்டே
அஞ்சக் கரத்தலைச் செய்துபித் தேக வருளரங்கன்
அஞ்சக் கரத்தலை வன்றாள லான்மற் றரணிலையே.

250] [௨௯

இலங்கையி லாதர னைங்கரன் மோடி யெரிசுரத்தோன்
இலங்கையி லாத மலையான வீச னிரியவெம்போர்
இலங்கையி லாத படிவாண னைச்செற்ற வென்னரங்கன்
இலங்கையி லாதவன் போகக்கண் டானென் னிதயத்தனே.

251] தலைவி இரங்கல் [௩௰

அத்தனை வேதனை யீன்ற வரங்கனை யைம்படைசேர்
அத்தனை வேதனை வாய்வைத்த மாயனை யாரணங்கோர்
அத்தனை வேதனை தீர்த்தானைச் சேர்க்கில ளாயிரஞ்சால்
அத்தனை வேதனை யப்புவள் சாந்தென் றனலரைத்தே.

252] [௩௧

அரைக்கலை வேலை யுடுத்தமண் பல்பக லாண்டுபற்றல்-
அரைக்கலை வேலை யுடைவேந்தர் வாழ்வெண்ணலைவரையும்

---

249. 'அஞ்சு அக்கரத் தலைக் கங்கையன் ஏற்றலும், அம் சிறைய அஞ்சம் கரத் தலைக் குண்டிகையான் மண்டை அம் கை விட்டே கரத்தலைச் செய்து அஞ்ச, பித்து ஏக, அருள் அம் சக்கரத் தலைவன்—அரங்கன்—தாள் அலால், மற்று அரண் இலை,' என இயைக்க.

250. 'இலங்கு அயில் ஆதரன், ஐங்கரன், மோடி, எரி, சுரத்தோன், இலம் கயிலாத மலை ஈசன் இரிய, வெம்போரில் அம் கை இலாதபடி வாணனைச் செற்ற என் அரங்கன்—இலங்கையில் ஆதவன் போகக் கண்டான்—என் இதயத்தன்,' என இயைக்க.

'அயில் - ஐயில், கைலாசம் - கையிலாதம்' என யமகத்தின் பொருட்டுப் போலியாயின.

251. 'அத்தனை—வேதனை ஈன்ற அரங்கனை—ஐம்படை சேர் அத்தனை—வே(ய்)த(ன்)னை வாய் வைத்த மாயனை—ஆரணங்கு ஓர் அ(ர்)த்தனை வேதனை தீர்த்தானைச் சேர்க்கிலள்; அ(ன்)னை சாந்து என்று அனல் அரைத்து, ஆயிரம் சால் அத்தனை வேது அப்புவள்,' என இயைக்க.

252. 'நெஞ்சே! அரைக்கு அலை வேலை உடுத்த மண் பல் பகல் ஆண்டு, பற்றலரைக் கலை வேலையுடை(ய) வேந்தர் வாழ்வு

அரைக்கலை வேலை யவர்க்கே புரிவையென் றாலுநெஞ்சே !
அரைக்கலை வேலை யரங்கனுக் காட்பட வாதரியே.
253] [௩௨

ஆதவ னந்தரந் தோன்றாமற் கன்மழை யார்த்தெழுநாள்
ஆதவ னந்தர வெற்பெடுத் தானடி யார்பிழைபார்-
ஆதவ னந்தரங் கத்தா னரங்க னடியனென் றுள்-
ஆதவ னந்தரங் கண்டீர் வினைவந் தடைவதுவே.
254] [௩௩

அடையப்பன் னாகங் கடிவா யமுதுக வங்கிகுளிர்
அடையப்பன் னாக மருப்பா யுதமிற வன்றுகுன்றால்
அடையப்பன் னாக மிசைதாங்கப் பாலற் கருள்செய்ததால்
அடையப்பன் னாகங் கரியா னரங்கனெட் டக்கரமே.
255] [௩௪

அக்கர வம்புனைந் தாரய னாரிடை யாயிருநால்
அக்கர வம்பு மலராள் கொழுந னரங்கன்செங்கோல்-

---

எண்ணல்; ஐவரையும் அரைக்கலை; அவர்க்கே வேலை புரிவை என்றாலும், அரைக்கலை வேலை அரங்கனுக்கு ஆட்பட ஆதரி,' என இயைக்க.

18 விநாடிகளையுடையது ஒரு காஷ்டை; 30 காஷ்டைகளை உடையது ஒரு கலை என்னும் கால அளவாம்.

253. "ஆதவன் அந்தரம் தோன்றாமல் கல் மழை ஆர்த்து எழு நாள் ஆ தவனம் தர, வெற்பு எடுத்தான்—அடியார் பிழை பாராதவன்—அம் தரங்கத்தான்—அரங்கன் அடியன்,' என்று உள்ளாத அனந்தரம் கண்டீர் வினை வந்து அடைவது,' என இயைக்க.

ஆ - பசுக்கள். தவனம் தர - தவிப்பைக் கொள்ள. வெற்பு - மலை. தரங்கத்தான் - கடலிற்பள்ளி கொண்டவன். உள்ளாத - நினையாத. அனந்தரம் - பின்பு.

254. 'ஆல் அடை அப்பன்—ஆகம் கரியான்—அரங்கன் எட்டு அக்கரம், பல் நாகம் அடையக் கடி வாய் அமுது உக, அங்கி குளிர் அடைய, பல் நாக மருப்பு ஆயுதம் இற, குன்றால் அடை அப்பு அந்நாகம் மிசை தாங்க, பாலற்கு அன்று அருள் செய்தது,' என இயைக்க.

அடை - இலை. நாகம் - பாம்பு, யானை, மலை; பாலற்கு - பிரகலாதனுக்கு.

255. 'இருநால் அக்கர வம்பு மலராள் கொழுநன்—செங் கோலக்கர அம்புயன்—அரங்கன்—அக்கு அரவம் 'புனைந்தார் அயனார் இடையாய், தான் மூலம் என்பது அறிவித்திடான்;

அக்கர வம்புயன் றன்மூல மென்ப தறிவித்திடான்
அக்கர வம்புவி மேல்வேழ மேவெளி யாக்கியதே.

256] [௩௰

ஆக்குவித் தார்குழ லாலரங் கேசரன் பால்விதுரன்
ஆக்குவித் தார வடிசிலுண் டார்கட லாடையகல்-
ஆக்குவித் தாரறி வற்றேனைத் தம்மடி யார்க்கடிமை
ஆக்குவித் தாரடி யேயடி யேன்றுய்க்கு மாரமுதே.

257] [௩௪

ஆரா தனஞ்செய்து கண்டனின் கீர்த்தி யறைவன்றிரு
ஆரா தனஞ்செய்வன் வேதாவென் றாலடி யேன்புகழ்கைக்(கு)
ஆரா தனஞ்செய்ய போதாந் திருமக ளாக!பல்பூண்
ஆரா! தனஞ்செயன் பாகா! அரங்கத் தமர்ந்தவனே!

258] [௩௭

அமர வரம்பையி னல்லார் பலரந்திக் காப்பெடுப்ப
அமர வரம்பையில்வேல்வேந்தர் சூழமண் ணண்டிருந்தோர்
அமர வரம்பையில் கான்போ யிறந்தன ராதலில்வீ(டு)
அமர வரம்பையின் மஞ்சா ரரங்கருக் காட்படுமே.

---

அக்கரவு, அம்புவி மேல் வேழமே வெளியாக்கியது,' என இயைக்க.

256. 'குழலால் ஆ குவித்தார்—விதுரன் ஆக்கு வித்தார அடிசில் அன்பால் உண்டார்—கடல் ஆடை அகலா குவித்தார்—அறிவு அற்றேனைத் தம் அடியார்க்கு அடிமை ஆக்குவித்தார்—அரங்க ஈசர் அடியே அடியேன் துய்க்கும் ஆரமுது,' என இயைக்க.

257. 'செய்ய போது ஆதனம் ஆம் திருமகள் ஆக! பல் பூண் ஆரா! தனஞ்செயன் பாகா! அரங்கத்து அமர்ந்தவனே! ஆராத நஞ்சு எய்து கண்டன், நின் கீர்த்தி அறைவன்; வேதா, திரு ஆராதனம் செய்வன் என்றால், அடியேன் புகழ்கைக்கு ஆர்?' என இயைக்க.

258. 'அமர அரம்பையின் நல்லார் பலர் அந்திக் காப்பு எடுப்ப, அமர அரம் பையில் வேல் வேந்தர் சூழ மண் ஆண்டிருந் தோர் அமர வரம்பை இல் கான் போய் இறந்தனர்; ஆதலில், வீடு அமரு அரம்பையில் மஞ்சு ஆர் அரங்கருக்கு ஆள்படும்,' என இயைக்க.

259] [௩௮

ஆளாக வந்த வடியேற் கருள்பரி யானைதிண்டேர்
ஆளாக வந்தனிற் செற்றிலங் கேசனை யட்டவல்வில்
ஆளாக வந்தன் புயந்துணித் தாயரங் காமுளரி
ஆளாக வந்தமி லுன்னடி யார்க்கன்ப னாவதற்கே.

260] [௩௯

ஆவா கனத்த ரடியார் மனத்துட்புள் ளானவொப்பில்
ஆவா கனத்த ரரங்கர்பொற் றாளுக் கடிமைப்படார்
ஆவா கனத்த வழுக்குடல் பேணி யறிவிழந்தவ்
ஆவா கனத்த ரிருந்தென் னிராமலென் னம்புவிக்கே?

261] [௪௦

அம்பு விலங்கை நகர்பாழ் படச்சங்கு மாழியும்விட்(டு)
அம்பு விலங்கைகொண் டாயரங் காவன் றிடங்கர்பற்றும்
அம்பு விலங்கை யளித்தா யினியென்னை யாசையென்றிய-
அம்பு விலங்கையிட் டேசுஞ் சிறையி லடைத்திடலே.

262] [௪௧

இடவ மலைக்கும் புயங்க மலைக்கு மிலங்குமகல்
இடவ மலைக்கு மிருங்க மலைக்கு மிறைவசங்க

---

259. 'ஆகவந்த(ன்)னில் பரி, யானை, திண் தேர், ஆள் செற்று, இலங்கா ஈசனை அட்ட வல் வில்லாளா! கவந்தன் புயம் துணித்தாய்! அரங்கா! முளரியாள் ஆக! ஆளாக வந்த அடியேற்கு அந்தம் இல் உன். அடியார்க்கு அன்பன் ஆவதற்கு அருள்,' என இயைக்க.

260. 'அடியார் மனத்துள் ஆவாகனத்தர்—புள் ஆன ஒப்பு இலா வாகனத்தர்—அரங்கர் பொன் தாளுக்கு அடிமைப்படார், ஆ ஆ! கனத்த அழுக்கு உடல் பேணி, அறிவு இழந்து அவா ஆகு அனத்தர்; அம்புவிக்கு இருந்து என், இராமல் என்?' என இயைக்க.

261. 'அம்புவி லங்கை நகர் பாழ்பட, சங்கும் ஆழியும் விட்டு, அம்பு வில் அம் கை கொண்டாய்! அரங்கா! அன்று அம்பு இடங்கர் பற்றும் விலங்கை அளித்தாய்! இனி என்னை ஆசையென்று இயம்பு விலங்கை இட்டு ஏசும் சிறையில் அடைத்திடல்,' என இயைக்க.

262. 'இடவ மலைக்கும், புயங்க மலைக்கும், இலங்கும் அகல் இட அமலைக்கும், இருங்கமலைக்கும் இறைவ! சங்கம் இடவ! மலைக்கும் புனல் அரங்கா! எய்த்த மார்க்கண்டன் கண்டிட அம்

இடவ மலைக்கும் புனலரங் காவெய்த்த மார்க்கண்டன்கண்(டு)-
இடவ மலைக்கு முலகழி யாதுள் ளிருந்ததென்னே!

263] [௪௨

இருந்தை யிலங்க வெளிறுபடாதென் செய்தாலுநிம்பத்(து)
இருந்தை யிலந்தித்தி யாதவை போற்புல்லர் யாவுங்கற்றாய்ந்(து)
இருந்தை யிலம்பன்ன கண்ணார்க்கல் லால்வெண்ணெ யில்லிலொளித்(து)
இருந்தை யிலங்கை யரங்கர்க்கன் பாகி யிருக்கிலரே.

264] [௪௩

இருக்குமந் தத்தி லறியா வரங்கன்மண் ணேழுண்டுந்தய்-
இருக்குமந் தத்திரு வாய்மலர்ந் தானெட் டெழுத்தைக்குறி-
இருக்குமந் தப்புத்தி யீர்த்துநல் வீடெய்த லாகுங்கைபோய்-
இருக்குமந் தச்செவிட் டூமன்மூந் நீர்கடந் தேறிடிலே.

265] [௪௪

ஏறுங் கரியும் பரியுஞ்செற் றான்பர னென்றுமன்றுள்
ஏறுங் கரிமறை யாதலி னாலையம் யாதுமக்கீ(டு)
ஏறுங் கரிய வரங்கர்க்கன் பாய்வினை யென்னுமிடி-
ஏறுங் கரியு மினிமேற் பிறவி யிடரில்லையே.

---

அலைக்கும் உலகு அழியாது உள் இருந்தது என்னே!' என இயைக்க.

263. 'என் செய்தாலும் இருந்தை இலங்க வெளிறு படாது; நிம்பத்து இருந்தையிலம் தித்தியாது; அவைபோல், புல்லர், யாவும் கற்று ஆய்ந்திருந்து(ம்) ஐயில் அம்பு அன்ன கண்ணார்க்கு அல்லால், இல்லில் ஒளித்திருந்து வெண்ணெய் ஐயில் அம் கை அரங்கர்க்கு அன்பாகி இருக்கிலர்,' என இயைக்க.

'தையிலம், ஐயில்' என்பன 'தயிலம், அயில்' என்பவற்றின் போலி.

264. 'இருக்கும் அந்தத்தில் அறியா அரங்கன்—மண் ஏழ் உண்டும் தயிருக்கும் அந்தத் திருவாய்மலர்ந்தான் எட்டெழுத்தைக் குறியிருக்கும் மந்த புத்தி ஈர்த்து நல் வீடு எய்தலாகும்; கை போய் இருக்கும் அந்தன்—செவிடு—ஊமன்—மூந்நீர் கடந்து ஏறிடில்,' என இயைக்க. 'ஏறிடில் எய்தலாகும்' என முடிக்க.

குறியிருக்கும் - மனத்திற்குறியாத உங்களுக்கும்.

265. 'ஏறும், கரியும், பரியும் செற்றான் பரன்,' என்று மன்றுள் ஏறும் கரி மறை; ஆதலினால், உமக்கு ஐயம் யாது? கரிய அரங்கர்க்கு அன்பாய், ஈடேறும்; வினை என்னும் இடியேறும் கரியும்; இனிமேல் பிறவி இடர் இல்லை,' என இயைக்க.

'உலகீர்' என்பது முன்னிலையெச்சம்.

**266**] [சசு

இடராக வந்தென்னைப் புன்சிறு தெய்வங்க ளென்செயுமான்-
இடராக வன்பிணி மாநாக மென்செயும் யான்வெருவி-
இடராக வன்னி புனலிடி கோண்மற்று மென்செயும்வில்
இடராக வன்னரங் கன்றிருத் தாளென் னிதயத்ததே.

**267**] [சக

அத்திரங் காய மெனவுண ரேனென தாசையுன்கை
அத்திரங் காயத் தியிற்பெரி தானரை யாகிப்பல்வீழ்-
அத்திரங் காயந் திரம்போற் பொறியைந் தழியுமக்கால்-
அத்திரங் காயரங் காவடி யேனுன் னடைக்கலமே.

**268**] [சஎ

கலக்கூழைக் கைக்குங் கருத்துடை யீரரங் கத்துளிலைக்
கலக்கூழைக் கைக்குங் கறியிட்டுந் துய்த்திருங் காதுபடைக்
கலக்கூழைக் கைக்குள் வருவா ணனைக்கண் ணுதலும்விட்ட
கலக்கூழைக்கைக்குப்பைகண்டானைவீதியிற் கண்டுவந்தே.

---

266. 'வில் இட ராகவன்—அரங்கன் திருத்தாள் என் இதயத்தது; புன் சிறு தெய்வங்கள் என்னை இடராக வந்து என் செயும்? மானிடர் ஆக வல் பிணி மா நாகம் என் செயும்? ராக வன்னி, புனல், இடி, கோள் மற்றும் யான் வெருவிட என் செயும்?' என இயைக்க.

மானிடர் ஆக வல் பிணி மா நாகம் - மனிதருடலைப் பற்றும் கொடிய பிணிகளாகிய பெரும்பாம்புகள் (உருவகம்).

267. 'அரங்கா! 'காலம் அத்திரம்,' என உணரேன்; எனது ஆசை உன்கை அத்திரம் காய் அத்தியின் பெரிது; நரை யாகி, பல் வீழ, திரங்கா, யந்திரம் போல் பொறி ஐந்து(ம்) அழியும் அக்காலத்து இரங்காய்; அடியேன் உன் அடைக்கலம்,' என இயைக்க.

அத்திரம்-நிலையில்லாதது, அம்பு. அத்தி-கடல். திரங்கா - (தோல்) சுருங்கி. அக்காலம் - மரண காலம்.

268. 'கலக்கு ஊழைக் கைக்கும் கருத்து உடையீர்! அரங்கத்துள் காது படைக்கலக் கூழைக் கைக்குள் வரு வாணனைக் கண்ணுதலும் விட்டு அகல, கூழைக்கை குப்பை கண்டானை வீதியில் கண்டு உவந்து, இலைக் கலக் கூழைக் கைக்கும் கறி இட்டுத் துய்த்தும் இரும்,' என இயைக்க.

ஊழ்-பழவினை. கைக்கும்-வெறுக்கும். காது-வருத்துகின்ற. கூழைக்கை-படை வகுப்பு அணி, குறைபட்ட கைகள். கண்ணுதல்-சிவன். குப்பை கண்டான்-குவியலாகச் செய்த இறைவன். கைக்கும் கறி—கசக்கும் கறிகள்.

269] [௨௬௯

கண்ட கனவின் பொருள்போல யாவும்பொய் காலனென்னுங்
கண்ட கனாவி கவர்வது வேமெய் கதிநல்கெனக்
கண்ட கனவிப் பொழுதேசெல் கென்றருள் காரரங்கற்
கண்ட கனவின் புறக்கண்டு வாழ்த்திக் கடிதுய்ம்மினே.

270] [௨௭௦

கடிக்கும் பணிநஞ் சமுதாகுந் தீங்குநன் காகும்பராக்-
கடிக்கும் பணியலர் தாழ்வார்கல் லாமையுங் கற்றமையாங்
கடிக்கும் பணியற மெல்லா மரங்கர்பைங் கன்னித்துழாய்க்
கடிக்கும் பணியொளிக் குந்நல்ல பாதங் கருதினர்க்கே.

271] [௨௭௧

தினகர னார்கலி தீகாற் றொடுங்குஞ் செயலும்விண்மீ
தினகர னார்கொண்ட லேழ்செருக் காமையுஞ் சென்றெதிர்மோ
தினகர னாருயிர் செற்றா ரரங்கர் திகிரிசங்கேந்-
தினகர னார்நம் பெருமா ளமைத்த திருக்கைகண்டே.

---

269. "'யாவும் கனவின் கண்ட பொருள் போலப் பொய்; காலன் என்னும் கண்டகன் ஆவி கவர்வதுவே மெய்; கதி நல்கு,' என, 'கண்டகனே! இப்பொழுதே செல்க!' என்று அருள் கார் அரங்கன் கடிது கண் தகக் கண்டு, நா இன்புற வாழ்த்தி, உய்ம்மின்,' என இயைக்க.

கண்டகன் - கொடியவன், கண்டாகர்ணன். கண் தக - கண்கள் தகுதி பெற. உய்ம்மின் - பிழையுங்கள்.

270. 'அரங்கர் பைங்கன்னித் துழாய் கடிக்கும்,[1] பணி ஒளிக்கும் நல்ல பாதம் கருதினர்க்குக் கடிக்கும் பணி நஞ்சு அமுதாகும்; தீங்கும் நன்கு ஆகும்; பராக்கு அடிக்கும் பணி யலர் தாழ்வார்; கல்லாமையும் கற்றமை ஆம்; பணி அறம் எல்லாம் கடிக்கும்,'[2] என இயைக்க.

கடிக்கும் - 1. மணம் வீசும், 2. வாய்க்கும். பணி - ஆபரணம், பாம்பு. ஒளிக்கும் - பிரகாசிக்கும். பராக்கு அடிக்கும் - பராமுகம் செய்யும். பணியலர் - பகைவர்.

271. 'தினகரன், ஆர்கலி, தீ, காற்று ஒடுங்கும் செயலும், விண் மீதில் நகரனார் கொண்டல் ஏழ் செருக்காமையும், சென்று எதிர் மோதின கரன் ஆருயிர் செற்றார்—திகிரி சங்கு ஏந்தின கரனார்—நம்பெருமாள்—அரங்கர் அமைத்த திருக்கை கண்டே,' என இயைக்க.

'இயற்கைப் பொருள்கள் கட்டுக்கடங்கி நடப்பது இறைவன் கட்டளையினாலேயே,' என்பது கருத்து. தினகரன் - சூரியன், ஆர்கலி - கடல். கொண்டல் - மேகம்,

272] [ருக

திருக்கா விரிக்கும் யமுனைக்குங் கங்கைக்குந் தெள்ளமுதாந்
திருக்கா விரிக்குங் கடற்கும் பிரான்றென் னரங்கமென்னத்
திருக்கா விரிக்கு மொழியார்க்குத் தீமெழு காவிரன்புய்த்
திருக்கா விரிக்கும தெவ்வா றவனுங்கள் சென்மத்தையே?

273] [ருஉ

சென்மந் தரங்கங் கருமஞ் சுழிபிணி சேலினங்கு
சென்மந் தரங்கதிர் பொன்கோள்கண் மாரிதிண் கூற்றசனி
சென்மந் தரங்கவற் றுள்விழு வோர்கரை சேர்க்கும்வங்கஞ்
சென்மந் தரங்கவின் றோளா ரரங்கர் திருப்பதமே.

274] [ருங

பதக்கம லங்க லணிமார்ப பொன்னி படிந்திமையோர்
பதக்கம லங்க ளறுசீ ரரங்க பகட்டயிரா-
பதக்கம லங்கரித் தூர்வோன் சிவனயன் பார்க்கவந்துன்
பதக்கம லங்க ளடியேன் றலைக்கென்று பாலிப்பதே!

---

272. ''திருக்கா விரிக்கும் யமுனைக்கும், கங்கைக்கும், தெள்ளமுதாம் திருக்காவிரிக்கும், கடற்கும் பிரான் தென்னரங்கம்,' என்ன, அன்பு உய்த்து இருக்கா, திருக்கு ஆவிர்; இக்கு மொழியார்க்குத் தீ மெழுகு ஆவிர்; அவன் உங்கள் சென்மத்தை இரிக்குமது எவ்வாறு?' என இயைக்க.

திருக்கா - அழகிய சோலைகள். விரிக்கும் - செழிக்கச் செய்யும். பிரான் - தலைவன். இருக்கா - இராமல். திருக்கு - மாறுபாடு. இக்கு - கரும்பு. இரிக்குமது - ஒழிப்பது.

273. 'சென்மம், தரங்கம்; கருமம், சுழி; பிணி, சேல்; குசென், மந்தர், அம் கதிர், பொன், கோள்கள், மாரி, திண் கூற்று, அசனி, இனம்; அவற்றுள் செல் மந்தர், அங்கு விழுவோர்; செல் மந்தரம் கவின் தோளார் அரங்கர் திருப் பதமே, கரை சேர்க்கும் வங்கம்,' என இயைக்க.

சென்மம் - பிறப்பு. தரங்கம் - கடல். சுழி - நீர்ச்சுழி. சேல் - மீன். குசென் - அங்காரகன். மந்தர் - சனி, அறிவற்றவர். அம் கதிர் - சந்திர சூரியர்கள். பொன் - பிருகஸ்பதி. கோள்கள் - கிரகங்கள். அசனி - இடி. இனம் - மீன் வகைகள். செல் - மேகம். மந்தரம் - மந்தரமலை. கவின் - அழகு. வங்கம் - கப்பல்.

274. 'பதக்கம் அலங்கல் அணி மார்ப! இமையோர் பொன்னி படிந்து பதக்க மலங்கள் அறு சீர் அரங்க! பகடு அயிராபதம் கம் அலங்கரித்து ஊர்வோன், சிவன், அயன் பார்க்க வந்து உன் பதக் கமலங்கள் அடியேன் தலைக்குப் 'பாலிப்பது என்று!' என இயைக்க.

275] [௫௪

பாலனஞ் செய்யமர் நாடாண்டு பூணொடு பட்டணிந்து
பாலனஞ் செய்ய கலத்துண்டு மாதர்பல் போகத்தையும்
பாலனஞ் செய்ய விருப்பதி லையம் பருகிநந்தன்
பாலனஞ் செய்யவள் கோமா னரங்கம் பயில்கைநன்றே.

276] [௫௫

பையிலத்தி மூளை நரம்பூ னுதிரம் பரந்தகுரம்-
பையிலத்தி யுள்விளை பாண்டமென் னுமற்புன் பாவையர்தோற்
பையிலத்தி செய்து நரகெய்து வீருய்யப் பற்றுமினோ
பையிலத்தி மேவித் துயில்கூ ரரங்கர்பொற் பாதத்தையே.

277] [௫௬

பாதகங் கைக்கு மரங்கர்பல் பேய்பண் டிராவணனுற்-
பாதகங் கைக்குமென் றெள்ளக்கொய் தார்படிக் கேற்றதிருப்

---

பதக்கம் - மார்பணி. அலங்கல் - மலர் மாலை. பொன்னி - காவிரி நதி. பதக்க மலங்கள் - தீவினைகளாகிய அசுத்தங்கள். பகடு - பெருமை. அயிராபதம் - ஐராவதமென்னும் யானை. கம் - மஸ்தகம். ஊர்ந்தோன் - ஏறிச் செலுத்தும் இந்திரன். பாலிப்பது - வைத்தருள்வது.

275. 'பால் அ(ன்)னம் செய் அமர் நாடு ஆண்டு, பூணொடு பட்டு அணிந்து, செய்ய கலத்துப் பால் அ(ன்)னம் உண்டு, மாதர் பல் போகத்தையும் பாலனம் செய்ய இருப்பதில், ஐயம் பருகி, நந்தன் பாலன்—அம் செய்யவள் கோமான்—அரங்கம் பயில்கை நன்று,' என இயைக்க.

பால் அன்னம் - வெண்ணிற அன்னப் பறவை, பாற்சோறு. செய் அமர் - கழனியில் வாழும் பூண் - அணி. பாலனம் செய்ய - பரிபாலிக்க. ஐயம் - பிச்சை. நந்தன் பாலன் - கிருஷ்ணன். செய்யவள் - இலக்குமி. பயில்கை - வாழ்தல்.

276. ''பையில் அத்தி,[1] மூளை, நரம்பு, ஊன், உதிரம் பரந்த குரம்பை; இலத்தி உள் விளை பாண்டம்,' என்னுமல், புன் பாவையர் தோல் பையில் அத்தி[2] செய்து நரகு எய்துவீர்! உய்ய, அத்திப்[3] பையில் மேவித் துயில்கூர் அரங்கர் பொன் பாதத்தைப் பற்றுமினோ,' என இயைக்க.

அத்தி - 1. எலும்பு, 2. ஆசை, 3. கடல். பையில் - (பயில்) பொருந்தியுள்ள. குரம்பை - குடிசை. இலத்தி - மலம். தோல் பை - உடல். பையில் - (ஆதிசேஷன் என்னும்) பாம்பின் படத்தின் கீழ்.

277. 'பாதகம் கைக்கும் அரங்கர்—பண்டு பல் பேய், 'இராவணன் உற்பாத கம் கைக்கும்,' என்று எள்ளக் கொய்

பாதகங் கைக்குள் விழுமுன்ன மேபங் கயன்விளக்கும்
பாதகங் கைக்குளிர் நீர்வீழ்ந்த தீசன் படர்சடைக்கே.

278] [நிஎ

படநாகத் தந்தர மீதிருப் பானெம் பரனரங்கன்
படநாகத் தந்தம் பறித்தோன் புகழைப் பரவுமின்க-
படநாகத் தந்தக் கரணம்பொல் லான்சிசு பாலன்முற்பல்
படநாகத் தந்த வசைக்குந்தந் தான்றொல் பரகதியே.

279] [நிஅ

பரவையி லன்னகட் பாஞ்சாலி நின்பர மென்னநிரு
பரவையில் மேகலை யீந்தா னரங்கன் பணிந்திமையோர்
பரவையி லாழிப் பிரானடிக் கீழ்ற் பவித்தழியும்
பரவையில் மொக்குளைப் போற்பலகோடி பகிரண்டமே.

---

தார்—படிக்கு ஏற்ற திருப்பாத கம் கைக்குள் விழும் முன்னமே பங்கயன் விளக்கும் பாத கங்கைக் குளிர்நீர் ஈசன் படர்சடைக்கே வீழ்ந்தது,' என இயைக்க.

பாதகம் - பாவம். கைக்கும் - கசந்து நீக்கும். பண்டு - முன்பு. உற்பாத கம் - நிமித்தமான தீலகள். எள்ள - இகழும் படி. படிக்கு - பூமியை யாசிப்பதற்கு. திருப்பாத கம் - திருப்ப இயலாத நீர். பங்கயன் - பிரமன்.

278. 'அந்தரம் மீது படநாகத்து இருப்பான்—எம்பரன்—நாக தந்தம் படப் பறித்தோன்—அரங்கன் புகழைப் பரவுமின்; கபடன்—ஆகத்து அந்தக் கரணம் பொல்லான்—சிசுபாலன், முன் பல் பட நா கத்து அந்த வசைக்கும் தொல் பரகதி தந் தான்,' என இயைக்க.

அந்தரம் - பரமபதம். நாகதந்தம் - (குவலயாபீடம் என் னும்) யானையின் தந்தம். பரவுமின் - துதியுங்கள். கபடன் - வஞ்சகன். ஆகம் - உடல். அந்தக்கரணம் - மனம். பல் பட - பலவாறு. நா - நாவினால்.

279. 'பர்வு ஐயில்[1] அன்ன கண் பாஞ்சாலி, 'நின் பரம்,' என்ன, நிருபர் அவையில் மேகலை ஈந்தான்—இமையோர் பணிந்து பரவு ஐயில்[2] ஆழிப் பிரான்—அரங்கன் அடிக்கீழ்ப் பரவையில் மொக்குளைப்போல் பல கோடி பகிரண்டம் உற்பவித்து அழியும்,' என இயைக்க.

பரவு - விசாலமான. ஐயில் - (அயில்) 1. வேல், 2. கூர்மை. பாஞ்சாலி - திரௌபதி. பரம் - பாரம். நிருபர் அவை - அரசவை. மேகலை - ஆடை. ஆழி - சக்கராயுதம். பரவை - கடல். மொக்குள் - நீர்க்குமிழி. பகிரண்டம் - வெளியுலகங்கள். உற்பவித்து - உண்டாகி.

280] [௫௯

அண்ட மடங்கலை யுந்தந்து காத்தவை யந்தந்தன்பால்
அண்ட மடங்கலைச் செய்கா ரணமம்பொன் முத்தலைவான்
அண்ட மடங்கலை யீர்த்தோடும் பொன்னி யரங்கன்புட்கார்-
அண்ட மடங்கலை முந்நீர் மகளுகப் பாகவென்றே.

281] [௬௦

ஆக மதிக்கு முகமேன் முகமுடை யானயன்வாழ்
ஆக மதிக்கு நவநீதக் கள்வ வவனிகொள்வார்-
ஆக மதிக்குளஞ் சேரரங் காவுன்னை யன்றித்தெய்வம்
ஆக மதிக்குளெண் ணேனடி யேன்பிற ராரையுமே.

282] [௬௧

ஆரத் தநந்தருந் தாய்தந்தை யாநந்த மாவரிகழ்-
ஆரத் தநந்தனன் றீமைகண் டாலங் கவுத்துவபூண்

---

280. 'அம் பொன், முத்து அலை வான் அண்ட மடங்கலை ஈர்த்து ஓடும் பொன்னி அரங்கன், அண்டம் அடங்கலையும் தந்து காத்து, அந்தம் அவை தன்பால் அண்ட மடங்கலைச் செய் காரணம், காரண்டப் புள் அடங்கு அலை முந்நீர் மகள் உகப்பாக என்றே,' என இயைக்க.

'இறைவன் முத்தொழிலியற்றல் இறைவியின் உள்ளத்தை இன்புறுத்தற்பொருட்டே,' என்பது கருத்து.

மடங்கல் - சிங்கம். அடங்கலையும் - யாவற்றையும். தந்து - சிருஷ்டித்து. அந்தம் - முடிவில். அண்ட - சேர. மடங்கலை - அழிதலை. காரண்டம் - நீர்க்காகம். முந்நீர் மகள் - பாற்கடலில் உதித்த இலக்குமி.

281. 'ஆகம திக்கு முகம் மேல் முகம் உடையான்,[1] அயன் வாழ் ஆக! மதிக்கும் நவநீதக் கள்வ! அவனி கொள் வாராக! மதிக்குளம் சேர் அரங்கா! அடியேன், உன்னை அன்றிப் பிறர் ஆரையும் தெய்வமாக மதிக்குள் எண்ணேன்,' என இயைக்க.

1. ஆகமங்களைச் சொல்லிய நான்கு திக்குகளிலுமுள்ள நான்கு முகங்களுக்குமேல் ஒரு முகத்தையுடைய (ஐம்முகனை) சிவபெருமானும். ஆக - தேகமுடையவனே. மதிக்கும் நவநீதம் - கடையும் வெண்ணெய். வாராக - வராக மூர்த்தியே! மதிக்குளம் - சந்திர புஷ்கரிணி. மதி - மனம்.

282. 'அத்த! அம் கவுத்துவ! பூண் ஆரத்து அநந்த சயன! அணி அரங்கா! திகிரி ஆர் அத்த! நந்தன் மதலாய்! ஆரத் தநந்தரும் தாய் தந்தை நந்தனன் தீமை கண்டால், ஆநந்தம்

ஆரத் தநந்த சயனா வணியரங் காதிகிரி
ஆரத் தநந்தன் மதலாயென் றீங்குனக் கத்தன்மைத்தே.

283] [௯௨

அத்தனு மன்புள வன்னையும் பேரு மனந்தமதாம்
அத்தனு மன்புல னுதலி னுண்டரு ளம்புயைவீர்-
அத்தனு மன்புய மீதே றரங்கனஞ் சார்ங்கவயிர்-
அத்தனு மன்புகல் பேரிரு வீர்க்கு மடியனென்றே.

284] [௯௩

அடியவ ராகவு மாட்கொள் ளவுமெண்ணி யாருயிர்கட்(கு)
அடியவ ராகம் படைத்தமை யாலக மேபெரிய
அடியவ ராக வரங்கருக் காட்செ யருட்கதையால்
அடியவ ராகஞ்செய் மாரனுக் காட்செயு மைவரையே.

---

ஆவர்; இகழார்; என் தீங்கு உனக்கு அத்தன்மைத்தே,' என இயைக்க.

அத்த - தந்தையே. கவுத்துவ - கவுஸ்துபமணியைத் தரித்தவனே. அநந்த சயனா - ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்டவனே. அத்த - கையையுடையவனே. மதலாய் - மைந்தனே. ஆர - பருக. தநம் - முலை. நந்தனன் - புதல்வன்.

283. 'அத்தனும், அன்பு உ(ள்)ள அன்னையும், பேரும் அனந்தமது ஆம் அத்தனு மன் பு(ல்)லன்; ஆதலின், 'அம்புயை, வீரத்து அனுமன் புயமீது ஏறு அரங்கன் அம் சார்ங்கம் வயிரத் தனு மன்' புகல் பேர் இருவீர்க்கும் அடியன் என்று ஆண்டு அருள்,' என இயைக்க.

அத்தனு - அவ்வுடம்பில். மன் புல்லன் - பொருந்தி வரும் அற்பன் யான். அம்புயை - இலக்குமி. சார்ங்க வயிரத்தனு மன் - சார்ங்கம் என்னும் உறுதியான வில்லையுடைய தலைவன். புகல் - (என்று) சொல்லும்.

284. 'அடியவராகவும் ஆட்கொள்ளவும் எண்ணி[1] அவர் அடி ஆர் உயிர்கட்கு ஆகம் படைத்தமையால், அகமே! பெரிய அடிய வராக அரங்கருக்கு ஆள் செய்; அருள் கதையால் அவ ராகம் செய் மாறனுக்கு ஆள் செ(ய்)யும் ஐவரை அடி,' என இயைக்க.

1. உயிர்கள் (தமக்குத்) தொண்டர்களாகவும் (தாம்) அவர்களை அடிமை கொள்ளவும் கருதி. அவர் - அவ்விறைவர். அடி ஆர் - ஆதி நாளிற்பொருந்திய. ஆகம் - உடல். அகமே - மனமே. பெரிய அடிய வராகம் - பெரிய கால்களையுடைய வராக மூர்த்தியாகிய. அருள் கதை - (அவரது) கிருபையாகிய கதாயுதம்.

285] செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல் [௨௮

வரையாழி வண்ண ரரங்கேச ரீசன்முன் வாணன்றிண்டோள்
வரையாழி யார்புள்ளின் வாகனத் தேவந்த நாடொடிற்றை
வரையா ழியதுய ராய்த்துசு நாணு மதியுஞ்செங்கை
வரையா ழியும்வளை யும்மிழந் தாளென் மடமகளே.

286] தலைவி தனது வேட்கை மிகுதி கூறல் [௨௫

மகரந்த காதலை வாழ்வென்ன வாரிசுட் டாய்திதிதன்
மகரந்த காதலை வானினுள் ளோர்க்குமண் ணோர்க்குவட்டா
மகரந்த காதலை வார்குழை யாய்வளர் சீரங்கதா
மகரந்த காதலை வாக்கிற்சொல் லேன்மட வாரெதிரே.

---

அவ ராகம் - தீய ஆசைகள். மாரன் - மன்மதன். ஐவர் - ஐம் பொறிகள்.

285. ‘வரை ஆழி வண்ணர்—ஈசன் முன் வாணன் திண் தோள் வரை ஆழியார்—அரங்க ஈசர் புள்ளின் வாகனத்தே வந்த நாள் தொ(ட்)டு இற்றை வரை என் மடமகள் ஆழிய துயராய், துசும் நாணும் மதியும் செங்கை வரை ஆழியும் வளையும் இழந் தாள்,’ என இயைக்க.

வரை - (பார்ப்பவர் மனம்) கவரும். வரை ஆழியார் - அறுத்து நீக்கிய சக்கராயுதமுடையவர். புள் - கருடன். இற்றை வரை - இந்நாளளவும். ஆழிய - ஆழ்ந்த. துசு - ஆடை. நாண் - நாணம். வரை - அணிந்த. ஆழியும் வளையும் - மோதிரமும் வளையல்களும்.

286. ‘மகரம், ‘அலை வாழ்வு தகாது,’ என்ன வாரி சுட் டாய்! திதிதன் மகர் அந்தகா! வானின் உள்ளோர்க்குத் தலை! மண்ணோர்க்கு உவட்டா மகரந்த! காது அலை வார் குழையாய்! வளர் சீர் அரங்க தாம! கரந்த காதலை மடவார் எதிரே வாக்கின் சொல்லேன்,’ என இயைக்க.

மகரம் - சுறா மீன். அலை வாழ்வு - கடல் வாழ்க்கை. வாரி - கடல். திதிதன் மகர் - காசியபமுனிவரின் மனைவியருள் திதி என்பவளுக்கு மைந்தராகிய தைத்தியர் என்னும் அசுரர். அந்தகா - யமனே. தலை - தலைவனே. உவட்டா - தெவிட்டாத. மகரந்த - தேன் போன்றவனே. காது அலை - காதில் ஊசலாடுகின்ற. குழை - குண்டலம். தாம - இடமாக உடையவனே. கரந்த - அந்தரங்கமான. மடவார் - பெண்டிர்.

287] இதுவும் அது. [௬௬

வாராக வாமன னேயரங் காவட்ட நேமிவல
வாராக வாவுன் வடிவுகண் டான்மன் மதனுமட
வாராக வாதரஞ் செய்வனென் றாலுய்யும் வண்ணமெங்கே
வாராக வாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே?

288] நாரசிங்காவதாரம் [௬௭

மாதம்பத் துக்கொங் கையும்மல்குற் றேரும் வயிறுமில்லை
மாதம்பத் துக்குறி யுங்கண் டிலேம்வந்து தோன்றினைபூ
மாதம்பத் துக்கெதிர் மார்பா வரங்கத்து வாழ்பரந்தா
மாதம்பத் துக்கருத் தில்லார் பிறப்பென்பர் வையகத்தே.

289] [௬௮

வைகுந்தர் தாமரை போற்பாதர் நாகத்து மாதர்புடை
வைகுந்த மேற்கொண் டிருந்தோர் வடிவைந்தின் வாழுமிடம்

---

287. 'வாராக! வாமனனே! அரங்கா! வட்டநேமி வலவா! ராகவா! உன் வடிவு கண்டால், மன்மதனும் மடவார் ஆக ஆதரம் செய்வன் என்றால், வார் ஆக வாச முலையேனைப் போல் உள்ள மாதருக்கு உய்யும் வண்ணம் எங்கே?' என இயைக்க.

வாராக - வராக அவதாரியே. நேமி - சக்கரம். வலவா - வல்லவனே. ஆதரம் செய்வன் - ஆசைப்படுவேன். வார் - கச்சு. உய்யும் - பிழைக்கும்.

288. 'பூமாது அம்பத்துக்கு எதிர் மார்பா! அரங்கத்து வாழ் பரந்தாமா! மா தம்பத்துக் கொங்கையும் அல்குல் தேரும் வயிறும் இல்லை; பத்து மாதக் குறியும் கண்டிலேம்; வந்து தோன்றினை; தம் கருத்துப் பத்து இல்லார், வையத்துப் பிறப்பு என்பர்,' என இயைக்க.

பூமாது - திருமகள். அம்பம் - அம்பகம் - கண். மா தம்பத்து - மஹா ஸ்தம்பத்து - பெரிய தூணில். அல்குல் தேர்-தேர்த் தட்டுப் போலும் பிட்டம். பத்து - பற்று - விருப்பம். வையம் - உலகம்.

289. 'வை குந்தர்—தாமரை போல் பாதர்—மாதர் புடைவை நாகத்துக் குந்தம் மேல் கொண்டு இருந்தோர்—வடிவு ஐந்தின் வாழும் இடம்: வைகுந்தம், பாற்கடல், மாநீர் அயோத்தி, வண்பூந்துவரை, வைகும் தம் அன்பர் மனம், சீர் அரங்கம், வடமலை,' என இயைக்க.

வைகுந்தம் பாற்கடன் மாநீ ரயோத்திவண் பூந்துவரை
வைகுந்த மன்பர் மனஞ்சீ ரரங்கம் வடமலையே.

290] [சுகூ

வடமலை தென்மலை கச்சி குறுங்குடி மானிற்பது
வடமலை வேலை யரங்கங் குடந்தை வளருமிடம்
வடமலை கொங்கைத் திருவோ டிருப்புவை குந்தங்கர
வடமலை யன்ப ருளநடை யாட்ட மறையந்தமே.

291] [௱௦

அந்தக ராசலம் வந்தா லுனையழை யாதிருப்பார்
அந்தக ராசலங் காபுரி யார்க்கரங் காமறையின்
அந்தக ராசலக் கூக்குர லோயுமுன் னாழ்தடங்கல்-
அந்தக ராசலத் தேதுஞ்ச நேமி யறுக்கக்கண்டே.

---

வைகுந்தர் - கூரிய குந்தம் என்னும் ஈட்டியையுடையவர். நாகம் - புன்னை மரம். குந்தம் - குருந்தமரம். வடிவு ஐந்து - (பரத்துவம், வியூகம், விபவம், அந்தரியாமித்துவம், அர்ச்சை என்னும்) ஐவகை நிலைகள். பரத்துவம் பரமபதத்திலும், வியூகம் திருப்பாற்கடலிலும், விபவம் அவதாரங்களிலும், அந்தரியாமித்துவம் சராசரங்களிலும், அர்ச்சை விக்கிரகத்திலும் இறைவர் தங்கியுள்ளமையைக் குறிக்கும்.

290. 'மால் நிற்பது, வடமலை, தென்மலை, கச்சி, குறுங்குடி ; வளரும் இடம், வடம், அலை வேலை, அரங்கம், குடந்தை ; வடம் அலை கொங்கைத் திருவோடு இருப்பு, வைகுந்தம் ; நடை, கரவடம் மலை அன்பர் உளம் ; ஆட்டம், மறை அந்தம்,' என இயைக்க.

மால் - திருமால். வடமலை - திருவேங்கடம். தென்மலை - திருமாலிருஞ்சோலை மலை. கச்சி - காஞ்சிபுரம். வளரும் இடம் - பள்ளி கொள்ளுமிடம். வடம் - ஆலிலை. வேலை - சமுத்திரம். குடந்தை - கும்பகோணம். வடம் - முத்தாரம். இருப்பு - இருக்குமிடம். கரவடம் மலை - கபடத்தை ஒழித்த. மறை அந்தம் - வேதாந்தமாகிய உபநிஷத்து.

291. 'ராச லங்கா புரியார்க்கு அந்தக ! அரங்கா ! மறையின் அந்த ! கராசலக் கூக்குரல் ஓயுமுன் ஆழ்தடம் கலந்த கராசலத்தே துஞ்ச நேமி அறுக்கக் கண்டு, அந்தகர் சலம் வந்தால், உனை அழையாதிருப்பார் ; ஆ !' என இயைக்க.

ராசலங்காபுரியார் - தலைசிறந்த இலங்கையில் வாழ்ந்த அரக்கர். அந்தக - யமனே. அந்த - முடிவிலுள்ளவனே. கராசலம்-

292] [எக

அறுகு தலைப்பெய் பனிபோன்ற தாதுரு வாய்ப்பிறந்தல-
அறுகு தலைப்பிள்ளை யாய்க்காளை யாய்க்கிழ மாகியையள-
அறுகு தலைச்செய்து வீழ்காய நானென்னு மாரிருளை
அறுகு தலைக்கொள் பணியரங் காநின்க ணாசைவைத்தே.

293] [எஉ

ஆசு கவிக்கு நிகரெனக் கில்லையென் றற்பரைப்பூ
ஆசு கவிக்குவில் வேள்வடி வாவறி வாலகத்திய-
ஆசு கவிக்கு வலயமன் னாவென் றரற்றியிரந்(து)
ஆசு கவிக்கும் புலவீர் புகழ்மி னரங்கனையே.

294] [எங

கனகவி மானமற் றீனர்க் குரைக்கிலென் கால்பெற்றவா-
கனகவி மானற் கருடப்புள் ளூர்தியைக் கான்மலர்கோ-

---

(கசேந்திரன் என்னும்) யானை. ஆழ்தடம் - ஆழ்ந்த நீர் மடுவில். கரா - முதலை. சலத்தே துஞ்ச - நீரில் இறக்கும்படி. நேமி - சக்கராயுதம். அந்தகர் - (அஞ்ஞானிகளாகிய) குருடர்கள். சலம் - துன்பம். ஆ - ஐயோ (இது என்ன அறியாமை!)

292. 'கு தலை கொள் பணி அரங்கா! அறுகு தலைப்பெய் பனி போன்ற தாது உருவாய்ப் பிறந்து; அலறு குதலைப் பிள்ளையாய், காளையாய், கிழமாகி, ஐ அளறு உகுதலைச் செய்து வீழ் காயம் நான் என்னும் ஆரிருளை நின்கண் ஆசை தந்து அறு,' என இயைக்க.

கு - பூமி. பணி - (ஆதிசேஷன் என்னும்) பாம்பு. அறுகு தலை - அறுகம் புல்லின் நுனியில். தாது - இந்திரியம். உருவாய் - மனித வடிவமாய், ஐ அளறு - கோழையாகிய சேறு. உகுதலைச் செய்து - துப்பி. காயம் - உடல். ஆரிருள் - (அஞ்ஞானமாகிய) மிகுந்த இருளை. அறு - நீக்கு.

293. 'ஆசு கவிக்கு எனக்கு நிகர் இல்லை!' என்று, அற்பரைப் 'பூ ஆசுக இக்கு வில் வேள் வடிவா! அறிவால் அகத்தியா! சுக! இக்குவலய மன்னா!' என்று அரற்றி, இரந்து, ஆசு கவிக்கும் புலவீர்! அரங்கனையே புகழ்மின்,' என இயைக்க.

ஆசுகவி - விரைந்து பாடும் பாட்டு. பூ ஆசுகம் - மலர் அம்பு. இக்கு வில் - கரும்பு வில். வேள் - மன்மதன். சுக - சுகப்பிரம முனிவரே. குவலயம் - பூமி. ஆசு கவிக்கும் - குற்றத்தால் மூடப்படும்.

294. 'கால் பெற்ற வாகன கவி, மால் நல் கருடப்புள் ஊர்தியை - கோகனக வி மான், அம்புவி மான் கால் மலர் தடவரக் கண்வளரும் கனக விமானத்து அரங்கனை - நா சொல்

கனகவி மானம் புவிமான் றடவரக் கண்வளருங்
கனகவி மானத் தரங்கனை நாச்சொல்லக் கற்றபின்னே.

295] [௭௪

கற்றின மாயவை காளையர் வான்கண்டு மீணினைவ-
கற்றின மாயமு நீகன்று காளைய ராகிப்பல்ப-
கற்றின மாயர் பரிவுறச் சேரி கலந்தமையுங்
கற்றின மாயவொண் ணுவரங் கா!செங் கமலற்குமே.

296] [௭௫

கமலங் குவளை மடவார் தனங்கண்க ளென்றுரைத்த
கமலங் குவளை முதுகாகி யுங்கரை வீர்புனற்கா-
கமலங் குவளை விளையா டரங்கன்விண் காற்றுகனல்
கமலங் குவளையுண் டான்றொண்ட ராயும்மின் காமமற்றே.

---

லக் கற்ற பின் கன கவி மானம் அற்று ஈனர்க்கு உரைக்கிலென்,' என இயைக்க.

கால் - காற்றுக்கடவுள். கவி - குரங்காகிய அனுமான். மால் - பெரிய. நல் - அழகிய. கருடப்புள் - கருடனாகிய பறவை. ஊர்தியை - ஏறிச்செலுத்துபவனை. கோகனக வி மான் - தாமரை மலரில் உள்ள இலக்குமி. (வி - 'வீ' என்பதன் குறுக்கம்). புவி மான் - நிலமகள். தடவர - தடவ. கனகம் - பொன். கன கவி- பெருமை வாய்ந்த பாடல். உரைக்கிலென் - (யான்) பாடேன்.

295. 'அரங்கா! கற்று இனம் ஆயவை, காளையர், வான் கண்டு மீள் நினைவு அகற்றின மாயமும்; நீ கன்று காளையர் ஆகிப் பல் பகல் தினம் ஆயர் பரிவு உறச் சேரி கலந்தமையும்; செங்க மலற்கும் இ(ன்)னம் கற்று ஆய ஒண்ணு!' என இயைக்க.

கற்று இனம் - கன்றுகளின் கூட்டம். காளையர் - யாதவச் சிறுவர். மாயம் - அற்புதம். ஆயர் - இடையர். பரிவு - அன்பு. சேரி - இடைச்சேரி. செங்கமலன் - பிரமன். ஆய - ஆராய்ந்து அறிய. ஒண்ணு - இயலாதவை.

296. 'மடவார் தனம் கண்கள் கமலம்[1] குவளை என்று உரைத்து, மலங்கு[2] வளை முதுகு ஆகியும் அகம் கரைவீர்! காமம் அற்று, விண், காற்று, கனல், கமலம்,[3] கு அளை உண்டான்—புனல் காகம் மலங்கு[4] வளை விளையாடு அரங்கன் தொண்டராய் உய்ம்மின்,' என இயைக்க.

தனம் - கொங்கை. மலங்கு - 2. வருந்தும், 4. மலங்கு மீன். கமலம் - 1. தாமரை மலர், 3. நீர். கு - பூமி. அளை - வெண்ணெய், வளை - சங்கு. உய்ம்மின் - பிழையுங்கள். 'பெண்ணாசை நீங்கி, அரங்கனுக்கு ஆட்பட்டு ஈடேறுங்கள்,' என்பது கருத்து.

297] [எசு

காமனத் தால்விழ வூதியக் காவைக் கவரரங்கன்
'காமனத் தா!'என்று நைவார்க் கமுதன்கன் னெஞ்சர்க்கிரங்-
காமனத் தானளக் குங்கடற் பார்கலம் போன்றதுமீ-
காமனத் தாமரை யோன்கங்கை பாய்மரங் கான்மலரே.

298] [எஎ

மலருந்தி மேல்விழ மெய்நெரித் தான்வைய மேழுந்துஞ்சா-
மலருந்தி னரங் கன்குற ளாய்மண் ணளந்தவந்நாண்
மலருந்தி வாக்கதிர் வண்குடை யாய்முடி மாமணியாய்
மலருந்தி யாய்த்திருத் தாள்விர லாழி மணியொத்ததே.

299] [எஅ

மணிவாசற் றாங்க வொருகுடைக் கீழ்வையங் காத்துச்சிந்தா-
மணிவா சவனென வாழ்ந்திருப் போர், 'பின்னை மாதிருக்கு

---

297. 'கா மன் நத்தால் விழ ஊதி அக்காவைக் கவர் அரங்கன்—'காமன் அத்தா!' என்று நைவார்க்கு அமுதன்—கல் நெஞ்சர்க்கு இரங்கா மனத்தான், அளக்கும் கடல் பார், கலம் போன்றது; அத்தாமரையோன், மீகாமன்; கால் மலர், மரம்; கங்கை, பாய்,' என இயைக்க.

கா மன் - கற்பகச்சோலையின் தலைவன் (இந்திரன்). நத்தால் - பாஞ்சசன்னியம் என்னும் சங்கின் ஒலியால். அக்காவை - அச் சோலையிலிருந்த பாரிசாதம் என்னும் மரத்தை. காமன் அத்தா - (பிரத்தியும்னனாகப் பிறந்த) மன்மதன் தந்தையே. கடல் பார் - கடலாற் சூழப்பட்ட பூமி. கலம் - கப்பல். அத்தாமரையோன் - அந்தப் பிரமன். மீகாமன் - மாலுமி. கால் மலர் - திருவடித் தாமரை. மரம் - பாய்மரம். பாய் - (கப்பலைக் காற்றுள்ள திசையிற் செலுத்தும்) பாய். இது திரிவிக்கிரம அவதாரப் பெருமை.

298. 'ம(ல்)லர் உந்தி மேல் விழ, மெய் நெரித்தான்—வையம் ஏழும் துஞ்சாமல் அருந்தினன்—அரங்கன், குறளாய் மண் அளந்த அந்நாள் மலரும் திவாக் கதிர் வண்குடையாய், முடி மாமணியாய், மலர் உந்தியாய், திருத்தாள் விரல் ஆழி மணி ஒத்தது,' என இயைக்க.

இச்செய்யுளும் திரிவிக்கிரம அவதாரப் பெருமை கருதியது. மல்லர் - (கம்ஸனால் ஏவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் என்னும்) மல்லர்கள். உந்தி - மோதி. மெய் - உடல். வையம் - உலகம். துஞ்சாமல் - அழியாமல். குறள் - வாமனன். திவாக்கதிர் - சூரியன். வண்குடை - சிறந்தகுடை. முடி - கிரீடம். மலர் உந்தி - (உந்தி மலர்) நாபித்தாமரை. ஆழி - மோதிரம்.

299. 'மணி வாசல் தாங்க ஒரு குடைக்கீழ் வையம் காத்துச் சிந்தாமணி வாசவன் என வாழ்ந்திருப்போர், 'பின்னை மாது

மணிவாச மார்பரங் கா! கேச வா!' என்று வாழ்த்தித்திரு-
மணிவாச கங்கொண் டணிவா ரடியை வணங்கினரே.

300] [௯௰

வணங்கரி யானரங் கன்னடி யார்தொழ வாளரவு-
வணங்கரி யாடற் பரிதேர் நடத்தெந்தை வானவர்க்கும்
வணங்கரி யானன்றிக் காப்பாரில் லாமைவிண் மண்ணறியும்
வணங்கரி யானவர் வாணன்கண் டாகனன் மார்க்கண்டனே.

301] [௮௦

கண்டலங் காரள கங்கெண்டை மேகங் கவிரிதழ்சொல்
கண்டலங் கார முலையிள நீரென்று கன்னியர்சீர்
கண்டலங் கார மருளேன் புனற்கயல் கொக்கென்றஞ்சக்
கண்டலங் கார மலரரங் கேசர்க்குக் காதலனே.

---

இருக்கும் மணி வாச மார்பு அரங்கா! கேசவா!' என்று வாழ்த்தி, இ(வ்)வாசகம் கொண்டு திருமண் அணிவார் அடியை வணங்கினரே,' என இயைக்க.

'பாகவதரை வணங்கியவர் அரசராய் உலகாள்வர்,' என்பது கருத்து. மணி - ஆராய்ச்சி மணி. தூங்க - தொங்க. சிந்தாமணி வாசவன் - சிந்தாமணிக்குரியவனான தேவேந்திரன். பின்னை மாது - திருமகள். மணி - அழகிய. கேசவா - கேசி என்னும் அசுரனைக் கொன்றவனே. இவ்வாசகம் - இத்திருநாமங்கள்.

300. 'வ(ண்)ணம்[1] கரியான்—அடியார் தொழ, வாள் அரவு உவணம் கரி ஆடல் பரி தேர் நடத்து எந்தை—வானவர்க்கும் வணங்க அரியான்—அரங்கன் அன்றிக் காப்பார் இல்லாமை விண் மண் அறியும் வ(ண்)ணம்[2] கரியானவர், வாணன், கண்டாகனன், மார்க்கண்டனே,' என இயைக்க.

வண்ணம் - 1. நிறம், 2. விதம். வாள் அரவு - ஒளியுடைய ஆதிசேஷன். உவணம் - கருடன். கரி - யானை. ஆடல் பரி - ஆட்டக் குதிரை. கரியானவர் - சாட்சியாயிருப்பவர்.

வாணாசுரன், கண்டாகர்ணன், மார்க்கண்டன் என்பவர் சிவனடியாராயிருந்து பின்னர்க் கண்ணபிரானார் திருவருளால் முத்தியடைந்தவர்.

301. "புனற்கயல் கொக்கு என்று அஞ்ச அங்குக் கண்டல் ஆர மலர் அரங்க நசர்க்குக் காதலன் (யான்); 'கன்னியர் கண் தலம் கார் அளகம், கெண்டை மேகம்; இதழ், கவிர்; சொல், கண்டு; அலங்கு ஆர முலை, இளநீர்,' என்று அலங்காரச் சீர்கண்டு மருளேன்,' என இயைக்க.

புனற்கயல் - நீரில் வாழும் கெண்டை மீன்கள். கண்டல் - தாழை. ஆர மலர் - மிகுதியாக மலர்ந்த. காதலன் - அன்பன்,

302] [௮௧

காதலை வாரிமண் வெண்கோட்டில் வைத்துண்டு காட்டியரங்
காதலை வாகழற் குள்ளாக்கி னாய்கரப் பெங்கெனவே
காதலை வார்குழை வைதே கியைநின் கருத்துருக்குங்
காதலை வானரர்த் தேடவிட் டாயிது கைதவமே.

303] [௮௨

தவராக வக்கணை யொன்றாற் கடற்றெய்வந் தானென் றிருந்
தவராகந் தீர்த்துத் தொழக்கண்ட நீதர்ப்பை மேற்கிடந்து
தவராகப் பாவித்தென் னோதொழு தாய்தண் ணரங்கத்துமா
தவராக வாகண் ணனேயெண் ணொணாவவ தாரத்தனே!

---

கண்தலம் - கண்ணிடம். கெண்டை - கயல்மீன்கள். கார் அளகம் - கரிய கூந்தல். இதழ் - உதடு. கவிர் - முருக்கம்பூ. கண்டு - கற்கண்டு. அலங்கு ஆரம் - அசைகின்ற முத்து மாலை. மருளேன் - மயங்கேன்.

302. 'அரங்கா! தலைவா! காது அலை[1] வாரி மண் வெண் கோட்டில் வைத்து, உண்டு, காட்டி, கழற்கு உள்ளாக்கினாய்; நின் கருத்து உருக்கும் காதலை—காது அலை[2] வார் குழை வைதேகியை—கரப்பு எங்கு என வானரர் தேட விட்டாய்; இது கைதவமே,' என இயைக்க.

'ஒப்பில்லாத ஆற்றல் வாய்ந்த நீ சீதையைத் தேட வானரரை ஏவியது மாயமான திருவிளையாட்டே,' என்பது கருத்து.

காது அலை - 1. மோதுகின்ற அலைகள், 2. காதில் அசைகின்ற. வாரி - கடல். மண் - பூமி. வெண்கோட்டில் - (வராகமாய் அதன்) வெண்ணிறமான மருப்பில். காட்டி - (உமிழ்ந்து) வெளிப்படுத்தி. கழற்கு உள்ளாக்கினாய் - (திரிவிக்கிரமனாய்) ஓரடிக்குள் அடங்கச் செய்தாய். காதலை - காதலியை. வார் குழை - பெரிய குண்டலங்கள். வைதேகி - சீதை. கரப்பு - (இராவணன்) ஒளித்து வைத்தது. வானரர் - அநுமன் முதலிய வானர வீரர். கைதவம் - மாயை.

303. 'தண் அரங்கத்து மாதவ! ராகவா! கண்ணனே! எண்ணொணா அவதாரத்தனே! தவர் ஆகவக் கணை ஒன்றால், கடல் தெய்வம் தான் என்று இருந்த அ ராகம் தீர்த்துத் தொழக் கண்ட நீ, தர்ப்பைமேற் கிடந்து, தவராகப் பாவித்து என்னோ தொழுதாய்!' என இயைக்க.

தண் - குளிர்ச்சி. எண்ணொணா - எண்ண இயலாத. தவர் - வில். ஆகவக் கணை - போருக்குரிய பாணம். கடல் தெய்வம் - வருணன். தான் என்று இருந்த - அகங்கரித்திருந்த. அ ராகம் - அந்தச் செருக்கு. கண்ட - செய்த. தவராக - தவசிகளைப்போல. என்னோ - என்ன காரணமோ.

304] [௮௩

தாரா கணமன் னளந்தவ‌ ந‌ாளன்பர் சாத்துந்துழாய்த்
தாரா கணம்புயம் போலரங் காதல மேழுக்குமா
தாரா கணமங்கை யாயும்பர் தூவிய தண்மலர்வீழ்
தாரா கணமுநில் லாகாற்றிற் சூழ்வளந் தானொக்குமே.

305] [௮௪

தானந் தியாகந் தவங்கல்வி தீர்த்தந் தழலிலவி
தானந் தியாகந் தருமிழி பாயின தண்ணரங்கத்
தானந் தியாகப் பகன்மறைத் தான்பெயர் தந்திடும்வே
தானந் தியாகண் டலனறி யாப்பரந் தாமத்தையே.

306] [௮௫

தாமரை மாத்திரை மூப்பற்ற வானவர் தண்ணறுஞ்செந்
தாமரை மாத்திரை வந்தா டலைவரைத் தண்ணரங்க

---

304. ‘அன்பர் சாத்தும் துழாய்த் தாரா! கண் அம்புயம் போல் அரங்கா! தலம் எழுக்கும் ஆதாரா! கணமங்கையாய்! (நீ) மண் அளந்த அந்நாள் தாரா கணம், உம்பர் தூவிய தண் மலர் வீழ்தாரா கணமும் நில்லா, காற்றில் சூழ் வளம் ஒக்கும்,’ என இயைக்க.

துழாய்த்தாரா - துளசி மாலையை உடையவனே. அம்புயம் - தாமரை மலர். தலம் - உலகம். கணமங்கையாய் - திருக்கண்ணமங்கை என்னும் திருப்பதியில் எழுந்தருளியவனே. தாரா கணம் - நட்சத்திரக் கூட்டம். உம்பர் - தேவர். வீழ்தாரா - மண்ணில் விழாதனவாய். நில்லா - (ஓரிடத்தில்) நிலைபெறாதனவாய். வளம் ஒக்கும் - அழகை ஒத்திருக்கும். (இயற்பா - பெரிய திருவந்தாதி, செய். 61. ஒப்பு நோக்குக.)

305. ‘தானம், தியாகம், தவம், கல்வி, தீர்த்தம், தழலில் அவி நந்து யாகம் (இவை) இழிபு ஆயின தரும்; அந்தி ஆகப் பகல் மறைத்தான்—தண் அரங்கத்தான் பெயர், வேதா, நந்தி, ஆகண்டலன் அறியாப் பரந்தாமத்தைத் தந்திடும்.

இரண்டாவதடியிலுள்ள ‘தான்’ என்பது அசைச் சொல். அவி நந்து - அவிர்ப்பாகம் சிறப்படைகின்ற. இழிபு ஆயின - தாழ்வான பதவிகள். அந்தி - மாலைக்காலம் பகல் - சூரியன். வேதா - பிரமன். நந்தி - சிவன். ஆகண்டலன் - இந்திரன். பரந்தாமம் - பரமபதம். இது திருநாம மகிமை உரைத்தது.

306. ‘தாமரை[1] மாத்திரை மூப்பு அற்ற வானவர், தருப் பொருட்டால், திரைத் தண் நறுஞ்செந்தாமரை வந்தாள் மா தலைவரை—தண்ணரங்க தாமரை[2]—மாத்திரைபோல் விளங்க ஏற்ற,

தாமரை மாத்திரை போல்வளைந் தேற்றுத் தருப்பொருட்டால்
தாமரை மாத்திரைக் கேசங்கி னோசையிற் சாய்ந்தனரே.

307] [அசு

சாகைக்குந் தத்துத் துகிறூக்கி மாதர் தமைநகைத்தாய்
சாகைக்குந் தத்துவங் கட்குமெட் டாய்தண் புனலரங்கே
சாகைக்குந் தத்துப் புடையாழி யேந்த றமர்கள்வெய்யோர்
சாகைக்குந் தத்துத் தவிர்கைக்கும் போதுமுன் சங்கற்பமே.

308] [அள

சங்கத் தமரர் குழாத்தொடு மூழ்வினை தான்விலங்கச்
சங்கத் தமரன்ப ராயிருப் பீர்கட லுனவர்தே

---

சங்கின் ஓசையின் தாம் அரை மாத்திரைக்கே சாய்ந்தனர்,' என இயைக்க.

தாமரை - 1. கோடியாற்பெருக்கிய கோடியாகிய 'பதுமம்' என்னும் பெருந்தொகை, 2. இடமாகக் கொண்டவரை. மாத்திரை - அளவு, பெரிய அலை, நொடிநேரம். மூப்பு - முதுமை. தரு - பாரிஜாதத தரு. மா - இலக்குமி. ஏற்று - எதிர்த்து. ஓசையின் - முழக்கத்தால். சாய்ந்தனர் - வீழ்ந்தனர். பொருட்டால் - 'ஆல்' அசை.

307. 'சாகைக் குந்தத்துத் துகில் தூக்கி மாதர்தமை நகைத்தாய்! சாகைக்கும் தத்துவங்கட்கும் எட்டாய்! தண் புனல் அரங்க நசா! கைக் குந்தத்துப் புடை ஆழி ஏந்தல், வெய்யோர் சாகைக்கும் தமர்கள் தத்துத் தவிர்கைக்கும் உன் சங்கற்பம் போதும்!' என இயைக்க.

சாகைக் குந்தத்து - கிளைகளையுடைய குருந்தமரத்தில். துகில் - சேலை. தூக்கி - தொங்கவிட்டு. மாதர் - இடைப்பெண்களை. நகைத்தாய் - பரிகசித்தவனே. சாகைக்கும் - வேதங்களுக்கும். எட்டாய் - எட்டாதவனே. கை - கைகளில். குந்தத்து - குந்தமென்னும் ஆயுதத்துடன். புடை ஆழி - அழிக்கும் சக்கரத்தையும். வெய்யோர் - கொடியவர். தமர்கள் - அடியவர்கள். தத்து - அபாயம். சங்கற்பம் - கருத்து.

308. ''கடல், தானவர் தேசம் கத்த, மரம் பட எய்த சார்ங்கத் தனு அரங்கன்—சங்கத் தமரன்—சரணே சரண்,' என்று தாழ்ந்திரும். ஊழ் வினை தான் விலங்கச் சங்கத்து அமரர் குழாத்தொடும் சங்கத்து அமர் அன்பராய் இருப்பீர்,' என இயைக்க.

தானவர் - அரக்கர். கத்த - கதற. மரம் பட - (ஏழு) மரா மரங்கள் அழிய. சார்ங்கத்தனு - சார்ங்கமென்னும் வில். சங்கத்

சங்கத் தமரம் படவெய்த சார்ங்கத் தனுவரங்கன்
சங்கத் தமரன் சரணே சரணென்று தாழ்ந்திருமே.

309] [அஅ

இருந்தே னுகமுட வன்வரை நோக்கி யிருப்பதுபோல்
இருந்தே னுகந்துனை வைகுந்த நோக்கி யெதிர்பொருங்கேள்-
இருந்தே னுகனும் படவதைத் தாய்வெண்ணெ யாமத்தொளித்து-
இருந்தே னுகாரங் காகாணு நாளினி யென்றருளே.

310] [அக

அரும்பா கவதரிக் கும்பெய ராய்புள் ளரசினுக்கோர்
அரும்பா கவதரந் துப்பனை யாயரங் காவெனவுண்-
அரும்பா கவதர் பததீர்த்தங் கொள்ளா தடிகள்கொப்புள்
அரும்பா கவதர் தொலைப்பார்கல் லார்கங்கை யாடுதற்கே.

---

தமரன் - சங்க முழக்கத்தைச் செய்பவன். சரணே சரண் - திருவடிகளே பாதுகாப்பு. சங்கத்து அமரர் - சபையிலுள்ள தேவர். குழாம் - கூட்டம். சங்கத்து அமர் - கூட்டத்தில் வீற்றிருக்கும்.

309. 'எதிர் பொரும் தேனுகனும் கேளிரும் பட வதைத்தாய்! யாமத்து ஒளித்திருந்தே வெண்ணெய் நுகர் அரங்கா! இருந்தேன் உக முடவன் வரை நோக்கி இருப்பதுபோல் உனை உகந்து வைகுந்தம் நோக்கி இருந்தேன்; காணும் நாள் இனி என்று? அருள்,' என இயைக்க.

பொரும் - போரிடும். தேனுகன் - விருந்தாவனவாசிகளைக் கழுதையுருக்கொண்டு கொன்று வந்த ஓரசுரன். கேளிரும் - (தேனுகன்) சுற்றத்தாரும். பட - அழிய. யாமத்து - இரவில். நுகர் - உண்ட. இருந்தேன் - பெரிய தேனடை. உக - (உடைந்து தேன் தன் நாவில்) சிந்த. வரை - மலை. உகந்து - விரும்பி. அருள் - சொல்லியருள்வாயாக.

310. 'கல்லார், 'அரும்பாகு அவதரிக்கும் பெயராய்! புள் அரசினுக்கு ஓர் அரும்பாக! அதரம் துப்பு அனையாய்! அரங்கா!' என உணரும் பாகவதர் பத தீர்த்தம் கொள்ளாது, கங்கை ஆடுதற்கு அடிகள் கொப்புள் அரும்பு ஆக அதர் தொலைப்பர்,' என இயைக்க.

அரும்பாகு - அரிய கருப்பஞ்சாற்றுப் பாகு போலும் இனிமை. அவதரிக்கும் - (துதிப்பவர் நாவில்) சுரக்கும். புள் அரசு - கருடன். அதரம் - உதடுகள். துப்பு - பவழம். கொப்புள் - கொப்புளங்கள். அதர் - வழி.

311] [௯௦

ஆடுமுன் னீர்முதற் றீர்த்தத்தி னலரு மாதவத்தால்
ஆடுமுன் னீர்மறை வேள்வியி னலண்ட ராயுடன்மாறு-
ஆடுமுன் னீரது மாயையி னலென் றரங்கனைக்கொண்டு-
ஆடுமுன் னீர்செய்த பாவமும் போய்முத்த ராம்வண்ணமே.

312] [௯௧

வண்ணங் கலிவஞ்சி வெண்பா வகவல் வகைதொடுத்தோர்
வண்ணங் கலிகெட வேண்டுமென் றேமக்கண் மாட்டுரையேன்
வண்ணங் கலிகடல் போல்வா னரங்கன் வகுளச்செல்வன்
வண்ணங் கலியன் புகழ்தா ளெனக்கென்று மாநிதியே.

313] [௯௨

மாலு கவரு நிருதன்புன் மாயையின் மங்கையென்னு
மாலு கவரு மணியைமுன் னீங்கினன் மாயனென்பார்
மாலு கவரும் பலர்சோலை சூழு மதிலரங்கா
மாலு கவரு மமுதே யதுவுநின் மாயமன்றே?

---

311. 'ஆடும் முந்நீர் முதல் தீர்த்தத்தினால், அருமா தவத்தால், ஆடு முன் ஈர் மறை வேள்வியினால் அண்டராய் உடல் மாறுடும்; அது மாயையினால் என்று முன்னீர்; முன் நீர் செய்த பாவமும் போய் முத்தர் ஆம் வண்ணம் அரங்கனைக் கொண்டாடும்,' என இயைக்க.

முந்நீர் - கடல். ஈர் - அறுக்கின்ற. வேள்வி - யாகம். அண்டர் - தேவர். மாறுடும் - மாறும். முன்னீர் - நினையுங்கள். முத்தர் - முத்தி பெற்றவர். 'பிறவி நீங்க அரங்கனைத் துதியுங்கள்,' என்பது கருத்து.

312. 'ஓர் வண்ணம்[1] கலி கெட வேண்டும் என்றே மக்கள் மாட்டு வண்ணம்,[2] கலி, வஞ்சி, வெண்பா, அகவல் வகை தொடுத்து உரையேன்: வண்ணம்[3] கலி கடல் போல்வான்—அரங்கன்—வகுளச் செல்வன் வள் நம் கலியன் புகழ்தாள் எனக்கு என்றும் மாநிதி,' என இயைக்க.

வண்ணம் - 1. விதம், 2. சந்தப்பாட்டு, 3. நிறம். கலி - வறுமை, கலிப்பா. வஞ்சி - வஞ்சிப்பா. அகவல் - ஆசிரியப்பா. வகை - பாக்களின் இனங்களாகிய தாழிசை துறை விருத்தம் என்பன. தொடுத்து - புனைந்து. கலி - ஒலிக்கின்ற. வகுளச் செல்வன் - மகிழமலர் மாலையைச் சூடிய ஞானச் செல்வராகிய நம்மாழ்வார். கலியன் - திருமங்கையாழ்வார். புகழ்தாள் - புகழும் திருவடிகளே. மாநிதி - பெருஞ்செல்வம்.

313. 'மால்[1] நாக அரும்பு அலர் சோலை சூழும் மதில் அரங்கா! மால்[2] நா கவரும் அமுதே! 'மாயன், மானுக வரும்

314] [கக

மாயா தவர்தலை வாவரங் காவட மாமதுரை
மாயா தவரண்டர் வந்தடைந் தான்மழு வாளிபிர
மாயா தவர்செய்வர் முந்நூல்செந் நூல்கொண்ட வண்ணமொப்ப
மாயா தவரத் தனைக்குடல் கோத்தநுன் வாணகமே.

315] [கச

நகமுண் டகந்தரித் தாற்கருண் மாயற்கு ஞாலமுந்நீர்
நகமுண் டகமகிழ்ந் தாற்கடி யேமென்மி னற்கதிவா
நகமுண் டகம்பர னென்னு தரங்கனை நாடிலயன்
நகமுண் டகமலர் தான்குவி யாது நடுக்குளத்தே.

---

நிருதன் புன்மாயையின் மங்கை என்னும் மால்[3] நாக அரு மணியை முன் நீங்கினன்,' என்பார்; அதுவும் நின் மாயம் அன்றோ?' என இயைக்க.

மால் - 1. பெரிய, 2. விருப்பம், 3. மயக்கம். நாகம் - புன்னை மரம், பாம்பு. அலர் - மலரும். நா கவரும் - (அடியவர் தம்) நாவினால் கூறி அனுபவிக்கும். மாயன் - இராமபிரான். மானாக வரும் நிருதன் - மாரீசன். புன்மாயையின் - அற்ப மாயையினால். நாக அருமணி - பெறுதற்கு அரிய நாகரத்தினம் போலும் சீதை. அன்றே - அல்லவா?

314. 'மா யாதவர் தலைவா! அரங்கா! வடமாமதுரை மாயா! தவர் அண்டர் வந்து அடைந்தால், மழுவாளி, பிரமா, அவர் யாது செய்வர்? உன் வாள் நகமே முந்நூல் செந்நூல் கொண்ட வண்ணம் ஒப்ப மாயாத வரத்தனைக் குடல் கோத்தது.' என இயைக்க.

மா யாதவர் - பெருமை பொருந்திய இடையர். தவர் - முனிவரும். அண்டர் - தேவரும். அடைந்தால் - சரணடைந்தால். மழுவாளி - சிவன். வாள் - கூர்மையான. முந்நூல் - முப்புரி நூலாகிய பூணூல். செந்நூல் - சிவந்த நூல். மாயாத வரத்தனை - அழியாத வரம் பெற்றவனாகிய இரணியனை, குடல் கோத்தது - குடலைப் பிய்த்து மாலையாகத் தரித்தது.

315. ''நக முண்டகம் தரித்தாற்கு அருள் மாயற்கு— ஞாலம் முந்நீர் நகம் உண்டு அகம் மகிழ்ந்தாற்கு—அடியேம்,' என்மின்; நல் கதி வானகம் உண்டு; 'அகம் பரம்,' என்னுது அரங்கனை நாடில், அயன் நக முண்டக மலர் உம் நடுக் குளத்தே குவியாது,' என இயைக்க. தான், அசை.

'அகங்காரமற்று ஆண்டவனைத் தொழின் மீண்டும் பிறப் புண்டாகாது,' என்பது கருத்து. நக - (அனைவரும் இகழ்ந்து) சிரிக்கும்படி. முண்ட கம் - முண்டமாகிய தலை (பிரமகபாலம்).

316] [௰௫

குளப்படி நெய்யடி சிற்கொத்த தோகொள்ளப் பற்றியதோ
குளப்படி யிற்றிங்கள் சேரரங் காகோல மாயவன்றன்
குளப்படி காட்டும் பிறைமறுப் போலொரு கோட்டிருந்து
குளப்படி யின்னகத் துட்பரல் போன்ற குவலயமே?

317] [௰௬

குவலையஞ் சூழ்கடல் காயா மரகதங் கொண்டனெய்தல்
குவலையங் கண்டன்பர் நைவரென் றூற்கொற்ற வாணற்குவா
குவலைய நேமிதொட் டாயரங் காகொடும் பல்பிறப்பா-
குவலையங் கற்றுனைக் காணிலென் னுங்கொல் குறிப்பவர்க்கே!

---

தரித்தாற்கு - கையிற்பிடித்த சிவனுக்கு. ஞாலம் - பூமி. முந்நீர் - கடல். நகம் - மலை. நல் கதி - சிறந்த பதவி. வானகம் - பரம பதம். அகம் பரம் - யானே தலைவன். அயன் - பிரமன். நக முண்டக மலர் - நகத்தோடுகூடிய தாமரை மலர் போன்ற கை. குளம் - நெற்றி (இங்குத் தலையைக் குறித்தது).

316. 'குளப் படியில் திங்கள் சேர் அரங்கா! (நீ) கோலம் ஆய அன்று உன் குளப்படி காட்டும் பிறை மறுப்போல் ஒரு கோட்டு இருந்து, குளப்பு அடியின் அகத்துள் பரல் போன்ற குவலயம், குளம் படி நெய் அடிசிற்கு ஒத்ததோ? கொள்ளப் பற்றியதோ?' என இயைக்க.

குளப்படி - திருக்குளத்தின்படியிலே, திங்கள் - (தவம் செய்யும்) சந்திரன். கோலம் - பன்றி (வராகாவதாரம்). குளப்படி - நெற்றியின் வடிவம். கோட்டு - மருப்பில். குளப்பு அடியின் - குளம்பின் கீழ். பரல் - பருக்கைக்கல். குவலயம் - பூமி. குளம் படி - வெல்லம் பொருந்திய. நெய் அடிசில் - சர்க்கரைப் பொங்கல். கொள்ள - உட்கொள்ள. பற்றியதோ - போதுமானதாய் அமைந்ததோ?

317. 'கொற்றவாணற்கு வாகு அலைய நேமி தொட்டாய்! அரங்கா! அன்பர் குவலையம்[1] சூழ் கடல், காயா, மரகதம், கொண்டல், நெய்தல், குவலையம்[2] கண்டு நைவர் என்றால், கொடும் பல் பிறப்பாகு வலை அற்று அங்கு உனைக்காணில், அவர்க்குக் குறிப்பு என்னு(கு)ங்கொல்!' என இயைக்க.

கொற்றம் - வெற்றி. வாணன் - வாணாசுரன். வாகு - தோள். அலைய - (அற்றுத்) துடிக்கும்படி. நேமி தொட்டாய் - சக்கரத்தைச் செலுத்தியவனே. அன்பர் - (உன்) அடியவர். குவலையம் - 1. பூமி, 2. கருங்குவளை மலர். காயா - காயாம்பூ. மரகதம் -

318] [௧௭

குறியானைச் செங்க ணெடியானை வானவர் கோவைச்சங்கக்
குறியானை வித்த திருவரங் கேசனைக் கூவிநின்று
குறியானை காத்தவ னைப்பாடி னேன்கொடி கூப்பிடினுங்
குறியானை யப்பவர் போற்கொடி யேன்சொலுங் கொள்வனென்றே

319] [௧௮

வனத்திற் சிலம்பி விடுநூலுட் பட்டு மசகமெய்த்த-
வனத்திற் சிலம்பின போற்பிணி வாய்ப்பட்டென் வாய்புலம்பின்
வனத்திற் சிலம்பின் குரலன்னம் வாழு மரங்கனிப்பு-
வனத்திற் சிலம்பினின் றான்கேட்கு மோவும்பர் வாழ்த்தைவிட்டே

---

பச்சைக்கல். கொண்டல் - மேகம். நெய்தல் - கருநெய்தற்பூ. நைவர் - (அவற்றின் நிறம் உன்னை நினைப்பூட்ட) மனம் கசிவர். அங்கு - அப்பரமபதத்தில். என்னு(கு)ங்கொல் - என்ன நிலையை உடையதாகுமோ!

318. 'குறியானை — செங்கண் நெடியானை — வானவர் கோவைச் சங்கக் குறியால் நைவித்த திருவரங்க ஈசனை — கூவி நின்று குறி யானை காத்தவனை — 'கொடி கூப்பிடினும் குறியா நயப்பவர் போல் கொடியேன் சொ(ல்)லும் கொள்வன்,' என்று பாடினேன்,' என இயைக்க.

குறியானை - குறுகிய வாமனனை. நெடியானை - திருவிக்கிரமனை. வானவர் கோ - இந்திரன். சங்கக் குறியால் - சங்கின் முழக்கத்தால், நைவித்த - மூர்ச்சையடையச்செய்த. யானை - கஜேந்திரன். கொடி - காக்கை. குறியா - நல்ல சகுனமாக.

'நயப்பவர்' என்பது 'னையப்பவர்' என யமகநயம் குறித்து வந்தது.

319. 'மசகம், வனத்தில்[1] சிலம்பி விடு நூலுள் பட்டு மெய்த்தவனத்தின் சிலம்பின போல், பிணி வாய்ப்பட்டு என் வாய் புலம்பின், சிலம்பின் குரல் அன்னம் வனத்தில்[2] வாழும் அரங்கன் - இப்புவனத்தில் சிலம்பில் நின்றான் - உம்பர் வாழ்த்தை விட்டுக் கேட்குமோ?' என இயைக்க.

மசகம் - கொசுகு, சிலம்பி - சிலந்திப்பூச்சி. பட்டு - அகப்பட்டு. மெய்த்தவனத்தின் - உடல் வருத்தத்தால். சிலம்பின போல் - சத்தஞ் செய்தது போல. சிலம்பின் குரல் - காற்சிலம்பின் ஒலி போன்ற குரல், வனத்தில் - 1. காட்டில், 2. நீரில். புவனத்தில் - உலகில், சிலம்பில் - (திருவேங்கட) மலையில். உம்பர் - தேவர்.

**320]** [௯௯

*விடத்தேரை மன்னும் வனப்பாழ்ங் கிணற்றுள்வெம் பாம்புபற்றும்*
*விடத்தேரை வாய்வண்டு தேன்வேட்டல் போல்விசித் துக்கொடுபோய்*
*விடத்தேரை யில்வெங்கட் கூற்றை யெண்ணதெண்ணும் வேட்கையெல்லாம்*
*விடத்தேரை யூரரங் கன்றிருத் தாளில் விழுநெஞ்சமே!*

**321]** [௧௦௦

*விழுங்கூன் றசைச்சுவர் நீர்மலங் கோழைவெம் பித்தொடுங்க-*
*விழுங்கூ னரம்புறி யென்பேணி தோற்சட்டை வீழ்ந்துநொந்த-*
*விழுங்கூந்த லாரழப் பாடையிற் போய்ச்சுடும் வெய்யசெந்தீ*
*விழுங்கூன நோய்க்குடில் வேண்டே னரங்க விமானத்தனே!*

**322]** [௧௦௧

*மானத் துவண்ட லுழவோ ரெழுத்தின் வடிவுற்றசீர்*
*மானத் துவண்ட வினையாள ராயினு மால்வளர்வி*

---

320. ‘நெஞ்சமே! விடத்தேரை[1] மன்னும் வனப் பாழ்ங் கிணற்றுள் வெம்பாம்பு பற்றும் விடத்தேரை[2] வாய் வண்டு தேன் வேட்டல் போல், விசித்துக்கொ(ண்)டு போய் விடத் தேர் ஐயில் வெங்கண் கூற்றை எண்ணாது எண்ணும் வேட்கை எல்லாம் விட, தேரை ஊர் அரங்கன் திருத்தாளில் விழு,’ என இயைக்க.

விடத்தேரை - 1. ஒரு வகை மரம், 2. விஷம் ஏறிய தவளை. மன்னும் - பொருந்திய. வேட்டல் - விரும்பல். விசித்து - (பாசத் தாற்) கட்டி, தேர் - எண்ணும். ஐயில் - (அயில்) வேலாயுதத்தை யுடைய. வேட்கை - விருப்பம். விட - ஒழிய.

321. ‘அரங்க விமானத்தனே! கூன்[1] விழும் தசைச்சுவர், நீர், மலம், கோழை, வெம்பித்துடன் கவிழும் கூன்[2] - நரம்புஉறி - என்பு ஏணி - தோற்சட்டை - அவிழும் கூந்தலார் நொந்து வீழ்ந்து அழப் பாடையில் போய்ச் சுடும் வெய்ய செந்தீ விழுங்கு ஊன் நோய்க்குடில் வேண்டேன்,’ என இயைக்க.

கூன் - 1. வளைவு, 2. மட்பாண்டம். பித்து - பித்தம். என்பு - எலும்பு. கூந்தலார் - பெண்டிர். குடில் - குடிசை (உடம்பு). ‘என் பிறப்பை ஒழித்தருள வேண்டும்,’ என்பது கருத்து.

322. ‘மால் நத்து வண்டல் உழ, ஓர் எழுத்தின் வடிவு உற்ற சீர் மானத் துவண்ட வினையாளர் ஆயினும், மால் வளர் விமானத்து வள் தலமாம் அரங்கம் வழியா(க) வரினும், அங்கே மானத்து வண்டு அமர் தார் அண்டர் ஆம் பதம் வாய்க்கும்,’ என இயைக்க.

‘கருத்தின்றி ஒருவன் திருவரங்கத்தை மிதிப்பினும் முத்தி பெறுவன்,’ என்பது கருத்து. மால் நத்து - பெரிய நத்தை.

மானத் துவண்டல மாமரங் கம்வழி யாவரினு
மானத் துவண்டமர் தாரண்ட ராம்பதம் வாய்க்குமங்கே.

323] [௧௦௨

அங்காக்கைக் கேமங்கைக் கீந்தா னரங்க னவனிக்குவாய்
அங்காக்கைக் கேபசித் தானிற்க வேமுத்தி யாக்கித்துயர்-
அங்காக்கைக் கேசிலர் வேறே தொழுவ ரருந்திரவிய-
அங்காக்கைக் கேதனத் தாடரு மோதிரு வன்றியிலே?

324] [௧௦௩

அன்றே யடைய வுனக்கே யடிமையென் றாய்ந்துணர்ந்தார்
அன்றே யடையப் படுவா ருனையரங் காவனத்திய-
அன்றே யடையை யயில்வோரு மீதறி யாரறிஞர்
அன்றே யடையைம் புலனுநு நன்கில்லை யாங்கவர்க்கே.

---

வண்டல் உழ - சேற்றில் ஊர்ந்து செல்ல. மான - ஒப்ப. மால் வளர் - திருமால் துயிலும். வள்தலம் - சிறந்த இடம். மானத்து - பெருமையுடைய. தார் - மலர் மாலை. அண்டர் - தேவர். பதம் - பதவி.

323. 'அம் கா மங்கைக்குக் கைக்கே ஈந்தான் - அவனிக்கு வாய் அங்காக்கைக்கே பசித்தான் - அரங்கன் நிற்கவே, முத்தி ஆக்கித் துயரம் காக்கைக்கே சிலர் வேறே தொழுவர்; அருந் திரவியம், திரு அன்றியிலே, காக்கைக் கேதனத்தாள் தருமோ?' என இயைக்க.

அம் கா - அழகிய பாரிஜாத விருட்சத்தை. மங்கை - (மனைவியான) சத்தியபாமை. கைக்கே - கையிலேயே. அவனி - பூமி. அங்காக்கை - திறத்தல். நிற்க - நிலைபெற்றிருக்க. முத்தி - மோட்சம். வேறே - வேறு தெய்வங்களை; திரு அன்றியில் - இலக்குமியையல்லாமல். காக்கைக்கேதனத்தாள் - காக்கைக் கொடியை யுடையவள் (மூதேவி). தருமோ - கொடுப்பாளோ? [திருமாலை. செய். 10 இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.]

324. 'அரங்கா! 'அடைய அன்றே உனக்கே அடிமை,' என்று ஆய்ந்து உணர்ந்தார் அன்றே உனை அடையப்படுவார்? வனத்து இயன்றே அடையை அயில்வோரும், ஈது அறியார், அறிஞர் அன்றே! அவர்க்கு ஆங்கு அடை ஐம்புலனும் நன்கு இல்லை!' என இயைக்க.

அடைய - (உயிர்கள்) எல்லாம். அன்றே - தொன்று தொட்டே. அன்றே - அல்லவா? இயன்று - திரிந்து. அடை - இலை, அயில்வோர் - தின்பவரான முனிவர். ஈது - இதை. அன்றே - அல்லவே. ஆங்கு - அக்காட்டில். அடை ஐம்புலன் - அடைக்கப்பட்ட ஐம்பொறிகள். நன்கு - நன்மை.

325] [௧௦௪

ஆங்கார மாமின்னைத் தோய்மார் பரங்கனளையினையுண்டு-
ஆங்கார மாநில முண்டாற்குத் தொண்டனிவ் வண்டத்தப்பால்
ஆங்கார மான்பகு திப்புறம் போயமு தாற்றிற்படிந்து-
ஆங்கார மானடி காண்பே னவன்ற னருள்சிந்தித்தே.

326] [௧௦௫

சிந்தா குலமுய்யக் குன்றெடுத் தாய்தென் னரங்கசுற்றுஞ்
சிந்தா குலகம் படைத்தளித் தாய்நிலஞ் சென்றிரந்த
சிந்தா குலவுசெல் வந்தந்தை தாய்குரு தெய்வமுநீ
சிந்தா குலமடைந் தேனடி யேன்சென்மந் தீர்த்தருளே.

327] [௧௦௬

தீரத் தரங்கப் பவநோய் துடைத்தென்னைத் தேவரொடுந்
தீரத் தரங்கப் பணிகாப்ப வைத்த செயலென்பதோர்-

---

'உன்னையறிந்து அடையாதவர் தவஞ்செய்தும் பயன் பெறார்,' என்பது கருத்து.

325. 'கார் ஆம் அம் மின் மாவைத் தோய் மார்பு அரங்கன் - அளையினை உண்டாங்கு ஆர மாநிலம் உண்டாற்குத் தொண்டன் (யான்); அவன்றன் அருள் சிந்தித்து, இவ்வண்டத்து அப்பால் ஆங்காரம் மான் பகுதிப் புறம் போய், அமுது ஆற்றிற் படிந்து, ஆங்கு ஆர் அ(ம்)மான் அடி காண்பேன்,' என இயைக்க.

கார்....மாவை - மேகத்திலுண்டாகும் அழகிய மின்னலைப் போன்ற இலக்குமியை. தோய் - தழுவும். அளை - வெண்ணெய், உண்டாங்கு - உண்டாற்போல. ஆர - நிரம்ப. ஆங்காரம் - அகங்காரம். மான் - மகான். பகுதி - பிரகிருதி. புறம் போய் - (கடந்து) அப்பாற்சென்று. அமுது ஆறு - விரசை நதி. படிந்து - முழுகி. ஆங்கு - அவ்விடமுள்ள பரமபதத்தில். அம்மான் - அழகிய பெரியோன் (திருமால்).

326. 'சிந்து ஆ குலம் உய்யக் குன்று எடுத்தாய்! தென்னரங்க! சுற்றும் சிந்து ஆகு உலகம் படைத்து அளித்தாய்! சென்று நிலம் இரந்த சிந்தா! குலவு செல்வம், தந்தை, தாய், குரு, தெய்வமும் நீ; சிந்தா ஆகுலம் அடைந்தேன்; அடியேன் சென்மம் தீர்த்தருள்,' என இயைக்க.

சிந்து ஆகுலம் -(மழைக்கு ஆற்றாமல்) சிதறிய பசுக் கூட்டம். சிந்துஆகு - கடலாற் சூழப்பட்டதாகிய. சென்று -(மகாபலியிடம்) போய். சிந்தா - வாமன ரூபியே. சிந்தா ஆகுலம் - மனக் கலக்கம். மூன்றடி உயரமுள்ளவனைச் 'சிந்தன்' என்பர்.

327. "'அத்தர் அங்க! அபயம்!' என்று ஆர்க்கும் திரைப் பொன்னி சூழ் தீரத்து அரங்கன் சிலம்பு ஆர்ந்த செய்ய திருவடி

தீரத் தரங்க வபயமென் றார்க்குந் திரைப்பொன்னிசூழ்
தீரத் தரங்கன் சிலம்பார்ந்த செய்ய திருவடியே.

328] தற்சிறப்புப் பாயிரம் [கoஎ

பணவா ளரவி னரங்கேசர் தாளிற் பரிதிவளை
நிணவாளஞ் சார்ங்கங் கதைதோளிற் சாத்தின னீணிலமேற்
குணவாள ராம்பட்டர்க் கேழேழ் பிறப்புங் குடியடியான்
மணவாள தாசன் யமகவந் தாதி வனைந்தனனே.

## திருவரங்கத்தந்தாதி முற்றிற்று.

அழகிய மணவாள தாசர் திருவடிகளே சரணம்!

---

தரங்கப் பவநோய் தீரத் துடைத்து என்னைத் தேவரொடும் தீர்த்தர் (ஒடும்) அங்கு அப்பணி காப்ப வைத்த செயல் என்பது ஓர்தீர்,' என இயைக்க. 'உலகீர்' என்பது முன்னிலை எச்சம்.

அத்தர் - தலைவரான பிரமாவும் சிவனும். அங்க - (அமைந்த) திருமேனியை உடையவனே. அபயம் - அடைக்கலம். ஆர்க்கும் - ஆரவாரம் செய்யும். திரைப்பொன்னி - அலைகளையுடைய காவேரிநதி. தீரத்து - கரையில். தரங்கப் பவநோய் - அலையைப் போல மாறிமாறிவரும் பிறவித்துன்பம். தீர - ஒழிய, துடைத்து - நீக்கி, தீரத்தர் - ஞானியர். அங்கு - பரமபதத்தில். அப்பணி - அந்தத் திருத்தொண்டை. காப்ப - காத்திருந்து செய்ய. ஓர்தீர் - அறியுங்கள். [திருவாய்மொழி. 4 : 8 : 1 இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.]

328. 'நீள் நிலமேல் குணவாளராம் பட்டர்க்கு எழ்எழ் பிறப்பும் குடி அடியான் — மணவாள தாசன் — யமக அந்தாதி வனைந்தனன், பரிதி, வளை, நிணவாள், அம் சார்ங்கம், கதை தோளின் பணவாள் அரவின் அரங்க ஈசர் தாளில் சாத்தினன்,' என இயைக்க.

குணவாளர் - உத்தம குணங்களை மேற்கொண்டவர். பட்டர் - பட்டர் என்னும் ஆசாரியர். மணவாளதாசன் - இந்நூலாசிரியரான திவ்விய கவி பிள்ளைப் பெருமாளையங்காரின் மற்றொரு திருநாமம். யமக அந்தாதி - பாட்டின் நான்கு அடிகளிலும் முதற்சீரில் வந்த எழுத்துக்களே பொருள் வேறுபட அமைவதாகிய மடக்கு என்னும் அணி பொருந்தி ஒரு செய்யுளின் அந்தத்தில் (முடிவில்) உள்ள எழுத்தோ அசையோ சீரோ அடியோ அடுத்த செய்யுளின் முதலில் அமைந்து வரப்பாடும் ஒருவகைப் பிரபந்தம். வனைந்தனன் - செய்து (முற்றெச்சம்). பரிதி - சக்கரம். வளை - சங்கு; தோளின் - திருக்கரங்களிற்கொண்டுள்ள. பணவாள் அரவு - படத்தையுடைய ஒளி பொருந்திய ஆதிசேஷன்.

# 4. ஸ்ரீரங்கநாயகர் ஊசல் திருநாமம்

## தனியன்

329] **எண்சீர் ஆசிரிய விருத்தம்** [௧

அண்டப்பந் தரிற்பற்றுக் கால்க ளாக
அறிவுவிட்டம் கரணஞ்சங் கிலிக ளாகக்
கொண்டபிறப் பேபலகை வினைய சைப்போர்
கொடுநரக சுவர்க்கப்பூ வெளிகள் தம்மில்
தண்டலிலேற் றம்இறக்கம் தங்க லாகத்
தடுமாறி இடருழக்கும் ஊசல் மாறத்
தொண்டர்க்கா மணவாளர் பேரர் கூடித்
தொகுத்திட்டார் திருவரங்கத் தூசல் தானே.

330] **காப்பு** [௨

புதுவைநகர்ப் பட்டர்பிரான் சரண்கள் போற்றி!
பொய்கைபூ தன்பேயார் பாதம் போற்றி!
சதுமறைச்சொற் சடகோபன் சரணம் போற்றி!
தமிழ்ப்பாணன் தொண்டரடிப் பொடிதாள் போற்றி!
முதுபுகழ்சேர் மழிசையர்கோன் பதங்கள் போற்றி!
முடிக்குலசே கரன்கலியன் கழல்கள் போற்றி!
மதுரகவி எதிராசன் கூரத் தாழ்வான்
வாழ்வான பட்டர்திரு வடிகள் போற்றி!

---

329. அண்டப் பந்தர் - உலகமாகிய பந்தல், பற்று - பாசம், விட்டம் - உத்தரம், கரணம் - இந்திரியங்கள், அசைப்போர் - ஆட்டுபவர், பூ - பூமி, வெளி - வெளியிடம், தண்டல் இல் - தடையில்லாத, தடுமாறி - அலைந்து, இடர் உழக்கும் - துன்பம் அநுபவிக்கும், தொண்டர்க்கா - அடியவர்களுக்காக, மணவாளர் - அழகிய மணவாள தாசர் என்னும் திவ்வியகவி பிள்ளைப்பெருமாளையங்கார், பேரர் - ஐயங்காரின் பெயராகிய கோனேரியப்பனையங்காரர், ஊசல் - (ஊஞ்சல்) - ஒரு வகைப்பிரபந்தம்.

330. புதுவை - ஸ்ரீவில்லிபுத்தூர், பட்டர் பிரான் - பெரியாழ்வார், போற்றி - வாழக் கடவன, சதுமறை - நான்கு வேதம், சடகோபன் - நம்மாழ்வார், கலியன் - திருமங்கையாழ்வார், எதிராசன் - உடையவர்.

331] நூல் [௩

திருவாழத் திருவாழி சங்கம் வாழத்
திருவனந்தன் கருடன்சே னையர்கோன் வாழ
அருள்மாறன் முதலாமாழ் வார்கள் வாழ
அளவில்குணத் தெதிராசன் அடியார் வாழ
இருநாலு திருவெழுத்தின் ஏற்றம் வாழ
ஏழுலகும் நான்மறையும் இனிது வாழப்
பெருவாழ்வு தந்தருள்நம் பெருமாள் எங்கள்
பெரியபெரு மாள்அரங்கர் ஆடிர் ஊசல்.

332] [௪

உயரவிட்ட கற்பகப்பூம் பந்தர் நீழல்
ஒண்பவளக் கால்நிறுவி ஊடு போட்ட
வயிரவிட்டத் தாடகச்சங் கிலிகள் நாற்றி
மரகதத்தாற் பலகைதைத்த ஊசல் மீதே
தயிரிலிட்ட மத்துழக்கும் வெண்ணெய்க் காடித்
தடமறுகிற் குடமாடித் தழல்வாய் நாகம்
அயரவிட்டன் றடியநீர் ஆடிர் ஊசல்
அணியரங்க நம்பெருமாள் ஆடிர் ஊசல்.

333] [௫

மீன்பூத்த விசும்பதுபோல் தரளங் கோத்து
விரித்தநீ லப்பட்டு விதானம் தோன்ற
வான்பூத்த கலைமதிபோல் கவிகை ஓங்க
மதிக்கதிர்போல் கவரியிரு மருங்கும் வீசக்

331. திருவனந்தன் - ஆதிசேடன், சேனையர் கோன் - சேனை முதலியார், மாறன் - நம்மாழ்வார்.

332. ஊடு - இடையில், ஆடகம் - பொன், நாற்றி - தொங்கவிட்டு, மரகதம் - பச்சைக்கல், அன்று - கிருஷ்ணவதார காலத்தில், உழக்கும் - கடையும், தட மறுகு - பெருந்தெரு, குடம் - குடக் கூத்து, தழல் வாய் நாகம் அயர - தீயைக் கக்கும் வாயையுடைய காளியன் என்னும் பாம்பு சோர்வடையும்படி, ஆடிர் - ஆடுவீராக.

333. மீன் பூத்த விசும்பு - நட்சத்திரங்கள் விளங்கும் ஆகாயம், தாளம் - முத்து, விதானம் - மேற்கட்டு, கலை மதி - பூரண சந்திரன், கவிகை - குடை, மதிக்கதிர் - சந்திர கிரணம், கவரி - வெண்சாமரை, மருங்கு - பக்கம், கான் - கற்பகச்சோலை,

கான்பூத்த தனிச்செல்வன் சிலையுள் மின்னற்
கருமுகில்போல் கணமணிவா சிகையின் நாப்பண்
தேன்பூத்த தாமரையாள் மார்பில் ஆடத்
தென்னரங்க மணவாளர் ஆடிர் ஊசல்

334] [சா

பூசுரரும் புரவலரும் வான நாட்டுப்
புத்தேளிர் குழுவுமவர் பூவை மாரும்
வாசவனும் மலரயனும் மழுவ லானும்
வணங்குவான் அவசரம்பார்த் திணங்கு கின்றார்
தூசுடைய கொடித்தடந்தேர் மானம் தோன்றச்
சுடரிரண்டும் பகல்விளக்காத் தோன்றத் தோன்றும்
தேசுடைய திருவரங்கர் ஆடிர் ஊசல்
சீரங்க நாயகியோ டாடிர் ஊசல்.

335] [எ

மலைமகளும் அரனுமொரு வடந்தொட் டாட்ட
வாசவனுஞ் சசியுமொரு வடந்தொட் டாட்டக்
கலைமகளும் அயனுமொரு வடந்தொட் டாட்டக்
கந்தனும்வள் ளியுங்கலந்தோர் வடந்தொட் டாட்ட
அலைமகரப் பாற்கடலுள் அவத ரித்த
அலர்மகளும் நிலமகளும் ஆயர் காதல்
தலைமகளும் இருமருங்கில் ஆட எங்கள்
தண்ணரங்க மணவாளர் ஆடிர் ஊசல்.

---

செல்வன் - இந்திரன், சிலையுள் - வில்லின் இடையில், கணமணி - கூட்டமாகிய இரத்தினங்கள், வாசிகை - மாலை, நாப்பண் - நடுவில், தாமரையாள் - இலக்குமி, மணவாளர் - அழகிய மணவாளரே.

334. பூசுரர் - பிராமணர், புரவலர் - அரசர், புத்தேளிர் குழு - தேவர் கூட்டம், பூவைமார் - நாகணவாய்ப்புள் போலும் இனிய மொழி பேசும் மனைவியர், வாசவன் - இந்திரன், அயன் - பிரமன், மழு வலான் - சிவன், வணங்குவான் - தொழுதற்கு, அவசரம் - ஏற்ற சமயம், தூசு - சீலை, மானம் - விமானம், தோன்றச்சுடர் - (தோன்று அச்சுடர்) சந்திர சூரியர், பகல் விளக்கு - ஒளியிழந்த விளக்கு, தேசு - பேரொளி.

335. மலை மகள் - பார்வதி, அரன் - சிவன், வடம் - சங்கிலி, சசி - இந்திராணி, வாசவன் - இந்திரன், மகரம் - சுறுமீன்,

336] [அ

திருவழுதி வளநாடன் பொருநைச் சேர்ப்பன்
சீபராங் குசமுனிவன் வகுளச் செல்வன்
தருவளரும் குருகையர்கோன் காரி மாறன்
சடகோபன் தமிழ்வேதம் ததியர் பாடக்
கருணைபொழி முகமதியம் குறுவேர் வாடக்
கரியகுழல் கத்தூரி நாமத் தாட
அருகிருக்கும் தேவியர்கள் அதுகொண் டாட
அணியரங்கத் தெம்பெருமான் ஆடிர் ஊசல்.

337] [சு

வையமொரு பொற்றகட்டுத் தகளி யாக
வார்கடலே நெய்யாக அதனுள் தேக்கி
வெய்யகதிர் விளக்காகச் செஞ்சொல் மாலை
மெல்லடிக்கே சூட்டினன் மேன்மை பாடத்
துய்யமதி மண்டலத்தின் மறுவே யொப்பச்
சோதிவிடு கத்தூரி துலங்கும் நாமச்
செய்யதிரு முகத்தரங்கர் ஆடிர் ஊசல்
சீரங்க நாயகியோ டாடிர் ஊசல்.

---

அலர்மகள் - இலக்குமி, நிலமகள் - பூமி தேவி, ஆயர் காதல் தலை மகள் - நீளா தேவி.

336. 'நாடனும் சேர்ப்பனும் முனிவனும் செல்வனும் கோனும் மாறனுமாகிய சடகோபன்' என இயைக்க. வழுதி வளநாடு - பாண்டியன் நாடு, பொருநைச் சேர்ப்பன் - தாமிர பர்ணி நதியின் கரையில் வாழ்பவர், பராங்குசன் - அயல் மதத்த வரான யானைகளுக்கு அங்குசம் போன்றவர், வகுளம் - மகிழ மலர் மாலை, தரு - மரம், குருகையர் - திருக்குருகூரில் வாழ்ப வர், காரி - சடகோபரின் தந்தையார், சடகோபன் - நம்மாழ் வார், தமிழ் வேதம் - திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந் தங்கள் (திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பன), ததியர் - பாகவதர், குறு வேர்வாட- சிறிய வேர்வைத்துளிகள் துளிக்க, அது - அச்சிறப்பை.

337. வையம் - உலகம், தகளி - அகல், வார்கடல் - நீண்ட சமுத்திரம், அதனுள் - அவ்வகலுள், வெய்ய கதிர் - சூரியன், சூட்டினன் - சூட்டினவராகிய பொய்கையாழ்வார், மறு - களங்கம்.

338] [கo

அன்பென்னும் நன்பொருளோர் தகளி யாக
ஆர்வமே நெய்யாக அதனுள் தேக்கி
இன்புருகு சிந்தையிடு திரியா ஞானத்
திலகுவிளக் கேற்றினன் இசையைப் பாடப்
பொன்புரையும் புகழுறையூர் வல்லி யாரும்
புதுவைநகர் ஆண்டாளும் புடைசேர்ந் தாட
முன்பினும்பின் பழகியநம் பெருமாள் தொல்லை
மூவுலகுக் கும்பெருமாள் ஆடிர் ஊசல்.

339] [கக

'திருக்கண்டேன்! பொன்மேனி கண்டேன்!' என்று
திகழருக்கன் அணிநிறமும் திகிரி சங்கும்
இருட்கொண்ட கருங்கங்குல் இடையே கோவல்
இடைகழியிற் கண்டபிரான் ஏற்றம் பாட
மருக்கொண்ட கொன்றையான் மலரின் மேலான்
வானவர்கோன் முதலானோர் மகுட கோடி
நெருக்குண்ட தாளரங்கர் ஆடிர் ஊசல்
நீளைக்கு மணவாளர் ஆடிர் ஊசல்.

---

338. இலகு விளக்கேற்றினன் - பூதத்தாழ்வார், பொன் புரையும் - இலக்குமியைப்போன்ற, உறையூர் வல்லியார் - திருவுறையூர் நாச்சியார், புடை - பக்கம், முன்பு - முன் பக்கம், பின்பு - பின் பக்கம், தொல்லை - பழைமையான.

339. 'இருள் கொண்ட கருங்கங்குலிடையே கோவல் இடைகழியில், 'திருக்கண்டேன்! பொன் மேனி கண்டேன்! திகழ் அருக்கன் அணி நிறமும் திகிரி சங்கும் (கண்டேன்)' என்று—கண்ட பிரான் ஏற்றம் பாட, மருக்கொண்ட கொன்றையான், மலரின் மேலான், வானவர் கோன் முதலானோர் மகுட கோடி நெருக்குண்ட தாள் அரங்கர்! ஊசல் ஆடிர்; நீளைக்கு மணவாளர்! ஊசல் ஆடிர்,' என இயைக்க.

கங்குல் - இரவு, கோவல் இடைகழியில் - திருக்கோவலூரி லுள்ள ஓர் இல்லத்தின் வெளி வாயிற்படிக்கும் உள் வாயிற்படிக்கும் நடுவிலுள்ள இடத்தில், அருக்கன் - சூரியன், திகிரி - சக்கராயுதம், கண்ட பிரான் - பேயாழ்வார், ஏற்றம் - சிறந்த பிரபந்தம், மரு - வாசனை, கொன்றையான் - சிவன், மலரின் மேலான் - பிரமன், வானவர் கோன் - இந்திரன், மகுடகோடி - கிரீடத்திரள், நீளை - நீளா தேவி.

340] [கஉ

'நான்முகனை நாரணனே படைத்தான்; அந்த
நான்முகனும் நக்கபிரா னைப்ப டைத்தான்;
யான்முகமாய் அந்தாதி அறிவித் தேன்,' என்
றியார்க்கும்வெளி யிட்டபிரான் இயல்பைப் பாடப்
பான்முகமார் வளைநேமி படைகள் காட்டப்
பாசடைகள் திருமேனிப் படிவங் காட்டத்
தேன்முகமா முளரியவ யவங்கள் காட்டச்
செழுந்தடம்போல் அரங்கேசர் ஆடீர் ஊசல்.

341] [கங

மருள்இரிய மறம்இரிய அனைத்து யிர்க்கும்
மயல்இரிய வினைஇரிய மறையின் பாடல்
'இருள்இரிய' என்றெடுத்துத் தொண்டர் தங்கள்
இடர்இரிய உரைத்தபிரான் இட்டம் பாட
அருள்இரிய அறம்இரிய உலகை ஆண்ட
ஆடகத்தோன் அகம்பரனென் றபிமா னித்த
பொருள்இரியச் சொல்இரிய மார்வம் கீண்ட
பொன்னிசூழ் திருவரங்கர் ஆடீர் ஊசல்.

---

340. நாரணன் - திருமால், நான்முகன் - பிரமன், நக்கபிரான் - சிவபிரான், முகமாய் - மூலமாய், அந்தாதி - நான்முகன் திருவந்தாதி (நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்திலுள்ளது; திருமழிசையாழ்வார் அருளிச் செய்தது), வெளியிட்ட - (உண்மையை) வெளிப்படுத்திய, பிரான் - திருமழிசைப் பிரான், இயல்பை - பண்பு வாய்ந்த பிரபந்தத்தை, வளை - சங்குப்பூச்சி, நேமி - சக்கரவாகப்புள், படைகள் - சங்கசக்கராயுதங்களை, பாசடைகள் - பசுமையான தாமரை இலைகள், படிவம் - நிறம், மாமுளரி - சிறந்த தாமரை மலர், தடம் - குளம்.

341. மருள் - அறியாமையாகிய மயக்கம், இரிய - நீங்க, மறம் - பாவம், மயல் - மோகம், வினை - இரு வினை, எடுத்து - தொடங்கி, இடர் - (பிறவித்) துன்பம், பிரான் - குலசேகர ஆழ்வார், இட்டம் - விருப்பிற்கிசைந்த 'பெருமாள் திருமொழி' என்னும் பிரபந்தம், அருள் இரிய - கருணை நீங்க, அறம் - தருமம், ஆடகத்தோன் - இரணியன், 'அகம் பரன்,' என்று - 'நானே கடவுள்,' என்று கருவித்து, அபிமானித்த - பாராட்டிக்கொண்ட, சொல் - புகழ்; மார்வம் - மார்பு, கீண்ட - பிளந்த, பொன்னி - காவிரி நதி.

342] [கச

அரனென்றும் அயனென்றும் புத்தன் என்றும்
அலற்றுவார் முன்'திருநா ரணனே ஆதி
பரனெ'ன்று மறையுரைத்துக் கிழிய றுத்த
பட்டர்பிரான் பாடியபல் லாண்டு பாடக்
கரனென்ற மாரீசன் கவந்தன் என்ற
கண்டகரா ருயிர்மடியக் கண்டி லங்கா
புரம்வென்ற சிலையரங்கர் ஆடிர் ஊசல்
புகழுறையூர் வல்லியோ டாடிர் ஊசல்.

343] [கரு

மருமாலைப் பசுந்துளவத் தொடைக ளோடு
வைகறையில் வந்துதிருத் துயிலு ணர்த்தித்
திருமாலை திருவடிக்கே சூட்டி நிற்கும்
திருமண்டங் குடிப்பெருமான் சீர்மை பாடப்
பெருமாலை அடைந்துலகம் மதிம யங்கப்
பேணாதார் படக்கதிரோன் காணா தேக
ஒருமாலை பகலில்அழைத் தொளித்த நேமி
ஒளியுள்ளார் அரங்கேசர் ஆடிர் ஊசல்.

344] [கசு

காரங்கத் திருவுருவம் செய்ய பாத
கமலமுதல் முடியளவும் கண்டு போற்றச்
சாரங்க முனியையூர்ந் 'தமல னாதி'
தனையுரைத்த பாண்பெருமாள் தகைமை பாட

---

342. அலற்றுவார் - பிதற்றுபவர், கிழி - (வல்லபதேவன் என்னும் பாண்டியன் சங்க மண்டபத்தில் தொங்கவிட்ட) பொற்கிழி, பட்டர் பிரான் - பெரியாழ்வார், பல்லாண்டு - 'திருப்பல்லாண்டு' என்னும் திவ்வியப் பிரபந்தம், கண்டகர் - கொடியவர், சிலை - வில், உறையூர் வல்லி - திருவுறையூர் நாச்சியார்.

343. வைகறை - விடியற்காலம், திருமாலை - 'திருமாலை' என்னும் திவ்வியப்பிரபந்தம், திருமண்டங்குடிப் பெருமான் - தொண்டரடிப்பொடியாழ்வார், சீர்மை - சிறந்த பிரபந்தங்கள், பெருமாலை - பெரிய மயக்கத்தை, பேணாதார் - பகைவர், பட - அழிய, கதிரோன் - சூரியன், ஒரு மாலை - ஓர் இரவை, ஒளித்த - (சூரியனை) மறைத்த, நேமி - சக்கராயுதம்.

344. சாரங்கமுனி - லோகசாரங்க முனிவர், ஊர்ந்து - ஏறி வந்து, 'அமலனாதிதனை' - 'அமலனாதிபிரான்' என்று

ஆரங்கொள் பாற்கடல்விட் டயனூ ரேறி
அயோத்திநகர் இழிந்துபொன்னி யாற்றிற் சேர்ந்த
சீரங்க மணவாளர் ஆடிர் ஊசல்
சீரங்க நாயகியோ டாடிர் ஊசல்.

345] [கஎ

விழிபறித்து வெள்ளியைமா வலியை மண்ணும்
விண்ணுலகும் பறித்தகுறள் வேடத் தும்மை
வழிபறித்து மந்திரங்கொண் டன்பர் தங்கள்
வல்வினையைப் பறித்தபிரான் வண்மை பாடச்
சுழிபறித்த கங்கைமுடி யடியில் தோயத்
தொழுதிரக்கும் முக்கணன்நான் முகனைச்செய்த
பழிபறித்துப் பலியொழித்தார் ஆடிர் ஊசல்
பள்ளிகொண்ட திருவரங்கர் ஆடிர் ஊசல்.

346] [கஅ

போதனார் நெட்டெழுத்தும் நமனா ரிட்ட
குற்றெழுத்தும் புனலெழுத்தாய்ப் போகமாறன்
வேதமா யிரந்தமிழும் எழுதி அந்நாள்
மேன்மைபெறு மதுரகவி வியப்பைப் பாட
ஓதமார் மீன்வடிவாய் ஆமை ஏனத்
துருவாகி அரிகுறள்மூ விராம ராகிக்
கோதிலாக் கண்ணனாய்க் கற்கி யாகும்
கோயில்வா ழரங்கேசர் ஆடிர் ஊசல்.

---

தொடங்கும் திவ்வியப் பிரபந்தத்தை, பாண்பெருமாள் - திருப்பாணாழ்வார், தகைமை - பெருமை வாய்ந்த பிரபந்தம், ஆரம் - முத்து, அயன் ஊர் - பிரமனிருப்பிடமான சத்தியலோகம்.

345. வெள்ளி - சுக்கிராசாரி, விழி - (ஒரு) கண், மாவலி - மகாபலிச் சக்கரவர்த்தி, பறித்த - கவர்ந்த, குறள் வேடம் - வாமன வடிவம், மந்திரம் - திருமந்திர உபதேசம், பிரான் - திருமங்கையாழ்வார், வண்மை - வளமார்ந்த பிரபந்தம், சுழி - நீர்ச்சுழி, இரக்கும் - யாசிக்கின்ற, முக்கணன் - சிவன், நான்முகனைச் செய்த பழி - பிரமனது தலையைக் கிள்ளியதனாலுண்டான பிரமகத்தியை, பலி - பிச்சை ஏற்றலை.

346. போதனார் - பிரமன், நெட்டெழுத்து - நீண்ட தலையெழுத்து, நமனார் - யமன், குற்றெழுத்து - குறுகிய எழுத்து புனல் எழுத்து—நீரில் எழுதிய எழுத்து, வேதம் ஆயிரம் தமிழ் - வேதமாகிய ஆயிரம் திருவாய் மொழிப் பாசுரங்கள், மதுரகவி - மதுரகவியாழ்வார், வியப்பை-வியக்கத்தக்க பாடல்களை, ஓதம்

347] [கசு

ஆரமுதின் இன்பமிகு சடகோ பன்சொல்
ஆயிரமும் தெரிந்தெடுத்தே அடியார்க் கோதி
நாரதனும் மனமுருக இசைகள் பாடும்
நாதமுனி திருநாம நலங்கள் பாடப்
பாரதனிற் பாரதப்போர் முடிய மூட்டிப்
பகைவேந்தர் குலந்தொலையப் பார்த்தன் தெய்வத்
தேரதனில் வருமரங்கர் ஆடிர் ஊசல்
சீரங்க நாயகியோ டாடிர் ஊசல்.

348] [உ0

வம்பமரும் சிகைமுந்நூல் தரித்த ஞானி
வாதியரை வெல்ஆள வந்தார்க் கன்பாம்
எம்பெருமா னார்க்கெட்டும் இரண்டும் பேசி
இதமுரைத்த பெரியநம்பி இரக்கம் பாடத்
தும்புருநா ரதர்நாத கீதம் பாடத்
தொண்டர்சூழாம் இயல்பாடச் சுருதி பாட
நம்பெருமாள் திருவரங்கர் ஆடிர் ஊசல்
நான்முகனார் தாதையார் ஆடிர் ஊசல்.

349] [உக

ஐங்கோலும் ஒருகோலும் நீர்க்கோ லம்போல்
அழியமுனிந் தறுசமயம் அகற்றி எங்கள்
செங்கோலே உலகனைத்துஞ் செல்ல முக்கோல்
திருக்கையிற்கொள் எதிராசன் செயத்தைப் பாடச்

---

கடல், ஏனம் - பன்றி, அரி - நாரசிங்கம், குறள் - வாமனம், மூவி ராமர் - பரசுராமர், தசரதராமர், பலராமர், கோது - குற்றம், கற்கி - கல்கி, கோயில் - திருவரங்கப் பெருங்கோயில்.

347. ஆரமுதின் - அரிய தேவாமுதத்தைக்காட்டிலும், திருநாமம் - திருநாமப் பெருமையுணர்த்தும் பாசுரங்கள், பார் - பூமி, பகை வேந்தர் - துரியோதனாதியர், பார்த்தன் - அருச்சுனன்.

348. சிகை - குடுமி, முந்நூல் - பூணூல், வம்பு - புதுமை, எம்பெருமானார் - உடையவர், எட்டும் - திருவஷ்டாக்ஷர மந்திரமும், இரண்டும் - துவயமும், பேசி - உபதேசித்து, இதம் - நன்மையான சரம சுலோகம், இரக்கம் - கருணையை விளக்கும் பாசுரங்கள், இயல் - இயலுக்கென அமைந்த திவ்வியப்பிரபந்தங்கள், சுருதி - வேதபாராயணம், தாதையார் - தந்தையாரே.

349. ஐங்கோல் - (மன்மதனுக்குரிய) ஐந்து பாணங்கள், ஒரு கோல் - (அத்துவிதத் துறவியர்க்குரிய) ஏக தண்டமும், நீர்க்

சங்கோலம் இடும்பொன்னித் துறையி னின்றே
தவழ்ந்தேறி மறுகுதொறும் தரளம் ஈனும்
நங்கோயில் நம்பெருமாள் ஆடிர் ஊசல்
நக்கன்மூ தாதையார் ஆடிர் ஊசல்.

350] [உஉ

அவத்தப்புன் சமயச்சொற் பொய்யை மெய்யென்
றணிமிடறு புழுத்தான்றன் அவையின் மேவிச்
'சிவத்துக்கு மேற்பதக்குண் டென்று தீட்டும்
திருக்கூர வேதியர்கோன் செவ்வி பாடப்
பவத்துக்கம் பிணிநீங்க நரகந் தூரப்
பரமபதங் குடிமலியப் பள்ளி கொள்ளும்
நவத்துப்புச் செங்கனிவாய்க் கரிய மேனி
நம்பெருமாள் அரங்கேசர் ஆடிர் ஊசல்.

---

கோலம் - நீரில் எழுதிய கோலம், எங்கள் செங்கோல் - (வைண வர்களான) எங்கள் சிறந்த ஆட்சி, முக்கோல் - திரிதண்டம், எதிராசன் - இராமாநுசர், ஒலியிடும் - ஒலி செய்யும், மறுகு தொறும் - ஒவ்வொரு தெருவிலும், தரளம் - முத்து, நம் கோயில்- நமது பெரியகோயில், நக்கன் மூதாதையார் - சிவனுக்குப் பாட்ட னாரே.

350. அவத்தம் - வீணான, புன்சமயம் - தாழ்வான மதம் (என்றது இங்குச் சைவத்தைக் குறித்தது), அணிமிடறு புழுத் தான் - அழகிய கழுத்துப் புழுத்தவனான கிருமிகண்ட சோழன், அவையில் - சபையில், மேவி - எழுந்தருளி, சிவத்துக்கு மேல் பதக்கு உண்டு - குறுணி என்னும் அளவுக்கு மேல் பதக்கு என்னும் அளவும் உண்டு (சிவம் - குறுணி), தீட்டும் - எழுதின, திருக்கூரவேதியர்கோன் - கூரத்தாழ்வான், செவ்வி - சிறப்பு, பவத்துக்கம் - பிறவித்துன்பம், தூர - மண் மேடிட்டுப்போக, மலிய - நிரம்ப, நவத்துப்பு - புதிய பவளம், செங்கனி - கொவ் வைக்கனி.

சோழமன்னன் ஒருவன், 'சிவனுக்கு மேம்பட்ட பரம் பொருள் இல்லை,' என்று பொருள்படும் 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்னும் தொடரை எழுதித் தன் சபையிலிருந்த அறிஞரை வற் புறுத்தி அதைச் சம்மதிக்கச் செய்து கையெழுத்து வாங்க, அச் சபையிலிருந்த கூரத்தாழ்வான், அவனை இகழக் கருதி, 'குறுணி என்று பொருள்படும் 'சிவம்' என்னும் சொல்லுக்குமேல் 'பதக்கு' என்னும் சொல்லுண்டு,' என்னும் பொருள்படும், 'த்ரோணம் அஸ்தி தத: பரம்' என்னும் தொடரை எழுதிக்

351] [உங

சந்தாரும் பொழிற்பூதூர் முக்கோற் செல்வன்
தன்மருகன் ஆகியிரு தாளு மான
கந்தாடைக் குலதீபன் முதலி யாண்டான்
கடல்ஞாலம் திருத்தியருள் கருணை பாடக்
கொந்தாரும் துளவாடச் சிறைவண் டாடக்
குழலாட விழியாடக் குழைக்கா தாட
நந்தாடக் கதையாடத் திகிரி யாட
நன்மாடத் திருவரங்கர் ஆடிர் ஊசல்.

352] [உச

திருக்கலியன் அணுக்கர்திருப் பணிசெய் யன்பர்
சீரங்க நான்மறையோர் உள்ளூர்ச் செல்வர்
தருக்குமிசைப் பிரான்மார்பார் அளந்தார் பாதம்
தாங்குவோர் திருக்கரகம் தரித்து நிற்போர்
இருக்குமுதல் விண்ணப்பம் செய்வோர் வீரர்க்
கிறையவர்கள் சீபுண்ட ரீகர் மற்றும்
பெருக்கமுள்ள பரிகரங்கள் தொழுதாட் செய்யப்
பிரமமாம் திருவரங்கர் ஆடிர் ஊசல்.

353] [உரு

உடுத்திரளோ வானவர்கள் சொரிந்த பூவோ
உதித்தெழுந்த கலைமதியோ உம்பர் மாதர்
எடுத்திடுகர்ப் பூரவா ரத்தி தானோ
யாந்தெளியோம் இன்றுநீள் திருக்கண் சாத்திப்

---

கையெழுத்திட்டுக் கொடுத்தனர் என்பர். அச்சோழன் உடைய வர் சாபத்தால் கழுத்துப் புழுத்துக் 'கிருமிகண்ட சோழன்' என வழங்கப்பட்டனன் என்பர்.

351. சந்து - அழகு, பூதூர் - ஸ்ரீபெரும்பூதூர், முக்கோல் செல்வன்-திரிதண்ட சன்னியாசியாரான உடையவர், மருகன் - மருமகன், இருதாள் - இரு திருவடி நிலைகள் (இவை 'முதலியாண் டான்' என வழங்கப்படும்), தீபன் - விளக்குப் போல்பவன், ஞாலம் - உலகத்தாரை, கொந்து - கொத்து, துளவு ஆட - துளசி மாலை அசைய, குழை - குண்டலம், நந்து - சங்கு, மாடம் - மாளிகை.

352. ஆள் செய்ய - தொண்டு செய்ய, பிரமம் ஆம் - முதற் பொருளாகிய.

353. உடுத்திரள் - நட்சத்திரக் கூட்டம், உம்பர் மாதர் - தேவ மாதர்கள், திருக்கண் சாத்தி - திருக்கண்களை மூடி, போந்து - வந்து, திருக்கோதை - ஆண்டாள்.

படுத்ததிருப் பாற்கடலுள் நின்று போந்து
பாமாலை பூமாலை பாடிச் சூடிக்
கொடுத்ததிருக் கோதையுடன் ஆடீர் ஊசல்
கோயில்மண வாளரே ஆடீர் ஊசல்.

354] [௨௬

வென்றிவேற் கருநெடுங்கண் அசோதை முன்னம்
வேர்வாட விளையாடும் வெண்ணெய் ஆட்டும்
குன்றுபோல் நாற்றடந்தோள் வீசி யாடும்
குரவைதனைப் பிணைந்தாடுங் கோள றாட்டும்
மன்றினூ டுவந்தாடும் மரக்கால் ஆட்டும்
வலியரவிற் பாய்ந்தாடும் வடுவில் ஆட்டும்
அன்றுகா ணாதிழந்த வடியோம் காண
அணியரங்க ராசரே ஆடீர் ஊசல்.

355] [௨௭

ஆரணங்கள் ஒருநான்கும் அன்பர் நெஞ்சும்
அணிசிலம்பும் அடிவிடா தூச லாட
வாரணங்கும் முலைமடவார் கண்ணும் வண்டும்
வண்துளவும் புயம்விடா தூச லாடக்
காரணங்க ளாயண்டர் அண்ட மெல்லாம்
கமலநா பியிற்படைத்துக் காத்த ழிக்கும்
சீரணங்கு மணவாளர் ஆடீர் ஊசல்
சீரங்க நாயகனார் ஆடீர் ஊசல்.

---

354. வென்றி வேல் - ஜயத்தை விளக்கும் வேலாயுதம், முன்னம் - முன்னிலையில், வேர்வு ஆட - வேர்வை சொட்டும்படி, வெண்ணெய் ஆட்டு - வெண்ணெய்க்காக ஆடிய ஆட்டம், பிணைந்து - (ஆயர் மகளிரோடு) சேர்ந்து, குரவைதனை - குரவைக் கூத்தை, கோள் அறு ஆட்டும் - குற்றம் நீங்கிய விளையாட்டையும், மன்றின் ஊடு - பொதுவான இடத்தில், மரக்கால் ஆட்டும் - மரத்தாற் செய்த கால்களால் ஆடும் ஆட்டும் (இது பொய்க்கால் குதிரை ஆட்டம் போல்வது), அரவில் - (காளியன் என்னும்) பாம்பின் உச்சியில், வடு இல் - குற்றம் இல்லாத, அன்று - அக் காலங்களில், காணு - பாராமல், அடியோம் - தொண்டு செய்யும் யாங்கள்.

355. காரணங்களாய் - (முதல், துணை, நிமித்தம் என்னும் மூன்று) காரணங்களாகி, அண்டர் - உலகங்களில் வாழ்பவர்களையும், அண்டம் - உலகங்களும், கமலநாபி - (நாபிக்கமலம்) உந்தித்

356] [உஅ

அடித்தலத்திற் பரிபுரமும் சிலம்பும் ஆட
அணிமார்பிற் கௌத்துவமும் திருவும் ஆடத்
தொடித்தலத்தின் மணிவடமும் துளவும் ஆடத்
துணைக்கரத்திற் சக்கரமும் சங்கும் ஆட
முடித்தலத்திற் கருங்குழலும் சுரும்பும் ஆட
முகமதியிற் குறுவேர்வும் குழையும் ஆடக்
கடித்தலத்தில் அரைநாணும் கலையும் ஆடக்
காவிரிசூழ் அரங்கேசர் ஆடிர் ஊசல்.

357] [உகூ

பரந்தலைக்கும் பாற்கடலுட் பசுஞ்சூற் கொண்டல்
படிந்ததெனக் கிடந்தபடி படிமேற் காட்டி
வரந்தழைக்க இரண்டாற்றின் நடுவே தோன்றி
மண்ணுலகை வாழவைத்த வளத்தைப் பாடப்
புரந்தரற்கும் பெருமாளே ஆடிர் ஊசல்
போதனுக்கும் பெருமாளே ஆடிர் ஊசல்
அரன்றனக்கும் பெருமாளே ஆடிர் ஊசல்
அணியரங்கப் பெருமாளே ஆடிர் ஊசல்.

---

தாமரை, சீர் அணங்கு - சிறப்புடைய தெய்வமாகிய இலட்சுமி, ஆரணம் - வேதம், அடி - (உம்) திருப்பாதங்களை, ஊசல் ஆட - அசைய, வார் அணங்கும் - கச்சினால் வருத்தப்படுகின்ற, வண் டுளவு - வளமான துளசி மாலை.

356. அடித்தலத்தில் - திருப்பாதங்களில், பரிபுரம் - கிண் கிணி என்னும் ஆபரணம், கௌத்துவம் - கௌஸ்துப மணி, திரு- இலட்சுமி, தொடித்தலம் - வாகுவலயமணிந்த தோள்கள், முடித் தலம் - சிரத்தில், சுரும்பு - வண்டு, முகமதி - முகமாகிய சந்தி ரன், குறுவேர்வு - சிறிய வேர்வைத்துளி, கடிதலம் - இடுப்பு, கலை - வஸ்திரம்.

357. பரந்து அலைக்கும் - பரவி அலை மோதும், பசுஞ்சூற் கொண்டல் - நீரையுட்கொண்டு கருமையான மேகம், கிடந்த - பள்ளி கொண்ட, படி - விதத்தை, படிமேல் - பூமியில், வரம் தழைக்க - மேன்மைகள் செழித்தோங்க, இரண்டு ஆறு - உபய காவேரி, வளத்தை - சிறப்பை, புரந்தரன் - இந்திரன், பெரு மாளே - தலைவரே, போதன் - தாமரை மலரில் உள்ள பிரமன், அரன் - சிவன்.

358] [௩௰

உடுமாயக் கதிருதிரச் சண்ட வாயு
உலகலைப்ப வடவைசுட உததி ஏழும்
கெடுமாறு திரிதருகால் உயிர்கள் எல்லாம்
கெடாதுவயிற் றுள்ளிருத்தும் கீர்த்தி பாட
நெடுமாயப் பிறவியெல்லாம் பிறந்தி றந்து
நிலத்தோடும் விசும்போடும் நிரயத் தோடும்
தடுமாறித் திரிவேனை அருள்செய் தாண்ட
தண்ணரங்க நாயகனார் ஆடிர் ஊசல்.

359] [௩௰௧

முருகனுறை குறிஞ்சித்தேன் முல்லை பாய
முல்லைநிலத் தயிர்பால்நெய் மருதத் தோட
மருதநிலக் கொழும்பாகு நெய்தற் றேங்க
வருபுனற்கா விரிசூழ்ந்த வளத்தைப் பாடக்
'கருமணியே! மரகதமே! முத்தே! பொன்னே!
கண்மணியே! ஆருயிரே! கனியே! தேனே!
அருள்புரிவாய்!' என்றவர்தம் அகத்துள் வைகும்
அணியரங்க மாளிகையார் ஆடிர் ஊசல்.

360] [௩௰௨

புண்டரிகத் தவன்தவஞ்செய் திறைஞ்சும் கோயில்
புரிசடையோன் புராணஞ்செய்தேத்தும்கோயில்
பண்டிரவி குலத்தரசர் பணிந்த கோயில்
பரிந்திலங்கைக் கோன்கொணர்ந்து பதித்த கோயில்

---

358. உடு மாய - நட்சத்திரங்கள் அழியவும், கதிர் - சூரிய சந்திரர்கள், சண்ட வாயு - பெருங்காற்று, அலைப்ப - அழிக்கவும், வடவை - வடவாமுகாக்கினி என்னும் பெருந்தீ, உததி - கடல், கெடுமாறு - அழியும்படி, திரிதருகால் - மாறுபடும் காலத்தில், இருத்தும் - இருக்கச் செய்யும், கீர்த்தி - புகழ், விசும்பு - தேவலோகம், நிரயம் - நரகம்.

359. கருமணி - நீலமணி, கண் மணி - கருவிழி, என்றவர் தம் - என்று வேண்டிவனவருடைய, அகம் - மனம், வைகும் - தங்கும், குறிஞ்சி - மலையில் உண்டாகும், முல்லை - காட்டு நிலம், மருதம் - விளை நிலம், கொழும்பாகு - வளமான கருப்பஞ் சாற்றுப் பாகு, நெய்தல் - கடலைச் சார்ந்த நிலம், வருபுனல் - பாயும் நீரையுடைய.

360. புண்டரிகத்தவன் - தாமரையில் தோன்றிய பிரமன், இறைஞ்சும் - வணங்கும், புரி சடையோன் - சிவன், புராணம்

மண்டபமும் கோபுரமும் மதிலும் செம்பொன்
    மாளிகையும் தண்டலையும் மலிந்த கோயில்
அண்டர்தொழும் திருவரங்கம் பெரிய கோயில்
    அமர்ந்துறையும் பெருமானார் ஆடிர் ஊசல்.

361] [௫௫

அருவரங்கள் தருபராங் குசனே யாதி
    ஆழ்வார்கள் தம்பிரான் ஆடிர் ஊசல்;
இருவரங்க வொளிக்ககலா இருள கற்றும்
    எதிராசன் தம்பிரான் ஆடிர் ஊசல்;
தருவரங்கள் நீள்பொழில்கூ ரத்து வேதா
    சாரியனார் தம்பிரான் ஆடிர் ஊசல்;
திருவரங்கத் தணியரங்கன் திருமுற் றத்துத்
    தெய்வங்கள் தம்பிரான் ஆடிர் ஊசல்.

362] [௫௪

உணராத மதலையிளங் குதலைச் சொல்லை
    உளமுருகித் தந்தைதாய் உவக்கு மாபோல்
தணவாமல் கற்பிப்பார் தஞ்சொற் கேட்டுத்
    தத்தையுரைத் தத்தையா தரிக்கு மாபோல்
பணவாள ராமுடிமேற் படியேழ் போற்றும்
    பட்டர்திருத் தாட்கடிமைப் பட்ட காதல்
மணவாள தாசன்றன் புன்சொற் கொண்ட
    மதிலரங்க மணவாளர் ஆடிர் ஊசல்.

---

செய்து - பழமையைப் பாராட்டி, ஏத்தும் - துதிக்கும், பண்டு - முன் காலத்தில், இரவி - சூரியன், இலங்கைக்கோன் - விபீஷணன், பரிந்து - விரும்பி, கொணர்ந்து - கொண்டுவந்து, பதித்த - நிலை பெறச் செய்த, தண்டலை - சோலை, அண்டர் - தேவர், அமர்ந்து - விரும்பி, உறையும் - தங்கும்.

361. பராங்குசனேயாதி - நம்மாழ்வார் முதலிய, தம்பிரான் - தலைவரே, இருவர் அங்கம் - சந்திர சூரியர்களின் உடலிலிருந்து வெளி வரும், ஒளிக்கு - பிரகாசத்திற்கும், அகலா - நீங்காத, இருள் - அறியாமையாகிய இருளை, தம்பிரான் - தலைவரே, பொழில் - சோலை, கூரத்து வேத ஆசாரியனார் - திருக்கூரத்தில் அவதரித்த வேத குருவாகிய கூரத்தாழ்வானுக்கு, திருமுற்றம் - வாயிற்படி.

362. உணராத - அறியாத, மதலை - குழந்தையின், இளங்குதலைச் சொல் - உருப்பெறாத மழலைச் சொல்லை, உவக்குமா

363] [௩௫

போதாரும் நான்முகனே முதலா யுள்ள
புத்தேளிர் தொழுநாதன் புவனிக் கெல்லாம்
ஆதார மாந்தெய்வம் ஆன நாதன்
அனைத்துயிர்க்கும் நாதன் அணி யரங்க நாதன்
சீதார விந்தமலர்த் திருவின் நாதன்
திருவூசற் றிருநாமம் ஒருநா லெட்டும்
வேதாசா ரியபட்டர்க் கடிமை யான
வெண்மணிப்பிள் ளைப்பெருமாள் விளம்பினனே.

சீரங்கநாயகர் ஊசல் முற்றிற்று.

---

போல் - மகிழ்வது போலவும், தணவாமல் - தவறாமல், தத்தை - கிளி, ஆதரிக்குமா போல் - விரும்புவது போலவும், பணவாள் அரா - படத்தையும் ஒளியையுமுடைய பாம்பாகிய ஆதிசேஷன், படி - உலகம், பட்டர் - ஸ்ரீ பராசரபட்டர் (இவர் மணவாளதாசரின் ஆசாரியர்).

363. போது ஆரும் - தாமரை மலரில் வாழும், புத்தேளிர் - தேவர், புவனி - உலகம், சீதாரவிந்த மலர் - (சீத அரவிந்த மலர்) குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர், திரு - இலட்சுமி, வெண் மணிப் பிள்ளைப் பெருமாள் - படிகமணிபோலும் சத்துவகுண சம்பன்னரான திவ்விய கவி பிள்ளைப் பெருமாளையங்கார்.

இக்கவி ஆசிரியர் தம்மைப் பிறர் போலப் பாவித்துக் கூறிய சாந்திச் செய்யுள். சாந்தி - சிறப்புப் பாயிரம்.

# 5. திருவேங்கட மாலை

364] காப்பு [க

திண்பார் புகழும் திருவேங் கடமாலை
வெண்பாவால் நூறும் விளம்புதற்குக்—கண்பாராய்
நாராய ணா! அடியேன் நாடும் தமிழ்வேத
பாராய ணா! சடகோ பா!

365] திருவேங்கடமுடையான் [உ

மூலமே என்றகரி முன்வந் திடர்தொலைத்து
நீலமே கம்போல நின்றானைப்—பாலாய
வேலைநடு வில்துயிலும் வித்தகனை வேங்கடத்து
மாலையன்றிப் பாடாதென் வாய்.

366] அவையடக்கம் [ஙு

ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரித்த வேங்கடம்என்
தாழ்வான புன்சொல்லும் தாங்குமால்—ஏழ்பாரும்
வெல்லும் கதிர்மணியும் வெம்பரலுஞ் செஞ்சாந்தும்
புல்லும் பொறுத்தமையே போல்.

---

364. 'சடகோபா, கண் பாராய்,' என இயைக்க. நாடும் - விரும்பும், தமிழ் வேதம் - திவ்வியப்பிரபந்தங்கள், பாராயணா - திருவாய் மலர்ந்தருளியவனே, திண்பார் - வலிய நிலவுலகிலுள்ளவர்கள், திருவேங்கடமாலை - திருவேங்கடமென்னும் திருப்பதியைப் பற்றிய மாலை என்னும் பிரபந்தம், விளம்புதற்கு - சொல்வதற்கு, கண் பாராய் - கருணை செய்வாயாக.

365. 'என் வாய்....பாடாது,' என இயைக்க. மூலமே - ஆதி மூலமே, கரி - கஜேந்திரன், இடர் - துன்பம், பால் ஆய வேலை - பாலாகிய கடல், வித்தகன் - ஞான வடிவினன், மாலை - மகாவிஷ்ணுவை.

366. 'வேங்கடம்....தாங்கும்,' என இயைக்க. ஏழ் பார் - ஏழுலகங்கள், வெல்லும் - விலையாகக் கொண்டு வெற்றி பெறும், கதிர் மணி - ஒளிக்கிரணங்களையுடைய இரத்தினம், வெம்பரல் - கொடிய பருக்கைக் கற்கள், செஞ்சாந்து - செழுமையான சந்தன மரங்கள், பொறுத்தமை - தாங்கினமை, ஆதரித்த - விரும்பி ஏற்ற, புன்சொல் - இழிவான சொல்.

367] நூல் [ச

பொன்னும் மணியும் பொலிந்தோங்கிப் பார்மகட்கு
மின்னும் மணிமுடியாம் வேங்கடமே—மன்னும்
பரமபத நாட்டினன் பையரவின் சூட்டில்
சிரமபதம் நாட்டினன் சேர்வு.

368] [ரு

சோதிமதி வந்துதவழ் சோலைமலை யோடிரண்டாய்
மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே—போதில்
இருப்பாற் கடலான் இபமூர்ந்தார்க் கெட்டாத்
திருப்பாற் கடலான் சிலம்பு.

369] [சு

மாலைக்கோ வித்திரியும் வையகத்தோர் தம்பிறவி
வேலைக்கோர் வங்கமாம் வேங்கடமே—சோலைத்
தருமா தரைநட்டான் றண்முல்லை யாயர்
தருமா தரைநட்டான் சார்பு.

367. 'சேர்வு....வேங்கடமே,' என இயைக்க. மன்னும் - நிலைபெற்ற, பரமபத நாட்டினன் - பரமபதம் என்னும் நாட்டை உடையவன், பை அரவின் சூட்டில் - படமுடைய காளியனாகிய பாம்பின் தலையில், சிரமபதம் - ஆட வருந்தும் பாதம், சேர்வு - இருப்பிடம், பொலிந்து - விளங்கி, பார் மகள் - பூமி தேவி, மணி முடி - இரத்தினகிரீடம், ஆம் - ஆகும்.

368. 'போதில் இருப்பாற்கு அடல் ஆன் இபம் ஊர்ந் தார்க்கு எட்டாத் திருப்பாற் கடலான் சிலம்பு, சோதி மதி வந்து தவழ் சோலை மலையோடு இரண்டாய் மேதினியாள் கொங்கை நிகர் வேங்கடமே,' என இயைக்க.

போதில் இருப்பான் - தாமரை மலரிலிருப்பவனாகிய பிரமன், அடல் ஆன், வலிமை வாய்ந்த எருது, இபம் - (ஐராவதம் என் னும்) யானை, அடல் ஆன் ஊர்ந்தான் - சிவன், இபம் ஊர்ந் தான் - இந்திரன், சிலம்பு - மலை, சோதி மதி - ஒளி பொருந்திய சந்திரன், சோலை மலை - (பாண்டி நாட்டிலுள்ள) திருமாலிருஞ் சோலை மலை, மேதினியாள் - பூமி தேவி.

369. 'சோலைத் தரு மாதரை நட்டான்—தண்முல்லை ஆயர் தரும் மாதரை நட்டான் சார்பு, மாலைக் கோவித் திரியும் வைய கத்தோர் தம் பிறவி வேலைக்கு ஓர் வங்கமாம் வேங்கடமே,' என இயைக்க.

### சிலேடை

**370]** பிரமனும் திருவேங்கடமும் [எ

நாலு திசைமுகமு நண்ணுதலா லொண்கமல
மேலுறலால் வேதாவாம் வேங்கடமே—சாலுறையு
மண்மயக்கந் தேற்றுவித்தான் மாற்றுதல்போ லாரியனால்
உண்மயக்கந் தேற்றுவித்தா னூர்.

**371]** சிவபிரானும் திருவேங்கடமும் [அ

பாணிபிறை கொன்றை பணிசூடி மானேந்தி
வேணியரனைப்பொருவும் வேங்கடமே—ஆணிநிறப்
பீதாம் பரனர் பிரமர்வா ழண்டங்கண்
மீதாம் பரனர் விருப்பு.

---

சோலைத்தரு - பாரிசாத மரம், மாதரை நட்டான் - பூமியிற் கொண்டுவந்து நட்டவன். இது சத்தியபாமையின்பொருட்டுக் கண்ணன் இயற்றிய அருஞ்செயல். முல்லை - முல்லை நிலம், ஆயர்- இடையர், மாதரை - பெண்களை, நட்டான் - விரும்பிச்சேர்ந்த வன், சார்பு - இருப்பிடம், மாலைக்கோலி - மயக்கத்தைக் கொண்டு, வேலை - கடல், வங்கம் - மரக்கலம்.

370. 'சால் உறையும் மண் மயம் கம் தேற்று வித்தால் மாற்றுதல்போல், உள் மயக்கம் ஆரியனால் தேற்றுவித்தான் ஊர், நாலு திசை முகமும் நண்ணுதலால், ஒள் கமலம் மேல் உறலால் வேதா ஆம் வேங்கடமே,' என இயைக்க.

சால் - மண்ணாலான நீர்ப்பாத்திரம், உறையும் - தங்கியுள்ள, மண் மயம் கம் - மண் மயமான நீரை, தேற்று வித்து - தேற்றாங் கொட்டை, மாற்றுதல் - தெளியச் செய்தல், ஆரியனால் - ஆசாரி யனால், வேதா - பிரமன்.

சிலேடை: நான்கு திசைகளிலும் பொருந்திய முகங்களும், திருமாலின் உந்தித்தாமரையில் தோன்றுதலும் பிரமனுக்கு இயல்பு. நாற்றிசையிலும் உள்ள அன்பர் தன்னிடம் தொழ வருதலும், பல புண்ணிய தீர்த்தங்களைத் தன்மேல் பெற்று விளங்குதலும் உடைமையால் வேங்கடம் பிரமனையொத்தது என்க.

371 'ஆணி நிறப் பீத அம்பரனர்—பிரமர் வாழ் அண்டங்கள் மீது ஆம் பரனர் விருப்பு, பாணி பிறை கொன்றை பணி சூடி மான் ஏந்தி வேணி அரனைப் பொருவும் வேங்கடமே,' என இயைக்க.

**372]** இந்திரனும் திருவேங்கடமும் [கூ

மாலாய்ச் சசிதழுவி வச்சிரமேந் திப்புகர்மா
மேலாய்ப் புரந்தரனும் வேங்கடமே—நாலாய்க்
கிளர்வாகு மந்தரத்தான் கேட்டமரர் வேட்டுத்
தளர்வாகு மந்தரத்தான் சார்பு.

**373]** முருகனும் திருவேங்கடமும் [கம

வள்ளிபுணர்ந் தாறுமுக மன்னிமயின் மேற்கொளலால்
வெள்ளிலைவேல் வேள்போலும் வேங்கடமே—உள்ளினரைத்
தங்கமலப் பார்வையான் றன்னடியார் மேல்வைக்குஞ்
செங்கமலப் பார்வையான் சேர்வு.

---

ஆணி - மாற்றுயர்ந்த பொன், பீத அம்பரம் - பொன்னோடு இயைந்த பட்டாடை, பிரமர் - பிரமாக்கள், பரனர் - பரமபதத்தி லுள்ளவரான திருமால், விருப்பு - விரும்பித்தங்குமிடம், பாணி-நீர், பிறை - பிறைச் சந்திரன், கொன்றை - கொன்றை மலர் - கொன்றை மரம், பணி - பாம்பு, சூடி - தரித்து, வேணி - சடை, அரன் - சிவன், பொருவும் - ஒத்து விளங்கும்.

சிலேடை: வேணி - சிவபெருமானுக்கு ஜடையும், திருவேங் கடத்திற்குக் காடுமெனக்கொள்க.

372. 'நாலாய்க் கிளர் வாகு மந்தரத்தான்—அமரர் கேட்டு வேட்டுத் தளர்வு ஆகும் அந்தரத்தான் சார்பு, மால் ஆய், சசி தழுவி, வச்சிரம் ஏந்தி, புகர் மாமேல் ஆய், புரந்தரன் ஆம் வேங் கடமே,' என இயைக்க.

வாகு - தோள், மந்தரம் - மந்தரமலை, கேட்டு - (சிறப்பைக்) கேள்விப்பட்டு, வேட்டு - (சேர) விரும்பி, தளர்வு ஆகும் - சோர் வடையும், அந்தரத்தான் - பரம பதத்திலுள்ளவன்.

சிலேடை: மால் ஆய் - மால் என்னும் பெயரையுடைய தாய் - பெருமையை உடையதாய், சசி - இந்திராணி - சந்திரன், வச்சிரம் - வச்சிராயுதம் - வைரக்கற்கள், புகர்மா - ஐராவதம் என்னும் புள்ளிகளையுடைய யானை - காட்டு யானைகள், மேல் ஆய்-மேலேறி - மேலே தங்கியிருப்பதாய், புரந்தரன் - இந்திரன்.

373. 'உள்ளினரை மலப் பார் தங்க வையான்—தன் அடியார்மேல் வைக்கும் செங்கமலப் பார்வையான் சேர்வு, வள்ளி புணர்ந்து, ஆறு முகம் மன்னி, மயில் மேல் கொளலால், வெள் இலை வேல் வேள் போலும் வேங்கடமே,' என இயைக்க.

உள்ளினர் - தியானித்தவர், மலப்பார் - (காமம், வெகுளி மயக்கம் என்னும்) குற்றம் பொருந்திய உலகம், பார்வையான் - நோக்கத்தையுடையவனான திருமால், வேள் - மன்மதன்,

374] [கக

புள்ளரவ நீரரவம் போர்மா வரவமறு
வெள்ளரவ வெற்பாகும் வேங்கடமே—ஒள்ளரியாய்
மாகனகம் பத்தினார் வாய்கண்கை யுந்திபதங்
கோகனகம் பத்தினார் குன்று.

375] [கஉ

தூய்யசெம்பொற் கோயிற் சுடரெறிப்பக் கண்முகிழ்த்து
வெய்யவன்றேர் மாவிடறும் வேங்கடமே—ஐயிருநூ
றானமுகப் பாம்பணையா ரானிரைப்பி னூதிவருங்
கானமுகப் பாம்பணையார் காப்பு.

---

சிலேடை : வள்ளி - வள்ளியம்மை - வள்ளிக்கொடி, ஆறுமுகம் - ஆறுதிருமுகங்கள் - நதிகளின் உற்பத்தி, மேல் கொளல்-ஏறுதல் - தன்னிடம் கொண்டிருத்தல்.

374. 'ஒள் அரி ஆய் மா கன கம்பத்தினார்—வாய், கண், கை, உந்தி, பதம், கோகனகம் பத்தினார் குன்று, புள் அரவம், நீர் அரவம், போர் மா அரவம் அறு வெள் அரவ வெற்பு ஆகும் வேங்கடமே,' என இயைக்க.

ஒள் அரி ஆய் - சிறந்த சிங்க வடிவாய் (நரசிங்கமாய்), மாகன கம்பத்தினார் - பெரிய பளுவான தூணில் தோன்றியவர், உந்தி - கொப்பூழ், பதம் - பாதங்கள், கோகனகம் - தாமரை, பத்தினார் - பத்து உடையவர் ('தாமரை போலும் பத்து உறுப்புகள்' என்க.), அரவம் - ஒலி, புள் - பறவை, போர் மா - யானை, அறு - நீங்காத, வெள்ளரவ வெற்பு - சேஷாத்திரி. இது திருவேங்கடத்துக்குரிய திருநாமங்களுள் ஒன்று.

375. 'ஐயிருநூறு ஆன முகப் பாம்பு அணையார்—ஆன் நிரைப்பின் ஊதி வரும் கானம் உகப்பு ஆம் பணையார் காப்பு, தூய்ய செம்பொன் கோயில் சுடர் எறிப்ப, வெய்யவன் தேர் மா கண் முகிழ்த்து இடறும் வேங்கடமே,' என இயைக்க.

பாம்பு அணையார் - ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்டவர், ஆன் நிரை - பசுக்கூட்டம், கானம் - இசை, உகப்பு ஆம் - எல்லாருக்கும் மகிழ்ச்சியுண்டாகும், பணையார் - புல்லாங்குழலையுடையவர், காப்பு - உயிர்களைக் காத்தற்கு நிற்கும் இடம், எறிப்ப - வீச, வெய்யவன் - சூரியன், மா - குதிரை, கண் முகிழ்த்து - கண்களை மூடி, இடறும் - கால் இடறுகின்றதற்குக் காரணமான.

**376]** [கங.

மாண்டுபிறக் குந்துயர்போய் வைகுந்தம் புக்கவரு
மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே—பாண்டுமகன்
ஏறிரதப் பாகனு ரேத்துமடி யார்நாவில்
ஊறிரதப் பாகனு ரூர்.

**377]** [கச

கோலியொரு நான்கு குலமறையு நாற்றிசையும்
வேலியென நின்றேத்தும் வேங்கடமே—வாலிதனை
நண்பாவை யாதரித்தான் ஞானமுத லாழ்வார்கள்
வெண்பாவை யாதரித்தான் வெற்பு.

**378]** [கரு

தெள்ளியதோர் வீடருளுஞ் சீர்கேட்டுப் பொன்மலையும்
வெள்ளிமலை யும்பணியும் வேங்கடமே—புள்ளின்
கொடிவா கனத்தான் குளிர்ந்திருண்ட காரின்
வடிவா கனத்தான் வரை.

---

376. 'பாண்டு மகன் ஏறு இரதப் பாகனூர்—ஏத்தும் அடியார் நாவில் ஊறு இரதப்பாகு அனார் ஊர், மாண்டு பிறக்கும் துயர் போய் வைகுந்தம் புக்கவரும் மீண்டு தொழக் காதலிக்கும் வேங்கடமே,' என இயைக்க.

பாண்டு மகன் - அருச்சுனன், இரதப்பாகு - சுவையான சர்க்கரைப்பாகு, அனார் - போன்றவர், புக்கவர் - வந்து அடைந்தவர், காதலிக்கும் - விரும்பும்.

377. 'வாலிதனை நண்பா வையாது அரித்தான்—ஞான முதலாழ்வார்கள் வெண்பாவை ஆதரித்தான் வெற்பு, ஒரு நான்கு குலமறையும் நால் திசையும் வேலியெனக் கோலி நின்று ஏத்தும் வேங்கடமே,' என இயைக்க.

நண்பா - நண்பனாக, அரித்தான் - அழித்தவன், முதலாழ்வார்கள் - (பேயாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய மூன்று) மூன்றாழ்வார்கள், வெண்பாவை - வெண்பாக்களாலான நூல்களை, ஆதரித்தான் - விருப்போடு ஏற்றுக்கொண்டவன், வெற்பு - மலை, குல மறை - சிறந்த வேதங்கள், கோலி - சூழ்ந்து, ஏத்தும் துதிக்கும்.

378. 'புள்ளின் கொடி வாகனத்தான் — குளிர்ந்து இருண்ட காரின் வடிவு ஆகன்—கத்தான் வரை, தெள்ளியது ஓர் வீடு அருளும் சீர் கேட்டு, பொன் மலையும் வெள்ளி மலையும் பணியும் வேங்கடமே,' என இயைக்க.

**379]** [கசு

எப்பூ தலமு மிறைஞ்சித் திசைநோக்கி
மெய்ப்பூ சனைபுரியும் வேங்கடமே—கொப்பூழ்
இலகுமுண்ட கந்தரத்தா னீன்றளிக்கு மீரேழ்
உலகுமுண்ட கந்தரத்தா னூர்.

**380]** [கஎ

நோவினையு நோயினையு நோய்செய் வினையினையும்
வீவினையுந் தீர்த்தருளும் வேங்கடமே—மூவினைசெய்
மூவடிவாய்ப் பச்சென்றான் முன்னா ளகலிகைக்குச்
சேவடிவாய்ப் பச்சென்றான் சேர்பு.

---

புள்ளின்கொடி - கருடக்கொடி, புள்ளின் வாகனம் - கருட வாகனம், காரின் - மேகத்தின், வடிவு ஆகன் - வடிவமான திருமேனியுடையவன், நத்தான் - (பாஞ்சசன்னியம் எனும்) சங்கைத் தரித்தவன், வரை - மலை, தெள்ளியது - தெளிவுடையது, ஓர் வீடு - ஒப்பற்ற மோட்சமாகிய பரமபதம், அருளும் - கொடுத்தருளும், பொன் மலை - மேருகிரி, வெள்ளி மலை - கைலாய கிரி.

379. 'கொப்பூழ் இலகு முண்டகம் தரத் தான் ஈன்று அளிக்கும் ஈரேழ் உலகும் உண்ட கந்தரத்தான் ஊர், எப்பூதலமும் திசைநோக்கி இறைஞ்சி மெய்ப்பூசனை புரியும் வேங்கடமே,' என இயைக்க.

கொப்பூழ் - திருநாபி, இலகு - விளங்குகின்ற, முண்டகம் - செந்தாமரை மலர், தர - கொடுக்க, தான் ஈன்று - தானே சிருட்டித்து, அளிக்கும் - (தானே) பாதுகாக்கின்ற, கந்தரத்தான் - கழுத்தையுடையவன், எப்பூதலமும் - பூமியில் எவ்விடத்திலுள்ளவரும், இறைஞ்சி - வணங்கி, பூசனை - பூசை.

380. 'மூவினை செய் மூவடிவு ஆய், பச்சென்றான்—முன் நாள் அகலிகைக்குச் சேவடி வாய்ப்பச் சென்றான் சேர்பு, நோவினையும், நோயினையும், நோய் செய் வினையினையும், வீவினையும் தீர்த்து அருளும் வேங்கடமே,' என இயைக்க.

மூவினை - (படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய) மூன்று தொழில்கள், மூவடிவு - (பிரமன், திருமால், சிவன் என்னும்) மூன்று வடிவம், பச்சென்றான் - பசுமையாயிருக்கும் நிறத்தை உடையவன், சேவடி வாய்ப்ப - (தனது) சிவந்த திருப்பாதம் சித்திக்கும்படி, சென்றான் - (விசுவாமித்திரருடன் காட்டில்) சென்ற திருமால், சேர்பு - தங்கியிருக்குமிடம், நோவு - மன வருத்தம், நோய் - உடற்பிணி, வீவு - மரண வேதனை, வினை காரியம்.

381] [கஅ

பித்துமல டூமைமுடம் பேய்குருடு கூன்செவிடு
மெய்த்துயர்நோய் தீர்த்தருளும் வேங்கடமே—பத்தருக்கு
வந்ததுக்கங் காப்பான் மலருந் தியினுலகந்
தந்ததுக்கங் காப்பான் றலம்.

382] [கசு

வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி
மேடத்தைப் பார்த்துறுக்கும் வேங்கடமே—கூடத்துக்
கம்பவள மாவென்றான் காசினிக்கும் வெண்ணெய்க்குஞ்
செம்பவள மாவென்றான் சேர்வு.

383] [உ0

தாவிவரும் வானரங்க டண்குவட்டிற் கற்கடக
மேவிவரக் கண்டோடும் வேங்கடமே—காவிரிசூழ்

---

381. 'பத்தருக்கு வந்த துக்கம் காப்பான்—மலர் உந்தியின் உலகம் தந்து, அதுக்கு அங்காப்பான் தலம், பித்து, மலடு, ஊமை, முடம், பேய், குருடு, கூன், செவிடு, மெய்த்துயர் நோய் தீர்த்து அருளும் வேங்கடமே,' என இயைக்க.

பத்தர் - அன்பர், மலர் உந்தியின் - நாபித்தாமரையிலிருந்து, தந்து - படைத்து, அங்காப்பான் - (விழுங்க) வாய் திறப்பவன், தலம் - இடம், பித்து - பைத்தியம், மலடு - பிள்ளையில்லாத குறை, மெய்த்துயர் நோய் - உடலுக்குத் துன்பம் தரும் வியாதிகள்.

382. 'கூடத்துக் கம்ப வளமா வென்றான்—காசினிக்கும் வெண்ணெய்க்கும் செம்பவளம் ஆ என்றான் சேர்வு, வாடப் பசித்த வரி உழுவை, மேடத்தைப் பார்த்து, வாலாட்டி உறுக்கும் வேங்கடமே,' என இயைக்க.

கூடம் - யானை கட்டும் சாலை, கம்பம் - யானை கட்டும் தறி, வளமா - (குவலயாபீடம் என்னும்) கொழுத்த யானை, காசினி - பூமி, செம்பவளம் - சிவந்த பவனம் போன்ற திருவாய், ஆ என்றான் - ஆவென்று திறந்தருளிய திருமால், சேர்வு - சேர்ந்துள்ள இடம், உழுவை - புலி, மேடத்தை - (வானில் இயங்கும் ஆடு போன்ற) மேஷராசியை, உறுக்கும் - கோபிக்கும்.

383. 'காவிரி சூழ் பொன் திருவரங்கத்தான்—போதன், சிவன் என்னும் மற்று இருவர் அங்கத்தான் வாழ்வு, தாவி வரும் வானரங்கள் தண் குவட்டில் கற்கடகம் மேவி வரக் கண்டு ஓடும் வேங்கடமே,' என இயைக்க.

பொற்றிருவ ரங்கத்தான் போதன் சிவனென்னு
மற்றிருவ ரங்கத்தான் வாழ்வு.

384] [உக

ஒண்சிந்து ரத்தைவெறுத் தூடும் பிடிவேழம்
விண்சிங்கங் கண்டணைக்கும் வேங்கடமே—எண்சிந்தைக்
கோரா விருந்தா னொருநாள் விதுரனுக்கு
வாரா விருந்தான் வரை.

385] [உஉ

மாதுமடக் கன்னிகழை வந்தணுகிக் கம்பத்தின்
மீதுநடிப் பாளொக்கும் வேங்கடமே—ஊதுகுழற்
பாலன்பா லாக்குவித்தான் பஞ்சவர்க்கா நூற்றுவரைக்
காலன்பா லாக்குவித்தான் காப்பு.

---

பொன் - அழகு, போதன் - தாமரைமலரிலுள்ள பிரமன், அங்கத்தான் - தனக்கு உறுப்பாக உடைய திருமால், வாழ்வு - வாழுமிடம், தண் குவடு - குளிர்ச்சியான சிகரம், கற்கடகம் - (நண்டு போன்ற) கர்க்கடகராசி, மேவி - பொருந்தி.

384. 'எண் சிந்தைக்கு ஓரா இருந்தான்—ஒரு நாள் விதுரனுக்கு வாரா விருந்தான் வரை, ஒள் சிந்துரத்தை வெறுத்து ஊடும் பிடி வேழம் விண் சிங்கம் கண்டு அணைக்கும் வேங்கடமே,' என இயைக்க.

எண் சிந்தை - தியானிக்கும் மனம், ஓரா - ஆராய இயலாத படி, வாரா விருந்தான் - வருவதற்கு அருமையான விருந்தினன், வரை - மலை, ஒள் சிந்துரம் - சிறப்புடைய ஆண் யானை, ஊடும் - பிணங்கும், பிடி வேழம் - பெண் யானை, விண் சிங்கம் - ஆகாயத்தில் (உள்ள சிங்க வடிவான) சிங்கராசி, அணைக்கும் - (அச்சத்தால்) தழுவிக்கொள்ளும்.

385. 'ஊது குழற்பால் அன்பால் ஆக் குவித்தான்—பஞ்சவர்க்கா(க) நூற்றுவரைக் காலன்பால் ஆக்குவிததான் காப்பு, மாது மடக்கன்னி கழை வந்து அணுகிக் கம்பத்தின்மீது நடிப்பாள் ஒக்கும் வேங்கடமே,' என இயைக்க.

குழற்பால் - குழல் இசையில், ஆ - பசுக்கள், குவித்தான் - (தன்னிசை சூழும்படி) திரட்டியவன், பஞ்சவர் - பாண்டவர் ஐவர், நூற்றுவர் - (துரியோதனன் முதலிய) நூறு பேர், காலன்பால் - யமனிடத்தில், ஆக்குவித்தான் - சேர்ப்பித்தவன், மாது மடக் கன்னி - அழகும் இளமையுமுடைய கன்னிப்பெண் வடிவ்மான கன்னியா ராசி, கழை - (மலைமேலுள்ள) மூங்கிலின் உச்சியில்,

386] [உ௩

மன்னு குடிக்குறவர் வானூர் துலாத்திடையே
மின்னு மணிநிறுக்கும் வேங்கடமே—என்னுள்
அரவிந்தப் போதகத்தா னன்பா லழைத்த
கரவிந்தப் போதகத்தான் காப்பு.

387] [உ௪

கொல்லைக் குறவர் குளிர்மதிமா னைக்ககன
வில்லைக் குனித்தெய்யும் வேங்கடமே—கல்லை
அரிவைவடி வாக்கினு னன்னமாய் வேத
விரிவைவடி வாக்கினன் வெற்பு.

388] [உ௫

தேனேறித் தேன்வைக்குந் திண்கழைமேல் விண்மகர
மீனேறி வேள்கொடியாம் வேங்கடமே—வானேறித்

---

நம்பத்தின் மீது நடிப்பாள் - மூங்கிலின்மேல் ஏறி நடிக்கின்றவளாகிய கழைக்கூத்தி.

386. 'என் உள் அரவிந்தப்போது அகத்தான்—அன்பால் அழைத்த கர விந்தப் போதகத்தான் காப்பு, மன்னு குடிக் குறவர் வான் ஊர் துலாத்து இடையே மின்னும் மணி நிறுக்கும் வேங்கடமே,' என இயைக்க.

உள் - மனமாகிய, அரவிந்தப்போது அகத்தான் - தாமரை மலரில் தங்கியிருப்பவன், கர விந்தப்போதகத்தான்-துதிக்கையை உடைய மலைபோன்ற கஜேந்திரன் என்னும் யானைக்கு அருள்செய்தவன், மன்னு - நிலை பெற்ற, ஊர் - தவழ்கின்ற, துலாத்து இடையே - (தராசு வடிவான) துலா ராசியிலே.

387. 'கல்லை அரிவை வடிவு ஆக்கினுன்—அன்னமாய் வேத விரிவை வடி வாக்கினன் வெற்பு, கொல்லைக் குறவர் குளிர் மதி மானைக் ககன வில்லைக் குனித்து எய்யும் வேங்கடமே,' என இயைக்க.

கல்லை - (கௌதமர் இட்ட சாபத்தால் அகலிகை மாறிக் கிடந்த) கல்லை, அரிவை வடிவு - பெண் வடிவம், வடி - தெளிவாகக் கூறிய, வாக்கினன் - திருவாக்கையுடையவனான திருமால், வெற்பு - திருமலை, மதி மான் - சந்திரனிடத்திலுள்ள (களங்கமாகிய) மான் வடிவத்தை, ககனவில் - வானவில், குனித்து - வளைத்து, எய்யும் - (அம்பைச்) செலுத்தும்.

388. 'வான் நீ முகன் நாகத்து ஏறி இருப்பார்—சேவடிக்கு ஆளானவனைக் காமுகன் ஆகத் திருப்பார் காப்பு, தேன் ஏறித்

தீமுகனு கத்திருப்பார் சேவடிக்கா ளானவனைக்
காமுகனு கத்திருப்பார் காப்பு.

389] [உகூ

ஒண்கொம்பிற் றேனிறா லூர்பிறைக்கோட் டாலுடைந்து
விண்கும்ப வாய்நிறைக்கும் வேங்கடமே—வண்கும்ப
கம்பத்தா னைக்கடுத்தார் காரரக்கர் போர்மாளக்
கம்பத்தா னைக்கடுத்தார் காப்பு.

390] [உசா

கூனலிள வெண்குருகு கோனேரி யில்விசும்பூர்
மீனநிழ லைக்கொத்தும் வேங்கடமே—கானகத்துப்
பொன்னு ருழையெய்தார் பூங்கழலே தஞ்சமென
உன்னு ருழையெய்தா ரூர்.

---

தேன் வைக்கும் திண் கழைமேல் விண் மகரமீன் ஏறி வேள் கொடியாம் வேங்கடமே,' என இயைக்க.

வான் - பரமபதத்தில், தீமுகன் நாகத்து - நச்சுத் தீயைக் கக்கும் முகங்களையுடைய ஆதிசேஷன்மீது, ஏறி இருப்பார் - ஏறி அமர்பவரும், ஆளானவன் - அடிமையானவன், காமுகன் - காம முடையவன், தேன் - தேனீக்கள், ஏறி - மொய்த்து, தேன் வைக்கும் - தேனைச் சேகரித்துக் கூட்டில் வைக்கின்ற, திண்கழைமேல் - வலிய மூங்கிலின்மீது, மகர மீன் - (சுறாமீன் வடிவான) மகரராசி, ஏறி - தவழ்ந்து, வேள் - மன்மதன்.

389. 'வண் கும்ப கம்பத்து ஆனைக்கு அடுத்தார்—கார் அரக்கர் போர் மாளக் கம் பத்தானைக் கடுத்தார் காப்பு, ஒண் கொம்பில் தேன் இறால் ஊர் பிறைக் கோட்டால் உடைந்து விண் கும்ப வாய் நிறைக்கும் வேங்கடமே,' என இயைக்க.

வண் கும்பம் - வளமான மத்தகம், கம்பத்து - நடுக்கத்தை யுடைய, ஆனைக்கு - கஜேந்திரனுக்கு, அடுத்தார் - வந்து அருள் செய்தவர், கம் பத்தானை - பத்துத்தலை இராவணனை, கடுத்தார் - அழித்தவர், ஒண் கொம்பில் - சிறந்த மரக்கிளைகளில், தேன் இறால் - தேன் கூடு, பிறைக்கோட்டால் பிறைச்சந்திரனது வளைந்த நுனியால், விண்கும்பம் - ஆகாயத்தில் உள்ள (குட வடிவான) கும்பராசி.

390. 'கானகத்துப் பொன் ஆர் உழை எய்தார்—பூங்கழலே தஞ்சம் என உன்னு ருழை எய்தார் ஊர், கூனல் இள வெண் குருகு கோனேரியில் விசும்பு ஊர் மீன நிழலைக் கொத்தும் வேங்கடமே,' என இயைக்க,

391] [உஅ

மண்மூலந் தாவென்று மந்திகடு வற்குரைப்ப
விண்மூலங் கேட்டேங்கும் வேங்கடமே—ஒண்மூல
வேதத் திருக்குழையார் வெய்யோ னிரண்டனைய
சீதத் திருக்குழையார் சேர்வு.

392] [உகூ

நாலவிட்ட பொன்னூச னன்னுதலா ருந்துதொறு
மேலவிட்டந் தொட்டிழியும் வேங்கடமே—ஆலமிட்ட
பொற்புக் களங்கறுத்தார் போர்சரிய வாணன்றோள்
வெற்புக் களங்கறுத்தார் வீடு.

பொன் ஆர் - அழகு பொருந்திய, உழை - (மாரீசனுகிய மாய) மானை, எய்தார் - அம்பால் அடித்து வீழ்த்தியவர், பூங் கழல் - அழகிய திருவடிகள், தஞ்சம் - அடைக்கலம், உன்னு ருழை - நினையாதவரிடம், எய்தார் - அடையாதவர், கூனல் - வளைவு, குருகு - நாரை, கோனேரி - கோனேரித் தீர்த்தம், விசும்பு ஊர் - ஆகாயத்தில் தவழ்கின்ற, மீனநிழல் - மீனராசியின் நிழலை.

391. 'ஒண் மூல வேதத்து இருக்கு உழையார்—இரண்டு வெய்யோன் அனைய சீதத் திருக்குழையார் சேர்வு, 'மண் மூலம் தா,' என்று மந்தி கடுவற்கு உரைப்ப, விண் மூலம் கேட்டு ஏங்கும் வேங்கடமே,' என இயைக்க.

ஒண் மூல வேதத்து - சிறந்த முதல் நூலாயுள்ள வேதத்தின், இருக்கு உழையார் - மந்திரங்களிற் பொருந்தியிருப்பவர், வெய்யோன் - சூரியன், சீதத் திருக்குழையார் - குளிர்ச்சிபொருந்திய திருக்குண்டலங்களைத் தரித்தவரான திருமால், சேர்வு - சேருமிடம், மண் மூலம் - பூமியில் உள்ள கிழங்கு, மந்தி - பெண் குரங்கு, கடுவற்கு - ஆண் குரங்கிற்கு, விண் மூலம் - வானிலுள்ள மூல நட்சத்திரம், ஏங்கும் - கலக்கமடையும்.

392. 'ஆலம் இட்ட பொற்புக் களம் கறுத்தார்—போர் சரிய வாணன் தோள் வெற்புக் களங்கு அறுத்தார் வீடு, நால விட்ட பொன் ஊசல் நல் நுதலார் உந்துதொறும் மேல் அவிட்டம் தொட்டு இழியும் வேங்கடமே,' என இயைக்க.

ஆலம் இட்ட - விஷத்தைக்கொண்ட, பொற்பு - அழகு, களம் - கழுத்து, கறுத்தார் - கருநிறமடைந்தவரான சிவபெருமான், போர் சரிய - யுத்தத்தில் தோல்வியடைய, வாணன் - பாணாசுரன், தோள் வெற்புக் களங்கு - தோள் மலைகளாகிய குற்றத்தை, அறுத்தார் - அறுத்தவராகிய திருமாலின், வீடு -

393] [௩௦

பானிறங்கொ டெங்கினிளம் பாளைவிரி யச்சுனையின்
மீனினங்கொக் கென்றொளிக்கும் வேங்கடமே—வானிமிர்ந்த
வெள்ளத்துக் கப்பாலான் மெய்ப்பரம யோகியர்தம்
உள்ளத்துக் கப்பாலா னூர்.

394] [௩௧

கோம்பணியுந் தேமாங் குயில்கருடன் போற்கூவ
வெம்பணிகள் புற்றடையும் வேங்கடமே—வம்பணியும்
விண்ணிணைந்து காப்பார் மிசைவைத்தார் பத்தரைத்தம்
உண்ணிணைந்து காப்பா ருவப்பு.

---

தங்குமிடம், நாலவிட்ட - தொங்கவிட்ட, ஊசல் - ஊஞ்சல், நல்நுதலார் - அழகிய நெற்றியையுடைய பெண்டிர், உந்துதொறும் - தள்ளியாடும் போதெல்லாம், மேல் அவிட்டம் - வானில் உள்ள அவிட்ட நட்சத்திரம்.

393. 'வான் நிமிர்ந்த வெள்ளத்துக் கப்பு ஆலான்—மெய்ப் பரம யோகியர்தம் உள்ளத்துக்கு அப்பாலான் ஊர், பால் நிறம் கொள் தெங்கின் இளம்பாளை விரிய, சுனையில் மீன் இனம் கொக் கென்று ஒளிக்கும் வேங்கடமே,' என இயைக்க.

வான் நிமிர்ந்த - ஆகாயமளவும் பொங்கி எழுந்த, வெள்ளத்து - நீர்ப் பிரளயத்தில், கப்பு ஆலான் - ஆதாரமாகிய ஆலிலையின் மேல் பள்ளி கொண்டவன், தெங்கின் - தென்னை மரத்தின், இனம் - கூட்டம், கப்பு - ஆதாரம் (ஸ்ரீ வசன பூஷணம், 224).

394. 'வம்பு அணியும் விண்ணின் ஐந்து கா, பார்மிசை வைத்தார்—பத்தரைத் தம் உள் நினைந்து காப்பார் உவப்பு, கொம்பு அணியும் தேமாங்குயில் கருடன்போற்கூவ, வெம்பணிகள் புற்று அடையும் வேங்கடமே,' என இயைக்க.

வம்பு அணியும் - வாசனையைக் கொண்ட, விண்ணின் ஐந்து கா - தேவலோகத்திலுள்ள (சந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம், அரிசந்தனம் என்னும்) ஐந்து தருக்களில் ஒன்றாகிய பாரிஜாதத்தை, பார்மிசை வைத்தார் - (சத்தியபாமையின் வேண்டுகோளால்) பூமியில் நாட்டியவர், பத்தரை - அடியவரை, உள் - மனத்தில், உவப்பு - மகிழ்ச்சிக்குரிய இடம், கொம்பு அணியும் - கிளைகளையுடைய, தேமாங்குயில் - இனிய மாமரத்திலுள்ள கோகிலம், வெம்பணிகள் - கொடிய பாம்புகள்.

395] [௩௨

தெங்கிளநீர் வீழச் சிதறுமணி யைக்கரிகள்
வெங்கனலென் றஞ்சிப்போம் வேங்கடமே—பைங்கழையின்
மாண்டாரைப் பண்டழைத்தார் மாமறையோன் பாற்றோன்றி
மாண்டாரைப் பண்டழைத்தார் வாழ்வு.

396] [௩௩

அங்கயலின் மேக மதிரப் பெரும்பாந்தள்
வெங்கயமென் றங்காக்கும் வேங்கடமே—பங்கயனோ
டம்புவ னங்கடந்தா ரம்புயத்து மங்கையொடு
வெம்புவ னங்கடந்தார் வெற்பு.

397] [௩௪

திங்களிறு மாந்தலவத் தீம்பாற் கவளமென்று
வெங்களிறு கைநீட்டும் வேங்கடமே—பொங்கமரில்

---

395. 'பைங்கழையின் மாண் தாரைப் பண் தழைத்தார்—மாமறையோன்பால் தோன்றி மாண்டாரைப் பண்டு அழைத்தார் வாழ்வு, தெங்கு இளநீர் வீழச் சிதறும் மணியைக் கரிகள் வெங்கனல் என்று அஞ்சிப்போம் வேங்கடமே,' என இயைக்க.

பைங்கழையின் - பசுமையான புல்லாங்குழலால், மாண் தாரைப் பண்-சிறந்த ஒழுங்கமைந்த இசையை, தழைத்தார்-எழச் செய்தவர், தோன்றி மாண்டாரை - பிறந்து இறந்த பிள்ளைகளை, பண்டு - பழைய காலத்தில் (கிருஷ்ணாவதாரத்தில்), அழைத்தார் - வரவழைத்தவரான திருமால், மணியை - இரத்தினங்களை, கரிகள் - யானைகள். (தீயைக் காணின் யானை அஞ்சுவது மரபு.)

396. 'பங்கயனோடு அம்புவனங்கள் தந்தார்—அம்புயத்து மங்கையொடு வெம்பு வனம் கடந்தார் வெற்பு, அங்கு அயலில் மேகம் அதிர, பெரும்பாந்தள் வெங்கயம் என்று அங்காக்கும் வேங்கடமே,' என இயைக்க.

பங்கயன் - பிரமன், அம் புவனங்கள் - அழகிய உலகங்கள், தந்தார் - சிருஷ்டித்தவர், அம்புயத்து மங்கை - தாமரையில் அமரும் இலக்குமியவதாரமான சீதை, வெம்பு வனம் - வெப்பம் வீசும் காடு, வெற்பு - மலை, அயலில் - அருகில், அதிர - இடியிடிக்க, பெரும்பாந்தள் - பெரிய மலைப் பாம்புகள், வெங்கயம் - கொடிய யானை, அங்காக்கும் - (அவ்யானைகளை விழுங்கக் கருதி) வாயைத் திறக்கும்.

397. 'பொங்கு அமரில் ஆர்த்த வலம்புரியார்—ஆட்பட்டார் செய்த பிழை பார்த்து அவலம் புரியார் பற்று, திங்கள்

ஆர்த்த வலம்புரியா ராட்பட்டார் செய்தபிழை
பார்த்த வலம்புரியார் பற்று.

398] [௩௫

அம்புலியின் வாழ்மா னதிருங் குரற்பகுவாய்
வெம்புலியைக் கண்டேங்கும் வேங்கடமே—நம்புமெனை
வீங்கூத்தைக் கண்டிருப்பார் விண்ணோர் நரர்பிறந்து
சாங்கூத்தைக் கண்டிருப்பார் சார்பு.

399] [௩௬

கண்ணால் வெடித்த கழைமுத்தங் கார்துளைத்து
விண்ணாலி யோடுதிரும் வேங்கடமே—எண்ணார்
கலங்கவரு மஞ்சனையார் கான்முளையை யூர்ந்தார்
சலங்கவரு மஞ்சனையார் சார்பு.

---

இறுமாந்து உலவ, தீம்பால் கவளம் என்று வெங்களிறு கை நீட்டும் வேங்கடமே,' என இயைக்க.

பொங்கு அமரில் - மிகுபோரில், ஆர்த்த - முழக்கிய, வலம்புரியார் - (பாஞ்சசன்னியம் என்னும்) வலம்புரி சங்கை ஏந்தியவர், ஆட்பட்டார் - அடிமையானவர், அவலம் - துன்பம், பற்று - விருப்பிற்குரிய இடம், திங்கள் - சந்திரன், இறுமாந்து - செருக்கடைந்து, தீம்பால் கவளம் - இனிய பாற்சோற்று உருண்டை, வெங்களிறு - கொடிய மதயானை, கை - துதிக்கை.

398. 'நம்பும் எனை வீங்கு ஊத்தைக்கண் இருப்பார்—விண்ணோர் நரர் பிறந்து சாம் கூத்தைக் கண்டு இருப்பார் சார்பு, அம்புலியின் வாழ்மான், அதிரும் குரல் பகுவாய் வெம்புலியைக் கண்டு ஏங்கும் வேங்கடமே,' என இயைக்க.

நம்பும் - (தம்மையே புகலிடமாக) நம்பிய, வீங்கு ஊத்தைக் கண் - அதிகரிக்கும் அழுக்காகிய பிறவியில், விண்ணோர் - தேவர், நரர் - மனிதர், சாம் - இறக்கும், சார்பு - இருப்பிடம், அம்புலியில் - சந்திரனிடத்தில், வாழ்மான் - தங்கியுள்ள களங்கமாகிய மான், பகுவாய் - திறந்த வாய்.

399. 'எண்ணார் கலங்க வரும் அஞ்சனையார் கான்முளையை ஊர்ந்தார்—சலம் கவரும் மஞ்சு அனையார் சார்பு, கண்ணால் வெடித்த கழை முத்தம் கார் துளைத்து விண் ஆலியோடு உதிரும் வேங்கடமே', என இயைக்க.

400] [௩௱௭

செல்லுக்கு மேற்செல்லுந் திண்ணியவேய் வாசவனார்
வில்லுக்கு வாளியாம் வேங்கடமே—எல்லுக்குள்
அந்தகா ரம்படைத்தா ராரழல்வா யம்பினால்
வெந்தகா ரம்படைத்தார் வெற்பு.

401] [௩௱௮

பொன்கமழுங் கற்பகத்தின் பூங்கா வணத்துக்கு
மென்கமுகங் காலாகும் வேங்கடமே—நன்கமரும்
ஊரத் திகிரியா ரூதுந் திகிரியார்
வீரத் திகிரியார் வெற்பு.

---

எண்ணார் - பகைவர், அஞ்சனையார் - அனுமன் தாயார், கான்முளையை - புதல்வனை, ஊர்ந்தார் - வாகனமாக ஏறி நடத்தியவர், சலம் கவரும் மஞ்சு - நீரை முகக்கும் மேகம், அனையார் - ஒத்தவராகிய திருமால், கண்ணால் - கணுக்களில், கழை - மூங்கில், முத்தம் - முத்து, ஆலி - மழை நீர்க்கட்டி.

400. எல்லுக்குள் அந்தகாரம் படைத்தார்—ஆர் அழல் வாய் அம்பினால் வெந்த கார் அம்பு அடைத்தார் வெற்பு, செல்லுக்கு மேல் செல்லும் திண்ணிய வேய் வாசவனார் வில்லுக்கு வாளி ஆம் வேங்கடமே,' என இயைக்க.

எல்லுக்குள் - பகற்பொழுதிற்குள், அந்தகாரம் படைத்தார்-(பாரதப் போரில் அருச்சுனன்பொருட்டுச் சக்கரத்தை ஏவிச் சூரியனை மறைத்து) இருளை உண்டாக்கிய கிருஷ்ணர், ஆர் அழல் வாய் - நிறைந்த தீயை வாயிலுடைய, வெந்த - பொங்கிய, கார் அம்பு அடைத்தார் - கரிய நிறமான நீரையுடைய கடலை அணை கட்டியவர், செல் - மேகம், வேய் - மூங்கில், வாசவனார் - இந்திரனார், வாளி - அம்பு.

401. 'நன்கு அமரும் ஊர் அத்திகிரியார்—ஊதும் திகிரியார்—வீரத் திகிரியார் வெற்பு, மெல் கமுகு பொன் கமழும் கற்பகத்தின் பூங்காவணத்துக்கு அம் கால் ஆகும் வேங்கடமே,' என இயைக்க.

அமரும் - பொருந்திய, ஊர் அத்திகிரியார் - (காஞ்சிபுரத்தில் உள்ள) அத்திகிரி என்னும் ஊரையுடையவரும், திகிரி - புல்லாங்குழல் - சக்கராயுதம், கமுகு - பாக்கு மரங்கள், பொன் - அழகு, கமழும் - வாசனை வீசும், பூங்காவணம்-(வானுலகிலுள்ள) கற்பகச் சோலையாகிய பந்தலுக்கு, அம் கால் - (நட்டு வைத்த) அழகிய கால்கள்,

402] [௩௯

தண்ணிலைக்கண் மூங்கிற் றலைதொடுத்த தேனிறால்
விண்ணிலைக்கண் ணாடியாம் வேங்கடமே—உண்ணிலைக்குஞ்
சோதி வணங்கரியார் தூயசன காதியரும்
ஓதி வணங்கரியா ரூர்.

403] [௪௦

தண்கமுகின் பாளை தடங்கதிரின் செல்வனுக்கு
வெண்கவரி போலசையும் வேங்கடமே—ஒண்கடல்சூழ்
வண்டுவரை நாட்டினான் மத்தாக வாரிதியுட்
பண்டுவரை நாட்டினான் பற்று.

404] [௪௧

அங்கதிருங் கான்யாற் றடர்திவலை யானனைந்து
வெங்கதிருந் தண்கதிராம் வேங்கடமே—செங்கதிர்வேற்
சேந்தனத்த மைந்தான் றிருத்தாதை விற்கிளையாள்
பூந்தனத்த மைந்தான் பொருப்பு.

---

402. 'உள் நிலைக்கும் சோதி—வ(ண்)ணம் கரியார்—தூய சனகாதியரும் ஓதி வணங்க அரியார் ஊர், தண் இலைக் கண் மூங்கில் தலை தொடுத்த தேன் இறால் விண் நிலைக்கண்ணாடி ஆம் வேங்கடமே,' என இயைக்க.

உள் - (அடியவர்) மனத்தில், சோதி - ஒளி மயமானவர், வண்ணம் - நிறம், சனக ஆதியர் - சனகர் முதலியவர், ஓதி - துதித்து, தண் இலைக் கண் மூங்கில் தலை - குளிர்ச்சியான இலைகளையும் கணுக்களையும் உடைய மூங்கிலின் உச்சியில், தொடுத்த - (தேனீக்கள்) கட்டிய, தேன் இறால் - தேன் கூடு, விண் நிலைக் கண்ணாடி ஆம் - தேவருலகத்து நிலைக்கண்ணாடியென விளங்கும்.

403. 'ஒள் கடல் சூழ் வள் துவரை நாட்டினான்—பண்டு வாரிதியுள் வரை மத்து ஆக நாட்டினான் பற்று, தண் கமுகின் பாளை தடங்கதிரின் செல்வனுக்கு வெள் கவரி போல் அசையும் வேங்கடமே,' என இயைக்க.

ஒள் கடல் - சிறந்த சமுத்திரம், வள் துவரை - வளமார்ந்த துவாரகையாகிய, நாட்டினான் - நாட்டையுடையவன், பண்டு - முற்காலம், வாரிதி - கடல், வரை - மந்தரமலை, பற்று - விருப்பத்திற்குரிய இடம், கமுகு - பாக்கு மரம், தடங்கதிரின் செல்வன் - சூரியன், வெள் கவரி - வெண்சாமரை.

404. 'செங்கதிர் வேல் சேந்தன், அத்தம் ஐந்தான் திருத்தாதை விற்கு இளையாள் பூந்தனத்து அமைந்தான் பொருப்பு,

405] [சஉ

சேணுலவு திங்களெனுஞ் சித்தசவேள் வெண்குடைக்கு
வேணுவொரு காம்பாகும் வேங்கடமே—கோணுமனத்
தென்னையா ளாகத்தா னின்னருள்செய் தான்கமல
மின்னையா ளாகத்தான் வெற்பு.

406] [சங

தேவருடை யைந்தருவின் செந்தே னிறால்கிழிய
மீவருடை பாய்கின்ற வேங்கடமே—மூவடிமண்
போயிரந்தா ரத்தர் புனையு மொருபதினு
றாயிரந்தா ரத்த ரகம்.

---

அங்கு அதிரும் கான் யாற்று அடர் திவலையால் நனைந்து வெங்கதிரும் தண்கதிராம் வேங்கடமே,' என இயைக்க.

கதிர் - கிரணம், சேந்தன் - முருகன், அத்தம் ஐந்தான் - ஐந்து கரங்களையுடையவனான விநாயகன், தாதை - தந்தை (சிவபிரான்), வில் - சிவதனுசு, இளையாள் - இளையாதவளான சீதை, பூந்தனம் - அழகிய கொங்கை, பொருப்பு - மலை, அதிரும் - முழங்கும், கான் யாற்று - காட்டாற்றின், அடர்திவலை - நெருங்கிய நீர்த்துளிகள், வெங்கதிரும் - சூரியனும், தண்கதிர் - சந்திரன்.

ஜனகரிடமிருந்த சிவதனுசு, சீதையால் எளிதாக எடுக்கக் கூடியதாயிருந்தது என்பர். ஆதலால், சீதை 'விற்கு இளையாள்' எனக் கூறப்பட்டாள் என்க.

405. 'கோணும் மனத்து என்னை ஆள் ஆகத் தான் இன்னருள் செய்தான்—கமல மின்னை ஆள் ஆகத்தான் வெற்பு, சேண் உலவு திங்கள் எனும் சித்தசவேள் வெள்குடைக்கு வேணு ஒரு காம்பாகும் வேங்கடமே,' என இயைக்க.

கோணும் - மாறுபடும், கமலமின்னை - இலக்குமியை, ஆள் - ஆள்கின்ற, ஆகத்தான் - மார்பையுடையவனான திருமால், சேண் - ஆகாயம், திங்கள் எனும் - சந்திரன் என்று சொல்லப்படும், சித்தசவேள் - மன்மதனுடைய, வேணு - மூங்கில்.

406. 'போய் மூவடி மண் இரந்தார்—அத்தர்—புனையும் ஒரு பதினுயிரம் தாரத்தர் அகம், தேவருடை ஐந்தருவின் செந்தேன் இறால் கிழிய வருடை மீப் பாய்கின்ற வேங்கடமே,' என இயைக்க.

போய் - (மாபலிச் சக்கரவர்த்தியிடம்) சென்று, அத்தர் - (எவ்வுயிர்க்கும்) தந்தையார், புனையும் - புனைந்து கூறும், தாரத்தர் - மனைவியரையுடையவர், அகம் - இருப்பிடம், தேவருடை - தேவர்களுடைய, ஐந்தருவின் - ஐந்து விருட்சங்களிற் கட்டப்

407] [சஎ

வன்குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துக்கு
மென்குறிஞ்சித் தேன்மாறும் வேங்கடமே—நன்குறிஞ்சிப்
பேய்த்தநஞ்சு வைத்தார் பிறர்க்கமுதீந் தீசனுக்கு
வாய்த்தநஞ்சு வைத்தார் வரை.

408] [சஅ

வாவுகவின் மந்திநுகர் மாங்கனிக்குக் கற்பகத்தின்
மேவுகவி கைநீட்டும் வேங்கடமே—தாவுகடல்
வேவவிலங் கைக்கொண்டார் வீடணனை வைத்தொழிந்தார்
சாவவிலங் கைக்கொண்டார் சார்பு.

409] [சகூ

வெள்ளியகன் மீதே விடர்முளைத்த செங்காந்தள்
வெள்ளி யகல்விளக்காம் வேங்கடமே—வெள்ளியெனும்

---

பெற்ற, செந்தேன் இறால் - செம்மையான தேன் கூடு, வருடை - மலையாடுகள், மீப்பாய் - மேலே பாய்கின்ற.

407. 'பேய்த் தநம் நன்கு உறிஞ்சிச் சுவைத்தார்—பிறர்க்கு அமுது ஈந்து, ஈசனுக்கு வாய்த்த நஞ்சு வைத்தார் வரை, வன் குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துக்கு மென்குறிஞ்சித் தேன் மாறும் வேங்கடமே,' என இயைக்க.

பேய்த் தனம் - பேயாகிய பூதனையின் கொங்கையை, பிறர்க்கு - மற்றத் தேவர்க்கு, ஈசனுக்கு - சிவபிரானுக்கு, வாய்த்த நஞ்சு வைத்தார் - பொருந்திய விஷத்தை உரியதாக்கி வைத்தவரான திருமால், வரை - மலை, வன் குறிஞ்சி மாதர்பால் - வலிய குறிஞ்சி நிலப் பெண்டிரிடம், மருந்துக்கு - அமிர்தத்திற்கு, மென் குறிஞ்சித்தேன் - இனிய மலைத்தேனை, மாறும் - பண்டமாற்றுச் செய்யும்.

408. 'தாவு கடல் வேவ, ஒள் தார் வீடணனை இலங்கைக்கு வைத்து, ஒழிந்தார் சாவ வில் அம் கைக்கொண்டார் சார்பு, வாவு கவின் மந்தி நுகர் மாங்கனிக்குக் கற்பகத்தில் மேவு கவி கை நீட்டும் வேங்கடமே,' என இயைக்க.

தாவு கடல் - அலை தாவுகின்ற கடல், வேவ - கொதிப்படைய, ஒள் தார் - ஒளி பொருந்திய மாலை, வைத்து - (அரசனாக) நியமித்து, அம் கை - அழகிய கை, வாவு - தாவுகின்ற, கவின்-அழகு, நுகர் - உண்கின்ற, மேவு கவி - பொருந்திய ஆண் குரங்கு."

409. 'வெள்ளி எனும் வேதியன் நாட்டம் கெடுத்தார்—மேதினியைப் பாதலம் என்று ஓது இயல் நாட்டு அங்கு எடுத்தார்

வேதியனுட் டங்கெடுத்தார் மேதினியைப் பாதலமென்
றோதியனுட் டங்கெடுத்தா ரூர்.

410] [சஎ

அல்லிமலர்க் காந்தளின்மே லாடுஞ் சுரும்பினங்கண்
மெல்லியர்கள் கைக்கழங்காம் வேங்கடமே—மல்லினரைப்
பண்டறைந்த வன்புடையார் பார்த்தனுக்குத் தத்துவநூல்
விண்டறைந்த வன்புடையார் வெற்பு.

411] [சஅ

காந்த ளிரவலர்போற் கையேற்பக் கொன்றைகொடை
வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே—பூந்துளவின்
கான்மடங்கா மார்வத்தார் காண விரும்பினர்மேல்
நான்மடங்கா மார்வத்தார் நாடு.

---

ஊர், வெள்ளிய கல் மீதே விடர் முளைத்த செங்காந்தள் வெள்ளி அகல் விளக்கு ஆம் வேங்கடமே,' என இயைக்க.

வெள்ளி - சுக்கிரன், நாட்டம் - கண்ணை, கெடுத்தார் - (மகாபலிச் சக்கரவர்த்தியினிடம் மூவடி மண்வேண்டிப் பெற்றபோது) அழித்தவர், மேதினி - பூமி, இயல் - இயல்பு, வெள்ளிய கல் - வெண்மையான பளிங்குக்கல், விடர் - பிளப்பு, அகல் - தகழி. (பெரியாழ்வார் திருமொழி, 1 : 8 : 7)

410. 'மல்லினரைப் பண்டு அறைந்த வன்பு உடையார்—பார்த்தனுக்குத் தத்துவநூல் விண்டு அறைந்த அன்பு உடையார் வெற்பு, அல்லி மலர்க் காந்தளின்மேல் ஆடும் சுரும்பு இனங்கள் மெல்லியர்கள் கைக் கழங்காம் வேங்கடமே,' என இயைக்க.

மல்லினரை - (சாணூரன் முஷ்டிகன் என்னும்) மல்லர்களை, அறைந்த - அடித்துக் கொன்ற, வன்பு - வலிமை, பார்த்தன் - அருச்சுனன், தத்துவ நூல் - பகவற்கீதை, விண்டு அறைந்த - விளக்கிக் கூறிய, வெற்பு - மலை, அல்லி - அகவிதழ், காந்தள் - செங்காந்தள், சுரும்பு - வண்டு, கழங்கு ஆம் - கழற்சிக்காய் போலும்.

411. 'பூந்துளவின் கான் மடங்கா மார்வத்தார்—காண விரும்பினர்மேல் நால் மடங்கு ஆம் ஆர்வத்தார் நாடு, காந்தள் இரவலர்போல் கை ஏற்ப, கொன்றை கொடை வேந்தன் எனப் பொன் சொரியும் வேங்கடமே,' என இயைக்க.

கான் - வாசனை, மடங்கா-அழியாத, மார்வத்தார்-மார்பையுடையவர், விரும்பினர் - இச்சித்த அடியவர், நால் மடங்கு - நான்கு பங்கு, ஆர்வத்தார் - அன்பையுடையவர், காந்தள் -

412] [சுகூ

நாகத்தின் மேற்குறவர் நன்கெறிந்த மாணிக்க
மேகத்தின் மின்புரையும் வேங்கடமே—மாகத்தின்
மாத்தாண்ட மண்டலத்தார் வாயுண் டுமிழ்ந்தளந்து
காத்தாண்ட மண்டலத்தார் காப்பு.

413] [௫0

செம்பதும ராகச் சிலைசூழ் பெரும்பாந்தள்
வெம்பரிதி யூர்கோளாம் வேங்கடமே—உம்பருல
கோதத்தி னப்புறத்தா னோரா லிலைதுயின்றான்
வேதத்தி னப்புறத்தான் வெற்பு.

414] [௫க

கோலமணிப் பாறையிற்பாய் கோடரங்கள் செங்கதிரோன்
மேலனுமன் பாய்ந்தனைய வேங்கடமே—நாலுமறை

---

செங்காந்தள் மலர், இரவலர் - யாசகர், கொடைவேந்தன் என - தருமகுணமுடைய அரசனைப் போல, பொன் - பொன்னிற முடைய மலர்கள்.

412. 'மாகத்தின் மா(ர்)த்தாண்ட மண்டலத்தார்—வாய் உண்டு, உமிழ்ந்து, அளந்து, காத்து, ஆண்ட மண் தலத்தார் காப்பு, குறவர் நாகத்தின்மேல் நன்கு எறிந்த மாணிக்கம், மேகத்தின் மின் புரையும் வேங்கடமே,' என இயைக்க.

மாகத்தின்-வானத்திலுள்ள, மார்த்தாண்ட மண்டலத்தார்-சூரிய வட்டத்தில் அமர்ந்திருப்பவர், மண் தலத்தார் - பூமியை உடையவர், காப்பு - பாதுகாப்புக்குரிய இடம், நாகம் - வானை, புரையும் - ஒத்து விளங்கும்.

413. 'ஓதத்தின் அப்பு உலகு உம்பர் உற, தான் ஓர் ஆல் இலை துயின்றான்—வேதத்தின் அப்புறத்தான் வெற்பு, செம்பதும ராகச் சிலை சூழ் பெரும்பாந்தள் வெம்பரிதி ஊர்கோள் ஆம் வேங்கடமே,' என இயைக்க.

ஓதத்தின் அப்பு - பிரளயக் கடல் வெள்ளம், உம்பர் - மேல், உற - பரவ, அப்புறத்தான் - அப்பாற்பட்டவன் (எட்ட இயலாதவன்), சிலை - கல், சூழ் - சுற்றிய, பாந்தள் - மலைப்பாம்பு, வெம் பரிதி - வெப்பமான சூரிய மண்டிலம், ஊர்கோள் - பரிவேடம் (சுற்றியுள்ள பிரபை).

414. 'நாலு மறை ஆய்ந்த பாரதத்துவம் தான் ஆனான்—குடம் ஆடல் வாய்ந்த பாரதத்து உவந்தான் வாழ்வு, கோலமணிப்

ஆய்ந்தபர தத்துவந்தா னுனன் குடமாடல்
வாய்ந்தபர தத்துவந்தான் வாழ்வு.

415] [ருஉ

கோம்பினிறால் வாங்கநிமிர் குஞ்சரக்கை யம்புலிமேல்
வெம்பியெழுங் கோளரவாம் வேங்கடமே—தும்பிபல
போர்காது மீர்ந்தார் புனையரக்கி மூக்கினொடு
வார்காது மீர்ந்தார் வரை.

416] [ருங

வண்மைதிகழ் வெண்பளிங்கு வட்டத்திற் கண்டுயின்மான்
விண்மதியின் மானேய்க்கும் வேங்கடமே—ஒண்மதியால்
நூலைத்தா மோதரனுர் நோக்கவரி யார்துளவ
மாலைத்தா மோதரனுர் வாழ்வு.

---

பாறையில் பாய் கோடரங்கள், செங்கதிரோன் மேல் அனுமன் பாய்ந்தனைய வேங்கடமே,' என இயைக்க.

மறை - வேதம், பரதத்துவம் - மேலாகிய உண்மைப் பொருள், குடம் ஆடல் வாய்ந்த பரதத்து - குடக் கூத்தில், உவந்தான், மகிழ்வடைந்தவன், கோலம் - அழகு, மணி - மாணிக்கம், கோடரங்கள் - குரங்குகள், பாய்ந்தனைய - பாய்ந்தாற் போலக் காட்சியளிக்கின்ற.

415. 'தும்பி பல போர் காதும் ஈர்ந்தார் புனை அரக்கி மூக்கினொடு வார் காதும் ஈர்ந்தார் வரை, கொம்பின் இறால் வாங்க நிமிர் குஞ்சரக்கை, அம்புலிமேல் வெம்பி எழும் கோள் அரவு ஆம் வேங்கடமே,' என இயைக்க.

தும்பி - வண்டுகள், போர் காதும்-போர் செய்து வருத்தும், ஈர்ந்தார் - குளிர்ச்சியான மலர் மாலை, புனை - தரித்த, அரக்கி - இராட்சசியாகிய சூர்ப்பநகை, வார் - நீண்ட, ஈர்ந்தார் - அரிந்தவரான திருமால், கொம்பின் - மரக்கிளையிலுள்ள, இறால் வாங்க - தேன் கூட்டைப் பெற, நிமிர் - உயர்ந்த, குஞ்சரக்கை - யானையின் துதிக்கை, அம்புலி - சந்திரன், வெம்பி - கோபித்து, கோள் அரவு - வலிய (இராகு என்னும்) பாம்பு வடிவான கிரகம்.

416. 'ஒள் மதியால் நூலைத் தாம் ஓது அரனுர் நோக்க அரியார்—துளவ மாலைத் தாமோதரனுர் வாழ்வு, வண்மை திகழ் வெண்பளிங்கு வட்டத்தில் கண் துயில் மான், விண் மதியின் மான் ஏய்க்கும் வேங்கடமே,' என இயைக்க.

ஒள் மதி - சீரிய புத்தி, ஓது அரனுர் - கற்ற சிவபெருமானும், நோக்க அரியார் - தரிசிக்க இயலாதவரும், தாமோ

417] சிலேடை [ருச

காதலிற்றுச் சார்தவர்க்குங் காமியத்தைச் சார்ந்தவர்க்கும்
வேதனைக்கூற் றைத்தவிர்க்கும் வேங்கடமே—போதகத்தை
மோதி மருப்பொசித்தார் முன்பதினா றாயிரவர்
ஓதி மருப்பொசித்தா ரூர்.

418] [ருரு

கேள்வித் துறவோருங் கேடறவில் வாழ்வோரும்
வேள்விக் கினமாற்றும் வேங்கடமே—மூள்வித்து
முன்பா ரதமுடித்தார் மொய்வேந்தர் வந்தவிய
வன்பா ரதமுடித்தார் வாழ்வு.

---

தரனார் - (அசோதை கட்டிய) கயிற்றை வயிற்றிலுடையவரான திருமால், வண்மை திகழ் - வளப்பம் பெற்று விளங்குகின்ற, பளிங்கு வட்டம் - வட்ட வடிவான பளிங்குப் பாறை, ஏய்க்கும் - ஒத்து விளங்கும்.

417. 'போதகத்தை மோதி மருப்பு ஒசித்தார்—முன் பதினாறாயிரவர் ஓதி மரு பொசித்தார் ஊர், காதல் இற்றுச் சார் தவர்க்கும் காமியத்தைச் சார்ந்தவர்க்கும் வேதனைச் கூற்றைத் தவிர்க்கும் வேங்கடமே,' என இயைக்க.

போதகத்தை - (குவலயாபீடம் என்னும்) யானையை, மோதி தாக்கி, மருப்பு - தந்தம், ஒசித்தார் - முரித்தவர், முன் - முன்பு (கிருஷ்ணவதாரம் செய்த போது), பதினாறாயிரவர் - பதினாறாயிரம் கோவியரின், ஓதி - கூந்தலின், மரு - வாசனையை, பொசித்தார் - அனுபவித்தவர், காதல் இற்று - (உலகப்) பற்று நீங்கி, சார் தவர் - (தன்னை) அடைந்த முனிவர், வேதனை - பிரமனாலுண்டாகும் பிறப்பையும், கூற்றை - யமனால் உண்டாகும் இறப்பையும், காமியத்தைச் சார்ந்தவர் - (உலக) இன்பங்களை விரும்பியவர், வேதனைக் கூற்றை - துன்பக் கூறுபாடுகளை, தவிர்க்கும் - ஒழிக்கும்.

418. 'முன்பா(க) ரதம் முடித்தார் மொய் வேந்தர் வந்து அவிய வல் பாரதம் மூள்வித்து முடித்தார் வாழ்வு, கேள்வித் துறவோரும் கேடு அற இல் வாழ்வோரும்—வேள் விக்கினம் மாற்றும்—வேள்விக்கு இனம் ஆற்றும்—வேங்கடமே,' என இயைக்க.

முன்பாக - முன் காலத்தில், ரதம் முடித்தார் - தேரையும் முடிமாலையையும் உடைய, மொய் வேந்தர் - வலிமை வாய்ந்த அரசர், அவிய - (போரிட்டு) இறக்கும்படி, வல் பாரதம் - வலிய பாரதப் போரை, மூள்வித்து - உண்டாக்கி, கேள்வித்துறவோர் -

419] [ருக

பொய்யாம் வினையேனைப் போல்வாரு மன்பருஞ்செய்
மெய்யாம் வழுத்தேயும் வேங்கடமே—செய்யா
டனத்துவசப் பொற்புள்ளார் தானவரை மோதுஞ்
சினத்துவசப் பொற்புள்ளார் சேர்வு.

420] [ருஎ

கோடலிலா வுள்ளத்துக் கோதி லடியவரும்
வேடருமங் கைவரைவெல் வேங்கடமே—மூடர்
மனமா மனைக்கொன்றார் வன்கஞ்ச னென்னுஞ்
சினமா மனைக்கொன்றார் சேர்பு.

---

வேதக் கேள்வியை உடைய துறவியர், வேள் விக்கினம் - மன் மதன் விளைக்கும் தடையை (காமத்தை), மாற்றும் - நீக்கும், கேடு - தீமை, வேள்விக்கு இனம் ஆற்றும் - யாகத்திற்கு ஆதார மான உபகாரங்களைச் செய்யும்.

419. 'செய்யாள் தனத்து வசப்பொற்பு உள்ளார்—தான வரை மோதும் சினத் துவசப் பொன் புள்ளார் சேர்வு, பொய் யாம் வினையேனைப் போல்வாரும் அன்பரும் செய்—மெய்யாம் வழுத்தேயும்—மெய்யாம் வழுத்து ஏயும்—வேங்கடமே,' என இயைக்க.

செய்யாள் - இலக்குமியின், தனத்து வசப் பொற்பு - கொங் கைக்கு வசப்பட்ட அழகு, தானவர் - அசுரர், சினத் துவசப் பொன் புள்ளார் - கோபமுள்ள கொடியாகிய பொன் மயமான பறவையை (கருடனை) உடையவர், பொய்யாம் வினையேனை - பொய்த் தொண்டு உடைய என்னை, போல்வாரும் - ஒத்திருக் கும் இழிந்தவரும், செய் - செய்த, மெய்யாம் வழு - உடலைச் சார்ந்த குற்றங்கள், தேயும் - அழிதற்கு இடமாகும், அன்பர் - அடியவர், மெய்யாம் - உண்மையான, வழுத்து-துதிகள், ஏயும் - பொருந்தும்.

420. 'மூடர் மனமாம் மனைக்கு ஒன்றார்—வல் கஞ்சன் என்னும் சின மாமனைக் கொன்றார் சேர்பு, கோடல் இலா உள் ளத்துக் கோது இல் அடியவரும் வேடரும்—அங்கு ஐவரை வெல்—அம் கை வரை வெல்—வேங்கடமே,' என இயைக்க.

மனமாம் மனைக்கு - உள்ளமாகிய வீட்டில், ஒன்றார் - பொருந்ாதவர், சினமாமனை - கோபமுள்ள மாமனாகிய கஞ்சனை சேர்பு - இருப்பிடம், கோடல் - கோணுதல், கோது - குற்றம், ஐவரை - ஐம்பொறிகளாகிய பகைவரை, அம் கை வரை - அழகிய துதிக்கையையுடைய மலை போலும் யானையை.

421] [௫அ

மொய்வதன மங்கையர்கண் முன்கையும் யோகியர்கண்
மெய்வயது மஞ்சுகமார் வேங்கடமே—பெய்வளையார்
பாற்றிருப்பா தஞ்சிவந்தார் பற்றினார் புன்பிறப்பை
மாற்றிருப்பா தஞ்சிவந்தார் வாழ்வு.

422] [௫௬

இல்லக் குறத்தியரும் யாக்கைநிலை வேட்டவரு
மெல்லக் கிழங்கெடுக்கும் வேங்கடமே—நல்ல
புதுப்பூவை வண்ணத்தான் போர்முகத்துச் செவ்வாய்
மதுப்பூவை வண்ணத்தான் வாழ்வு.

---

421. 'பெய் வளையார்பால் திருப்பாது அஞ்சி வந்தார் பற்றினார் பல் பிறப்பை மாற்று இரு பாதம் சிவந்தார் வாழ்வு, மொய் வதன மங்கையர்கள் முன் கையும், யோகியர்கள் மெய் வயதும்—அம் சுகம் ஆர்—அஞ்சு உகம் ஆர்—வேங்கடமே,' என இயக்க.

பெய் வளையார்பால் - இட்ட வளையல்களையுடைய பெண்டிரிடம், திருப்பாது - (தம் மனத்தைத்) திருப்பாமல், அஞ்சி - பயந்து, வந்தார் - (தம்மிடம்) வந்தவரின், பல் பிறப்பை - பல பிறவிகளை, மாற்று - போக்குகின்ற, சிவந்தார் - சிவந்திருப்பவர், மொய் வதனம்-(அழகு) நிறைந்த முகமுடைய, அம் சுகம் ஆர் - அழகிய கிளி பொருந்திய, யோகியர்கள் - முனிவர்களின், மெய் வயது - உடலின் ஆயுட்காலம், அஞ்சு உகம் ஆர் - ஐந்து ஊழியாய் அமைந்த.

422. 'நல்ல புதுப் பூவை வண்ணத்தான்—போர் முகத்துச் செவ்வாய் மதுப்பூவை வள் நத்தான் வாழ்வு, இல்லக் குறத்தியரும், யாக்கை நிலை வேட்டவரும்—மெல்லக் கிழங்கு எடுக்கும்—மெல்லக் கிழம் கெடுக்கும்—வேங்கடமே,' என இயைக்க.

பூவை வண்ணத்தான் - காயாம்பூவின் நிறத்தையுடையவன், போர் முகத்து - யுத்த பூமியில், செவ்வாய் மதுப்பூ - (தனது) சிவந்த வாயாகிய தேன் பிலிற்றும் தாமரை மலரில், வை வள் நத்தான் - (ஊதி) வைக்கும் வளப்பமான சங்கையுடையவன், மெல்ல - மென்று தின்ன, யாக்கை நிலை வேட்டவர் - உடம்பு நிலை பெற்றிருத்தலை விரும்பியவர், மெல்ல - சாவதானமாக, கிழம் - முதுமையை, கெடுக்கும் - (யோகத்தால்) அழிக்கும்.

423] [௧௦
தேனியலுங் கூந்தலார் செங்கரமு மாதவத்தோர்
மேனியுமை யம்பொழியும் வேங்கடமே—ஞானியர்கள்
தாங்குறியெட் டக்கரத்தார் தாளுரன்மேல் வைத்துவெண்ணெய்
தாங்குறியெட் டக்கரத்தார் சார்பு.

424] [௧௧
காணையிலார் சொற்கேட்ட கந்தருவ ருந்தவரும்
வீணையிரா கத்தைவிடும் வேங்கடமே—கோணை
இருங்குண்டை யோட்டினு னேற்பொழித்தான் கூனி
மருங்குண்டை யோட்டினன் வாழ்வு.

---

423. 'ஞானியர்கள் தாம் குறி எட்டு அக்கரத்தார்—உரல் மேல் தாள் வைத்து வெண்ணெய் தாங்கு உறி எட்டு அக்கரத்தார்—சார்பு, தேன் இயலும் கூந்தலார் செங்கரமும், மாதவத்தோர் மேனியும்—ஐயம் பொழியும்—ஐ அம்பு ஒழியும்—வேங்கடமே,' என இயைக்க.

குறி - (தியானித்தற்குக்) குறிக்கின்ற, எட்டு அக்கரத்தார்- அஷ்டாக்ஷர மந்திரத்திற்கு உரிய பொருளாயிருப்பவர், தாள் - பாதம், எட்டு - (பிடிக்க) எட்டுகின்ற, அக்கரத்தார் - அழகிய கையை உடையவர், இயலும் - பொருந்திய, செங்கரம் - சிவந்த கை, மேனி - உடல், ஐயம் - பிச்சை, ஐ அம்பு - (மன்மதன் எய்யும் தாமரை, அசோகு, மா, முல்லை, நீலோற்பலம் என்னும்) ஐந்து மலரம்புகள்.

424. 'கோணை இருங்குண்டை ஓட்டினன் ஏற்பு ஒழித்தான்—கூனி மருங்கு உண்டை ஓட்டினன்—வாழ்வு, காண் ஐயிலார் சொல் கேட்ட கந்தருவரும், தவரும்—வீணை இராகத்தை விடும்—வீண் ஐ இராகத்தை விடும் வேங்கடமே,' என இயைக்க.

கோணை - வலிமையுடைய, இருங்குண்டை - பெரிய எருது, ஓட்டினன் - கைக் கபாலமுடைய சிவபிரான், ஏற்பு - பிச்சையெடுத்தலை, கூனி - (மந்தரை என்னும்) கூனியின், மருங்கு - (முதுகின்) பக்கத்தில், உண்டை ஓட்டினன் (வில்லால்) மண்ணுண்டையைச் செலுத்தியவன், ஐயிலார்-(அயிலார்) வேல் போன்ற கண்ணியரின், கந்தருவர் - தேவ ஜாதியார், தவர் - முனிவர், இராகத்தை - இசையை, வீண் ஐ இராகத்தை - வீணான ஐம் பொறிகளின் ஆசையை.

425] [சுஉ

முந்நூன் மறையவர்நா மூதரம்பை மாரினடு
மெய்ந்நூ னலங்கவரும் வேங்கடமே—பொய்ந்நூலால்
அச்சமயக் கத்தினு ராதரிக்கத் தெய்வங்கள்
வச்சமயக் கத்தினுர் வாழ்வு.

426] [சுரு

ஓதுமறை யோர்புறமு முள்ளுங் கலையினரு
மேதையக லாவிருக்கும் வேங்கடமே—கோதைகுழல்
சுற்றுத தாரணியார் தூயதிருத் தாளூன்றப்
பற்றுத தாரணியார் பற்று.

427] [சுச

நன்முலைபோல் வெண்ணகையார் நாயகர்மேல் வைத்தநெஞ்சு
மென்முலையுங் கற்புரஞ்சேர் வேங்கடமே—மூன்மலைந்து

---

425. 'பொய்ந்நூலால் அச்சமயக் கத்தினுர் ஆதரிக்கத் தெய்வங்கள் வச்ச மயக்கத்தினுர் வாழ்வு, முந்நூல் மறையவர நாமெய்ந்நூல் நலம் கவரும்—மூதரம்பைமாரின் நடு மெய்ந்நூல் நலங்க வரும்—வேங்கடமே,' என இயைக்க.

நூல் - சாஸ்திரம், அச்சமயக் கத்தினுர் - அவ்வச்சமயங் களைப் பிதற்றுபவர், ஆதரிக்க - விரும்பி மேற்கொள்ள, தெய் வங்கள் - (பற்பல) தெய்வங்களை, வச்ச - (சிருஷ்டித்து) வைத்த, மயக்கத்தினுர் - மாயையை உடையவரான திருமால், முந்நூல் (பூணூலாகிய) முப்புரி நூலை அணிந்த, நா - நாக்கு, மெய்ந்நூல் நலம் - தத்துவசாஸ்திரங்களின் நன்மைதரும் பொருளை, கவரும்- ஓதியுணரும், மூதரம்பைமாரின் நடு - பழைய தெய்வப் பெண் டிரின் இடை, மெய்ந்நூல் நலங்க - (நுட்பமான) வடிவமுடைய பஞ்சி நூல் (ஒப்புக்) கெடும்படி, வரும் - அமையும்.

426. 'கோதை குழல் சுற்றுத தார் அணியார்—தூய திருத் தாள் ஊன்றப் பற்றுத தாரணியார்—பற்று, ஓதும் மறையோர் புறமும் (அருங்கலையின் மேதை அகலா இருக்கும்) உள்ளும் கலை யின் அருமேதை அகலா இருக்கும் வேங்கடமே,' என இயைக்க.

கோதை - ஸ்ரீ ஆண்டாள், குழல் - கூந்தல், தார் - மலர்மாலை, அணியார் - அணிந்துகொள்ளாதவரும், தாரணியார் - பூமியை உடையவருமாகிய திருமாலின், பற்று - விருப்பிற்குரிய இடம், புறம் - உடம்பு, அருங்கலையின் மேதை - அருமையான மானின் தோல், உள் - மனம், மேதை - சாஸ்திர அறிவு.

427. 'முன் மலைந்து தோற்ற மாரீசனுர் தோற்றி மாயம் புரியச் சிற்றம் ஆர் ஈசனுர் சேர்வு, நல் மு(ல்)லை போல் வெள்

தோற்றமா ரீசனூர் தோற்றிமா யம்புரியச்
சீற்றமா ரீசனூர் சேர்வு.

428] [கஉ௫

கூறுங் கிளிமொழியார் கொங்கையென்றுங் கண்ணென்றும்
வீறு மருப்பிணைசேர் வேங்கடமே—நாறுந்
துளவமலர்க் கண்ணியார் தொண்டாய்த் தமக்கன்
புளவமலர்க் கண்ணியா ரூர்.

429] [கஉ௬

மாதரம்பொன் மேனி வடிவு மவர்குறங்கு
மீதரம்பை யைப்பழிக்கும் வேங்கடமே—பூதமைந்தின்
பம்பரமா காயத்தார் பாடினல் வீடருளு
நம்பரமா காயத்தார் நாடு.

---

நகையார் நாயகர்மேல் வைத்த நெஞ்சும் (கற்பு உரம் சேர்) மெல் முலையும் கற்பூரம் சேர் வேங்கடமே,' என இயைக்க.

மலைந்து - போரிட்டு, சீற்றம் - கோபம், சேர்வு - தங்கியிருக்குமிடம், நல் முல்லை - அழகிய முல்லை மலர், நகையார்-பற்களையுடைய பெண்டிர், நெஞ்சும் - மனமும், கற்பு உரம் - கற்பின் வலிமை, கற்புரம் - பச்சைக்கற்பூரம், முலை - முலை (இடைக்குறை விகாரம்), மாரீசன் - தாடகையின் புதல்வன்.

428. 'நாறும் துளவ மலர்க் கண்ணியார்—தொண்டாய்த் தமக்கு அன்பு உ(ன்)ள அமலர்க்கு அண்ணியார்—ஊர், கூறும் கிளி மொழியார் கொங்கை என்று (வீறு இணை மருப்பு), கண் என்று வீறு மருப்பிணை(யும்) சேர் வேங்கடமே,' என இயைக்க.

நாறும் - மணம் வீசும், கண்ணியார் - மாலையை உடையவரும், தொண்டாய் - அடிமையாகி, அமலர்க்கு - குற்றமற்ற பத்தர்களுக்கு, அண்ணியார் - நெருங்கியவருமாகிய திருமாலின், வீறு - பெருமை பெற்று விளங்கும், இணை மருப்பு - இரட்டைத் தந்தங்களும், வீறு மரு - சிறப்புப் பொருந்திய, பிணை - பெண் மான்.

429. 'பூதம் ஐந்தின் பம்பரம் மா காயத்தார் பாடினல் வீடு அருளும் நம் பரம ஆகாயத்தார் நாடு, மாதர் அம் பொன் மேனி வடிவும், அவர் குறங்கும் மீது அரம்பையைப் பழிக்கும் வேங்கடமே,' என இயைக்க.

பூதம் ஐந்தின் - பஞ்ச பூதங்களான, பம்பர மா காயத்தார் - பம்பரம் போல விரைவில் நிலை மாறும் பேருடம்பினை உடைய மக்கள், வீடு - மோட்சம், பரம ஆகாயத்தார் - பரம

430] [சாஎ

கோள்கரவு கற்றவிழிக் கோதையர்கள் பொற்றாளும்
வேள்கரமு மம்பஞ்சார் வேங்கடமே—நீள்கரனார்
தூடணனார் முத்தலையார் துஞ்சவெய்து துஞ்சாரைக்
கூடணனார் முத்தலையார் குன்று.

431] [சாஅ

கோங்கைக்கோ டேறிக் குலுக்குமரி யுங்கரியும்
வேங்கைக்கோ டாதரிக்கும் வேங்கடமே—பூங்கைக்குண்
மெய்த்தவளச் சங்கெடுத்தார் மேகலைவிட் டங்கைதலை
வைத்தவளச் சங்கெடுத்தார் வாழ்வு.

---

பதத்தையுடையவருமான திருமாலின், குறங்கும் - தொடையும், அரம்பை - ரம்பை என்னும் தெய்வப் பெண், வாழை.

430. 'நீள் கரனார், தூடணனார், முத்தலையார் துஞ்ச எய்து, துஞ்சாரைக் கூடு அ(ண்)ணனார்—முத்து அலையார்—குன்று, கோள் கரவு கற்ற விழிக் கோதையர்கள் பொன் தாளும் வேள் கரமும்—அம் பஞ்சு ஆர், அம்பு அஞ்சு ஆர்—வேங்கடமே,' என இயைக்க.

நீள் - பெரிய, கரனார் - (கொடியவனான) கரன், தூடணனார்-தூஷணன், முத்தலையார் - திரிசிரன் என்னும் அரக்கன், துஞ்ச - இறக்க, எய்து - அம்பினைச் செலுத்தி, துஞ்சாரை-கண் உறங்காதவராகிய இலக்குமணனை, அ(ண்)ணனார் - தமையனார், முத்து அலையார் - முத்துப் பயிலும் கடலிற்பள்ளி கொள்பவர், கோள் கரவு - வருத்துதலையும் வஞ்சனையையும், கற்ற - பயின்ற, விழி - கண்கள், பொன் தாள் - அழகிய பாதம், அம் பஞ்சு ஆர் - அழகிய செம்பஞ்சுக் குழம்பு பொருந்திய, வேள் கரம் - மன்மதன் கை, அம்பு அஞ்சு ஆர் - (தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை என்னும் மலர்) அம்புகள் ஐந்து பொருந்திய.

431. 'பூங்கைக்குள் மெய்த் தவளச் சங்கு எடுத்தார்—மேகலை விட்டு அம் கை தலை வைத்தவள் அச்சம் கெடுத்தார்—வாழ்வு, கோங்கைக் கோடு ஏறிக் குலுக்கும் அரியும், கரியும்—வேங்கைக் கோடு ஆதரிக்கும்—வேங்கைக்கு ஓடாது அரிக்கும்—வேங்கடமே,' என இயைக்க.

பூங்கை - அழகியகை, மெய் - உருவம், தவளம் - வெண்மை, மேகலை விட்டு - ஆடையை விட்டு, அம் கை - அழகிய கைகளை, வைத்தாள் - வைத்து வணங்கியவளான திரௌபதியின், அச்சம் - பயத்தை, கோங்கை - கோங்க மரத்தை, கோடு - கிளைகளில், அரி-குரங்கு, வேங்கைக் கோடு ஆதரிக்கும் - வேங்கை மரத்தின்

432] [சுசு

மாவிற் குயிலு மயிலு மொளிசெய்ய
மேவிப் புயறவழும் வேங்கடமே—யாவிக்குள்
ஆனவரு டந்தடுத்தா ரானிரைக்காக் குன்றேந்தி
வானவரு டந்தடுத்தார் வாழ்வு.

433] [எ0

கானோ டருவி கனகமுமுத் துந்தள்ளி
மீனோ வெனக்கொழிக்கும் வேங்கடமே—வானோர்கண்
மேகனய னங்கொண்டார் வேணியரன் காண்பரியார்
காகனய னங்கொண்டார் காப்பு.

---

கிளையை விரும்பிப் பற்றும், கரி - யானை, வேங்கைக்கு ஓடாது அரிக்கும் - புலிக்குப் பயந்தோடாமல் அதைப் (போரிட்டு) அழிக்கும்.

432. 'ஆவிக்குள் ஆன அருள் தந்து அடுத்தார்—ஆன் நிரைக்கா(க)க் குன்று ஏந்தி வான வருடம் தடுத்தார்—வாழ்வு, மாவில் குயிலும் மயிலும் ஒளி செய்ய மேவிப் புயல் தவழும் வேங்கடமே,' என இயைக்க.

ஆவிக்குள் - (என்) உயிருள், ஆன அருள் தந்து - பொருத்தமான கிருபையைச் செய்து, அடுத்தார் - சேர்ந்தவரும், ஆன் நிரைக்கா(க) - பசுக் கூட்டத்தைக் காத்தற்காக, குன்று - (கோவர்த்தனம் என்னும்) மலையை, வானவருடம் - மேகம் பெய்த மழையை, மாவில் - மாமரத்தில், ஒளி செய்ய - (குயில்) ஒளித்தலைச் செய்யவும் (மயில்) மகிழ்ச்சியடையவும், மேவி - பொருந்தி, புயல் - மேகம்.

433. 'வானோர்கள், மேகன், அயன், அம் கொண்டு ஆர் வேணி அரன் காண்பு அரியார்—காகன் நயனம் கொண்டார்—காப்பு, கான் ஓடு அருவி கனகமும் முத்தும் தள்ளி—மீனோ எனக் கொழிக்கும், மீ நோவு எனக்கு ஒழிக்கும்—வேங்கடமே,' என இயைக்க.

மேகன் - இந்திரன், அயன் - பிரமன், அம் - நீர், வேணி - சடை, அரன் - சிவன், காண்பு அரியார் - காண இயலாதவரும், காகன் நயனம் - காகாசுரனுடைய கண்ணை, கொண்டார் - பறித்துக்கொண்டவருமாகிய திருமாலின், கான் - காடு, கனகம் - பொன், தள்ளி - எறிந்து, மீனோ என - (காண்போர் இவை) நட்சத்திரங்களோ என்று எண்ணும்படி, கொழிக்கும் - ஒதுக்குகின்ற, மீ நோவு - மிகுதியான (பிறவித்) துன்பத்தை.

'மீ நோவு - மீனோவு' என யமகம் நோக்கித் திரிந்தது.

434] [௪௧
கண்டடைந்த வானவருங் காந்தட் குலமலரும்
விண்டவிர்ந்து நிற்கின்ற வேங்கடமே—தொண்டருக்கு
வைகுந்த நாட்டான் மருவுருவ மீந்துவைக்கும்
வைகுந்த நாட்டான் வரை.

435] [௪௨
வாழம் புலியினொடு வானூர் தினகரனும்
வேழங்க ளும்வலஞ்செய் வேங்கடமே—யூழின்கட்
சற்றா யினுமினியான் சாரா வகையருளு
நற்றா யினுமினியா னாடு.

436] [௪௩
தாட்கமலப் பூஞ்சுனைக்குஞ் சாயகங்கள் கொய்துதிரி
வேட்கும் வடிவில்லா வேங்கடமே - வாட்கலியன்

---

434. 'தொண்டருக்கு வைகுந்தம் நாட்டான்—மருவு உருவம் ஈந்து வைக்கும் வைகுந்த நாட்டான்—வரை, கண்டு அடைந்த வானவரும், குலக்காந்தள் மலரும்—விண் தவிர்ந்து நிற்கும், விண்டு அவிர்ந்து நிற்கும்—வேங்கடமே,' என இயைக்க.

வை குந்தம் நாட்டான் - கூர்மையான சூலாயுதத்தை (யமனானவன்) நாட்டாதபடி செய்பவனும், மருவு உருவம் - (தனக்குப்) பொருந்திய உருவத்தை, ஈந்து - (அடியார்களுக்கும்) கொடுத்து, வைக்கும் - (அவர்களை) இருக்கச் செய்யும், வரை - திருமலை, கண்டு - (அத்திருமலையின் அழகைப்) பார்த்து, வானவர் விண் தவிர்ந்து நிற்கும் - தேவர்கள் விண்ணுலகை விட்டு நிற்கும், குலக்காந்தள் மலர் விண்டு அவிர்ந்து நிற்கும் - சிறந்த காந்தள் மலர்கள் மலர்ந்து விளங்கி நிற்கும்.

435. 'இனியான் சற்று ஆயினும் ஊழின்கண் சாரா வகை அருளும் நல் தாயினும் இனியான் நாடு, வாழ் அம்புலியினொடு வான் ஊர் தினகரனும் வேழங்களும் வலம் செய் வேங்கடமே,' என இயைக்க.

ஊழின்கண் - பழவினையில், சாராவகை - பொருந்தாதபடி, நல் தாயினும் - பெற்ற தாயைக்காட்டிலும், அம்புலி - சந்திரன், தினகரன் - சூரியன், வலம் செய் - வலம் செய்யப்பெற்ற, வேழங்கள் - யானைகள், வலம் செய் - வலிமையடைகின்ற.

436. 'வாள் கலியன் நா வியப்பு ஆம் பாட்டினார்—தாவி நஞ்சு மடுவைக் கலக்கி அப்பாம்பு ஆட்டினார்—சார்பு,, தாள் கமலப்பூஞ்சுனைக்கும், சாயகங்கள் கொய்து திரி வேட்கும்—வடிவு இல்லா—வேங்கடமே,' என இயைக்க

நாவியப்பாம் பாட்டினார் நச்சுமடு வைக்கலக்கித்
தாவியப்பாம் பாட்டினார் சார்பு.

437] [௭௪

ஆயுந் துறவறத்தை யண்டினமுத் தண்டினரும்
வேயுங் கிளைவிட்ட வேங்கடமே - தோயுந்
தயிர்க்காத்தாங் கட்டுண்டார் தாரணியிற் றந்த
உயிர்க்காத்தாங் கட்டுண்டா ரூர்.

438] [௭௫

தொண்டொடுமெய்யன்புடையார் தூய்மனமுஞ் சந்தனமும்
விண்டொடுபொற் பாம்பணைசேர் வேங்கடமே - தண்டொடுவாள்
கோலமருங் கார்முகத்தார் கோடாழி யார்குழையின்
கோலமருங் கார்முகத்தார் குன்று.

---

கலியன் - திருமங்கை மன்னர், நா வியப்பு ஆம் - நாவானது பாராட்டுதலையுடையனவாகிய, பாட்டினார் - பாடல்களை ஏற்றருளியவரும், தாவி - குதித்து, அப்பாம்பு - (காளியன் என்னும்) அப்பாம்பை, ஆட்டினார் - (வருந்தி) ஆடச் செய்தவருமாகிய திருமாலின், தாள் கமலம் - தண்டோடு கூடிய தாமரைகளையுடைய, பூஞ்சுனைக்கு - அழகிய நீர்ச்சுனைகளுக்கு, வடிவு - வற்றுதல், சாயகங்கள் - (மலர்) அம்புகளை, வேட்கு - மன்மதனுக்கு, வடிவு - உருவம்.

437. 'தோயும் தயிர்க்கா(க)த் தாம் கட்டுண்டார்—தாரணியில் தந்த உயிர் காத்து, ஆங்கு அட்டு, உண்டார்—ஊர், ஆயும் துறவறத்தை அண்டின முத்தண்டினரும், வேயும்—கிளை விட்ட—வேங்கடமே,' என இயைக்க.

தாரணியில் - உலகில், தந்த - (தாம்) படைத்த, ஆங்கு - அவ்விடத்தில், அட்டு - அழித்து, உண்டார் - விழுங்கியவரான திருமாலின், ஆயும் - (நூல்கள் சிறந்ததென) ஆராயும், துறவறத்தை - சந்நியாச மார்க்கத்தை, அண்டின - தழுவிய, முத்தண்டினர் - திரிதண்ட சந்நியாசிகள், கிளை விட்ட - சுற்றத்தாரைக் கைவிட்டதற்குக் காரணமான, வேய் - மூங்கில், கிளை விட்ட - கிளைத்துச் செழித்தற்கிடமான.

438. 'தண்டொடு வாள் கோல் அமரும் கார் முகத்தார்—கோடு ஆழியார்—குழையின் கோலம் மருங்கு ஆர் முகத்தார்—குன்று, தொண்டொடு மெய்யன்பு உடையார் தூய் மனமும், சந்தனமும்—விண்டொடு பொன் பாம்பு அணை சேர், விண்தொடு பொற்பு ஆம் பணை சேர்—வேங்கடமே,' என இயைக்க.

439] [௪௬

கிட்டுநெறி யோகியருங் கிள்ளைகளுந் தங்கூடு
விட்டுமறு கூடடையும் வேங்கடமே - யெட்டுமத
மாவென்று வந்தான் வரநாளை வாவின்று
போவென்று வந்தான் பொருப்பு.

440] [௪௭

மட்டுவளர் சாரலினு மாதவத்தோர் சிந்தையினும்
விட்டு மதிவிளங்கும் வேங்கடமே - கட்டுசடை
நீர்க்கங்கை யேற்றா னிரப்பொழித்தா னீள்குறளாய்ப்
பார்க்கங்கை யேற்றான் பதி.

---

தண்டு - கதாயுதம், கோல் அமரும் கார் முகத்தார் - அம்பு பொருந்திய வில்லையுடையவரும், கோடு ஆழியார் - சங்கையும் சக்கரத்தையும் உடையவரும், குழையின் கோலம் மருங்கு ஆர் முகத்தார் - குண்டலங்களின் அழகு (இரு) புறமும் பொருந்தியுள்ள திருமுகத்தையுடையவருமான திருமாலின், தொண்டு - வழிபாடு, தூய் - பரிசுத்தமான, மனம் - மனமானது, விண்டொடு - திருமாலுடன், பொன் பாம்பு அணை சேர் - அழகிய ஆதிசேஷனாகிய படுக்கையை அடையும், சந்தனம் - சந்தனமரங்கள், விண் தொடு - ஆகாயத்தை அளாவிய, பொற்பு ஆம் பணை சேர் - அழகான கிளைகள் பொருந்தப் பெறும்.

439. 'மத மா எட்டு வென்று வந்தான் வர, 'இன்று போ, நாளை வா,' என்று உவந்தான் பொருப்பு, கிட்டும் நெறி யோகியரும், கிள்ளைகளும்—தம் கூடு விட்டு மறு கூடு அடையும், தம் கூடு விட்டு மறுகு ஊடு அடையும்—வேங்கடமே,' என இயைக்க.

மதமா எட்டு - மதம் பிடித்த எட்டுத் திக்கு யானைகளையும், வென்று வந்தான் - ஜயித்து வந்தவனான இராவணன், வர - (சேனை முழுவதையும் இழந்து தன் முன் போருக்கு) வர, உவந்தான் - (அவனிடம்) மகிழ்ந்து கூறியவனான திருமாலின், பொருப்பு - திருமலை, கிட்டும் நெறி - (விரைவில் மோட்சத்தை) அடையும் மார்க்கத்தைப் பின் பற்றிய, யோகியர் - யோகம் பயிலும் முனிவர், கூடு - சரீரம், கிள்ளைகள் - கிளிகள், கூடு விட்டு - (தங்கள்) கூண்டுகளை விட்டு நீங்கி, மறுகு ஊடு அடையும் - தெருக்களில் சேர்தற்கு இடமான.

440. 'கட்டு சடை நீர்க் கங்கை ஏற்றான் இரப்பு ஒழித்தான்—நீள் குறளாய்ப் பார்க்கு அம் கை ஏற்றான்—பதி, மட்டு வளர் சாரலினும், மாதவத்தோர் சிந்தையிலும்—மதி விட்டு விளங்கும், விட்டு மதி விளங்கும்—வேங்கடமே,' என இயைக்க.

441] [எஅ

புக்கவரு மாதவரும் பூமதுவுண் வண்டினமு
மெய்க்கவசம் பூண்டிருக்கும் வேங்கடமே - யொக்கவெனே
அன்பதினு லாண்டா ரரிவையொடுங் கானுறைந்த
வன்பதினு லாண்டார் வரை.

442] [எகூ

தக்கமறை யோர்நாவுந் தண்சார லின்புடையு
மிக்க மனுவனையும் வேங்கடமே - யக்கரவம்
பூண்டார்க்கு மாறுடைத்தார் பொங்கோத நீரடைத்து
மீண்டார்க்கு மாறுடைத்தார் வெற்பு.

---

ஏற்றான் - எருதை வாகனமாக உடையவனான சிவபிரானது, நிரப்பு - வறுமையை, நீள் குறளாய் - திரிவிக்கிரமனாக நீளும் வடிவைத் தன்னுள் அடக்கிய வாமனனாய், பார்க்கு - உலகத்தைப் பெறுதற்காக, அம் - (மகாபலி விட்ட) நீரை, கை ஏற்றான் - (தன்) கையில் ஏற்றுக்கொண்ட திருமாலின், பதி - க்ஷேத்திரம், மட்டு - தேன், சாரல் - பக்கம், மதி விட்டு விளங்கும் - சந்திரன் (ஒளி) வீசித் திகழும், சிந்தை - மனம், விட்டு மதி - விஷ்ணுவைப் பற்றிய ஞானம்.

441. 'ஒக்க எனை(யும்) அன்பு அதினுல் ஆண்டார்—அரிவையொடும் கான் உறைந்த வல் பதினுல் ஆண்டார்—வரை, புக்க அரு மாதவரும், பூமது உண் வண்டு இனமும்—மெய்க்கவசம் பூண்டிருக்கும், மெய்க்கு அவசம் பூண்டிருக்கும்—வேங்கடமே,' என இயைக்க.

ஒக்க - (உண்மை அடியவரை) ஒப்ப, அரிவை - சீதை, கான் - காடு, ஆண்டார் - அடிமை கொண்டவர், வருஷங்களையுடையவர், புக்க - (வந்து) சேர்ந்த, மெய்க்கவசம் - வாய்மையாகிய கவசம், அவசம் - பரவசம்.

442. 'அக்கு அரவம் பூண்டார்க்கு மால் துடைத்தார்—பொங்கு ஓத நீர் அடைத்து மீண்டு ஆர்க்குமாறு உடைத்தார்—வெற்பு, தக்க மறையோர் நாவும், தண்சாரலின் புடையும்—மிக்க மனு • அனையும், மிக்க மனு வனையும்—வேங்கடமே,' என இயைக்க.

அக்கு - எலும்பு மாலை, மால் துடைத்தார் - மயக்கத்தை நீக்கியவரும், ஓத நீர் - அலைகளையுடைய கடலை, அடைத்து - அணையிட்டுத் தடுத்து, ஆர்க்குமாறு - ஆரவாரம் செய்யும்படி, உடைத்தார் - (அந்த அணையை) உடைத்தவருமான திருமாலின், வெற்பு - திருமலை, மிக்க மனு அனையும் - சிறந்த மந்திரம்

443] [அ0

நீடு கொடுமுடியு நீதிநெறி வேதியர்கள்
வீடு மகமருவும் வேங்கடமே - கோடுங்
கருத்துளவ மாலையார் காணும னின்ற
மருத்துளவ மாலையார் வாழ்வு.

444] [அக

சீதங்கொள் சாரலினுஞ் சீர்மறையோ ரில்லிடத்தும்
வேதங்க ணால்வளரும் வேங்கடமே - போதன்
சிரித்துப் புரந்துடைத்தான் றேவரொடு மண்டம்
விரித்துப் புறந்துடைத்தான் வெற்பு.

445] [அ௨

நன்கோடு போலுமுலை நாரியருஞ் சண்பகத்தின்
மென்கோடுங் கற்பகஞ்சேர் வேங்கடமே - வன்கோடு

---

பொருந்தும், மிக்க மனு வளையும் - மிகுந்த மனிதர் கூட்டம் வலம் வருகின்ற.

443. 'கோடும் கருத்துள் அவம் மாலையார் காணமல் நின்ற மருத் துளவ மாலையார் வாழ்வு, நீடு கொடுமுடியும், நீதி நெறி வேதியர்கள் வீடும்—மகம் மருவும்—வேங்கடமே,' என இயைக்க.

அவம் மாலையார் - வீணான எண்ண வரிசையை உடையவர் கள், கொடு முடி - மலையின் சிகரம், மகம் - மகநட்சத்திரம்; யாகம், மருவும் - பொருந்தும்.

444. 'போதன், சிரித்துப் புரம் துடைத்தான், தேவரொ டும் அண்டம் விரித்து, புரந்து உடைத்தான் வெற்பு, சீதம் கொள் சாரலினும், சீர் மறையோர் இல் இடத்தும்—வே தம் க(ண்)ணால் வளரும், வேதங்கள் நால் வளரும்—வேங்கடமே,' என இயைக்க.

போதன் - பிரமன், புரம் துடைத்தான் - முப்புரங்களை அழித்த சிவன், அண்டம் - உலகங்களை, விரித்து - படைத்து, புரந்து - காத்து, உடைத்தான் - அழித்தவனாகிய திருமாலின், வெற்பு - மலை, சீதம் - குளிர்ச்சி, வே - மூங்கில்கள், கண்ணால் - கணுக்களுடன், இல் - வீடு, வேதங்கள் நால் - (இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும்) வேதங்கள் நான்கும், வளரும் - வளர்தற்கு இடமான.

445. 'வல் கோடு கூர் இரு வராகனூர்—கோகன்கை, பூமி என்னும் ஓர் இருவர் ஆகனூர்—ஊர், நல் கோடு போலும் முலை

கூரிருவ ராகனூர் கோகனகை பூமியென்னும்
ஓரிருவ ராகனூ ரூர்.

446] [அகூ

கோடஞ்சுங் கோதையர்கள் கொங்கையினுங் குஞ்சரத்தும்
வேடன் சரந்துரக்கும் வேங்கடமே - சேடனெனும்
ஓர்பன் னகத்திடந்தா னுற்றா னிரணியனைக்
கூர்பன் னகத்திடந்தான் குன்று.

447] [அச

நாரியர்தங் கூந்தலினு நாலு மருவியினும்
வேரினறுஞ் சாந்தொழுகும் வேங்கடமே - பாரினுளார்
அற்பசுவர்க் கத்தா ரறிவரியார் முன்மேய்த்த
நற்பசு வர்க்கத்தார் நாடு.

---

நாரியரும், சண்பகத்தின் மெல் கோடும்—கற்பு அகம் சேர், தற்பகம் சேர்—வேங்கடமே,' என இயைக்க.

வல் கோடு - வலிய கோரத்தந்தங்கள், கூர் - வளைந்துள்ள, இரு வராகனூர் - பெரிய சுவேதவராக மூர்த்தியும், கோகனகை - தாமரையில் எழுந்தருளிய இலக்குமி, பூமி - பூதேவி, ஓர் - ஒப்பற்ற, ஆகனூர் - (தழுவும்) மார்பையுடையவருமான திருமாலின், நல் கோடு - அழகிய யானைத்தந்தம், நாரியர் - பெண்டிர், மெல் கோடு - மெல்லிய (உச்சிக்) கிளைகள், கற்பகம் - (தேவருலகி லுள்ள) கற்பக விருக்ஷம்.

446. 'சேடன் எனும் ஓர் பன்னகத்து இடம் உற்றான்—இரணியனைக் கூர் பல் நகத்து இடந்தான்—குன்று, கோடு அஞ்சும் கோதையர்கள் கொங்கையினும், குஞ்சரத்தும்—வேள் தன் சரம் துரக்கும், வேடன் சரம் துரக்கும்—வேங்கடமே,' என இயைக்க.

சேடன் - ஆதிசேஷன், ஓர் பன்னகத்து இடம் - ஒப்பற்ற பாம்பினிடத்தில், உற்றான் - பொருந்தியவனும், நகத்து - நகங்களால், இடந்தான் - பிளந்தவனுமாகிய திருமாலின், கோடு - யானைத்தந்தங்கள், அஞ்சும் - (உவமையாதற்கு) அஞ்சுகின்ற, குஞ்சரத்தும் - யானைகளின்மீதும், வேள் - மன்மதன், சரம் - அம்பு, துரக்கும் - செலுத்தும்.

447. 'பாரின் உ(ள்)ளார், அற்ப சுவர்க்கத்தார் அறிவு அரியார்—முன் மேய்த்த நல் பசு வர்க்கத்தார்—நாடு, நாரியர் தம் கூந்தலினும், நாலும் அருவியினும்—வேரி நறுஞ்சாந்து ஒழுகும், வேரின் அறும் சாந்து ஒழுகும்—வேங்கடமே,' என இயைக்க.

448] [அரு

மாதரார் கண்ணு மலைச்சார லுங்காமர்
வேதமாற் கஞ்செறியும் வேங்கடமே - பாதமாம்
போதைப் படத்துவைத்தார் போர்வளைய மாற்றரசர்
வாதைப் படத்துவைத்தார் வாழ்வு.

449] [அசு

எத்திக்குங் காம்பு மெயினருமா ரத்தினையே
வித்திக் கதிர்விளைக்கும் வேங்கடமே - தித்திக்குங்
காரிமா றன்பாவார் காதலித்தார் தம்பிறவி
வாரிமா றன்பாவார் வாழ்வு.

---

பாரின் - பூமியில், அற்ப சுவர்க்கத்தார் - தாழ்ந்த சுவர்க்க லோகத்திலுள்ளவர், அறிவு அரியார் - அறிய முடியாதவரும், முன் - கிருஷ்ணாவதார காலத்தில், நாரியர் - பெண்டிர், நாளும் அருவி - கீழ் நோக்கிப் பாயும் மலையாறுகள், வேரி நறுஞ்சாந்து - மணமுடைய நல்ல மயிர்ச் சாந்து, வேரின் அறும் சாந்து - வேரி னின்று அறுபடும் சந்தன மரங்கள், ஒழுகும் - பரவும், புரண் டோடி வரும்.

448. 'பாதம் ஆ(கு)ம் போதைப் படத்து வைத்தார்—போர் மாறு அரசர் வளைய, வாதை படத் துவைத்தார்—வாழ்வு, மாதரார் கண்ணும், மலைச்சாரலும்—காமர் வேத மாற்கம் செறியும், காமர் வே த(ம்)மால் கம் செறியும்—வேங்கடமே,' என இயைக்க.

பாதம் ஆகும் போது - திருவடிகளாகிய தாமரைகள், படத்து - (காளியன் என்னும் பாம்பின்) படத்தில், போர் - சண்டையில், மாறு அரசர் - பகையரசர், வளைய - (தம்மைச்) சூழ்ந்துகொள்ள, வாதை பட - (அவர்கள்) துன்பமடையும்படி, துவைத்தார் - அழித்தவருமான திருமாலின், காமர் வேத மாற்கம் - மன்மதனுரின் வேதமாகிய காமசாஸ்திர வழியில், காமர் வே - அழகிய மூங்கில்கள், த(ம்)மால் கம் செறியும் - தமது நீண்ட உருவத்தால் வானத்தை அளாவும், 'மாற்கம் - மார்க்கம்' சிலேடைப் பொருள் நோக்கி விகாரப்பட்டது. "கம் - ஆகாயம்.

449. 'தித்திக்கும் காரி மாறன் பாவார்—காதலித்தார்தம் பிறவி வாரி மாறு அன்பு ஆவார்—வாழ்வு, எத்திக்கும் காம்பும், எயினரும்—ஆரத் தினையே, ஆரத்தினையே—வித்திக் கதிர் விளைக் கும் வேங்கடமே,' என இயைக்க.

காரி மாறன் பாவார் - காரி என்பவரின் புதல்வரான நம்மாழ்வாரின் திருப்பாசுரங்களை ஏற்றருளியவரும், காதலித்

450] [அள

பாரோடு கான்யாறும் பல்களிறு நந்தவனம்
வேரோ டலைத்தீர்க்கும் வேங்கடமே—காரோதஞ்
சுட்டகரு விற்படையார் தொண்டரைமீண் டேழுவகைப்
பட்டகரு விற்படையார் பற்று.

451] [அஅ

நன்காமர் வண்டினமு நால்வாய் மதகரியு
மென்கா மரமுழக்கும் வேங்கடமே—புன்காமம்
ஏவார் கழலா ரெனதுளத்தி லென்றலைவை
பூவார் கழலார் பொருப்பு.

தார்தம் - விரும்பினவராகிய அடியவரின், பிறவி வாரி - பிறப்பாகிய சமுத்திரம், மாறு - தொலைதற்குக் காரணமாகும், அன்பு ஆவார் - அன்பின் மயமாலாருமாகிய திருமாலின், காம்பும் - மூங்கில்களும், எயினரும் - வேடரும், ஆரத்தினையே வித்தி - முத்தையே உதிர்த்து, ஆரத் தினையே வித்தி - மிகுதியாகத் தினையையே விதைத்து, கதிர் விளக்கும் - ஒளியை உண்டாக்கும், கதிர்களை விளையச் செய்யும்.

450. 'கார் ஓதம் சுட்ட கரு வில் படையார்—தொண்டரை மீண்டு எழுவகைப்பட்ட கருவில் படையார்—பற்று, பார் ஓடு கான் யாறும், பல்களிறும்—நம் தவனம் வேர் ஓடலைத் தீர்க்கும், நந்தவனம் வேரோடு அலைத்து ஈர்க்கும்—வேங்கடமே,' என இயைக்க.

கார் ஓதம் சுட்ட - கரிய சமுத்திரத்தை வெப்பமடையச் செய்த, கரு வில் படையார் - பெரிய வில்லாயுதத்தை உடையவரும், கருவில் - பிறப்பில், படையார் - தோன்றச் செய்யாதவருமாகிய திருமாலின், பார் - பூமியில், ஓடு கான் யாறும் - (மலையிலிருந்து பூமியை நோக்கிப்) பாய்கின்ற காட்டாறுகளும், பல் களிறும் - பல ஆண் யானைகளும், நம் தவன வேர் ஓடலைத் தீர்க்கும் - நமது தாகத்தையும் வேர்வை வழிதலையும் நீக்கும், நந்தவனம் - பூந்தோட்டமரங்களை, அலைத்து ஈர்க்கும் - அசைத்து இழுக்கும்.

451. 'புன் காமம் ஏவார்—எனது உ(ள்)ளத்தின் கழலார்—என் தலை வை பூ ஆர் கழலார்—பொருப்பு, நல் காமர் வண்டு இனமும், நால் வாய் மதகரியும்—மெல் காமரம் முழக்கும், மெல் கா மரம் உழக்கும்—வேங்கடமே,' என இயைக்க.

புன் காமம் ஏவார் - இழிவான காமத்திற் செலுத்தாதவரும், கழலார் - நீங்காதவரும், பூ ஆர் கழலார் - தாமரை மலர்போன்ற

452] [அகூ

பாம்புங் குளிர்சந்தின் பக்கத்தி னிற்கின்ற
வேம்பு மருத்துவக்கும் வேங்கடமே—காம்புகரம்
ஆனவரை நன்குடையா ராளாய்த் தொழுதேத்து
மானவரை நன்குடையார் வாழ்வு.

453] [கூ0

சாரு மருவிதவழ் சாரலுஞ்செஞ் சந்தனத்தின்
வேரு மரவமறா வேங்கடமே—நேரு
மதுகையிட வர்க்கறுத்தார் மாமலரோன் சாப
மதுகையிட வர்க்கறுத்தார் வாழ்வு.

---

திருவடிகளையுடையவருமாகிய திருமாலின், பொருப்பு - திருமலை, நல்சாமர் வண்டு இனமும் - சிறந்த அழகிய வண்டுகளின் கூட்டமும், நால்வாய் - தொங்கும் வாயையுடைய, மதகரியும் - மத யானைகளும், மெல் காமரம் முழக்கும் - இனிய இசையை இசைக்கும், மெல் கா மரம் உழக்கும் - அழகிய சோலையில் உள்ள மரங்களை முறித்துத் துவைக்கும்.

452. 'கரம் காம்பு ஆன வரை நல் குடையார்—ஆளாய்த் தொழுது ஏத்தும் மானவரை நன்கு உடையார்—வாழ்வு, பாம்பும், குளிர் சந்தின் பக்கத்தில் நிற்கின்ற வேம்பும் - மருத்து உவக்கும், மருத் துவக்கும்—வேங்கடமே,' என இயைக்க.

கரம் காம்பு ஆன—(தமது) கையையே காம்பெனக்கொண்ட, வரை - (கோவர்த்தனம் என்னும்) மலையாகிய, நல் குடையார் - அழகிய குடையையுடையவரும், ஆளாய் - தொண்டராய், ஏத்தும் - துதிக்கும், மானவரை - மனிதரை, நன்கு உடையார் - திரளாக உடையவருமான திருமாலின், சந்தின் - சந்தன மரத்தின், வேம்பும் - வேப்பமரமும், மருத்து உவக்கும்- காற்றை உணவாக விரும்பும், மருத் துவக்கும் - வாசனை வீசத் தொடங்கும்.

453. 'நேரும் மது கையிடவர்க் கறுத்தார்—மாமலரோன் சாபம் மதுகை இடவர்க்கு அறுத்தார்—வாழ்வு, சாரும் அருவி தவழ் சாரலும், செஞ்சந்தனத்தின் வேரும் - அரவம் அறா வேங் கடமே,' என இயைக்க.

நேரும்—(தம்மை) எதிர்த்த, மது கையிடவர் - மதுகைடபர் என்னும் அசுரரை, கறுத்தார் - கோபித்துக் கொன்றவரும், மலரோன் சாபம் - பிரம சாபத்தை, மதுகை இடவர்க்கு - வலிய ரிஷப வாகனரான சிவபிரானுக்கு, அறுத்தார் - நீக்கியவரு மான திருமாலின், சாரல் - மலைப்பக்கம், அரவம் அறா - ஓசை நீங்காத, பாம்புகள் நீங்காத.

454] [கூ௩

மண்மட்டுத் தாழ்சுனையும் வட்டச் சிலாதலமும்
விண்மட்டுத் தாமரைசேர் வேங்கடமே—யெண்மட்டுப்
பாதமுன்னி னைந்தார் பரமபதஞ் சேர்கவென் று
போதமுன்னி னைந்தார் பொருப்பு.

455] [கூ௨

போதா விருசுடரும் போதுதற்கு மோதுதற்கும்
வேதாவி னன்முடியா வேங்கடமே—மாதாவின்
வீங்குதனத் துக்கினியான் விம்மியழா தாட்கொண்டான்
றாங்குதனத் துக்கினியான் சார்பு.

456] [கூ௩

பேய்க்குமொரு பேய்போன்று பித்தாய்த் திரிவோர்க்கும்
வேய்க்குமணி முத்திவரும் வேங்கடமே—வாய்க்கமுதூர்

---

454. 'பாதம் எள் மட்டு உன்னி நைந்தார் பரமபதம் சேர்க என்று போத முன் நினைந்தார் பொருப்பு, மண்மட்டுத் தாழ்சுனையும், வட்டச் சிலாதலமும்—விள் மட்டுத் தாமரை சேர், விண் மட்டுத் தா மரை சேர்—வேங்கடமே,' என இயைக்க.

எள் மட்டு உன்னி - எள்ளளவு நினைத்து, நைந்தார் - மனம் கசிந்தவர், போத - மிகுதியாக, நினைந்தார் - எண்ணியவரான திருமாலின், பொருப்பு - திருமலை, மண் மட்டு - பூமி வரையில், தாழ் சுனையும் - ஆழ்ந்த நீர்ச்சுனைகளும், சிலாதலமும் - வட்டக் கற்களின் இடமும், தாமரை சேர் - தாமரைமலர் பொருந்தியுள்ள, தா மரை சேர் - தாவுகின்ற மான்கள் பொருந்தியுள்ள.

455. 'மாதாவின் வீங்கு தனத்துக்கு இனியான் விம்மி அழாது ஆட்கொண்டான்—தாங்கு தனத்துக்கு இனியான் - சார்பு, போதா இரு சுடரும் போதுதற்கும், ஓதுதற்கும் - வே தாவினால் முடியா, வேதாவினால் முடியா - வேங்கடமே,' என இயைக்க.

மாதாவின் - தாயின், வீங்கு தனத்துச்கு - பருத்த ஸ்தனங்களைச் சுவைப்பதற்கு, தன் நத்துக்கு - தனது பாஞ்சசன்னியம் என்னும் சங்குக்கு, போதா இரு சுடரும் - (யுகாந்த மட்டும்) அழியாத சூரிய சந்திரர் இருவரும், போதுதற்கும்—(ஆகாயத்தில்) சஞ்சரிப்பதற்கும், ஓதுதற்கும் - துதித்தற்கும், வே தாவினால்- மூங்கில்கள் உயர்ந்து ஆகாயத்தைக் கடந்து சென்றால், வேதாவினால் - பிரமனாலும், முடியா - இயலாத.

456. •'வாய்க்கு அமுத ஊர் வண்மைப்பேர் ஆயிரம் •மன்னினன்—மாவலிபால் தண்மைப் பேராய் இரந்தான்—சார்பு,

வண்மைப்பே ராயிரந்தான் மன்னினான் மாவலிபாற்
றண்மைப்பே ராயிரந்தான் சார்பு.

457] [கூச

வாழ்க்கைமனை நீத்தவரும் வாளரியு மாதங்க
வேட்கை மறந்திகழும் வேங்கடமே—தோட்கைவிழ
மாகவந்த னைக்கழித்தார் வாழிலங்கைப் பாதகரை
லோகவந்த னைக்கழித்தா ரூர்.

458] [கூரு

கூட்டு தவத்தவருங் கோளரிக ளின்றொகையும்
வேட்டு வரம்பொழியும் வேங்கடமே—மோட்டுமதத்

---

பேய்க்கும் ஒரு பேய் போன்று பித்தாய்த் திரிவோர்க்கும், வேய்க்கும்—அணி முத்தி வரும், மணி முத்து இவரும்—வேங் கடமே,' என இயைக்க.

அமுது ஊர் - அமுதம் போலும் இன்பம் சுரக்கின்ற, வண்மைப்பேர் - வளமான திருநாமங்கள், மன்னினான் - பொருந்தப் பெற்றவனும், மாவலிபால் - மகாபலி சக்கரவர்த்தியி னிடம், தண்மைப் பேராய் - எளிய பேர்வழியாய், இரந்தான் - (மூவடி மண்ணை) யாசித்தவனுமாகிய திருமாலின், சார்பு - சார் தற்குரிய இடம், பித்தாய் - பைத்தியமாகி, வேய்க்கும்-மூங்கிலுக் கும், அணி முத்தி வரும் - அழகிய மோட்சம் கிட்டும், மணி முத்து இவரும் - அழகிய முத்துகள் பொருந்தும்.

457. 'மா கவந்தனைத் தோள் கை விழக் கழித்தார்—இலங்கை வாழ் பாதகரை லோக வந்தனைக்கு அழித்தார்—ஊர், மனை வாழ்க்கை நீத்தவரும், வாள் அரியும் - மாது அங்கம் வேட் கை மறந்து இகழும், மாதங்க வேட்கை மறம் திகழும் - வேங் கடமே,' என இயைக்க.

மா கவந்தனை - பெரிய கபந்தன் என்னும் அசுரனை, கழித் தார் - வெட்டி வீழ்த்தியவரும், பாதகரை - பாவிகளை, லோக வந்தனைக்கு - உலகத்தார் தம்மை வேண்டியமைக்கு இரக்கம் கொண்டு, அழித்தார் - கொன்றவருமாகிய திருமாலின், நீத்த வரும் - துறந்த முனிவரும், வாள் அரியும் - கொடுமை வாய்ந்த சிங்கங்களும், மாது அங்கம் வேட்கை மறந்து இகழும் - பெண் ணுடலை விரும்புதலை முற்றும் மறந்து இகழக் காரணமாகும், மாதங்க வேட்கை மறம் திகழும்-யானையைக் கொல்லும் விருப்பும் வீரமும் விளங்கக் காரணமாகும்.

458. 'மோட்டு மதத் தந்திக்கு அமலத்தார் தாம் பெறா உம் வீடு அளித்தார்—உந்திக் கமலத்தார்—ஊர், கூட்டு தவத்த

*தந்திக் கமலத்தார் தாம்பெறாஉம் வீடளித்தார்*
*உந்திக் கமலத்தா ரூர்.*

**459]** [௬௬

*வஞ்ச மடித்திருப்பார் வாக்குங் கலைக்கோடும்*
*விஞ்ச மடித்திருக்கார் வேங்கடமே—கஞ்சப்*
*பிரமாநந் தத்தான் பிரபஞ்ச மாய்த்த*
*பரமாநந் தத்தான் பதி.*

**460]** [௬௭

*சேலஞ்சுங் கண்மடவார் தேங்குழலுங் கோங்கினமு*
*மேலஞ்சு லர்க்கமார் வேங்கடமே—கோலஞ்சேர்*

---

வரும், கோளரிகளின் தொகையும்—வேட்டு வரம் பொழியும், வேட்டுவர் அம்பு ஒழியும்—வேங்கடமே,' என இயைக்க.

மோட்டு மதத் தந்திக்கு - உயர்வாகிய மத யானைக்கு, அமலத்தார்தாம் பெறாஉம் வீடு - குற்றமற்றவராகிய ஞானியரே அடைதற்கு உரிய மோட்சத்தை, உந்திக் கமலத்தார் - திருநாபித் தாமரையை உடையவருமான திருமாலின், கூட்டு தவத்தவரும் - சேர்க்கும் தவத்தையுடைய முனிவரும், கோளரிகளின் தொகையும் - வலிய சிங்கங்களின் கூட்டமும், வேட்டு வரம் பொழியும் - விரும்பி வரங்களை வழங்குவதற்கு இடமான, வேட்டுவர் - வேடர்களின், அம்பு ஒழியும் - பாணங்களிலிருந்து விலகும்.

459. 'கஞ்சப் பிரமா நந்தத் தான் பிரபஞ்சம் மாய்த்த பரம ஆநந்தத்தான் பதி, வஞ்சம் மடித்து இருப்பார் வாக்கும், கலைக்கோடும்—விஞ்ச மடித்த இருக்கு ஆர், விஞ்ச மடித் திருக்கு ஆர்—வேங்கடமே,' என இயைக்க.

கஞ்சப் பிரமா - (தனது) உந்தித் தாமரையில் தோன்றிய பிரமனும், நந்த - அழிய, பிரபஞ்சம் மாய்த்த - (பிரளய காலத்தில்) உலகங்களை அழித்த, பரம ஆநந்தத்தான் - பேரானந்தத்தையுடைய திருமாலின், பதி - திருப்பதி, மடித்து - ஒழித்து, வாக்கும் - வாயும், கலைக்கோடும் - கலைமானின் கொம்புகளும், விஞ்ச - அதிகமாக, மடித்த இருக்கு ஆர் - பன்னிப்பன்னி உச்சரிக்கப்பட்ட வேதங்கள் பொருந்திய, மடித் திருக்கு ஆர் - வளைவையுடைய முறுக்குப் பொருந்திய.

460. 'கோலம் சேர் மாரில் அலங்கு ஆரத்தார்—மற்றும் பல் பூண் அணிந்த காரில் அலங்காரத்தார்—காப்பு, சேல் அஞ்சும் கண் மடவார் தேம் குழலும், கோங்கு இனமும்—மேல்

மாரிலலங் காரத்தார் மற்றும்பல் பூணணிந்த
காரிலலங் காரத்தார் காப்பு.

461] [௬அ

கோய்யு மலர்ச்சோலைக் கொக்கும் பிணியாளர்
மெய்யும் வடுத்தவிரும் வேங்கடமே—நையுஞ்
சனனந் தகனர் தலையிலிதோள் சாய்த்த
சினனந் தகனர் சிலம்பு.

462] [௬௬

நேர்க்கவலை நோயினரு நீடுசிலை வேடுவரும்
வேர்க்கவலை மூலங்கல் வேங்கடமே—கார்க்கடன்மேற்

அஞ்சு வர்க்கம் ஆர், மேல் அம் சுவர்க்கம் ஆர்—வேங்கடமே,' என இயைக்க.

கோலம் - அழகு, மாரில் - மார்பில், அலங்கு ஆரத்தார் - அசையும் முத்து மாலையை உடையவரும், பூண் - ஆபரணங்களை, காரில் - மேகம் போலும், அலங்காரத்தார் - அழகையுடையவரு மான திருமாலின், காப்பு - பாதுகாப்புக்குரிய இடம், சேல் - கெண்டை மீன்கள், அஞ்சும் - (ஒப்பாகாமல்) பயந்து நீங்கத் தருந்த, தேம் - நறுமணம், கோங்கு இனமும் - கோங்கமரக் கூட்டமும், மேல் அஞ்சு வர்க்கம் ஆர் - மேலான (முடி, கொண்டை, குழல், சுருள், பனிச்சை என்னும்) ஐந்து வகை பொருந்திய, மேல் அம் சுவர்க்கம் ஆர் - மேலிடத்துள்ள அழகிய சுவர்க்க லோகத்தை அளாவியுள்ள.

461. 'நையும் சனன அந்தகனர்—தலை இலி தோள் சாய்த்த சினன் நாந்தகனர்—சிலம்பு, கொய்யும் மலர்ச்சோலைக் கொக்கும், பிணியாளர் மெய்யும்—வடுத்து அவிரும், வடுத் தவிரும்—வேங்கடமே,' என இயைக்க.

நையும் - (உயிர்) வருந்தக் காரணமாகும், சனன அந்தகனர் - பிறப்பிற்கு முடிவைச் செய்பவரும், தலை இலி - தலையில்லாதவ னான கபந்தனுடைய, சினன் - கோபத்தையுடைய, நாந்தகனர் - நாந்தகம் என்னும் வாளையுடையவருமான திருமாலின், சிலம்பு - திருமலை, கொக்கும் - மாமரமும், மெய்யும் - உடம்பும், வடுத்து அவிரும் - பிஞ்சு அரும்பி விளங்கும், வடுத் தவிரும் (நோயாகிய) குற்றம் நீங்கும்.

462. 'கார்க்கடல் மேல் தாண்டும் காலத்து இறப்பார் தம்மை விழுங்கி மீண்டும் காலக் கனிவாய் திறப்பார் வெற்பு, நேர்க் கவலை நோயினரும், நீடு சிலை வேடுவரும்—வேர்க்க அலை மூலம் கல், வேர்க் கவலை மூலம் கல் - வேங்கடமே,' என இயைக்க.

ணுண்டுங்கா லத்திறப்பார் தம்மைவிழுங் கிக்கனிவாய்
மீண்டுங்கா லத்திறப்பார் வெற்பு.

463] [௧௦௦

தண்டா மரைச்சுனையிற் சாதகமும் வேடுவரும்
விண்டாரை நாடுகின்ற வேங்கடமே—தொண்டாக்கி
ஏவத் தனக்குடையா ரென்னைமுன் னாளெடுத்த
கோவத் தனக்குடையார் குன்று.

464] [௧௦௧

வாழரியுஞ் சந்தனந்தோய் மாருதமுந் தாக்குதலால்
வேழ மருப்புகுதும் வேங்கடமே—நீழலமர்
பஞ்சவடி காட்டினான் பாரளப்பான் போலெவர்க்குங்
கஞ்சவடி காட்டினான் காப்பு.

---

மேல் தாண்டும் காலத்து - பொங்கி மேலெழுகின்ற பிரளய காலத்தில், கால - வெளிப்படுத்த, கனிவாய் - கொவ்வைக்கனி போலச் சிவந்த திருவாயை, வெற்பு - திருமலை, நேர்க்கவலை - அதிகமான துன்பத்தை விளைக்கின்ற, நீடு சிலை - நீண்ட வில்லை யுடைய, வேர்க்க - வியர்வையுண்டாக, ஆலை மூலம் கல் - (திருப் பாற்) கடலில் துயிலும் ஆதிமூலத்தைத் தியானிக்கின்ற, வேர்க் கவலை மூலம் கல் - வேரையுடைய கவலைக்கிழங்கைத் தோண்டு கின்ற.

463. 'தொண்டு ஆக்கி ஏவ என்னைத் தனக்கு உடையார்—முன் நாள் எடுத்த கோவத்தனக் குடையார்—குன்று, தண் தாமரைச் சுனையில் சாதகமும், வேடுவரும்—விண் தாரை நாடு கின்ற, விண்டாரை நாடுகின்ற—வேங்கடமே,' என இயைக்க.

தொண்டு ஆக்கி ஏவ - அடிமையாகச் செய்து கட்டளையிட, முன் நாள் - கிருஷ்ணாவதார காலத்தில், சாதகமும் - சாதகப் பறவையும், விண் தாரை - ஆகாயத்திலிருந்து விழும் மழைத் தாரையை, விண்டாரை - பகைவரை, நாடும் - விரும்பும், தேடும்.

464. 'நீழல் அமர் பஞ்சவடி காட்டினான்—பார் அளப் பான்போல் எவர்க்கும் கஞ்ச அடி காட்டினான்—காப்பு, வாழ் அரியும், சந்தனம் தோய் மாருதமும் தாக்குதலால்—வேழ மருப்பு உகுதும், வேழம் மருப் புகுதும்—வேங்கடமே,' என இயைக்க.

நீழல் அமர் - நிழல் பொருந்திய, பஞ்சவடி காட்டினான் - பஞ்சவடி என்னும் காட்டில் தங்கியவனும், பார் - பூமியை, கஞ்ச அடி - தாமரை மலர் போன்ற திருப்பாதங்களை, காட்டி

465] [௧௦௨

எவ்விடமு மாறுதோய்ந் தெல்லோரும் பல்பாம்பும்
வெவ்விடரி னீங்கியெழும் வேங்கடமே—தெவ்விடையேழ்
அட்டவனா கத்தணையா னாதிமறை நூன்மார்க்கம்
விட்டவனா கத்தணையான் வெற்பு.

466] [௧௦௩

பாடு மதுகரமும் பச்சைத் தழைக்குடிலின்
வேடு மணமருவும் வேங்கடமே—நீடு
மகரால யங்கடந்தார் வாழ்வசுதே வர்க்கு
மகரால யங்கடந்தார் வாழ்வு.

---

னான் - காட்டியருளியவனுமான திருமாலின், அரியும் - சிங்கங்களும், சந்தனம் தோய் மாருதமும் - சந்தனமரத்திற் படிந்து வரும் காற்றும், வேழ மருப்பு உகுதும் - யானைகளின் தந்தம் சிந்துகின்ற, வேழம் மருப் புகுதும் - மூங்கிலும் மணம் புகப் பெற்ற.

465. 'தெவ் விடை ஏழ் அட்டவன்—நாகத்து அணையான்—ஆதி மறை நூல் மார்க்கம் விட்டவன் ஆகத்து அணையான்—வெற்பு, எல்லோரும் எவ்விடமும் ஆறு தோய்ந்து வெவ்விடரின் நீங்கி எழும்—பல் பாம்பும் வெவ்விடரின் நீங்கி எழும்—வேங்கடமே,' என இயைக்க.

தெவ் விடை ஏழ் - பகைமை வாய்ந்த ஏழு எருதுகளை, அட்டவன் - வென்றவனும், அணையான் - படுக்கையை உடையவனும், ஆகத்து - மனத்தில், அணையான் - சேராதவனுமான திருமாலின், வெற்பு - திருமலை, எவ்விடமும் - பல இடங்களிலும், தோய்ந்து - முழுகி, வெவ்விடரின் - கொடிய பிறவித் துன்பத்திலிருந்து, வெவ் விடரின் - வெப்பமான மலை வெடிப்பிலிருந்து.

466. 'நீடும் மகர ஆலயம் கடந்தார்—வாழ் வசுதேவர்க்கு மகர்—ஆலயங்கள் தந்தார்—வாழ்வு, பாடும் மதுகரமும், பச்சைத் தழைக்குடிலின் வேடும்—மணம் மருவும்—வேங்கடமே,' என இயைக்க.

நீடும் - விசாலமான, மகர ஆலயம் - கடலை, கடந்தார் - தாண்டியவரும், மகர் - புதல்வரும், ஆலயங்கள் - திருக்கோயில்களை, மதுகரம் - தேன் வண்டு, குடில் - குடிசை, வேடு - வேடர், மணம் மருவும் - வாசனை பொருந்தியுள்ள, கலியாணம் செய்வதற்கு இடமான.

ஆதிதிரு வேங்கடமென் றாயிரம்பே ராணிடமென்
றோதிய வெண்பா வொருநூ றுங்—கோதில்
குணவாள பட்டரிரு கோகனகத் தாள்சேர்
மணவாள தாசன்றன் வாக்கு.

திருவேங்கடமாலை முற்றிற்று.

**அழகிய மணவாளதாசர் திருவடிகளே சரணம்!**

---

467. ஓதிய - சொல்லிய, கோது இல் - குற்றம் இல்லாத, குணவாள பட்டர் - நற்குணமுடையவரான பராசரபட்டர் என்னும் ஆசாரியரின், கோகனகத்தாள் - தாமரை மலர்போன்ற திருவடிகளை, மணவாளதாசன் - அழகிய மணவாளதாசர் , என்னும் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின், வாக்கு - வாய் மொழிகள்.

# 6. திருவேங்கடத்தந்தாதி

## சிறப்புப்பாயிரம்

468] கட்டளைக்கலித்துறை [க

இக்கரை யந்திரத் துட்பட்ட தென்ன விருவினையுட்
புக்கரை மாநொடி யுந்தரி யாதுழல் புன்பிறப்பாம்
எக்கரை நீக்கிப் படித்தாரை யந்த இருவிரசைக்
கக்கரை சேர்க்கு மணவாள தாச னருங்கவியே.

469] காப்பு [உ

நல்லவந் தாதி திருவேங் கடவற்கு நான்விளம்பச்
சொல்லவந் தாதின் வழுபொருட் சோர்வறச் சொல்வித்தருள்
பல்லவந் தாதிசை வண்டார் குருகைப் பரசமயம்
வெல்லவந் தாதி மறைதமி ழாற்செய்த வித்தகனே!

---

468. 'மணவாள தாசன் அருங்கவி படித்தாரை, இக்கு அரை யந்திரத்துள் பட்டது என்ன இரு வினையுள் புக்கு அரைமா நொடியும் தரியாது உழல் புன்பிறப்பு ஆ(கு)ம் எக்கரை நீக்கி அந்த இரு விரசைக்கு அக்கரை சேர்க்கும்,' என இயைக்க.

இக்கு - கரும்பானது, புக்கு - புகுந்து, அரைமா நொடி - வினாடிப்போதில் நாற்பதில் ஒருபங்குநேரம், எக்கர் - மணல்மேடு, இரு விரசைக்கு - பெரிய விரஜா என்னும் நதிக்கு (இது பரமபதத்தின் புறத்திற் பாயும் நதி.)

469. 'பல்லவம் தாது இசை வண்டு ஆர் குருகைப் பரசமயம் வெல்ல வந்து, ஆதி மறை தமிழாற்செய்த வித்தகனே, நல்ல அந்தாதி திருவேங்கடவற்கு நான் விளம்ப, சொல் அவம், தாதின் வழு, பொருள் சோர்வு அறச் சொல்வித்து அருள்,' என இயைக்க.

பல்லவம் - கொழுந்து, தாது - மலர், இஃச வண்டு ஆர் - ரீங்காரம் செய்யும் வண்டுகள் மொய்க்கும், குருகை - திருக்குருகூரில், பரசமயம் - அயல் மதங்களை, வந்து - தோன்றி, ஆதி மறை - பழைய வடமொழி வேதங்களை, வித்தகனே - ஞானியே, சொல் அவம் - சொற்குற்றம், தாதின் வழு - வினைப் (பகுபதங்களின்) பகுதிக் குற்றம், பொருள் சோர்வு - பொருட்குற்றம், அற - நீங்கும்படி, சொல்வித்து அருள் - சொல்லச் செய்தருள்வாயாக.

470] நூல் [கூ

பாதவகுப்பு

திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன சிற்றன்னையால்
தருவேங் கடத்துத் தரைமே னடந்தன தாழ்பிறப்பின்
உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன வுற்றழைக்க
வருவேங் கடத்தும்பி யஞ்சலென் றோடின மால்கழலே.

471] பதி [௪

மாலை மதிக்குஞ்சி ஈசனும் போதனும் வாசவனும்
நூலை மதிக்கும் முனிவரும் தேவரும் நோக்கியந்தி
காலை மதிக்குள்வைத் தேத்தும் திருமலை, கைம்மலையால்
வேலை மதிக்கும் பெருமான் உறைதிரு வேங்கடமே.

472] [௫

வேங்கட மாலை அவியா மதிவிளக் கேற்றியங்கம்
ஆங்கட மாலைய மாக்கிவைத் தோமவன் சேவடிக்கே

470. உற்று அழைக்க, 'கடத்தும்பி, வருவேம்; அஞ்சல்!' என்று ஓடின மால் கழல், திருவேங்கடத்து நிலை பெற்று நின்றன; சிற்றன்னையால் தரு வேம் கடத்துத் தரைமேல் நடந்தன; தாழ்பிறப்பின் உருவேங்கள் தத்துக்கு உளத்தே இருந்தன,' என இயைக்க.

கடத்தும்பி - (கஜேந்திரன் என்னும்) மதயானை, உற்று - (முதலையால்) துன்பமடைந்து, அஞ்சல் - பயப்படாதே, மால் - திருமாலினுடைய, கழல் - திருவடிகள், சிற்றன்னை - கைகேயி, தரு வேம் கடத்து - மரங்கள் வேகின்ற காட்டில், உருவேங்கள் - உருவத்தையுடைய எங்கள், தத்துக்கு - ஆபத்தை ஒழிப்பதற்கு.

471. 'ஏத்தும் திருமலை........பெருமான் உறை திருவேங்கடமே,' என இயைக்க.

மாலை மதி - மாலை நேரத்தில் தோன்றும் பிறைச்சந்திரனைத் தரித்த, குஞ்சி - தலைமயிர் முடியினையுடைய, போதன் - பிரமன், வாசவன் - இந்திரன், நூலை மதிக்கும் - சாத்திரங்களை ஆராயும், அந்தி - மாலையிலும், நோக்கி - கண்டு, மதிக்குள் - அறிவில், ஏத்தும் - துதிக்கும், கைம்மலையால்—(தன்) கைகளாகிய மலைகளால்; வேலை மதிக்கும் - திருப்பாற்கடலைக் கடைந்த.

472. 'அங்கமாம் கடம் ஆலயம் ஆக்கி, அவியா மதி விளக்கு ஏற்றி, வேங்கட மாலை வைத்தோம்; ஈங்கு அட, அவன் சேவடிக்கே கவி மாலை புனைந்தோம்; யாம் கடமால் ஐராவதம் ஏறி இருக்குமது இதின் சீரியதே?' என இயைக்க.

தீங்கட மாலைக் கவிபுனைந் தோம்;இதிற் சீரியதே
யாங்கட மாலையி ராவத மேறி யிருக்குமதே ?

473] [சு

இருக்கா ரணஞ்சொல்லு மெப்பொரு ளின்பமு மெப்பொருட்கும்
கருக்கா ரணமுநற் றாயுநற் றந்தையுங் கஞ்சச்செல்வப்
பெருக்கா ரணங்கின் றலைவனு மாதிப் பெருந்தெய்வமும்
மருக்கா ரணவும் பொழில்வட வேங்கட மாயவனே.

474] [எ

மாயவன் சண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்ணும் விண்ணும்
தாயவன் கண்ணன் கமலமொப் பான்சரத் தாலிலங்கைத்
தீயவன் கண்ணன் சிரமறுத் தான்றிரு வேங்கடத்துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு வைகுந்தந் தூரமன்றே.

---

அங்கமாம் கடம் - உடலாகிய காட்டை, ஆலயம் - திருக்கோயில், மதி விளக்கு - ஞான விளக்கை, தீங்கு அட - பிறவித் துன்பத்தை அழிக்க, கடமால் ஐயிராவதம் - மதமயக்கங் கொண்ட ஐராவதமென்னும் இந்திரனது யானை, இருக்குமது - இருப்பது, இதின் சீரியதே - இதைவிடச் சிறந்ததோ? (அன்று என்றபடி.)

473. 'இருக்கு ஆரணம் சொல்லும் எப்பொருள் இன்பமும், எப்பொருட்கும் கருக் காரணமும், நல் தாயும், நல் தந்தையும், கஞ்சச் செல்வப்பெருக்கு ஆர் அணங்கின் தலைவனும், ஆதிப் பெருந்தெய்வமும் மருக் கார் அணவும் பொழில் வட வேங்கட மாயவனே,' என இயைக்க.

இருக்கு ஆரணம் - இருக்கு வேதம், எப்பொருள் - எல்லாப் பொருள்களின், கருக்காரணம் - உற்பத்திக்காரணம், கஞ்சம் - தாமரை மலர், ஆர் - பொருந்திய, அணங்கு - திருமகள், மருக் கார் அணவும் பொழில் - மணமும் மேகமும் பொருந்தும் சோலைகளையுடைய, மாயவன் - திருமால்.

474. 'மாயவன்—கண் நன் கமலம் ஒப்பான்—தீய வன் கண்ணன் சிரம் அறுத்தான்—தூயவன்கண் அன்பு உடையார்க்கு வைகுந்தம் தூரம் அன்று,' என இயைக்க.

மணி வண்ணன் - நீலமணி போலும் நிறமுடையவன், விண் - ஆகாயம், தாயவன் - தாவி அளந்தவன், நல் கமலம் - நல்ல செந்தாமரை மலர், இலங்கைத் தீய வன்கண்ணன் - இலங்கையில் வாழ்ந்த மிக்க கொடுமை வாய்ந்தவனை இராவணனுடைய, சிரம்-தலைகளை, சரத்தால் - அம்பினால், தூயவன்கண் - பரிசுத்தனிடத்தில்.

475] [௮

தூர விரும்புண் டரிக்குமிக் காயத்தைச் சூழ்பிணிகாள்!
நேர விரும்புண் டரர்க்கருள் வானெடு வேங்கடத்தான்
ஈர விரும்புண்ட ரீகப்பொற் பாதங்க ளென்னுயிரைத்
தீர விரும்புண்ட நீராக்கு மாறுள்ளஞ் சேர்ந்தனவே.

476] [௯

சேர்ந்து கவிக்கும் முடிகவித் தாய்சிறி யேனிதயம்
சார்ந்து கவிக்கும் வரமளித் தாய்கொண்டல் தண்டலைமேல்
ஊர்ந்து கவிக்கும் வடமலை யாய்!பஞ் சொழுக்கியபால்
வார்ந்து கவிக்கும் பொழுதிலஞ் சேலென்று வந்தருளே.

477] [௧௦

'வந்திக்க வந்தனை கொள்,'என்று கந்தனும் மாதவரும்
சிந்திக்க வந்தனை; வேங்கட நாத!பல் சீவன்றினும்
உந்திக்க வந்தனைச் செற்றாய்! உனக்குரித் தாயபின்னும்
புந்திக்க வந்தனைச் செய்தைவர் வேட்கை பொருமென்னையே.

---

475. 'நேர் அவிரும் புண்டரர்க்கு அருள்வான் நெடுவேங்கடத்தான் ஈர இரும்புண்டரீகப் பொற்பாதங்கள், என் உயிரைத் தீர இரும்பு உண்ட நீர் ஆக்குமாறு உள்ளம் சேர்ந்தன; (ஆதலால்) புண் தரிக்கும் இக்காயத்தைச் சூழ்பிணிகாள், தூரம் இரும்,' என இயைக்க.

நேர் அவிரும் புண்டரர்க்கு - ஊர்த்துவ புண்டரமான திருமண் காப்பையுடையவரான வைணவர்க்கு, ஈர இரும்புண்டரீகம் - குளிர்ச்சியான பெரிய செந்தாமரை மலர், தீர - முழுமையும், இரும்பு உண்ட நீர் - பழுக்கக்காய்ந்த இரும்பு உட்கொண்ட நீர் போல, உள்ளம் - மனத்தில், காயத்தை - உடம்பை, பிணிகாள் - நோய்களே.

476. 'வடமலையாய், 'அஞ்சேல்!' என்று வந்து அருள்,' என இயைக்க.

சேர்ந்து - (கிஷ்கிந்தையை) அடைந்து, கவி - குரங்கினத் தவனான சுக்கிரீவன், கவித்தாய் - சூட்டினாய், இதயம் - மனத்தில், உகவிக்கும் - மகிழ்விக்கும், கொண்டல் - மேகம், தண்டலைமேல் ஊர்ந்து கவிக்கும் - சோலையின்மேல் தவழ்ந்து மூடிக்கொள்ளும், வடமலையாய் - திருவேங்கடமலையில் எழுந்தருளியவனே, பஞ்சு ஒழுக்கிய - பஞ்சால் நனைத்து ஒழுக விடப்பட்ட, வார்ந்து உக - (உட்செல்லாமல்) வழிந்து சிந்த, விக்கும் பொழுதில் - விக்கலெழும் இறுதிக்காலத்தில்.

477. 'ஐவர் வேட்கை புந்திக்கு அவந்தனைச் செய்து என்னைப் பொரும்,' என இயைக்க.

தலைவனைப் பிரிந்து, மாலைப்பொழுதுக்கும் அன்றிற்
478] குரலுக்கும் ஆற்றாது வருந்தும் தலைவிக்குத் தோழி இரங்கல் [சக

பொருதரங் கத்தும் வடத்தும் அனந்த புரத்துமன்பர்
கருதரங் கத்துந் துயிலவேங் கடவ!கண் பார்த்தருள்வாய்:
நிருதரங் கத்து நிறம்போல் வருமந்தி நேரத்தன்றில்
ஒருதரங் கத்தும் பொழுதும் பொருளென் ஒருவல்லியே!

479] தலைவனைப்பிரிந்த தலைவி கடலொடு புலம்பல் [சஉ

ஒருமா தவனி ஒருமாது செல்வி உடனுறைய
வருமா தவனின் மகுடம்வில் வீச வடமலைமேல்
கருமா தவன்கண்ண னின்பாற் றிருநெடுங் கண்வளர்கைக்
கருமா தவமென்ன செய்தாய்? பணியெனக் கம்புதியே!

---

வந்திக்க - (யாம்) வணங்க, வந்தனை கொள் - அவ் வணக்கத்தை ஏற்றுக்கொள்க, கந்தன் - முருகக்கடவுள், மாதவர் - முனிவர், சிந்திக்க - தியானம் செய்ய, வந்தனை - (அவர்கட்குக் காட்சியளிக்க) வந்தாய், பல் சீவன் தின்னும் உந்திக் கவந்தனை - பல உயிர்களையும் தின்னும் வயிற்றையுடைய கவந்தன் என்னும் அசுரனை, செற்றாய் - அழித்தவனே, உனக்கு உரித்து ஆய பின்னும் - (என்னுயிர்) உனக்கு உரியதாய்விட்ட பின்பும், ஐவர் வேட்கை - பஞ்சேந்திரியங்களின் ஆசை, புந்திக்கு அவந்தனைச் செய்து - (என்) அறிவிற்குக் கேட்டை விளைத்து, என்னைப் பொரும் - என்னைத் தாக்கும். (இது என்ன கொடுமை!)

478. 'பொரு தரங்கத்தும், வடத்தும், அனந்த புரத்தும், அன்பர் கருது அரங்கத்தும் துயில் வேங்கடவ, நிருதர் அங்கத்து நிறம்போல் வரும் அந்தி நேரத்து அன்றில் ஒரு தரம் கத்தும் பொழுதும் என் ஒரு வல்லி பொருள்! கண் பார்த்து அருள் வாய்,' என இயைக்க.

பொரு தரங்கத்தும் - மோதும் அலைகளையுடைய திருப்பாற் கடலிலும், வடத்தும் - ஆலிலையிலும், அனந்தபுரத்தும் - திருவனந்தபுரம் என்னும் திருப்பதியிலும், அன்பர் கருது அரங்கத்தும் - அடியவர் சிந்திக்கும் திருவரங்கத்திலும், துயில் - அறிதுயில் புரிகின்ற, வேங்கடவ - திருவேங்கடமுடையானே, நிருதர் அங்கம் - அரக்கரின் உடல், அந்தி - மாலை, அன்றில் - அன்றிற்பறவை, ஒரு வல்லி - தன்னைந்தனி நின்ற பூங்கொடி போன்ற தலைவி, பொருள் - (உன் பிரிவைச்) சகியாள். (அன்றில் - துணையைப் பிரிந்தால் ஆற்றாது கதறும் ஒரு பறவை.)

479. 'அம்புதியே, ஒரு மாது அவனி, ஒரு மாது செல்வி உடன் உறைய, வரும் ஆதவனின் மகுடம் வில் வீச, வடமலை

480] [கரு

அம்பரந் தாமரை பூத்தலர்ந் தன்ன அவயவரை
அம்பரந் தாமரை அஞ்சன வெற்பரை ஆடகமாம்
அம்பரந் தாமரை சூழ்ந்தாரை வாழ்த்திலர் ஐம்புலனும்
அம்பரந் தாமரை போற்றிரி வாரை அகல்நெஞ்சமே!

481] தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல் [கச

நெஞ்சுகந் தத்தை உமக்குரைத் தேன் இற்றை நீடிரவொன்
றஞ்சுகந் தத்தை விளைக்குமென் னாசையதா மிதழ்சொல்
கிஞ்சுகந் தத்தை யனையீர்! இங் கென்னைக் கெடாதுவிடும்
விஞ்சுகந் தத்தை விளைக்குந் துழாயண்ணல் வேங்கடத்தே.

---

மேல் கரு மாதவன் கண்ணன் நின்பால் திருநெடுங்கண் வளர்கைக்கு அருமாதவம் என்ன செய்தாய்? எனக்குப் பணி,' என இயைக்க.

அம்புதியே - கடலே, ஒரு மாது அவனி - ஒப்பற்ற அழகியாகிய பூமி தேவியும், செல்வி - இலக்குமியும், உடன் உறைய - தன்னுடன் (பிரிவில்லாமல்) தங்கியிருக்கவும், வரும் ஆதவனின் - உதயமாகின்ற சூரியனைப்போல, வில் - ஒளி, வடமலை - திருவேங்கடமலை, கரு மாதவன் கண்ணன் - கரிய மாதவன் என்னும் கண்ணபிரானாகிய திருமால், நின்பால் - உன்னிடம், நெடுங்கண் வளர்கைக்கு - நீண்ட திருக்கண்களை மூடித் துயில்வதற்கு, பணி - சொல்.

• 480. 'நெஞ்சமே, அம்பரம் தாமரை பூத்து அலர்ந்து அன்ன அவயவரை—அம்பரந்தாமரை—ஆடகம் ஆம் அம்பரம் தாம் அரை சூழ்ந்தாரை—அஞ்சன வெற்பரை வாழ்த்திலர், ஐம்புலன் ஆம் அம்பரம் தா மரைபோல் திரிவாரை அகல்,' என இயைக்க.

அம்பரம் - கடலில், பூத்து - உண்டாகி, அவயவரை - உறுப்புகளையுடைய திருமாலை, அம் பரந்தாமரை - அழகிய பரமபதத்தில் உள்ளவரை, ஆடகம் ஆம் - பொன் மயமாகிய, அம்பரம் - பீதாம்பரத்தை, அரை சூழ்ந்தாரை - இடையில் உடுத்தவரை, அஞ்சன வெற்பரை - திருவேங்கட மலையில் உள்ளவரை, வாழ்த்திலர் - துதியாதவராய், ஐம்புலன் ஆம் அம்பரம் - ஐந்து பொறிகளாகிய ஆகாயத்திலே, தாமரைபோல் - தாவுகின்ற மான்களைப்போல, திரிவாரை - திரிகின்றவராகிய கயவரை, அகல் - (நீ) விட்டு நீங்கு.

481. 'இதழ் கிஞ்சுகம் சொல் தத்தை அனையீர், நெஞ்சு உகந்தத்தை உமக்கு உரைத்தேன்: இற்றை நீடு இரவு ஒன்று அஞ்சு உகம், தத்தை விளைக்கும், அது என் ஆசை ஆம்; இங்கு

482] [கரு

வேங்கடத் தாரையும் ஈடேற்ற நின்றருள் வித்தகரைத்
தீங்கடத் தாரைப் புனைந்தேத்தி லீர்சிறி யீர்!பிறவி
தாங்கடத் தாரைக் கடத்துமென் றேத்துதிர்; தாழ்கயத்துள்
ஆங்கடத் தாரை விலங்குமன் றோசொல்லிற் றையமற்றே?

483] [கசு

ஐயா! துவந்தனை நாயேனை அஞ்சன வெற்பஎன்றுங்
கையா துவந்தனை நின்னையல் லாற்கண் ணுதன்முதலோர்

---

என்னைக் கெடாது, விஞ்சு கந்தத்தை விளைக்கும் துழாய் அண்ணல் வேங்கடத்தே விடும்,' என இயைக்க.

'அறத்தொடு நிற்றல்' என்பது 'களவுப் புணர்ச்சி உண்மையை முறையாக வெளிப்படுத்துதல்' என்னும் பொருளது.

இதழ் - உதடுகள், கிஞ்சுகம் - முருக்கப்பூவையும், சொல் - பேச்சு, தத்தை - கிளியின் சொல்லையும், அனையீர் - ஒத்துள்ள தோழிகளே, உகந்தத்தை - விரும்பியதை, இற்றை நீடு இரவு ஒன்று - இன்றைய நீண்ட இரவு ஒன்றே, அஞ்சு உகம் - ஐந்து யுகங்களாகும், தத்தை - துன்பத்தை, அது என் ஆசை ஆம் - அது எனது காதலின் விளைவாகும், கெடாது - (வைத்துக்) கெடுக்காமல், விஞ்சு கந்தத்தை - மிகுந்த வாசனையை, அண்ணல் - தலைவனது, விடும் - (கொண்டு போய்) விடுங்கள்.

482. 'சிறியீர், ஆரையும் ஈடேற்ற வேங்கடத்து நின்றருள் வித்தகரைத் தீங்கு அடத் தாரைப் புனைந்து ஏத்திலீர்; பிறவி தாம் கடத்தாரைக் 'கடத்தும்' என்று ஏத்துதிர்; தாழ்கயத்துள் ஆம் கடத்தாரை விலங்கும் அன்றோ ஐயம் அற்றுச் சொல்லிற்று?' என இயைக்க.

சிறியீர் - (அறிவிற்) சிறுமையுடைய உலகத்தவரே, ஆரையும் - எப்படிப்பட்டவரையும், வித்தகரை - ஞான சொரூபரை, தீங்கு அட - (உம் பிறவித்) துன்பத்தை அழிக்க, தாரை - மலர் மாலையை, ஏத்திலீர் - துதிக்கமாட்டீர், கடத்தாரை - விலக்கமாட்டாதவராகிய சிறு தேவரை, கடத்தும் - (எம் பிறவியிலிருந்து எம்மை) நீக்குங்கள், ஏத்துதிர் - துதிக்கின்றீர்;' தாழ்கயத்துள் ஆம் - ஆழ்ந்த மடுவில் (முதலை வாயில்) சிக்குண்ட, கடம் தாரை விலங்கும் - மதநீர் ஒழுக்கையுடைய (கஜேந்திரன் என்னும்) யானையும், ஐயம் அற்று - சந்தேகம் தீர்ந்து.

483. 'ஐயா, அஞ்சன வெற்ப, துவந்தனை நாயேனை என்றும் கையாது உவந்தனை; நின்னை அல்லால், கண் நுதல் முதலோர் பொய்யாது வந்து அனையார் முகம் காட்டினும், என் வாக்கும்

பொய்யா துவந்தனை யார்முகங் காட்டினும் போற்றியுரை
செய்யா துவந்தனை பண்ணுது வாக்குமென் சென்னியுமே.

484] தலைவனைப்பிரிந்த தலைவியின் ஆற்றுமை கண்ட [கஎ
செவிலித்தாய் இரங்கல்

சென்னி யிலங்கை குவிக்கும்; உயிர்க்கும்; திகைக்கும்;நின்னை
உன்னி யிலங்கையிற் கண்ணுறங் காள்; உயர் வீடணனை
'மன்னி யிலங்கையில் வாழ்க'என்ற வேங்கட வாண!மற்றோர்
கன்னி யிலம்;கைக்கி னின்பேர் கருணைக் கடலல்லவே.

485] [கஅ

கடமா மலையின் மருப்பொசித் தாய்க்குக் கவிநடத்தத்
தடமா மலைவற்ற வாளிதொட் டாய்க்கென் றனிநெஞ்சமே

போற்றி உரை செய்யாது; சென்னியும் வந்தனை பண்ணுது,' என இயைக்க.

அஞ்சன வெற்ப - அஞ்சனாத்திரி என்னும் திருவேங்கட மலையிலுள்ளவனே, துவந்தனை - இரு வினைத் தொடர்பை உடையேனாகிய, நாயேனை - நாய் போலத் தாழ்ந்தவனாகிய என்னை, கையாது - வெறாமல், உவந்தனை - மகிழ்ந்தாய், கண் நுதல் - நெற்றிக் கண்ணையுடையவனாகிய சிவன், அனையார் - அவர்களுடைய, வாக்கு - வாய், போற்றி - துதித்து, உரை செய்யாது - பேசாது, சென்னி - தலை, வந்தனை பண்ணுது - வணங்காது.

484. 'உயர் வீடணனை, 'மன்னி இலங்கையில் வாழ்க!' என்ற வேங்கட வாண, (எம் மகள்) நின்னை உன்னிச் சென்னியில் அம் கை குவிக்கும்; உயிர்க்கும்; திகைக்கும்; இலங்கு ஐயில் கண் உறங்காள்; மற்று ஓர் கன்னி இலம்; கைக்கின் நின்பேர் கருணைக் கடல் அல்லவே,' என இயைக்க.

வீடணன் - விபீஷணன், மன்னி - நிலைபெற்று, வாண - வாழ்பவனே, உன்னி - நினைத்து, அம் கை - அழகிய கைகளை, குவிக்கும் - குவித்து வணங்குவாள், உயிர்க்கும் - பெருமூச்சு விடுவாள், திகைக்கும் - பிரமிப்பாள், இலங்கு ஐயில் கண் - விளங்குகின்ற வேல் போலும் கண்கள், மற்று ஓர் கன்னி இலம் - (யாங்கள்) வேறு ஒரு பெண்ணைப் பெற்றிலேம், கைக்கின் - (நீ) வெறுத்தால்.

485. 'கட மா மலையின் மருப்பு ஒசித்தாய்க்கு—கவி நடத்தத் தடமாம் அலை வற்ற வாளி தொட்டாய்க்கு, வட மா மலையும் திருப்பாற்கடலும் வைகுந்தமும்போல் என் தனி நெஞ்சமே அலைவு அற்று நின்றும் கிடந்தும் இருப்பதற்கு இடம் ஆம்,' என இயைக்க.

வடமா மலையுந் திருப்பாற் கடலும்வை குந்தமும்போல்
இடமா மலைவற்று நின்றுங் கிடந்து மிருப்பதற்கே.

486] [கசு

இருப்ப தனந்தனி லெண்ணலில் வைகுந்தத் தென்பர் வெள்ளிப்
பருப்ப தனந்தன் மலரோ னறிகிலர் பாரளந்த
திருப்ப தனந்தன் மதலைநிற் குந்திரு வேங்கடமென்
பொருப்ப தனந்த றவிர்ந்துயிர் காள்! தொழப் போதுமினே.

487] [உ0

போதார விந்த வரையும் புகாவண்ட புற்புதத்தின்
மீதார விந்த வினைதீர்க்க வேண்டும்விண் மண்ணுக்கெல்லாம்

---

கடமாமலை - மதம் பொழியும் பெரிய மலைபோலும் (குவலயாபீடம் என்னும்) யானை, மருப்பு - தந்தம், ஒசித்தாய்க்கு - முரித்த உனக்கு, கவி நடத்த - வானர சேனையை நடத்திச் செல்ல, தடமாம் அலை - விசாலமான கடல் நீர், வானி தொட்டாய்க்கு - அக்கினியஸ்திரத்தைத் தொடுத்த உனக்கு, வடமாமலை - திருவேங்கட மலை, தனி நெஞ்சமே - ஒரு மனமே, அலைவு அற்று - சோர்வு நீங்கி, கிடந்தும் - சயனித்தும், இருப்பதற்கு - வீற்றும் இருப்பதற்கு.

486. ‘உயிர்காள், ‘இருப்பது எண்ணல் இல் வைகுந்தத்து அனந்தனில்,’ என்பர்; வெள்ளிப் பருப்பதன், அம் தண் மலரோன் அறிகிலர்; பார் அளந்த திருப்பதன்—நந்தன் மதலை—நிற்கும் திருவேங்கடம் என் பொருப்பு அது, அனந்தல் தவிர்ந்து தொழப் போதுமின்,’ என இயைக்க.

எண்ணல் இல் - எண்ணுவதற்கும் இயலுதல் இல்லாத, அனந்தனில் - ஆதிசேஷன்மீது, என்பர் - என்று (உண்மை ஞானியர்) கூறுவர், வெள்ளிப் பருப்பதன் - வெள்ளி மலையிலுள்ளவனை சிவன், மலரோன் - பிரமன், பார் - பூமியை, திருப்பதன் - திருவடிகளை உடையவனும், நந்தன் மதலை - நந்த கோபனின் வளர்ப்புப் பிள்ளையுமாகிய திருமால், பொருப்பு அது - மலையை, அனந்தல் - சோம்பல், போதுமின் - வாருங்கள்.

‘பொருப்பு அது’ என்பதில் உள்ள ‘அது’ பகுதிப் பொருள் விகுதி என அறிக.

487. ‘விண் மண்ணுக்கு எல்லாம் ஆதார, தேன் இந்தளம் பாடும் வேங்கடத்து அப்ப, நின் பொன் பாத அரவிந்தம் அல்லால் அடியேற்கு ஒரு பற்று இல்லை; போதார் அவிந்த வரையும் புகா அண்ட புற்புதத்தின்மீது ஆர இந்த வினை தீர்க்க வேண்டும்,’ என இயைக்க.

ஆதார விந்தளந் தேன்பாடும் வேங்கடத் தப்ப!நின்பொற்
பாதார விந்தமல் லாலடி யேற்கொரு பற்றில்லையே.

488] தலைவனைப்பிரிந்த தலைவியின் வருத்தங்கண்டு ஆற்றுளான [உக
தோழி, சந்திரனை நோக்கி இரங்கிக் கூறல்

பற்றி யிராமற் கலைபோய் வெளுத்துடல் பாதியிரா
வற்றி யிராப்பக னின்கண் பனிமல்கி மாசடைந்து
நிற்றி யிராக மொழிச்சியைப் போனெடு வேங்கடத்துள்
வெற்றி யிராமனை வேட்டாய்கொ னீயுஞ்சொல் வெண்மதியே!

489] [உஉ
மதியா தவன்கதிர் மின்மினி போலொளிர் வைகுந்தந்தா
மதியா தவன்றர வாழ்ந்திருப் பீர்வட வேங்கடவன்

ஆதார - இடமாயுள்ளவனே, தேன் - வண்டுகள், இந்தளம் - இந்தளம் என்னும் மருதயாழிசையை, அப்ப - தந்தையே, அரவிந்தம் - தாமரை மலர், அடியேற்கு - அடிமையாகிய எனக்கு, பற்று - புகலிடம், போதரார் அவிந்த வரையும் - பிரமர்கள் அழியும் அளவும், புகா - (அழியத்) தொடங்காத, அண்ட புற்புதத்தின் மீது - உலகங்களாகிய நீர்க்குமிழிகளுக்கு மேலான தான பரம பதத்தில், ஆர - (யான் சென்று இன்பம்) அனுபவிக்கும்படி, இந்த வினை - (நான் தேடிய) இந்த வினைகளை.

488. 'வெண்மதியே, பற்றி இராமல், கலை போய், வெளுத்து உடல் பாதி இரா வற்றி, இராப்பகல் நின் கண் பனி மல்கி, மாசு அடைந்து, இராக மொழிச்சியைப்போல் நிற்றி; நீயும் நெடு வேங்கடத்துள் வெற்றி இராமனை வேட்டாய்கொல்? சொல்,' என இயைக்க.

வெண்மதியே - வெள்ளிய சந்திரனே, பற்றி இராமல் - (ஓரிடத்தைத் தங்குமிடமாகக்) கொண்டு இல்லாமல், கலை - கலைகள் (ஆடை), பாதி இரா - பாதியும் இராதபடி, வற்றி - தேய்ந்து (மெலிந்து), நின் கண் பனி மல்கி - உன்னிடம் பனி மிகுந்து (கண்களில் நீர் நிரம்பி), மாசு அடைந்து - களங்கம் அடைந்து (நீரோடா மையரல் புழுதியைப் பெற்று),இராக மொழிச்சி - இசை போன்ற பேச்சையுடையவளான தலைவி, நிற்றி - நிற்கிறாய், வேட்டாய் கொல் - விரும்பினாயோ?

இச்செய்யுள் தலைவிக்கும் சந்திரனுக்கும் சிலேடையுவமையாய் அமைந்தது.

489. 'வன்கடத்துள் மதியாத தயிர் வாய் வைத்த மாயப் பிரான் - மதியாதவன் உரம் கீண்டான்—வடவேங்கடவன் கழல்

மதியா தவன்கடத் துட்டயிர் வாய்வைத்த மாயப்பிரான்
மதியா தவனுரங் கீண்டான் கழல்சென்னி வைத்திருமே.

490] [உ௩

இருபது மந்தரத் தோளும் இலங்கைக் கிறைவன்சென்னி
ஒருபது மந்தரத் தேயறுத் தோன் அப்பன் உந்திமுன்னாள்
தருபது மந்தர வந்தன நான்முகன் றன்முதலா
வருபது மந்தர மொத்தபல் சீவனும் வையமுமே.

491] நாரசிங்க மூர்த்தியின் பேருரு [உ௪

வைய மடங்கலு மோர்துகள்; வாரி யொருதிவலை;
செய்ய மடங்கல் சிறுபொறி; மாருதஞ் சிற்றுயிர்ப்பு;

---

சென்னி வைத்திரும்; மதி ஆதவன் கதிர் மின்மினி போல் ஒளிர் வைகுந்தம் அவன் தாமதியாது தர, வாழ்ந்திருப்பீர்,' என இயைக்க.

வன்கடத்துள் - வலியகுடத்தினுள் இருந்த, மதியாத - கடையாத, மதியாதவன் - இரணியனது, உரம் கீண்டான் - மார்பைப் பிளந்தவனும், கழல் - பாதங்களை, சென்னி - தலையில், மதி - சந்திரன், ஆதவன் - சூரியன், கதிர் - கிரணங்கள், மின்மினி - மின்மினிப்பூச்சி, ஒளிர் - (தன் ஒளியின் முன்) விளங்கத் தகுந்த, வைகுந்தம் - ஸ்ரீவைகுண்டத்தை. 'உலகீர்' என்னும் விளி தொக்கது.

490. 'இலங்கைக்கு இறைவன் இருபதுமந்தரத் தோளும், சென்னி ஒருபதும் அந்தரத்தே அறுத்தோன் அப்பன் உந்திமுன்னாள் தரும் பதுமம் தர, நான்முகன்றன் முதலா(க)வரு பதுமம் தரம் ஒத்த பல் சீவனும் வையமும் வந்தன,' என இயைக்க.

மந்தரம் - மந்தரமலைபோன்ற, ஒருபதும் - பத்தும், அந்தரத்தே - ஆகாயத்தில், அப்பன் - திருவேங்கடத்தானது, உந்தி - கொப்பூழானது, முன் நாள் தரு பதுமம் - ஆதிகாலத்தில்தோற்றுவித்த தாமரை மலர், தர - சிருஷ்டிக்க, நான்முகன் - பிரமன், பதுமம் தரம் ஒத்த - கோடானுகோடி என்னும் அளவையொத்த, பல்சீவன் - பல உயிர்கள், வையம் - உலகங்கள், வந்தன - தோன்றின.

491. 'வெய்ய மடங்கல் வடிவான வேங்கட வேதியற்கு வையம் அடங்கலும், ஓர் துகள்; வாரி, ஒரு திவலை; செய்ய மடங்கல், சிறுபொறி; மாருதம், சிற்றுயிர்ப்பு; துய்ய மடங்கல் இல் ஆகாயந்தான், விரல் தோன்றும் வெளி,' என இயைக்க.

தூய்ய மடங்கலி லாகாயந் தான்விரற் றோன்றும்வெளி
வெய்ய மடங்கல் வடிவான வேங்கட வேதியற்கே.

492] [உரு

வேதா வடமலை வெங்காலன் கையில் விடுவித்தென்னை
மாதா வடமலை கொங்கையுண் ணாதருண் மண்ணளந்த
பாதா! வடமலை மேற்றுயின் றாய்!கடற் பார்மகட்கு
நாதா! வடமலை யாய்!அலர் மேன்மங்கை நாயகனே!

493] திருமாலே பரம்பொருள் [உசு

நாயக ராத்திரி யுஞ்சில தேவர்க்கு நாணிலைகொல்,
தூயக ராத்திரி மூலமெ னாமுனந் துத்திப்பணிப்

---

வெய்ய மடங்கல் - கொடிய சிங்கத்தின், வேதியற்கு - வேதங்களால் ஆராயப்படுபவனாகிய எம்பெருமானுக்கு, வையம் - உலகங்கள், அடங்கலும் - முற்றும், தூகள் - தூசி, வாரி - கடல், திவலை - நீர்த்துளி, மடங்கல் - தீ, மாருதம் - காற்று, சிற்றுயிர்ப்பு - சிறுமூச்சு, மடங்கல் இல் - அழிதலில்லாத, விரல் தோன்றும் வெளி - விரல்களுக்கு இடையில் தோன்றும் வெளியிடம்.

இச்செய்யுள் நாரசிங்கமூர்த்தியின் விசுவரூபப் பெருமையை விளக்குவது.

492. 'மண் அளந்த பாதா, அலைமேல் வடம் துயின்றாய், கடல் பார் மகட்கு நாதா, வடமலையாய், அலர்மேல் மங்கை நாயகனே, வேதா, வடம் அலை வெங்காலன் கையில் என்னை விடுவித்து, மாதா வடம் அலை கொங்கை உண்ணாது அருள்,' என இயைக்க.

பாதா - திருவடியை உடையவனே, அலைமேல் - கடலில், வடம் - ஆலிலையில், துயின்றாய் - அறிதுயில் செய்பவனே, பார் மகட்கு - பூமி தேவிக்கு, அலர்மேல் மங்கை - திருமகள், வேதா - பிரமன், வடம் அலை - பாசத்தால் வருத்துகின்ற, வெங்காலன் - கொடிய யமன், கையில் - பிடியிலிருந்து, மாதா - தாயின், வடம் அலை - முத்து மாலை அசைகின்ற, அருள் - கிருபை செய்க.

'அடியேன் பிறப்பு இறப்புகளை ஒழித்தருள்க,' என்றபடி.

493. 'தூய கர அத்திரி 'மூலம்' எனா முனம், துத்திப் பணிப் பாயக ராத்திரி மேனி அம்மான்—பைம்பொன் வேங்கடவன்—தீய கராத் திரிசக்கரத்தால் கொன்ற சீர்கண்டும், நாயகரா(க)த் திரியும் சில தேவர்க்கு நாண் இலைகொல்?'' என இயைக்க.

தூய - பரிசுத்தமான, கர அத்திரி - கைம்மலை என்று கூறப்படும் கஜேந்திரனை யானை, மூலம் - ஆதிமூலமே, எனா முனம் -

பாயக ராத்திரி மேனியம் மான்பைம்பொன் வெங்கடவன்
தீயக ராத்திரி சக்கரத் தாற்கொன்ற சீர்கண்டுமே?

494] [உஎ

கண்ட வனந்தரங் காலெரி நீர்வையங் காத்தவைமீண்
டுண்ட வனந்தரங் கத்துறை வானுயர் தந்தைதமர்
விண்ட வனந்தர மேலவன் வேங்கட மாலடிமை
கொண்ட வனந்தரத் தும்பேர் நினைக்கவுங் கூற்றஞ்சுமே.

495] [உஅ

அஞ்சக் கரவட மூலத்தன் போத னறிவரிய
செஞ்சக் கரவட வேங்கட நாதனைத் தேசத்துள்ளீர்!
நெஞ்சக் கரவட நீக்கியின் றேதொழும்; நீண்மறலி
துஞ்சக் கரவடம் வீசுமக் காலந் தொழற்கரிதே.

---

என்று சொல்லு முன்னமே, தத்திப பணப் பாயகம் - புள்ளிகளை யுடைய படத்தைக்கொண்ட ஆதிசேஷனாகிய படுக்கையையும், ராத்திரி மேனி - இரவைப்போலும் கரிய மேனியையும் உடைய, அம்மான் - தலைவனான திருமால், கரா - முதலையை, திரி சக்கரத் தால்-சுழலும் சக்கராயுதத்தால், சீர் - சிறப்பை, நாயகராக - தலைவ ராக, நாண் இலைகொல் - வெட்கமில்லையோ?

494. '(உலகிர்) அந்தரம், கால், எரி, நீர், வையம் கண்ட வன்—அவை காத்து மீண்டு உண்டவன்—அம் தரங்கத்து உறை வான்—உயர் தந்தை தமர் விண்டவன்—அந்தர மேலவன்—வேங் கடமால் அடிமை கொண்ட அனந்தரத்து உம் பேர் நினைக்கவும் கூற்று அஞ்சும்,' என இயைக்க.

அந்தரம் - ஆகாயம், கால் - காற்று, எரி - தீ, வையம்-பூமி, கண்டவன் - சிருஷ்டித்தவனும், மீண்டு - மறுபடியும், அம் தரங் கத்து - அழகிய திருப்பாற்கடலில், தமர் - சுற்றத்தார், விண்ட வன் - இல்லாதவனும், அந்தரமேலவன் - பரமபதத்தில் உள்ளவ னும், அனந்தரத்து - பின்பு, கூற்று அஞ்சும் - யமன் பயப்படுவன்.
'திருமாலடியார்க்கு யமபயமில்லை,' என்றபடி.

495. 'தேசத்து உள்ளீர், அஞ்சு அக்கர வடமூலத்தன், போதன் அறிவு அரிய செஞ்சக்கர வடவேங்கட நாதனை நெஞ்சக் கரவடம் நீக்கி இன்றே தொழும்; நீள் மறலி துஞ்சக்கர வடம் வீசும் அக்காலம் தொழற்கு அரிது,' என இயைக்க.

உள்ளீர் - இருப்பவர்களே, அஞ்சு அக்கர வடமூலத்தன் - பஞ்சாக்ஷரத்திற்குரிய ஆலடியமர்ந்தவனான சிவனும், போதன் - பிரமனும், அறிவு அரிய-அறிய முடியாத, கரவடம் - வஞ்சனை,

496] [௨௯

தொழும்பா லமரர் தொழும்வேங் கடவன் சுடர்நயனக்
கொழும்பா லனையொரு கூறுடை யானந்த கோபனில்லத்
தழும்பால னாகிய காலத்துப் பேய்ச்சி யருத்துநஞ்சைச்
செழும்பா லமுதென் றுவந்தாற்கென் பாடல் சிறக்குமன்றே?

497] [௩௦

சிறக்கும் பதந்தரு வார்திரு வேங்கடச் செல்வர்செய்ய
நிறக்கும் பதந்தொழு துய்யவெண் ணீர்நெறி யிற்பிழைத்து
மறக்கும் பதந்தியுஞ் சேலு மசுணமும் வண்டினமும்
பறக்கும் பதங்கமும் போலைவ ராற்கெடும் பாதகரே!

---

தொழும் - வணங்குங்கள், நீள் மறலி - பெரிய யமன், துஞ்ச - (நீங்கள்) மரணமடைய, கரவடம் வீசும் - கைப்பாசத்தை (உங்கள்மேல்) வீசுகின்ற, அரிது - இயலாது.

496. 'தொழும்பால் அமரர் தொழும் வேங்கடவன்—சுடர் நயனக் கொழும் பாலனை ஒரு கூறு உடையான்—நந்தகோபன் இல்லத்து அழும் பாலன் ஆகிய காலத்துப் பேய்ச்சி அருத்து நஞ்சைச் செழும்பாலமுது என்று உவந்தாற்கு என் பாடல் சிறக்கும் அன்றே?' என இயைக்க.

தொழும்பால் - அடிமைப் பண்பினால், அமரர் - தேவர், நயனம் - கண், கொழும் பாலனை - வளமான நெற்றியையுடைய சிவனை, கூறு - (தன் திருமேனியின் வலப்பக்கமாகிய) பகுதியில், பேய்ச்சி - (பூதனை என்னும்) பேய்மகள், அருத்து நஞ்சை - ஊட்டிய விஷத்தை, பாலமுது - பாலாகிய உணவு, உவந்தாற்கு - விரும்பியவனுமாகிய பெருமானுக்கு, அன்றே - அல்லவா?

497. 'மறக் கும்ப தந்தியும், சேலும், அசுணமும், வண்டு இனமும், பறக்கும் பதங்கமும் போல் நெறியின் பிழைத்து ஐவரால் கெடும் பாதகரே, சிறக்கும் பதம் தருவார்—திருவேங்கடச் செல்வர்—செய்ய நிறக்கும் பதம் தொழுது உய்ய எண்ணீர்,' என இயைக்க.

மறக் கும்ப தந்தி - கோபத்தையும் மத்தகத்தையுமுடைய யானை;* சேல் - மீன், அசுணம் - அசுணப்பறவை, பதங்கம் - விட்டிற்பூச்சி, நெறியின் - நல்வழியிலிருந்து, பிழைத்து - தவறி, ஐவரால் - பஞ்சேந்திரியங்களாகிய பகைவரால், பாதகரே - பாவிகளே, பதம் - பதவி, செய்ய நிறக்கும் பதம் - சிவந்த நிறமுடைய திருவடிகளை, உய்ய - ஈடேறும்படி, எண்ணீர் - நினையுங்கள்.

யானை* பெண் யானையின் தேக பரிசத்தை விரும்பி வேடர் *கையிற்சிக்குவதாலும், மீன் தூண்டிலிலுள்ள இரையின் சுவையை

498] [௩௧

பாதம ராவுறை பாதாளத் தூடு பகிரண்டத்துப்
போதம ராயிரம் பொன்முடி யோங்கப் பொலிந்துநின்றாய்
நீதம ரானவர்க் கெவ்வாறு வேங்கட நின்றருளும்
நாதம ராமர மெய்தாய்முன் கோவ னடந்ததுவே?

499] [௩௨

நடைக்கலங் கார மடவார் விழிக்கு நகைக்குச்செவ்வாய்க்
கிடைக்கலங் கார முலைக்கிச்சை யான விவனென்றெண்ணிப்
படைக்கலங் காணத் துரந்தே நமன்றமர் பற்றுமன்றைக்
கடைக்கலங் காணப்ப னே! அலர் மேன்மங்கை யங்கத்தனே!

---

விரும்புவதாலும், அசுணப் பறவை வேடர்கள் எழுப்பும் இனிய பொய்யிசையை விரும்பியடைந்து பின்பு பறையோசை கேட்டலாலும், வண்டுகள் மணத்தை நாடி மலரிற்புகுந்து அதனால் மூடப்படுவதாலும், விட்டில் விளக்கின் உருவத்தைக் கண்டு கனியென்று நெருங்குவதாலும் அழியும் என்பர்.

498. 'வேங்கடம் நின்று அருளும் நாத, மரா மரம் எய்தாய், பாதம் அரா உறை பாதாளத்தூடு, போது அமர் ஆயிரம் பொன்முடி பகிர் அண்டத்து ஓங்கப் பொலிந்து நின்றாய், நீ முன் தமர் ஆனவர்க்குக் கோவல் நடந்தது எவ்வாறு?' என இயைக்க.

எய்தாய் - அம்பெய்து துளைத்தவனே, பாதம் - (உன்) திருவடிகள், அரா உறை - பாம்புகள் வாழ்கின்ற, பாதாளத்தூடு - பாதாள உலகத்திலும், போது - மலர்கள், அமர் - பொருந்திய, பகிர் அண்டத்து - உலகின் மேல்முகட்டு வெளியிலும், ஓங்க - உயர்ந்து தோன்ற, தமர் ஆனவர்க்கு - (உன்) அடியவராகிய முதலாழ்வார் மூவர்க்குக் காட்சியளித்தற்கு, கோவல் - (அம்மூவரும் இடைக்கழியில் தங்கியிருந்த) திருக்கோவலூரில், நடந்தது - நடந்து சென்றது.

முதலாழ்வார் மூவர்: பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்.

499. 'அப்பனே, அலர்மேல் மங்கை அங்கத்தனே, 'அலங்கார மடவார் நடைக்கு, விழிக்கு, நகைக்கு, செவ்வாய்க்கு, இடைக்கு, அலங்கு ஆர முலைக்கு இச்சையான இவன்' என்று எண்ணி, நமன் தமர் படைக்கலம் காணத் துரந்து பற்றும் அன்றைக்கு அடைக்கலம் காண்,' என இயைக்க.

அங்கத்தனே - திருமார்பில் உடையவனே, மடவார் - பெண்டிரின், நகை - புன்சிரிப்பு, இடை - இடுப்பு, அலங்கு ஆரம் -

500] [ரு_ரு

அங்க மலைக்கும் வினையா லலமர வோவுனக்கும்
அங்க மலைக்கு மடிமைப்பட் டேனர வானபரி-
அங்க! மலைக்குடை யாய்! அக்க ராவுட னன்றமர்செய்
அங்க மலைக்குமுன் னின்றருள் வேங்கடத் தற்புதனே!

501] [ரு. ச

அற்பர தத்து மடவார் கலவியு மாங்கவர்கள்
நற்பர தத்து நடிப்பதும் பாடலு நச்சிநிற்பார்
நிற்பர தத்துக் கதிர்தோயும் வேங்கட நின்றருளும்
சிற்பர தத்துவன் றாளடைந் தேன்முத்தி சித்திக்கவே.

---

அசைகின்ற முத்து மாலை பொருந்திய, இச்சையான - விருப்பம் கொண்ட, நமன் தமர் - யமதூதர், படைக்கலம் - ஆயுதங்களை, காண - (யான்) கண்டு பயப்பட, துரந்து - (என்மேல்) செலுத்தி, பற்றும் - (என்னைப்) பிடிக்கும், அன்றைக்கு - அந்த மரணத் தறுவாயில், அடைக்கலம் - (யான் உன்) அடைக்கலப் பொருளாவேன்.

500. 'அரவு ஆன பரியங்க, மலைக்குடையாய், அக்கராவுடன் அன்று அமர் செய் அங்க மலைக்கு முன் நின்று அருள் வேங்கடத்து அற்புதனே, அங்கம் அலைக்கும் வினையால் அலமரவோ உனக்கும் அம் கமலைக்கும் அடிமைப்பட்டேன்?' என இயைக்க.

அரவு ஆன - ஆதிசேஷன் என்னும் பாய்பாகிய, பரியங்க - கட்டிலை உடையவனே, மலைக்குடையாய்-(கோவர்த்தன) மலையாகிய குடையைத் தாங்கியவனே, அக்கராவுடன் - அந்த முதலையுடன், அன்று - முன் காலத்தில், அங்கமலைக்கு - உறுப்புக்களையுடைய மலை போன்ற கஜேந்திரனுக்கு, அற்புதனே - ஆச்சரியமான செயலையுடையவனே, அங்கம்-உடலை, அலமரவோ - வருந்தவோ, அம் கமலைக்கும் - அழகிய இலட்சுமிக்கும்.

501. '(யான்) முத்தி சித்திக்க அற்பரதத்து மடவார் கலவியும், அவர்கள் நல் பரதத்து நடிப்பதும், பாடலும் நச்சி நிற்பார் நிற்க, ரதத்துக் கதிர் தோயும் வேங்கடம் நின்று அருளும் சித்பரதத்துவன் தாள் அடைந்தேன்,' என இயைக்க.

அற்பரதத்து - சிற்றின்பத்தையுடைய, கலவி - சேர்க்கை, பரதத்து - பரத சாஸ்திரப்படி, நச்சி - விரும்பி, ரதத்துக் கதிர் - தேர்மேல் வரும் சூரியன், தோயும் - படியும், சித் பரதத்துவன் -

502] [௩௫

சித்திக்கு வித்தது வோவிது வோவென்று தேடிப்பொய்ந்நூல்
கத்திகுவித்தபல் புத்தகத் தீர்! கட் டுரைக்கவம்மின் :
அத்திக்கு வித்தனை யும்முண்ட வேங்கடத் தச்சுதனே
முத்திக்கு வித்தக னென்றே சுருதி முறையிடுமே.

503] [௩௬

முறையிடத் தேச மிலங்கைசெற் றான்முது வேங்கடத்துள்
இறையிடத் தேசங் குடையா னினியென்னை யாண்டிலனேல்
தறையிடத் தேயுழ லெல்லாப் பிறவி தமக்குமள
வுறையிடத் தேய்ந்திடு மிவ்வந்தி வானத் துடுக்குலமே.

---

ஞான மயமான மேலான உண்மைப் பொருளாகிய திருமாலின், ஆங்கு - அசை.

502. "சித்திக்கு வித்து அதுவோ, இதுவோ!' என்று தேடி, பொய்ந்நூல் கத்திக் குவித்த பல் புத்தகத்தீர், கட்டுரைக்க வம்மின்; 'அத்தி கு இத்தனையும் உண்ட வேங்கடத்து அச்சுதனே முத்திக்கு வித்தகன்,' என்றே சுருதி முறையிடுமே,' என இயைக்க.

சித்திக்கு - மோட்சமடைதற்கு, வித்து - காரணம், தேடி - ஆராய்ச்சி செய்து, புத்தகத்தீர் - நூல்களையுடையவர்களே, கட்டுரைக்க - (யான்) உறுதியாகச் சொல்ல, வம்மின் - வாருங்கள், அத்தி கு - கடலால் சூழப்பட்ட உலகம், இத்தனையும் - முழுவதையும், உண்ட - திருவயிற்றிலடக்கியருளிய, அச்சுதன் - அழிவில்லாதவனான திருமால், முத்திக்கு வித்தகன் - மோட்சத்திற்குக் காரணனான ஞான சொரூபியாவன்.

503. 'தேசம் முறையிட இலங்கை செற்றான்—இடத்தே சங்கு உடையான்—முதுவேங்கடத்துள் இறை இனி என்னை ஆண்டிலனேல், தறையிடத்தே உழல் எல்லாப் பிறவிதமக்கும் அளவு உறையிட இ அந்தி வானத்து உடுக்குலம் தேய்ந்திடும்,' என இயைக்க.

தேசம் - உலகத்தார், செற்றான் - அழித்தவனும், இடத்தே - இடத்திருக்கரத்தில், இறை - கடவுள், இனி - நான் அவனை அடைந்த பின்னும், தறை - பூமி (தரை என்பது எதுகை நோக்கித் திரிந்து நின்றது), உறையிட - பெருந்தொகைக்கு ஒன்று வீதம் கணக்கிட, உடுக்குலம் - நட்சத்திரக் கூட்டம், தேய்ந்திடும்,' குறைந்து போய்விடும்.

504] [௫௭

உடுக்கு முடைக்கு முணவுக்கு மேயுழல் வீர்! இனிநீர்
எடுக்கு முடைக்குரம் பைக்கென் செய் வீர்? இழி மும்மதமும்
மிடுக்கு முடைக்குஞ் சரந்தொட்ட வேங்கட வெற்பரண்ட
அடுக்கு முடைக்கு மலரடி காண்மி னனைவருமே.

505] [௫௮

வருமஞ் சனவ னொருவனை யேயுன்னி வாழ்த்துந்தொண்டீர்!
கருமஞ் சனனங் களைந்துய்ய வேண்டிற் கருதிற்றெல்லாந்
தருமஞ் சனவெற்பன் றாட்டா மரையைச் சதுமுகத்தோன்
திருமஞ் சனஞ்செய் புனல்காணு மீசன் சிரம்வைத்ததே.

506] [௫௯

'சிரந்தடி வானிவ னே!' என் றயன்வெய்ய தீயசொல்லக்
கரந்தடி வான் றலை கவ்வப்பித் தேறலிற் கண்ணுதலோன்

---

504. 'உடுக்கும உடைக்கும் உணவுக்குமே உழல்வீர், இனி நீர் எடுக்கும் முடைக் குரம்பைக்கு என் செய்வீர்? இழி மும் மதமும் மிடுக்கும் உடைக் குஞ்சரம் தொட்ட வேங்கட வெற்பர்—அண்ட அடுக்கும் உடைக்கும் அவரடி அனைவரும் காண்மின்,' என இயைக்க.

முடைக் குரம்பைக்கு - முடை நாற்றத்தை உண்டாக்கும் உடலை உண்டாக்கும் பிறவியை ஒழிப்பதற்கு, மிடுக்கு - வலிமை, குஞ்சரம் - (கஜேந்திரன் என்னும்) யானையை, தொட்ட - (தம் திருக்கரத்தால்) தொட்டு அபயந்தந்த, வெற்பர் - மலையை உடையவரும், அண்டம் அடுக்கும் - உலக அடுக்குகளையெல்லாம், உடைக்கும் - அழிக்கும், அவர் - எம்பெருமானாகிய அவருடைய.

505. 'தொண்டீர், கருதிற்று எல்லாம் தரும் அஞ்சன வெற்பன் தாள் தாமரையைச் சதுமுகத்தோன் திருமஞ்சனம் செய்புனல் காணும் ஈசன் சிரம் வைத்தது; (ஆதலின்) கருமம் சனனம் களைந்து உய்ய வேண்டின், வரும் மஞ்சு அ(ன்)னவன் ஒருவனையே உன்னி வாழ்த்தும்,' என இயைக்க.

தொண்டீர் - அடியவர்களே, கருதிற்று - நினைத்தது, அஞ்சன வெற்பன் - திருவேங்கடமுடையான், சதுமுகத்தோன் - நான்கு முகங்களையுடைய பிரமன், திருமஞ்சனம் - நீராட்டு, புனல் - நீர், காணும் - முன்னிலை அசை, சனனம் - பிறப்பு, உய்ய - பிழைக்க, மஞ்சு - மேகம், உன்னி - தியானித்து.

506. 'அடியேனைப் புரந்து தன் பொன் அடிக்கீழ் வைக்கும் புண்ணியன், அயன், 'சிரம் தடிவான் இவனே!' என்று

இரந்தடி வீழத் துயர்தீர்த்த வேங்கடத் தெந்தைகண்டீர்
புரந்தடி யேனைத்தன் பொன்னடிக் கீழ்வைக்கும் புண்ணியனே.

507] [௪௰

'புண்ணியங் காமம் பொருள்வீடு பூதலத் தோர்க்களிப்பான்
எண்ணியங் காமன் றிருத்தாதை நிற்கு மிடம்என்பரால்
நண்ணியங் காமன் பரைக்கலங் காத்திரு நாட்டிருத்தி
மண்ணியங் காமற் பிறப்பறுத் தாளும் வடமலையே.

508] [௪௧

வடமலை யப்பன் னகஞ்சேர்ந் தவனிடை மங்கைகொங்கை
வடமலை யப்பன் னரும்போகந் துய்த்தவன் மாயன்கண்ணன்
வடமலை யப்பன் னருள்போற்றி யையவர் மயக்குகர
வடமலை யப்பன் னிருநாம நாவின் மலக்குவனே.

---

வெய்ய தீய சொல்ல, கண் நுதலோன் கரம் தடிவான் தலை கவ்வ, பித்து ஏறலின், இரந்து அடி வீழ, (அவனது) துயர் தீர்த்த வேங்கடத்து எந்தை கண்டீர்,' என இயைக்க.

புரந்து - பாதுகாத்து, அயன் - பிரமன், தடிவான் - கொய்பவன், வெய்ய தீய - கொடிய தீச்சொற்களை, கண் நுதலோன் - நெற்றிக் கண்ணையுடைய சிவனது, கரம் - கையானது, தடி வான் தலை - தசையை உடைய பெரிய தலையை, கவ்வ - பறிக்க, பித்து - பைத்தியம், இரந்து - பிச்சை ஏற்று வந்து, அடி வீழ - (அத்துன்பத்தைப் போக்கியருளும்படி தன்) பாதங்களில் விழுந்து வணங்க, கண்டீர் - முன்னிலை அசை.

507. 'அங்கு நண்ணி ஆம் அன்பரைக் கலங்காத் திருநாட்டு இருத்தி, மண் இயங்காமல் பிறப்பு அறுத்து ஆளும் வடமலை, அம் காமன் திருத்தாதை புண்ணியம் காமம் பொருள் வீடு பூதலத்தோர்க்கு அளிப்பான் நிற்கும் இடம் என்பர்,' என இயைக்க.

நண்ணி - அடைந்து, ஆம் அன்பரை - பத்தரானவர்களை, கலங்கா - நிலையழியாத, திருநாடு - பரமபதம், மண் இயங்காமல் - மீண்டும் (பிறந்து) பூமியிற்சஞ்சரியாதபடி, அம் - அழகிய, காமன் - மன்மதனுக்கு, திருத்தாதை - சிறந்த தந்தையாகிய திருமால், புண்ணியம் - அறம், வீடு - மோட்சம், என்பர் - என்று கூறுவர் பெரியார். ஆல் - அசை.

508. '(யான்) வடம் அலை அப்பன்னகம் சேர்ந்தவன்—இடை மங்கைகொங்கை வடம் அலையப் பன்னரும்போகம் துய்த்தவன்—மாயன்—கண்ணன்—வடமலை அப்பன் அருள் போற்றி, ஐவர் மயக்கு கரவடம் அலையப் பன்னிரு நாமம் நாவின் மலக்குவன்,' என இயைக்க.

509] [சஉ

மலங்கத் தனத்தை யுழன்றீட்டி மங்கையர் மார்பில்வடம்
அலங்கத் தனத்தை யணையநிற் பீர்அப்பன் வேங்கடத்துள்
இலங்கத் தனத்தை மகன்றேரி னின்றெதி ரேற்றமன்னர்
கலங்கத் தனத்தைக் குறித்தோனை மேவக் கருதுமினே.

510] அனன்னிய கதித்துவம் [சரு

கருத்தா தரிக்கு மடியேனைத் தள்ளக் கருதிக்கொலோ
திருத்தா தரிக்குமை வர்க்கிரை யாக்கினை ! செண்பகத்தின்

---

வடம் - ஆலிலையிலும், அலை - திருப்பாற்கடலில், அப்பணாகம் - (ஆதிசேடன் என்னும்) அப்பாம்பின்மீதும், இடைமங்கை - நப்பின்னைப் பிராட்டி, வடம் - முத்து மாலை, அலைய - அசையும்படி, பன்னரும் போகம் - சொல்லுதற்கரிய இன்பத்தை, துய்த்தவன் - அனுபவித்தவனும், வடமலை அப்பன் - திருவேங்கடமுடையானது, ஐவர் - பஞ்சேந்திரியங்கள், காவடம் அலைய - வஞ்சனை ஒழியும்படி, பன்னிரு நாமம் - (அப்பெருமானுடைய) பன்னிரண்டு திருநாமங்களையும், நாவின் மலக்குவன் - (என்) நாவினால் முணுமுணுப்பேன்.

பன்னிரு நாமம்: கேசவன், கோவிந்தன், இருடிகேசன், சீதரன், தாமோதரன், திரிவிக்கிரமன், நாராயணன், பதுமநாபன், மதுசூதனன், மாதவன், வாமனன், விஷ்ணு.

509. 'மங்கலத் தனத்தை உழன்று ஈட்டி, மங்கையர் மார்பில் வடம் அலங்கத் தனத்தை அணைய நிற்பீர், அப்பன்—வேங்கடத்துள் இலங்கு அத்தன்—அதலை மகன் தேரில் நின்று, எதிர் ஏற்ற மன்னர் கலங்கத் தன் நத்தைக் குறித்தானை மேவக் கருதுமின்,' என இயைக்க.

மலங்க - மனம் கலக்கமடைய, தனத்தை - பொருளை, உழன்று ஈட்டி - பலவிடங்களிலும் திரிந்து சம்பாதித்து, வடம் அலங்க - முத்தாரம் அசையும்படி, தனத்தை அணைய - கொங்கைகளைத் தழுவ, நிற்பீர் - (ஏக்கற்று) நிற்கும் உலகத்தவர்களே, அப்பன் - (அனைத்துயிர்க்கும்) தந்தையும், அத்தன் - தலைவனும், அத்தை - குந்திதேவி, அதலை மகன் - அருச்சுனன், எதிர் ஏற்ற - பகைத்து எதிர் வந்த, நத்தை - (பாஞ்சசன்னியம் என்னும்) சங்கை, குறித்தானை - முழக்கினவனுமான சுவாமியை, மேவ - சரணடைய, கருதுமின் - நினையுங்கள்.

510. 'செண்பகத்தின் மருத் தாது அரிக்கும் அருவி அரு வடவேங்கடத்துள் ஒருத்தா, கருத்து ஆதரிக்கும் அடியேனைத் தள்ளக் கருதிக்கொலோ அரிக்கும் ஐவர்க்கு இரையாக்கினை ! இனி உன்னை விட்டுத் தரிக்கும்படி எங்ஙனே?' என இயைக்க,

மருத்தா தரிக்கு மருவிய றுவட வேங்கடத்துள்
ஒருத்தா! தரிக்கும் படியெங்ங னேயினி யுன்னைவிட்டே?

511] [சச

உன்னைக் கரிய மிடற்ற னயன்முத லும்பரெல்லாம்
பொன்னைக் கரியொத்த போதுமொவ் வார்;புழ்க் கோசலையாம்
அன்னைக் கரியமுத் தே! அப்ப னே! உன்னை யன்றிப்பின்னை
முன்னைக் கரியளித் தாய்க்குவ மான மொழியில்லையே.

512] [சரு

இல்லைக்கண் டீரின்பந் துன்பங்கண் டீர்கண்ட வேந்திழையார்
சொல்லைக்கண் டீரமு தென்னுந்தொண் டீர்!தொல் லசுரனிறங்

மருத்தாது - வாசனை பொருந்திய மகரந்தப் பொடிகளை, அரிக்கும் - கொழித்து வருகின்ற, அருவி அறு - நீரருவிகள் வற்றாத, ஒருத்தா - ஒப்பற்றவனே, கருத்து ஆதரிக்கும் - மனத்தால் உன்னையே விரும்புகின்ற, கருதிக்கொலோ - எண்ணியோ, அரிக்கும் - (மனத்தைக்) கெடுக்கின்ற, ஐவர்க்கு - பஞ்சேந்திரியங்களுக்கு, தரிக்கும்படி - சகித்திருக்கும் வகை, எங்ஙனே - எவ்வாறோ?

511. 'புகழ்க் கோசலையாம் அன்னைக்கு அரிய முத்தே, அப்பனே, கரி பொன்னை ஒத்த போதும், கரிய மிடற்றன் அயன் முதல் உம்பர் எல்லாம் உன்னை ஒவ்வார்; (ஆதலின்) முன்னைக் கரி அளித்தாய்க்கு உன்னையன்றிப் பின்னை உவமான மொழி இல்லை,' என இயைக்க.

கோசலை - கௌசல்யை (தயரதன் மனைவி), முத்தே - முத்தைப் போன்றவனே, கரி - அடுப்புக் கரியானது, கரியமிடற்றன் - நீல கண்டனை சிவனும், அயன் - பிரமனும், உம்பர் - தேவரும், ஒவ்வார் - ஒப்பாக மாட்டார், முன்னை - முன்பு, கரி அளித்தாய்க்கு - கஜேந்திரனைப் பாதுகாத்த உனக்கு. 'நாயகராந் திரியும்' என்னும் செய்யுளை இதனுடன் ஒப்பு நோக்குக.

512. 'கண்ட ஏந்து இழையார் சொல்லைக் 'கண்டு, ஈரமுது' என்னும் தொண்டீர், இன்பம் இல்லை கண்டீர்; துன்பங் கண்டீர்; வாழுகைக்குத் தொல் அசுரன் நிறம் கல் ஐ கண்டீரவத்தை--மல்லைக் கண் தீர்தரத் தேய்த்தானை—திருவேங்கடக் காவலனை வாழ்த்துமின்,' என இயைக்க.

கண்ட - பார்த்த, கண்டு - கற்கண்டு, ஈரமுது - குளிர்ச்சி பொருந்திய தேவாமுதம், தொல் அசுரன் - பழமையான பகைவனாகிய இரணியாசுரனுடைய, நிறம் - மார்பை, கல் - கிழித்த, ஐ கண்டீரவத்தை - அழகிய சிங்க மூர்த்தியை, மல்லை - சாணூரன்

கல்லைக்கண் டூரவத் தைத்திரு வேங்கடக் காவலனை
மல்லைக்கண் டேர்தரத் தேய்த்தானை வாழ்த்துமின் வாழுகைக்கே.

513] [சகூ

கைத்தனு மோடிசை வெற்பெனக் காணவெவ் வாணனென்னும்
மத்தனு மோடிகல் செய்வனென் றேவந்து வையுறுவேல்
அத்தனு மோடியு மங்கியு மோடவென் னப்பனுக்குப்
பித்தனு மோடின னங்கத்துத் தானென்றும் பெண்ணனென்றே.

514] [சஎ

பெண்ணுக்கு விக்கச் சிலைமே லொருதுகள் பெய்தபொற்றாள்
அண்ணுக்கு விக்க லெழும்போ தெனக்கருள் வாய்பழிப்பு
நண்ணுக்கு விக்கச் சிளமுலைப் பூமக ணாயகனே!
எண்ணுக்கு விக்கக் குழலூதும் வேங்கடத் தென்கண்ணனே!

---

முஷ்டிகன் என்னும் மல்லர்களை, தண் தீர்தர - கண்ணோட்டம் இல்லாமல், தேய்த்தானை - அழித்தவனை.

513. 'கைத்தனு, மோடு இசை வெற்பு எனக் காண, வெவ் வாணன் என்னும் மத்தன், 'உ(ம்)மோடு இகல் செய்வன்!' என்றே வந்து, என் அப்பனுக்கு வை உறு வேல் அத்தனும், மோடியும், அங்கியும் ஓட, பித்தனும் அங்கத்துத் தான் என்றும் பெண்ணன் என்று ஓடினன்,' என இயைக்க.

கைத்தனு - கை வில்லானது, மோடு இசை வெற்பு - உயர்வு பொருந்திய மலை, வெவ்வாணன் - கொடிய பாணாசுரன், மத்தன் - பைத்தியக்காரன் ('உன்மத்தன்' என்பதன் முதற்குறை), இகல் - போர், வை உறு வேல் அத்தனும் - கூர்மை மிகுந்த வேலைத் தாங்கிய கையனாகிய முருகனும், மோடியும் - துர்க்கையும், அங்கியும் - அக்கினியும், ஓட - தோற்றோட, பித்தன் - சிவன், அங்கத்து - உடலில், பெண்ணன் - (பார்வதியாகிய) பெண்ணையுடையவன். 'வாடியோட்' எனத் தொடங்கும் திருவரங்கக் கலம்பகச் செய்யுளை இதனுடன் ஒப்பு நோக்குக.

514. 'பழிப்பு நண்ணாக் குவிக்கச்சு இளமுலைப் பூமகள் நாயகனே, எண் ஆ குவிக்கக் குழல் ஊதும் வேங்கடத்து என் கண்ணனே, பெண் ஆக்குவிக்கச் சிலைமேல் ஒரு துகள் பெய்த பொன் தாள் அண்ணுக்கு விக்கல் எழும்போது எனக்கு அருள் வாய்!' என இயைக்க.

பழிப்பு நண்ணா - குற்றமடையாத, குவி - குவிதலையுடையனவும், கச்சு - கச்சையணிந்தனவுமாகிய, பூமகள் - இலக்குமிக்கு, எண் ஆ - எண்ணால் மிகுந்த பசுக்களை, குவிக்க - ஒருங்கு சேர்க்க, சிலை - கல், பெண் - அகலிகை, துகள் - புழுதி, அண்ணுக்கு - உள் நாக்கு.

515] [சஅ

கண்ணனை யேனெஞ் சுருகே னவைகொண்டென் கண்ணுநெஞ்சும்
புண்ணனை யேன்கல் லனையேனென் றாலும்பொற் பூங்கமலத்
தண்ணனை யேநல்ல சார்வாக வேங்கடஞ் சார்ந்துமணி
வண்ணனை யேயடைந் தேற்கில்லை யோதொல்லை வைகுந்தமே.

516] [சகூ

வைகுந்த மாய விழிமாதர் வேட்கையை மாற்றியென்னை
வைகுந்த மாய வினைநீக் கியமுத்தர் மாட்டிருத்தி
வைகுந்த மாய வொசித்தாய் வடதிரு வேங்கடவா!
வைகுந்த மாயவ னே!மாசி லாதவென் மாமணியே!

517] செவிலித்தாய் இரங்கல் [ரு0

மணியாழி வண்ண னுகந்தாரைத் தன்வடி வாக்குமென்றே
தணியா ழியமறை சொல்லுந் தொண்டரது தோன்றக்கண்டோம்

---

515. 'கண் நனையேன்; நெஞ்சு உருகேன்; அவை கொண்டு என் கண்ணும் நெஞ்சும் (முறையே) புண் அனையேன்; கல் அனையேன்; என்றாலும், பொன் பூங்கமலத் தண் அ(ன்)னையே நல்ல சார்வு ஆக வேங்கடம் சார்ந்து, மணி வண்ணனையே அடைந்தேற்குத் தொல்லை வைகுந்தம் இல்லையோ?' என இயைக்க.

தண் அ(ன்)னையே - குளிர்ந்த அருளையுடையவளான தாயாகிய திருமகளை, சார்வு ஆக - நல்ல துணையாக, அடைந்தேற்கு - அடைந்தவனாகிய எனக்கு, தொல் வைகுந்தம் - பழமையான பரமபதம், இல்லையோ - இல்லாமற்போகுமோ?

516. 'குந்தம் மாய ஒசித்தாய், வடதிருவேங்கடவா, வைகுந்த மாயவனே, மாசு இலாத என் மாமணியே, வை குந்தம் ஆய விழி மாதர் வேட்கையை மாற்றி, என்னை வைகும் தம் ஆய வினை நீகிய முத்தர்மாட்டு இருத்தி வை,' என இயைக்க.

குந்தம் மாய - குருந்த மரம அழியும்படி, ஒசித்தாய் - முறித்தவனே, மாசு - குற்றம், வை குந்தம் ஆய - கூர்மையான வேலாயுதம் போன்ற, வேட்கை - ஆசை, வைகும் - (தம்மிடம்) தங்கிய, ஆய வினை - கூட்டமாகிய கருமத்தை, முத்தர் மாட்டு - முத்தருள், இருத்தி வை - இருக்கச் செய்தருள்வாயாக.

517. 'தொண்டர், 'மணி ஆழி வண்ணன் உகந்தாரைத் தன் வடிவு ஆக்கும்,' என்றே தணி ஆழிய மறை சொல்லும்; அது தோன்றக் கண்டோம்; பணி யாழின் மெல் மொழி வேங்கடேசனை ஆதரித்து மால் ஆகிப் பள்ளி கொள்ளாமல், சங்கோடு அணி ஆழி நீங்கி நின்றாள்,' என இயைக்க.

பணியாழின் மென்மொழி மாலாகிப் பள்ளிகொள் ளாமற்சங்கோ
டணியாழி நீங்கிநின் ருள்வேங்க டேசனை யாதரித்தே.

518] [ருக

ஆதரிக் கப்பட்ட வாணுதன் மங்கைய ரங்கைமலர்
மீதரிக் கப்பட்ட நின்னடி யேவெள் ளருவிசெம்பொன்
போதரிக் கப்பட்டஞ் சூழ்வேங் கடவெற்ப! போரரக்கர்
தீதரிக் கப்பட்ட கானகத் தூடன்று சென்றதுவே.

519] கிள்ளை விடு தூது [ருஉ

சென்றவ னத்தத்தை மைந்தரை வாழ்வித்துத் தீயமன்னர்
பொன்றவ னத்தத்தைச் செய்தபி ரான்புகழ் வேங்கடத்துள்

---

செவிலித்தாய் - வளர்ப்புத் தாய், மணி - நீலமணி, ஆழி - கடல், ஆக்கும் - செய்வான், துணி - துணிந்து கூறும், ஆழிய மறை - ஆழமாகிய பொருளுள்ள மறை, அது - அவ்வுண்மை, பணி யாழின் - வளைந்த வீணையின் இசையைப் போன்ற, மெல் மொழி - மென்மையான சொற்களைப் பேசும் என் மகள், ஆதரித்து - (அடைய) விரும்பி, மால் - மயக்கம், சங்கு - வளையல், ஆழி - மோதிரம்.

தன் வடிவாக்குதலாவது, தன்னைப் போன்றவராக்கித் தன் நிலையில் நிறுத்தல்.

518. 'வெள்ளருவி செம்பொன் போது அரிக்க, பட்டம் சூழ் வேங்கட வெற்ப, பட்ட வாள் நுதல் மங்கையர் ஆதரிக்க அம் கை மலர் மீ தரிக்க, பட்ட நின் அடியே அன்று போர் அரக்கர் தீது அரிக்க, பட்ட கானகத்தூடு சென்றது,' என இயைக்க.

செம்பொன் போது - செம்பொன்னையும் மலர்களையும், அரிக்க - கொழித்துக்கொண்டு வர, பட்டம் - நீர்நிலை, வெற்ப - மலைக்குரியவனே, பட்ட வாள் நுதல் - பொன்னாற்செய்த பட்டத்தை அணிந்த ஒளி பொருந்திய நெற்றி, மங்கையர் - உன் மனைவியர், ஆதரிக்க - அன்பு பாராட்டவும், அம் கை மலர் மீ - அழகிய மலர் போலும் கைகளில், தரிக்கப்பட்ட - தாங்கவும் பட்டு, அன்று-இராமவதார காலத்தில், அரிக்க - அழிப்பதற்கு, பட்ட - உலர்ந்த, கானகத்தூடு - காட்டில்.

519. 'வனத் தத்தைகாள், சென்ற வனத்து அத்தை மைந்தரை வாழ்வித்து, தீய மன்னர் பொன்ற அன(ர்)த்தத்தைச் செய்த பிரான்—அத்தத்து ஐயாயுதன்—புகழ் வேங்கடத்துள் நின்றவன் பாதத்து என் நேசமெல்லாம் ஒன்ற உரையீர்; உமக்கு அறம் உண்டு,' என இயைக்க.

நின்றவ னத்தத்தை யாயுதன் பாதத்தென் னேசமெல்லாம்
ஒன்றவ னத்தத்தை காள்!உரை யீரற முண்டுமக்கே!

520] நலைவி செவிலியர்க்கு அறத்தொடு நிற்றல் [ருஉ

உண்ட மருந்துகைக் கும்மன்னை மீர்!மத னைரைந்தம்பும்
கொண்ட மருந்துகைக் குங்குறு கா(ம்)னங் கொவ்வைச்செவ்வாய்
அண்ட மருந்துகைக் குந்திறந் தானப்பன் போற்பரியும்
எண்ட மருந்துகைக் கும்பொடி காப்பிடு மின்றெனக்கே.

521] [ருக

எனக்குப் பணியப் பணியொரு காலிரு காலுநல்க
உனக்குப் பணியிங் கிருவேம் பணியிலென் னோர்பணியும்

---

வனத் தத்தைகாள் - அழகிய கிளிகளே, அத்தை மைந்தர் - குந்தியின் புதல்வரான பாண்டவர், பொன்ற - அழிய, அனர்த்தம் - அழிவு, அத்தத்து - திருக்கைகளில், ஐயாயுதன் - பஞ்சாயுதங்களைத் தரித்தவன், ஒன்ற - பொருந்தும்படி, அறம்-புண்ணியம். ஐயாயுதம் - சங்கு, சக்கரம், கதை, வாள், வில்.

520. 'அன்னைமீர், உண்ட மருந்து கைக்கும்; மதனும் ஐந்து அம்பும் கொண்டு அமர் உந்துகைக்குக் குறுகா மு(ன்)னம் இன்று எனக்குக் கொவ்வைச் செவ்வாய் அண்டம் அருந்துகைக்கும் திறந்தான் அப்பன்போல் பரியும் எண் தமரும் துகைக்கும் பொடி காப்பு இடும்,' என இயைக்க.

'உந்துகைக்கும்' என்பதிலுள்ள உம்மை 'மதன்' என்பதனோடும் பிரித்துக் கூட்டப்பட்டது. 'தமரும்' என்பதிலுள்ள உம்மை, அசை.

மருந்து - அமுதம், கைக்கும் - கசக்கும், மதன் - மன்மதன், ஐந்து அம்பு - பஞ்ச பாணங்கள் (தாமரை, மா, அசோகு, முல்லை, குவளை என்னும் மலர்கள்), அமர் உந்துகை - போர் செய்தல், கொவ்வை - கோவைப்பழம் போலும், அண்டம் - உலகம், அப்பன் - திருவேங்கடமுடையான், பரியும் - அன்பு கொள்ளும், எண் தமர் - மதிப்புக்குரிய சுற்றத்தினராகிய ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய, பொடி - பாத தூளியை, காப்பு இடும் - காப்பாக இடுங்கள். 'அருந்துகைக்கும்' என்பதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்ச உம்மையாய், 'முன்பு கிருஷ்ணாவதாரத்தில் வெண்ணெயுண்பதற்கேயன்றி' என்னும் பொருளைத் தந்தது.

521. 'பணி வெற்பின்மீது ஓங்கி நின்ற தனிச்சுடரே, ஒரு கால் பணிய எனக்குப் பணி; இரு காலும் நல்க உனக்குப் பணி; இங்கு இருவேம் பணியில் என் ஓர் பணியும் நினக்குப் பணிவித்துக் கொண்டு, உன் பணி என்றனக்கு நீ பணித்திலை,' என இயைக்க.

நினக்குப் பணிவித்துக் கொண்டுன் பணிநீ பணித்திலையென்
றனக்குப் பணிவெற்பின் மீதோங்கி நின்ற தனிச்சுடரே!

522] தலைவியின் பிரிவாற்றாமை கண்ட செவிலி இரங்கல் [௫௫

தனித்தொண்டை மானிலத் தேபுரி வார்க்கருள் தாளுடையாய்!
தொனித்தொண்டை மானெடு வாய்பிளந் தாய்துங்க வேங்கடவா!
முனித்தொண்டை மான்கையிற் சங்காழி நல்கியென் மூரற்செவ்வாய்க்
கனித்தொண்டை மான்கையிற் சங்காழி கோடல் கருமமன்றே.

523] பிரிவாற்றாத தலைவி பிறை கண்டு வருந்தல் [௫௬

கருமாத வாவிருந் தாவன செய்தென் கருத்திருளைப்
பொருமாத வாவிருந் தாவனத் தாய்பொற் சவரியென்னும்

---

பணி வெற்பு - சேஷகிரி, பணிய - வணங்குதற்கு, பணி- வேலை, இரு காலும் - இரு திருவடிகளையும், நல்க - கொடுக்க, இருவேம் பணியில் - நம் இருவர் வேலையில், பணிவித்துக் கொண்டு - செய்வித்துக்கொண்டு, பணித்திலை - செய்கின்றாயில்லை.

522. 'மால் நிலத்தே தனித் தொண்டைப் புரிவார்க்கு அருள் தாள் உடையாய், தொனித் தொண்டை மான் நெடுவாய் பிளந்தாய், துங்க வேங்கடவா, (நீ) முனித் தொண்டைமான் கையில் சங்கு ஆழி நல்கி, என் மூரல் செவ்வாய்க் கனித் தொண்டைமான் கையில் சங்கு ஆழி கோடல் கருமம் அன்றே!' என இயைக்க.

மால் - பெரிய, தனித்தொண்டு - ஒப்பற்ற சேவை, தொனித் தொண்டை மான் - (செருக்குற்றுக்) கனைத்தலைச் செய்த குரலையுடைய குதிரையாகிய கேசி என்னும் அசுரனது, துங்கம் - உயர்வு, முனித் தொண்டைமான் - அரச முனிவனாகிய தொண்டைமான் சக்கரவர்த்தி, சங்கு ஆழி - சங்க சக்கரங்கள், வளையும் மோதிரமும், மூரல் - புன்சிரிப்பு, தொண்டை - தொண்டைக் கனி, கோடல் - கொள்ளுதல், கருமம் அன்றே - செய்யத் தக்க செயல் அல்லவே!

தொண்டைமான் சக்கரவர்த்தி தவங்கிடந்து திருமாலின் சங்க சக்கரங்களைப் பெற்றுத் தன் பகைவர்களை வென்றான் என்பது வேங்கடாசல மகாத்துமியம் கூறும் வரலாறு.

523. 'கரு மாதவா, என் கருத்து இருந்து, ஆவன செய்து, இருளைப் பொரும் ஆதவா, விருந்தாவனத்தாய், பொன் சவரி என்னும் ஒரு மாது அவா விருந்தா, வனக்கா உயர்வேங்கடத்து எம் பெருமா, பிறைக்கொழுந்து தவா இருந்தாவு அனல் ஏயும்,' என இயைக்க.

ஒருமாத வாவிருந் தாவனக் காவுயர் வேங்கடத்தெம்
பெருமாத வாவிருந் தாவன லேயும் பிறைக்கொழுந்தே!

524] [ருள

பிறைமாலை யாலொரு பேதைநைந் தாளந்தப் பேதைக்குநின்
நறைமாலை தாவென்று மானிடம் பாடிய நாவலர்காள்!
நிறைமாலை யற்றுக் கவிமாலை யானினை யீர்திருவெள்
ளறைமாலை வேங்கடத் தேயுறை மாலை யரங்கனையே.

525] [டு அ

அரங்கம் குடந்தை குருகூர் குறுங்குடி அட்டபுய-
கரங்கண்ண மங்கை நறையூர் கடன்மல்லை கச்சிகண்ண-

---

கரு - கரிய நிறமுடைய, கருத்து - மனம், ஆவன - ஆக வேண்டிய நலங்கள், இருளை - அஞ்ஞானத்தை, பொரும் - சிதைத்து அழிக்கும், ஆதவா - சூரியனே, விருந்தா வனத்தாய் - பிருந்தா வனத்தில் திருவிளையாட்டு அயர்ந்தவனே, பொன்சவரி- உத்தமியாகிய சபரி, அவா - விரும்பிய, விருந்தா - விருந்தினனே, வனக்கா - அழகிய சோலை, பெருமா - தலைவனே, இளம்பிறை - இளம்பிறைச் சந்திரனைனது, இருந்தாவு அனல் - பெரிய தாவுகின்ற தீ, ஏயும் - ஒத்திருக்கின்றது.

524. 'பிறை மாலையால் ஒரு பேதை நைந்தாள்; அந்தப் பேதைக்கு நின் நறை மாலை தா,' என்று மானிடம் பாடிய நாவலர்காள், (நீங்கள்) நிறை மாலை அற்றுக் கவி மாலையால் திருவெள்ளறை மாலை—அரங்கனை—வேங்கடத்தே உறை மாலையே நினையீர்,' என இயைக்க.

பிறை மாலையில் - பிறைச் சந்திரன் தோன்றும் மாலைக் காலத்தால், பேதை - பெண், நைந்தாள் - (உன்மீது கொண்ட காதலால்) வருந்தினாள், நறை - வாசனை, மானிடம் - மனிதன், நாவலர்காள் - புலவர்களே, நிறைமாலை அற்று - (உங்கள் மனத்தில்) நிறைந்த மயக்கத்தை நீங்கி, கவி மாலையால் - பாமாலையால், திருவெள்ளறை - ஒரு விஷ்ணு க்ஷேத்திரம், மாலை - திருமாலை, உறை - வசிக்கின்ற, நினையீர் - தியானிப்பீராக.

'நரஸ்துதி ஒழித்து நாராயணன் புகழை நவிலுங்கள்,' என்பது கருத்து.

525. திருவேங்கடமுடையானுக்குரிய ஸ்தலங்கள் இவை: திருவரங்கம், திருக்குடந்தை (கும்பகோணம்), திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி), திருக்குறுங்குடி, அட்டபுயகரம், திருக்கண்ண மங்கை, திருநறையூர், திருக்கடன்மல்லை (மாமல்லபுரம்),

புரங்கண்டி யூர்தஞ்சை மாலிருஞ் சோலைபுல் லாணிமெய்யம்
தரங்கம் பரம பதம்வேங்க டேசற்குத் தானங்களே.

526] [ருகூ

தானவ னாக மருப்பொசித் தானுக்குத் தானுகந்த
தானவ னாக முடியினின் றானுக்குத் தாள்வணங்காத்
தானவ னாக மிடந்தானுக் காளென்று தன்னையெண்ணாத்
தானவ னாக நினைந்திருப் பார்க்கென்றுந் தானவனே.

527] [சுo

தானவ ராகந் தடிவார் வடமலைத் தண்ணந்துழாய்
ஞானவ ராகர் தருமண்டம் யாவையு நண்ணியவர்
கானவ ராக விரறோறு மத்திக் கனியின்வைகும்
வானவ ராக விருப்பா ரவற்றுண் மசகங்களே.

---

கச்சி (காஞ்சிபுரம்), திருக்கண்ணபுரம், திருக்கண்டியூர், தஞ்சை (தஞ்சாவூர்), திருமாலிருஞ்சோலை, திருப்புல்லாணி (தருப்பசயனம்), திருமெய்யம், தரங்கம் (திருப்பாற்கடல்), பரமபதம்.

526. 'தான அல் நாகம் மருப்பு ஒசித்தானுக்குத் தான் உகந்தது ஆன வல் நாகம் முடியில் நின்றானுக்குத் தாள் வணங்காத் தானவன் ஆகம் இடந்தானுக்கு ஆள் என்று தன்னை எண்ணா, தான் அவனாக நினைந்திருப்பார்க்கு என்றும் தான் அவனே,' என இயைக்க.

தானம் - மதம், அல் - இருள், நாகம் - யானை, மருப்பு - தந்தம், ஒசித்தான் - ஒடித்தவன், உகந்தது - விரும்பியது, வல் நாகம் - வலிய (திருவேங்கட) மலை, முடி - சிகரம், தாள் - திருவடியை, தானவன் - (இரணியன் என்னும்) அசுரனது, ஆகம் - மார்பு, இடந்தான் - பிளந்தவன், ஆள் - அடிமை, எண்ணா - நினையாமல், நினைந்திருப்பார்க்கு - எண்ணியிருப்பவருக்கு, அவனே - பயன்படாதவனே (அவம் - வீண்).

527. 'தானவர் ஆகம் தடிவார் வடமலைத் தண் அம் துழாய் ஞான வராகர் தரும் அண்டம் யாவையும், அவர் கால் நவராக விரல்தோறும் அத்திக்கனியின் நண்ணி வைகும்; வானவராக இருப்பார், அவற்றுள் மசகங்களே,' என இயைக்க.

தானவர் - அசுரர், ஆகம் - உடலை, தடிவார் - துணிப்பவரான, ஞான வராகர் - ஞான வராகமூர்த்தி, தரும் - படைத்த, அண்டம் யாவையும் - உலகங்களெல்லாம், நவராகம் - புதிய செந்நிறத்தையுடைய, கனியின் - பழம் போல, நண்ணி வைகும் - பொருந்தியிருக்கும், வானவர் - தேவர், மசகங்கள் - கொசுகுகள்.

528] பாங்கி வெறி விலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடு நிற்றல் [சுக

மசகந் தரமென லாய்நிலை யாவுடல் வாழுயிரை
அசகந் தரவல்ல தோவன்னை மீரண்ட முண்டுமிழ்வா
ரிசகந் தரவண்ணர் வேங்கட வாண ரிலங்கையர்கோன்
தெசகந் தரமறுத் தார்திருப் பேர்சொல்லுந் தீங்கறவே.

529] [சுஉ

தீங்கட மாலத்தி முன்னின்று காலிப்பின் சென்றகொண்டல்
வேங்கட மால்கழ லேவிரும் பார்விலை மாதர்மலம்
ஆங்கட மால்செய மாலா யவரெச்சி லாகநச்சித்
தாங்கட மாலழி வாரிருந் தாலுஞ் சவப்பண்டமே.

530] [சுங

பண்டை யிருக்கு மறியாப் பரம பதத்தடியார்
அண்டை யிருக்கும் படிவைக்கு மப்பனை யண்டத்துக்கும்

---

528. 'அன்னைமீர் மசகம் தரம் என்னல் ஆய் நிலையா உடல் வாழ் உயிரை அசகம் தர வல்லதோ? தீங்கு அற, அண்டம் உண்டு உமிழ் வாரிசக் கந்தர வண்ணர்—இலங்கையர்கோன் தெசகந்தரம் அறுத்தார்—வேங்கட வாணர் திருப்பேர் சொல்லும்,' என இயைக்க.

மசகம் தரம் என்னல் ஆய் - கொசுக்குச் சமானம் என்று சொல்லத் தகுந்ததாய், அசகம் - (நீங்கள் வெறியாட்டயர்ந்து பலியிடும்) ஆட்டின் தலை, வாரிசம் - தாமரை, கந்தரம் - மேகம், தெச கந்தரம் - பத்துத் தலைகள், வாணர் - வாழ்பவர், சொல்லும்- உச்சரியுங்கள்.

529. 'தீங்கு அட மால் அத்தி முன் நின்று காலிப் பின் சென்ற கொண்டல் வேங்கட மால் கழலே விரும்பார், விலை மாதர் மலம் ஆம் கடம் மால் செய மால் ஆய், அவர் எச்சில் ஆகம் நச்சித் தாங்கள் தமால் அழிவார் இருந்தாலும் சவப்பண்டமே,' என இயைக்க.

அட - அழிக்க, மால் அத்தி - (கஜேந்திரனாகிய) பெரிய யானை, காலி - பசுக்கள், கொண்டல் - மேகம் போன்ற, மால் - திருமாலின், விலை மாதர் - தாசிகளின், மலர் ஆம் கடம் - அசுத்தப்பாண்டம் போன்ற உடல், மால் - மயக்கம், எச்சில் ஆகம் நச்சி - எச்சிலையும் உடலையும் விரும்பி, தமால் - தங்களாலேயே, சவப் பண்டம் - பிணப்பொருள்.

530. 'பண்டை இருக்கும் அறியாப் பரமபதத்து அடியார் அண்டை இருக்கும்படி வைக்கும் அப்பனை—அண்டத்துக்கும் தண் தயிருக்கும் மலர்ந்த செவ்வாயனை-தாள் வணங்கா மண்டை யிருக்கும் சனனம் மரணமும் விடுமோ?' என இயைக்க,

தண்டை யிருக்கு மலர்ந்தசெவ் வாயனைத் தாள்வணங்கா
மண்டை யிருக்கும் விடுமோ சனன மரணமுமே?

531] [௫௩௧

மரணங் கடக்குஞ் சரநீங்க வாழ்வித்து வல்லரக்கர்
முரணங் கடக்குஞ் சரவேங் கடவகண் மூடியந்தக்
கரணங் கடக்குஞ் சரமத்து நீதரு கைக்கெனக்குன்
சரணங் கடக்குஞ் சரண்வே றிலைதந்து தாங்கிக்கொள்ளே.

532] [௫௩௨

தாங்கட லாழி வளைதண்டு வாள்வில்விற் றானவரை
சங்கட வீசிக் குறித்தடித் துத்துணித் தெய்துவெல்லும்
பூங்கடல் வண்ணன் நிலைகிடை வந்தது போக்கிருப்பு
வேங்கடம் வேலை யயோத்திவெங் கானகம் விண்ணுலகே.

---

பண்டை இருக்கும் - பழைய வேதங்களும், பரமபதம் - ஸ்ரீ வைகுண்டம், அடியார் அண்டை - நித்திய சூரிகளின் அருகில், அப்பனை - திருவேங்கடமுடையானை, அண்டம் - உலகம், தண் தயிர் - குளிர்ச்சியான தயிர், மண்டையிருக்கும் - தலையுடையவ ராகிய உமக்கும், சனனம் - பிறப்பு, விடுமோ - நீங்குமோ? (நீங்கா.)

531. 'கடக் குஞ்சரம் மரணம் நீங்க வாழ்வித்து, வல் அரக்கர் முரண் அங்கு அடக்கும் சர, வேங்கடவ, கண் மூடி அந்தக் கரணம் கடக்கும் சரமத்து நீ எனக்குத் தருகைக்கு உன் சரணம் கடக்கும் சரண் வேறு இல்லை; தந்து தாங்கிக்கொள்,' என இயைக்க.

கடக்குஞ்சரம் - மதயானை, வாழ்வித்து - வாழச் செய்து, முரண் - பலத்தை, அங்கு - (இலங்கையாகிய) அவ்விடத்தில், சர - அம்புகளையுடையவனே, அந்தக்கரணம் கடக்கும் - மனம் அழியும், சரமத்து - முடிவு காலத்தில், தருகைக்கு - கொடுப் பதற்கு, சரண் கடக்கும் சரண் - திருவடியல்லாத வேறு புக லிடம், தாங்கிக்கொள் - ஏற்றுக்கொள்வாயாக.

532. 'தாங்கு அடல் ஆழி, வளை, தண்டு, வாள், வில்லின் தானவரைச் சங்கு அட, வீசி, குறித்து, அடித்து, துணித்து, எய்து வெல்லும் பூங்கடல் வண்ணன் நிலை, கிடை, வந்தது, போக்கு, இருப்பு—வேங்கடம், வேலை, அயோத்தி, வெங்கானகம், விண் உலகு,' என இயைக்க.

'ஆழியின் வீசி, வளையிற்குறித்து, தண்டின் அடித்து, வா ளின் துணித்து, வில்லின் எய்து' எனவும், 'நிலை வேங்கடம், கிடை வேலை, வந்தது அயோத்தி, போக்குக் கானகம், இருப்பு

533] [௬௬

உலகந் தரவுந்தி பூத்திலை யேற்சுட ரோரிரண்டும்
இலகந் தரமும் புவியுமெங் கேயய னீசனெங்கே
பலகந் தரமு முணவுமெங் கேபல் லுயிர்களெங்கே
திலகந் தரணிக் கெனநின்ற வேங்கடச் சீதரனே!

534] [௬௭

சீவார் கழலை இரண்டையுஞ் செப்பென்று தீங்குளவி
னுவார் கழலைப் பயில்செங்கை யார்நலம் பேணுமைவர்
ஆவார் கழலை யிரண்டா மவத்தையி னன்றெனக்குன்
பூவார் கழலை அருளப்ப னேயண்ட பூரணனே!

---

விண் உலகு,' எனவும் முறை நிரல் நிறைப் பொருள் கோள் இச்செய்யுளில் அமைந்ததை அறிக.

தாங்கு - ஏந்திய, ஆழி - சக்கரம், வளை - சங்கு, தண்டு - கதை, தானவரை - அசுரரை, அட - அழிக்க, குறித்து - முழக்கி, பூங்கடல் - அழகிய சமுத்திரம், நிலை - நின்ற திருக்கோலம், கிடை - பள்ளி கொள்ளுமிடம், வந்தது - அவதரித்த இடம், போக்கு - நடந்து சென்ற இடம், இருப்பு - அமர்ந்துள்ள இடம், வேலை - (பால்) கடல், வெங்கானகம் - கொடிய காடு, விண் உலகு - பரமபதம்.

533. 'தரணிக்குத் திலகம் என நின்ற வேங்கடச் சீதரனே, உலகம் தர உந்தி பூத்திலையேல், சுடர் ஓர் இரண்டும், இலகு அந்தரமும், புவியும் எங்கே? அயன் ஈசன் எங்கே? பல கந்தரமும் உணவும் எங்கே? பல் உயிர்கள் எங்கே?' என இயைக்க.

தரணி - பூமி, திலகம் - நெற்றிப்பொட்டு, சீதரனே - இலக்குமியை (மார்பில்) தரித்தவனே, உந்தி - நாபித்தாமரை, பூத்திலையேல் - மலர்ந்திராயாயின், சுடர் ஓர் இரண்டு - சூரிய சந்திரர், இலகு அந்தரம் - விளங்கும் ஆகாயம், புவி - பூமி, எங்கே - எவ்விடத்தே தோன்றும், தோன்றுவர்? பல கந்தரம் - பல மேகங்கள்.

534. 'அப்பனே, அண்ட பூரணனே, கழலைப் பயில் செங்கையார் சீ வார் கழலை இரண்டையும் செப்பு என்று தீங்கு உளவினுவார், நலம் பேணும் ஐவராவார், கழல் ஐயிரண்டு ஆம் அவத்தையின் அன்று எனக்கு உன் பூ ஆர் கழலை அருள்,' என இயைக்க.

கழலை பயில் - கழற்சிக்காய் பொருந்திய, செங்கையார் - சிவந்த கையினராகிய பெண்டிரின், சீ வார் கழலை - சீ ஒழுகுகின்ற கட்டிகளாகிய (தனங்கள்), செப்பு - கிண்ணம், தீங்கு உள-

535] [சுஅ

பூரண ஞரணன் பொன்னுல காளி புராரிகொடி
வாரண ஞரணன் வாழ்த்தும் பிரான்வட வேங்கடத்துக்
காரண ஞரணங் காஞ விறைவி கணவன் மண்ணேழ்
பாரண ஞரண னென்பார்க்கு நீங்கும் பழுதவமே.

536] [சுசு

பழுத்தெட்டி போன்ற நடுச்செல்வர் பின்சென்று பல்செருக்கால்
கொழுத்தெட் டினையள வெண்ணமற் றீர்குவ டேறிமந்தி
கழுத்தெட்டி யண்டர் பதிநோக்கும் வேங்கடக் காவலனை
எழுத்தெட்டி ஞலெண்ணி யேத்தீர் பரகதி யேறுதற்கே.

---

(அவர்களிடம்) உள்ளனவாகிய தீமைகளை, விஞவார் - கேட்டறியாதவராய், நலம் பேணும் - (அவர்களது) இன்பத்தை விரும்பும், ஐவர் ஆவார் - பஞ்சேந்திரியங்கள், கழல் - விட்டு நீங்குகின்ற, ஐ இரண்டு ஆம் அவத்தை - (நினைவு, பேச்சு, வருந்தல், பெருமூச்சு விடுதல், வெப்பம் கொள்ளுதல், உணவில் அருவருப்பு, மெலிதல், பிதற்றுதல், மயங்கல், மரணம் என்னும்) பத்து விதமான மன்மதனுல் உண்டாக்கப்படும் பத்து அவஸ்தைகளில் மரணமாகிய அவஸ்தை நேரிடுகின்ற, அன்று - அந்நாளில், பூ ஆர் கழல் - தாமரை மலர் போலும் திருவடிகளை, அருள் - கொடுத்தருள்வாயாக.

535 ' 'பூரணன்—ஆரணன், பொன் உலகு ஆளி, புர அரி, கொடி வாரணன், ஆர் அணன் வாழ்த்தும் பிரான்—வடவேங்கடத்துக் காரணன்—ஆஞ இறைவி ஆர் அணங்கு கணவன்—மண் எழ் பாரணன்—நாரணன்,' என்பார்க்குப் பழுது அவம் நீங்கும்,' என இயைக்க.

பூரணன் - சர்வ வியாபகன், ஆரணன் - பிரமன், பொன் உலகு ஆளி - இந்திரன், புர அரி - திரிபுரமழித்த சிவன், கொடி வாரணன் - கொடியில் கோழியுருவை உடையவஞன முருகன், ஆர் அணன் - பொருந்திய தலைமயஞன விஞயகன், பிரான் - தலைவன், காரணன் - (எல்லாவற்றுக்கும்) காரணமானவன், ஆஞ - விட்டு நீங்காத, இறைவி - தலைவியாகிய, ஆர் அணங்கு - அருமையான இலக்குமிக்கு, பாரணன் - உண்டவன், நாரணன் - நாராயணன், பழுது - தீவினைகள், அவம் நீங்கும் - வீணில் ஒழியும்.

536. 'பழுத்த எட்டி போன்ற நடுச்செல்வர் பின் சென்று பல் செருக்கால் கொழுத்து, எள் தினை அளவு எண்ணம் அற்றீர், பரகதி ஏறுதற்கு மந்தி குவடு ஏறிக் கழுத்து எட்டி அண்டர் பதி

537] [எ0

ஏறுக டாவுவ ரன்னங் கடாவுவ ரீரிருகோட்
டூறுக டாமழை யோங்கல் கடாவுவ ரோடருவி
ஆறுக டாத வமுதெனப் பாய வரிகமுகந்
தாறுக டாவும் வடவேங் கடவரைத் தாழ்ந்தவரே.

538] [எக

தாழ்ந்தவ ருக்கந் தருவொக்கு மோபல தாரகையும்
சூழ்ந்தத ருக்கன் சுடரொக்கு மோதொல் லரக்கரென்று
வாழ்ந்தவ ருக்கங் களைந்தான் வடமலை மாலடிக்கீழ்
வீழ்ந்தவ ருக்கன் பருக்கொப்ப ரோவண்டர் மெய்த்தவரே.

---

நோக்கும் வேங்கடக் காவலனை எழுத்து எட்டினால் எண்ணி ஏத்தீர்,' என இயைக்க.

எட்டி - எட்டி மரம் (இது பழுத்தும் பிறர்க்குப் பயன்படாதது), நடுச்செல்வர் - இடையிலே வந்த செல்வத்தையுடையவர், எண்ணம் அற்றீர் - (கடவுளைப் பற்றிய) சிந்தனை அற்றவர்களே, பரகதி - பரமபதம், மந்தி - பெண் குரங்கு, குவடு - சிகரம், அண்டர் பதி - தேவலோகம், எழுத்து எட்டு - (பெரிய திருமந்திரமாகிய) அஷ்டாக்ஷர மந்திரம், ஏத்தீர் - துதியுங்கள்.

537. 'ஓடு அருவி ஆறு கடாத அமுது எனப் பாய, அரி கமுகந்தாறுகள் தாவும் வடவேங்கடவரைத் தாழ்ந்தவர், ஏறு கடாவுவர்; அன்னம் கடாவுவர்; ஈர் இருகோட்டு ஊறு கடாம் மழை ஓங்கல் கடாவுவர்,' என இயைக்க.

'வடவேங்கடவரை வணங்கியவர், சிவ பதவி, பிரம பதவி, இந்திர பதவி என்னும் மேலான பதவிகளை அடைவர்,' என்பது கருத்து.

கடாத - கடுக்காத, அரி - குரங்கு, கமுகந்தாறு - பாக்கு மரக் குலைகளின்மேல், தாழ்ந்தவர் - வணங்கியவர், ஏறு - எருது, கோட்டு - தந்தங்களையுடைய, ஓங்கல் - (ஐராவதம் என்னும் வெள்ளை) யானை, கடாவுவர் - ஏறிச் செலுத்துவர்.

538. 'தாழ்ந்த அருக்கம், தரு ஒக்குமோ? பல தாரகையும், சூழ்ந்த அருக்கன் சுடர் ஒக்குமோ? அண்டர், மெய்த்தவர், தொல் அரக்கர் என்று வாழ்ந்த வருக்கம் களைந்தான் வடமலை மால் அடிக்கீழ் வீழ்ந்தவருக்கு அன்பருக்கு ஒப்பரோ?' என இயைக்க.

'அடியவர்க்குத் தொண்டு செய்பவர் தேவரினும் முனிவரினும் மேம்பட்டவராவர்,' என்பது கருத்து.

அருக்கம் - எருக்கஞ்செடி, தரு - கற்பக விருட்சம், ஒக்குமோ - ஒப்பாகுமோ? தாரகை - நட்சத்திரம், சூழ்ந்த - பரவிய,

539] [எஉ

மெய்த்தவம் போருக வெஞ்சொலி ராமன்வில் வாங்கிவளைத்
துய்த்தவம் போருக நாளுஞ்செய் தோருயர் வேங்கடத்து
வைத்தவம் போருகப் பூவார் கழலை மறைமனு நூல்
பொய்த்தவம் போருக வார்காமம் வேட்டுப் புரளுவரே.

540] [எங

புரண்டுதிக் கும்முடற் கேயிதஞ் செய்பொரு ளாக்கையினால்
இரண்டுதிக் குந்தடு மாறுநெஞ் சேயினி யெய்துவம்வா
திரண்டுதிக் கும்மரன் வேளய னார்முதற் றேவரெல்லாம்
சரண்டுதிக் கும்படி மேனின்ற வேங்கடத் தாமத்தையே.

---

அருக்கன் சுடர் - சூரியனது ஒளி, அண்டர் - தேவர், மெய்த் தவர் - உண்மைத் தவசிகள், வருக்கம் - கூட்டம், அடிக்கீழ் வீழ்ந்தவர் - அடியவர்.

இக்கவி எடுத்துக்காட்டு உவமையணி.

539. 'மெய்த்தவம் போர் உக வெஞ்சொல் இராமன் வில் வாங்கி வளைத்து உய்த்த அம்போர்—உகம் நாளும் செய்தோர்—உயர் வேங்கடத்து வைத்த அம்போருகப் பூ ஆர் கழலை மறை மனு நூல் பொய்த்த வம்போர் உகவார், காமம் வேட்டுப் புரளுவரே!' என இயைக்க.

போர் உக - போரில் கெட்டொழிய, வெஞ்சொல் இராமன் - கடுஞ்சொற்களைக் கூறிய பரசுராமனுடைய, உய்த்த அம்போர் - செலுத்திய அம்புகளையுடையவரும், உகம் நாளும் - நான்கு யுகங்களையும், வம்போர் - வம்பர்கள், உகவார் - விரும்பாதவர்களாய், காமம் வேட்டு - சிற்றின்பத்தை விரும்பி, புரளுவரே - (அந்தோ!) மாறி மாறிப் பிறப்பார்களே!

ஈற்றில் உள்ள ஏகாரம் மிகுந்த இரக்கத்தைக் குறிக்கும்.

540. 'புரண்டு உதிக்கும் உடற்கே இதம் செய் பொருள் ஆக்கையின் நால் இரண்டு திக்கும் தடுமாறும் நெஞ்சே, இனி, திக்கும் அரன், வேள், அயனார் முதல் தேவர் எல்லாம் திரண்டு சரண் துதிக்கும்படி வேங்கடமேல் நின்ற தாமத்தை எய்துவம் வா,' என இயைக்க.

புரண்டு உதிக்கும் - உரு மாறிப் பல பிறப்பும் பிறக்கும், உடற்கே - உடம்பைப் பாதுகாப்பதற்கே, இதம் செய் - நன்மையைச் செய்கின்ற, ஆக்கையின் - சம்பாதிப்பதால், தடுமாறும் - திரிந்து உழலும், திக்கும் - (தீக்கும் என்பதன் விகாரம்) முப்புரங்களை எரிக்கும், அரன் - சிவன், வேள் - முருகன், அயனார் - பிரம தேவர், முதல் - முதலாகிய, சரண் - திருவடிகளை, தாமத்தை -

541] பிரிவாற்றாத தலைவி தோழியரை நோக்கி இரங்கிக் கூறல் [௭௪

தாமத் தளைவெண்ணெ யுண்டவந் நாளிடைத் தாயர்பிணி
தாமத் தளையுவந் தார்வேங்க டாதிபர் தாமரைப்பூந்
தாமத் தளைமணி யோடணி மார்பினற் றண்ணந் துழாய்
தாமத் தளைவதென் றோமட வீரென் றடமுலையே.

542] பாதவகுப்பு [௭௫

தடவி கடத்தலை வேழமுன் னின்றன சாடுதைத்துப்
புடவி கடத்தலை யீரே ழளந்தன பூந்திருவோ
டடவி கடத்தலை வேட்டன வேங்கடத் தப்பன்புள்ளைக்
கடவி கடத்தலை நெய்யுண்ட மாதவன் கான்மலரே.

---

ஒளி மயமான இறைவனை, எய்துவம் - அடைவோம். (தாமம் - ஒளி.)

541. 'மடவீர், மத்து அளை வெண்ணெய் தாம் உண்ட அந்நாள் இடைத் தாயர் பிணி தாமத்தளை உவந்தார்—வேங்கட அதிபர்—தாமரைப்பூந் தாமத்தளை மணியோடு அணி மார்பில் நல் தண் அம் துழாய்த் தாமத்து என் தடமுலை அளைவது என்றோ?' என இயைக்க.

மடவீர் - அறியாமையையுடைய தோழியரே, அளை வெண்ணெய் - கடைந்த வெண்ணெயை, அந்நாள் - (கிருஷ்ணாவதாரம் செய்த) அந்த நாளில், இடைத்தாயர் - இடைத் தாயாராகிய அசோதைப் பிராட்டியார், பிணி - கட்டிய, தாமத்தளை - கயிற்றுக் கட்டை, உவந்தார் - மகிழ்ந்து ஏற்றுக்கொண்டவரும், வேங்கட அதிபர் - திருவேங்கடமுடையவருமான என் தலைவருடைய, தாமத்தளை - இடமாகக் கொண்டவளான இலக்குமியையும், மணியோடு - கவுஸ்துப மணியையும், அணி மார்பில் - அணிந்த மார்பில், தாமத்து - மாலையில், அளைவது - பொருந்துவது.

'இனி என் தலைவனை நான் கூடுவது எக்காலமோ!' என்பது கருத்து.

542. 'புள்ளைக் கடவி—கடத்தலை நெய் உண்ட மாதவன்—வேங்கடத்து அப்பன் கால் மலர், தட விகடத் தலை வேழமுன் நின்றன; சாடு உதைத்து, தத்து அலைப் புடவிகள் ஈரேழ் அளந்தன; பூந்திருவோடு அடவி கடத்தலை வேட்டன,' என இயைக்க.

புள்ளைக் கடவி - கருடனாகிய பறவையை நடத்துபவன், கடத்தலை - குடத்தில் உள்ள, கால் மலர் - திருவடி மலர்கள், தட விகடத்தலை வேழமுன் - விசாலமான மேடு பள்ளங்களையுடையதாய் மாறுபட்டுள்ள மத்தகத்தையுடைய கஜேந்திரனாகிய யானையின் முன், சாடு - சகடாசுரனை, தத்து அலைப் புடவிகள் -

543] [எசு

கானக முண்டதிற் போமென்னி னீங்கிக் கடும்பிணிகாள்!
தேனக முண்டகத் தாள்வேங் கடேசனைச் சென்றிரக்கும்
போனக முண்டவெண் ணீற்றா னயனொடும் பூமியொடும்
வானக முண்ட பெருமானை யின்றென் மனமுண்டதே.

544] [எஎ

மனந்தலை வாக்குற வெண்ணி வணங்கி வழுத்துந்தொண்டர்
இனந்தலைப் பெய்தன னீதன்றி யேயிமை யோருமெங்கள்
தனந்தலை வாவெனும் வேங்கட வாண தடங்கடலுள்
நனந்தலை நாகணை யாயறி யேனன்பு ஞானமுமே.

---

துள்ளும் அலைகளால் சூழப்பட்ட உலகங்கள், ஈரேழ் அளந்தன - பதினான்கையும் அளந்தன, அடவி - காடு, கடத்தலை வேட்டன - கடப்பதை விரும்பிச் சென்றன.

543. 'சென்று இரக்கும் போனக முண்டம் வெண்ணீற்றான் அயனொடும் பூமியொடும் வானகம் உண்ட பெருமானை— தேன் அக முண்டகத்தாள் வேங்கட ஈசனை இன்று என் மனம் உண்டது; கடும்பிணிகாள், என்னின் நீங்கி, கானகம் உண்டு, அதில் போம்,' என இயைக்க.

போனகமுண்டம் - பிச்சையுணவைக் கொள்ளும் பிரம கபாலத்தைக் கையில் தாங்கிய, வெண்ணீற்றான் அயனொடும் - சிவன் பிரமன் என்னும் இருவரோடு, வானகம் - மேலுலகத்தையும், உண்ட - உட்கொண்ட, முண்டகத்தாள் - தாமரை மலர் போலும் திருவடிகளையுடைய, ஈசனை - தலைவனை, கடும்பிணிகாள் - கொடிய வியாதிகளே, என்னின் நீங்கி - என்னை விட்டுப் பிரிந்து, கானகம் உண்டு - காடு உள்ளது, போம் - போங்கள்.

544. 'இமையோரும், 'எங்கள் தனம், தலைவா,' எனும் வேங்கட வாண, தடங்கடலுள் நனந்தலை நாக அணையாய், மனம் தலை வாக்கு உற எண்ணி வணங்கி வழுத்தும் தொண்டர் இனம் தலைப்பெய்தனன்; ஈது அன்றியே அன்பும் ஞானமும் அறியேன்,' என இயைக்க.

இமையோர் - தேவர், தனம் - செல்வமே, எனும் - என்று போற்றும், வேங்கட வாண - திருவேங்கடத்தில் வாழ்பவனே, தடங்கடலுள் - விசாலமான பாற்கடலில், நனந்தலை நாக அணையாய் - விசாலமான இடத்தையுடைய ஆதிசேஷனாகிய பாம்புப் படுக்கையை உடையவனே, உற - பொருத்தமாக, வழுத்தும் - துதிக்கும், இனம் - கூட்டத்தில், தலைப்பெய்தனன் - சேர்ந்தேன்.

545] [எஅ

ஞானக்கண் டாகன வொக்கும் பவந்துடை நஞ்சிருக்கும்
தானக்கண் டாகனற்சோதியென் றேத்துவன் றாலமுடன்
வானக்கண் டாகன வண்ணவென் றோதொலி வந்தடையா
ஈனக்கண் டாகனற் கீந்தான் பரகதி யென்னப்பனே.

546] [எகூ

என்னப்ப னாகத்துப் பொன்னூலன் வேங்கடத் தெந்தைதுயில்
மன்னப்ப னாகத்துக் கஞ்சலென் றான்பன் மணிசிதறி
மின்னப்ப னாகத்துப் பாய்ந்தான் கதையன்றி வெவ்வினைகள்
துன்னப்ப னாகத்துப் பொய்ந்நூல் புகாவென் றுளைச்செவிக்கே.

547] நாரை விடுதூது [அ0

செவித்தலை வன்னியிற் சூடுண்ட வேயிசை தீப்பதும்யான்
தவித்தலை வன்மய லுந்தமர் காப்புந் தமிழ்க்கலியன்

---

545. ‘நஞ்சு இருக்கும் தானக் கண்டா, கனல் சோதி, ஞானக்கண் தா; கனவு ஒக்கும் பவம் துடை,’ என்று ஏத்து வல் தாலமுடன், ‘வானக்கண் தா கன வண்ண,’ என்று ஓது ஒலி வந்து அடையா ஈனக் கண்டாகனற்கு என் அப்பன் பரகதி ஈந்தான்,’ என இயைக்க.

நஞ்சு - விஷம், தானக்கண்டா - இடமாகிய கழுத்தையுடையவனே, கனல் சோதி - நெருப்பொளி வடிவானவனே, பவம் - பிறப்பை, துடை - ஒழி, ஏத்து வல் தாலமுடன் - துதிக்கும் வலிய நாக்குடன், வானக்கண் - வானத்தில், தா - தாவுகின்ற, கனம் - மேகம் போலும், வண்ண - நிறமுடையவனே, ஓது ஒலி - சொல்லும் ஓசை, அடையா - நுழையாத, ஈனக் கண்டாகனற்கு - இழிவான கண்டாகர்ணன் என்னும் பூதப்படைத் தலைவனுக்கும், பரகதி - பரம பதத்தை.

546. ‘என் அப்பன், ஆகத்துப் பொன் நூலன், துயில் மன் அப்பன், நாகத்துக்கு ‘அஞ்சல்’ என்றான், பல் மணி சிதறி மின்னப் பல் நாகத்துப் பாய்ந்தான் வேங்கடத்து எந்தை கதை அன்றி வெவ்வினைகள் துன்னப் பல் நா கத்துப் பொய்ந்நூல் என் துளைச் செவிக்குப் புகா,’ என இயைக்க.

ஆகம் - மார்பு, துயில் மன் அப்பன் - தூங்குதற்கு இடமாகப் பொருந்திய கடலையுடையவன் (அப்பு - நீர்), நாகம் - யானை, பல் நாகம் - பல்லையுடைய காளியன் என்னும் பாம்பு, எந்தை - எம் தந்தை, கதை - திவ்விய சரித்திரம், வெவ்வினைகள் துன்ன - தீவினைகள் அணுக, பல் நா - (அயல் மதஸ்தரின்) பல நாக்குகள்.

547. ‘அலை பொன் குவித்து வந்து உந்து கோனேரிவாழும் குருகு இனமே, வன்னியின் சூடு உண்ட வேய் இசை செவித்தலை

கவித்தலை வன்றிரு வேங்கடத் தான்முன் கழறுமின்பொன்
குவித்தலை வந்துந்து கோனேரி வாழுங் குருகினமே!

548] [அக

குருகூ ரரங்க மறைத்தமிழ் மாலை குலாவுந்தெய்வ
முருகூ ரரங்கர் வடவேங் கடவர்முன் னாளிலங்கை
வருகூ ரரங்கந் துணித்தார் சரணங்கள் வல்வினைகட்
கிருகூ ரரங்கள்கண் டீருயிர் காள்சென் றிரவுமினே.

549] [அஉ

இரணிய நாட்ட னிரணிய னீரைந் தலையன்கஞ்சன்
முரணிய கோட்டி னகத்திற் கரத்தின்முன் றேளிற்றுஞ்சத்

---

தீப்பதும், யான் தவித்து அலை வல் மயலும், தமர் காப்பும், தமிழ்க் கலியன் கவித்தலைவன் திருவேங்கடத்தான் முன் கழறுமின்,' என இயைக்க.

உந்து - மோதுகின்ற, கோனேரி - திருப்பதியிலுள்ள 'ஸ்வாமி புஷ்கரிணி' என்னும் தீர்த்தம், குருகு இனமே - நாரைக் கூட்டமே, வன்னி - நெருப்பு, வேய் - புல்லாங்குழல், இசை - இசைப்பாட்டு, செவித்தலை தீப்பதும் - காதிடத்தைச் சுடுவதும், அலை வல் மயலும் - வருந்துகிற வலிய மோகமும், தமர் காப்பும் - உற்றார் என்னை உபசரித்துப் பாதுகாப்பதும், கலியன் - திருமங்கையாழ்வார், கவித்தலைவன் - பாட்டுக்கு உரியவன், கழறுமின் - சொல்லுங்கள்.

548. 'உயிர்காள், அங்குக் குருகூரர் மறைத்தமிழ் மாலை குலாவும் தெய்வ முருகு ஊர் அரங்கர்—முன்னாள் இலங்கை வருகூரர் அங்கம் துணித்தார்—வடவேங்கடவர் சரணங்கள் வல் வினைகட்கு இரு கூர் அரங்கள் கண்டீர்; சென்று இரவுமின்,' என இயைக்க.

உயிர்காள் - பிராணிகளே, அங்கம் - (திருமங்கையாழ்வார் பாடியருளிய ஆறு பிரபந்தங்களாகிய ஆறு) அங்கங்களையுடைய, குருகூரர் - நம்மாழ்வாரின், குலாவும் - விளங்கும், தெய்வ முருகு - தெய்வத் தன்மையாகிய வாசனை, ஊர் - பரிமளிக்கின்ற, அரங்கர் - திருவரங்கப் பெருமானும், வரு கூரர் - தோன்றிய தீய அரக்கருடைய, அங்கம் - உடலை, சரணங்கள் - திருவடிகள், வினைகட்கு - வினைகளை அராவி ஒழித்தற்கு, அரங்கள் - அரங்களாகும், இரவுமின் - (உங்கள் வினைகளை ஒழிக்க அத்திருவடிகளை) யாசியுங்கள்.

549. 'சர்ப்ப வெற்பன், அரணிய கேழல்—அரி—ராகவன்—கண்ணன் ஆகி வந்து, இரணிய நாட்டன்—இரணியன்—ஈரைந்

தரணியிற் குத்தி யிடந்தெய் துதைத்தவன் சர்ப்பவெற்பன்
அரணிய கேழ லரிரா கவன்கண்ண னகிவந்தே.

550] [அரு

வந்தித் திருக்கு மறைபோற்று வேங்கட வாணமலர்
உந்தித் திருக்குங் குமமணி மார்பவுள் வஞ்சனையும்
புந்தித் திருக்கும் வெகுளியுங் காமமும் பொய்யும்விட்டுச்
சிந்தித் திருக்கும தெக்காலம் யானுன் திருவடியே.

551] [அசு

திருவடி வைக்கப் புடவிபற் றாதண்டஞ் சென்னிமுட்டும்
கருவடி வைக்கலந் தாற்றுவெண் டிக்குங் கடன்மண்கொள்வான்

---

தலையன்—கஞ்சன், முரணிய கோட்டின்—நகத்தின்—சரத்தின்—முன் தாளின் துஞ்சத் தரணியில் குத்தி — இடந்து—எய்து—உதைத்தவன்,' என இயைக்க.

சர்ப்பவெற்பு - சேஷாசலம் என்னும் வேங்கடமலை, அரணிய கேழல் - பாதுகாப்பாகிய வராக மூர்த்தியும், அரி - நாரசிங்கமும், ராகவன் - இராமனும், இரணிய நாட்டன் - இரணியாட்சன், ஈரைந்தலையன் - இராவணன், கஞ்சன் - கம்ஸன், முரணிய - வலிய, கோட்டின் - தந்தத்தினாலும், சரத்தின் - அம்பாலும், தாளின் - திருத்தாளினாலும், துஞ்ச - இறக்கும்படி, தரணியில் - பூமியில், இடந்து - பிளந்தும், எய்து - தொடுத்தும், உதைத்தவன் - உதைத்தவனுவன்.

இக்கவி முறை நிரல் நிறையணி.

550. 'இருக்கு மறை வந்தித்துப் போற்று வேங்கட வாண, மலர் உந்தித் திருக் குங்குமம் அணி மார்ப, யான் உள் வஞ்சனையும் புந்தித் திருக்கும் வெகுளியும் காமமும் பொய்யும் விட்டு ஒழித்து உன் திருவடி சிந்தித்திருக்குமது எக்காலம்?' என இயைக்க.

மறை - வேதம், வந்தித்து - வணங்கி, வாண - வாழ்பவனே, மலர் உந்தி - திருநாபித் தாமரையையும், திரு குங்குமம் - திருவையும் குங்குமத்தையும், புந்தித் திருக்கும் - மன மாறுபாட்டையும், வெகுளியும் - கோபத்தையும், காமமும் - சிற்றின்ப சுகத்தையும், சிந்தித்திருக்குமது - தியானித்திருப்பது.

551. 'பொரு வடி வைக் கனல் ஆழிப்பிரான்-ஆழி கட்டப் புனல் பெரு வடிவைக் கண்ட அப்பன்—திருவடி வைக்கப் புடவி பற்றாது; சென்னி, அண்டம் முற்றும்; எண் திக்கும், கருவடிவைக் கலந்து ஆற்று; கடல் மண் கொள்வான் அடி பேர்ப்பது எவ்வாறு?' என இயைக்க.

பொருவடி வைக்கன லாழிப் பிரான்புன லாழிகடப்
பெருவடி வைக்கண்ட வப்பனெவ் வாறடி பேர்ப்பதுவே.

552] [அரு

பேரானைக் கோட்டினைப் பேர்த்தானை வேங்கடம் பேணுந்துழாய்த்
தாரானைப் போதனைத் தந்தானை யெந்தையைச் சாடிறப்பாய்ந்
தாரானை மேய்த்துப்புள் ளூர்ந்தானைப் பஞ்சவர்க் குய்த்துநின்ற
தேரானை நான்மறை தேர்ந்தானைத் தேருநுந் தீதறுமே.

553] [அசு

அறுகூடு கங்கை தரித்தா னயனழைத் தாலுமிச்சை
அறுகூடு மாலடி யாரடிக் கேயப்பன் வேங்கடவன்

---

பொரு - சண்டையிடுகின்ற, வடி - தேர்ந்தெடுத்த, வைக்கனல் ஆழி - கூர்மையான தீயைக் கக்கும் சக்கரத்தையுடைய, ஆழி - கடல், வடிவை - வற்றுதலை, கண்ட - செய்த, புடவி- பூமி, சென்னி - திருமுடி, அண்டம் - பூமியின் மேல் முகடு, கரு வடிவை - கரிய திருமேனியை, கலந்து ஆற்று - பொருந்திச் சகியா, கடல் மண் - கடலாற் சூழப்பட்ட பூமியை, கொள்வான்- அளந்துகொள்ள, அடி பேர்ப்பது - திருவடிகளை மாற்றி வைப்பது, எவ்வாறு - எவ்விதம்?

552. 'பேரானைக் கோட்டினைப் பேர்த்தானை—வேங்கடம் பேணும் துழாய்த் தாரானை—போதனைத் தந்தானை—எந்தையை-சாடு இறப் பாய்ந்து, ஊர் ஆனை மேய்த்து, புள் ஊர்ந்தானை—பஞ்சவர்க்கு உய்த்து நின்ற தேரானை—நால் மறை தேர்ந்தானைத் தேரும்; நும் தீது அறும்,' என இயைக்க.

பேரானை - பெரிய யானையாகிய குவலயாபீடத்தின், கோட்டினை - தந்தங்களை, பேணும் - விரும்பும், துழாய்த் தாரானை - துளசி மாலையைத் தரித்தவனை, போதனை - தாமரை மலரிலுள்ள பிரமனை, தந்தானை - படைத்தவனை, சாடு இற - சகடாசுரன் கொண்ட சக்கர வடிவம் அழியும்படி, ஆனை மேய்த்து - பசுக்களை மேயச்செய்து, புள் ஊர்ந்தானை - கருடப் பறவையை ஏறிச் செலுத்தியவனை, பஞ்சவர்க்கு - பாண்டவர் பொருட்டு, உய்த்து நின்ற - செலுத்தி நின்ற, நால் மறை - நான்கு வேதங்களாலும், தேர்ந்தானை - ஆராயப்பட்டவனை, தேரும் - அறிந்துகொள்ளுங்கள்; நும் தீது அறும் - உமது தீமை நீங்கும்.

553. 'மா மனமே, அறுகு ஊடு கங்கை தரித்தான் அயன் அழைத்தாலும் இச்சை அறு; மால் அடியார் அடிக்கே கூடு; ஊடு மாதர் எறிபூண் மறுகு எறிக்கும் மதில் அரங்கன் அப்பன் வேங்கடவன் மறு கூடு மருவாமல் நம்மை வாழ்விப்பன்,' என இயைக்க.

மறுகூடு மாத ரெறிபூ ணெறிக்கு மதிலரங்கன்
மறுகூடு நம்மை மருவாமல் வாழ்விப்பன் மாமனமே!

554] [அஎ

மாமனங் காந்தவல் வாய்ப்புள்ளை யேவ மடித்துப்பித்தன்
நாமனங் காந்தவன் றேடவெய் தோனறும் பூங்கொடிக்குத்
தாமனங் காந்தன் திருவேங் கடத்தெந்தை தாள்களிலென்
தீமனங் காந்தங் கவரூசி போலென்று சேர்வதுவே.

555] [அஅ

சேரு மறுக்கமு நோயு மரணமுந் தீவினையின்
வேரு மறுக்க விரும்பிநிற் பீர்வட வேங்கடத்தே

---

மா - சிறந்த, அறுகு ஊடு - அறுகம்புற்களுக்கு இடையில், கங்கை தரித்தான் - சிவனும், அயன் - பிரமனும், இச்சை அறு - (போகும்) விருப்பத்தை நீக்கு; அடிக்கே - திருவடிகளிலேயே, ஊடு மாதர் - (கணவருடன்) ஊடல் கொள்ளும் பெண்டிர், எறி பூண் - (கழற்றி) எறியும் ஆபரணங்கள், மறுகு எறிக்கும் - வீதியில் ஒளி வீசும், மறு கூடு மருவாமல் - (இனி) வேறோருடம்பிற் சேராதபடி, வாழ்விப்பன் - நம்மை வாழச்செய்வன்.

554. 'மாமன் அங்காந்த வல் வாய்ப்புள்ளை ஏவ, மடித்து, பித்தன் நா மன் அம் காந்த அன்று ஓட எய்தோன்—நறும்பூங் கொடிக்குத் தாமன் அம் காந்தன்—திருவேங்கடத்து எந்தை தாள்களில் என் தீ மனம் காந்தம் கவர் ஊசி போல் சேர்வது என்று?' என இயைக்க.

மாமன் - அம்மானான கம்ஸன், அங்காந்த - திறந்த, வல் வாய்ப் புள்ளை ஏவ - வலிய வாயையுடைய கொக்கை (பகாசுரனை) அனுப்ப, மடித்து - அதைக் கொன்று, பித்தன் - சிவன், நா மன் அம் காந்த - நாவிற் பொருந்தின நீர் வற்றிப் போகும்படி, அன்று - (வாணாசுரனுடன் போர் புரிந்த) அந்த நாளில், எய்தோன் - (அம்பைச்) செலுத்தியவனும், நறும்பூங்கொடிக்குத் தாமன் - மணமுள்ள தாமரை மலரில் உள்ள கொடி போன்ற இலக்குமிக்கு இடமாயிருப்பவனும், அம் காந்தன் - அழகிய கணவனும்.

555. 'சேரும் மறுக்கமும், நோயும், மரணமும், தீவினையின் வேரும் அறுக்க விரும்பி நிற்பீர், வடவேங்கடத்திற்கு வாரும்; மறுக் கமலை அணி மார்பன்—கைக் கோதண்டன் எவரையும் மறுக்க அறியான்; வாழ அருள் கூரும்,' என இயைக்க.

சேரும் - (உம்மை வந்து) அடையும், மறுக்கமும் - மனக் குழப்பத்தையும், நிற்பீர் - நிற்பவரே, வாரும் - வாருங்கள்; மறு -

வாரு மறுக்க வறியா னெவரையும் வாழவருள்
கூரு மறுக்க மலையணி மார்பன்கைக் கோதண்டனே.

556] [அகூ .

கோதண்டத் தானத்தன் வாள்கதை நேமியன் கோலவட
வேதண்டத் தானத்த னின்னிசை யான்மண்ணும் விண்ணுமுய்ய
மூதண்டத் தானத் தவதரித் தானெனின் முத்திவினைத்
தீதண்டத் தானத் தானுவெடுத் தனெனிற் றீநரகே.

557] [கூ0

நரக மடங்கலுஞ் சென்றெய்த்த பாவிக்கு நாரியர்மேல்
விரக மடங்கமெய்ஞ் ஞானம் வெளிசெய வீடுபெற

---

(ஸ்ரீவற்சம் என்னும்) மறுவையும், கமலை - இலட்சுமியையும், கோதண்டன் - வில்லை ஏந்தியவனுமான பெருமான், மறுக்க - விலக்க, வாழ - (நீங்கள் இன்பமாக) வாழ்வதற்கு, அருள் கூரும்- கிருபை மிகுவான்.

556. ''கோதண்டத்தான்—நத்தன்—வாள் கதை நேமியன்-கோல வட வேதண்டத்தான்—அத்தன்—இன்னிசையான், மண்ணும் விண்ணும் உய்ய மூதண்டத் தானத்து அவதரித்தான்,' எனில் முத்தி; 'வினை தீது அண்டத்தான் அத்தனு எடுத்தான்,' எனில், தீ நரகே,' என இயைக்க.

நத்தன் - சங்கையுடையவனும், நேமியன் - சக்கராயுதத்தை உடையவனும், கோலம் - அழகிய, வட வேதண்டத்தான் - வடக்கிலுள்ள (திருவேங்கட) மலையை உடையவனும், அத்தன் - (அனைவருக்கும்) தலைவனும், இசையான் - குழலிசையுடையவனுமான பெருமான், மண்ணும் விண்ணும் உய்ய - மனிதரும் தேவரும் வாழ, மூதண்டத்தானத்து - பழமையான உலகினுள்ளிடங்களில், முத்தி - மோட்சம் (கிடைக்கும்); அண்ட - தொடர்ந்து வர, அத்தனு - அவ்வுடம்பை, தீ நரகே - தீய நரகமே (சம்பவிக்கும்).

557. 'வர கமடம் கயல் ஆனாய், வடமலை மாதவனே, நரகம் அடங்கலும் சென்று எய்த்த பாவிக்கு நாரியர்மேல் விரகம் அடங்க, மெய்ஞ்ஞானம் வெளி செய, வீடு பெற, உரகம் மடங்க நடித்த பொன் தாள் இன்று என் உச்சி வைப்பாய்,' என இயைக்க.

வர கமடம் - சிறப்புடைய ஆமையும், கயல் - மீனும், ஆனாய்- அவதாரம் செய்தவனே, எய்த்த - இளைத்த, பாவிக்கு - பாவியாகிய அடியேனுக்கு, நாரியர் - பெண்டிர், விரகம் - காமநோய், அடங்க - கெடவும், வெளி செய - புலப்படவும், வீடு - பரம

உரக மடங்க நடித்தபொற் றாளின்றென் னுச்சிவைப்பாய்
வரக மடங்கய லானாய் வடமலை மாதவனே !

558] [கூக

மாதிரங் காதன் மனைவாழ்க்கை யென்றெண்ணி வான்பொருட்கு
மாதிரங் காதம் பலவலை வீரின்னு மைந்தரென்றோர்
மாதிரங் காத படிவணங் கீரரி மாவொடுகைம்
மாதிரங் காதமர் செய்கின்ற சேட மலையனையே.

559] [கூஉ

மலையி னரக்க ருடன்றெழுந் தாரென்று மாமறைநாற்
கலையி னரக்க ருடனிந்தி ராதியர் காட்டச் செய்யும்
கொலையி னரக்க ருடனேறும் வேங்கடக் குன்றரென்றால்
உலையி னரக்க ருடந்தில ரேனுமென் னுள்ளவர்க்கே.

---

பதம், பெற - அடையவும், உரகம் - (காளியனாகிய) பாம்பின் தலை, மடங்க - மடங்கும்படி, நடித்த - கூத்தாடிய, பொன் தாள் - அழகிய திருவடிகளை.

558. 'காதல் மனை வாழ்க்கை மா திரம் என்று எண்ணி, வான் பொருட்கு மா திரம் பல காதம் வலைவீர், இன்னும் மைந்தன் என்று ஓர் மாது இரங்காதபடி அரிமாவொடு கைம்மா திரங் காது அமர் செய்கின்ற சேட மலையனை வணங்கீர்,' என இயைக்க.

மாதிரம் - பெரிய நிலைபேறு, வான் பொருட்கு - பெருஞ் செல்வம் தேடுதற்கு, மாதிரம் - திசைதோறும், பல காதம் வலைவீர் - நெடுந்தூரம் சுற்றும் உலகத்தவரே, மைந்தன் என்று - (உம்மைப்) பிள்ளையென்று, மாது - பெண், இரங்காதபடி - இரக்கம் காட்டாதபடி, அரிமா - சிங்கம், கைம்மா - யானை, திரங்காது - பின்னடையாமல், சேடமலையனை - திருவேங்கடவனை, வணங்கீர் - பணிவீராக. 'திருவேங்கடவனைப் பணியின் உமது பிறவி நோய் நீங்கும்,' என்றபடி.

559. 'மாமறை நால் கலையினர் அக்கருடன் இந்திராதியர், 'மலையின் அரக்கர் உடன்று எழுந்தார்,' என்று காட்டச் செய்யும் கொலையினர்—அக்கருடன் ஏறும் வேங்கடக் குன்றர் என்றால், அருள் தந்திலரேனும், என் உள் அவர்க்கு உலையின் அரக்கு,' என இயைக்க.

மாமறை நால் கலையினர் - பிரமர், அக்கருடன் - எலும்பு மாலை சூடிய சிவபிரானுடன், இந்திராதியர் - இந்திரன் முதலிய வர், மலையின் - மலை போல, உடன்று - கோபித்து, காட்ட - குறிக்க, செய்யும் கொலையினர் - கொலை செய்தவரான, தந்தில ரேனும் - செய்யாராயினும், என் உள் - என் மனம், உலையின் அரக்கு - உலைக்களத்தில் இட்ட அரக்காய் உருகும்.

**560]** தோழி தலைமகனை ஏதங்கூறி இரவு வரல் விலக்கல் [௯௫

உள்ளமஞ் சாய்வலி யாய்வலி யார்க்கு முபாயம்வல்லாய்
கள்ளமஞ் சாயுதங் கைவரு மாயினுங் கங்குலினில்
வெள்ளமஞ் சார்பொழில் வேங்கடக் குன்றினில் வீழருவிப்
பள்ளமஞ் சாரல் வழிவரில் வாடுமிப் பாவையுமே.

**561]** [௯௬

பாவை யிரங்கு மசோதைக்கு முத்துப் பதுமைச்செல்விக்
கேவை யிரண்டன்ன கண்மணி நீல மிருசரணப்
பூவை யிரந்தவர்க் கின்ப வளம்புல் லசுரர்க்கென்றும்
மாவை யிரந்திரு வேங்கடத் தோங்கு மரகதமே.

---

560. '(தலைவா) உள்ளம் அஞ்சாய்; வலியாய்; வலியார்க்கும் உபாயம் வல்லாய்; கள்ளம் அஞ்சு ஆயுதம் கைவரும்; ஆயினும், கங்குலினில் வெள்ளம் மஞ்சு ஆர் பொழில் வேங்கடக் குன்றில் வீழ் அருவிப் பள்ளம் அம் சாரல் வழி வரில், இப்பாவையும் வாடும்,' என இயைக்க.

வலியாய் - திடமுடையாய்; உபாயம் வல்லாய் - தந்திரத்தில் வல்லை; கள்ளம் அஞ்சு ஆயுதம் கைவரும் - (உனக்குக்) களவும் பஞ்சாயுதப் பயிற்சியும் பழக்கமாயிருக்கின்றன; கங்குலினில் - இரவில், வெள்ளம் மஞ்சு - நீர் உண்ட மேகம், ஆர் பொழில் - தங்கும் சோலையையுடைய, பள்ளம் அம் சாரல் வழி - பள்ளங்களையுடைய அழகிய மலைச்சாரல் வழியாக, வரில் - வருவாயானால், இப்பாவையும் வாடும் - (உனக்கு வாட்டமுண்டாதலேயன்றி என் தலைவியாகிய) இப்பெண்ணும் வருந்துவள்.

'இனி நீ இரவில் வாராதே,' எனத் தோழி தலைவனைத் தடுத்தாள் என்பது கருத்து. இதனை அகப்பொருள் இலக்கணமுடையார் 'ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவி' என்பர்.

561. 'திருவேங்கடத்து ஓங்கும் மரகதம், பாவை இரங்கும் அசோதைக்கு முத்து; பதுமச் செல்விக்கு இரண்டு ஏவை அன்ன கண்மணி நீலம்; இரு சரணப் பூவை இரந்தவர்க்கு இன்ப வளம்; புல் அசுரர்க்கு மா வைபிரம்,' என இயைக்க.

மரகதம் - மரகதம் போலும் திருமேனியனாகிய பகவான், பாவை இரங்கும் - ('இவளழகு எனக்கில்லையே!' என்று) பதுமையும் வருந்தும், ஏவை - அம்புகளை, சரணப் பூ - பாத மலர், இன்ப வளம் - மகிழ்ச்சிப் பெருக்கம் (இனிய பவளம்), மா வையிரம் - பெரும்பகை (சிறந்த வயிரமணி).

'வேங்கட மரகதம், அசோதைக்கு முத்தும், இலக்குமிக்குக் கண்ணின் கருமணியும், அடியார்க்கு இன்பவளமும், அசுரர்க்கு

562] புய வகுப்பு [கூஉ

மரகதத் தைக்கடைந் தொப்பித்த தொத்தன வாழ்த்தினர்தம்
நரகதத் தைத்தள்ளி வைகுந்த நல்கின நப்பின்னையாம்
விரகதத் தைக்கு விடையேழ் தழுவின வேங்கடவன்
குரகதத் தைப்பிளந் தான்றோள்க ளாகிய குன்றங்களே.

563] [கூகூ

குன்றுக ளத்தனை யுங்கட றூரக் குவித்திலங்கை
சென்றுக ளத்தனை வோரையு மாய்த்துத் திருச்சரத்தால்
அன்றுக ளத்தனை யட்டானை யப்பனை யாய்மகடோள்
துன்றுக ளத்தனை யேத்தவல் லார்க்கில்லை துன்பங்களே.

---

வயிரமும் ஆம்,' எனப் பலபடப் புணர்ந்தமையின் இப்பாசுரம் பலபடப்புணர்வு அணி.

562. 'குரகதத்தைப் பிளந்தான் வேங்கடவன் தோள்களாகிய குன்றங்கள், மரகதத்தைக் கடைந்து ஒப்பித்தது ஒத்தன; வாழ்த்தினர்தம் நரக தத்தைத் தள்ளி வைகுந்தம் நல்கின; நப்பின்னை ஆம் விரக தத்தைக்கு விடை ஏழ் தழுவின,' என இயைக்க.

குரகதம் - குதிரை (இங்குக் கிருஷ்ணவதாரத்தில் குதிரை வடிவுகொண்டு வந்த 'கேசி' என்னும் அசுரனைக் குறித்து நின்றது), மரகதம் - பச்சைக்கல், ஒப்பித்தது - அலங்கரித்ததை, தத்தை - அபாயத்தை, நல்கின - கொடுத்தன. விரக தத்தைக்கு - காதல் நோயால் வருந்திய கிளியனையாளுக்கு (என்றது அவளை மணக்கும்பொருட்டு என்றபடி), விடை ஏழ் - ஏழு எருதுகளை, தழுவின - தழுவி அடக்கின.

563. 'குன்றுகள் அத்தனையும் கடல் தூரக் குவித்து, இலங்கை சென்று, களத்து அனைவோரையும் மாய்த்து, திருச்சரத்தால் அன்று களத்தனை அட்டானை—ஆய்மகள் தோள் துன்று களத்தனை—அப்பனை ஏத்த வல்லார்க்குத் துன்பங்கள் இல்லை,' என இயைக்க.

தூர - தூரும்படி, களத்து - போர்க்களத்தில், திருச்சரத்தால் - (பிரமாத்திரமாகிய) சீரிய அம்பினால், அன்று - அக்காலத்தில், களத்தனை - கள்ளத்தனமுடையவனான இராவணனை, அட்டானை - அழித்தவனை, ஆய் மகள் - இடைச்சியான நப்பின்னைப் பிராட்டியின், தோள் துன்று களத்தனை - புயங்களால் தழுவப்பட்ட கழுத்தையுடையவனை, அப்பனை - 'அப்பன்' என்னும் திருநாமம் உடையவனான திருவேங்கடமுடையானை, ஏத்த - துதிக்க.

564] [௬௭

துன்பங் களையுஞ் சனனங் களையுந் தொலைவறுபேர்
இன்பங் களையுங் கதிகளை யுந்தரு மெங்களப்பன்
தன்பங் களையும் படிமூ வரைவைத்துத் தாரணியும்
பின்பங் களையு மிழுதுமுண் டானடிப் பேர்பலவே.

565] தலைவனைப்பிரிந்த தலைவி, கடலை நோக்கி இரங்கிக் கூறல் [௬௮

பலகுவ ளைக்குட் சிலகஞ்சம் போலும் படிவவப்பன்
நலகுவ ளைக்குமுன் னுண்டானின் மாட்டு நணுகிலனோ
உலகு வளைக்குங் கடலேநின் கண்முத் துகுத்திரங்கி
இலகு வளைக்குலஞ் சிந்தித்துஞ் சாயின் றிராமுற்றுமே.

---

564. 'மூவரைத் தன் பங்கு அளையும்படி வைத்து, தாரணியும் பின்பு அங்கு அளையும் இழுதும் உண்டான் எங்கள் அப்பனுடைப் பேர் பல, துன்பங்களையும்; சனனம் களையும்; தொலைவு அறு பேரின்பங்களையும் கதிகளையும் தரும்,' என இயைக்க.

'ஆண்டவன் திருப்பெயர் எல்லாத் தீங்கும் நீக்கி, அனைத்து நலமும் தரும்,' என்றபடி.

மூவர் - (பிரமன், சிவன், இலக்குமி ஆகிய) மூன்று பேர், தன் பங்கு அளையும்படி - தன் திருமேனிப் பகுதிகளில் அமையும்படி, தாரணி - பூமி, அங்கு - (திருவாய்ப்பாடி என்னும்) அவ்விடத்தில், அளை - தயிர், இழுது - வெண்ணெய், அப்பனுடை - திருவேங்கடமுடையானுடைய, பேர் பல - பல திருப்பெயர்கள், சனனம் - பிறப்பு, களையும் - நீக்கும், தொலைவு அறு - அழிவற்ற, கதிகளையும் - பதவிகளையும்.

565. 'உலகு வளைக்கும் கடலே, நின் கண் முத்து உகுத்து, இரங்கி, இலகு வளைக்குலம் சிந்தி, இன்று இராமுற்றும் துஞ்சாய்; பல குவளைக்குள் சில கஞ்சம் போலும் படிவ அப்பன்—அளைக்கு முன் நலகு உண்டான்—நின் மாட்டும் நணுகிலனோ?' என இயைக்க.

இக்கவி செம்மொழிச் சிலேடையணி.

முத்து - நித்திலம், கண்ணீர்த்துளி; வளைக்குலம் - சங்கு வளையல்கள், சங்கின் கூட்டம்; துஞ்சாய் - தூங்கமாட்டாய், குவளை - நீலோற்பல மலர், கஞ்சம் - தாமரை மலர், படிவ அப்பன் - திரு மேனியையுடைய பகவான், அளை - தயிர், வெண்ணெய், நலகு - நல்ல பூமி, நின் மாட்டும் - உன்னிடமும், நணுகிலனோ - சேர்ந்திலனோ?

566] நீடித்து வந்த தலைவனோடு தலைவி ஊடிப்பேசுதல் [௯௯

முற்றிலைப் பந்தைக் கழங்கைக்கொண்டோடினை முன்னும்பின்னும்
அற்றிலை தீமையவைபொறுத் தோந்தொல்லை யாலினிளங்
கற்றிலை மேற்றுயில் வேங்கட வாவின்றுன் கான்மலரால்
சிற்றிலைத் தீர்த்ததற் குப்பெரு வீட்டினைச் செய்தருளே.

567] [௧௦௦

அரும்பாத கன்பொய்யன் காமுகன் கள்வ னருள்சிறிதும்
அரும்பாத கன்னெஞ்ச னூறச் சினத்த னவாவினின்றும்
திரும்பாத கன்மத்த னேனற்குச் சேடச் சிலம்பமர்ந்த
திரும்பாத கஞ்சந் தரிலது காணுன் றிருவருளே.

568] [௧௦௧

திருமந் திரமில்லை சங்காழி யில்லை திருமணில்லை
தருமந் திரமொன் றுஞ் செய்தறி யீர்செம்பொற் றனவனை

---

566. 'தொல்லை ஆலின் இளங்கன்று இலைமேல் துயில் வேங்கடவா, முன்னும் முற்றிலைப் பந்தைக் கழங்கைக் கொண்டு ஓடினை; பின்னும் தீமை அற்றிலை; அவை பொறுத்தோம்; இன்று உன் கால் மலரால் சிற்றிலைத் தீர்த்ததற்குப் பெரு வீட்டினைச் செய்தருள்,' என இயைக்க.

தொல்லை - ஆதி காலத்தில், துயில் - அறிதுயில் கொண்ட, முன்னும் - இளம்பருவத்திலும், முற்றிலை - சிறு முறத்தையும், கழங்கை - கழற்சிக் காய்களையும், தீமை - குறும்பு, அற்றிலை - விட்டாயில்லை, சிற்றிலைத் தீர்த்ததற்கு - (நாங்கள் மணலாற் செய்த) சிறு வீட்டை அழித்ததற்குப் பிரதியுபகாரமாக, பெரு வீட்டினை - பெரிய மாளிகையை (மோட்சத்தை).

567. 'அரும்பாதகன், பொய்யன், காமுகன், கள்வன், அருள் சிறிதும் அரும்பாத கல் நெஞ்சன், ஆறச்சினத்தன், அவாவினின்றும் திரும்பாத கன்மத்தன் ஆனேற்குச் சேடன் சிலம்பு அமர்ந்து அதிரும் பாத கஞ்சம் தரில், அது காண் உன் திருவருள்,' என இயைக்க.

பாதகன் - பாவி, காமுகன் - சிற்றின்பத்தை விரும்புபவன், அரும்பாத - தோன்றாத, சினத்தன் - கோபி, கன்மத்தன் - தீவினையுடையவன், ஆனேற்கு - ஆன எனக்கு, சிலம்பு - மலை, கஞ்சம் - தாமரை மலர்.

568. '(உலகத்தீர்) திருமந்திரம் இல்லை; சங்கு ஆழி இல்லை; திருமண் இல்லை; தருமம் திரம் ஒன்றும் செய்து அறியீர்; செம்பொன் தானவனை மருமம் திரங்கப் பிளந்தான் வடமலை வாரம் செல்லீர்; கருமம் திரண்டதை எத்தால் களையக் கருதுதிர்?' என இயைக்க.

மருமந் திரங்கப் பிளந்தான் வடமலை வாரஞ்செல்வீர்
கருமந் திரண்டதை யெத்தாற் களையக் கருதுதிரே ?

569] [சுoஉ

கருமலை யும்மருந் துங்கண்ணு மாவியுங் காப்புமவன்
தருமலை யுந்திய பேரின்ப வெள்ளமுந் தாய்தந்தையுந்
வருமலை யுந்திருப் பாலாழி யுந்திரு வைகுந்தமும்
திருமலை யும்முடை யானெனக் கீந்த திருவடியே.

570] தற்சிறப்புப்பாயிரம் [சுoரு

மட்டலை தண்டலை சூழ்வட வேங்கட வாணனுக்குத்
தொட்டலை யுண்டபி ராணுக்கன் பாம்பட்டர் தூயபொற்றாள்
உட்டலை யுண்ட மணவாள தாச னுகந்துரைத்த
கட்டலை சேர்திரு வந்தாதி நூறு கலித்துறையே.

திருவேங்கடத்தந்தாதி முற்றிற்று.

---

திருமந்திரம் - அஷ்டாக்ஷர மந்திரம், சங்கு ஆழி - சங்க சக்கர முத்திரைகள், திருமண் - திருமண் காப்பு, தருமம் - அறத்தை, திரம் - நிலையாக, ஒன்றும் - சிறிதும், செம்பொன் தானவன் - இரணியன் என்னும் அசுரன், மருமம் திரங்க - மார்பு சிதைய, மலைவாரம் - மலையின் அடிவாரம், களைய - நீக்க, கருதுதிர் - நினைக்கின்றீர்.

569. 'வரு மலையும், திருப்பாலாழியும், திருவைகுந்தமும், திருமலையும் உடையான் எனக்கு ஈந்த திருவடி, கருமலையும் மருந்தும் கண்ணும் ஆவியும் காப்பும் அவன் தரும் அலை உந்திய பேரின்ப வெள்ளமும் தாய் தந்தையும்,' என இயைக்க.

'ஆண்டவன் திருவடிகளை எனக்கு அனைத்துப் பேறும் ஆம்,' என்பது கருத்து.

வரு மலையும் - அமைந்த மல்லையும் (மகாபலிபுரமும்), பாலாழி - பாற்கடல், திருமலை - திருவேங்கடம், கருமலையும் - பிறவி நோயை அழிக்கும், ஆவி - உயிர், காப்பு - பாதுகாவல், உந்திய - மோதிய.

570. 'பட்டர் தூய பொன் தாளுள் தலையுண்ட மணவாள தாசன் உகந்து உரைத்த திருவந்தாதி நூறு கட்டலைசேர் கலித்துறை அலை தொட்டு உண்ட பிராணுக்கு—மட்டு அலை தண்டலை சூழ் வடவேங்கட வாணனுக்கு—அன்பாம்,' என இயைக்க.

பட்டர் - கூரத்தாழ்வான் புதல்வரும் திவ்விய கவி பிள்ளைப் பெருமாளையங்கார் ஆசாரியருமான பெரியார், தொட்டு - கையினால் அள்ளி, பிராணுக்கு - பெருமாணுக்கு, மட்டு அலை தண்டலை - மணம் பொருந்திய சோலை, அன்பாம் - பிரியத்துக்குரியனவாகும்.

# 7. அழகர் அந்தாதி

571] சிறப்புப் பாயிரம் [க

திருகவி மங்கை மணவாள வள்ளல்செந் தேன்றுளித்து
முருகவிழ் தென்றிரு மாலிருஞ் சோலை மலைமுகுந்தற்
கிருகவின் றாள்களிற் சூடுமந் தாதியி னீரைம்பதில்
ஒருகவி கற்கினு ஞானமும் வீடு முதவிடுமே.

572] காப்பு [உ

அங்கத் தமிழ்மறை யாயிரம் பாடி யளித்துலகோர்
தங்கட்கு வீடரு ளும்புரு டோத்தமன் றண்வகுளத்
தொங்கற் பராங்குசன் றாளிணை மாலிருஞ் சோலைமலைச்
சங்கத் தழகரந் தாதிந டாத்தத் தலைக்கொள்வனே.

---

571. 'திருகு அவி மங்கை மணவாள வள்ளல் செந்தேன் துளித்து முருகு அவிழ் தென் திருமாலிருஞ்சோலை மலை முகுந்தற்குக் கவின் இரு தாள்களில் சூடும் அந்தாதியின் ஈரைம்பதில் ஒரு கவி கற்கினும், ஞானமும் வீடும் உதவிடும்,' என இயைக்க.

திருகு அவி - மன மாறுபாட்டை நீக்கும், மங்கை - திருமங்கை என்னும் நாட்டிற் பிறந்த, மணவாள வள்ளல் - அழகிய மணவாள தாசராகிய உபகாரியின், முருகு அவிழ் - மணம் கமழும், திருமாலிருஞ்சோலை மலை - பாண்டி நாட்டிலுள்ள அழகர் திருப்பதி, முகுந்தற்கு - திருமாலுக்கு, கவின் - அழகு, வீடு - மோட்சம்.

இச்சிறப்புப் பாயிரம் அறிஞர் ஒருவரால் இயற்றப்பட்டது.

572. 'அங்கத் தமிழ் மறை ஆயிரம் பாடி அளித்து உலகோர்தங்கட்கு வீடு அருளும் புருடோத்தமன்—தண் வகுளத் தொங்கல் பராங்குசன்—தாள் இணை மாலிருஞ்சோலை மலைச் சங்கத்து அழகர் அந்தாதி நடாத்தத் தலைக்கொள்வன்,' என இயைக்க.

அங்கம் - (திருமங்கை மன்னர் திருவாய் மலர்ந்தருளிய பெரிய திருமொழி, திருகுறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் ஆறு) அங்கங்களையுடைய, தமிழ் மறை - தமிழ் வேதமாகிய, ஆயிரம் - ஆயிரம் திருப்பாசுரங்களை, வீடு - மோட்சம், வகுளத் தொங்கல் - மகிழம்பூ மாலையைச் சூடிய, பராங்குசன் - நம்மாழ்வாரின், தாள் இணை - இரு திருவடிகளையும், சங்கத்து

573] நூல் [௩

நீராழி வண்ணனைப் பாலாழி நாதனை நின்மலனைச்
சீராழி யங்கைத் திருமகள் கேள்வனைத் தெய்வப்புள்ளூர்
கூராழி மாயனை மாலலங் காரனைக் கொற்றவெய்யோன்
ஓராழித் தேர்மறைத் தானையெஞ் ஞான்று முரைநெஞ்சமே!

574] [௪

உரைமாற்றமுண்டென் பொறியைந்து முன்னிடத் தன்றியுண்ணும்
இரைமாற்ற வேண்டு மிதுவேயென் விண்ணப்ப மென்னப்பனே!
உரைமாற் றளவற்றபொன் னுடுத்தாய்வில்லெடுத்திலங்கை
வரைமாற் றலரைச்செற் றாயழ காகரு மாணிக்கமே!

---

அழகர் - தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராகிய கள்ளழகப் பெருமான் சம்பந்தமாகப் பாடத் தொடங்கும், அந்தாதி - அந்தாதி என்னும் இந்நூலை, நடாத்த - இனிது பாடி முடிக்க. 'தமிழ் மறை ஆயிரம்' என்றது திருவாய் மொழியை என அறிக. திருவாய்மொழி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என நம்மாழ்வார் அருளிச் செய்த நான்கு திவ்விய பிரபந்தங்களும் சதுர்வேத சாரம் என்பர் பெரியோர்.

573. 'நெஞ்சமே, நீர் ஆழி வண்ணனை—பாலாழி நாதனை—நின் மலனை—சீர் ஆழி அம் கைத் திருமகள் கேள்வனை—தெய்வப் புள் ஊர் கூர் ஆழி மாயனை—கொற்ற வெய்யோன் ஓர் ஆழித் தேர் மறைத்தானை—மால் அலங்காரனை எஞ்ஞான்றும் உரை,' என இயைக்க.

ஆழி வண்ணன் - கடல் போலும் கரிய திருமேனியுடையவன், பாலாழி - திருப்பாற்கடல், நின்மலன் - குற்றமில்லாதவன், சீர் ஆழி - அழகிய மோதிரம், கேள்வன் - கணவன், தெய்வப் புள் ஊர் - கருடனை நடத்துகின்ற, கூர் ஆழி - கூர்மையான சக்கராயுதம், கொற்ற வெய்யோன்-வெற்றியுடைய சூரியன், ஓர் ஆழித் தேர் - ஒற்றைச் சக்கரத்தையுடைய தேர், மறைத்தான் - (பாரதப் போரில்) மறைத்தவன், அலங்காரன் - அழகப் பெருமான், எஞ்ஞான்றும் - எந்நாளும், உரை - துதி செய்.

574. 'என் அப்பனே, உரை மாற்று அளவு அற்ற பொன் உடுத்தாய், வில் எடுத்து இலங்கை வரை மாற்றலரைச் செற்றாய், அழகா, கருமாணிக்கமே, உரை மாற்றம் உண்டு: என் பொறி ஐந்தும் உன்னிடத்து அன்றி உண்ணும் இரை மாற்ற வேண்டும்; இதுவே என் விண்ணப்பம்,' என இயைக்க.

உரை மாற்று - உரை கல்லில் உரைத்து அறியும் மாற்று, பொன் - பொன்னுடை, வரை மாற்றலர் - மலை போன்ற பகைவர்,

575] [ரு

மாணிக் கனகம் புரைமேனி மாலுக்கு வார்சடையோன்
பாணிக் கனகம் பலியொழித் தானுக்குப் பச்சைத்துழாய்
ஆணிக் கனக முடியலங் காரனுக் கண்டமெல்லாம்
பேணிக் கனகனுக் குப்பித்த ரானவர் பித்தரன்றே.

576] [சா

பித்தரும் பாநின்ற நெஞ்சனை வஞ்சனைப் பேருலகோர்
கைத்தரும் பாவி யெனுங்கடை யேனைக் கடைக்கணியாய்
முத்தரும் பாருந் தொழுமழ கா!வண்டு மூசுந்துழாய்ப்
புத்தரும் பார்முடி யாய்!அடி யாரைப் புரப்பவனே!

---

செற்றாய் - அழித்தவனே, உரை மாற்றம் - (யான்) சொல்ல விரும்பும் சொல், பொறி ஐந்து - (மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்) பஞ்சேந்திரியங்கள், இரை - உணவை.

575. 'மாணிக்க நகம் புரை மேனி மாலுக்கு—வார் சடையோன் பாணிக் கன கம்பலி ஒழித்தானுக்கு—அண்டம் எல்லாம் பேணிக்கு—அனகனுக்கு—பச்சைத் துழாய் ஆணிக்கனக முடி அலங்காரனுக்குப் பித்தரானவர், பித்தர் அன்றே,' என இயைக்க.

நகம் புரை - மலையையொத்த, சடையோன்-சிவன், பாணிக் கன கம்பலி - கையிலுள்ள பெரிய பிரம கபாலத்தைக்கொண்டு யாசிக்கும் பிச்சையை, அண்டம் - உலகங்கள், பேணிக்கு - பாதுகாப்பவனுக்கு, அனகன் - குற்றமற்றவன், ஆணிக் கனகம் - உயர்ந்த பொன், பித்தர் அன்றே - பைத்தியக்காரர் அல்லர்.

576. 'முத்தரும் பாரும் தொழும் அழகா, வண்டு மூசும் துழாய்ப் புது அரும்பு ஆர் முடியாய், அடியாரைப் புரப்பவனே, பித்து அரும்பாநின்ற நெஞ்சனை — வஞ்சனை — பேருலகோர் கைத்து, 'அரும்பாவி!' எனும் கடையேனைக் கடைக்கணியாய்,' என இயைக்க.

முத்தரும் - மோட்சவுலகத்தவரும், பாரும் - மண்ணுலகத்தவரும், மூசும் - மொய்க்கும், ஆர் - பொருந்திய, முடியாய் - திருமுடியை உடைய பெருமானே, புரப்பவனே - பாதுகாப்பவனே, பித்து அரும்பாநின்ற - (பேராசைப்) பைத்தியம் உண்டாகின்ற, வஞ்சனை - வஞ்சகமுடைய என்னை, கைத்து - வெறுத்து, அரும்பாவி - கொடிய பாவஞ்செய்தவன், கடையேனை - இழிந்தேனை, கடைக்கணி - கடைக்கண் பார்த்தருள்.

577] [எ

புரந்தர னாமெனப் பூபதி யாகிப் புகர்முகமா
துரந்தர சாளிலென் னல்குர வாகிலென் றொல்புவிக்கு
வரந்தர மாலிருஞ் சோலைநின் றார்க்கென் மனத்தினுள்ளே
நிரந்தர மாயலங் காரார்க்கிங் காட்பட்டு நின்றபின்னே?

578] [அ

நின்றபி ராணன் கழலுமுன் னேநெஞ்ச மே!நினையாய்
சென்றபி ராயம்வம் பேசென்ற தாற்றிரு மங்கைகொங்கை
துன்றபி ராமனைச் சுந்தரத் தோளனைத் தோளின்மல்லைக்
கொன்றபி ரானை யடைந்தடி யாரொடுங் கூடுகைக்கே.

579] [கூ

கூடுகைக் குஞ்சர மத்தடி யேற்குக் கொடியவஞ்சஞ்
சாடுகைக் குஞ்சர ணந்தர வேண்டுந் தடத்தழுந்தி

---

577. 'தொல் புவிக்கு வரம் தர மாலிருஞ்சோலை நின்றார்க்கு—அலங்காரர்க்கு—இங்கு நிரந்தரமாய் என் மனத்தினுள்ளே ஆட்பட்டு நின்ற பின், 'புரந்தரன் ஆம்,' எனப் பூபதி ஆகிப் புகர் முக மா துரந்து அரசு ஆளில் என்? நல்குரவு ஆகில் என்?' என இயைக்க.

தொல் புவிக்கு - பழைய இவ்வுலகில் உள்ள உயிர்களுக்கு, இங்கு - இவ்வுலகில், நிரந்தரமாய் - இடைவிடாமல், ஆட்பட்டு - அடிமையாகி, புரந்தரன் - இந்திரன், பூபதி - அரசன், புகர் முக மா துரந்து - செம்புள்ளி வாய்ந்த முகத்தையுடைய (ஐராவதம் என்னும்) யானையை ஏறிச் செலுத்தி, நல்குரவு - வறுமை.

578. 'நெஞ்சமே, சென்ற பிராயம் வம்பே சென்றது; நின்ற பிராணன் கழலும் முன்னே திருமங்கை கொங்கை துன்று அபிராமனை—சுந்தரத் தோளனை—தோளின் மல்லைக் கொன்ற பிரானை அடைந்து, அடியாரொடும் கூடுகைக்கு (நீ) நினையாய்,' என இயைக்க.

வம்பே - வீணே, கழலும் முன்னே - (உடலை விட்டு) நீங்கு முன், துன்று - தழுவுகின்ற, அபிராமனை - கள்ளழகப் பெருமானை, தோளின் - தோள்களால், மல்லை - (சாணூரன் முஷ்டிகன் என்னும் கம்சனால் ஏவப்பட்ட) மல்லர்களை, கூடுகைக்கு - சேர்தற்கு, நினையாய் - எண்ணுவாயாக.

579. 'தடத்து அழுந்தி வாடு கைக்குஞ்சரம் காத்தீர், விண் வாழ்கைக்கும் வாள் அரக்கர் வீடுகைக்கும் சரம் கோத்தீர், விடை வெற்பின் வித்தகரே, கூடு கைக்கும் சரமத்து அடியேற்குக்

வாடுகைக் குஞ்சரங் காத்தீர்! விண் வாழ்கைக்கும் வாளரக்கர்
வீடுகைக் குஞ்சரங் கோத்தீர்! விடைவெற்பின் வித்தகரே!

580] பாங்கி வெறி விலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடு நிற்றல் [க0

வித்தக ரும்பர்க் கரசா னவரும் விதியுங்கங்கை
மத்தக ரும்பர வும்மலங் காரர் மழைகொண்டகார்
ஒத்தக ரும்பரஞ் சோதியர் நாம முரைத்தன்னைமீர்!
இத்தக ரும்பர தெய்வமுங் கூத்தும்விட் டேத்துமினே.

581] [கக

ஏத்துமின் பத்தியி னலெட் டெழுத்து மிணையடிக்கே
சாத்துமின் பத்திரத் தண்ணந் துழாய்மதி தாங்கிக்கஞ்சம்

---

கொடிய வஞ்சம் சாடுகைக்கு உம் சரணம் தர வேண்டும்,' என இயைக்க.

தடத்து - மடுவில், கைக்குஞ்சரம் - (கஜேந்திரனாகிய) யானையை, காத்தீர் - காத்தவரே, விண் - வானுலகத்தவர், வாழ்கைக்கும் - வாழ்வதற்கும், வாள் அரக்கர் - கொடிய இராட்சசர், வீடுகைக்கும் - அழிதற்கும், சரம் கோத்தீர் - அம்பைத் தொடுத்தவரே, விடை வெற்பு - இடபகிரி என்னும் திருமாலிருஞ்சோலை மலையில் உள்ள, வித்தகரே - ஞான சொரூபரே, கூடு கைக்கும் சரமத்து - (உயிரானது என்) உடலை வெறுக்கும் முடிவு காலத்தில், அடியேற்கு - அடியவனாகிய எனக்கு, வஞ்சம் - வஞ்சனை, சாடுகைக்கு - அடித்தோட்டுதற்கு, சரணம் - திருவடிகளை.

580. 'அன்னைமீர், இத்தகரும் பரதெய்வமும் கூத்தும் விட்டு, வித்தகர்—உம்பர்க்கு அரசானவனும் விதியும் கங்கை மத்தகரும் பரவும் அலங்காரர்—மழை கொண்ட கார் ஒத்த கரும்பரஞ்சோதியர் நாமம் உரைத்து ஏத்துமின்,' என இயைக்க.

அன்னைமீர் - தாய்மாரே, தகரும் - ஆட்டுக்கிடாய்ப் பலியும், பரதெய்வமும் - வேறு தெய்வ வழிபாடும், கூத்தும் - ஆவேசமாடுதலும், வித்தகர்-ஞான சொரூபரும், உம்பர்க்கு அரசு ஆனவன் - தேவேந்திரன், விதி-பிரமன், கங்கை மத்தகர் - கங்கையையுடைய தலையினரான சிவபிரான், பரவும் - துதிக்கும், அலங்காரர் - அழகர், மழை - நீர், கார் - மேகம், பரஞ்சோதியர் - மேன்மையான ஒளியுடையவர், ஏத்துமின் - துதியுங்கள்.

581. 'பத்தியினால் எட்டு எழுத்தும் ஏத்துமின்; தண் அம் துழாய்ப் பத்திரம் இணையடிக்கே சாத்துமின்; மதி தாங்கிக் கஞ்சம் பூத்து மின் பத்தி செய்யும் பச்சை மாமுகில் போல் அழகர் கருணை செய்து காத்தும் இன்பத்தில் இருத்தியும் வைப்பர்,' என இயைக்க,

பூத்துமின் பத்தி செயும்பச்சை மாமுகில் போலழகர்
காத்துமின் பத்தி விருத்தியும் வைப்பர் கருணைசெய்தே.

582] [கஉ

செய்தவ ராக வருந்தியுந் தீர்த்தத் துறைபடிந்தும்
கைதவ ராகமங் கற்றுமென் னுங்கடற் பார்மருப்பிற்
பெய்தவ ராகனை மாலலங் காரனைப் பேரிலங்கை
எய்தவ ராகவ வென்றேத்த நீங்கு மிருவினையே.

583] தலைவியின் ஆற்றாமையைத் தோழி தலைவனுக்குக் கூறல் [கங

வினைக்கு மருந்தரிக் கும்பிணி மூப்புக்கும் வீகின்றவே
தனைக்கு மருந்தன்ன தாளழ கா! செய்ய தாமரையங்
கனைக்கு மருந்தமு தே! அரு ளாய்நின்னைக் காதலித்து
நினைக்கு மருந்ததி தன்னுயிர் வாழ்க்கை நிலைபெறவே.

---

எட்டு எழுத்து - அஷ்டாக்ஷர மந்திரம், ஏத்துமின் - துதியுங்கள்; பத்திரம் - இலை, சாத்துமின் - அருச்சியுங்கள்; மதி - சந்திரன், கஞ்சம் - தாமரை, பத்தி செயும் - அணி செய்கின்ற, இருத்தியும் - இருக்கச் செய்தும், வைப்பர் - (வைகுந்தத்தில்) வைத்திருப்பர்.

582. 'செய் தவராக வருந்தியும், தீர்த்தத் துறை படிந்தும் கைதவர் ஆகமம் கற்றும் என்னும்? மருப்பில் கடல் பார் பெய்த வராகனை—மால் அலங்காரனை—'பேரிலங்கை எய்தவ, ராகவ,' என்று ஏத்த, இரு வினை நீங்கும்,' என இயைக்க.

• தவராக - தவசியராக, படிந்தும் - நீராடியும், கைதவர் - வஞ்சகராகிய அயல் மதத்தவரின், ஆகமம் - ஆகம சாஸ்திரங்களை, என்னும் - என்ன பயனாகும்? மருப்பில் - தந்தத்தில், கடல் பார் - கடலாற் சூழப்பட்ட பூமியை, பெய்த - பொருத்திய, வராகனை - வராக அவதாரியை, எய்தவ - அம்பெய்து அழித்தவனே, ராகவ - இரகு குலத்தவனே, ஏத்த - துதிக்க, இருவினை - நல்வினை தீவினைகள்.

583. 'வினைக்கும், மருந்து அரிக்கும் பிணி மூப்புக்கும், வீகின்ற வேதனைக்கும் மருந்து அன்ன தாள் அழகா, செய்ய தாமரை அங்கனைக்கும் அருந்து அமுதே, நின்னைக் காதலித்து நினைக்கும் அருந்ததிதன் உயிர் வாழ்க்கை நிலை பெற அருளாய்,' என இயைக்க.

வினைக்கும் - இரு வினை நீக்கத்திற்கும், மருந்து அரிக்கும் - மருந்தின் வலியையும் அழிக்கின்ற, பிணி - நோய், மூப்பு - முதுமை, •வீகின்ற வேதனை - இறக்கும் துன்பம், அங்கனை - அழகியாகிய திருமகள், காதலித்து - விரும்பி, அருந்ததிதன் - அருந்ததி போன்ற கற்பரசியாகிய இப்பெண்ணின்.

584] [கச

நிலையாமை யான வுடலு முயிரு நினைவுந்தம்மிற்
கலையாமை யானங் கலக்குமுன் னேகங்கை வைத்தசடைத்
தலையாமை யானனன் றாமரை யான்றொழுந் தாளழகன்
அலையாமை யானவன் மாலிருஞ் சோலை யடைநெஞ்சமே!

585] [கரு

நெஞ்ச முருக்கு முயிருருக் குந்தொல்லை நீள்வினையின்
வஞ்ச முருக்கும் பவமுருக் கும்வண் டுழாயழகர்
கஞ்ச முருக்கு மலர்வாய்த் திருநண்பர் கஞ்சனுக்கு
நஞ்ச முருக்கு வளையாழி யன்னவர் நாமங்களே.

586] [கசு

நாமங்க ளாவி நழுவுந் தனையு நவின்றவரைத்
தாமங்க ளாவி மனத்துள்வைப் பார்தண் டலையினகில்

---

584. 'நெஞ்சமே, நிலையாமையான உடலும், உயிரும், நினைவும் தம்மின் கலையா மையானம் கலக்குமுன்னே கங்கை வைத்த தலை ஆம் ஐயானனன் தாமரையான் தொழும் தாள் அழகன்—அலை ஆமையானவன் மாலிருஞ்சோலை அடை,' என இயைக்க.

தம்மின் கலையா - தம் நிலையிலிருந்து கலைந்து, மையானம் - சுடுகாட்டை, ஐயானனன் - ஐந்து முகங்களையுடைய சிவனும், தாமரையான் - பிரமனும், அலை - திருப்பாற்கடலில், ஆமை யானவன் - கூர்மாவதாரம் செய்தருளியவனது, அடை - சேர்வாயாக. 'மயானம்' என்பது 'மையானம்' எனத்திரிந்தது திரிபு நயங்கருதி.

585. 'கஞ்ச முருக்கு மலர் வாய்த் திரு நண்பர்—கஞ்சனுக்கு நஞ்சம்—உருக் குவளை ஆழி அன்னவர்—வண் துழாய் அழகர் நாமங்கள் நெஞ்சம் உருக்கும்; உயிர் உருக்கும்; தொல்லை நீள் வினையின் வஞ்சம் முருக்கும்; பவம் முருக்கும்,' என இயைக்க.

கஞ்சம் - தாமரை மலரில் வீற்றிருக்கும், முருக்கு மலர் வாய்த்திரு-முருக்கம்பூவைப் போலும் உதடுகளையுடைய இலக்குமிக்கு, நஞ்சம் - விஷம், உருக் குவளை ஆழி அன்னவர் - நிறத்தால் நீலோற்பல மலரையும் கடலையும் ஒத்தவருமான, பவம் - பிறப்பை, முருக்கும் - அழிக்கும்.

586. 'ஆவி நழுவுந்தனை நாமங்கள் நவின்று அவரைத் தாம் அங்கு அளாவி மனத்துள் வைப்பார், தண்டலையின் ஆவி அகில் தாமங்கள் மணம் நாறும் மாலிருஞ்சோலை அன்பர் —சேமம்— களாவின் கனி அனையார்—பதம் சேருவர்,' என இயைக்க.

தாமங்க ளாவி மணநாறு மாலிருஞ் சோலையன்பர்
சேமங்க ளாவின் கனியனை யார்பதஞ் சேருவரே.

587] [கஎ

சேராத காத நரகேழ் தலைமுறை சேர்ந்தவர்க்கும்
வாராத காதம் வசைபிணி பாவ மறிகடன்முன்
தூராத காதங்க டூர்த்தானை மாலிருஞ் சோலையிற்போய்
ஆராத காத லுடன்பணி வீரென் னழகனையே.

588] பாங்கி விடு தூது [கஅ

அழக்கன் றியகருங் கண்ணிக்குக் கண்ணி யளித்திலரேல்
வழக்கன்றி முன்கொண்ட வால்வளை கேளு மறுத்ததுண்டேல்
குழக்கன் றின்பின் குழ லூதலங்காரர்க்குக் கோதைநல்லீர்
சழக்கன்றில் வாய்பிளந் தாலுய்ய லாமென்று சாற்றுமினே.

---

ஆவி நழுவுந்தனை - (உடலை விட்டு) உயிர் நீங்கும் வரையில், நாமங்கள் நவின்று - திருப்பெயர்களைத் துதித்து, அவரை - அப்பெருமானை, அளாவி - கலந்து, மனத்துள் வைப்பார் - தியானிப்பவர், தண்டலையின் - சோலைகளில், ஆவி - தடாகங்கள், அகில் தாமங்கள் - (நீராடும் பெண்டிர் தம் கூந்தலுக்கு ஊட்டிய) அகிற் புகைகளின், அன்பர் - (எல்லா உயிர்களிடத்தும்) அன்புடையவரும், சேமம் - பாதுகாப்பானவரும், களாவின் கனி அனையார் - களாப்பழமொத்த கரிய நிறமுடையவருமாகியபெருமானது, பதம் சேருவர் - திருவடிகளையடைவர்.

587. 'ஆராத காதலுடன் மாலிருஞ்சோலையில் போய், முன் மறிகடல் தூராத காதங்கள் தூர்த்தானை—என் அழகனைப் பணிவீர், எழ் தலைமுறை சேர்ந்தவர்க்கும் தகாத நரகு சேரா; அகாதம் வசை பிணி பாவம் வாராது,' என இயைக்க.

முன் - இராமவதார காலத்தில், மறிகடல் - அலை மடங்கி வீசும் சமுத்திரத்தில், தூர்த்தானை - அணைகட்டியவனை, பணிவீர் - வணங்குமின்; நரகு - நரகங்கள், அகாதம் - வஞ்சகக்குணம், வசை - பழி, வாராது - (இவற்றுள் எதுவும்) அணுகாது.

588. 'கோதை நல்லீர், அழக் கன்றிய கருங்கண்ணிக்குக் கண்ணி அளித்திலரேல், வழக்கு அன்றி முன் கொண்ட வால் வளை கேளும்; மறுத்தது உண்டேல், குழக்கன்றின் பின் குழல் ஊது அலங்காரர்க்குச் 'சழக்கு அன்றில் வாய் பிளந்தால் உய்யலாம்,' என்று சாற்றுமின்,' என இயைக்க.

கோதை நல்லீர் - பூமாலையணிந்த தோழியரே, கன்றிய - வாடிய, கருங்கண்ணிக்கு - கரிய கண்களையுடைய தலைவிக்கு, கண்ணி - (தமது) மலர் மாலையை, வழக்கு அன்றி - நியாயமல்

589] தலைமகளது மடலூர்தற்றுணிவைத் தோழி செவிலிக்கு உணர்த்தல் [கக

சாற்றுக் கரும்பனைக் கூற்றென்னு மாசைத் தமிழ்மலயக்
காற்றுக் கரும்பனை யுங்கண் படாளலங் காரற்கண்டர்
ஏற்றுக் கரும்பனை யக்கொங்கை யாள்கொண்ட வின்னலுக்கு
மாற்றுக் கரும்பனை யல்லாது வேறு மருந்தில்லையே.

590] [உ0

மருந்துவந் தார்தொழு மாலிருஞ் சோலை மலையழகர்
அருந்துவந் தாரணி யென்றயின் றூரட லாயிரவாய்
பொருந்துவந் தார்பணிப் பாயார் விதுரன் புதுமனையில்
விருந்துவந் தாரடி யார்க்கில்லை நோயும் வெறுமையுமே.

---

லாமல், வால்வளை - வெண்மையான வளையல்களை, குழக்கன்றின் - இளம்பசுக்கன்றுகளின், அலங்காரர்க்கு - அழகராகிய தலைவர்க்கு, சழக்கு அன்றில் - கொடிய அன்றிற்பறவையின், உய்ய லாம் - (இவள்) பிழைக்கலாம்.

589. 'சாற்றுக் கரும்பனைக் கூற்று என்னும்; ஆசைத் தமிழ் மலையக் காற்றுக்கு அரும்பல் நையும்; கண் படாள்; அண்டர் ஏற்றுக்கு—அலங்காரர்க்கு—அரும்பு அனைய கொங்கை யாள் கொண்ட இன்னலுக்கு மாற்று, கரும்பனை அல்லாது வேறு மருந்து இல்லை,' என இயைக்க. அனையக்கொங்கை—ச்-விரித்தல்.

சாற்றுக் கரும்பன் - மன்மதன், கூற்று என்னும் - (தலைவி) யமன் என்பாள், மலையக்காற்று - பொதிய மலையிலிருந்து வரும் தென்றற்காற்று, அரும்பல் - மென்மையாக வீசும்போது, நையும் - வருந்துவாள், கண் படாள் - உறங்காள், அண்டர் ஏற்றுக்கு - தேவர் சிங்கமான பெருமானை அடைதற்கு, அலங்காரர்க்கு - அழகரைச் சேர்தற்கு, இன்னலுக்கு மாற்று - துன்பம் நீக்குதற்குப் பரிகாரமாவது, கரும்பனை - கரிய பனை மடலூர்தல்.

590. ''தாரணி அருந்துவம்,' என்று அயின்றூர்—அடல் ஆயிரம் வாய் பொருந்து வந்து ஆர் பணிப் பாயார்—விதுரன் புது மனையில் விருந்து வந்தார்—மருந்து உவந்தார் தொழும் மாலிருஞ்சோலை மலை அழகர் அடியார்க்கு நோயும் வெறுமையும் இல்லை,' என இயைக்க.

தாரணி அருந்துவம் - பூமியை உட்கொள்வோம், அயின் றூர் - உண்டவரும், அடல் - வலிமையுடைய, வந்து ஆர் பணிப் பாயார் - காற்றையே உணவாகக் கொள்ளும் (ஆதிசேஷனாகிய) பாம்புப் படுக்கையை உடையவரும், மருந்து உவந்தார் - அமிர்தத்தை விரும்பிய தேவர், வெறுமை - தரித்திரம்.

591] தலைமகள் இளமைக்குச் செவிலி இரங்கல் [உக

வெறுத்தவ ரைக்கஞ்ச னைச்செற் றுளார்விடை வெற்பர்வெங்கண்
கறுத்தவ ரைக்கஞ்ச லென்றுவந் தார்கன காம்பரத்தைப்
பொறுத்தவ ரைக்கஞ் சனமேனிக் காவி புலர்ந்துருகிச்
சிறுத்தவ ரைக்கஞ்சங் கூப்புமென் பேதைக்கென் செப்புவதே.

592] [உஉ

செப்போ தனஞ்செழுந் துப்போசெவ் வாயென்று சேயிழையார்க்
கொப்போ தனஞ்சுரு கித்திரி வீர்கன லூதைமண்விண்
அப்போ தனமென் றமுதுசெய் தாரலங் காரர்பொற்றாள்
எப்போ தனந்த றவிர்ந்தேத்த நீங்க ளிருக்கின்றதே?

593] [உரு

இருக்கந் தரத்தனை வோர்களு மோதி யிடபகிரி
நெருக்கந் தரத்தனை யேத்தநின் றானை நிறத்ததுப்பின்

591. 'கஞ்சனை, வெறுத்தவரை, செற்றுளார்—வெங்கண் கறுத்த வரைக்கு 'அஞ்சல்!' என்று வந்தார்—விடை வெற்பர் கனக அம்பரத்தைப் பொறுத்த அரைக்கு, அஞ்சன மேனிக்கு ஆவி புலர்ந்து உருகி வரைச் சிறுத்த கஞ்சம் கூப்பும் என் பேதைக்கு என் செப்புவது?' என இயைக்க.

கஞ்சனை வெறுத்தவரை - கஞ்சனையும் தம்மை வெறுத்தவ ராகிய பகைவரையும், செற்றுளார் - அழித்தவரும், வெங்கண் - கொடுமை வாய்ந்த கண்களையுடைய, கறுத்த வரைக்கு - கரிய மலை போன்ற (கஜேந்திரனாகிய) யானைக்கு, விடை வெற்பர் - இடபகிரியில் எழுந்தருளியவர், கனக அம்பரத்தை - பொன் னுடையை, பொறுத்த அரைக்கு - தரித்த இடையினழகுக்கும், ஆவி புலர்ந்து - உயிர் வருந்தி, வரைச் சிறுத்த கஞ்சம் கூப்பும் - இரேகைகளையுடைய சிறிய தாமரை மலர் போலும் கைகளைக் குவித்து வணங்கும், பேதைக்கு - மகள்பொருட்டு, என் செப் புவது -(யான்) சொல்லத் தகுவது யாது?

592. ' 'தனம் செப்போ! செவ்வாய் செழுந்துப்போ!' என்று சேயிழையார்க்கு ஒப்பு ஓதல் நஞ்சு உருகித் திரிவீர், நீங் கள் கனல், ஊதை, மண், விண், அப்பு ஓதனம் என்று அமுது செய்தார்—அலங்காரர் பொன் தாள் அனந்தல் தவிர்ந்து ஏத்த இருக்கின்றது எப்போது?' என இயைக்க.

தனம் - முலைகள், செப்போ - பொற்கலசங்களோ! துப் போ ? பவழமோ! ஓதல் - சொல்லுதலில், நஞ்சு - (உள்ளம்) வருந்தி, திரிவீர் - திரிபவரே, ஊதை - காற்று, அப்பு - நீர், ஓதனம் - உணவு, அனந்தல் - மயக்கம், எப்போது - எக்காலம்?

593. 'அந்தரத்து அனைவோர்களும் இருக்கு ஓதி இடபகிரி நெருக்கம் தரத் தனை ஏத்த நின்றானை—நிறத்த துப்பின் உருக்கந்

உருக்கந் தரத்தனைத் துன்பொழித் தானை யுலகமுண்ட
திருக்கந் தரத்தனை யல்லாதெண் ணேனொரு தெய்வத்தையே.

594] [உ௪

தெய்வம் பலவவர் நூலும் பலவவை தேர்பொழுதிற்
பொய்வம் பலவென்று தோன்றும்புல் லோர்கட்குப் போதநல்லோர்
உய்வம் பலனு மவனேயென் றோதி யுணர்வர்நெஞ்சே!
கொய்வம் பலர்சொரியுஞ்சோலை மாமலைக்கொண்டலையே.

595] [உ௫

கொண்டலை யாநிற்கு மைம்புலக் கோண்மக ரங்களினீர்ப்
புண்டலை யார்பிற விக்கடன் மூழ்குவ ருத்தமனைத்

---

தர் அத்தனைத் துன்பு ஒழித்தானை—உலகம் உண்ட திருக்கந்தரத் தனை அல்லாது ஒரு தெய்வத்தை எண்ணேன்,' என இயைக்க.

அந்தரத்து அனைவோர்களும் - தேவலோகத்தார் எல்லாரும், இருக்கு - வேதம், நெருக்கம் தர - நெருக்கமுண்டாகும்படி, தனை ஏத்த - தன்னைத் துதிக்க, சிறத்துப்பின் உரு - செந்நிறத்தை யுடைய பவழத்தைப் போன்ற நிறத்தையுடைய, கந்தர் - முருக ருக்கு, அத்தனை - தந்தையான சிவபெருமானை, துன்பு - (யாசிக் கும்) துன்பம், கந்தரத்தனை - கழுத்தை உடையவனை, எண் ணேன் - தியானிக்கமாட்டேன்.

'மறந்தும் புறந்தொழேன்,' என்பது கருத்து.

594. 'நெஞ்சே, தெய்வம் பல; அவர் நூலும் பல; அவை தேர் பொழுதில் பொய் வம்பு அல என்று புல்லோர்கட்குத் தோன்றும்; போத நல்லோர், 'உய்வம்; பலனும் அவனே,' என்று கொய் வம்பு அலர் சொரியும் சோலை மாமலைக் கொண்டலையே ஓதி உணர்வர்,' என இயைக்க.

தெய்வம் பல - (உலகினர் போற்றும்) தெய்வங்கள் பல வாகும்; நூலும் - மத சாஸ்திரங்களும், தேர் பொழுதில் - ஆரா யும் போது, வம்பு - வீண், புல்லோர்கட்கு - அற்பர்களுக்கு, போத நல்லோர் - ஞானம் வாய்ந்த நல்லவர், உய்வம் - (சரியான வழியிற்போய்) பிழைப்போம், பலனும் - (மோட்சத்தின்) பய னும், வம்பு அலர் - மணமுள்ள மலர்களை, சொரியும் - உதிர்க் கின்ற, கொண்டலையே - மேகம் போன்றவராகிய கள்ளழகப் பெருமானையே, ஓதி உணர்வர் - துதித்துத் தியானஞ் செய்வர்.

595. 'உத்தமனை—தண்டலை ஆர் திருமாலிருஞ்சோலைத் தனிச்சுடரை, 'அணங்கு ஆர் வினை போக,' என்று புண் தலையால் வணங்கார், கொண்டு அலையாநிற்கும் ஐம்புலக் கோள்- மகரங் களின் ஈர்ப்புண்டு, அலை ஆர் பிறவிக்கடல் மூழ்குவர்,' என இயைக்க.

தண்டலை யார்திரு மாலிருஞ் சோலைத் தனிச்சுடரைப்
புண்டலை யால்வணங் காரணங் கார்வினை போகவேன்றே.

596] [உசா

என்று தரங்கலந் தேனற்றை நான்றுதொட் டிற்றைவரை
நின்று தரங்கிக்கின் றேற்கருள் வாய்நெடுங் கான்கடந்து
சென்று தரங்கக் கடறார்த் திலங்கையிற் றீயவரைக்
கொன்று தரங்குவித் தாய்சோலை மாமலைக் கோவலனே!

597] [உள

கோவலன் பார்ப்புடன் கேகயஞ் சூழ்குளிர் சோலைமலைக்
காவலன் பாற்கடற் கண்டுயின் மாலலங் காரனென்றே
பாவலன் பாற்பணி வாரணி வானவ ராகிமறை
நாவலன் பார்ப்பதி நாதனண் ணுப்பத நண்ணுவரே.

---

அணங்கு ஆர் வினை போக - துன்பம் நிரம்பிய கருமங்கள் ஒழிக, வணங்கார் - பணியாத புல்லர், கொண்டு - (தம்மை அடிமை) கொண்டு, அலையாநிற்கும் - வருத்துகின்ற, ஐம்புலக் கோள் மகரங்களின் - பஞ்சேந்திரியங்களாகிய வலிய சுறா மீன்களினால், ஈர்ப்புண்டு - இழுக்கப்பட்டு, அலை ஆர் - (துன்பங்களாகிய) அலைகள் நிரம்பிய, பிறவிக்கடல் - பிறப்பாகிய சமுத்திரத்தில்.

596. 'நெடுங்கான் கடந்து சென்று தரங்கக் கடல் தூர்த்து இலங்கையில் தீயவரைக் கொன்று தரம் குவித்தாய், சோலை மாமலைக் கோவலனே, என்று உதரம் கலந்தேன் அற்றை நான்று தொட்டு இற்றை வரை நின்று தரங்கிக்கின்றேற்கு அருள்வாய்,' என இயைக்க.

கான் - காடு, தரங்கம் - அலைகளையுடைய, தரம் - மலைபோல, கோவலனே - ஆயர்குலச் செம்மலே, உதரம் - (தாயின்) வயிற்றில், அற்றை நான்று தொட்டு - அந்நாள் தொடங்கி, நின்று தரங்கிக்கின்றேற்கு - இடைவிடாமல் மனம் அலைகின்ற எனக்கு, அருள்வாய் - (இனிப் பிறவி உண்டாகாதபடி) கருணை செய்.

597. ''கோவலன்—பார்ப்புடன் கேகயம் சூழ் குளிர்சோலை மலைக் காவலன்—பாற்கடல் கண் துயில் மால் அலங்காரன்,' என்றே பாவல் அன்பால் பணிவார், அணி வானவர் ஆகி, மறை நாவலன் பார்ப்பதி நாதன் நண்ணுப் பதம் நண்ணுவர்,' என இயைக்க.

கோவலன் - கோபாலன், பார்ப்புடன் - குஞ்சுகளுடன், கேகயம் - மயில்கள், காவலன் - தலைவன், என்றே - என்று துதித்

598] பாதவகுப்பு [உஅ

நண்ணின னாக முடிமே னடித்தென்னை நாசமறப்
பண்ணின னாகமும் பாரு மளந்தன பண்டுதம்பி
மண்ணின னாக வனம்போ யினவளர் சோலைமலைக்
கண்ணின னாகங் கரியான் சிவந்த கழலிணையே.

599] தலைவனைப்பிரிந்த தலைவி இரங்கல் [உகூ

கழலப் புகுந்த வளையறி யாரென் கருத்தறியார்
அழலப் புகன்றொறுப் பாரன்னை மாரறு காற்சுரும்பு
சுழலப் புனைந்த துழாய்மார்பர் மாலிருஞ் சோலையென்றார்
தழலப் புவரென் றனங்களி லேசந்த னங்களென்றே.

---

துக்கொண்டே, பாவல் அன்பால் - பாவலையுடைய அன்பினால், பணிவார் - வணங்குபவர், அணி வானவர் ஆகி - அழகிய தேவராய், மறை நாவலன் - பிரமனும், பார்ப்பதி நாதன் - சிவபிரானும், நண்ணுப்பதம் - அடையாத பரமபதத்தை, நண்ணுவர் - அடைவர்.

598. 'வளர் சோலை மலைக்கண் இனன்—ஆகம் கரியான்—சிவந்த கழலிணை, நாகம் நண் இனன் முடிமேல் நடித்து, என்னை நாசம் அறப் பண்ணின; நாகமும் பாரும் அளந்தன; பண்டு தம்பி மண்ணினன் ஆக வனம் போயின,' என இயைக்க.

இனன் - சூரியனைப் விளங்குபவனும், ஆகம் - திருமேனி, நாகம் - (காளியனாகிய) பாம்பின், நண் இனன் முடிமேல் - இடைவெளியின்றி நெருங்கிக் கூட்டமாயுள்ள சிரங்களின்மீது, நாசம் அற - அழிவு கெடும்படி, நாகமும் பாரும் - விண்ணுலகையும் மண்ணுலகையும், பண்டு - (இராமவதாரஞ் செய்த) முன் காலத்தில், தம்பி-பரதன், மண்ணினன் ஆக-நில ஆட்சிக்கு உரியவனாக.

இது பெருமான் திருவடிகளின் சிறப்புக் கூறியது.

599. 'அன்னைமார், கழலப்புகுந்த வளை அறியார்; என் கருத்து அறியார் அழலப் புகன்று ஒறுப்பார்; 'அறுகாற்சுரும்பு சுழலப் புனைந்த துழாய் மார்பர் மாலிருஞ்சோலை,' என்றார்; சந்தனங்கள் என்று என் தனங்களிலே தழல் அப்புவர்,' என இயைக்க.

அன்னைமார் - (என் உடல் மெலிவிற்குக் காரணம் அறியாத என்) தாய்மார், கழலப் புகுந்த - (கையினின்றும்) நழுவி விழத் தொடங்கிய, வளை - வளையல்களின் பண்பை, அழலப் புகன்று ஒறுப்பார் - (என் மனம்) வெதும்பக் கூறி வருத்துவர்; அறு கால் சுரும்பு - ஆறு கால்களையுடைய தேன் வண்டுகள், சுழல சூழ்ந்து பறக்க, புனைந்த - (அப்பெருமான்) தரித்த, என்றார்

600] [௫௦

தனத்துக் கராவிய வேல்விழிக் கேக்கற்றுத் தையலரால்
தினத்துக் கராகித் திரிவார் பலர்சிலர் செங்கமல
வனத்துக் கராசலங் காத்தாற்குச் சோலை மலையினின்ற
கனத்துக் கராவணை யாற்கெம்பி ராற்குள்ளங் காதலரே.

601] [௫௧

காதலைப் பத்தினி மேல்வைத்த நீசக் கருநிருதன்
மாதலைப் பத்தியை மண்ணிலிட் டாய்!நின்னை வாழ்த்தித்தொண்டர்க்
கீதலைப் பத்தியைச் செய்வோர்கள் வாழு மிடபவெற்பா!
தீதலைப் பத்தியங் கித்திரி வேற்கருள் செய்தருளே.

---

(என் மனம் நாடியது) என்று நினையார்; தழல் அப்புவர் - (என் விரகதாபத்தைக் குறைக்க எண்ணி) நெருப்பை அப்புவர்.

600. 'தனத்துக்கு, அராவிய வேல் விழிக்கு ஏக்கற்று, தையலரால் தினத் துக்கராகித் திரிவார் பலர்; சிலர், செங்கமல வனத்துக் கராசலம் காத்தாற்கு—சோலை மலையில் நின்ற கனத்துக்கு—அரா அணையாற்கு—எம்பிராற்கு உள்ளம் காதலர்,' என இயைக்க.

தனத்துக்கு - (பெண்டிரின்) முலையழகிற்கும், அராவிய வேல்- அரத்தால் கூர்மையாக்கப்பட்ட வேல் போன்ற, ஏக்கற்று - ஏங்கித்தவித்து, தையலரால் - அப்பெண்டிரால், துக்கராகி - துன்பமுடையவராய், வனத்து - (மடுவின்) நீரிலே, கராசலம் - கையையுடைய மலை போன்ற கஜேந்திரனாகிய யானையை, கனத்துக்கு - நீலமேகம் போன்றவனான திருமாலுக்கு, அரா அணையாற்கு - (ஆதிசேடனான) பாம்பைப் படுக்கையாக உடையவனுக்கு, எம்பிராற்கு - எம்பெருமானுக்கு, காதலர் - அன்புடையவராவர்.

601. 'பத்தினிமேல் காதலை வைத்த நீசன் கருநிருதன் மாதலைப் பத்தியை மண்ணில் இட்டாய், நின்னை வாழ்த்தித் தொண்டர்க்கு ஈதலைப் பத்தியைச் செய்வோர்கள் வாழும் இடபவெற்பா, தீது அலைப்பத் தியங்கித் திரிவேற்கு அருள் செய்தருள்,' என இயைக்க.

பத்தினிமேல் - (உன்) மனைவியான சீதா பிராட்டியிடம், நீசன் - கீழ்மகனான, கருநிருதன் - கரிய அரக்கனான இராவணனுடைய, மாதலைப் பத்தியை - பெரிய தலையின் வரிசையை, தொண்டர்க்கு - (உன்) அடியவர்க்கு, பத்தியை - அன்பை, தீது அலைப்ப - தீவினைகள் பற்றி வருத்த, தியங்கித் திரிவேற்கு - மனங் கலங்கி அலையும் எனக்கு.

602] [௬௨

அருடரு மங்கை விடாதேத்து மன்பருக் கன்பரெல்லில்
இருடரு மங்கை யெறியாழி யாரிசைக் கின்னரரும்
கெருடரு மங்கைய ரும்வா ழிடப கிரியிற்கல்லா
முருடரு மங்கைய லெய்திலன் றேயவர் முத்தரன்றே?

603] [௬௩

முத்தரன் றேநின் கழலொரு காற்கை முகிழ்க்கப்பெற்றோர்
பித்தரன் றேநினக் கேபித்த ராகிற் பிரமன்கங்கை
வைத்தரன் றேய்துயர் தீர்த்தாய்!நின் சோலை மலைமருவும்
பத்தரன் றேபரி வாலென்னை யாளும் பரமர்களே?

---

602. 'அருள் தருமம் கை விடாது எத்தும் அன்பருக்கு அன்பர்—எல்லில் இருள் தரும் அம் கை எறி ஆழியார் இசைக் கின்னரரும் கெருடரும் மங்கையரும் வாழ் இடபகிரியின் அங்கு அயல் கல்லாமுருடரும் எய்தில் அன்றே அவர் முத்தர் அன்றே?' என இயைக்க.

அருள் தருமம் - கிருபையையும் தருமத்தையும், எல்லில் - பகலில், இருள் தரும் - இருளை உண்டாக்கிய, அம் கை - அழகிய கையினால், எறி ஆழியார் - வீசிய (சுதரிசனம் என்னும்) சக்கரத்தையுடையவர், இசைக் கின்னரரும் - இசையில் வல்லவரான கின்னரரும், மங்கையரும் - (அவர்தம்) பெண்டிரும், அங்கு அயல் - அவ்விடத்தினருகில், முருடர் - மூடர், எய்தில் - அடைந்தால், அன்றே - அப்பொழுதே, அன்றே - அல்லவா?

603. 'பிரமன் கம் கை வைத்து அரன் தேய்துயர் தீர்த்தாய், நின் கழல் ஒரு கால் கை முகிழ்க்கப் பெற்றோர் அன்றே முத்தர்; நினக்கே பித்தராகில், பித்தர் அன்றே; நின் சோலை மலை மருவும் பத்தர் அன்றே பரிவால் என்னை ஆளும் பரமர்கள்? என இயைக்க.

பிரமன் கம் - பிரம கபாலம், அரன் - சிவபிரான், தேய் துயர் - வருந்திய துயரத்தை, தீர்த்தாய் - நீக்கியவனே, கழல் - திருவடிகளை, ஒருகால் - ஒரு முறை, கை முகிழ்க்கப் பெற்றோர் - கை கூப்பி வணங்கியவர், அன்றே முத்தர் - அப்பொழுதே முத்தி அடைந்தவராவர்; நினக்கே பித்தராகில் - உன்னிடமே காதற் பைத்தியம் உடையவரானால், பித்தர் அன்றே - பைத்தியக்காரர் அல்லர்; மருவும் பத்தர் அன்றே - சாரும் அன்பரல்லரோ? பரிவால் - அன்பினால், என்னை ஆளும் பரமர்கள் - என்னை அடிமை கொள்ளும் சான்றோர்.

**604]** [௬௪

பரந்தா மரைத்திரு மாலிருஞ் சோலைப் பரமரைக்கால்
கரந்தா மரையன்ன கார்நிறத் தாரைக் கடல்கடக்குஞ்
சரந்தா மரைதிரி கான்போ யிலங்கைத் தலைவன்பத்துச்
சிரந்தா மரைக்கணத் தெய்தாரை யெய்தற்குத் தேர்மனமே!

**605]** [௬௫

தேரா யிரவு பகலிரை தேடுவை தீமைநன்மை
பாரா யிரங்குவை பாவைய ராற்பண்டு மாவலிபால்
சோரா யிரந்த வனைத்திரு மாலிருஞ் சோலைநின்ற
பேரா யிரமுடை யானைநெஞ் சேயென்று பேணுவையே!

**606]** தலைவி தனது வேட்கை மிகுதியைக் கூறல் [௬௬

பேணிக் கவித்த வரைக்குடை யாய்!பெரி யோர்பதின்மர்
ஆணிக் கவித்தமிழ் மாலைகொண் டாய்!அழ கா!கரிய

---

604. 'மனமே, பரந்தாமரை—திருமாலிருஞ்சோலைப் பரமரை—கால் கரம் தாமரை அன்ன கார் நிறத்தாரை—தாம் மரை திரி கான் போய், கடல் கடக்கும் சரம் இலங்கைத் தலைவன் பத்துச் சிரம் தாம் அரைக்கணத்து எய்தாரை எய்தற்குத் தேர்,' என இயைக்க.

பரந்தாமர் - பரமபத நாதர், பரமர் - தலைவர், கார் - நீல மேகம் போலும், தாம் மரைதிரி கான் - துள்ளிக் குதிக்கும் மான்கள் உலாவுகின்ற காட்டில், கடல் கடக்கும் சரம் - வருணனை வென்ற அம்பினால், இலங்கைத் தலைவன் - இராவணனுடைய, அரைக்கணத்து எய்தாரை - அரை விநாடியில் அறுத்து வீழ்த்திய பெருமானை, எய்தற்கு - அடைதற்கு, தேர் - (நீ) துணிவுகொள்.

605. 'நெஞ்சே, தேராய்; இரவு பகல் இரை தேடுவை; தீமை நன்மை பாராய்; பாவையரால் இரங்குவை; பண்டு மாவலிபால் சோர் ஆய் இரந்தவனை—திருமாலிருஞ்சோலை நின்ற பேர் ஆயிரம் உடையானை என்று பேணுவையே!' என இயைக்க.

தேராய் - (உனக்கு நல்வழியை) ஆராய்ந்து தெளிவடைய மாட்டாய்; பாவையரால் - பெண்டிர் காரணமாக, இரங்குவை - வருந்துவாய்; பண்டு - (வாமனாவதாரம் செய்த) பழைய காலத்தில், சோர் ஆய் - வஞ்சகமாய், இரந்தவனை - (மூவடி மண்) யாசித்த பெருமானை, நின்ற - நின்ற திருக்கோலத்திலுள்ள, என்று பேணுவையே - எக்காலத்தில் தியானித்து ஈடேறுவாயோ!

606. 'பேணிக் கவித்த வரைக்குடையாய், பெரியோர் பதின்மர் ஆணிக் கவித் தமிழ் மாலை கொண்டாய், அழகா, வித்தக, கரிய மாணிக்க மா மலையே, வெங்காமப் படர்கனல் வண்

மாணிக் கவித்தக மாமலை யேவண் டுளவுக்கல்லால்
பாணிக் கவித்தடங் காதுவெங் காமப் படர்கனலே.

607] பிரிவாற்றாத தலைவி சந்திரனை நோக்கி இரங்கிக் கூறல் [௬௭

படராகு வால்குவி யக்குழ லூதிய பாலரையம்
அடராகு வாகனன் றாதைக்கிட் டாரலங் காரர்துழாய்க்
கிடராகு வார்பலர் காண்டமி யேனை யெரிப்பதென்னீ
விடராகு வாய்க்கொண் டுடல்சுட்டுக் கான்றிட்ட வெண்டிங்களே!

608] நிலவினால் வருந்தும் தலைவியின் தளர்ச்சியைக் கண்ட [௬௮
பாங்கி இரங்கல்

திங்களப் பாநின்ற செந்தீக் கொழுந்திற் செழுஞ்சங்குபோ
லுங்களப் பாவை யுருகுவ தோர்கில ரும்பரெல்லாம்,

---

துளவுக்கு அல்லால் பாணிக்கு அவித்து அடங்காது,' என இயைக்க.

பேணிக் கவித்த - (ஆயரையும் கன்று காலிகளையும்) ஆதரித்துப் பிடித்த, வரைக்குடையாய் - (கோவர்த்தனம் என்னும்) மலைக்குடையை உடையவனே, பெரியோர் பதின்மர் - பத்து ஆழ்வாருடைய, ஆணி - சிறப்பு வாய்ந்த, வித்தக - ஞான சொரூபியே, படர்கனல் - பரவும் தீயானது, துளவுக்கு அல்லால் - (உன்) துளசி மாலைக்குத் தணிதலன்றி, பாணிக்கு - நீரால்.

607. 'விட ராகு வாய்க் கொண்டு உடல் சுட்டுக் கான்றிட்ட வெண்டிங்களே, படர் ஆ குவால் குவியக் குழல் ஊதிய பாலர்—ஐயம் அடர் ஆகு வாகனன் தந்தைக்கு இட்டார்—அலங்காரர் துழாய்க்கு இடர் ஆகுவார் பலர்காண்; தமியேனை நீ எரிப்பது என்?' என இயைக்க.

விட ராகு - நஞ்சுடைய ராகு என்னும் பாம்பு, வாய்க்கொண்டு - வாயால் பற்றி, உடல் சுட்டுக் கான்றிட்ட - அதன் உடலைச் சுட்டது காரணமாக அது கக்கிவிட்ட, வெண்டிங்களே - வெள்ளிய சந்திரனே, படர் ஆ - (பல இடங்களில்) பரவிய பசுக்கள், குவால் குவிய - கூட்டமாகத் திரளும்படி, பாலர் - இடைப்பிள்ளையானவரும், ஐயம் அடர் - பலி ஏற்றலால் துன்புற்ற, ஆகு வாகனன் - பெருச்சாளி வாகனனாகிய விநாயகனுடைய, தாதைக்கு - தந்தையாகிய சிவபிரானுக்கு, இட்டார் - (அப்பிச்சையேற்கும் தொழில் நீங்கப்) பிச்சையிட்டவரும், அலங்காரர் - அழகரது, துழாய்க்கு - துளசி மாலையைப் பெறுவதற்கு விரும்பி, இடர் ஆகுவார் - துன்புறுவர்; தமியேனை - திக்கற்ற என்னை மட்டும், நீ எரிப்பது என் - நீ எரிப்பதற்குக் காரணம் என்ன?

'எங்களப் பாளெமைக் காவாய்' எனவுல கீரடியால்
அங்களப் பான்வளர்ந் தார்சோலை மாமலை யாதியரே.

609] [௬௯

ஆதிய ராவிற் றுயிலலங் கார ரழகரன்பாம்
வேதிய ராவுதி வீற்றிருப் பாரண்ட மீதிருக்கும்
சோதிய ராவின்பின் போந்தாரை யன்றித் தொழேனுடலைக்
காதிய ராவினும் பொன்மா மகுடங் கவிக்கினுமே.

610] [௭௦

கவித்தானை மன்னற்கு நட்பாய் முடிகவித் தானையன்று
புவித்தானை வற்றப் பொழிசரத் தானைப் பொருதிலங்கை

608. 'உம்பர் எல்லாம், 'எங்கள் அப்பா, எமைக் காவாய்,' என, உலகு ஈரடியால் அளப்பான் அங்கு வளர்ந்தார் சோலை மலை ஆதியர், செழுஞ்சங்கு போலும் களப்பாவை திங்கள் அப்பா நின்ற செந்தீக் கொழுந்தின் உருகுவது ஓர்கிலர்,' என இயைக்க,

உம்பர் - தேவர், அளப்பான் - அளப்பதற்காக, அங்கு - (மாவலி என்னும் அசுரன் தாரை வார்த்துக்கொடுத்த) அவ்விடத்தில், வளர்ந்தார் - (திரிவிக்கிரமராய்) வளர்ந்தவராகிய, ஆதியர் - தலைவர், களப்பாவை - கழுத்தையுடைய பாவை போன்ற தலைவி, திங்கள் - சந்திரன், அப்பாநின்ற - அப்புகின்ற, கொழுந்தின் - தீப்பிழம்பால், ஓர்கிலர் - அறியாதிருக்கின்றனர்.

609. 'ஆதி அராவில் துயில் அலங்காரர் அழகர்—அன்பு ஆம் வேதியர் ஆவுதி வீற்றிருப்பார்—அண்டமீது இருக்கும் சோதியர்—ஆவின் பின் போந்தாரை அன்றி, உடலைக் காதி அராவினும், பொன் மா மகுடம் கவிக்கினும் தொழேன்,' என இயைக்க.

ஆதி அரா - ஆதிசேடன், ஆவுதி - (ஓமத்தீயில் விடும்) ஆகுதியில், அண்டமீது - உலகத்திற்கு மேலான பரமபதத்தில், ஆ - பசு, போந்தாரை - சென்றவரை, காதி - வருத்தி, அராவினும் - அரத்தால் தேய்த்தாலும், கவிக்கினும் - சூட்டினாலும்.

610. 'கவித்தானை—மன்னற்கு நட்பாய் முடி கவித்தானை - அன்று புவித்தானை வற்றப் பொழி சரத்தானை—பொருது இலங்கை அவித்தானை—மாலிருஞ்சோலை நின்றானை—முன் ஆனை தவித்து, 'வா' என வந்தானை—அழகனைத் தஞ்சம் என்று பற்றினென்,' என இயைக்க,

அவித்தானை மாலிருஞ் சோலைநின் றானை யழகனைமுன்
கவித்தானை வாவென வந்தானைப் பற்றினென் றஞ்சமென்றே.

611] [சக

தஞ்சந் தனமென்று தேடிப்புல் லோர்தைய லார்கடைக்கண்
வஞ்சந் தனங்கொள்ள வாளா விழப்பர் மதியுடையோர்
செஞ்சந் தனப்பொழில் மாலிருஞ் சோலைத் திருநெடுமால்
நெஞ்சந் தனக்குவப் பாகநல் காநிற்பர் நேர்படினே.

612] [சஉ

நேராய வேதனை நெஞ்சிடந் தாய்நெடுஞ் சோலைமலைக்
காராய வேதனை முன்படைத் தாய்நின் கழற்குத்தொண்டென்
றாராய வேதனைப் புன்பிறப் போயு மவாவழியிற்
பேராய வேதனை யில்லுழைப் போரும் பிழைப்பர்களே.

---

கவித்தானை மன்னற்கு - குரங்குச் சேனையையுடைய அரசனை சுக்கிரீவனுக்கு, முடி கவித்தானை - மகுடம் சூட்டியவனை அன்று - (இராமனையவதரித்த) அந்நாளில், புவித்தானை - நிலமகளுக்கு ஆடையாகிய கடல், சரத்தானை - அம்புகளை உடையவனை, அவித்தானை - அழித்தவனை, ஆனை - கஜேந்திரன், தஞ்சம்- அடைக்கலம்.

611. 'புல்லோர் தஞ்சம் என்று தனம் தேடி, தையலார் வஞ்சம் தனம் கொள்ள வாளா இழப்பர்; மதி உடையோர் (தனம்) நேர்படின், செஞ்சந்தனப் பொழில் மாலிருஞ்சோலைத் திருநெடுமால் நெஞ்சந்தனக்கு உவப்பாக நல்காநிற்பர்,' என இயைக்க.

புல்லோர்-அற்பர், தஞ்சம் என்று - பாதுகாப்பாகும் என்று, வஞ்சம் தனம் - வஞ்சனையும் கொங்கைகளும், கொள்ள - (அப் பொருளை) அபகரித்துக்கொள்ள, வாளா - வீணாக, நேர்படின் - கிடைக்குமாயின், சந்தனப்பொழில் - சந்தன மரச்சோலை சூழ்ந்த, உவப்பாக - மகிழ்ச்சி உண்டாகும்படி, நல்காநிற்பர் - கொடுத்திருப்பர்.

612. நேராய ஏதனை நெஞ்சு இடந்தாய், நெடுஞ்சோலை மலைக் கார் ஆய, வேதனை முன் படைத்தாய், நின் கழற்குத் தொண்டு என்று ஆராயவே தனைப் புன்பிறப்பு ஓயும்; அவா வழியின் பேராய வாதனை இல் உழைப்போரும் பிழைப்பர்கள்,' என இயைக்க.

நேராய - எதிர் நின்ற, ஏதனை - குற்றமுடையவனான இரணியனை, நெஞ்சு இடந்தாய் - மார்பைப் பிளந்தவனே, கார் ஆய - கரிய இடைச் சிறுவனாயிருந்தவனே, வேதனை - பிரமனை, தனை -

613] தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல் [௪௩

பிழைத்தலை யானெண்ணிப் பேசுகின் றேனிப் பிணிமற்றென்றால்
மழைத்தலை வார்குழ லீர்! தணி யாது வருணனைமுன்
அழைத்தலை யங்கடைத் தாரலங் கார ரலங்கனல்கீர்
முழைத்தலை நின்று மலயா நிலம்வந்து மோதுமுன்னே.

614] [௪௪

மோதாக வந்தனை மூட்டிலங் கேசன் முடிந்துவிண்ணின்
மீதாக வந்தனை வில்லெடுத் தேவிடை வெற்பினின்ற
நாதா! கவந்தனைச் செற்றா யுனையன்றி நான்மறந்தும்
தீதாக வந்தனை செய்யேன் புறஞ்சில தேவரையே.

615] [௪௫

தேவரை யாதன் மனிதரை யாதல் செழுங்கவிதை
நாவரை யாம னவிலுகிற் பீர்! நம்மை யாளுஞ்செம்பொன்

---

ஒருவனை. ஒயும் - ஒய்ந்துவிடும், அவா வழியின் - பேராசை மார்க்கத்தால், பேராய வாதனை இல் - பெரிய கூட்டமான துன்பங்களைத் தரும் சமுசாரத்தில்.

613. 'தலை மழை வார் குழலீர், யான் பிழைத்தலை எண்ணிப் பேசுகின்றேன்: இப்பிணி மற்றொன்றால் தணியாது; மலய அநிலம் முழைத்தலை நின்று வந்து மோதும் முன்னே வருணனை முன் அழைத்து அங்கு அலை அடைத்தார் அலங்காரர் அலங்கல் நல்கீர்,' என இயைக்க.

• தலை - தலையில், மழை வார் குழலீர் - மேகம் போலும் நீண்ட கூந்தலையுடைய தோழியரே, இப்பிணி - (யான் அப்பெருமான் மீது கொண்ட) இக்காதல் நோய், மலய அநிலம் - மலய மலையிலிருந்து வரும் காற்றாகிய தென்றற்காற்று, முழைத்தலை நின்று - (அம்மலையின்) குகையிலிருந்து, அலை - கடலை, அங்கு - (சேது பந்தனம் செய்த) அப்பொழுது, அலங்கல் நல்கீர் - மலர் மாலையைக் கொண்டு வந்து கொடுங்கள்.

614. 'விடை வெற்பில் நின்ற நாதா, கவந்தனைச் செற்றாய், மோது ஆகவந்தனை மூட்டு இலங்கா ஈசன் முடிந்து விண்ணின் மீதாக வில் எடுத்து வந்தனை; உனை அன்றிச் சில புறத் தேவரை நான் மறந்தும் தீதாக வந்தனை செய்யேன்,' என இயைக்க.

செற்றாய் - அழித்தவனே, ஆகவந்தனை - போரை, விண்ணின் மீதாக - விண்ணுலகு அடையும்படி, வந்தனை - வந்தாய், தீதாக - (எனக்குத்) தீமையுண்டாகும்படி.

615.• தேவரையாதல், மனிதரையாதல், நா வரையாமல் செழுங்கவிதை நவிலுகிற்பீர், நம்மை ஆளும் செம்பொன் மேவு

மேவரை யானை யிருஞ்சோலை வேங்கட மெய்யமென்னும்
மாவரை யானை யொருவனை யேசொல்லி வாழுமினே.

616] [௬௬

வாழுமின் பங்கயச் சுந்தர வல்லிம ணாளன்வெற்பைச்
சூழுமின் பந்தித்த தொல்வினை தீர்ந்துய்யத் தொங்கல்சுற்றும்
தாழுமின் பஞ்சணை மேன்மட வார்தட மாமுலைக்கே
வீழுமின் பங்கரு தித்துன்ப யோனியில் வீழ்பவரே!

617] [௬௭

வீழம ராமர மெய்தார் மதிதவழ் வெற்பைநெஞ்சே!
தாழம ராடச் சமன்குறு காணிச் சரீரமென்னும்
பாழம ராமற் பரகதி யேற்றுவர் பார்க்கில்விண்ணோர்
வாழம ராவதி யுந்நர காமந்த மாநகர்க்கே.

---

அரையானை—இருஞ்சோலை, வேங்கடம், மெய்யம் என்னும் மா வரையானை—ஒருவனையே சொல்லி வாழுமின்,' என இயைக்க.

தேவரையாதல் - (அயல்) தேவரையாவது, நா வரையாமல் - நாவினால் வரையறை செய்யாமல், நவிலுகிற்பீர் - சொல்லித் துதிப்பவர்களே, செம்பொன் மேவு - பீதாம்பரம் பொருந்திய, அரையானை - இடையை உடையவனை, மா வரையானை - பெரிய மலைகளில் எழுந்தருளியவனை, ஒருவனை - ஒப்பற்றவனை, சொல்லி- துதித்து.

616. 'சுற்றும் தொங்கல் தாழும் இன் பஞ்சு அணைமேல் மடவார் தட மா முலைக்கே வீழும் இன்பம் கருதித் துன்ப யோனியில் வீழ்பவரே, பந்தித்த தொல்வினை தீர்ந்து உய்ய, வாழும் மின் பங்கயச் சுந்தரவல்லி மணாளன் வெற்பைச் சூழுமின்,' என இயைக்க.

தொங்கல் - மலர் மாலைகள், தாழும் - தொங்கும், வீழும் - விரும்பும், இன்பம்- சிற்றின்பம், துன்பயோனியில் - துன்பமய மான பிறவிக் குழியில், பந்தித்த - (உம்மைக்) கட்டுப்படுத்திய, உய்ய - பிழைக்க, வாழும் மின் - நிலை பெற்றிருக்கின்ற மின்னலைப் போன்ற, பங்கயச் சுந்தரவல்லி - செந்தாமரையில் வாழும் சுந்தர வல்லியென்னும் திருமகளின், வெற்பை - மலையை, சூழுமின் - சுற்றி வாருங்கள். வாழும் மின் - இல்பொருள் உவமை.

617. 'நெஞ்சே, மராமரம் வீழ எய்தார் மதி தவழ் வெற்பைத் தாழ்; அமர் ஆடச் சமன் குறுகான்; இச்சரீரம் என்னும் பாழ் அமராமல் பரகதி ஏற்றுவர்; பார்க்கில், விண்ணோர் வாழ் அமராவதியும் அந்த மா நகர்க்கு நரகாம்,' என இயைக்க.

மராமரம் - ஆச்சாமரம், எய்தார் - அம்பைச் செலுத்தியவரின், மதி- சந்திரன், வெற்பைத் தாழ் - மலையை வணங்கு,

618] [சஅ

நகரமு னொடும் புரந்தவர் நண்ணல ரால்வனமும்
சிகரமு னொடுஞ் சிறுமைகண் டோமஞ்ஞை தேனிசைகள்
பகரமு னொடும் பனிச்சோலை வெற்பினிற் பார்க்குக்கஞ்சன்
தகரமு னொடுகைத் தார்க்கறிந் தீர்கள்! சரண்புகுமே.

619] [சகூ

சரணிய னாகத் தனைநினைந் தாரைத்தன் போலவைக்கும்
அரணிய னாகத் தணையா னரங்க னழுகனெங்கோன்
இரணிய னாக மிடந்தான் கதையன்றி யீனர்தங்கள்
முரணிய னாகத்தும் புன்குர லோரி முதுக்குரலே.

---

அமர் ஆட - (உன்னுடன்) போர் செய்ய, சமன் - இயமன், பாழ்- பாழில், அம்ராமல் - பொருந்தாதபடி (மறுபடியும் பிறவாதபடி), பரகதி - பரம பதத்தில், பார்க்கில் - யோசித்துப் பார்த்தால், அமராவதி - தேவலோகம், நரகு - நரகம்.

618. 'முன் நகரம் நாடும் புரந்தவர் நண்ணலரால் வனமும் சிகரமும் நாடும் சிறுமை கண்டோம்; அறிந்தீர்கள், தேன் இசைகள் பகர் மஞ்ஞை முன் ஆடும் பனிச்சோலை வெற்பில் நிற்பார்க்கு —கஞ்சன் தகர முன் நாள் துகைத்தார்க்குச் சரண் புகும்,' என இயைக்க.

முன் - முன்பு, புரந்தவர் - ஆண்டவரான மன்னர், நண்ணலரால் - பகைவரால், சிகரமும்-மலை உச்சியையும், நாடும் சிறுமை - தேடிச் செல்லும் சிறுமையை, அறிந்தீர்கள் - (செல்வம் நிலையாமையை) அறிந்த உலகத்தவர்களே, தேன் - வண்டுகள், இசைகள் பகர - பல இராகங்களில் ரீங்காரம் செய்ய, மஞ்ஞை - மயில்கள், பனிச்சோலை வெற்பில் நிற்பார் - குளிர்ச்சியையுடைய திருமாலிருஞ்சோலைப் பெருமானார், கஞ்சன் - கம்ஸன், தகர - அழிய, முன் நாள் - (கிருஷ்ணாவதாரஞ் செய்த) முற்காலத்தில், துகைத்தார்க்கு - காலால் மிதித்தவரான பெருமானுக்கு, சரண் புகும் - அடைக்கலம் புகுவீர்களாக.

இரண்டாமடியில் 'சிகரமுனொடும்' எனத் தந்நகரம் றன்னகரமாகத் திரிந்து நின்றது திரிபு நயத்தாலென்க.

619. 'தனைச் சரணியன் ஆக நினைந்தாரைத் தன் போல வைக்கும் அரணியன்—நாகத்து அணையான்—அரங்கன்—எம் கோன்—இரணியன் ஆகம் இடந்தான் அழகன் கதை அன்றி, ஈனர்தங்கள் முரண் இயல் நாகத்தும் புன்குரல் ஓரி முதுக் குரலே,' என இயைக்க.

சரணியன் - சரணம் புகத் தகுந்தவன், அரணியன் - காவலாய் உள்ளவன், அணையான் - படுக்கையாயுடையவன்,

620] [ருo

முதுவிருந் தாவனத் தானிரை மேய்த்தவர் முன்விதுரன்
புதுவிருந் தானவர் மாலலங் காரர் பொலங்கழலாம்
மதுவிருந் தாமரைக் காளா யிரார்க்கு மதிநுட்ப நூல்
எதுவிருந் தாலு மதனால் விடாவிங் கிருவினையே.

621] தலைவி வெறி விலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடு நிற்றல் [ருக

வினையாட்டி யேன்கொண்ட வெங்காம நோய்வெறி யாட்டினுமிச்
சினையாட்டி னுந்தணி யாதன்னை மீர்!செய்ய பூங்கமல
மனையாட்டி நாயகன் மாலிருஞ் சோலை மலைச்சிலம்பாற்
றனையாட்டி வாருஞ்சொன் னேனெந்த நோயு மெனக்கில்லையே.

622] வண்டு விடுதூது [ருஉ

எனக்கா வியங்கு முடலிங்கு மாகி யிருப்பதைச்சந்
தனக்கா வியங்குந் தமரவண் டீர்!சொல்லுந் தத்துவநூல்

---

இடந்தான் - பிளந்தவன், ஈனர்தங்கள் - அற்பர்களுடைய, முரண் இயல் நா - மாறுபட்ட சுபாவத்தையுடைய நாவினால், புன்குரல் - இழிவான ஒலி, ஓரி - கிழநரியின், முதுகுரலே - பெரிய ஊளைச்சத்தமேயாகும்.

620. 'முது விருந்தாவனத்து ஆன் நிரை மேய்த்தவர்—முன் விதுரன் புதுவிருந்து ஆனவர்—மால் அலங்காரர் பொலங் கழலாம் மது இருந்தாமரைக்கு ஆளாய் இரார்க்கு மதி நுட்ப நூல் எது இருந்தாலும், அதனால் இங்கு இரு வினை விடா,' என இயைக்க.

முது விருந்தாவனத்து - பழைய பிருந்தாவனத்திலே, ஆன் நிரை-பசுக்கூட்டத்தை, புதுவிருந்து-அற்புத விருந்தினர், பொலங் கழல் - அழகிய திருப்பாதங்கள், மது இருந்தாமரை - தேனை உடைய பெரிய தாமரை மலர்கள், ஆள் - அடிமை, விடா - விட்டு நீங்கா. (விருந்தாவனம் - துளசிக்காடு.)

621. அன்னைமீர், வினையாட்டியேன் கொண்ட வெங்காம நோய், வெறியாட்டினும் இச்சினை ஆட்டினும் தணியாது; செய்ய பூங்கமல மனையாட்டி நாயகன் மாலிருஞ்சோலை மலைச் சிலம்பு ஆற்று எனை ஆட்டி வாரும்; எந்த நோயும் எனக்கு இல்லை,' என இயைக்க.

அன்னைமீர் - தாய்மாரே, வினையாட்டியேன் - தீவினையை மேற்கொண்டவளான யான், வெறியாட்டு - ஆவேசமாடுதல், சினை ஆடு - (கேடில்லாத) உறுப்புகளைக்கொண்ட ஆட்டுக்கிடாய், மனையாட்டி - வாழுமிடமாக்கொண்ட திருமகள், சிலம்பாற்று - நூபுர கங்கை என்னும் நதியில், ஆட்டி - நீராடச் செய்து.

கனக்கா வியங்கவி வல்லோர் புகழலங் காரனுக்கு
வனக்கா வியங்கண்ணி மாமல ராண்மண வாளனுக்கே.

623] [௫௩

மணவாள ராவி நிகர்திரு மாதுக்கு மாலழகர்
பணவாள ராவிற்கண் பள்ளிகொள் வார்திருப் பாதமெண்ணக்
குணவாள ராவிரின் றேயுயிர் காளும்மைக் கூற்றுவனார்
நிணவாள ராவி யறுக்குமப் போது நினைப்பரிதே.

624] [௫௪

நினைப்பரி யாயெளி யாயும்பர் யார்க்குநின் னன்பருக்கும்
வினைப்பரி யானவன் வாய்பிளந் தாய்வியன் சோலைமலை
தனைப்பரி யாநின்ற தாளழ காமுற் சனனத்துள்ளும்
உனைப்பரி யாமலன் றோபரித் தேனிவ் வுடலத்தையே?

---

622. 'சந்தனக் கா இயங்கும் தமர வண்டீர், தத்துவ நூல் கன காவியக் கவி வல்லோர் புகழ் அலங்காரனுக்கு—வனக்காவி அம் கண்ணி மாமலராள் மணவாளனுக்கு, எனக்கு ஆவி அங்கும் உடல் இங்கும் ஆகியிருப்பதைச் சொல்லும்,' என இயைக்க.

சந்தனக் கா இயங்கும் - சந்தனச் சோலையில் திரிகின்ற, பறந்து தமரவண்டீர் - (ரீங்கார) ஒலி செய்யும் வண்டுகளே, கன காவியம் - பெருங்காப்பியம், வனக் காவி அம் கண்ணி - தண்ணீரிலுள்ள குவளை மலர் போலும் கண்களையுடையவள், மாமலராள் - இலக்குமி, மணவாளன் - கணவன், ஆவி - உயிர்.

623. 'உயிர்காள், ஆவி நிகர் திருமாதுக்கு மணவாளர்—மால் அழகர்—பணவாள் அராவில் கண் பள்ளிகொள்வார் திருப் பாதம் எண்ண இன்றே குணவாளர் ஆவிர்; உம்மைக் கூற்றுவனார் நிணவாள் அராவி அறுக்கும் அப்போது நினைப்பு அரிது,' என இயைக்க.

உயிர்காள் - ஜீவர்களே, ஆவி நிகர் - உயிரை ஒத்த, திரு மாது - இலக்குமி, பணவாள் அரா - படமும் ஒளியும் பொருந்திய ஆதிசேடன், எண்ண - தியானிக்க, நிணவாள் அராவி - கொழுப்புப் பொருந்திய வாளைக் கூர்மை செய்து, அப்போது - அந்த மரண காலத்தில், நினைப்பு அரிது - (பெருமானை) நினைப்பது இயலாது.

624. 'உம்பர் யார்க்கும் நின் அன்பருக்கும் நினைப்பு அரியாய், எளியாய் வினைப்பரி ஆனவன் வாய் பிளந்தாய், வியன் சோலை மலைதனைப் பரியாநின்ற தாள் அழகா, முன் சனனத்துள்ளும் உனைப் பரியாமல் அன்றோ இவ்வுடலைப் பரித் தேன்?' என இயைக்க.

625] [௫௫

உடலம் புயங்கத் துரிபோல் விடுமன் றுவணப்புள்ளின்
அடலம் புயமிசை நீவர வேண்டுமை யானனற்கும்
மடலம் புயற்கும் வரந்தருஞ் சோலை மலைக்கரசே!
கடலம் புயர்வரை யாலடைத் தாயென்னைக் காப்பதற்கே.

626] [௫௬

காப்ப வனந்த மலரோனை யுங்கறைக் கண்டனையும்
பூப்பவ னந்தரம் போக்கவைப் பான்புனல் பார்விசும்பு
தீப்ப வனந்தருந் தெய்வ சிகாமணி சேவடியை
நாப்ப வனந்தப் புகழ்வார்க்கொப் பில்லை நவகண்டத்தே.

---

உம்பர் - தேவர், வினைப்பரி ஆனவன் - குறும்புச் செயலையுடைய குதிரை வடிவானவனான கேசி என்னும் அசுரனது, பிளந்தாய் - பிளந்தவனே, வியன் - பெரிய, தனைப் பரியாநின்ற - தன்னைத் தாங்குகிற, முன் சனனத்துள்ளும் - முன் பிறப்பிலும், பரியாமல் - விரும்பாமல், அன்றோ - அல்லவா?

'முன் பிறப்பில் உன்னிடம் அன்பு செலுத்தியிருந்தால் இப் பிறவி எனக்கு வந்திராதே!' என்பது கருத்து.

625. 'ஐயானனற்கும் மடல் அம்புயற்கும் வரம் தரும் சோலை மலைக்கு அரசே, உயர் வரையால் கடல் அம்பு அடைத்தாய், புயங்கத்து உரிபோல் உடல் விடும் அன்று என்னைக் காப்பதற்கு உவணப்புள்ளின் அடல் அம் புயமிசை நீ வர வேண்டும்,' என இயைக்க.

ஐயானனன் - ஐந்து முகங்களை உடையவனான சிவன், மடல் அம்புயன் - இதழ்களையுடைய தாமரையிலுள்ள பிரமன், வரையால் - மலைகளால், கடல் அம்பு - சமுத்திர நீரை, உவணப் புள்ளின் கருடப் பறவையினது, அடல் அம்புயமிசை - வலிய அழகிய தோள்களில் ஏறி.

626. 'காப்பவன்—அந்த மலரோனையும் கறைக்கண்டனையும் பூப்ப அனந்தரம் போக்க வைப்பான்—புனல், பார், விசும்பு, தீ, பவனம் தரும் தெய்வசிகாமணி சேவடியைப் பவம் நந்த நாப் புகழ்வார்க்கு நவகண்டத்து ஒப்பு இல்லை,' என இயைக்க.

காப்பவன் - (எல்லா உயிர்களையும்) பாதுகாப்பவனும், மலரோன் - பிரமன், கறைக்கண்டன் - சிவன், பூப்ப - (உலகை) உண்டாக்கவும், போக்க - அழிக்கவும், வைப்பான் - நியமனம் செய்து வைப்பவனும், விசும்பு - ஆகாயம், பவனம் - காற்று, பவம் நந்த - (தம்) பிறப்பு அழியும்படி, நா - நாவினால், புகழ்வார்க்கு - புகழ்பவராகிய அடியவர்க்கு, நவகண்டம் - ஒன்பது கண்டங்கள் (கீழ்பால் விதேகம், மேல்பால் விதேகம், வடபால்

627] [௫௭

கண்டா கனன் கண்ண னல்லாற் கதியின்மை கண்டடைந்த
துண்டா கனம்பவொட் டாதுங்க ளூழ்வினை யுண்மையறிந்
தண்டா கனவண்ண னேயரு ளாயென் றழகனுக்கே
தொண்டா கனன்னெஞ்சி னானுரைப் பீர்பிறர் தொண்டர்களே.

628] [௫௮

தொண்டுப டார்திரு மாலிருஞ் சோலையிற் சோதிக்கன்பு
கொண்டுப டாமல ரிட்டிறைஞ் சார்மடக் கோதையரைக்
கண்டுப டாமுலை தோயனு ராகங் கருதியிரா
உண்டுப டாநிற்கும் போதுநை வாரெங்ங னுய்வதுவே?

629] [௫௯

உய்வந் தொழும்புசெய் தென்றிருப் போமையுய்யாமலைவர்
பெய்வந் தொழுவினைக் கேயென்ப ராற்பெருந் தேன்சிகரம்

---

விதேகம், தென்பால் விதேகம், வடபால் இரேபதம், தென்பால் இரேபதம், வடபாற்பாதம், தென்பாற்பரதம், மத்திம கண்டம்), தெய்வசிகாமணி - தேவாதி தேவன் (இது அழகரின் மற்றொரு திருநாமம்.)

627. 'பிறர் தொண்டர்களே, கண்டாகனன், கண்ணன் அல்லால் கதி இன்மை கண்டு அடைந்தது உண்டாக, உங்கள் ஊழ்வினை நம்ப ஒட்டாது; உண்மை அறிந்து, 'அண்டா, கன வண்ணனே, அருளாய்,' என்று அழகனுக்கே தொண்டாக நல் நெஞ்சினால் உரைப்பீர்,' என இயைக்க.

அண்டா - இடைச்சிறுவனே, கனவண்ணனே - மேக நிறம் உடையவனே, அருளாய் - கிருபை செய், உரைப்பீர் - சொல்லுங்கள். கண்டாகனன் முதலிற்சிவனுக்கு அடிமை பூண்டு திருமாலை நிந்தித்தவன்; ஆயினும், சிவன் பரகதி அருளாமை கண்டு திருமாலுக்கு அடிமை செய்து முத்தி பெற்றனன்.

628. 'திருமாலிருஞ்சோலையில் சோதிக்கு அன்புகொண்டு தொண்டு படார், படா மலர் இட்டு இறைஞ்சார், மடக்கோதையரைக் கண்டு படாம் முலை தோய் அனுராகம் கருதி, இரா உண்டு படாநிற்கும்போது நைவார் உய்வது எங்ஙன்?' என இயைக்க.

படா மலர் - வாடா மலர், படாம் முலை தோய் - கச்சணிந்த கொங்கைகளிற்பதிகின்ற, அனுராகம் - மோகம், இரா - இரவில், படாநிற்கும்போது - படுத்துறங்கும்போது, நைவார் - வருந்துபவராகிய காமுகர், உய்வது - பிழைப்பது, எங்ஙன் - எவ்வாறு?

629. 'பெருந்தேன் சிகரம் தைவந்து ஒழுகும் மலை அலங்கார, சதுமுகத்துத் தெய்வம் தொழும் தெய்வமே, 'தொழும்பு

தைவந் தொழுகு மலையலங் கார! சதுமுகத்துத்
தெய்வந் தொழுந்தெய்வ மே!என்கொ லோவுன் றிருவுளமே?

630] [௬௩0

திருவிளை யாடுதிண் டோட்செங்கண் மால்பல தேவருடன்
மருவிளை யான்றிரு மாலிருஞ் சோலை மலையெனவோர்
உருவிளை யாமற் பிறப்பார் பலர்புக ழோதிச்சிலர்
கருவிளை யாநிற்க வித்தாவர் முத்தியிற் காமமற்றே.

631] [௬௩௧

காமத் தனைப்பொய் யழுக்காறு கோபங் களவுகொலை
ஆமத் தனையு முடையேனை யாளுங்கொ லான்பொருப்பாம்
தாமத் தனைவரும் போற்றநின் றான்பண்டு தாமரையோன்
பூமத் தனைச்செய்த நோய்துடைத் தானடிப் போதுகளே.

---

செய்து உய்வம்,' என்று இருப்போமை, ஐவர், 'உய்யாமல் தொழுவினைக்கே பெய்வம்,' என்பர்; உன் திருவுளம் என்கொலோ!' என இயைக்க.

தைவந்து - தடவி, அலங்கார - அழகனே, சதுமுகத்துத் தெய்வம் - பிரமதேவன், தொழும்பு - அடிமை, உய்வம் - பிழைப்போம், இருப்போமை - இருக்கும் எங்களை, ஐவர் - பஞ்சேந்திரியங்களான விரோதிகள், தொழுவினைக்கே - கொடிய பாவச் செயல்களிலேயே, பெய்வம் - (உம்மை) அழுத்துவோம். ஐவர் - திணை வழுவமைதி.

630. 'திரு விளையாடு திண்டோள் செங்கண்மால்—பல தேவருடன் மருவு இளையான்—திருமாலிருஞ்சோலை மலை,' என ஓர் உரு விளையாமல் பிறப்பார் பலர்; சிலர், காமம் அற்றுப் புகழ் ஓதி, கரு இளையா நிற்க முத்தியில் வித்து ஆவர்,' என இயைக்க.

திரு - வீர லட்சுமி, பலதேவர் - பலராமர், உருவிளையாமல் - அநுசந்தானம் செய்யாமல் (நினையாமல்), காமம் - சிற்றின்ப விருப்பம், புகழ் - (திருமலையின்) கீர்த்தியை, கரு இளையா நிற்க - பிறப்பு வலிமை குறைந்து நிற்க, முத்தியில் - மோட்சவுலகில், வித்து ஆவர் - (முளைக்கும்) விதை ஆவர்.

'சிற்றின்பம் அற்றவரே முத்தி பெறத் தக்கவர்,' என்பது கருத்து.

631. 'ஆன் பொருப்பு ஆம் தானத்து அனைவரும் போற்ற நின்றான்—தாமரையோன் பண்டு பூ மத்தனைச் செய்த நோய் துடைத்தான்—அடிப்போதுகள், காமத்தனை—பொய், 'அழுக்காறு, கோபம் களவு கொலை ஆம் அத்தனையும் உடையேனை ஆளுங்கொல்?' என இயைக்க.

632] [சுஉ

போதகத் தானும்வெண் போதகத் தானும் புராந்தகனும்
ஈதகத் தானது தீர்தருங் காலைத் திருவரைசேர்
பீதகத் தாயழ காவரு ளாயென்பர் பின்னையென்ன
பாதகத் தான்மறந் தோதனி நாயகம் பாவிப்பரே.

633] [சுங

பாவிக் கமல விரிஞ்சற் கிறைவவர் பத்தர்தங்கள்
ஆவிக் கமலத்து வீற்றிருப் பாரளிப் பாடல்கொண்ட
வாவிக் கமல மணநாறுஞ் சோலை மலையைக்கண்ணுல்
சேவிக் கமல மறுமன மேஎழு செல்லுதற்கே.

---

ஆன் பொருப்பு ஆம் தானத்து - இடபகிரி ஆகிய இடத்தில், நின்றான் - நின்றருளியவனும், பூமத்தனை-ஊமத்தமலரைச் சூடிய சிவனுக்கு, செய்த நோய் - உண்டாக்கிய (பிரமகத்தியாகிய) நோயை, துடைத்தான் - அழித்தவனுமாகிய திருமாலின், அடிப் போதுகள்-திருவடி மலர்கள், காமத்தனை - சிற்றின்ப விருப்புடையேனாகிய என்னை, அழுக்காறு - பொறாமை, ஆளுங்கொல் - அடிமை கொள்ளுமோ !

632. 'போதகத்தானும், வெண்போதகத்தானும், புராந்தகனும், அகத்து ஆனது தீர்தருங்காலை, 'திரு அரை சேர் பீதகத் தாய், அழகா, அருளாய்,' என்பர்; பின்னை என்ன பாதகத்தாலோ மறந்து தனி நாயகம் பாவிப்பர் !' என இயைக்க.

போதகத்தான் - தாமரை மலரிலுள்ள பிரமன், வெண் போதகத்தான் - (ஐராவதமாகிய) வெள்ளையானை வாகனனாகிய இந்திரன், புராந்தகன் - முப்புரமழித்தவனான சிவன், அகத்து ஆனது தீது தீர்தருங்காலை - (தம்) மனத்திலுண்டானதாகிய துன்பம் நீங்க வேண்டிய காலத்தில், அரை - இடை, பீதகத்தாய்- பீதாம்பரமுடையவனே, அருளாய் - கிருபை செய்வாய், பின்னை- (அத்துன்பம் நீக்கப்பட்ட) பின்பு, பாதகம் - தீவினை, தனி நாயகம் - ஒப்பற்ற தலைமையை, பாவிப்பர் - (தமக்குரியதாக) பாவனை செய்வர்.

633. 'மனமே, பாவிக்கு அமல விரிஞ்சற்கு இறையவர்— பத்தர்தங்கள் ஆவிக்கமலத்து வீற்றிருப்பார் — அளிப்பாடல் கொண்ட வாவிக் கமலம் மணம் நாறும் சோலை மலையைக் கண்ணால் சேவிக்க மலம் அறும்; செல்லுதற்கு எழு,' என இயைக்க.

பாவிக்கு - பாவியாகிய எனக்கும், அமல விரிஞ்சற்கு - தூயவனான பிரமனுக்கும், இறையவர் - தலைவரும், பத்தர் - அடியவர், ஆவிக் கமலத்து - இதயத் தாமரையில், அளிப்பாடல் -

634] [௩௪

*செல்லுக் குவளை குழனாட்ட மென்று தெரிவையர்பால்*
*பல்லுக் குவளை முதுகாந் தனையும்புன் பாட்டுரைப்பீர்!*
*அல்லுக் குவளை யுழும்பாண்டி நாட்டை யடைந்துநுங்கள்*
*சொல்லுக் குவளையுண் டார்க்கலங் காரர்க்குச் சூட்டுமினே.*

635] மேகவிடுதூது [௩௫

*சூட்டோ திமஞ்சென்று சொல்லாதென் காதலைத் தும்பியிசைப்*
*பாட்டோதி மங்கைய ரும்பணி யார்பண்டு கன்மழைக்காக்*
*கோட்டோ திமமெடுத் தார்சோலை மாமலைக் கோவலனார்*
*மாட்டோதி மஞ்சினங் காள்!உரைப் பீர்மறு வாசகமே.*

---

வண்டுகளின் ரீங்காரம், வாவிக்கமலம் - குளங்களிலுள்ள தாமரை மலர்கள், மலம் அறும் - உயிர்க் குற்றங்கள் நீங்கும், எழு - புறப்படு, ஆவி - இருதயத்திற்கு இலக்கணை.

634. ''குழல் செல்லு; நாட்டம் குவளை,' என்று தெரிவையர்பால் பல் உக்கு வளைமுதுகு ஆந்தனையும் புன்பாட்டு உரைப்பீர், அல்லுக்கு வளை உழும் பாண்டி நாட்டை அடைந்து, நுங்கள் சொல்லுக் கு அளை உண்டார்க்கு—அலங்காரர்க்குச—சூட்டுமின்,' என இயைக்க.

செல்லு - மேகம், நாட்டம் - கண், உக்கு - உதிர்ந்து, புன்பாட்டு - இழிவான பாடலை, உரைப்பீர் - பாடும் புலவர்களே, அல்லுக்கு - இரவில், வளை - சங்குகள், உழும் - (நிலத்தை) உழுகின்ற, சொல்லு - கவியை, கு அளை - பூமியையும் வெண்ணெயையும், சூட்டுமின் - சூட்டுங்கள்.

635. 'மஞ்சு இனங்காள், சூட்டு ஓதிமம் சென்று என் காதலைச் சொல்லாது; தும்பி இசைப்பாட்டு ஓதி மங்கையரும் பணியார்; பண்டு கல் மழைக்காக் கோட்டு ஓதிமம் எடுத்தார்—சோலை மாமலைக் கோவலனார் மாட்டு ஓதி, மறு வாசகம் உரைப்பீர்,' என இயைக்க.

மஞ்சு இனங்காள் - மேகக் கூட்டங்களே, சூட்டு ஓதிமம் - உச்சிக் கொண்டையை உடைய அன்னப்பறவை, தும்பி - வண்டுகளின், இசைப்பாட்டு ஓதி - ரீங்காரத்தைப்புடைய கூந்தலை உடையவராகிய, மங்கையரும் - (என்) தோழியரும், பணியார் - சொல்லார், பண்டு - (கிருஷ்ணாவதாரம் செய்த பழைய காலத்தில், மழைக்காக - மழையைத் தடுத்தற்காக, கோட்டு ஓதிமம் - சிகரத்தையுடைய கோவர்த்தன மலையை, கோவலனார் மாட்டு - ஆயர் குலச் செம்மலாரிடம், ஓதி - (நீங்கள் என் காதலைத்) தெரிவித்து, மறு வாசகம் - (அவர் கூறும்) மறுமொழியை, உரைப்பீர் - (எனக்குக்) கூறுங்கள்.

636] [சுசு

வாசம் பரந்த துழாயுமென் பாடலு மாலையொளி
வீசம் பரம்பசும் பொன்னுமென் வேட்கையும் வீற்றிருக்கும்
தேசம் பரம பதமுமென் சிந்தையுந் தீவளியா
காசம் பரவைமண் கண்டுண்ட மாலலங் காரனுக்கே.

637] [சுஎ

அலங்காரன் சுந்தரத் தோள னழக னணிமுடியில்
இலங்கார னேறு திருவுடை யானெட் டெழுத்துங்கற்றார்
கலங்கா ரனங்கன் கணையாலெச் செல்வமுங் காதலியார்
மலங்கா ரருந்துயர் மேவினு மாகுவர் வானவரே.

638] [சுஅ

வானவ தாரணி சுந்தரத் தோளன்முன் மாவலியைத்
தானவ தாரணி தாவென்ற மாயன் றராதலத்து

---

636. 'தீ' வளி, ஆகாசம், பரவை, மண் கண்டு உண்ட மால் அலங்காரனுக்கு வாசம் பரந்த துழாயும் என் பாடலும் மாலை; பசும்பொன்னும் என் வேட்கையும் ஒளி வீசு அம்பரம்; பரம பதமும் என் சிந்தையும் வீற்றிருக்கும் தேசம்,' என இயைக்க.

தீ - நெருப்பு, வளி - காற்று, பரவை - நீரையுடைய கடல், மண் - பூமி, கண்டு - சிருட்டித்து, உண்ட - உட்கொண்டருளிய, அலங்காரனுக்கு - அழகனுக்கு, வாசம் பரந்த - மணம் மிகுந்த, துழாயும் - துளசியும், பசும்பொன்னும் - மாற்றுயர்ந்த பொன்னையும், வேட்கை - அன்பு, அம்பரம் - ஆடையாம், பரமபதம் வைகுந்தம், சிந்தை - மனம், தேசம் - இருப்பிடமாம்.

637. 'அலங்காரன், சுந்தரத்தோளன், அழகன்—அணி முடியில் இலங்கு ஆரன்—ஏறு திருவுடையான் எட்டெழுத்தும் கற்றார், அனங்கன் கணையால் கலங்கார், எச்செல்வமும் காதலியார்; அருந்துயர் மேவினும் மலங்கார்; வானவர் ஆகுவர்,' என இயைக்க.

இலங்கு ஆரன் - விளங்குகின்ற மலர் மாலையையுடையவன், ஏறு திரு உடையான் - (நாளுக்கு நாள் உயரும் செல்வமுடையவன், எட்டெழுத்தும் - (திருவஷ்டாக்ஷரமந்திரமாகிய) எட்டு எழுத்துகளையும், அனங்கன் கணை - மன்மதபாணம், காதலியார் - விரும்பார், மேவினும் - வந்து சேர்ந்தாலும், மலங்கார் - வருந்த மாட்டார், வானவர் - தேவர்.

638. 'வால் நவதார் அணி சுந்தரத்தோளன்—முன் மாவலியைத் 'தானவ, தாரணி தா,' என்ற மாயன்—தராதலத்து மீன் அவதாரம் முதலானவை வினை இன்றி இச்சையான அது ஆர் அறிவார்? அவரே முத்தராமவர்,' என இயைக்க.

மீனவ தார முதலா னவைவினை யின்றியிச்சை
ஆனவ தாரறி வாரவ ரேமுத்த ராமவரே.

639] பிரிவாற்றுது வருந்துந் தலைவியைக் குறித்துச் செவிலி இரங்கல் [சுகூ

ஆமவ ரைப்பணித் தாள்வா ரழக ரயனுமையாள்
வாமவ ரைப்பணி யான்பணி பாதத்தை வாழ்த்துங்கொங்கை
ஏமவ ரைப்பணி பூணுள்சந் தேந்திழை யாளுரைத்தால்
வேமவ ரைப்பணி யாதே யெனுமெங்கண் மெல்லியலே.

640] பிரிவாற்றுது வருந்தும் தலைவிநிலை கண்டு தோழி இரங்கல் [எo

மெல்லிய லைப்பரி யங்கனை யாரும் வெறுத்துவசை
சொல்லிய லைப்பரி யங்கவொட் டார்சுடர் மாமலையைப்

---

வால் நவதார் - ஒளியும் புதுமையும் வாய்ந்த மலர் மாலையை, மாவலி - மகாபலி சக்கரவர்த்தி, தானவ - அசுரனே, தாரணி - பூமியை, மாயன் - மாயச் செயலுடையவன், தராதலம் - பூமி, வினை இன்றி - கர்ம வசத்தாலில்லாமல், இச்சையான அது - விருப்பினுலான அச்செய்தியை, முத்தராமவர் - மோட்சத்திற் குரியவராவர்.

639. 'எங்கள் மெல்லியல், ஆமவரைப் பணித்து ஆள்வார் அழகர் அயன் உமையாள் வாம அரைப்பணியான் பணி பாதத்தை வாழ்த்தும்; ஏம வரைக் கொங்கை பணி பூணுள்; ஏந்து இழையாள் சந்து உரைத்தால், வேம்; 'அவரைப் பணி யாதே!' எனும்,' என இயைக்க.

மெல்லியல் - பெண், ஆமவரை - அன்பராகின்றவரை, பணித்து ஆள்வார் - (தம்மைப்) பணியச்செய்து ஆள்பவராகிய, அழகர் - அழகருடைய, அயன் - பிரமனும், உமையாள் வாமம் - பார்வதியுடன் கூடிய இடப்பாகத்தையும், அரைப் பணியான் - இடையில் பாம்புக் கச்சையையும் உடையவனுகிய சிவனும், பணி பாதத்தை - வணங்கும் திருவடிகளை, வாழ்த்தும் - வாழ்த்துவாள்; ஏமவரைக் கொங்கை - பொன் மலை போலும் கொங்கைகளின் மீது, பணி பூணுள் - ஆபரணங்களை அணிய மாட்டாள், ஏந்து இழையாள் - தோழியானவள், சந்து உரைத்தால் - சமாதானச் சொற்களைக் கூறினுல், வேம் - (மனம்) வெதும்புவாள்; அவரைப் பணியாதே எனும் - (என்னைப் பிரிந்த அருளில்லாத) அத்தலைவரைப்பற்றிப் பேசாதே என்பாள்.

640. சுடர் மா மலையைப்புல்லி—அலைப் பரியங்கத்தில் ஏறும் புயல்—பதின்மர் நல்லியலைப் பரி அம் கழல் தாமம் நயந்த பின், மெல்லியலைப் பரிஅங்கனையாரும் வெறுத்து வசை சொல்லி அலைப்பர்; இயங்க ஒட்டார்,' என இயைக்க.

புல்லிய மலைப்பரி யங்கத்தி லேறும் புயல்பதின்மர்
நல்லிய லைப்பரி யங்கழற் றாம நயந்தபின்னே.

641] [எக

பின்னிறப் பும்பிறப் புந்நரை மூப்பும் பிணியுமனை
முன்னிறப் பும்பிரித் தானிருந் தானவர் மூதிலங்கை
மன்னிறப் புங்கக் கணைதொட்ட சோலை மலையழகன்
பொன்னிறப் புண்டரி கத்திருத் தாளன்றிப் போற்றிலமே.

642] பிரிவாற்றாத தலைவி செவிலியரைக் குறித்து இரங்கல் [எஉ

போற்றியி ராமவென் னார்சோலை மாமலை போதவிடார்
மாற்றியி ராவைப் பகலாக்கி லார்வண் டுழாய்குழன்மேல்

---

சுடர் மா மலையைப் புல்லி - (அருளால்) ஒளி வீசுகின்ற பெரிய திருமாலிருஞ்சோலை மலையை இடமாகக் கொண்டிருப்பவன், அலைப் பரியங்கம் - பாற்கடலாகிய பள்ளியில், ஏறும் புயல் - ஏறும் மேகம் போன்றவனான அழகப் பெருமானது, பதின்மர் நல்லியலை - பத்து ஆழ்வாருடைய நல்ல பிரபந்தங்களை, பரி - தாங்குகின்ற, அம் கழல் தாமம் நயந்த பின் - அழகிய திருவடிகளில் சூட்டப்பட்ட மலர் மாலையை விரும்பிய பிறகு, பரி அங்கனையாரும் - அன்புகொள்ளும் செவிலித்தாய்மாரும், வசை - பழிச்சொல், அலைப்பர் - வருத்துவர், இயங்க ஒட்டார் - (என் விருப்பப்படி) நடக்க விடார்.

641. 'பிறப்பும் பின் இறப்பும் நரை மூப்பும் பிணியும் மனைமுன் இறப்பும் பிரித்தான்—இருந்தானவர் மூதிலங்கை மன் இறப் புங்கக் கணை தொட்ட சோலை மலை அழகன்—பொன்னிறப் புண்டரிகத் தாள் அன்றிப் போற்றிலம்,' என இயைக்க.

மனைமுன் இறப்பும் - வீட்டின் முன் யாசித்தலையும் (இரப்பும் என்பது 'இறப்பும்' என எதுகை நயம் நோக்கி விகாரப் பட்டது,) இருந்தானவர் - பெரிய அரக்கரின், மூதிலங்கை மன் - பழைய இலங்கையரசனான இராவணன், இற - மடியும்படி, புங்கக் கணை - உயர்வுடைய அம்புகளை, தொட்ட - தொடுத்த, போற்றிலம் - வணங்கோம். 'அழகன் திருவடியன்றி மற்றதை யாம் பணியோம்,' என்றபடி.

642. 'அன்னைமார், 'இராம, போற்றி!' என்னார்; சோலை மாமலை போத விடார்; இராவை மாற்றிப் பகல் ஆக்கிலார்; வண்டுழாய் குழல்மேல் ஏற்றி இராசதம் ஆக வையார்; என் இடரையெல்லாம் ஆற்றியிரார்; வாய் வம்பு அளக்கின்றது என்னை?' என இயைக்க.

ஏற்றியி ராசத மாகவை யாரென் னிடரையெல்லாம்
மாற்றியி ராரன்னை மாரென்னை வாய்வம் பளக்கின்றதே.

643] [எங

அளப்பது மங்கையி னீரேற் பதுந்தந் தளிப்பதும்பின்
பிளப்பது மங்கையில் வெண்கோட்டிற் கொள்வதும்பேருணவாக்
கிளப்பது மங்கை யெனத்தோள் புணர்வதும் கேட்கில்வையம்
வளப்பது மங்கையஞ் சேர்சோலை மாமலை மாதவரே.

644] [எச

மாதவ ராலும்ப ராலறி யார்மது ரைப்பிறந்த
யாதவ ராலிலை மேற்றுயின் றாரிருந் தாழ்சுனையிற்

---

அன்னைமார் .- (என்) செவிலித் தாய்மார், இராம போற்றி - இராமனே இவளைக் காப்பாற்று, போத - செல்ல, வண்டுழாய் - (அழகர் தரித்த) வளப்பமான துளசிமாலையை, இராசதம் ஆக - (எனக்கு) இராசத குணம் உண்டாகும்படி, வம்பு - வீண் பழிச் சொல்.

643. 'வளப்பதுமம் கையம் சேர் சோலை மா மலை மாதவர், அளப்பதும், அம் கையில் நீர் ஏற்பதும், தந்து அளிப்பதும், பின் பிளப்பதும், ஐயில் வெண்கோட்டில் கொள்வதும், பேருணவாக் கிளப்பதும், மங்கை எனத் தோள் புணர்வதும் கேட்கில் வையம்,' என இயைக்க.

'அயில், கயம்' என்பன, எதுகை நயம் நோக்கி, 'ஐயில், கையம்' எனப் போலியாயின.

கயம் - குளம், மாதவர் - திருமால், தந்து அளிப்பதும் - சிருட்டித்துக் காப்பதும், பிளப்பதும் - அழிப்பதும், அயில் - கூர்மையான, வெண்கோட்டில் - வெண்மையான கோரப் பல்லினால், கிளப்பதும் - சொல்லப்படுவதும், வையம் - பூமியே.

வையம் அளந்ததும் கையில் நீரேற்றதும் வாமனாவதாரத்தில்; கோட்டில் கொண்டது - வராகாவதாரத்தில்.

644. 'மாதவரால் உம்பரால் அறியார்—மதுரைப் பிறந்த யாதவர்—ஆல் இலைமேல் துயின்றார் இருந்தாழ் சுனையில் போத வரால் உகள் மாலிருஞ்சோலையில் போம்; பிறவித் தீது அவரால் அன்றி எத்தேவராலும் தெறல் அரிதே,' என இயைக்க.

மாதவர் - முனிவர், உம்பர் - தேவர், அறியார் - அறிய இயலாதவர், மதுரை - வடமதுரை, யாதவர் - யதுகுலச் செல்வர், துயின்றார் - அறிதுயில் கொண்டவர், இருந்தாழ் சுனை - பெரிய ஆழமான சுனை, போத - மிகுதியாக, வரால் உகள் - வரால் மீன்கள் துள்ளுகின்ற, போம் - சென்று சேவியுங்கள்; பிறவித் தீது -

போதவ ராலுகண் மாலிருஞ் சோலையிற் போம்பிறவித்
தீதவ ராலன்றி யெத்தேவ ராலுந் தெறலரிதே.

645] [௭௫

அரியவ ரந்தந் தயன்முத லோர்க்கருள் செய்தவரைப்
பெரியவ ரந்தமில் லவழ்வின ராக்கித்தம் பேரருளால்
கரியவ ரந்தணர் கைதொழு மாலலங் காரர்வையத்
துரியவ ரந்தரங் கத்துயர் தீர்க்க வுலாவுவரே.

646] [௭௬

உலகுதிக் கும்படி சிந்தித்துத் தந்திவ் வுலகிலுறும்
நலகுதிக் கும்படி நின்றபி ரானிட நானிலமும்
இலகுதிக் கும்விசும் புந்தொழ வோங்கி யிறுல்வருடை
பலகுதிக் குந்தொறுந் தேன்பாயுஞ் சோலைப் பருப்பதமே.

647] [௭௭

பருப்பதந் தாமன்னி நிற்பது பாற்கடல் பள்ளிகொள்வ
திருப்பதந் தாமம்பண் டிப்போ தெலாமிள ஞாயிறன்ன

---

பிறப்பாகிய துன்பம், தெறல் அரிதே - அழித்தற்கு இயலாததே ஆகும்.

645. 'கரியவர்—அந்தணர் கை தொழும் மால் அலங்காரர், அயன் முதலோர்க்கு அரிய வரம் தந்து, அருள் செய்து, அவரைப் பெரியவர் அந்தமில் வாழ்வினர் ஆக்கி, தம் பேரருளால் வையத்து உரியவர் அந்தரங்கத் துயர் தீர்க்க உலாவுவர்,' என இயைக்க.

கரியவர் - கருநிறமுடையவரும், அயன் - பிரமன், அந்தமில்- அழிவில்லாத, உரியவர் - (தம்) அடியவரின், அந்தரங்கத் துயர் - மனத்துயரங்களை. 'அழகர், அடியவர் துயர் நீக்க வையத்தில் அவதரித்து உலாவுவர்,' என்பது கருத்து.

646 'உலகு உதிக்கும்படி சிந்தித்து, தந்து, இவ்வுலகில் உறும் நல குதிக்கும்படி நின்ற பிரான் இடம், நானிலமும் இலகு திக்கும் விசும்பும் தொழ ஓங்கி, வருடை பல குதிக்குந்தொறும் இறுல் தேன் பாயும் சோலைப் பருப்பதம்,' என இயைக்க.

" உதிக்கும்படி - தோன்றும்படி, தந்து - சிருட்டித்து, நல - நன்மைகள், குதிக்கும்படி - ஆனந்த நடனம் செய்யும்படி, நானிலமும் - உலகத்தவரும், இலகு திக்கும் - விளங்கும் அஷ்டதிக்குப் பாலகரும், விசும்பும் - வானவரும், வருடை - மலையாடுகள், இறும் - தேன் கூடுகள், சோலைப் பருப்பதம் - திருமாலிருஞ் சோலை மலையாம்.

647. 'இளஞாயிறு அன்ன உருப்பதம் தாமதர்க்கு நயாமல், அன்பர்க்கு உதவு திருப்பதம் தாமரை போல்வார், பண்டு

உருப்பதந் தாமதர்க் கியாம லன்பர்க் குதவழகர்
திருப்பதந் தாமரை போல்வா ருகப்பதென் சிந்தனையே.

648] [எஅ

சிந்திக் கலாரங் கொழிக்குந் திருச்சிலம் பாற்றழகும்
பந்திக் கலாப மயிலாடுஞ் சாரலும் பங்கயனோ
டந்திக் கலாமதி யாற்கரி யாருறை யான்பொருப்பும்
வந்திக் கலாமெனிற் சந்திக்க லாமுயர் வைகுந்தமே.

649] [எகூ

வைதா ரையுமுன் மலைந்தா ரையுமலர்த் தாளில்வைத்தாய்
மொய்தாரை யத்தனைத் தீங்கிழைத் தேனையு மூதலகிற்

---

தாம் மன்னி நிற்பது, பருப்பதம்; பள்ளி கொள்வது, பாற்கடல், இருப்பது, அம் தாமம்; இப்போது எலாம் உகப்பது என் சிந்தனையே,' என இயைக்க.

இளஞாயிறு - இளஞ்சூரியன், உருப்பதம் - நிறமுடைய பரமபதத்தை, தாமதர்க்கு - தாமசகுணமுடையவர்க்கு, உதவு திருப்பதம் - கொடுத்தருள்கின்ற திருவடிகள், மன்னி நிற்பது - நிலைபெற்று நிற்பது, பருப்பதம் - (திருமாலிருஞ்சோலை) மலை; அம் தாமம் - அழகிய இடமான பரமபதம்; எலாம் உகப்பது - அவை அனைத்துமாக விரும்புவது, சிந்தனையே - மனமே.

648. 'ஆரம் கல் சிந்திக் கொழிக்கும் திருச்சிலம்பாற்று அழகும், பந்திக் கலாப மயில் ஆடும் சாரலும், பங்கயனோடு அந்திக் கலா மதியாற்கு அரியார் உறை ஆன் பொருப்பும் வந்திக் கலாம் எனின், உயர் வைகுந்தம் சந்திக்கலாம்,' என இயைக்க.

ஆரம் - முத்தும், கல் - மாணிக்கமும், சிந்திக் கொழிக்கும் - சிதறி ஒதுக்கும், சிலம்பாறு - நூபுர கங்கை, பந்தி - வரிசையாய் அமைந்த, கலாபம் - தோகை, பங்கயன் - பிரமன், அந்திக் கலா மதியாற்கு - மாலையில் தோன்றும் கலையையுடைய பிறைச் சந்திரனைச் சூடிய சிவனுக்கும், அரியார் - (உணர) அரியவர், உறை - தங்கும், ஆன் பொருப்பு - இடபகிரி என்னும் திருமாலிருஞ்சோலை மலை, வந்திக்கலாம் எனின் - வணங்குதல் வாய்க்குமென்றால், சந்திக்கலாம் - அடைந்து உய்யலாம்.

649. 'மூதுலகில் பெய் தாரை வானின் புரப்பான் இடபப் பெருங்கிரியாய், முன் வைதாரையும் மலைந்தாரையும் மலர்த் தாளில் வைத்தாய்; மொய் தாரை அத்தனைத் தீங்கு இழைத் தேனையும் கொய்தாரை வேய்ந்த திருவடிக்கீழ்த் தொண்டு கொண்டு அருள்,' என இயைக்க.

பெய்தாரை வானிற் புரப்பா னிடபப் பெருங்கிரியாய்!
கொய்தாரை வேய்ந்த திருவடிக் கீழ்த்தொண்டு கொண்டருளே.

650] [௮௰

கொண்ட மருந்துங் கடைவாய் வழியுகக் கோழைவந்து
கண்ட மருந்துய ராம்போதுன் பாதங் கருதறியேன்
வண்ட மருந்துள வோனே! தென் சோலை மலைக்கரசே!
அண்ட மருந்தும் பிரானே! இன்றேயுன் அடைக்கலமே.

651] [௮௧

அடைக்கலந் தானை யிரந்தாள் புகல வவள்பொருட்டால்
படைக்கலந் தானைத் தருமன் கெடாமல்வெம் பாரதப்போ
ரிடைக்கலந் தானை யலங்கா ரனைச்சர ணென்றடைந்தேன்
முடைக்கலந் தானையு மப்போ தயர்ப்பினு முத்தியுண்டே.

---

வானின் புரப்பான் - மேகம் போலப் பாதுகாத்தற்கு, இடபப் பெருங்கிரியாய் - இடபகிரி என்னும் பெரிய திருமாலிருஞ் சோலையில் உள்ளவனே, வைதாரையும் - (உன்னை) நிந்தித்த சிசுபாலன் முதலியவரையும், மலைந்தாரையும் - (உன்னுடன்) போர் செய்த தந்தவக்கிரன் முதலியவரையும், வைத்தாய் - அமைத்தருளினாய்; மொய்தாரை - (ஆகாயத்தில்) நெருங்கியுள்ள நட்சத்திரங்கள், கொய்தாரை - பறித்தமலரால் தொடுக்கப்பட்ட மாலை, தொண்டு - அடிமை.

650. 'வண்டு அமரும் துளவோனே, தென் சோலைமலைக்கு அரசே, அண்டம் அருந்தும் பிரானே, கொண்ட மருந்தும் கடைவாய் வழி உக, கோழை கண்டம் வந்து அருந்துயர் ஆம் போது உன் பாதம் கருத அறியேன்; இன்றே உன் அடைக்கலம்,' என இயைக்க.

துளவோனே - துளசி மாலையைத் தரித்தவனே, அரசே - தலைவனே, அண்டம் - உலகங்களை, அருந்தும் - உட்கொள்ளும், மருந்தும் - பாலும், உக - சிந்த, கோழை கண்டம் வந்து - கபம் நெஞ்சில் உண்டாகி, அருந்துயர் - (சகித்தற்கு) அரிய மனவேதனை, கருத - நினைக்க, அடைக்கலம் - சரணம் அடைந்தேன்.

651. 'தானை இரந்தாள் அடைக்கலம் புகல, அவள் பொருட்டால் படைக்கலம் தானைத் தருமன் கெடாமல் வெம் பாரதப் போரிடைக் கலந்தானை—அலங்காரனைச்—சரண் என்று அடைந்தேன்; முடைக்கலம் தான் ஐயும் அப்போது அயர்ப்பினும் முத்தி உண்டு,' என இயைக்க.

தானை இரந்தாள் - (கண்ணனிடம்) புடைவையை யாசித்த திரௌபதி, புகல - சொல்ல, படைக்கலம் தானைத் தருமன் -

652] [அஉ

உண்டிறக் கும்புவ னங்களை மீள வுமிழ்ந்திலையேல்
பண்டிறக் கும்பது மத்தோன் புரந்தரன் பைந்தழல்போல்
கண்டிறக் குஞ்சங் கரன்முத லோர்களைக் கண்டவரார்?
திண்டிறக் குஞ்சரஞ் சேர்சோலை மாமலைச் சீதரனே!

653] பிரிவாற்றது வருந்துந் தலைவியின் நிலைமையைக் குறித்துத் [அங
தோழி இரங்கல்

சீரரி தாழ்பொழின் மாலிருஞ் சோலையிற் செல்வர்செங்கட்
போரரி தாள்புனை தாரரி தாகிற்றண் பூந்துளவின்
தாரரி தாவுந் தழையரி தாகிற் றழைதொடுத்த
நாரரி தாகிற் பிழைப்பரி தாமெங்க ணன்னுதற்கே.

---

ஆயுதங்களையும் சேனைகளையும் உடைய தருமன், கெடாமல் - அழியாதபடி, வெம்பாரதப் போரிடை - கொடிய பாரத யுத்தத்தில், கலந்தானை - (அருச்சுனனுக்குச் சாரதியாய்) சேர்ந்தவனை, முடைக்கலம் தான் நையும் அப்போது - புலால் நாற்றம் வீசும் உடம்பாகிய பாத்திரம் அழியும் அச்சமயத்தில், அயர்ப்பினும் - (நினைக்க) மறந்தாலும், முத்தி - மோட்சம்.

652. ‘திண் திறக் குஞ்சரம் சேர் சோலை மாமலைச் சீதரனே, (நீ) உண்டு இறக்கும் புவனங்களை மீள உமிழ்ந்திலையேல், பண்டு இறக்கும் பதுமத்தோன், புரந்தரன், பைந்தழல் போல் கண் திறக்கும் சங்கரன் முதலோர்களைக் கண்டவர் ஆர்?’ என இயைக்க.

திண் திறக் குஞ்சரம் - மிகுந்த வலிமை வாய்ந்த யானைகள். சீதரனே - இலக்குமியை மார்பில் தரித்தவனே, உண்டு இறக்கும் - உட்கொண்டதனால் மறையும், புவனங்களை - உலகங்களை, பண்டு இறக்கும் - முன்னம் அழிந்த, பதுமத்தோன் - பிரமன், புரந்தரன் - இந்திரன், சங்கரன் - சிவன்.

653. ‘சீர் அரி—செங்கண் போர் அரி—தாழ் பொழில் மாலிருஞ்சோலையிற் செல்வர் தாள் புனை தார் அரிது ஆகில், தண் பூந்துளவின் தார் அரி தாவும் தழை அரிது ஆகில், தழை தொடுத்த நார் அரிது ஆகில், எங்கள் நன்னுதற்குப் பிழைப்பு அரிதாம்,’ என இயைக்க.

சீர் அரி - சிறப்புடைய அரி என்னும் திருப்பெயருடையவரும், போர் அரி - போரில் வல்ல நரசிங்கரும், செல்வர் - செல்வருமாகிய அழகரின், தாள் புனை - திருவடியை அலங்கரிக்கும், தார் அரிது ஆகில் - மாலை கிடைப்பது இயலாதாயின், தார் அரி தாவும் - மாலையில் வண்டுகள் தாவுகின்ற, தழை - இலையும், நன்னுதற்கு - அழகிய நெற்றியையுடையவளான பெண்ணுக்கு, பிழைப்பு அரிது - உயிர் வாழ்தல் இயலாது.

654] [௮௪

நன்னுதலைப்பணி பூண்மார்பில் வைத்துவிண் ணாட்டிருப்பார்
மின்னுதலைப்பணி மேற்றுயில் வார்விடை வெற்பினிற்பார்
மன்னுதலைப்பணி யன்பரை வைக்கு மலரடிக்கீழ்த்
துன்னுதலைப்பணி செய்வதெஞ் ஞான்றென் றுயர்தொலைந்தே?

655] [௮௫

தொலைந்தானை யோதுந் தொலையானை யன்னைசொல் லான்மகுடம்
கலைந்தானை ஞானக் கலையானை யாய்ச்சிகலைத்தொட்டிலோ
டலைந்தானைப் பாலி னலையானை வாணன்கை யற்றுவிழ
மலைந்தானைச் சோலை மலையானை வாழ்த்தென் மடநெஞ்சமே!

---

654. ‘பணி பூண் மார்பில் நன்னுதலை வைத்து விண் நாட்டு இருப்பார்—மின்னு தலைப் பணிமேல் துயில்வார்—விடை வெற்பில் நிற்பார், பணி அன்பரை மன்னு தலை வைக்கும் மலர் அடிக்கீழ் என் துயர் தொலைந்து துன்னு தலைப்பணி செய்வது எஞ்ஞான்று?’ என இயைக்க.

பணி பூண் - ஆபரணங்களைத் தரித்த, நன்னுதலை - அழகிய நெற்றியையுடையவளான இலக்குமியை, இருப்பார் - இருப்பவரும், மின்னு தலைப் பணிமேல் - ஒளி வீசுகின்ற தலைகளையுடைய (ஆதிசேடன் என்னும்) பாம்பின்மேல், துயில்வார் - அறிதுயில் கொள்பவரும், பணி அன்பரை - வணங்கும் அடியவரை, மன்னு தலை - நிலைபெற்ற இடமாகிய பரமபதத்தில், துன்னு தலைப் பணி - பொருத்தமான தலைமைத் திருத்தொண்டுகளை, எஞ்ஞான்று - எந்நாளில்?

655. ‘என் மடநெஞ்சமே, ஆனை தொலைந்து ஓதும் தொலையானை—அன்னை சொல்லால் மகுடம் கலைந்தானை—ஞானக் கலையானை—ஆய்ச்சி கலைத் தொட்டிலோடு அலைந்தானை—பாலின் அலையானை—வாணன் கை அற்று விழ மலைந்தானை—சோலை மலையானை வாழ்த்து,’ என இயைக்க.

தொலைந்து - வலி அழிந்து, தொலையானை - தூரத்திலுள்ளவனை, அன்னை - (வளர்ப்புத் தாயாகிய) கைகேசியின், கலைந்தானை - நீங்கப் பெற்றவனை, ஞானக் கலையானை - ஞான நூலாகிய கீதையை வெளியிட்டவனை, கலைத் தொட்டிலோடு - சித்திர வேலைப்பாடமைந்த தொட்டிலுடன், பாலின் அலையானை - திருப்பாற்கடலிற் பள்ளிகொண்டவனை, வாணன் - வாணாசுரனுடைய, மலைந்தானை - போர் செய்தவனை.

இச்செய்யுள் முரண் விளைந்து அழிவணி.

656] தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல் [அசு

நெஞ்சிலம் பாற்ற முடியாது வேளெய்து நீளிரவும்
துஞ்சிலம் பாற்றுளி யுந்நஞ்ச மாஞ்சொரி கன்மழையை
அஞ்சிலம் பாற்றடுத் தாரலங் கார ரடிவிளக்கும்
செஞ்சிலம் பாற்றரு கேகிடத் தீருயிர் தேற்றுதற்கே.

657] [அஎ

தேற்றுவித் தாற்புன றேற்றுநர் போற்றிரு வெட்டெழுத்தால்
மாற்றுவித் தானென் மயக்கமெல் லாமண்ணும் விண்ணுமுய்யப்
போற்றுவித் தாரப் புயலலங் காரன்பொன் மேருவைப்போல்
தோற்றுவித் தாரணி யுஞ்சுந் தரத்திருத் தோளண்ணலே.

658] [அஅ

அண்ணலை வான்மதி தோய்சோலை மாமலை யச்சுதனைத்
தண்ணலை வானவ னைத்தெய்வ நாதனைத் தாளடைவான்

---

656. 'நெஞ்சில் அம்பு ஆற்ற முடியாது வேள் எய்து நீள் இரவும் துஞ்சிலம்; பால் துளியும் நஞ்சமாம்; சொரி கல் மழையை அம் சிலம்பால் தடுத்தார் அலங்காரர் அடி விளக்கும் செஞ்சிலம்பாற்று அருகே உயிர் தேற்றுதற்குக் கிடத்தீர்,' என இயைக்க.

அம்பு - பாணங்களை, ஆற்ற முடியாது - பொறுக்க இயலாத படி, வேள் எய்து - மன்மதன் எய்ததனால், துஞ்சிலம் - உறங் கோம்: நஞ்சமாம் - விஷம் போலும்; அம் சிலம்பால் - அழகிய கோவர்த்தன மலையால், சிலம்பாறு - அழகர் மலையிலுள்ள நூபுர கங்கை, கிடத்தீர் - என்னைப் படுக்க வையுங்கள்.

657. 'மண்ணும் விண்ணும் உய்யப் போற்று வித்தாரப் புயல்—பொன் மேருவைப்போல் தோற்று வித் தார் அணியும் சுந்தரத் திருத்தோள் அண்ணல்—அலங்காரன், தேற்று வித்தால் புனல் தேற்றுநர் போல், திரு எட்டு எழுத்தால் என் மயக்க மெல்லாம் மாற்றுவித்தான்,' என இயைக்க.

மண்ணும் - பூமியிலுள்ளவரும், விண்ணும் - வானிலுள்ள வரும், உய்ய - பிழைக்க, போற்று - வழங்கப்பட்ட, வித்தாரப் புயல் - பரவிய மேகம் போன்றவனும், வித் தார் - மலர் மாலையை (வி-வீ என்பதன் குறுக்கல் விகாரம்), அண்ணல் - பெரியவனும், அலங்காரன் - அழகனுமான பெருமான், தேற்று வித்தால் - தேற் றுங்கொட்டையால், புனல் தேற்றுநர் போல் - தண்ணீரைத் தெளியச் செய்பவர் போல.

658. 'மனமே, அண்ணலை—தண் அலை வானவனை—தெய்வ நாதனை—வால் மதி தோய் சோலை மாமலை அச்சுதனைத் தாள்

எண்ணலை வான்பகை யாமைவ ரோடிசைந் தின்னமுடற்
புண்ணலை வானெண்ணி னாய்மன மேயுன் புலமைநன்றே!

659] [௮௯

புலமையி லேநிமிர்ந் தற்பரைப் போற்றிப் பொதுமகளைக்
குலமையி லேகுயி லேகொடி யேயென்றுங் கூர்விழியாம்
பலமையி லேயென்றும் பாடாமற் பாடுமின் பாவலர்காள்!
நலமையி லேய்முத்த மார்சோலை மாமலை நம்பனையே.

660] [௯௦

நம்பிநின் றேனுன் சரணர விந்தத்தை நன்னெஞ்சென்னும்
செம்பினின் றேபொறித் தேனுனக் காளென்று தெய்வக்குழாம்

---

அடைவான் எண்ணலை; வான் பகை ஆம் ஐவரோடு இசைந்து இன்னம் உடல் புண் அலைவான் எண்ணினாய்; உன் புலமை நன்று!' என இயைக்க.

'தண் அலை - குளிர்ச்சியான பாற்கடலில் பள்ளிகொள்ளும், வானவனை - கடவுளை, வால் - வெண்மையான, மதி தோய் - சந்திரன் தவழ்கின்ற, அச்சுதனை - அழியாப் பெருமானை, அடைவான் - சேர்வதற்கு, எண்ணலை - (நீ) நினைப்பாயல்லை; வான் - பெரிய, ஐவரோடு - ஐம்பொறிகளுடன், உடல் புண் அலைவான் - உடலாகிய புண்ணினால் வருந்த, புலமை - அறிவு. 'நன்று' என்றது 'நன்றன்று' என இகழ்ந்தபடி.

659. 'பாவலர்காள், புலமையிலே நிமிர்ந்து, அற்பரைப் போற்றி, பொது மகளை, 'குல மயிலே, குயிலே, கொடியே,' என்றும், 'கூர் விழி பலம் அயிலே ஆம்,' என்றும் பாடாமல், நல் அமையில் ஏய் முத்தம் ஆர் சோலை மாமலை நம்பனைப் பாடுமின்,' என இயைக்க.

பாவலர்காள் - செய்யுள் செய்ய வல்ல புலவர்களே, புலமையிலே நிமிர்ந்து - அறிவிற்சிறப்படைந்து, பொது மகளை - வேசையை, குல மயில் - சிறந்த மயில், கொடியே - பூங்கொடியே, கூர் விழி - கூர்மையான பார்வையையுடைய கண்கள், பலம் அயிலே ஆம் - வலிய வேலாயுதமேயாகும், அமையில் - மூங்கிலில், ஏய் - பொருந்திய, ஆர் - நிரம்பிய, நம்பனை - நம் பெருமானான அழகனை.

'மயில், அயில்,' என்பன எதுகை நயம் பற்றி 'மையில், ஐயில்' எனப் போலியாயின.

660. 'கொம்பின் இன் தேன் சொரியும் சோலை மாமலைக் கொற்றவனே, உன் சரண அரவிந்தத்தை நம்பி நின்றேன்; 'உனக்கு ஆள்,' என்று நல் நெஞ்சு என்னும் செம்பின் இன்றே

பம்பிநின் றேசெறிக் கும்பதங் காணப் பதறுகின் றேன்
கொம்பினின் றேன்சொரி யுஞ்சோலை மாமலைக் கொற்றவனே!

661] [௬௧

கொற்ற விராவணன் பொன்முடி வீழக் கொடுங்கண்டுஞ்சல்
உற்ற விராவணன் மாளவெய் தோனொண் பரதனுக்குச்
சொற்ற விராவணன் மாலிருஞ் சோலை தொழுதுவினை
முற்ற விராவண னற்றமிழ் மாலை மொழிந்தனனே.

662] [௬௨

மொழித்தத்தை கொஞ்சு மலையலங் காரன்முன் னூற்றுவரை
அழித்தத்தை மைந்தர்க் கரசளித் தோனடி நாட்டொடர்ந்தென்

---

பொறித்தேன்; தெய்வக்குழாம் பம்பி, தேசு எறிக்கும் நின் பதம் காணப் பதறுகின்றேன்,' என இயைக்க.

கொம்பின் - பூங்கொம்பிலிருந்து, கொற்றவனே - தலைவனே, சரண அரவிந்தத்தை - திருப்பாத கமலங்களை, ஆள் - அடிமை, செம்பின் - செப்பேட்டிலே, பொறித்தேன் - எழுதினேன், தெய்வக்குழாம் பம்பி - தேவர்களின் கூட்டம் நெருங்கி, தேசு எறிக்கும் - ஒளி வீசும், நின் பதம் - உனது பரமபதத்தை.

'செம்பிநின்றே, கொம்பிநின்றே' என னகரம் நகரமாக எதுகை நோக்கித் திரிந்து நின்றது.

661. 'கொற்ற இராவணன் பொன் முடி வீழ, கொடுங்கண் துஞ்சல் உற்ற இராவணன் மாள எய்தோன்—ஒண் பரதனுக்குச் சொல் தவிரா அண்ணன்—மாலிருஞ்சோலை தொழுது வினைமுற்ற இராவண்ணன் நற்றமிழ் மாலை மொழிந்தனன்,' என இயைக்க.

கொற்ற இராவணன் - வெற்றி வாய்ந்த இராவணன், துஞ்சல் உற்ற - தூக்கம் மிகுந்த, இரா வ(ண்)ணன் - இராவைப் போன்ற கரிய நிறத்தினனான கும்பகன்னன், மாள - இறக்க, எய்தோன் - அம்பைச் செலுத்தியவனும், ஒண் பரதனுக்கு - சிறந்த பரதாழ்வானுக்கு, சொல் தவிரா - (குறித்த நாளில் வருவதாகச் சொல்லிய) சொல்லை நீங்காத, அ(ண்)ணன் - தலைமையனுமான அழகனுடைய, வினை முற்ற இரா வ(ண்)ணன் - (என்) தீவினை முழுதும் இல்லாவிதமாக, நல் தமிழ் மாலை - அழகிய தமிழ்ப் பாமாலையை, மொழிந்தனன் - பாடினேன்.

இறுதியடியில் 'இராவணனற்றமிழ்' என்பதில் தந்நகரம், றன்னகரமாய்த் திரிந்தது திரிபு நயங்கருதி என்க.

662. 'மொழித் தத்தை கொஞ்சும் மலை அலங்காரன்—முன் நூற்றுவரை அழித்து, அத்தை மைந்தர்க்கு அரசு அளித்தோன்—அடி நாள் தொடர்ந்து என்னுழித் தத்தைச் செய்து அன்றிப் போகா வினையைத் தனக்கு ஆட்பட்ட காலத்திலே ஒரு நொடியில் கழித்தத்தை என் சொல்லுகேன்!' என இயைக்க.

ணுழித்தத்தைச் செய்தன்றிப் போகா வினையை யொருநொடியிற்
கழித்தத்தை யென்சொல்லு கேன்றனக் காட்பட்ட காலத்திலே!

663] [௬௩

கால மலைக்கும் புவனங்க ளைக்கரந் தாயுதிரங்
கால மலைக்குமைத் தாயழ காகம லத்துப்பஞ்சார்
கால மலைக்கும் புவிக்குமன் பாவுயிர் காயம்விடுங்
கால மலைக்குங் கடுங்கூற்றைக் காய்ந்தென்னைக் காத்தருளே.

664] [௬௪

அருளக் கொடியிடைப் பூமாது நீயும்வந் தாளினுமாம்
இருளக் கொடிய நமன்வருங் காலத் திகழினுமாம்

---

மொழித் தத்தை - பேச்சில் சிறந்த கிளிகள், கொஞ்சும் - அழகாகப் பேசும், மலை - திருமாலிருஞ்சோலை மலையிலுள்ள, அலங்காரன் - அழகனும், முன் - (கிருஷ்ணவதாரம் செய்த) முன்காலத்தில், நூற்றுவரை - (துரியோதனன் உள்ளிட்ட கௌரவர்) நூறு பேரையும், அத்தை - குந்தி தேவியின், அடிநாள் - ஆதி காலம், என்னுழி - என்னிடத்தில், தத்தைச் செய்து - ஆபத்தை விளைத்து, அன்றி - அல்லாமல், கழித்தத்தை - ஒழித்ததை, என் சொல்லுகேன் - என்னவென்று கூறி வியப்பேன்!

'கழித்ததை' என்பது 'கழித்தத்தை' என விரித்தல் விகாரம் பெற்று நின்றது.

663. 'கால் அம் அலைக்கும் புவனங்களைக் கரந்தாய், உதிரம் கால ம(ல்)லைக் குமைத்தாய், அழகா, கமலத்துப் பஞ்சு ஆர் கால் அமலைக்கும் புவிக்கும் அன்பா, உயிர் காயம் விடும் காலம் மலைக்கும் கருங்கூற்றைக் காய்ந்து என்னைக் காத்தருள்,' என இயைக்க.

கால் அம் அலைக்கும் - காற்றும் நீரும் மோதுகின்ற, புவனங்களை - உலகங்களை, கரந்தாய் - (உட்கொண்டு) மறைத்து அருளியவனே, கால - கக்கும்படி, ம(ல்)லை - (சாணூரன் முஷ்டிகன் என்னும்) மல்லர்களை, குமைத்தாய் - அழித்தவனே, பஞ்சு ஆர் - செம்பஞ்சுக் குழம்பு பொருந்திய, அமலைக்கும் - குற்றமற்றவளான இலக்குமிக்கும், புவிக்கும் - நில மகளுக்கும், அன்பா - காதலனே, காயம் - உடலை, மலைக்கும் - வருத்தும், கருங்கூற்றை - கொடிய யமனை, காய்ந்து - கோபித்து நீக்கி.

'மல்லை' என்பது 'மலை' எனத் தொக்கு நின்றது.

664. 'கருளக்கொடி அழகா, அலங்காரா, வன் கஞ்சன் நெஞ்சத்து உருள் அக்கு ஒடிய உதைத்தாய், எனது உயிர் உன் உயிரே; இருள் அக்கொடிய நமன் வரும் காலத்துக் கொடி

கருளக் கொடியழ காவலங் காரவன் கஞ்சனெஞ்சத்
துருளக் கொடிய வுதைத்தா யெனதுயி ருன்னுயிரே.

665] பிரிவாற்றாத தலைவி தனது நிலைமையைக் கூறல் [௬௫

உயிர்க்கும் படிக்குமுன் னாயிரம் பேரென் றொறுத்தன்னைமார்
செயிர்க்கும் படிக்குநின் றேனென்செய் கேன்செழுந் தேவர்களும்
அயிர்க்கும் படிக்குற ளாமழ காவலங் காரநெய்க்கும்
தயிர்க்கும் படிக்குஞ்செவ் வாய்மலர்ந் தாய்நின்னைத் தாள்பணிந்தே.

666] திருப்பாதவகுப்பு [௬௬

பணிபதி வாடநின் றாடின நூற்றுவர் பாற்சென்றன
பணிபதி னாலு புவனமுந் தாயின பாப்பதின்மர்

---

இடைப் பூமாதும் நீயும் அருள வந்து ஆளினும் ஆம்; இகழினும் ஆம்,' என இயைக்க.

கருளக்கொடி - கருடக்கொடியையுடைய, அலங்கார - அலங்காரனே, வன்கஞ்சன் - கொடிய கம்ஸனது, நெஞ்சத்து - மார்பிலுள்ள, உருள் அக்கு - திரண்ட எலும்புகள், இருள் அக்கொடிய நமன் - கரிய நிறத்தையுடைய அந்தக் கொடிய யமன், கொடி இடைப் பூமாதும் நீயும் - பூங்கொடி போன்ற இடையையுடைய இலக்குமியும் நீயும், அருளவந்து - கிருபை செய்ய எழுந்தருளி, ஆளினும் ஆம் - ஆட்கொண்டாலும் தகும்; இகழினும் ஆம் - இகழ்ந்தாலும் தகும். ('எல்லாம் உன் பொறுப்பு' என்றபடி.)

665. 'செழுந்தேவர்களும் அயிர்க்கும்படி குறள் ஆம் அழகா, அலங்கார, நெய்க்கும் தயிர்க்கும் படிக்கும் செவ்வாய் மலர்ந்தாய், நின்னைத் தாள் பணிந்து உயிர்க்கும், உன் ஆயிரம் பேர் படிக்கும் என்று அன்னைமார் ஒறுத்துச் செயிர்க்கும்படி நின்றேன்; என் செய்கேன்!' என இயைக்க.

அயிர்க்கும்படி - சந்தேகிக்குமாறு, குறள் ஆம் - வாமனாவதாரம் செய்த, படிக்கும் - உலகத்திற்கும், மலர்ந்தாய் - திறந்தவனே, உயிர்க்கும் - (இவள்) பெருமூச்சு விடுகின்றாள், படிக்கும் - சொல்லித் துதிக்கின்றாள், ஒறுத்து - (என்னைத்) தண்டித்து, செயிர்க்கும்படி - கோபிக்குமாறு, என் செய்கேன் - (யான்) யாது செய்வேன்!

666. 'பங்கயப் பாவையுடன் பணி பதி மார்பன் அலங்காரன் பொன் திருப் பாதங்கள், பணி பதி வாட நின்று ஆடின; நூற்றுவர்பால் சென்றன; பணி பதினாலு புவனமும் தாயின; பதின்மர் பாப் பணி பதி எங்கும் உவந்தன,' என இயைக்க.

பங்கயப்பாவை - இலக்குமி, பணி பதி - ஆபரணம் பொருந்தியுள்ள, பொன் திருப்பாதங்கள் - அழகிய திருவடிகள், பணி பதி -

பணிபதி யெங்கு முவந்தன பங்கயப் பாவையுடன்
பணிபதி மார்ப னலங்காரன் பொற்றிருப் பாதங்களே.

667] [கசுஎ

பாதக ரத்தனை பேருங் கனகனும் பன்னகத்தா
லேதக ரத்தனை யற்கரு ளாளியை யெட்டெழுத்துள்
ஓதக ரத்தனைச் சுந்தரத் தோளுடை யானைநவ
நீதக ரத்தனைச் சேர்ந்தார்க்குத் தேவரு நேரல்லரே.

668] [கசுஅ

அல்லலங் காரையுஞ் சேர்விக்கு மைம்புல வாசையென்றும்
பல்லலங் காரைந்து கோலூன்றி யும்பற் றறுதுகண்டாய்
மல்லலங் காரிகை யார்மரு டீர்ந்து வணங்குநெஞ்சே!
தொல்லலங் காரனைத் தென்றிரு மாலிருஞ் சோலையிலே.

---

பாம்பரசான காளியன், நூற்றுவர்பால் - துரியோதனன் முதலிய நூறு பேரிடத்தில், பணி பதினாலு புவனமும் - (தம்மை) வணங் கும் பதினான்கு உலகங்களையும், தாயின - தாவி அளந்தன; பதின்மர் - பத்து ஆழ்வார்களும், பாப் பணி - பாசுரங்களால் துதித்து வணங்குகின்ற, பதி எங்கும் - திருப்பதிகளில் எல்லாம், உவந்தன - (எழுந்தருளுதலை) விரும்பின.

667. 'பாதகர் அத்தனை பேரும் கனகனும் பல் நகத்தாலே தகரத் தனையற்கு அருள் ஆளியை—எட்டு எழுத்துள் ஓது அகரத் தனை—சுந்தரத்தோள் உடையானை—நவநீத கரத்தனைச் சேர்ந் தார்க்குத் தேவரும் நேர் அல்லர்,' என இயைக்க.

பாதகர் - பாவிகளாகிய அரக்கர், கனகன் - இரணியன், பல் நகத்தாலே தகர - பல நகங்களால் கிழிப்புண்டு இறக்க, தனை யற்கு - (இரணியன்) மைந்தனான பிரகலாதனுக்கு, ஆளியை - நரசிங்கப்பெருமானை, எட்டு எழுத்துள் ஓது அகரத்தனை - அஷ் டாக்ஷரத்திற்சொல்லும் அகரத்தின் பொருளானவனை, நவநீத கரத்தனை - வெண்ணெய் ஏந்திய கையனை, சேர்ந்தார்க்கு - அடைந் தவருக்கு, நேர் - சமானம்.

இச்செய்யுள் பாகவதர் சிறப்பைக் கூறுகிறது.

668. 'நெஞ்சே, ஆரையும் அல்லல் சேர்விக்கும் ஐம்புல ஆசை, என்றும் பல் அலங்காரனைந்து கோல் ஊன்றியும் பற்று அறுது? மல்லல் அம் காரிகையார் மருள் தீர்ந்து, தொல் அலங் காரனைத் தென் திருமாலிருஞ்சோலையிலே வணங்கு,' என இயைக்க.

669] பிரிவாற்றாத தலைவி நிலையைக்குறித்துப் பாங்கி இரங்கல் [௬௯

சோலையி லாமையில் சேர்திரு மாலிருஞ் சோலைநின்றான்
வேலையி லாமையில் வேடங்கொண் டான்புய மேவப்பெறாச்
சேலையி லாமையி லங்குகண் ணாளவன் றெய்வத்துழாய்
மாலையி லாமையில் மாலையுற் றாளந்தி மாலையிலே.

670] பிரிவாற்றாது வருந்துந் தலைவி நிலையைத் தலைவனுக்குப் [௭௦௦
பாங்கி கூறல்

மாலைக் கரும்பு சிறுகால் துலைக்க வருந்துமெங்கள்
ஆலைக் கரும்புதன் னாசையெல் லாஞ்சொல்லி லாயிரந்தோட்
டோலைக் கரும்புண் டொடமுட மாமதி யூர்குடுமிச்
சோலைக் கரும்புய லேயரு ளாயுன் றுளவினையே.

---

அலங்காரின்று - அசைவுற்று, அறாது - நீங்காது, மல்லல் - வளப்பம் பொருந்திய, அம் - அழகிய, மருள் - மோகமயக்கம், வணங்கு - தொழுவாயாக.

'கண்டாய், அங்கு' என்பன அசைகள்.

669. 'சோலை இல் ஆ(க) மயில் சேர் திருமாலிருஞ்சோலை நின்றான்—வேலையில் ஆமையில் வேடங் கொண்டான் புயம் மேவப்பெறாச் சேல் அயில் ஆம் மை இலங்கு கண்ணாள், அவன் தெய்வத்துழாய் மாலை இலாமையில் அந்தி மாலையிலே மாலை உற்றாள்,' என இயைக்க.

சோலை இல் ஆ(க) - சோலையே இடமாக, மயில் - மயில்கள், வேலையில் - (திருப்பாற்)கடலில், ஆமையில் - ஆமையைப் போல, புயம் - தோள்களை, மேவப் பெறா - பொருந்தப் பெறாத, சேல் அயில் ஆம் - கெண்டை மீனும் வேலும் போன்ற, மை இலங்கு - மை தீட்டப் பெற்று விளங்கும், கண்ணாள் - கண்களை உடையவளான என் தலைவி, இலாமையில் - பெறாமையால், அந்தி மாலையிலே - அந்தி மாலைக் காலத்தில், மாலை உற்றாள் - மயக்கத்தை அடைந்தாள்.

'மயில், அயில்' என்பன, 'மையில், ஐயில்' என எதுகை நயம் பற்றிப் போலியாய் நின்றன.

670. 'தொட முடம் ஆ(க) மதி ஊர் குடுமிச் சோலைக் கரும்புயலே, மாலைக்கு அரும்பு சிறுகால் துலைக்க வருந்தும் எங்கள் ஆலைக்கரும்புதன் ஆசை எல்லாம் சொல்லில், ஆயிரம் தோட்டு ஓலைக்கு அரும்புண்; உன் துளவினை அருளாய்,' என இயைக்க,

671] [௧௦௧

துளவிலை யார்பொன் னடிமுடி சூட்டித்தொண் டாக்கியென்னை
வளவிலை யாக்கொண்ட நீகை விடேன்மங் கலகுணங்கள்
அளவிலை யாவலங் கார சமயிக ளாய்ந்தவண்ணம்
உளவிலை யாயுரு வாயரு வாய வொருமுதலே!

672] [௧௦௨

ஒருபா லமர ரொருபான் முனிவ ருடனிருந்தென்
இருபார் வையுங்கொண் டுவப்பதென் றோவிட பக்கிரிக்கும்
பொருபாற் கடற்கு மயோத்திக்கும் பொற்றுவ ராபதிக்கும்
திருபாவை குந்தமு நீவீற் றிருக்கின்ற நீர்மையுமே.

---

தொட முடம் ஆ(க) - தொடுவதால் முடமாகும்படி, மதி ஊர் - சந்திரன் தவழும், குடுமி - உச்சியை உடைய, புயலே - மேகம் போன்றவனே, மாலைக்கு - மாலைக் காலத்தில், அருப்பு சிறு கால் துனைக்க - உண்டாகின்ற மந்த மாருதம் வருத்த, ஆலைக் கரும்புதன் - ஆலையிற் சிக்கிய கரும்பு போன்றவளான தலைவியின், ஆயிரம் தோட்டு ஓலைக்கு - ஆயிரக் கணக்கான இதழாகிய ஓலைகளுக்கு, அரும்புண் - அரிய புண்ணைக்கும் (புண் - வடு), அருளாய் - கொடுத்தருள்வாயாக.

'தலைவியை விரைந்து மணந்துகொள்ள வேண்டும்,' என்பது கருத்து.

671. 'மங்கல குணங்கள் அளவு இல் ஐயா, அலங்கார, சமயிகள் ஆய்ந்த வண்ணம் உள இலை ஆய், உருவாய், அருவாய ஒரு முதலே, துளவு இலை ஆர் பொன் அடி முடி சூட்டி, என்னைத் தொண்டு ஆக்கி வள விலையாக் கொண்ட நீ கை விடேல்,' என இயைக்க.

சமயிகள் - பல மதஸ்தர்கள், உள இலை ஆய் - உள்ளனவும் இல்லனவுமாகி, அருவாய - ரூபமற்றதாய, ஒரு முதலே - ஒப்பற்ற முதல்வனே, தொண்டு - அடிமை, வள விலையாக் கொண்ட - சிறந்த விலைப்பொருளாகக் கொண்ட.

672. 'இடபக் கிரிக்கும், பொரு பால் கடற்கும், அயோத்திக்கும், பொன் துவராபதிக்கும் திருபா, வைகுந்தமும், நீ வீற்றிருக்கின்ற நீர்மையும், ஒரு பால் அமரர் ஒரு பால் முனிவருடன் இருந்து என் இரு பார்வையும் கொண்டு உவப்பது என்றோ!' என இயைக்க.

பொரு - (அலை) மோதுகின்ற, பொன் - அழகிய, துவராபதி - துவாரகை, திருபா - அரசனே, நீர்மை - தன்மை, ஒரு பால் - ஒரு பக்கத்தில், பார்வை - கண், உவப்பது - மகிழ்வது.

அலங்கார ருக்குப் பரமச்சு வாமிக் கழகருக்குக்
கலங்காப் பெருநக ரங்காட்டு வார்க்குக் கருத்தன்பினால்
நலங்காத சொற்றொடை யந்தாதி யைப்பற்ப நாபப்பட்டன்
விலங்காத கீர்த்தி மணவாள தாசன் விளம்பினனே.

அழகரந்தாதி முற்றிற்று.

அழகிய மணவாளதாசர் திருவடிகளே சரணம்!

673. 'பற்பநாபப் பட்டன் விலங்காத கீர்த்தி மணவாள தாஸன், அலங்காரருக்கு — பரமசுவாமிக்கு — அழகருக்கு — கலங்காப் பெருநகரம் காட்டுவார்க்குக் கருத்து அன்பினால் நலங்காத சொல் தொடை அந்தாதியை விளம்பினன்,' என இயைக்க.

பற்பநாபப்பட்டன் - திருமாலின் அவதாரமான பெரிய பட்டரை, விலங்காத - விட்டு நீங்காத, கீர்த்தி - புகழ், கலங்காப் பெருநகரம் - திருவைகுந்தம், நலங்காத சொல் தொடை - வாடாத சொல் மாலையாகிய, அந்தாதியை - அந்தாதியாகிய இந் நூலை.

இச்செய்யுள், ஆசிரியர் தம்மைப் பிறர் போலக் கூறிய தற் சிறப்புப்பாயிரம்.

# 8. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி

674] சிறப்புப்பாயிரம் [க

ஏற்றமண வாளர் இசைத்தாரந் தாதிவெண்பா
தோற்றக்கே டில்லாத தொன்மாலைப்—போற்றத்
திருப்பதியாம் நூற்றெட் டினையுஞ்சே விப்போர்
கருப்பதியா வண்ணமுண்டா க.

675] ஆழ்வார்கள் காப்பு [உ

பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான்—வையகமெண்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப் பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு.

676] நம்மாழ்வார் [ந

பிறவாத பேறு பெறுதற்கெஞ் ஞான்றும்
மறவா திறைஞ்சென் மனனே!—துறவாளன்
வண்குருகூர் வாவி வழுதிவள நாடுடைய
தண்குருகூர் நம்பிதிருத் தாள்.

677] உடையவர் [ச

முன்னே பிறந்திறந்து மூதுலகிற் பட்டவெல்லாம்
என்னே மறந்தனையோ என்னெஞ்சே!—சொன்னேன்

---

674. தோற்றக்கேடு - பிறப்பும் இறப்பும், தொல் மாலை - பழைய திருமாலை, போற்ற - துதிக்க, ஏற்ற மணவாளர் - சிறப்புடைய மணவாளதாசர் (பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்), கருப்பதியா வண்ணம் உண்டாக - பிறப்பில் பொருந்தா வகை ஏற்பட.

675. சேரர்பிரான் - குலசேகர ஆழ்வார், பட்டர் பிரான் - பெரியாழ்வார், கோதை - ஸ்ரீ ஆண்டாள், தொண்டர் பாதப் பொடி - தொண்டரடிப்பொடி ஆழ்வார், பாணன் - திருப்பாணாழ்வார், கலியன் - திருமங்கையாழ்வார், காப்பு - காவலாரவர்.

676. 'என் மனனே, தண் குருகூர் நம்பி திருத்தாள் எஞ்ஞான்றும் மறவாது இறைஞ்சு,' என இயைக்க.

வழுதி வளநாடு - பாண்டி நாடு, பேறு - இலாபம், இறைஞ்சு - வணங்கு.

677. மூதுலகில் - பழைய உலகத்தில், பட்ட எல்லாம் - அடைந்த துன்பங்களையெல்லாம், என்னே - என்ன ஆச்சரியம்,

இனியெதிரா சன்மங்கள் இன்றுமுதற் பூதூர்
முனியெதிரா சன்பேர் மொழி.

678] கூரத்தாழ்வான் [ெ

முக்கால மில்லா முகில்வண்ணன் வைகுந்தத்
தெக்காலஞ் செல்வான் இருக்கின்றேன்—தக்காரெண்
கூரத்தாழ் வானடியைக் கூடுதற்கு நாயடியேன்
போரத்தாழ் வானசடம் போட்டு?

679] பராசரபட்டர் [சு

நான்கூட்டில் வந்தவன்றே நானறியா நன்மையெல்லாம்
தான்கூட்டி வைத்தநலந் தான்கண்டீர்—ஆங்கூட்டச்
சிட்டருக்கு வாய்த்த திருவரங்கன் இன்னருளால்
பட்டருக்காட் பட்ட பயன்.

680] திவ்வியதேசங்களின் தொகை [எ

ஈரிருப தாஞ்சோழம்; ஈரொன்ப தாம்பாண்டி;
ஓர்பதின்மூன் றாம்மலைநா(டு); ஓரிரண்டாம்—சீர்நடுநா(டு):
ஆறோடீ ரெட்டுத்தொண்டை; அவ்வடநா டாறிரண்டு;
கூறுதிரு நாடொன்றாக் கொள்.

---

பூதூர்முனி - ஸ்ரீ பெரும்பூதூரில் அவதரித்த துறவி, சன்மங்கள் இனி எதிரா - பிறப்புகள் இனி உன்னை எதிர்க்க மாட்டா, எதிராசன் - ஸ்ரீ ராமானுஜர்.

678. 'நாய் அடியேன் போரத் தாழ்வான சடம் போட்டு', தக்கார் எண் கூரத்தாழ்வான் அடியைக் கூடுதற்கு முக்காலம் இல்லா முகில் வண்ணன் வைகுந்தத்து எக்காலம் செல்வான் இருக்கின்றேன்?' என இயைக்க.

போர - மிகவும், சடம் போட்டு - உடம்பைப் பிரித்து, எண் - மதிக்கின்ற, செல்வான் - போக, கூரத்தாழ்வான் - இந் நூலாசிரியரின் ஆசிரியரான பராசரபட்டர்க்குத் தந்தையார்.

679. கூட்டாம் சிட்டருக்கு - திரளாகிய பெரியார்க்கு, கூட்டில் - உடலில், வந்த அன்றே - பிறந்த அப்பொழுதே.

680. சோழம் - சோழ நாட்டுத் திருப்பதிகள், பாண்டி - பாண்டி நாட்டுத் திருப்பதிகள், மலை நாடு - சேர நாட்டுத் திருப் பதிகள், நடு நாடு - சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் நடுவிலுள்ள திருப்பதிகள், தொண்டை - தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ஆறோடு ஈரெட்டு - இருபத்திரண்டு, அவ்வடநாடு - சேய்மையிலுள்ளனவாகிய வடநாட்டுத் திருப்பதிகள், திரு நாடு - பரமபதம்.

## நூல்

## சோழநாட்டுத் திருப்பதிகள், 40.

681] 1. திருவரங்கம் பெரிய கோயில் [அ

சீர்வந்த உந்தித் திசைமுகனால் அல்லாதென்
சோர்வந்த சொல்லிற் சுருங்குமோ—ஆர்வம்
ஒருவரங்கங் கோயில் உகந்தவரை ஆள்வான்
திருவரங்கங் கோயிற் சிறப்பு ?

682] 2. திருவுறையூர் [சு

சிறப்புடைய செல்வத் திருப்பதிகள் போல
மறப்புடைய நாயேன் மனத்துள்—உறப்போந்(து)
அறந்தையா நின்ற அரங்கா! திருவாழ்
உறந்தையாய்! இங்குறைந்த தோது.

683] 3. திருத்தஞ்சை மாநகரம் [௧௦

ஓதக்கேள் நெஞ்சே! உனக்குமீது நன்றெனக்கும்
மேதக்க நன்மையினி வேறில்லை ;—போதப்

---

681. 'ஒருவர், அங்கங்கு ஆர்வம் ஓயில், அவரை உகந்து ஆள்வான் திருவரங்கம் கோயில் சிறப்பு, சீர் வந்த உந்தித் திசைமுகனால் அல்லாது என் சோர் வந்த சொல்லில் சுருங்குமோ ?' என இயைக்க.

அங்கங்கு - அந்தந்த உலகப் பற்றுகளில், ஆர்வம் ஓயில் - பற்று விட்டால், ஆள்வான் - அடிமைகொள்ளும் பெருமானது, சீர் வந்த உந்தித் திசை முகன் - சிறப்பு அமைந்த கொப்பூழ்த் தாமரையில் தோன்றிய பிரமன், சோர் வந்த - சோர்வு பொருந்திய, சுருங்குமோ - அடங்குமோ ?

இது திருச்சிக்கோட்டைக்கு வடமேற்கில் 3 மைலில்உள்ளது.

682. மறப்பு - மறதி, நாயேன் - நாய் போலும் எனது, உறப்போந்து - நன்றாய் வந்திருந்து, அறம் தையா நின்ற - தருமத்தைப் பதியச் செய்கின்ற, உறந்தையாய் - உறையூரிலுள்ளவனே, இங்கு - இந்த என் உள்ளத்தில், உறைந்தது - தங்கியதற்குக் காரணம், ஓது - சொல்லுக.

• இது திருச்சிக்கோட்டைக்கு மேற்கில் 1 மைலில் உள்ளது.

683. ஓதக்கேள் - சொல்லக் கேட்பாயாக, மேதக்க - மேன்மை வாய்ந்த, போதப் பேணி - மிகத் துதித்து, வடிவம் பொருந்து - (அவன்) திருவடியில் பொருந்திய, அஞ்சை - ஐந்து

பெருந்தஞ்சை மாமணியைப் பேணி வடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று.

684] 4. திருவன்பில் [கக

போற்றிசெய வோர்குடைக்கீழ்ப் பொன்னுடும் இந்நாடும்
நாற்றிசையும் ஆண்டாலும் நன்கில்லை—தோற்றமிலா
எந்தையன்பி லாதி யிணைத்தா மரையடிக்கே
சிந்தையன்பி லாதார் சிலர்.

685] 5. திருக்கரம்பனூர் [கஉ

(உத்தமர் கோயில்)

சிலமா தவஞ்செய்தும் தீவேள்வி வேட்டும்
பலமா நதியிற் படிந்தும்—உலகில்
பரம்பநூல் கற்றும் பயனில்லை நெஞ்சே!
கரம்பனூ ருத்தமன்பேர் கல்.

686] 6. திருவெள்ளறை [கங

'கல்லிருந்தான் தந்தை கமலத்தோன் அக்கமலத்
தில்லிருந்தான் தந்தையரங் கேசன்,' என்றே—தொல்லைமறை

---

ஆயுதங்களையும், மா - திருமகளையும், மணியை - கவுஸ்துபம் என்னும் இரத்தினத்தையும், போற்று - வாழ்த்து.

இது தஞ்சாவூருக்கு வடக்கில் 3 மைலில் உள்ளது.

684. 'தோற்றம் இலா எந்தை—அன்பில் ஆதி—இணைத் தாமரை அடிக்குச் சிந்தை அன்பு இலாத சிலர் போற்றி செய ஓர் குடைக் கீழ்ப் பொன் நாடும் நால் திசையும் இந்நாடும் ஆண்டாலும் நன்கு இல்லை,' என இயைக்க.

தோற்றம் - பிறப்பு, எந்தை - எம் தந்தையும், அன்பில் ஆதி - 'திருவன்பில்' என்னும் திருப்பதியில் உள்ள முதல்வனுமானவனுடைய, நன்கு - நன்மை.

இது பூதலூருக்கு வடக்கில் 8 மைலில் உள்ளது.

685. 'நெஞ்சே, செய்தும், வேட்டும், படித்தும், கற்றும் பயனில்லை; (ஆதலால்) உத்தமன் பேர் கல்,' என இயைக்க.

மாதவம் - பெருந்தவம், தீ வேள்வி - ஓமமும் யாகமும், வேட்டும் - விரும்பிச் செய்தும், படிந்தும் - மூழ்கியும், பரம்ப - விசாலமாக, கல் - கற்பாயாக, கரம்பனூர் - கதம்பனூர் என்பதன் மரூஉ.

இது திருச்சிக்கோட்டைக்கு வடக்கில் 5 மைலில் உள்ளது.

686. 'உள்ளமே, (நீ) விரும்பு,' என இயைக்க.

உள்ளறையா நின்றமையால், உள்ளமே! கள்ளமின்றி
வெள்ளறையான் தாளே விரும்பு.

687] 7. திருப்புள்ளம்பூதங்குடி [கஎ

விரும்பினவை எய்தும் வினையனைத்தும் தீரும்
அரும்பரம வீடும் அடைவீர்—பெரும்பொறிகொள்
கள்ளம்பூ தங்குடிகொள் காயமுடை யீர்! அடிகள்
புள்ளம்பூ தங்குடியிற் போம்.

688] 8. திருப்பேர் நகர் [கஅ

போமானை எய்து பொருமானைக் கொம்புபறித்(து)
ஆமானை மேய்த்துவந்த அம்மானைத்—தாம்ச்
செழுந்திருப்பே ரானைச் சிறுகாலைச் சிந்தித்(து)
எழுந்திருப்பேற் குண்டோ இடர்?

---

கல் இருந்தான் - (கைலை) மலையிலிருந்தவனான சிவன், கமலத்தோன் - பிரமன், அரங்கேசன் - திருவரங்கநாதன், தொல்லை மறையுள் - பழைய வேதங்களில், அறையாநின்றமையால் - சொல்லிவருகின்றதனால், கள்ளம் - வஞ்சனை, வெள்ளறையான் - 'திருவெள்ளறை' என்னும் திருப்பதியிலுள்ள பெருமானுடைய, வெள்ளறை - வெண்மையான பாறை; அது மலைக்கு ஆகுபெயராயிற்று.

இது திருச்சிக்கோட்டைக்கு வடக்கில் 14 மைலில் உள்ளது.

687. 'பெரும்பொறி கொள் கள்ளம் பூதம் குடிகொள் காயம் உடையீர், அடிகள் புள்ளம்பூதங்குடியில் போம்; விரும்பினவை எய்தும்; வினையனைத்தும் தீரும்; அரும்பரம வீடும் அடைவீர்,' என இயைக்க.

பெரும்பொறி - பெரிய ஐம்பொறிகள், கள்ளம் - வஞ்சனையும், பூதம் - பஞ்ச பூதங்களும், காயம் - சரீரம், உடையீர் - உடைய உலகத்தவரே, அடிகள் - எம் இறைவர் தங்கியுள்ள, எய்தும் - வந்தடையும், அரும்பரம வீடு - அடைதற்கரிய மேலான மோட்சம்.

இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் 6 மைலில் உள்ளது.

688. மானை - (மாரீசனாகிய) பொய்ம்மானை, ஆனை - குவலயாபீடம் என்னும் கம்ஸனது யானை, ஆம் ஆனை - தன்னுடையவை ஆகிய பசுக்களை, அம்மானை - அழகிய பெரியோனை, தாமம் - இருப்பிடம், சிறுகாலை - அதிகாலையில், எழுந்திருப்பேற்கு - எழுந்திருக்கும் எனக்கு, இடர் - துன்பம்.

இது பூதலூருக்கு வடமேற்கில் 6 மைலில் உள்ளது.

689] 9. திருவாதனூர் [கசு

இடரான வாக்கை யிருக்க முயலார்
மடவார் மயக்கின் மயங்கார்—கடவுளர்க்கு
நாதனூர் ஆதரியார் நானெனதென் னுர்அமலன்
ஆதனூர் எந்தையடி யார்.

690] 10. திருவழுந்தூர் [கஎ

அடியாராய் வாழ்மின் அறிவிலாப் பேய்காள்!
செடியார் வினையனைத்துந் தீரும்;—முடிவில்
செழுந்தூரத் தன்னெனினுஞ் செங்கண்மா லெங்கள்
அழுந்தூரத் தன் அணிய னும்.

691] 11. திருச்சிறுபுலியூர் [கஅ

ஆமருவி மேய்த்த அரங்கரெதிர் ஆர்நிற்பார்?
தாமருவி வாணனைத்தோள் சாய்த்தநாள்—சேமம்

689. 'அடியார், முயலார்; மயங்கார்; ஆதரியார்; என்னுர்,' என இயைக்க.

அமலன் - குற்றமற்றவன், எந்தை - எம்பெருமான், இடர் ஆன ஆக்கை - துன்பத்திற்கு இடமான உடம்பில், இருக்க - இருப்பதற்கு, மடவார் - இளமங்கையரின், கடவுளர்க்கு நாதன் ஊர் ஆதரியார் - தேவேந்திரன் நகரையும் விரும்பார், நான் எனது என்னுர் - அகங்கார மமகாரச் சொற்களைப் பேசார்.

இது கும்பகோணத்திற்கு வடக்கில் 10 மைலில் உள்ளது.

690. 'அறிவு இலாப்பேய்காள், அடியாராய் வாழ்மின்; செடி ஆர் வினை அனைத்தும் தீரும்; செங்கண்மால்—அழுந்தூர் எங்கள் அத்தன்—செழுந்தூரத்தன் எனினும், முடிவில் அணியன் ஆம்,' என இயைக்க.

பேய்காள் - பேய் போன்றவர்களே, செடி ஆர் - நெருக்கம் பொருந்திய (கூட்டமான), அத்தன் - தந்தை, செழுந்தூரத்தன் - மிகுந்த தூரத்திலுள்ளவன், முடிவில் - (உங்கள்) மரணகாலத்தில், அணியன் ஆம் - சமீபத்திலுள்ளவன் ஆவன்.

இது குத்தாலத்திற்குத் தென்கிழக்கில் 2 மைலில் உள்ளது.

691. 'தாம் வாணனை மருவித் தோள் சாய்த்த நாள், சேமம் உறு புலி ஊர் வன்தோல் உடையான் சிறுபுலியூர் எந்தை மேல் சென்று உடைந்தான்; ஆமருவி மேய்த்த அரங்கர் எதிர் ஆர் நிற்பார்?' என இயைக்க.

வாணனை - வாணாசுரனை, மருவி - சார்ந்து, தோள் சாய்த்த - (அவனுடைய) ஆயிரம் தோள்களையும் அறுத்து வீழ்த்திய,

உறுபுலியூர் வன்றோ லுடையான் உடைந்தான்
சிறுபுலியூர் எந்தைமேற் சென்று.

692] 12. திருச்சேறை [கக

சென்றுசென்று செல்வஞ் செருக்குவார் வாயில்தொறும்
நின்றுநின்று தூங்குமட நெஞ்சமே!—இன்றமிழைக்
கூறைக்குஞ் சோற்றுக்குங் கூறாதே, பேறாகச்
சேறைக்கு நாயகன்பேர் செப்பு.

693] 13. தலைச்சங்கநாண்மதியம் [உ௦

செப்புங்கால் ஆதவனும் திங்களும்வா னும்தரையும்
அப்புங்கா லும்கனலும் ஆய்நின்றான்—கைப்பால்

---

சேமம் உற - (வாணனுக்குக்) காவலாய் நின்ற, புலி ஊர் வன் தோல் உடையான் - புலியின்மீதுள்ள வலிய தோலை உடையாகக் கொண்டவனான சிவன், சென்று - (எதிர்த்துப்) போய், உடைந்தான் - தோற்றுப்போனான் ; ஆ மருவி - பசுக்களைக் கிட்டி.

‘ சிறு புலியூர் ’ என்பது, திருமால் புலிக்கால் முனிவருக்குப் பிரத்தியட்சமான தலம்.

இது கும்பகோணத்திற்குத் தெற்கில் 9 மைலில் உள்ளது.

692. ‘ செல்வம் செருக்குவார் வாயில்தொறும் சென்று சென்று, நின்று நின்று, தூங்கும் மட நெஞ்சமே, இன் தமிழைச் சோற்றுக்கும் கூறைக்கும் கூறாது, பேறு ஆக, சேறைக்கு நாயகன் பேர் செப்பு,’ என இயைக்க.

செல்வம் செருக்குவார் - செல்வத்தால் கருவங்கொண்டவரின், சென்று சென்று - பல முறை போய், நின்று நின்று - நெடுநேரம் நின்று, தூங்கும் - மனம் சோரும், மடநெஞ்சமே - அறியாமையுடைய மனமே, இன் தமிழை - இனிய தமிழ்க் கவியை, கூறை - ஆடை, பேறு ஆக - பயன் உண்டாகும்படி, செப்பு - சொல்.

‘ திருச்சேறை ’ என்பது காரணப் பெயர். இதனை வடமொழியாளர் ‘ பஞ்சசார க்ஷேத்திரம் ’ என்பர். ‘ பஞ்சசாரம் ’ என்பது பெருமாள், பிராட்டி, விமானம், தீர்த்தம், தலம் என்னும் சாரமான ஐந்து பொருள்களைக் குறிக்கும் என்பர். இது கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் 7 மைலில் உள்ளது.

693. ‘ கைப்பால் அலைச்சங்கம் ஏந்தும் அணி அரங்கத்து அம்மான்—தலைச்சங்க நாண்மதியத்தான்—செப்புங்கால், ஆதவனும் திங்களும் வானும் தரையும் அப்பும் காலும் கனலும் ஆய் நின்றான்,’ என இயைக்க.

அலைச்சங்க மேந்து மணியரங்கத் தம்மான்
தலைச்சங்க நாண்மதியத் தான்.

694] 14. திருக்குடந்தை [உக

தானே படைத்துலகைத் தானே அளித்துநீ
தானே அழிக்குந் தளர்ச்சியோ—வானில்
திருமகுடந் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெரும!குடந் தைக்கிடந்தாய்! பேசு.

695] 15. திருக்கண்டியூர் [உஉ

பேசவரின் தென்னரங்கன் பேரெல்லாம் பேசுகவாய்;
கேசவனைக் காண்கவிழி; கேட்கசெவி;—ஈசனூர்
உண்டியூர் தோறு முழன் றிரவா மற்றவிர்த்தான்
கண்டியூர் கூப்புகவென் கை.

---

கைப்பால் - கரத்தில், அலைச்சங்கம் - பகைவரை வருத்து தலையுடைய சங்கை, ஆதவன் - சூரியன், திங்கள் - சந்திரன், அப்பு - நீர், கால் - காற்று, நின்றான் - நிலைபெற்றுள்ளான். 'அனைத்தும் ஆண்டவன் சொரூபமே,' என்பது கருத்து.

இது சீர்காழிக்குத் தென்கிழக்கில் 19 மைலில் உள்ளது.

694. 'சிறு குறளாய் வானில் திரு மகுடம் தைக்க நீண்ட பெரும, உலகை நீ தானே படைத்து, தானே அளித்து, தானே அழிக்கும் தளர்ச்சியோ குடந்தைக் கிடந்தாய்? பேசு,' என இயைக்க.

குறளாய் - வாமனவதாரஞ்செய்து, தைக்க - முட்டும்படி, நீண்ட - நீண்டு வளர்ந்த, பெரும - பெருமானே, தளர்ச்சியோ - சோர்வு காரணமாகவோ, கிடந்தாய் - பள்ளிகொண்டாய், குடந்தை - கும்பகோணம்.

இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் 2 மைலில் உள்ளது.

695. 'வாய் பேசவரின் தென்னரங்கன் பேரெல்லாம் பேசுக! விழி, கேசவனைக் காண்க! செவி, கேட்க! என் கை, ஈசனூர் ஊர் தோறும் உழன்று உண்டி இரவாமல் தவிர்த்தான் கண்டியூர் கூப்புக!' என இயைக்க.

கேட்க - (கேசவன் புகழையே) கேட்கக்கடவன, உண்டி - உணவை, கூப்புக - குவித்துக் கும்பிடக்கடவன, கண்டியூர் - கண்டனபுரம்.

இது தஞ்சாவூருக்கு வடகிழக்கில் 5 மைலில் உள்ளது.

696] 16. திருவிண்ணகரம் [உரு

(உப்பிலியப்பன் சந்நிதி)

கையும் உரையும் கருத்தும்உனக் கேயடிமை
செய்யும் படிநீ திருத்திஞய்—ஐயா!
திருவிண் ணகராளா! சிந்தையிலும் எண்ணேன்
பெருவிண் ணகராளும் பேறு.

697] 17. திருக்கண்ணபுரம் [உச

பேறு தரினும் பிறப்பிறப்பு நோய்மூப்பு
வேறு தரினும் விடேன்கண்டாய்—ஏறுநீர்
வண்ணபுரத் தாய்!என் மனம்புகுந்தாய்! வைகுந்தா!
கண்ணபுரத் தாய்! உன் கழல்.

698] 18. திருவாலி [உரு

கழன்றுபோம் வாயுவினைக் கட்டாமல் தீர்த்தம்
உழன்றுபோய் ஆடாமல் உய்ந்தேன்—அழன்று

696. 'ஐயா, திரு விண்ணகர் ஆளா, கையும் உரையும் கருத்தும் உனக்கே அடிமை செய்யும்படி நீ திருத்திஞய்; பெரு விண்ணகர் ஆளும் பேறு சிந்தையிலும் எண்ணேன்,' என இயைக்க.

ஆளா - ஆள்பவனே, பெரு விண்ணகர் - தேவலோகம், பேறு - பாக்கியத்தை.

இது கும்பகோணத்திற்குக் கிழக்கில் 2½ மைலில் உள்ளது.

697. 'ஏறு நீர் வண்ணபுரத்தாய், என் மனம் புகுந்தாய், வைகுந்த கண்ண புரத்தாய், பேறு தரினும் வேறு பிறப்பு இறப்பு நோய் மூப்புத் தரினும், உன் கழல் விடேன்,' என இயைக்க.

ஏறு நீர் வண்ண புரத்தாய் - மிகுந்த நீரையுடைய கடல் நிறத்தைக் கொண்ட உடலையுடையவனே (புரம் - உடல்), கண்ண புரத்தாய் - திருக்கண்ணபுரத்தில் உள்ளவனே, பேறு - மோட்சம், வேறு - (அதற்கு) மாருன, மூப்பு-கிழத்தன்மை, கழல் - திருவடிகளை, கண்டாய் - முன்னிலை அசைச்சொல்.

இது நன்னிலத்திற்குக் கிழக்கில் 4 மைலில் உள்ளது.

698. 'அழன்று பொரு வாலி காலன்—பரகாலன் போற்றும் திருவாலி மாயனைச் சேர்ந்து, கழன்று போம் வாயுவினைக் கட்டாமல், உழன்று போய்த் தீர்த்தம் ஆடாமல் உய்ந்தேன்,' என இயைக்க.

பொருவாலி காலன் பரகாலன் போற்றும்
திருவாலி மாயனையே சேர்ந்து.

699] 19. திருநாகை [உகா

சேர்ந்துனக்குக் குற்றேவல் செய்திலன் ; என் சிந்தையில்நீ
ஆர்ந்ததற்கோர் கைம்மா றறிகிலேன்;—பூந்துவரை
மன்னா!கை யாழி வலவா! வலம்புரியாய்!
தென்னாகை யாய்!அருளிச் செய்.

700] 20. திருநறையூர் [உள

செய்ய சடையோன் திசைமுகத்தோன் வானவர்கோன்
ஐயமுறுத் தின்னம் அறியாரோ—துய்ய
மருநறையூர் வண்டுழாய் மாயோன்செவ் வாயோன்
திருநறையூர் நின்றான் செயல்?

---

அழன்று பொரு - கோபித்துப் போர்புரிந்த, வாலி காலன் - வாலிக்கு யமனானவனும், பரகாலன் - திருமங்கையாழ்வார், கழன்று போம் வாயுவினை - (உடலை) விட்டு நீங்கிச் செல்கின்ற மூச்சை, கட்டாமல் - (பிராணாயாம யோகத்தால்) அடக்காமலும், ஆடாமல் - முழுகாமலும், உய்ந்தேன் - நற்கதியடைந்தேன்.

'திருவாலி' என்பதற்குத் 'திருமகள் பெருமானை ஆலிங்கனம் செய்த தலம்' எனக் காரணங் கூறுவர் பெரியோர்.

இது சீர்காழிக்குக் கிழக்கில் 6 மைலில் உள்ளது.

699. 'பூந்துவரை மன்னா, கை ஆழி வலவா, வலம்புரியாய், தென்னாகையாய், சேர்ந்து உனக்குக் குற்றேவல் செய்திலன் ; என் சிந்தையில் நீ ஆர்ந்ததற்கு ஓர் கைம்மாறு அறிகிலேன்; அருளிச்செய்,' என இயைக்க.

பூந்துவரை - அழகிய துவாரகை, கை ஆழி வலவா - கையில் சக்கரந் தாங்கிய வல்லவனே, வலம்புரியாய் - வலம்புரி சங்கை உடையவனே, தென்னாகையாய் - அழகிய திருநாகைப் பதியானே, செய்திலன் - (யான்) செய்தேனில்லை; ஆர்ந்ததற்கு - பொருந்தியதற்கு, கைம்மாறு - பிரதியுபகாரம், நாகை - நாகப்பட்டினம் என்பதன் மரூஉ.

இது நாகப்பட்டினத்திற்கு மேற்கில் 2 பர்லாங்கில் உள்ளது.

700. 'துய்ய மரு நறை ஊர் வண்டுழாய் மாயோன்—செவ் வாயோன்—திரு நறையூர் நின்றான் செயல், செய்ய சடையோன், திசை முகத்தோன், வானவர்கோன் ஐயம் அறுத்து இன்னம் அறியார்,' என இயைக்க.

701] 21. திருநந்திபுர விண்ணகரம் [உஅ

செயற்கரிய செய்வோமைச் செய்யாமல் நெஞ்சே!
மயக்குவா ரைவர் வலியால் ;—'நயக்கலவி
சிந்தி;புர விண்ணகரம்,' என்பர்;திருச் செங்கண்மால்
நந்திபுர விண்ணகர நாடு.

702] 22. திருவிந்தளூர் [உகூ

நாடுதும்வா நெஞ்சமே! நாராய ணன்பதிகள்;
கூடுதும்வா மெய்யடியார் கூட்டங்கள் ;—சூடுதும்வா
வீதியிந்த ளத்தகிலின் வீசுபுகை வாசமெழும்
ஆதியிந்த ளூரான்அடி.

---

தூய்ய மரு நறை ஊர் வண்டுழாய் - பரிசுத்தமான வாசனையும் தேனும் பொருந்திய செழிப்பான துளசி மாலையை அணிந்த, திருநறையூர் - சுகந்தகிரி.

'ஆண்டவன் செயலின் இரகசியத்தைச் சிவனும், பிரமனும், இந்திரனுங்கூட அறியார்,' என்பது கருத்து.

இது கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் 2 மைலில் உள்ளது.

701. 'நெஞ்சே, செய்தற்கு அரிய செய்வோமை, செய்யாமல் வலியால் மயக்குவர் ஐவர்; 'நயக்கலவி சிந்தி; விண் நகரம் புர,' என்பர்; திருச்செங்கண்மால் நந்திபுர விண்ணகரம் நாடு,' என இயைக்க.

அரிய - அருமையான செயல்களை, செய்வோமை - செய்கின்ற நம்மை, செய்யாமல் - (அவற்றைச்) செய்யாதபடி, வலியால் - வல்லமையால், ஐவர் - ஐம்பொறிகளாகிய பகைவர், நயக்கலவி சிந்தி - இன்பத்திற்சிறந்த சிற்றின்பத்தை நினை, விண் நகரம் புர - வானுலகை ஆள், நாடு - விரும்பு.

'ஐவர் ஆணை வழிச் செல்லாமல், ஆண்டவன் திருப்பதியைத் தரிசிக்க விரும்பு,' என்பது கருத்து.

இது கும்பகோணத்திற்குத் தென்மேற்கில் 3 மைலில் உள்ளது.

702. 'நெஞ்சமே, நாடுதும் வா; கூடுதும் வா; சூடுதும் வா,' என இயைக்க.

பதிகள் - க்ஷேத்திரங்களை, நாடுதும் - விரும்பித் தரிசிப்போம், இந்தளத்து அகிலின் வீசு புகை வாசம் வீதி எழும் ஆதி இந்தளூரான் அடி சூடுதும் - தூபகலசத்தில் இட்ட அகிற்கட்டையிலிருந்து எழும் புகையின் மணம் தெருவில் பரவுகின்ற பழமை

703] 23. திருச்சித்திரகூடம் [௩௦

அடியா லுலகெல்லாம் அன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியேல் நெஞ்சே!—கொடிதாய
குத்திரகூ டங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்
சித்திரகூ டங்கருதிச் செல்.

704] 24. திருச்சீராம விண்ணகரம் [௩௧

செல்லுந் தொறுமுயிர்ப்பின் செல்லும் இருவினையை
வெல்லு முபாயம் விரும்புவீர்!—தொல்லரங்கர்
சீராம விண்ணகரஞ் சேர்மின்; பின் மீளாத
ஊராம விண்ணகர முண்டு.

705] 25. திருக்கூடலூர் [௩௨

உண்டுகேட் டுற்றுமோந் தும்பார்க்கு மைவர்க்கே
தொண்டுபட லாமோவுன் றொண்டனேன்?—விண்டிலங்கும்

---

யான திருவிந்தளூரிலுள்ளவனை பெருமான் திருவடிகளை (நம் தலையிற்) சூடுவோம்.

இத்தலத்தை வடமொழியாளர் 'சுகந்த வனம்' ' என வழங்குவர்.

703. 'நெஞ்சே, கூடுதியேல், சித்திர கூடம் கருதிச் செல்,' என இயைக்க.

அன்று - வாமனாவதார காலத்தில், நெடியானை - திரிவிக்கிரமனை, கூடுதியேல் - சேர விரும்புவாயாயின், கொடிதாய - தீயதாகிய, குத்திரக்கூடு - இழிவான சரீரத்தை, அங்கி - நெருப்பு, கொளுந்தா முன் - எரியாத முன்னம், கோவிந்தன் - கோவிந்தராஜப் பெருமானுக்குரிய, கருதி - தியானித்து, செல் - நடப்பாயாக.

'சித்திரகூடத் தரிசனம் உனக்கு நற்கதி அளிக்கும்,' என்பது கருத்து. இது சிதம்பரம் கோவிந்தராசன் திருப்பதி.

704. செல்லுந்தொறும்-போகுமிடமெல்லாம், உயிர்ப்பின்-உயிரின் பின்னே, இரு வினையை - நல்வினை தீவினைகளை, உபாயம்-தந்திரத்தை, விரும்புவீர் - விரும்புகின்ற உலகத்தவரே, சேர்மின் - அடையுங்கள், மீளாத ஊராம் அவ்விண் நகரம் - திரும்பாத நகரமாகிய அந்தப் பரம பதம், உண்டு - (உமக்கு) நிச்சயமாகக் கிட்டும்.

'சீராம விண்ணகரம்' என்பது 'சீர்காழி' எனவும் வழங்கும்.

705. 'ஐம்படையாய், உடையாய், கூடலூராய், உன் தொண்டனேன் தொண்டு படலாமோ? இதனைக் கூறு,' என இயைக்க,

ஆடலூர் நேமிமுத லைம்படையாய்! அன்புடையாய்!
கூடலூ ராய்! இதனைக் கூறு.

706] 26. திருக்கண்ணங்குடி [௩௩

கூறுபுகழ்த் தன்னடிக்கே கூட்டுவனோ, இன்னமென்னை
வேறுபடப் பல்பிறப்பில் வீழ்த்துவனோ,—தேறுகிலேன்!
எண்ணங் குடியாய் இருந்தானின் றன்கிடந்தான்
கண்ணங் குடியான் கருத்து.

707] 27. திருக்கண்ணமங்கை [௩௪

கருத்தினால் வாக்கினால் நான்மறையுங் காணா
ஒருத்தனைநீ நெஞ்சே! உணரில்—பெருத்தமுகில்

விண்டு இலங்கும் - விட்டு விட்டு ஒளி வீசும், ஆடல் ஊர் நேமி முதல் - வெற்றி வாய்ந்த சக்கராயுதம் முதலிய, ஐம்படையாய் - பஞ்சாயுதமுடையவனே, அன்பு உடையாய் - தயவுடையானே, கூடலூராய் - கூடலூரில் இருப்பவனே, தொண்டனேன் - அடியவனாகிய யான், உண்டு - சுவைத்து, கேட்டு - சிரவணஞ் செய்து, உற்று - பரிசித்து, மோந்து - வாசம் பார்த்து, பார்க்கும் - (பொருளைக்) காணும், ஐவர்க்கே - ஐம்பொறிகளாகிய பகைவர்க்கே, தொண்டுபடல் ஆமோ - அடிமை செய்தல் தகுமோ?

தேவர் கூடி வணங்கும் தலமாதலின் 'திருக்கூடலூர்' என்பது காரணப் பெயர் என்பர் பெரியோர்.

706. '(என்) எண்ணம் குடியாய் இருந்தான் நின்றான் கிடந்தான்—கண்ணங்குடியான்—என்னைக் கூறு புகழ்த் தன் அடிக்கே கூட்டுவனோ, இன்னம் வேறுபடப் பல் பிறப்பில் வீழ்த்துவனோ? கருத்துத் தேறுகிலேன்,' என இயைக்க.

(என்) எண்ணம் - என் மனத்தில், குடியாய் - குடிகொண்டு, கிடந்தான் - படுத்துள்ளவனும், கண்ணங்குடியான் - திருக்கண்ணங்குடியில் இருப்பவனும் ஆன பெருமான், கூறு - சிறப்பித்துப் பேசப்படுகின்ற, வேறுபட - மாறாக, வீழ்த்துவனோ - தள்ளுவனோ, கருத்து - (அவன்) எண்ணத்தை, தேறுகிலேன் - அறியும் ஆற்றல் இல்லேன்.

707 'நெஞ்சே, நீ உணரின் காண்,' என இயைக்க.

கருத்தினால் - எண்ணத்தாலும், வாக்கினால் - சொல்லாலும், ஒருத்தனை - ஒப்பற்ற பெருமானை, உணரின் - அறியக்கருதினால், வண்ணம் - (அவன்) நிறம், பெருத்த முகில் - கருக்கொண்ட

வண்ணமங்கை கண்கால் வனசந் திருவரங்கம்
கண்ணமங்கை யூரென்று காண்.

708] 28. திருக்கவித்தலம் [௩௫

காணியும் இல்லமும் கைப்பொருளும் ஈன்றோரும்
பேணிய வாழ்க்கையும் பேருறவும்—சேணில்
புவித்தலத்தில் இன்பமும் பொங்கரவம் ஏறிக்
கவித்தலத்திற் கண்டுயில்வோன் கால்.

709] 29. திருவெள்ளியங்குடி [௩௬

காலளவும் போதாக் கடல்ஞாலத் தோர்கற்ற
நூலளவே யன்றி நுவல்வாரார்—கோலப்
பருவெள்ளி யங்குடியான் பாதகவூண் மாய்த்த
திருவெள்ளி யங்குடியான் சீர்?

---

கானமேகம், அம் கை - அழகிய கைகளும், வனசம் - செந்தாமரைப் பூக்கள், ஊர் - (அவன்) இருப்பிடம், காண் - தெரிந்து கொள்.

708. காணி - பூமி, பேணிய - விரும்பிய, பேருறவு - பெருஞ்சுற்றம், சேணில் புவித்தலத்தில் இன்பம் - விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனுபவிக்கப்படும் இன்பங்கள், பொங்கு அரவம் - கோபிக்கும் ஆதிசேடன்மேல், கால் - திருப்பாதங்களே.

'எனக்கு அனைத்துமாய் இருப்பன ஆண்டவன் திருப்பாதங்களே,' என்பது கருத்து.

கவித்தலம் - கபிஸ்தலம்; அனுமனுக்கு ஆண்டவன் தரிசனந்தந்த தலம்.

709. "சீர் நுவல்வார் ஆர்?" என இயைக்க.

கோலப் பரு வெள்ளி அம் குடியான் - அழகிய பெரிய வெள்ளிமலையை அழகிய குடியிருப்பாகக் கொண்டவனை சிவன், பாதக ஊண் - (பிரமன் தலையைக் கிள்ளியதால் ஏற்பட்ட) பாவத்தாலுண்டான யாசித்துண்ணுவதை, மாய்த்த - ஒழித்த, சீர் - சிறப்பை, கால் அளவும் போதாக் கடல் ஞாலத்தார் - (வாமனவதாரத்தில் அளந்த போது) ஒரு திருவடியளவுக்கும் போதாத கடலால் சூழப்பட்ட உலகத்தவருள், நுவல்வார் - (முழுதும்) சொல்ல வல்லவர்.

வெள்ளி - சுக்கிராசாரியார். ஆண்டவன் அவருக்குத் தரிசனந்தந்த இடமாதலின், 'வெள்ளியங்குடி' என்பது காரணப் பெயர்.

710] 30. திருமணி மாடக் கோயில் [௩௭

சீரே தருங்கதியிற் சேருகைக்கு நானுன்னை
நேரே வணங்கினேன் நெஞ்சே!நீ—பாரில்
அணிமாடக் கோயில் அரங்கனார் நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கு.

711] 31. திருவைகுந்த விண்ணகரம் [௩௮

வணங்கேன் பிறதெய்வம்; மாலடியா ரல்லாக்
குணங்கேடர் தங்களுடன் கூடேன்;—இணங்கிநின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவேன்; ஈதன்றோ
வைகுந்த விண்ணகர வாழ்வு?

712] 32. திரு அரி மேய விண்ணகரம் [௩௯

வாழும் அடியார் மடநெஞ்சே! நம்மளவோ?
தாழுஞ் சடையோன் சதுமுகத்தோன்—பாழிக்
கரிமேய விண்ணகரக் காவலோன் கண்டாய்
அரிமேய விண்ணகரத் தார்க்கு.

---

710. 'நெஞ்சே, சேருகைக்கு உன்னை வணங்கினேன்; நீ மணி மாடக் கோயில் வணங்கு,' என இயைக்க.

கதி - மோட்சத்தில், சேருகைக்கு - சேர்தற்காக, நேரே - நேர்மையாக, அணிமாடக் கோயில் - அழகிய மாளிகைகளுடைய பெரிய கோயில் என்று பேசப்படுகின்ற, நாங்கூர் - திருநாங்கூரைச் சார்ந்துள்ள.

711. '(நான்) வணங்கேன்; கூடேன்; வாழ்த்துவேன். ஈதன்றோ வாழ்வு?' என இயைக்க.

குணக்கேடர்-தீயகுணமுடையவர், இணங்கி-கூடி, வாழ்த்துவேன் - துதிப்பேன், ஈது அன்றோ - இது அல்லவா, வாழ்வு - வாழ்க்கையாவது.

712. 'மடநெஞ்சே, அரிமேய விண்ணகரத்தார்க்கு வாழும் அடியார் நம் அளவோ? சடையோன், சதுமுகத்தோன், காவலோன்,' என இயைக்க.

நம் அளவோ-நம் அளவில் அமைவரோ, தாழும் சடையோன்-(பெருமானை) வணங்கும் சடாதாரியான சிவனும், சதுர்முகத்தோன் - பிரமனும், பாழிக்கரிமேய - பலத்தையுடைய ஐராவதமெனனும் யானை பொருந்திய, விண்ணகரக் காவலோன்-இந்திரன். 'நாமே அன்றிச் சிவனும் பிரமனும் இந்திரனுங்கூடப் பெருமானுக்கு அடியவரேயாவர்,' என்பது கருத்து.

திருவரிமேய விண்ணகரம் - திருநாங்கூரில் உள்ள குடமாடு கூத்தன் சந்நிதி.

713] 33. திருத்தேவனார் தொகை [சo

ஆர்க்கும் வலம்புரியால் அண்டமும் எண்டிசையும்
கார்க்கடலும் வெற்புங் கலங்கினவால்—சீர்க்கும்
திருத்தேவ னார்தொகைமால் செவ்வாய்வைத் தூதத்
தருத்தேவ னார்தொகையுஞ் சாய்ந்து.

714] 34. திருவண் புருடோத்தமம் [சக

ச்சாய்ந்த திருவரங்கம் தண்வேங் கடங்குடந்தை
ஏய்ந்த திருமா லிருஞ்சோலை—பூந்துவரை
வண்புரு டோத்தமமாம் வானவர்க்கும் வானவனும்
ஒண்புரு டோத்தமன்றன் ஊர்.

715] 35. திருச்செம்பொன் செய் கோயில் [சஉ

தலைவி தனது ஆற்றாமை மிகுதியால் மடலூரத் துணிதல்

ஊர்வேன் மடலை; ஒழிவேன் மடநாணம்;
சேர்வேன் கரிய திருமாலைப்—பாரறிய
அம்பொன்செய் கோயி லரங்க னணிநாங்கூர்ச்
செம்பொன்செய் கோயிலினிற் சென்று.

---

713. 'மால் ஊத, வலம்புரியால் தொகையும் சாய்ந்து, அண்டமும் திசையும் கடலும் வெற்பும் கலங்கின,' என இயைக்க.

சீர்க்கும் - சிறப்படைந்த, மால் - திருமால், ஊத - (பாரி சாதத் தருவை விண்ணுலகினின்று கொண்டு வருகையில்) ஊதும் போது, ஆர்க்கும் வலம் புரியால் - ஆரவாரித்த பாஞ்சசன்னியம் என்னும் வலம்புரி சங்கத்தொனியினால், தருத் தேவனார் தொகையும் - கற்பகவிருட்சத்திற்குரியவராகிய தேவர் கூட்டமும், சாய்ந்து - வலி தொலைய, அண்டமும் - உலகங்களும், கார்க்கடலும் - கருநிறமுடைய சமுத்திரமும், வெற்பும் - அட்ட குல மலைகளும், கலங்கின - நடுங்கின.

இது திருச்சங்கின் மகிமை கூறியது.

714. 'புருடோத்தமன்றன் ஊர்,........வண்புருடோத்தமம்,' என இயைக்க.

வானவர்க்கும் வானவன் ஆம் - தேவாதி தேவனாகிய, ஒண் - சிறந்த, குடந்தை - கும்பகோணம், ஏய்ந்த - பொருந்திய, பூந்துவரை - அழகிய துவாரகை.

புருடோத்தமம்-யாவரினும் சிறந்த பெருமான் இருப்பிடம்.

715. 'பார் அறிய ஒழிவேன், ஊர்வேன், சென்று சேர்வேன்,' என இயைக்க.

பார் - உலகத்தவர், ஒழிவேன் - துறப்பேன், மடல் - பனங் கருக்கு மடலால் செய்யப்பட்ட குதிரை.

716] 36. திருத்தெற்றியம்பலம் [சங

சென்றது காலம்; திரைநரைமூப் பானஇனி
என்றுகொல் சாவறியோம் என்னெஞ்சே!—கன்றால்
உருத்தெற்றி அம்பலத்தை ஓர்விளவின் வீழ்த்தான்
திருத்தெற்றி யம்பலத்தைச் சேர்.

717] 37. திருமணிக்கூடம் [சச

சேராது முன்செய்த தீவினை;பின் செய்வதுவும்
வாரா தினி;நீ மடநெஞ்சே!—நேராக்
குருமணிக்கூ டத்தானைக் கொம்புபறித் தானைத்
திருமணிக்கூ டத்தானைச் செப்பு.

718] 38. திருக்காவளம் பாடி [சரு

செப்பேன் மனிதருக்கென் செஞ்சொற் றமிழ்மாலை;
கைப்பேன் பிறதெய்வங் காண்பாரை;—எப்போதும்

---

716. 'நெஞ்சே, சேர்,' என இயைக்க.

காலம் சென்றது - (நம்) வாழ்நாள் கழிந்தது, திரை - தோலின் சுருக்கமும், நரை - மயிர் வெளுப்பும், மூப்பு - கிழப் பருவமும், ஆன-உண்டாய்விட்டன, என்றுகொல்-எந்நாளிலோ, விளவின் அம் பலத்தை - விளாமரத்தின் அழகிய பழத்தை, உருத்து - சினந்து, கன்றால் - பசுக்கன்றால், எற்றி - மோதி, வீழ்த்தான் - விழச்செய்த கண்ணனெம்பெருமானின், சேர் - அடைவாயாக.

கன்றினால் விளவெறிந்தது, கன்றுருக் கொண்டு வந்த வற்சாசுரனையும் விளங்கனியுருக் கொண்ட கபித்தாசுரனையும் கண்ணபிரான் அழித்ததைக் குறிக்கும்.

இத்தலம் சீகாழிக்கு ஐந்து மைல் தூரத்தில் உள்ளது.

717. 'மடநெஞ்சே, நீ செப்பு; தீவினை சேராது; பின் செய்வதுவும் இனி வாராது,' என இயைக்க.

நேரா - நேராக, குருமணிக் கூடத்து - நிறம் பொருந்திய மாணிக்கக் கூடத்திலிருந்த, ஆனை - (குவலயாபீடமென்னும் கம்ஸனது) யானையின், கொம்பு - தந்தங்களை, செப்பு - துதி, பின் செய்வதுவும் - இனிச்செய்யும் பாவமும், வாராது - உன்னை நெருங்காது.

'போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினிற் றூசாகும் செப்பு,' என்னும் அண்டாள் திருவாக்கு இங்கு ஒப்பு நோக்கற்குரியது.

இத்தலம் சீகாழிக்கு ஐந்து மைல் தூரத்திலுள்ளது.

718. 'நான் செப்பேன்; கைப்பேன்; தொழுது, பாடி, திரிவேன்,' என இயைக்க.

காவளம்பா டித்திருமால் காற்று மரைதொழுது
நாவளம்பா டித்திரிவே னான்.

719] 39. திருவெள்ளக் குளம் [௪௬

நானடிமை செய்யவிடாய் நானானேன் ; எம்பெருமான்
தானடிமை கொள்ளவிடாய் தானானான் ;—ஆனதற்பின்
வெள்ளக் குளத்தே விடாயிருவ ருந்தணிந்தோம்
உள்ளக் குளத்தேனை யொத்து.

720] 40. திருப்பார்த்தன் பள்ளி [௪௭

ஒத்தமரர் ஏத்தும் ஒளிவிசும்பும் பாற்கடலும்
இத்தலத்திற் காண்பரிய என்னெஞ்சே !—சித்துணர்ந்த
தீர்த்தன்பள் ளிக்கிருந்து செப்பவெளி நின்றானைப்
பார்த்தன்பள் ளிக்குட் பணி.

---

செஞ்சொல் - தூய சொற்களால் இயன்ற, செப்பேன் - பாடேன், கைப்பேன் - வெறுப்பேன்; தொழுது - வணங்கி, வளம் பாடி - அவன் புகழைப் பாடி, திரிவேன் - சஞ்சரிப்பேன்.

இதனால், ஐயங்கார் மறந்தும் புறந்தொழாத் தமது மாண்பைப் புலப்படுத்துகின்றார்.

இத்தலம் வைதீசுவரன் கோவிலுக்கு ஐந்து மைல் தூரத்திலுள்ளது.

719. விடாய் ஆனேன் - பேராவல் கொண்டேன் ; உள்ளக் குளத்தேனை ஒத்து - மனத்தில் பாகும் தேனும் ஒத்து, விடாய் தணிந்தோம் - ஆவல் தணியப் பெற்றோம்.

'நான், தான்' என்பன இருமுறை வந்தது இருவர் ஆவலையும் மிகுத்துக் கூறும்பொருட்டென்க. 'இருவர்' என்பது 'இருவேமும்' எனப் பொருள்பட்டு இடவழுவமைதி ஆயிற்று.

இத்தலம் சீகாழிக்கு நான்கு மைல் தூரத்திலுள்ளது.

720. 'நெஞ்சே, விசும்பும் பாற்கடலும் இத்தலத்தில் காண்பு அரிய; செப்ப வெளிநின்றானைப் பார்த்தன் பள்ளிக்குள் வணங்கு,' என இயைக்க.

அமரர் - தேவர், ஒளி விசும்பும் - ஒளி மயமான பரமபதமும், இத்தலத்தில் - இந்த இடத்தில், காண்பு அரிய - பார்த்தற்கு அரியவை, சித்து - (உயிரின்) உண்மை நிலை, தீர்த்தன் - மேலோனான பிரகலாதன், பள்ளிக்கு இருந்து - பள்ளிக்கூடத்திலிருந்து, செப்ப - (இரணியனுக்கு 'இறைவன் எங்குமுளன்,' என்று) சொல்ல, வெளி நின்றானை - (இரணியன் புடைத்த தூணிலிருந்து தோன்றி) வெளி நின்ற நரசிங்கனை.

## பாண்டி நாட்டுத் திருப்பதிகள், 18.

721] 41. திருமாலிருஞ்சோலை மலை [சஅ

பணிந்தேன் திருமாலை ; பாமாலை தாளில்
அணிந்தேன் ; அருட்டஞ்ச மாகத்—துணிந்தேன் ;
திருமா லிருஞ்சோலை சேர்ந்தேன் எனக்கு
வருமா லிருஞ்சோதி வான்.

722] 42. திருக்கோட்டியூர் [சகூ

வான்பார்க்கும் பைங்கூழ்போல் வாளா வுனதருளே
யான்பார்க்க நீபார்த் திரங்கினாய்—தேன்பார்ப்பின்
ஓசைத் திருக்கோட்டி யூரானே ! இன்னமுமென்
ஆசைத் திருக்கோட்டி யாள்.

723] 43. திருமெய்யம் [ருo

பிரிவாற்றாத தலைவி இரங்கல்

ஆளாய் உனக்கன்பாய் ஆசையாய் நாணிலியாய்
வாளா மனைவியென்று வாழ்வேனைக்—கேளாய்;

---

இத்தலம் சீகாழிக்கு ஏழு மைலில் உள்ளது ; இறைவன் அருச்சுனனுக்குச் சேவை சாதித்த இடம் (பார்த்தன் - பிருதையின் மகன் - தத்திதாந்த நாமம்.)

721. தஞ்சமாக - ஆதரவாக, துணிந்தேன் - நிச்சயித்தேன், இருஞ்சோதி வான் - பேரொளி மயமான பரமபதம், வரும் - (நிச்சயம்) கிட்டும், ஆல் - அசை.

இத்தலம் மதுரைக்குப் பன்னிரண்டு மைலில் உள்ளது ; 'அழகர் கோயில்' என வழங்கப்படுவது.

722. 'தேன் பார்ப்பின் ஓசைத் திருக்கோட்டியூரானே, வான் பார்க்கும் பைங்கூழ்போல் வாளா உனது அருளே யான் பார்க்க, நீ பார்த்து இரங்கினாய் ; இன்னமும் என் ஆசைத்திருக்கு ஓட்டி ஆள்,' என இயைக்க.

தேன் பார்ப்பு - தேனீக்குஞ்சுகளின், ஓசை - ரீங்காரத்தையுடைய, வான் - மழையை, பைங்கூழ் - பசுமையான பயிர்கள், வாளா - (வேறு) முயற்சி இன்றி, இரங்கினாய் - (என்மீது) இரக்கம் கொண்டாய் ; ஆசைத்திருக்கு - (உலக வாழ்வின்) விருப்பாகிய மாறுபாட்டை, ஓட்டி - (என்னை விட்டு) ஓடச்செய்து, ஆள் - (என்னை) அடிமை கொள்.

இத்தலம் 'திருமயம்' என்னும் இடத்திலிருந்து இருபத்தொரு மைலில் உள்ளது.

723. 'மாயா உனக்கு ஆய் மனைவி என்று வாழ்வேனைக் கேளாய் ; மதன் வரும்,' என இயைக்க,

திருமெய்ய மாயா! சிலைகால் வளைத்து
வருமெய்ய மாயா மதன்.

724] 44. திருப்புல்லாணி [௫௧

மதயானைக் கோள்விடுத்து மாமுதலை கொன்ற
கதையா லிதயங் கரையும்—முதலாய
புல்லாணி மாலே! புறத்தோர் புகழிருப்பு
வல்லாணி யென்செவிக்கு மாறு.

725] 45. திருத்தண்காலூர் [௫௨

தலைவனைப் பிரிந்த தலைவி வாடைக்கு வருந்தி இரங்கல்

மாறுபட வாடையெனும் வன்கால்வந் தென்முலைமேல்
ஊறுபட வூர்ந்த வுளைவெல்லாம்—மாறத்
திருத்தண்கால் ஊரான் திருத்தண் டுழாயின்
மருத்தண்கால் ஊராதோ வாய்ந்து?

---

மாயா - மாயவனே, நாண்இலி-வெட்கமில்லாதவள், வாளா-பயனின்றி, வாழ்வேனை - வாழ்கின்ற என்னை, கேளாய் - (நீ ஏனென்று) கேட்கமாட்டாய், மாயா மதன் - அழியாத மன்மதன், சிலை கால் வளைத்து - (கரும்பு) வில்லைக் கால் வளைத்து, எய்ய - (என்மேல் மலர்க் கணைகளைச்) செலுத்த, வரும் - வருவான். 'இதற்கு யான் என்செய்வேன்!' என்பது கருத்து.

இத்தலம் 'திருமயம்' என்றும் வழங்கப்படும்.

724. 'மாலே, கதையால் இதயம் கரையும்; புறத்தோர் புகழ் என் செவிக்கு மாறு; இருப்பு வல் ஆணி,' என இயைக்க.

முதலாய - முதற்கடவுளான, கோள் விடுத்து - துன்பத்தை நீக்கி, இதயம் - (எனது) உள்ளம், புறத்தோர் புகழ் - அயல் தேவரின் புகழ், மாறு - பகையாம், இருப்பு வல் ஆணி - இரும்பாலான வலிய ஆணி போன்றதாகும்.

'உன் புகழே என் செவி கேட்க விரும்புவது,' என்பது கருத்து.

இத்தலம் இராமநாத புரத்திற்கு ஆறு மைலில் உள்ளது; 'தர்ப்ப சயனம்' என வழங்கப்படுவது.

725. 'வாடை எனும் வன்கால் வந்து என் முலைமேல் ஊறு பட ஊர்ந்த உளைவு எல்லாம் மாற, திருத்தண்காலூரான் திருத்தண் துழாயின் மருத் தண்கால் வாய்ந்து ஊராதோ?' என இயைக்க.

வன்கால் - வலிய காற்று, ஊறுபட - துன்பமுண்டாகும்படி, ஊர்ந்த உளைவு எல்லாம் - தவழ்ந்ததாலுண்டான வருத்தம் முற்

726] 46. திருமோகூர் [ருடு

அன்னத்தைத் தூது விடுத்த தலைவி அதனைக் குறித்து ஐயுறல்

வாயால் மலர்கோதி வாவிதொறும் மேயுமோ!
மேயாமல் அப்பால் விரையுமோ!—மாயன்
திருமோகூர் வாயின்று சேருமோ! நாளை
வருமோகூர் வாயன்னம் வாழ்ந்து!

727] 47. திருக்கூடல் (தென்மதுரை) [ருச

வாழ்விப்பான் எண்ணமோ, வல்வினையில் இன்னமென்னை
ஆழ்விப்பா னெண்ணமோ! அஃதறியேன்:—தாழ்விலாப்
பாடலழ கார்புதுவைப் பட்டர்பிரான் கொண்டாடும்
கூடலழ கா!நின் குறிப்பு.

---

றும், மருத்தண்கால் - மணம் பொருந்திய குளிர்ச்சியான காற்று, வாய்ந்து - பொருந்தி, ஊராதோ - தவழாதோ?

இத்தலம் சிவகாசிக்கு இரண்டு மைல் தூரத்தில் உள்ளது.

726. 'கூர்வாய் அன்னம் வாயால் மலர் கோதி வாவிதொறும் மேயுமோ! மேயாமல் வாழ்ந்து அப்பால் விரையுமோ! மாயன் திருமோகூர்வாய் இன்று சேருமோ! நாளை வருமோ!' என இயைக்க.

கூர்வாய் - கூர்மையான அலகையுடைய, வாவிதொறும் - குளங்தோறும், வாழ்ந்து - என் விருப்பப்படி நடந்து. (வாழ்தல்-விதிப்படி நடத்தல்)

அன்னத்தை ஆசாரிய அம்சமென்பர் பெரியோர்.

இத்தலம் மதுரைக்கு ஏழு மைல் தூரத்தில் உள்ளது.

727. 'தாழ்வு இலாப் பாடல் அழகு ஆர் புதுவைப் பட்டர் பிரான் கொண்டாடும் கூடல் அழகா, நின் குறிப்பு என்னை வாழ்விப்பான் எண்ணமோ? இன்னம் வல் வினையில் ஆழ்விப்பான் எண்ணமோ? அஃது அறியேன்!' என இயைக்க.

புதுவைப் பட்டர் பிரான் - பெரியாழ்வார், நின் குறிப்பு - உனது திருவுள்ளக் கருத்து, வாழ்விப்பான் - வாழச்செய்ய, ஆழ்விப்பான் - ஆழச் செய்ய, புதுவை - 'புத்தூர்' என்பதன் மரூஉ.

வாழ்விப்பான், ஆழ்விப்பான் - 'பான்' ஈற்று வினையெச்சங்கள்.

கூடல் - தென்மதுரை.

728] 48. ஸ்ரீவில்லிபுத்தூர் [௫௫

குறித்தொருவர் கொண்டாடுங் கொள்கைத்தோ கோதை
நிறத்தவூர் விண்டுசித்தர் நீடூர்—பிறப்பிலியூர்
தாழ்வில்லி! புத்தூரென் றைவர்க்குத் தானிரந்தான்
வாழ்வில்லி புத்தூர் வளம்?

729] 49. குருகூர் [௫௬

வளந்தழைக்க வுண்டாலென், வாசமணந் தாலென்,
தெளிந்தகலை கற்றாலென் சீசீ!—'குளிர்ந்தபொழில்
தண்குருகூர் வாவிச் சடகோபன் ஊரெங்கள்
வண்குருகூர்,' என்னாத வாய்.

730] 50. தொலைவில்லி மங்கலம் [௫௭

வாயு மனைவியர்பூ மங்கையர்கள் எம்பிராற்(கு)
ஆயுதங்கள் ஆழிமுதல் ஐம்படைகள்;—தூய

---

728. 'வளம் ஒருவர் குறித்துக் கொண்டாடும் கொள்கைத்தோ?' என இயைக்க.

கோதை நிறத்த - ஸ்ரீ ஆண்டாள் மேம்படச் செய்த, விண்டு சித்தர் - பெரியாழ்வார், நீடு ஊர் - பெருமை பெற்ற இடம், வில்லி புத்தூர் ஐவர்க்குத் தாழ்-வில்லாளியான துரியோதனனே புதிய ஊர்களையேனும் பஞ்ச பாண்டவர்க்குக் கொடு, இரந்தான் - யாசித்தவனான திருமால், கொள்கைத்தோ - தன்மையுடையதோ?

'ஸ்ரீ வில்லிபுத்தூர், அறிஞர் பாராட்டைக் கடந்து நிற்கும் சிறப்பினை உடையது,' என்பது கருத்து.

இத்தலம் 'வில்லி' என்னும் வேடனால் நிருமிக்கப்பட்ட புதுவூராதலால் இப்பெயர்த்தாயிற்று.

729. 'என்னாத வாய், உண்டால் என், மணந்தால் என், கற்றால் என்? சீசீ!' என இயைக்க.

பொழில் - சோலை, குருகு ஊர் தண் வாவி - பறவைகள் வாழும் குளிர்ச்சியான நீர் நிலைகளையுடைய, சடகோபன் - நம்மாழ்வார், என்னாத - என்று சொல்லி மகிழாத, வளம் தழைக்க - வளப்பமாக, என் - என்ன பயன், வாசம் மணந்தால் - வாசனை வீசினால், கலை - சாஸ்திரம், சீ சீ - (இது) இகழத்தக்கது.

இத்தலம், 'ஆழ்வார் திரு நகரி' என்றும் வழங்கப்படும்.

730. 'எம்பிராற்கு வாயும் மனைவியர், பூமங்கையர்கள்; ஆயுதங்கள், ஆழி முதல் ஐம்படைகள்; ஊர் தூய தொலைவில்லிமங்கலம்; தோள், புருவம், மேனி—மலை, வில், இமம் கலந்தவான்,' என இயைக்க.

தொலைவில்லி மங்கலமூர் ; தோள்புருவ மேனி
மலைவில்லி மங்கலந்த வான்.

731] 51. ஸ்ரீவரமங்கை (வான மாமலை) [ருஅ

வானோர் முதலா மரமளவா எப்பிறப்பும்
ஆனேற் கவதியிட லாகாதோ—தேனேயும்
பூவர மங்கை புவிமங்கை நாயகனே !
சீவர மங்கையர சே !

732] 52. திருப்பேரை [ருக

அரைசாகி வையமுழு தாண்டாலும் இன்பக்
கரைசார மாட்டார்கள் கண்டீர்—முரைசாரும்
தென்றிருப்பே ரைப்பதியான் சீர்கேட்டு நாவிலவன்
தன்றிருப்பே ரைப்பதியா தார்.

---

பிரார்க்கு - பெருமானுக்கு, வாயும் - பொருந்திய, பூமங்கையர்கள் - திருமகளும் நிலமகளுமாவார்கள் ; ஆழி - சக்கரம், ஐம்படை - பஞ்சாயுதங்கள், தூய - பரிசுத்தமான, 'தோள்-மலை, புருவம் - வில், மேனி - வான்' என இயைக்க. இமம் - பனி.

இத்தலம், ஆழ்வார் திரு நகரிக்கு இரண்டு மைல் தூரத்தில் உள்ளது.

731. தேன் ஏயும் பூ வர மங்கை புவி மங்கை நாயகனே, சீவரமங்கை அரசே, வானோர் முதலா மரம் அளவா எப்பிறப்பும் ஆனேற்கு அவதி இடல் ஆகாதோ ?' என இயைக்க.

ஏயும் - பொருந்திய, பூவர மங்கை - திருமகள், புவி மங்கை - நிலமகள், முதலா - முதலாக, அளவா - அளவாக, எப்பிறப்பும் ஆனேற்கு - எல்லாப் பிறப்பும் ஆன எனக்கு, அவதி இடல் - முடிவைச் செய்தல்.

இத்தலம் 'வானமாமலை' என்றும் 'தோதாத்திரி' என்றும் வழங்கப்படும்; ஸ்ரீவைகுண்டத்திற்கு ஒன்றரை மைலில் உள்ளது.

732. 'முரசு ஆரும் தென் திருப்பேரைப் பதியான் சீர் கேட்டு, அவன்றன் திருப்பேரை நாவில் பதியாதார், அரைசு ஆகி வையம் முழுது ஆண்டாலும், இன்பக்கரை சாரமாட்டார்கள்,' என இயைக்க. கண்டீர் - முன்னிலையசை.

முரசு ஆரும் - பேரிகை முழங்கும், சீர் - சிறப்பை, திருப்பேர் - 'மகரநெடுங்குழைக்காதர்' என்னும் சிறந்த பெயரை.

'அரைசு, முரைசு' என்பன 'அரசு, முரசு' என்பவற்றின் போலி.

இத்தலம் ஆழ்வார் திருநகரிக்கு மூன்று மைல் தொலைவில் உள்ளது.

733] **53. ஸ்ரீவைகுந்தம்** [சுO

தலைவியின் இளமை கண்ட செவிலி இரங்கல்

*தாருடுத்துத் தூசு தலைக்கணியும் பேதையிவள்*
*நேருடுத்த சிந்தை நிலையறியேன்—போருடுத்த*
*பாவைகுந்தம் பண்டொசித்தான் பச்சைத் துழாய்நாடும்*
*சீவைகுந்தம் பாடுந் தெளிந்து.*

734] **54. திருப்புளிங்குடி** [சுக

தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்

*தெளியும் பசும்பொற் சிறைக்காற்று வீச*
*விளியுந் துயர்போய் விடுமே—எளியேற்(கு)*
*அருளப் புளிங்குடிவாழ் அச்சுதனைக் கொண்டு*
*கருளப்புள் இங்குவந்தக் கால்.*

---

733. '*தார் உடுத்துத் தூசு தலைக்கு அணியும் பேதை இவள், தெளிந்து, போர் உடுத்த பாவை குந்தம் பண்டு ஒசித்தான் பச்சைத் துழாய் நாடும்; சீவைகுந்தம் பாடும்; நேர் உடுத்த சிந்தை நிலை அறியேன்,*' என இயைக்க.

*தார்* - மலர் மாலையை, *உடுத்து* - இடையிற்கட்டி, *தூசு* - ஆடையை, *பேதை இவள்* - அறிவு நிரம்பாத இப்பெண், *போர் உடுத்த* - போரை மேற்கொண்ட, *பாவை* - பெண்ணாகிய தாடகையின், *குந்தம்* - சூலத்தை, *பண்டு* - (இராமவதாரஞ்செய்த) முன் காலத்தில், *ஒசித்தான்* - முறித்தவனது, *நாடும்* - விரும்புவள்; *பாடும்* - பாடுவள்; *நேர் உடுத்த* - நேர்மை பொருந்திய, *சிந்தை நிலை* - மனநிலையை.

734. '*எளியேற்கு அருளப் புளிங்குடி வாழ் அச்சுதனைக் கொண்டு கருளப்புள் இங்கு வந்தக்கால், தெளியும் பசும்பொன் சிறை காற்று வீசத் துயர் விளியும்,*' என இயைக்க.

*எளியேற்கு* - எளியேனை எனக்கு, *அருள்* - அருள்செய்ய, *அச்சுதனை* - அழிவில்லாத பெருமானை, *கொண்டு* - ஏற்றிக்கொண்டு, *கருளப்புள்* - கருடனாகிய பறவையரசன், *வந்தக்கால்* - வந்தால், *தெளியும்* - மாற்றுயர்ந்த, *பசும்பொன் சிறை* - தங்க மயமான சிறகுகளிலிருந்து, *துயர் விளியும்* - என் துயரம் நீங்கும்.

இத்தலம், 'புளியங்குடி' எனவும் வழங்கப்படும்; ஸ்ரீவைகுண்டத்திற்கு இரண்டு மைல் தூரத்திலுள்ளது.

735] 55. திருவரகுணமங்கை [சுஉ

பாங்கி வெறி விலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடு நிற்றல்

காலமும் நோயும் கருதாத அன்னைமீர்!
வேலன் வெறியை விலக்குமின்கள்—மாலாம்
வரகுண மங்கையன்றாள் வண்டுழாய் மேலா
தரகுண மங்கை தனக்கு.

736] 56. திருக்குளந்தை (பெருங்குளம்) [சுரு

தனக்குடலம் வேறான தன்மை யுணரான்
மனக்கவலை தீர்ந்துய்ய மாட்டான்—நினைக்கில்
திருக்குளந்தை யாருரைத்த சீர்க்கீதை பாடும்
தருக்குளந்தை யாமலிருந் தால்.

737] 57. திருக்குறுங்குடி [சுச

தாலத் திழிகுலத்துச் சண்டாள மாறனும்
மேலத் தவரதனின் மேன்மைத்தே—கோலக்

*735. 'அன்னைமீர், வேலன் வெறியை விலக்குமின்கள்,' என இயைக்க.

காலமும் - (இவளது) பருவ நிலையையும், கருதாத - ஆராயாத, அன்னைமீர் - செவிலித்தாய்மாரே, மால் ஆம் - திருமாலான, தாள் வண்டுழாய் மேல் - திருவடியிற்சாத்தப்பட்ட வளமார்ந்த துளசிமாலையில், ஆதர குணம் - விருப்பம் (ஆகையால்), வேலன் வெறியை விலக்குமின்கள் - முருக பூசை செய்பவன் ஆவேச மாடுதலை நீக்குங்கள்.

இத்தலம், ஸ்ரீவைகுண்டத்திற்கு ஒன்றரை மைலில் உள்ளது.

736. (ஒருவன்) 'கீதைத் தருக்கு உளம் தையாமல் இருந்தால், உணரான்; உய்ய மாட்டான்,' என இயைக்க.

நினைக்கில் - யோசித்தால், திருக்குளந்தையார் - திருக்குளந்தைப் பெருமானான திருமால், சீர்க்கீதை - சிறப்புடைய பகவற்கீதையை, பாடும் தருக்கு - படிக்குங் களிப்பு, உளம் தையாமல் இருந்தால் - மனத்திற்பதியச் செய்யாதிருந்தால், தனக்கு உடலம் வேறான தன்மை - ஆன்மாவுக்குத் தேகம் வேறு பட்ட தன்மையை, உய்யமாட்டான் - பிழைக்க மாட்டான்.

இக்கலி கீதையின் பெருமை பேசிற்று.

இத்தலம் 'பெருங்குளம்' என வழங்கப்படுவது. ஸ்ரீவை குண்டத்திற்கு ஏழு மைலில் உள்ளது.

737. 'மாயன் குரைகழற்கு ஆளாகப் பெறும் குடியாய் வாழ்வார் பிறப்பு மேன்மைத்து,' என இயைக்க.

குறுங்குடிவாழ் மாயன் குரைகழற்கா ளாகப்
பெறுங்குடியாய் வாழ்வார் பிறப்பு.

738] 58. திருக்கோளூர் [சுரு

பிறப்பற்று மூப்புப் பிணியற்று நாளும்
இறப்பற்று வாழ இருப்பீர்!—புறப்பற்றுத்
தள்ளுங்கோள் ஊரரவில் தாமோ தரன்பள்ளி
கொள்ளுங்கோ ளூர்மருவுங் கோள்.

மலை நாட்டுத் திருப்பதிகள், 13.

739] 59. திருவனந்தபுரம் [சுசு

கோளார் பொறியைந்துங் குன்றியுட லம்பழுத்து
மாளாமுன் நெஞ்சே! வணங்குதியால்—கேளார்
சினந்தபுரஞ் சுட்டான் திசைமுகத்தான் போற்றும்
அனந்தபுரஞ் சேர்ந்தான் அடி.

---

கோலக் குறுங்குடி - அழகிய திருக்குறுங்குடியில், குரை கழற்கு - ஒலிக்கும் வீரகண்டையணிந்த திருப்பாதங்களுக்கு, ஆளாகப் பெறும் - அடிமையாகப்பெற்ற, குடியாய் - சந்ததியாராய், வாழ்வார் - வாழ்பவரின், ஞாலத்து - இம்மண்ணுலகில், சண்டாளம் - தாழ்பிறப்பு, மேலத்தவர் அதனின் - மேற்குடியிற் பிறந்தவர் பிறப்பினும், மேன்மைத்து - பெருமையுடையதாகும்.

இத்தலம், திருநெல்வேலிப் புகை வண்டிச் சந்திப்புக்கு இருபத்தேழு மைலில் உள்ளது.

738. 'இருப்பீர், புறப்பற்றுத் தள்ளுங்கோள்; கோளூர் மருவுங்கோள்,' என இயைக்க.

மூப்பு - கிழத்தன்மை, நாளும் - எக்காலத்தும், வாழ இருப்பீர் - வாழ விரும்பியிருப்பவராகிய உலகத்தவரே, புறப்பற்று - மமகாரத்தை, தள்ளுங்கோள் - நீக்குங்கள், ஊர் அரவில் - ஊரும் உயிராகிய பாம்பின்மேல், பள்ளிகொள்ளும் - துயில்கின்ற, மருவுங்கோள் - சேருங்கள்.

'திருக்கோளூரைத் தரிசித்தால் முத்தி பெறுவீர்,' என்பது கருத்து.

இத்தலம், ஆழ்வார் திருநகரிக்கு ஒரு மைலில் உள்ளது.

739. 'நெஞ்சே, குன்றி, பழுத்து, மாளாமுன் அனந்தபுரம் சேர்ந்தான் அடி வணங்குதி,' என இயைக்க.

கோள் ஆர் பொறி-வலிமை பொருந்திய கன்மேந்திரியங்கள், குன்றி - வலியொடுங்கி, பழுத்து - மூத்து, கேளார் - பகைவர்,

740] **60. திருவண்பரிசாரம்** [சுள

பிரிவாற்றுத தலைவியின் நிலை கண்ட செவிலி இரங்கல்

*அடியுங் குளிர்ந்தாள் அறிவுங் குலைந்தாள்*
*முடிகின்றாள் மூச்சடங்கு முன்னே—கடிதோடிப்*
*பெண்பரிசா ரங்குப் பிறப்பித்து மீளுவார்*
*வண்பரிசா ரங்கிடந்த மாற்கு?*

741] **61. திருகாட்கரை** [சுஅ

*மாற்கமுந் தாந்தாம் வழிபடுந் தெய்வமும்*
*ஏற்க வுரைப்பார்சொல் எண்ணுதே—தோற்குரம்பை*
*நாட்கரையா முன்னமே நன்னெஞ்சே! நாரணனும்*
*காட்கரையாற் காளாகாய் காண்.*

---

சினந்த - கோபித்த, புரம் - முப்புரங்களை, சுட்டான் - எரித்தவனை சிவனும், திசைமுகத்தான் - பிரமனும், அனந்தபுரம் சேர்ந்தான் - அனந்த புரத்திலுள்ளவனை பதுமநாபப் பெருமானுடைய, வணங்குதி - வணங்குவாயாக. ஆல் - ஈற்றசை.

740 '(தலைவி) குளிர்ந்தாள், குலைந்தாள், முடிகின்றாள்; மாற்கு ஓடிப் பெண் பரிசு பிறப்பித்து மீளுவார் ஆர்?' என இயைக்க.

அடி - பாதங்கள், குலைந்தாள் - சோர்வடைந்தாள், முடிகின்றாள் - உயிர்விட்டுக்கொண்டிருக்கின்றாள், கிடந்தமாற்கு - பள்ளி கொண்ட திருமாலுக்கு, கடிது ஓடி - விரைந்தோடி, பெண் பரிசு - இப்பெண்ணின் நிலைமையை, பிறப்பித்து - அவருக்கு விளங்கச்செய்து, மீளுவார் ஆர் - திரும்பத்தக்கவர் யாவர்?

இத்தலம், திருநெல்வேலிக்கு நாற்பது மைலில் உள்ளது.

741. 'நல் நெஞ்சே, உரைப்பார் சொல் எண்ணாது, தோல் குரம்பை நாள் கரையா முன்னமே நாரணனும் காட்கரையாற்கு ஆளாகாய்,' என இயைக்க.

*தாம் தாம் - அவரவர், வழிபடும் - வணங்கும், மார்க்கமும் - வழிகளும், ஏற்க - ஏற்றுக்கொள்ளும்படி, உரைப்பார் - பேசுபவராகிய அயல் மதத்தாரின், எண்ணாது - சிந்தனை செய்யாமல், தோல் குரம்பை - உடலின் வாழ் நாள், காட்கரையாற்கு - திருக்காட்கரையிலுள்ள பெருமானுக்கு, ஆளாகாய் - அடிமையாவாயாக, காண் - முன்னிலை அசை.

இத்தலம், இடப்பள்ளிக்கு இரண்டரை மைலில் உள்ளது.

742] 62. திருமூழிக்களம் [சாசஅ

காண்கின்ற ஐம்பூதங் கட்கும் இருசுடர்க்கும்
சேண்கலந்த இந்திரற்குந் தேவர்க்கும்—மாண்கரிய
பாழிக் களத்தாற்கும் பங்கயத்து நான்முகற்கும்
மூழிக் களத்தான் முதல்.

743] 63. திருப்புலியூர் [எo

தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்

முதல்வண்ணம் ஆமே மூலைவண்ணம்; முன்னே
விதிவண்ணம் நீங்கி விடுமே;—சதுரத்
திருப்புலியூர் நின்றான் திருத்தண் டுழாயின்
மருப்புலியூர் தென்றல் வரின்.

744] 64. திருச்செங்குன்றூர் [எக

வரவேண்டுங் கண்டாய் மதிகலங்கி விக்குள்
பொரவே உயிர்மாயும் போழ்து—பரமேட்டி!

---

742. 'ஐம்பூதங்கள் - நிலம் நீர் தீ காற்று ஆகாயம், இரு சுடர் - சூரிய சந்திரர், சேண் கலந்த - விண்ணுலகில் பொருந்திய, இந்திரற்கும் - தேவேந்திரனுக்கும், மாண் கரிய பாழிக் களத்தாற்கும் - மாட்சிமை வாய்ந்த கருநிறமுடைய வலிய கழுத்தை யுடையவனான சிவனுக்கும், நான்முகற்கும் - பிரமனுக்கும், முதல் - முதற்பொருள்.

743. 'துழாயின் தென்றல் வரின், முதல் வண்ணம் ஆம்; விதி வண்ணம் நீங்கிவிடும்,' என இயைக்க.

சதுரம் - நாகரிகமுடைய, நின்றான் - நின்ற திருக்கோலத்தி லுள்ளவனான பெருமானது, மரு - வாசனையை, பு(ல்)லி - தழுவி, ஊர் தென்றல் - தவழும்தென்றற்காற்று, வரின் - என்மீது வந்து படியுமானால், மூலை வண்ணம்- (காமவிகுதியாலுண்டான) தனத் தின் (பசலை) நிறம், முதல் வண்ணம் ஆம்-பழைய நிறமாய் மாறும், முன்னே விதி வண்ணம்-பழ வினையால் ஏற்பட்ட பிரிவுத் தன்மை.

அறத்தொடு நிற்றல் -களவுப் புணர்ச்சியை அறிவுறுத்துதல்.

இத்தலம் குட்டநாட்டில் கொட்டாரக்கராவுக்கு 33 மைலில் உள்ளது. திருவாங்கூர் சம்ஸ்தானத்தைச் சார்ந்தது.

744. 'பரமேட்டி, மாலே, கலங்கிப் பொர மாயும் போழ்து வரவேண்டும்,' என இயைக்க.

பரமேட்டி - பரம்பொருளே, விக்குள் பொர - விக்கலானது தொந்தரை செய்ய, மாயும் போழ்து - மறையும் போது, பறவை -

செங்குன்றூர் மாலே! சிறைப்பறவை மேற்கனகப்
பைங்குன்றூர் கார்போற் பறந்து.

745] 65. திருநாவாய் [எஉ

பறந்து திரிதரினும் பாவியேன் உள்ளம்
மறந்தும் பிறிதறிய மாட்டா ;—சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற தேவனையல் லாலென்
ஒருநாவாய் வாழ்த்தா துகந்து.

746] 66. திருவல்லவாழ் [எரு

உகந்தார்க்கெஞ் ஞான்றும் உளனாய் உகவா(து)
இகந்தார்க்கெஞ் ஞான்றும் இலனாய்த்—திகழ்ந்திட்(டு)
அருவல்ல வாமுருவ மல்லவென நின்றான்
திருவல்ல வாழுறையுந் தே.

747] 67. திருவண் வண்டூர் [எசு

தேவும் உலகும் உயிருந் திரிந்துநிற்கும்
யாவும் படைத்த இறைகண்டீர்—பூவில்

---

கருடன், பைங்கனகக் குன்று ஊர் கார் போல் - பசுமையான பொன் மலையில் தவழும் காளமேகம் போல, பறந்து - விரைந்து, கண்டாய் - முன்னிலை அசை.

இத்தலம், கொட்டாரக்கராவுக்கு 30 மைலில் உள்ளது.

745. 'பாவியேன் உள்ளம் பறந்து திரியினும், மறந்தும் பிறிது அறிய மாட்டாது; என் ஒரு நா வாய், சிறந்த திருநாவாய் வாழ்கின்ற தேவனை அல்லால் உகந்து வாழ்த்தாது,' என இயைக்க.

பிறிது - வேறு தெய்வத்தை, ஒரு நா வாய் - ஒரு நாவை யுடைய வாயானது, உகந்து - விரும்பி.

இத்தலம் எடகுளத்துக்கு அரைக்கல் தொலைவிலுள்ளது.

746. 'திருவல்லவாழ் உறையும் தே, உகந்தார்க்கு உளனாய், இகந்தார்க்கு இலனாய்த் திகழ்ந்திட்டு நின்றான்,' என இயைக்க.

தே-கடவுள், எஞ்ஞான்றும்-எக்காலத்திலும், இகந்தார்க்கு - நீங்கியவரான நாஸ்திகருக்கு, திகழ்ந்திட்டு - விளங்கி, அரு - அருவப்பொருள், என நின்றான் - என்று கூறும்படி நிலைபெற் றுள்ளான்.

இத்தலம், 'திருவல்லா' எனவும் வழங்கும்; கொட்டாரக் கராவுக்கு 36 மைலில் உள்ளது.

திருவண் வண் டூருறையுந் தேவாதி தேவன்
மருவண் வண் டூர் துளவ மால்.

748] 68. திருவாட்டாறு [எ௫

மாலை முடி நீத்து மலர்ப்பொன் னடிநோவப்
பாலைவன நீபுகுந்தாய் பண்டென்று—சாலவுநான்
கேட்டால் துயிலேன்காண் கேசவனே! பாம்பணைமேல்
வாட்டாற்றுக் கண்டுயில்கொள் வாய்!

749] 69. திருவிற்றுவக்கோடு [எசு

வாய்த்த கருமமினி மற்றில்லை நெஞ்சமே!
தோய்த்த தயிர்வெண்ணெய் தொட்டுண்ட—கூத்தன்

747. 'பூவில் திருவண்வண்டூர் உறையும் தேவாதிதேவன் மரு வண் வண்டு ஊர் துளவ மால், தேவும் உலகும் உயிரும் திரிந்து நிற்கும் யாவும் படைத்த இறை,' என இயைக்க.

பூவில் - பூமியில், உறையும் - வாழும், தேவாதிதேவன் - தேவர்க்கெல்லாந்தேவனை, மரு - மணம், வண் வண்டு ஊர் - வளப்பமுடைய தேனீக்கள் மொய்க்கப்பெற்ற, துளவம் - துளசி மாலையை அணிந்த, மால் - மகாவிஷ்ணு, தேவும் - தேவர்களும், உலகும் - உலகங்களும், உயிரும் - ஜந்துக்களும், திரிந்து நிற்கும் யாவும் - சராசரம் அனைத்தும், படைத்த - உற்பத்தி செய்த, இறை - கடவுள்.

இத்தலம், 'திருவ மூண்டூர்' என மருவி வழங்குகின்றது; கொட்டாரக்கராவுக்கு 35 மைலில் உள்ளது.

748. 'கேசவனே, நீ பண்டு மாலை முடி நீத்து மலர்ப் பொன் அடிநோவப் பாலை வனம் புகுந்தாய் என்று கேட்டால், நான் சாலவும் துயிலேன் வாட்டாற்றுப் பாம்பணைமேல் கண் துயில் கொள்வாய்,' என இயைக்க.

கேசவனே -(கிருஷ்ணவதாரத்தில்) கேசி என்னும் அசுரனைக் கொன்றவனே, பண்டு - (இராமவதாரஞ்செய்த) பழைய காலத்தில், முடி நீத்து - (அரசுக்குரிய) கிரீடத்தைத் துறந்து, சாலவும் - மிகவும், காண் - முன்னிலை அசை.

'நான் உன் துயர் கேட்டுச் சகியாது வருந்தவும், நீ என் துயர் கண்டும் தூங்கக் காரணமென்ன?' என்பது கருத்து.

இத்தலம் ஆற்றுற் பெயர் பெற்றது.

749. 'நெஞ்சமே, திருவிற்றுவக்கோடு சேர்ந்தால் கருவின் துவக்கு ஓடும்; இனி மற்றுக் கருமம் இல்லை,' என இயைக்க.

தொட்டு - (கையினால்) அள்ளி, கூத்தன் - திருவிளையாடலைச்

திருவிற் றுவக்கோடு சேர்ந்தாற் பிறவிக்
கருவிற் றுவக்கோடுங் காண்.

750] 70. திருக்கடித்தானம் [எஎ

காண விரும்புமென் கண் ; கையுந் தொழவிரும்பும் ;
பூண விரும்புமென் றன் புன்றலைதான் ;—வாணன்
திருக்கடித்தா னத்தான் திகிரியான் தண்டான்
திருக்கடித்தா னத்தானைச் சென்று.

751] 71. திருவாறன்விளை [எஅ

சென்று புனன்மூழ்கிச் செய்தவங்கள் செய்தாலும்
வென்றுபுலன் ஐந்தடக்கி விட்டாலும்—இன்றமிழால்
மாறன் விளைத்த மறையோதார்க் கில்லையே
ஆறன் விளைத்திருமா லன்பு.

---

செய்தவனான திருமாலின், பிறவிக் கருவின் துவக்கு - பிறப்பிற்குக்காரணமான கர்ப்பத் தொடர்பு, ஓடும் - நீங்கிப்போய்விடும்.

இத்தலம் பட்டாம்பிக்கு ஒரு மைல் தூரத்திலுள்ளது; 'திருவித்துவக்கோடு' எனவும் வழங்கும்.

750. 'வாணன் - திருக்கு அடித்தான்—நத்தான்—திகிரியான்—தண்டான்—திருக்கடித்தானத்தானை என் கண் சென்று காண விரும்பும்; கையும் தொழ விரும்பும்; என்றன் புன்றலை தான் பூண விரும்பும்,' என இயைக்க.

வாணன் - வாணாசுரனது, திருக்கு அடித்தான் - பகையை ஒழித்தவனும், நத்தான் - சங்கையுடையவனும், திகிரியான் - சக்கரத்தையுடையவனும், தண்டான் - கதையை உடையவனுமாகிய, என்றன் - எனது, புன்றலை - இழிவான தலையும், தான் பூண - (அவனுடைய திருவடிகளைத்) தான் சூட.

இத்தலம், கொட்டாரக்கராவுக்கு 38 மைல் தூரத்திலும், அம்பலப்புழாவுக்கு 23 மைல் தூரத்திலும் உள்ளது.

751. 'அன்பு இல்லை' என இயைக்க.

புனல் - நீர், மாறன் - நம்மாழ்வார், இன் தமிழால் விளைத்த மறை - இனிய தமிழ்ப் பாசுரங்களால் செய்தருளிய தமிழ் வேதத்தை, ஓதாதார்க்கு - பாராயணம் செய்யாதவர்க்கு, ஆறன்விளை - 'திருவாறன்விளை' என்னும் தலத்திலுள்ள, திருமால் அன்பு - திருமாலின் திருவருள்.

இத்தலம், 'ஆறம்முளை' என மருவி வழங்கப்படுவது; கொட்டாரக்கராவுக்கு 37 மைலில் உள்ளது.

## நடு நாட்டுத் திருப்பதிகள், 2.

752] 72. திருவயிந்திரபுரம் [எக

அன்பணிந்த சிந்தையராய் ஆய்ந்த மலர்தூவி
முன்பணிந்து, 'நீரெமக்கு மூர்த்தியரே,'—என்பர்
எமையிந் திரபுரத்தார்க் கின்றொண்ட ரானார்
தமையிந் திரபுரத்தார் தாம்.

753] 73. திருக்கோவலூர் [அ0

தாமரையான் ஆதியாய்த் தாவரங்கள் ஈறான
சேம வுயிருஞ் செகமனைத்தும்—பூமடந்தைக் (கு)
ஆங்கோ அலாயுதன் பின்னா அவதரித்த
பூங்கோவல் ஆயன் பொருள்.

---

752. 'எம் ஐயிந்திரபுறத்தார்க்கு இன் தொண்டர் ஆனார் தமை இந்திரபுரத்தார் தாம் அன்பு அணிந்த சிந்தையராய், ஆய்ந்த மலர் தூவி, முன் பணிந்து, 'நீர் எமக்கு மூர்த்தியரே,' என்பர்,' என இயைக்க.

ஆனார் தமை - ஆனவரை, இந்திர புரத்தார் - அமராவதியினரான தேவர், சிந்தையராய் - மனமுடையவராய், ஆய்ந்த-தேர்ந்து எடுத்த, தூவி - சொரிந்து, முன் பணிந்து - முன் வந்து வணங்கி, மூர்த்தியரே - கடவுளரே.

ஐயிந்திரபுரம் - அஹீந்திரபுரம்; அஹீந்திரன் - பாம்புகளுக்கு அரசனான ஆதி சேஷன்; அவனால் பூஜிக்கப்பட்டதால் காரணக்குறி. ஐயிந்திரபுரம் - அயிந்திரபுரம் என்பதன் போலி.

753. 'செகமனைத்தும் ஆயன் பொருள்,' என இயைக்க.

தாமரையான் ஆதியாய் - பிரமன் முதலாய், தாவரங்கள் - செடி கொடி மரங்கள், சேம உயிரும் - வாழும் ஜீவன்களும், செகமனைத்தும் - உலகங்கள் யாவும், பூமடந்தைக்கு ஆம் கோ - இலக்குமிக்கு விருப்பமாகிய தலைவனும், அலாயுதன் பின்னா - கலப்பையைத் தாங்கிய பலராமனுக்குத் தம்பியாக, அவதரித்த - அவதாரம் செய்த, பூங்கோவல் - அழகிய திருக்கோவலூரில் உள்ள, ஆயன் - கிருஷ்ணனுடைய, பொருள் - உரிமைப் பொருளாம்.

இத்தலம், வடமொழியில் 'கோபாலபுரம்' என வழங்கப் படுவது; மூவர் முதலாழ்வார் முகுந்தனைத் தரிசித்த இடம்; திருக்கோயிலூர்க்கு 2 மைலில் உள்ளது.

## தொண்டை நாட்டுத் திருப்பதிகள், 22.

754] 74. திருக்கச்சி (அத்திகிரி) [அக

பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்
திருளாசை சிந்தித் திராதே—அருளாளன்
கச்சித் திருப்பதியாம் அத்தியூர்க் கண்ணன்றாள்
இச்சித் திருப்பதியாம் என்று?

755] 75. திருவட்டபுயங்கம் [அஉ

என்றுந் துயருழக்கு மேழைகாள்! நீங்களிளங்
கன்றுபோல் துள்ளிக் களித்திரீர்—அன்றுநடம்
இட்ட புயங்கத் திருசரண மேசரணென்(று)
அட்டபுயங் கத்தற்கா ளாய்.

756]' 76. திருத்தண்கா [அங

பிரிந்து ஆற்றுளாய தலைவி தலைமகன் பக்கல் தனக்கு உள்ள
அன்புறுதியைத் தோழிக்குக் கூறல்

ஆட்பட்டேன் ஐம்பொறியால் ஆசைப்பட் டேனறிவும்
கோட்பட்டு நாணுங் குறைபட்டேன்—சேட்பட்ட

---

754. 'யாம் இருளாசை சிந்தித்து இராதே, அத்தியூர்க் கண்ணன் தாள் இச்சித்து இருப்பது என்று?' என இயைக்க.

பண் - பூமி, போகத்து - இன்பத்தில், இருள் ஆசை - மயங்குதற்குக் காரணமான விருப்பம், இராதே - இல்லாமல், அருளாளன் - பேரருளாளப் பெருமாளை, கச்சித்திருப்பதியாம் - காஞ்சீபுரத்தில் உள்ளதாகிய, அத்தியூர் - திருவத்தியூரிலுள்ள, கண்ணன் தாள் - திருமாலின் திருவடிகளை, இச்சித்து - விரும்பி, என்று - எந்நாள்?

இந்திரனுக்கு வாகனமான ஐராவதம் என்னும் யானை மலை வடிவிலிருந்து இறைவனைத் தாங்குதல் பற்றி 'அத்தியூர்' என்பது காரணப் பெயர்.

755. 'ஏழைகாள், அட்டபுயங்கத்தற்கு ஆளாய்க் களித்து இரீர்;' என இயைக்க.

துயர் உழக்கும் - துன்புறுகின்ற, ஏழைகாள் - அறிவிலிகளே, அன்று - (கிருஷ்ணவதாரஞ் செய்த) அக்காலத்தில், புயங்கத்து - (காளியன் என்னும்) பாம்பின் மீது, சரண் - புகலிடம், இரீர் - இருப்பீராக.

இத்தலம், 'அட்ட புயகரம்' எனவும் வழங்கும்; சின்னக் காஞ்சீபுரத் தேரடியருகில் உள்ளது.

வண்காவை வண்டுவரை வைத்த விளக்கொளிக்குத்
தண்காவைச் சேர்ந்தான் றனக்கு.

757] 77. திருவேளுக்கை [அச

தனக்குரிய னயமைந்த தானவர்கோன் கெட்டான்;
உனக்குரிய னயமைந்தன் உய்ந்தான்;—நினைக்குங்கால்
வேளுக்கை ஆளரியே! வேறுதவி யுண்டோவுன்
தாளுக்கா ளாகா தவர்க்கு?

758] 78. திருப்பாடகம் [அடு

தவம்புரிந்த சேதனரைச் சந்திரன்ஆ தித்தன்
சிவன்பிரமன் இந்திரனைச் செய்கை—உவந்து
திருப்பா டகமருவுஞ் செங்கண்மால் தன்மார்(பு)
இருப்பா டகவுரையா லே.

---

756. சேண் பட்ட - வானுலகில் உள்ள, வண் காவை - வளப்பமான பாரிசாதத்தருவை, வண் துவரை - வளப்பம் பொருந்திய துவாரகையில், வைத்த - (சத்தியபாமையின் பொருட்டு) நட்டு வைத்த, தண்காவை - திருத்தண்கா என்னும் தலத்தை, விளக்கொளிக்கு - விளக்கொளிப் பெருமானுக்கு, கோள்பட்டு - (அப்பெருமானல்) கொள்ளப்பட்டு, நாணும் - நாணமென்னும் பெண்மைக் குணமும்.

இத்தலம், 'விளக்கொளிப் பெருமாள் கோயில்' என வழங்கப்படும்; சின்னக் காஞ்சிபுரத் தேரடியிலிருந்து 2 பர்லாங்கு தூரத்தில் உள்ளது.

757. 'வேளுக்கை ஆள் அரியே' உன் தாளுக்கு ஆளாகாதவர்க்கு வேறு உதவி உண்டோ?' என இயைக்க.

ஆள் அரியே - நரசிங்கமூர்த்தியே, தனக்கு உரியனாய் அமைந்த - தானே சுதந்தரன் என எண்ணியிருந்த, தானவர் கோன் - அசுரர் தலைவனான இரணியன், கெட்டான்-அழிந்தான், மைந்தன் - (அவன்) புதல்வனான பிரகலாதன், உய்ந்தான் - வாழ்ந்தான்; உண்டோ - இருக்கிறதோ? (இல்லை).

இத்தலம், காஞ்சிபுரத்திற்கு இரண்டு மைலில் உள்ளது.

758. 'திருப்பாடகம் உவந்து மருவும் செங்கண் மால், தவம்புரிந்த சேதனரைச் சந்திரன், ஆதித்தன், சிவன், பிரமன், இந்திரனைச் செய்கை, தன் மார்பு இருப்பாள் தகவு உரையாலே,' என இயைக்க.

மருவும் - பொருந்தும், சேதனரை - ஆன்மாக்களை, ஆதித்தன் - சூரியன், இந்திரனைச் செய்கை-தேவேந்திரனைச் செய்வது,

759] 79. திருநீரகம் [அசு

ஆலத் திலைசேர்ந் தழியுலகை யுட்புகுந்த
காலத்தி லெவ்வகைநீ காட்டினாய்—ஞாலத்துள்
நீரகத்தாய்! நின்னடியேன் நெஞ்சகத்தாய்! நீண்மறையின்
வேரகத்தாய்! வேதியற்கு மீண்டு?

760] 80. திருநிலாத்திங்கள் துண்டம் [அஎ

மீண்டுந் தெளிபார்கள் மேதினியோர் நின்னடிப்பூப்
பாண்டரங்க மாடி படர்சடைமேல்—தீண்டிக்

---

தன் மார்பு இருப்பாள் - தன் வல மார்பில் வீற்றிருப்பவளான திருமகளின், தகவு உரையாலே - அருள் மொழியாலாகும்.

திருப்பாடகம் என்பது 'பாண்டவபெருமாள் கோயில்' என வழங்குவது; பெரிய காஞ்சீபுரத்தில் உள்ளது.

759. 'ஞாலத்துள் நீரகத்தாய், நின் அடியேன் நெஞ்சகத் தாய், நீள் மறையின் வேரகத்தாய், வேதியர்க்கு நீ உள் புகுந்த காலத்தில் ஆலத்து இலை சேர்ந்து, அழி உலகை எவ்வகை மீண்டு காட்டினாய்?' என இயைக்க.

வேதியற்கு - வேதியனான மார்க்கண்டேயனுக்கு, உள் புகுந்த காலத்தில் - (அவன்) உன் வயிற்றினுள் புகுந்த போது, ஆலத்து இலை - ஆலிலையில், அழி உலகை - (பிரளயத்தில்) அழிந்த உலகங்களை.

மார்க்கண்டேயன் பிரளயக் காட்சி காண விரும்பித் தவஞ் செய்தனன். நரநாராயணர்கள் அங்ஙனம் ஆகவென அருள் செய்தனர். மாயவன் தனது மாயையால் பிரளயத்தைத் தோற்றுவித்தான். அப்பிரளயத்தில் ஆலிலைமீது பள்ளிகொண்ட பகவான் தன் வயிற்றினுள் கிடந்த மார்க்கண்டேயனுக்குப் பிரள யத்தால் அழிந்த உலகங்களைக் காட்டியருளினன் என்பர். இவ் வதிசயத் திருவிளையாடலை வியக்கின்றார் இவ்வாசிரியர்.

இத்தலம், காஞ்சீபுரத்திலுள்ள உலகளந்த பெருமாள் கோவிலில் உள்ளது.

760. 'நிலாத்திங்கள் துண்டத்தானே, நின் அடிப்பூ, பாண் டரங்கம் ஆடி படர் சடைமேல் தீண்டிக் கலாத்திங்கள் துண்டத் தின் மீது இருப்பக் கண்டும், மேதினியோர் மீண்டும் தெளி யார்கள்,' என இயைக்க.

நின் அடிப்பூ - (அருச்சுனன்) உன் திருப்பாதங்களில் அருச்சித்த மலர்கள், பாண்டரங்கம் ஆடி - பாண்டரங்கமென்னும் கூத்தையாடியவனான சிவபெருமானின், தீண்டி - படிந்து, கலாத் திங்கள் துண்டத்தின் மீது - ஒரு கலையையுடைய பிறைச் சந்திர

கலாத்திங்கள் தூண்டத்தின் மீதிருப்பக் கண்டும்
நிலாத்திங்கள் துண்டத்தா னே !

761] 81. திருவூரகம் [அஅ

நேசத்தால் அன்றுலகை நீர்வார்க்க வைத்தளந்த
வாசத்தாள் என்தலைமேல் வைத்திலையேல்—நாசத்தால்
பாரகத்துள் அன்றிநான் பாழ்நரகில் வீழ்ந்தென்கொல்
ஊரகத்துள் நின்றாய் ! உரை.

762] 82. திருவெஃகா [அகூ

உரைகலந்த நூலெல்லாம் ஓதியுணர்ந் தாலும்
பிரைகலந்த பால்போற் பிறிதாம்—தரையில்

---

னுக்கு மேலாய், இருப்பக் கண்டும்-இருக்கப் பார்த்தும், மேதினி யோர் - உலகத்தார், தெளியார்கள் - (நீயே முழுமுதற்கடவுள் என்பதை) துணியமாட்டார்கள். (இஃது என்ன அறியாமை !)

பாண்டரங்கம் - சிவபிரான் திரிபுரமெரித்த போது ஆடிய கூத்து.

இத்தலம், பெரிய காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதர் திருக் கோவிலில் உள்ளது.

761. 'ஊரகத்துள் நின்றாய், அன்று நீர் வார்க்க, நேசத் தால் உலகை வைத்து அளந்த வாசத்தாள் என் தலைமேல் வைத் திலையேல், நான் பாரகத்துள் அன்றி நாசத்தால் பாழ் நரகில் வீழ்ந்து என்கொல் ? உரை,' என இயைக்க.

ஊரகம் - திருவூரகம் என்னும் திருப்பதி, அன்று - (வாம னாவதாரஞ்செய்த) அக்காலத்தில், வாசத்தாள் - மணமுடைய திருப்பாதங்களை, வைத்திலையேல் - அமைக்காவிட்டால், பாரகத் துள் அன்றி - இவ்வுலகில் வாழ்தலல்லாமல், நாசத்தால் - மரணத் தால், வீழ்ந்து என்கொல் - வீழ்ந்தால் என்ன ?

'ஆண்டவன் வாமனாவதாரத்தில் திரிவிக்கிரமனாய் மூவுலகு மளந்த காலத்தில் எல்லா உயிர்களும் அவன் பாத பரிசத்தால் நற்கதியுற்றன,' என்றபடி.

இத்தலம், 'உலகளந்த பெருமாள் கோவில்' என வழங்கப் படுவது ; பெரிய காஞ்சீபுரத்திலுள்ளது.

762. 'தரையில் திருவெஃகா மாயனுக்கே சீர் உறவு ஆம் தங்கள் உரு வெஃகா உளத்தினோர்க்கு, உரை கலந்த நூல் எல்லாம் ஓதி உணர்ந்தாலும், பிரை கலந்த பால் போல் பிறிது ஆம்,' என இயைக்க.

திருவெஃகா மாயன் - திருவெஃகா என்னும் திருப்பதியி லுள்ள சொன்ன வண்ணம் செய்த பெருமாள், வெஃகா - விரும்

திருவெஃகா மாயனுக்கே சீருறவாந் தங்கள்
உருவெஃகா வுள்ளத்தி னோர்க்கு.

763] 83. திருக்காரகம் [கூo

ஓராதார், 'கல்வி உடையேம் ; குலமுடையேம் ;
ஆரா தனமுடையேம் யாம்,' என்று—சீராயன்
பூங்கா ரகங்காணப் போதுவார் தாள்தலைமேல்
தாங்கா ரகங்காரத் தால்.

764] 84. திருக்கார்வானம் [கூக

'தாலேலோ' என்றாய்ச்சி தாலாட்டித் தன்முலைப்பா
லாலேயெவ் வாறுபசி யாற்றினள்முன் ?—மாலே! பூங்

---

பாத, உரை கலந்த நூல் - புகழ் பொருந்திய சாத்திரங்கள், பிரை - உறைமோர், பிறிது ஆம் - மாறுபாடான பயனைச் செய்வதாகும்.

'எம்பெருமானைக் கல்லாக் கலையாற்பயனில்லை,' என்பது கருத்து.

உரை - புகழ் ('உரை சால் பத்தினி' சிலப்பதி. 56.)

இத்தலம், 'யதோத்காரி சந்நதி' என வழங்கப்படுவது; சின்னக் காஞ்சிபுரத்தில் உள்ளது.

763. 'ஓராதார், அகங்காரத்தால் போதுவார் தாள் தலைமேல் தாங்கார்,' என இயைக்க.

ஓராதார் - ஆராய்ந்தறியாதவர், ஆராதனம் - பூசை செய்தல், அகங்காரத்தால் - கருவத்தால், சீர் ஆயன் - சிறப்புடைய ஆயர் குலத்தவனான திருமாலின், பூங்காரகம் - அழகிய திருக்காரகம் என்னும் தலத்தை, காணப் போதுவார் தாள் - தரிசிக்கச் செல்பவரான அடியாரின் பாதங்களை.

'பாகவத பத்தியில்லாதவர்களுக்குப் பிற நற்காரியங்கள் பயனளியா,' என்பது கருத்து.

இத்தலம், காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலில் தென் பிராகாரத்தில் உள்ளது.

764. 'மாலே, பூங்கார்வானத்து உள்ளாய், கடலோடும் வெற்போடும் பார் வானம் நீ பண்டு உண்டாய்; முன் ஆய்ச்சி, 'தாலேலோ' என்று தாலாட்டித் தன் முலைப் பாலாலே எவ்வாறு பசியாற்றினள்?' என இயைக்க.

இஃது ஆண்டவனது அளப்பரிய மாயையைப் புலப்படுத்தியது.

கார்வானத் துள்ளாய்! கடலோடும் வெற்போடும்
பார்வான மூண்டாய்நீ பண்டு.

765] 85. திருக்கள்வனூர் [கூஉ

பண்டேயுன் தொண்டாம் பழவுயிரை என்னதென்று
கொண்டேனைக் கள்வனென்று கூறாதே—மண்டலத்தோர்,
புள்வாய் பிளந்த புயலே! உனைக்'கச்சிக்
கள்வா,'என் றோதுவதென் கண்டு?

766] 86. திருப்பவளவண்ணம் [கூ௩

கண்டறிந்தும் கேட்டறிந்தும் தொட்டறிந்தும் காதலால்
உண்டறிந்தும் மோந்தறிந்தும் உய்யேனே—பண்டைத்
தவளவண்ணா! கார்வண்ணா! சாமவண்ணா! கச்சிப்
பவளவண்ணா! நின்பொற் பதம்.

---

வெற்பு - மலை, பார் - பூமி, பண்டு - (பிரளயம் நேர்ந்த) முன் காலத்தில், ஆய்ச்சி - யசோதைப்பிராட்டி.

இத்தலம், பெரிய காஞ்சீபுரத்தில் உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ளது.

765. 'புள் வாய் பிளந்த புயலே, மண்டலத்தோர், பண்டே நின் தொண்டாம் பழவுயிரை 'என்னது,' என்று கொண்டேனைக் கள்வன் என்று கூறாது, உனைக் 'கச்சிக் கள்வா,' என்று ஓதுவது என் கண்டு?' என இயைக்க.

புள்வாய் - (பகாசுரனை) பறவையின் வாயை, புயலே - மேகம் போன்றவனே, பழவுயிரை - பழைய ஆன்மாவை, என்னது - என்னுடையது, என் கண்டு - என்ன காரணத்தை அறிந்து?

இத்தலம், பெரிய காஞ்சீபுரம் காமாட்சியம்மன் திருக் கோயிலில் உள்ளது.

766. 'பண்டைத் தவள வண்ணா, கார் வண்ணா, சாம வண்ணா, கச்சிப் பவள வண்ணா, நின் பொற்பதம் காதலால் கண்டு அறிந்தும், தொட்டு அறிந்தும், உண்டு அறிந்தும், மோந்து அறிந்தும் உய்யேனே!' என இயைக்க.

பண்டைத் தவள வண்ணா - (கிரேதாயுகமான) பழைய காலத்தில் வெண்ணிறமுடையவனே, சாமம் - கரிய நிறம், பொன் பதம் - அழகிய திருவடிகளை, உய்யேனே - (யான்) ஈடேற வில்லையே!

'ஐம்பொறிகளாலும் ஆண்டவனாகிய உன்னை அநுபவித்திலேன்!' என்று இரங்கியபடி.

இத்தலம், பெரிய காஞ்சீபுரத்தில் உள்ளது.

767] 87. பரமேச்சுர விண்ணகரம் [கூஎ

பதத்தமிழால் தன்னையே பாடுவித்தென் னைத்தன்
பதத்தடியார்க் கேயாட் படுத்தான்—இதத்த
பரமேச் சுரவிண் ணகரான் பலஆன்
வரமேச் சுரல்அணைந்த மால்.

768] 88. திருப்புட்குழி [கூஅ

மால்வே ழமரவும் மாயையும்வெற் புங்கடலும்
மேல்வீழ் படையும் விடமும்போய்ப்—பாலன்
நெருப்புட் குழிகுளிர நின்றதுங்கேட் டோதார்
திருப்புட் குழியமலன் சீர்.

---

767. 'பல ஆன் வர மேச்சு உரல் அணைந்த மால்—இதத்த பரமேச்சுர விண்ணகரான் — பதத்தமிழால்—தன்னையே பாடுவித்து என்னைத் தன் பதத்து அடியார்க்கே ஆள் படுத்தான்,' என இயைக்க.

ஆன் - பசுக்கள், மேச்சு - மேய்த்து, உரல் அணைந்த - (யசோதைப் பிராட்டியால்) உரலிற்கட்டுண்ட, மால்-திருமாலும், இதத்த - நன்மை புரிகின்ற, பதத் தமிழால் - பக்குவம் வாய்ந்த தமிழ்ப் பாசுரங்களால், பாடுவித்து - பாடும்படி செய்து, ஆள் படுத்தான் - அடிமையாய் இருக்கச் செய்தான்.

இத்தலம், பெரிய காஞ்சீபுரத்திலுள்ளது; 'வைகுண்டப் பெருமாள் சந்நதி' என்று வழங்கப்படுவது.

768. 'மால் வேழமும், அரவும், மாயையும், வெற்பும், கடலும், மேல் வீழ் படையும், விடமும் போய், பாலன் குழியுள் நெருப்புக் குளிர நின்றது கேட்டும், திருப்புட்குழி அமலன் சீர் ஓதார்,' என இயைக்க.

இஃது, உலகினர் அறியாமையை வியந்தது.

மால் வேழம் - பெரிய யானை, அரவு - பாம்பு, படை - ஆயுதங்கள், விடம் - விஷம், போய் - (பயனற்று) ஒழிந்து, பாலன் - பிரகலாதன், அமலன் சீர் - கடவுளின் சிறப்பை, ஓதார் - கூற மாட்டார்.

*இத்தலம் காஞ்சீபுரத்திற்கு மேற்கில் ஏழு மைலில் உள்ளது. 'சடாயு' என்னும் பறவையரசைக் குழியிலிடுவது போலப் பெருமான் சேவை தருதலின் இத்தலம் இப்பெயர் பெற்ற தென்பர் பெரியோர். புள் - பறவை.

769] 89. திருநின்றவூர் [சுசு

தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்

சீரறிந்து தோழிமீர்! சென்று கொணர்ந்தெனக்குப்
போர முலைமுகட்டிற் பூட்டுமினோ—நேரவுணர்
பொன்றவூர் புட்கழுத்திற் பொன்னைமா ணிக்கத்தை
நின்றவூர் நித்திலத்தை நீர்.

770] 90. திருவெவ்வுளூர் [சுஎ

நீர்மைகெட வைதாரும் நின்னோ டெதிர்த்தாரும்
சீர்மைபெற நின்னடிக்கீழ்ச் சேர்கையினால்—நேர்மையிலா
வெவ்வுளத்த னேன்செய் பிழைகளைப் பொறுத்தருளி
எவ்வுளத்த னே!நீ இரங்கு.

---

769. 'தோழிமீர், நீர் நேர் அவுணர் பொன்ற ஊர் புள் கழுத்தில் பொன்னை—மாணிக்கத்தை—நின்றவூர் நித்திலத்தைச் சீர் அறிந்து, சென்று கொணர்ந்து, எனக்குப் போர முலை முகட்டில் பூட்டுமின்,' என இயைக்க.

தோழிமீர் - (என்) பாங்கியரே, நேர் அவுணர் பொன்ற - எதிர்த்த அசுரர் அழியும்படி, ஊர் - செலுத்துகின்ற, புள் கழுத்தில் பொன்னை - கருடன் பிடரிலே எழுந்தருளிய பொன் போன்ற பெருமானை, நித்திலத்தை - முத்துப்போன்ற பெருமானை, போர - திருத்தியுண்டாக, முலை முகட்டில் - (என்) தனங்களின் உச்சியில், பூட்டுமின் - அணியுங்கள்.

'எம்பெருமான் என்னை மணக்கச் செய்வதே நீங்கள் எனக்குச் செய்யும் உபகாரமாம்,' என்பது கருத்து.

இத்தலம் தின்னனூருக்கு ஒரு மைலில் உள்ளது.

770. 'எவ்வுள் அத்தனே, நீ, நீர்மை கெட வைதாரும் நின்னோடு எதிர்த்தாரும் சீர்மை பெற நின் அடிக்கீழ் சேர்கையினால், நேர்மை இலா வெவ்வுளத்தனேன் செய் பிழை பொறுத்து அருளி இரங்கு,' என இயைக்க.

எவ்வுள் அத்தனே - திரு எவ்வுளூர் என்னும் திருப்பதியில் உள்ள தலைவனே, நீர்மை கெட - பெருமை கெடும்படி, வைதாரும் - (உன்னை) நிந்தித்தவரும், சீர்மை - சிறப்பை, சேர்கையினால் - சேர்தலால், நேர்மை - நல்ல தன்மை, வெவ்வுளத்தனேன் - கொடுமனமுடையவனான யான், செய் பிழை - செய்த குற்றங்களை, இரங்கு - மனமிரங்கி அருள்வாயாக.

பெருமான் சாலிகோத்திர மாமுனிவர்க்குத் தரிசனந் தந்து 'யான் தங்குதற்குரிய உள் எவ்வுள்?' எனக் கேட்டமை காரண

771] 91. திருநீர் மலை [௯௧

இரங்கும் உயிரனைத்தும் இன்னருளாற் காப்பான்
அரங்க னொருவனுமே யாதல்—கரங்களால்
போர்மலைவான் வந்த புகழ்வாணன் காட்டினான்
நீர்மலைவா ழெந்தையெதிர் நின்று.

772] 92. திருவிடவெந்தை [௯௨

நின்று திரியும் பிறவியெல்லாம் நேர்வித்துக்
கொன்று திரியுங் கொடுவினையார்—இன்று
வெருவிடவெந் தைக்கே விழுமியதொண் டானேன்
திருவிடவெந் தைக்கே செறிந்து.

---

மாக இத்தலம் இப்பெயர் பெற்றதென்பர். இது 'திருவள்ளூர்' என மருவி வழங்குகின்றது.

771. 'உயிர் அனைத்தும் காப்பான் அரங்கன் ஒருவனுமே ஆதல், வாணன் எந்தை எதிர் நின்று காட்டினான்,' என இயைக்க.

இரங்கும் - வருந்தும், காப்பான் - காப்பவன், ஆதல் - ஆவதை, கரங்களால் - (தன் ஆயிரம்) கைகளாலும், போர் மலைவான் - போர் புரிய, புகழ் வாணன் - புகழையுடைய வாணாசுரன்.

'சிவனது துணையிருந்தும் வாணாசுரன் கிருஷ்ணனிடம் தோல்வியுற்று அவனுக்கு அடிமையாகி உய்ந்தனன்,' என்பது வரலாறு.

இத்தலம், சென்னையை அடுத்த பல்லாவரத்திற்கு மூன்று மைல் மேற்கில் உள்ளது.

772. 'நின்று திரியும் பிறவி எல்லாம் நேர்வித்துக் கொன்று திரியும் கொடுவினையார் இன்று வெருவிடத் திருவிடவெந்தைக்கே செறிந்து, எந்தைக்கே விழுமிய தொண்டு ஆனேன்,' என இயைக்க.

நின்று திரியும் பிறவி - சராசரத் தோற்றங்கள், நேர்வித்து - (எனக்கு) உண்டாகும்படி செய்து, கொன்று - (என்னை) வருத்தி, கொடுவினையார் - (என்) தீவினைகள், வெருவிட - அஞ்சி ஓட, செறிந்து, - அணுகி, எந்தைக்கே - (அதில் எழுந்தருளிய) எம் பெருமானுக்கே, விழுமிய - சிறந்த.

இடப் பக்கத்தில் திருமகளைக்கொண்டு விளங்கும் பெருமானுக்குத் தலமாதல் காரணமாகத் 'திருவிடவெந்தை' என்பது காரணப் பெயர். இத்தலம், சென்னையை அடுத்த வண்டலூருக்குப் பதினாறு மைலில் உள்ளது.

773] **93.** திருக்கடன்மல்லை (மாமல்லபுரம்) [க00

*செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச் சாடி*
*முறிந்துவிழப் பாகனையும் மோதி—எறிந்து*
*தருக்கடன்மல் லைக்குமைத்தான் தஞ்சமென்று நெஞ்சே!*
*திருக்கடன்மல் லைக்குள் திரி.*

774] **94.** திருவல்லிக்கேணி [க0க

*திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்*
*புரிந்து புகன்மின்; புகன்றால்—மருந்தாம்*
*கருவல்லிக் கேணியா மாக்கதிக்குக கண்ணன்*
*திருவல்லிக் கேணியான் சீர்.*

775] **95.** திருக்கடிகை [க0உ

*சீரருளால் நம்மைத் திருத்திநாம் முன்னறியாக்*
*கூரறிவுந் தந்தடிமை கொண்டதற்கே—நேரே*

---

773. 'நெஞ்சே, 'பறித்து, சாடி, எறிந்து, குமைத்தான் தஞ்சம்' என்று திரி,' என இயைக்க.

செறிந்த - நெருங்கிய, பணை - தந்தங்களை, திண் களிற்றை - வலிய ஆண் யானையான குவலயாபீடத்தை, சாடி - கொன்று, பாகனையும் - மாவுத்தனையும், எறிந்து - அழித்து, தருக்கு அடல் மல்லை - கருவமும் வலிமையுமுடைய (சாணூரன், முஷ்டிகன் என்னும்) மல்லர்களை, குமைத்தான் - அழித்தவனான பெருமான், தஞ்சம் - புகலிடம், திரி - (நீ) உலவு.

இத்தலம், 'மாமல்ல புரம்' எனவும், 'மஹாபலி புரம்' எனவும் வழங்கப்படும்; செங்கற்பட்டுக்குக் கிழக்கில் பதினெட்டு மைலில் உள்ள பழைய கடற்கரைப் பட்டினம்.

774. 'திரிந்து உழலும் சிந்தனையைச் செவ்வே நிறுத்தி, திருவல்லிக்கேணியான் கண்ணன் சீர் புரிந்து புகல்மின்; புகன்றால், கருவல்லிக்கு மருந்து ஆம்; மாகதிக்கு ஏணி ஆம்,' என இயைக்க.

செவ்வே - நன்றாக, சீர் - புகழை, புரிந்து புகல்மின் - விரும்பித் துதியுங்கள், கரு வல்லிக்கு - கருப்பமாகிய விலங்கு நீங்குதற்கு, மாகதிக்கு - மோட்ச உலகிற்கு.

இத்தலம், அல்லிப்பூக்களாற் சிறந்து விளங்கும் தீர்த்தத்தை உடையதாதலால் இப்பெயர் பெற்றது; எழும்பூருக்குத் தென் கிழக்கில் மூன்று மைலில் உள்ளது.

775. 'மனமே, சீர் அருளால் நம்மைத் திருத்தி, நாம் முன் அறியாக் கூர் அறிவும் தந்து அடிமை கொண்டதற்கு முத்தி

ஒருகடிகை யும்மனமே! உள்ளுகிலாய் முத்தி
தருகடிகை மாயவனைத் தான்.

வடநாட்டுத் திருப்பதிகள், 12.

776] 96. திருவேங்கடம் (திருப்பதி) [கoரு

தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்குந் தன்மையான்—தேனேய்
திருவேங் கடந்தொழுதேம் தீயவிபூ திக்குள்
மருவேங் கடந்தனெமிவ் வாழ்வு.

777] 97. சிங்கவேள் குன்றம் (அகோபிலம்) [கoச

வாழ்குமரன் மேற்கனக வஞ்சகன்மே லோர்முகத்தே
சூழ்கருணை யும்முனிவுந் தோன்றியவால்—கேழ்கிளரும்

---

தருகடிகை மாயவனை நேரே ஒரு கடிகையும் உள்ளுகிலாய்,' என இயைக்க.

முன் அறியா - முன் பிறவிகளில் பெற்றறியாத, முத்தி - மோட்சத்தை, கடிகை - திருக்கடிகை, ஒரு நாழிகை; உள்ளுகிலாய் - நினையாய். 'ஈதென்ன அறியாமை!' என்றபடி. தான் - அசை.

இத்தலம், 'சோளங்கிபுரம்' எனவும் வழங்கும்; இது 'சோழ சிங்க புரம்' என்பதன் மரூஉ. இதனைக் 'கடிகாசலம்' எனவும் வழங்குவர். 'கடிகா+அசலம்'—சர்வ கலாசாலைக்கு இடமான மலை. இதனால், பண்டு இங்கு ஒரு பல்கலைக் கழகம் இருந்திருக்க வேண்டுமென ஊகிக்கலாம்.

776. 'திருவேங்கடம் தொழுதேம்; மருவேம்; கடந்தனெம்,' என இயைக்க.

சரணமுமாய் - உபாயமுமாகி, பலமுமாய் - உபேயமுமாகி, தேன் ஏய் - தேன் இறால்கள் பொருந்திய, தீய விபூதிக்குள் - கொடிய லீலா விபூதியான உலகில், மருவேம் - (இனி வந்து) சேர மாட்டோம், இவ்வாழ்வு கடந்தனெம் - இவ்வாழ்க்கையைக் கடந்துவிட்டோம்.

'இனி நமக்குப் பிறப்பு இறப்பு இல்லை,' என்றபடி.

இத்தலம், 'திருமலை' எனவும், 'திருப்பதி' எனவும் வழங்கும்.

777. 'கேழ் கிளரும் அங்க வேள் குன்ற அழல் சரபத்தைப் பிளந்த சிங்கவேள் குன்றத்தினார்க்கு வாழ் குமரன் மேல் சூழ் கருணையும், கனக வஞ்சகன்மேல் முனிவும் ஓர் முகத்துத் தோன்றிய,' என இயைக்க.

அங்கவேள் குன்ற வழல்சரபத் தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி னூர்க்கு.

778] 98. திருவயோத்தி [கoரு

ஆர்க்குமிது நன்றுதீ தானாலும் நெஞ்சே!நீ
பார்க்கும் பலகலையும் பன்னாதே—சீர்க்கும்
திருவையோத் திப்புயலைச் சீரியமெய்ஞ் ஞானத்
துருவையோத் திற்பொருளை யோர்.

779] 99. திருநைமிசாரணியம் [கoசு

ஓரறிவு மில்லாத என்போல்வார்க் குய்யலாம்
பேரறிவுண் டேனும் பிறர்க்கரிது—பாரறியா

---

கேழ் கிளரும் அங்கவேள் - நிறம் மிகுந்த உடலையுடைய மன்மதன், குன்ற - அழிய, அழல் சரபத்தை - கோபித்த (சிவனது தோற்றமான) சரபப்பட்சியை, பிளந்த - பிளந்து கொன்ற, வாழ் குமரன் - பிரகலாதன், கனகன் - இரணியன், முனிவு - கோபம், ஓர் முகத்து-ஒரே முகத்தில், தோன்றிய - உண்டாயின. ஆல், ஏ - அசைகள்.

இது பெருமானது ஆச்சரியப்படத்தக்க அற்புத வல்லமையைக் குறித்தது.

இத்தலம் 'அகோபிலம்' எனவும் வழங்கப்படும்; 'நந்தியால்' என்னுமிடத்திற்கு முப்பத்தேழு மைலில் உள்ளது.

778. 'நெஞ்சே, இது ஆர்க்கும் நன்று: தீது ஆனாலும், நீ பார்க்கும் பல கலையும் பன்னாது, சீரிய மெய்ஞ்ஞானத்து உருவை—ஓத்தின் பொருளை—சீர்க்கும் திரு ஐயோத்திப்புயலை ஓர்,' என இயைக்க.

இது - இப்படிச் செய்வது, ஆர்க்கும்-எவர்க்கும், பார்க்கும்-காணும், பன்னாது - கல்லாமல், ஓத்தின் - வேதத்தின், சீர்க்கும் - சிறப்படையும், ஐயோத்திப் புயலை - அயோத்தியிலுள்ள மேகம் போலும் பெருமானை, ஓர் - தியானம் செய்,

'அயோத்தி' என்பது, திரிபு நயங்கருதி 'ஐயோத்தி' எனக் கூறப்பட்டது. அயோத்தி - பகைவரால் போரிட்டுக் கைப்பற்ற இயலாதது.

779. 'பார் அறிய நைம்மிசாரண்ணியத்து நாதர் அடியாரோடும் இம்மி சார்வு உண்டாயினால், ஓர் அறிவும் இல்லாத என் போல்வார்க்கு உய்யலாம்; பிறர்க்குப் பேரறிவு உண்டேனும் (உய்யல்) அரிது,' என இயைக்க.

பார் - இவ்வுலகத்தவர், இம்மி சார்வு - சிறிது தொடர்பு, போல்வார்க்கு - ஒத்தவர்க்கும், உய்யலாம் - ஈடேறுதல் ஆகும், உண்டேனும் - இருக்கும் எனினும், அரிது - இயலாது.

நைம்மிசா ரண்ணியத்து நாதரடி யாரோடும்
இம்மிசார் வுண்டாயி னல்.

780] 100. திருச்சாளக்கிராமம் [கoஎ

உண்டாம் முறைமை உணர்ந்தடிமைப் பேர்பூண்டேன்
பண்டாம் குடிகுலத்தாற் பன்மதத்தால்—கொண்டாட்டால்
ஆளக் கிராமத்தால் அல்லற்பேர் பூணாமல்
சாளக் கிராமத்தார் தாட்கு.

781] 101. திருவதரியாச்சிரமம் [கoஅ

தாட்கடிமை யென்று தமையுணரார்க் கெட்டெழுத்தும்
கேட்கவெளி யிட்டருளுங் கேசவனை—வேட்கையொடு

---

"அடியார் தொடர்பே ஆண்டவனை அடைதற்கு ஆதாரம்,' என்பது கருத்து.

இத்தலம், வடநாட்டில் 'நிம்ஸார்' என்னுமிடத்திற்கு ஒரு மைலில் உள்ளது. முனிவர் சிலர் தம் தவத்திற்குரிய இடத்தைக் குறிப்பிடுமாறு பிரமனை வேண்ட, அவன் தருப்பையாற் செய்த நேமியை (சக்கரத்தை) உருட்ட, அது சென்று நின்ற இடம் 'நைமிசாரண்யம்' என வழங்கப்பட்டதென்பர்.

780. 'பண்டு ஆம் குடி குலத்தால், பல் மதத்தால், கொண்டாட்டால், ஆள் அக்கிராமத்தால் அல்லல் பேர் பூணாமல், சாளக் கிராமத்தார் தாட்கு உண்டாம் முறைமை உணர்ந்து, அடிமைப் பேர் பூண்டேன்,' என இயைக்க.

கொண்டாட்டால் - பாராட்டாலும், ஆள் அக்கிராமத்தால் - உரிமையால் ஆட்சி செய்யும் ஊராலும், அல்லல் பேர் பூணாமல் - துன்பம் தரும் (செருக்குக்கு இடமான) பேரை மேற்கொள்ளாமல், தாட்கு உண்டாம் முறைமை - திருவடிகளுக்கு ஏற்படும் சம்பந்தத்தை, அடிமைப் பேர் - (பெருமானுக்குத்) தாசன் என்னும் பெயரை.

'கிராம குலாதிகளால் வரும்பேர் அநந்த ஹேது,' என்னும் ஸ்ரீவசன பூஷண வாக்கு இங்குச் சிந்தித்தற்குரியது.

* இத்தலம் நேப்பாள நாட்டைச் சார்ந்தது.

781. 'நெஞ்சமே, தாட்கு அடிமை என்று தமை உணரார்க்கு எட்டெழுத்தும் கேட்க வெளியிட்டருளும் கேசவனை, போவது அரிது ஆனாலும் மா வதரி ஆச்சிரமத்து வேட்கையொடு போய்த் தொழுவோம்,' என இயைக்க.

எட்டெழுத்து - அஷ்டாக்ஷர மந்திரம், வேட்கையொடு - விருப்பத்துடன்.

போவதரி தானலும் போய்த்தொழுவோம் நெஞ்சமே!
மாவதரி யாச்சிர மத்து.

782] **102. திருக்கங்கைக் கரைக்கண்டம்** [க0கூ

(தேவப்பிரயாகை)

மத்தாற் கடல்கடைந்து வானோர்க் கமுதளித்த
அத்தா! எனக்குன் அடிப்போதில்—புத்தமுதைக்
கங்கைக் கரைசேருங் கண்டத்தாய்! புண்டரிக
மங்கைக் கரைசே! வழங்கு.

783] **103. திருப்பிருதி** [கக0

வழங்கும் உயிரனைத்தும் வாரிவாய்ப் பெய்து
விழுங்கும் கவந்தன் விறற்றோட்—கிழங்கைப்

---

இத்தலம் நாராயணன் பத்ரி விருக்ஷத்தின் அடியிலிருந்து நரன் என்னும் தன் சிடனுக்குத் திருமந்திரத்தை உபதேசித்த காரணத்தால் இப்பெயருடையதாயிற்று. (பத்ரி - வதரி - இலந்தை மரம்) இது இமயமலையில் உள்ளது.

782. 'அத்தா, கண்டத்தாய், எனக்கு உன் அடிப்போதின் புத்தமுதை வழங்கு,' என இயைக்க.

கடல் - திருப்பாற்கடல், அத்தா - தலைவா, புண்டரிக மங்கை - தாமரை மலரிலுள்ள இலக்குமி, கண்டத்தாய் - கண்டம் என்னும் திருப்பதியிலுள்ளவனே, அடிப்போதின் புத்தமுதை - திருவடித் தாமரையின் புதிய அமிர்தத்தை, வழங்கு - கொடுத்தருள்.

இத்தலம், 'திருக்கண்டங்கடிநகர்' எனவும், 'தேவப் பிரயாகை' எனவும் வழங்கும்; அரித்துவாரத்திற்கு ஐம்பத்தெட்டு மைலில் உள்ளது.

783. 'எனது நெஞ்சே, வழங்கும் உயிர் அனைத்தும் வாரி வாய்ப்பெய்து விழுங்கும் கவந்தன் விறல் தோள் கிழங்கைப் பொருப்பு இரு திக்கும் கிடந்தாற்போல் துணித்து வீழ்த்தான் திருப்பிரிதிக்குச் செல்,' என இயைக்க.

வழங்கும் - (உலகில்) வாழும், வாய்ப்பெய்து - (தனது) வாயில் இட்டு, கவந்தன் - கபந்தாசுரனுடைய, விறல் தோள் கிழங்கை - வலிமை வாய்ந்த தோள்களின் மூலத்தை, பொருப்பு - மலைகள், துணித்து வீழ்த்தான் - (இராமாவதாரத்தில்) வெட்டித் தள்ளியவனான பெருமானது, திருப்பிரிதிக்கு - திருப்பிரிதி என்னும் தலத்திற்கு.

பொருப்பிருதிக் குங்கிடந்தாற் போற்றுணிந்து வீழ்ந்தான்
திருப்பிருதிக் கென்னெஞ்சே! செல்.

784] 104. திருவடமதுரை [ககக

செல்வம் உயிருடம்பு சேர வுரித்தாக்கி
வல்வினையி னீங்குமினோ மாந்தர்காள்!—தொல்லை
வடமதுரை யான்கழலே வாய்த்ததஞ்ச மென்று
திடமதுரை செய்தான் திறத்து.

785] 105. திருத்துவாரகை [ககஉ

திறந்திறமாத் தாந்துய்க்குந் தீஞ்சுவையை நாடி
அறந்திறம்பிப் பாதகரோ ரைவர்—நறுந்துளவ
மாதுவரை யோனே! மனந்துணையாக் கொண்டென்னைக்
காதுவரை யோமெய் கலந்து!

---

'விரோதிகளையழித்து அடியவர் துன்பங்களைபவன் ஆண்டவனே,' என்பது கருத்து.

இத்தலம், அரித்துவாரத்திற்கு 138 மைலில் உள்ளது.

784. 'மாந்தர்காள், 'கழலே வாய்த்த தஞ்சம்,' என்று திடமது உரை செய்தான்—தொல்லை விடமதுரையான்—திறத்துச் செல்வம், உயிர், உடம்பு சேர உரித்து ஆக்கி, வல் வினையின் நீங்குமின்,' என இயைக்க.

மாந்தர்காள் - மனிதர்களே, கழலே வாய்த்த தஞ்சம் - (உங்களுக்கு என்) திருவடியே பொருந்திய புகலிடம், திடமது - உறுதியை, தொல்லை - பழமையான, திறத்து - இடத்தில், சேர - தொகுதியாக, உரித்து ஆக்கி - உரியதாகச் செய்து, வல்வினையின் நீங்குமின் - வலிய இரு வினைத் தொடர்பிலிருந்து விடுபடுங்கள்.

இத்தலம், 'மட்ரா' என வழங்கும்; திருக்கண்ணபிரானார் திருவவதாரம் செய்த இடம்; பெருமான் 'மது' என்னும் அரக்கனை அழித்த இடம்.

785. 'நறுந்துளவ மாதுவரையோனே, பாதகர் ஓர் ஐவர் திறம் திறமா(க)த் தாம் துய்க்கும் தீஞ்சுவையை நாடி, அறம் திறம்பி, மனம் துணையா(க)க் கொண்டு, மெய் கலந்து, என்னைக் காதுவர்; ஐயோ!' என இயைக்க.

மாதுவரையோனே - சிறப்புடைய துவாரகையிலுள்ள பெருமானே, ஐவர் - ஐம்பொறிகளாகிய பகைவர், திறம் திறமா(க) - வகை வகையாக, துய்க்கும் - அநுபவிக்கும், நாடி - விரும்பி, திறம்பி - மாறுபட்டு, மனம் - (எனது) உள்ளத்தையே, மெய் கலந்து - என் உடலிற்சேர்ந்து, காதுவர் - வருத்துவர்.

ஐம்பொறிகளை 'ஐவர்' என்றது திணை வழுவமைதி.

786] 106. திருவாய்ப்பாடி (கோகுலம்) [ககரு

கலந்தமர ரோடுங் கரைகண்டா ரோடும்
பொலிந்துதிரு நாட்டிருக்கப் போவீர்—மலிந்தபுகழ்
அண்டராய்ப் பாடி யமலரடி யாரடியார்
தொண்டராய்ப் பாடித் தொழும்.

787] 107. திருப்பாற்கடல் [ககச

தொழும்பாய நான்நல்ல சூதறிந்து கொண்டேன்
செழும்பா யலைமுத்தஞ் சிந்தி—முழங்கும்
திருப்பாற் கடலான்றாள் சேர்ந்தா ரடிசேர்ந்
திருப்பாற் கடலா மிடர்.

## திருநாட்டுத் திருப்பதி 1

788] 108. திருவைகுந்தம் (பரமபதம்) [ககரு

இடருடையேன் சொல்ல வெளிதோ பிரமன்
அடரும்விடை யோற்கும் அரிதே—தொடரும்

786. 'அமரரோடும் கரை கண்டாரோடும் கலந்து பொலிந்து திருநாட்டு இருக்கப் போவீர், மலிந்த புகழ் அண்டர் ஆய்ப்பாடி அமலர் அடியார் அடியார் தொண்டராய்ப் பாடித் தொழும்,' என இயைக்க.

அமரர் - தேவர், கரை கண்டார் - அக்கரை கண்ட முத்தர், பொலிந்து - விளங்கி, திருநாட்டு - பரமபதத்தில், போவீர் - செல்ல விரும்பும் உலகத்தவரே, அண்டர் - இடையரின், அடியார் அடியார் - அடியார்க்கு அடியவர், தொழும் - வணங்குங்கள்.

இது பாகவதத் தொண்டின் சிறப்புக் கூறிற்று.

இத்தலம், 'கோகுலம்' எனவும் வழங்கும்; வடமதுரைக்கு நான்கு மைலில் உள்ளது. (ஆய்ப்பாடி - இடைச்சேரி.)

787. தொழும்பு ஆய - அடிமையாகிய, நல்ல சூது - நல்ல உபாயத்தை, செழும்பாய் அலை - செழுமையான தாவுகின்ற அலைகளால், முத்தம் - முத்துகளை, முழங்கும் - பேரொலி செய்யும், சேர்ந்தார் - அடைந்தவரான பாகவதரின், இருப்பாற்கு - இருப்பவனுக்கு, அடல் ஆம் - அழித்தல் இயலும்.

இதுவும் பாகவதத் தொண்டின் சிறப்புக் கூறிற்று.

இத்தலம், வடதுருவத்தில் உள்ளதென்பர் பெரியோர்.

788. 'தொடரும் கரு வைகும் தம் பிறவிக் கட்டு அறுத்து மீளாத் திருவைகுந்தம் பெறுவார் சீர், பிரமன் அடரும் விடையோற்கும் அரிது; இடர் உடையேன் சொல்ல எளிதோ?' என இயைக்க.

கருவைகுந் தம்பிறவிக் கட்டறுத்து மீளாத்
திருவைகுந் தம்பெறுவார் சீர்.

789] தற்சிறப்புப் பாயிரம் [ககசு

மண்ணி லரங்கமுதல் வைகுந்த நாடளவும்
எண்ணு திருப்பதிநூற் றெட்டினையும்—நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவார் கேட்டிருப்பார்
பொற்பாத மென்தலைமேற் பூ.

790] [ககஎ

பதின்மர் உரைத்த பதியொருநூற் றெட்டும்
துதிசெய்ய அந்தாதி சொன்னான்—அதிக
குணவாள பட்டரிரு கோகனகத் தாள்சேர்
மணவாள தாசன் வகுத்து.

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி முற்றிற்று.

---

கரு வைகும் - கருப்பத்தில் தங்கும், சீர் - சிறப்பானது, பிரமன் - பிரமனுக்கும், அடரும் விடையோற்கும் - கோபிக்கும் எருதை வாகனமாகக்கொண்ட சிவனுக்கும், அரிது - (வருணிக்க) இயலாதது, எளிதோ - சுலபமானதோ?

இத்தலம், 'பரமபதம்' எனவும் வழங்கும்; விண்ணுலகிலுள்ளது.

789 மண்ணில் - உலகத்தில், எண்ணு திருப்பதி - (பெரியோர்) தியானிக்கும் திவ்விய தேசங்கள், நண்ணுவார் - அடைபவர்களும், கற்பார் - (அவற்றைப் பற்றிப் பெரியோர் அருளிய வாக்குகளைக்) கற்பவர்களும், துதிப்பார் - சிறப்பித்துப் பேசுகிறவர்களும், கருதுவார் - தியானிப்பவர்களும், கேட்டிருப்பார் - சிரவணம் செய்துகொண்டிருப்பவர்களுமாகிய பரம பாகவதர்களின், பொற்பாதம் - அழகிய திருப்பாதங்கள், என் தலைமேல் பூ - என் தலையிற்சூடும் மலராம்.

790. பதின்மர் - ஆழ்வார் பத்துப்பேர், வகுத்து - வகைப்படுத்தி, கோகனகம் - தாமரை.

பாசுரம் 789,790 ஆகிய இரண்டும் ஐயங்கார் தம்மைப் பிறன்போலப் பாவித்துச் செய்த பாயிரமாம்.

வாழ்க மணவாள தாசன் மலரடிகள்!
வாழ்க அவன்பா வழுத்துவோர்!—வாழ்க
பலதுறையு நன்காய்ந்து பண்பட்டிந் நூற்கு
நிலவுரைவ குத்தோர் நெடிது!

# அருஞ்சொற்பொருள் அகராதி

அக்கரவு - அந்த ரகசியம்
அக்கு - எலும்பு
அக்குரூரர்-ஒரு யதுகுல பக்தர்
அகடு - வயிறு
அகண்டம் - முழுமை
அகலிடம் - பூமி
அங்கம் - உடல்
அங்கனையார் - பெண்டிர்
அங்காந்த - திறந்த
அங்கி - அக்கினி
அங்கை - உள்ளங்கை
அசரம் - அசையாப்பொருள்
அஞ்சலியார் - வணங்கார்
அஞ்சனச் சிலம்பு - திருவேங்கட மலை
அஞ்சன மலை - கரியமலை
அட்ட - அழித்த
அட்டான் - அழித்தவன்
அடங்கை நடங்கை - திருவரங்கத்தில் தொண்டரடிப்பொடியாழ்வார் உண்டாக்கிய இரு நந்தவனங்கள்
அடர்ந்தனை - அழித்தாய்
அடவி - காடு
அடாதது - தகாதது
அடிகள் - கடவுள், குரு நாதர், பாதங்கள்
அடிசில் - உணவு
அடை - இலை
அடைக்கலம் - கட்டுப்படுத்த மாட்டோம், புகலிடம்
அடைய - முழுவதும்
அண்டம் - உலகம், முட்டை
அண்ட மேலக் கடாகம் - அண்ட கோளத்தின் மேல் மூடி
அண்டர் - இடையர், தேவர்
அணி - அழகு, அலங்காரம்

அணித்து - அருகில் உள்ளது
அணிது - அழகியது
அணை - படுக்கை
அத்தத்து - கைகளில்
அத்தத்தை - அத்துன்பத்தை
அத்தன் - தலைவன், கைகளை உடையவன்
அத்தனை - அவ்வளவு
அத்தி - யானை, கடல், எலும்பு
அத்திரம் - நிலையற்றது, அம்பு
அதரம் - உதடு
அதலம் - கீழ் உலகங்களுள் ஒன்று
அந்தம் - அழகு, முடிவு
அந்தன் - குருடன்
அந்தாதி - ஒரு செய்யுளின் அந்தத்தில் உள்ள எழுத்தேனும் அசையேனும் சீரேனும் அடியேனும் அடுத்த செய்யுளுக்கு முதலாக அமையும்படி பாடப்படும் பிரபந்தம்
அந்திக் காப்பு - மாலை நேரத் திருஷ்டி கழிப்பு
அந்தி மாலை - மாலைக்காலம்
அப்பு - நீர், கடல்
அபயம் - அடைக்கலம்
அபிமானம் - பற்று
அபியுக்தர் - அறிஞர்
அம் - அழகு
அம்பரம் - கடல்
அம்பு - நீர்
அம்புயம் - தாமரை மலர்
அம்புய மின் - இலக்குமி
அம்புலி - சந்திரன்
அம்புவி - பூமி
அம்போருகம் - தாமணிர மலர்
அமரர் - தேவர்

அமலன் - குற்றம் அற்றவன்
அமலை - இலக்குமி
அமளி - படுக்கை
அமுது - இனிமை, உணவு
அயர்த்தன - சோர்ந்தன
அயன் - பிரமன்
அயிர்த்தல் - சந்தேகித்தல்
அயிராவதம் - இந்திரன் யானை
அயின்றவர் - உட்கொண்டவர்
அரங்கு - நடன சபை
அரந்தை - துன்பம்
அரம் - சக்கராயுதத்தின் பல்
அரம்பை - வாழை, தெய்வப் பெண்
அரம்பையர் - தெய்வ மகளிர்
அரவணை - பாம்புப் படுக்கை
அரவம் - பாம்பு
அரவரசு - ஆதிசேடன்
அரவின் - திருமால்
அரவிந்தம் - தாமரை மலர்
அரவிந்தைமார் - அட்டலக்குமிகள்
அரவு - பாம்பு
அரன் - சிவன்
அராவமளி - பாம்புப் படுக்கை
அரி - இந்திரன், கண்ணில் படரும் செவ்வரி, சிங்கம், திருமால், வண்டு
அரிவை - பெண்
அரு - உருவல்லாதது
அருமகன் - பிரகலாதன்
அரைக்கலை - நீ அழிக்கவில்லை, கலையென்னும் கால அளவிற் பாதி
அல் - இருள்
அல்குல் - பிட்டம்
அலம் - கலப்பை
அலமந்து - வருந்தி
அலர் - மலர், பழிச்சொல்
அலாயுதன் - பலராமன்
அலை - கடல்
அலைக்கும் - வருத்தும்
அலையாழி மங்கை - இலக்குமி
அவங்கள் - கேடுகள்
அவம் செய்தான் - பாழாக்கியவன்
அவா - பேராவல்
அவுணன் - இராட்சசன்
அவை - சபை
அளகக் காடு - கூந்தலின் தொகுதி
அளி - கிருபை, வண்டு
அளிக்குலம்- வண்டின் கூட்டம்
அளித்தாய்- காப்பாற்றியவனே
அளை - வெண்ணெய்
அளையும் - கலக்கும்
அற்றைக்கு - அன்றைக்கு
அறிதுயில் - யோக நித்திரை
அறு சமயம் - (சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணாபத்தியம், கௌமாரம் என்னும்) ஆறு மதங்கள்
அனங்கன் - மன்மதன்
அனந்த சயனம் - ஆதிசேடனாகிய படுக்கை
அனந்தரம் - பின்பு
அனந்தன் - ஆதிசேடன், கடவுள்
ஆ - பசு, வியப்பிடைச் சொல்
ஆக - மார்பனே
ஆகம் - உடல், மனம், மார்பு
ஆகமம் - சாத்திரம்
ஆகவம் - போர்
ஆசு - குற்றம்
ஆடகம் - நடனசபை, பொன்
ஆதரம் - அன்பு, விருப்பம்
ஆதரி - விரும்பு
ஆதரித்து - அன்பு கொண்டு
ஆதவன் - சூரியன்
ஆதவன் மைந்தன் - சுக்கிரீவன்

ஆதனம் - இருக்கை
ஆதிபன் - தலைவன்
ஆய் - தாய்
ஆய்ச்சி - இடைச்சி
ஆயன் - கிருஷ்ணன்
ஆயிழை - ஆராய்ந்த ஆபரணங்களை அணிந்தவள்
ஆர்கலி - கடல்
ஆர்ந்திட்ட - சேர்ந்தன
ஆரணங்கு - பெண்
ஆரணத்தந்தம் - வேதாந்தம்
ஆரணம் - வேதம்
ஆரம் - சந்தன மரம், முத்து, முத்து மாலை
ஆரமுது - அரிய தேவாமுதம்
ஆரா அமிர்து - தெவிட்டாத தேவாமுதம்
ஆல் - ஆலமரம்
ஆலம் - விஷம்
ஆலி - மழை
ஆவரணம் - மதில்
ஆவாகனத்தர் - எழுந்தருளியிருப்பவர்
ஆவி - உயிர்
ஆழ்வான் - கூரத்தாழ்வான்; எதிராசரின் சிடர்
ஆழி - கடல், சக்கராயுதம், மோதிரம்
ஆழியான் - திருமால்
ஆள் - அடிமை, காலாள்
ஆளரி - நரசிங்கம்
ஆளவந்தார் - மணக்கால் நம்பியின் சிடர்
ஆற்ரு - போதமாட்டா
ஆனந்தவாரி-சந்தோஷ சாகரம்
இக்கு - கரும்பு
இகல் - மாறுபாடு
இகலி - மாறுபட்டு
இசை - இராகம், புகழ்
இடங்கர் - முதலை
இடந்தவர்-(கோட்டால்) குத்தி எடுத்தவர்
இடந்தனை - பூரித்தாய்
இடம் - பெருமை
இடர் - துன்பம்
இடவ மலை - அழகர் மலை
இடியேறு - பேரிடி
இடும்பை - துன்பம்
இணர் - கொத்து
இதயத்தன் - மனத்தில் இருப்பவன்
இந்திர வில் - வானவில்
இந்திரியம் - ஐம்பொறிகள்
இந்திரை - இலக்குமி
இந்து - சந்திரன்
இந்துவின் பொய்கை - சந்திர புஷ்கரணித் தடாகம்
இநர் - சூரியர்
இபம் - யானை
இமையவர் - தேவர்
இமையா நாட்டம் - இமைத்தலில்லாத கண்கள்
இமையோர் - தேவர்
இயல் - இலக்கணம், குணம்
இயன்ற - சஞ்சரித்தன
இரங்கல் - வருந்துதல்
இரப்ப - யாசிக்க
இரவி - சூரியன்
இரவு - இராத்திரி, யாசித்தல்
இரா - இராத்திரி
இராமர் - 'ராம மிஸ்ரர்' என்னும் மணக்கால் நம்பி; உய்யக்கொண்டாரின் சிடர்
இரிதல் - அழிதல், அஞ்சி ஓடுதல்
இருக்கு - வேதம்
இரு கோள் - சந்திர சூரியர்
இருங்கமலை - பெரிய இலக்குமி
இரு சுடர் - சந்திர சூரியர்
இருந்தை - அடுப்புக் கரி

இரு பனி - முன் பனியும் பின் பனியும்
இரு பாடு - இரண்டு பக்கம்
இரு வினை-புண்ணிய பாவங்கள்
இலக்கு - குறி
இலங்க - விளங்க
இலங்கா - இலங்கை
இலங்காநின்ற - விளங்குகின்ற
இலங்காபுரம் - இலங்கை நகர்
இலச்சினை - முத்திரை
இலம் - தரித்திரமுடையோம், வீடு
இவர்ந்து - ஏறி
இறை - சிறிது நேரம், தங்கும் இடம், தலைவன்
இறைஞ்சி - வணங்கி
இறைஞ்சிடுக - வணங்குக
இறைவன் - கடவுள், தலைவன்
இன்னும் - இவ்வளவு காலம் சென்றும்
இன்னா - துன்பம்
ஈட்டம் - திரள்
ஈடு - சமானம்
ஈரம் - நயமுடைமை
ஈனம் - இழிவு
உக - சிந்த, அற்று விழ
உகம் - யுகம், ஊழிக்காலம்
உகாந்தம் - யுக முடிவு
உகிர் - நகம்
உடு - நட்சத்திரம்
உடுபதி - சந்திரன்
உண்டை - உட்கொண்டாய்
உத்தரீயம் - அங்கவஸ்திரம்
உத்தான பாதன் மகன் - துருவன்
உததி மங்கை - கடலிற்பிறந்த இலக்குமி
உதரம் - வயிறு
உதித்தனர் - பிறந்தனர்
உந்தி - கொப்பூழ்
உந்திச் செழுமலர்- கொப்பூழா கிய தாமரைப்பூ
உந்துதல் - செலுத்துதல்
உம்பர் - தேவர்
உம்பர் பெருமான்- தேவர்க்குத் தலைவன்
உமை - பார்வதி
உமை கேள்வன் - சிவன்
உய்ய - பிழைக்க
உய்யக் கொண்டார் - நாதமுனி களின் சீடர்
உயக்கொள்வது- கடைத்தேறச் செய்வது
உயிர் - மூச்சு
உரகம் - பாம்பு
உரவில் - வலிய வில்
உரிந்து - கழன்று
உரும் - இடி
உவணப்புள் - கருடப் பறவை
உவந்தனையேல் - விரும்பினாய் எனில்
உவந்திட - மகிழ்ச்சியடைய
உவப்பு - மகிழ்ச்சி
உழுவது - கீறுவது
உழுவை - புலி
உழை - மான் கன்று
உள் - மனம்
உள்ளாது - நினையாது
உள்ளுவார் - நினைப்பவர்
உன்னி - தியானித்து
உன - உன்னுடைய
ஊசல் - ஊஞ்சல்
ஊடு - உள்
ஊமன் - ஊமை
ஊர் சகடம் - நகரும் வண்டி
ஊர்தி - வாகனம்
ஊரு - தொடை
ஊன் - உடல்
எசுர் - எசுர் வேதம்
எடுப்பு - உயர்வு

எண்கிரி - அட்டகுல பர்வதம்
எண்மர் - எட்டுப் பேர்
எதித்தலைவர்-எதிராசர்; பெரிய நம்பியின் சீடர்
எந்தை - எம் தந்தை
எம்பார் - எதிராசரின் அந்தரங்கச் சீடர்
எம்மான் - எம் தலைவன்
எய்த்த - இளைத்த
எயிறு - பல்
எரி - தீ, அக்கினி தேவன்
எல்லியும் திகழும் கஞ்சம் - இரவிலும் மலர்ந்து விளங்கும் தாமரை மலர் (முகம்)
எல்லைக் கிரி - சக்கரவாள கிரி
எழில் - அழகு
எழுத்து ஆறிரண்டு - துவாத சாட்சர மகா மந்திரம் (ஓம் நமோ பகவதே வாசுதேவாய)
எழு பாதலங்கள் - ஏழு கீழ் உலகங்கள் (அதலம், விதலம், சுதலம், தராதலம், மகா தலம், ரசாதலம், பாதலம்)
எழு மண் - ஏழுலகம்
என்பு - எலும்பு
என்னே - என்ன ஆச்சரியம்
ஏ - அம்பு
ஏதம் - குற்றம்
ஏ வலர் - அம்பு செலுத்துவதில் வல்லவர்
ஏற்றன் - எருதை வாகனமாகக் கொண்ட சிவன்
ஏறு - எருது
ஏனம் - பன்றி
ஐ - அழகு, ஐந்து, கோழை
ஐங்கரன் - விநாயகன்
ஐம்படை - பஞ்சாயுதம்
ஐம்புலன் -(சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும்) ஐவகை உணர்ச்சிகள்
ஐம்முகன் - சிவன்
ஐயன் - தலைவன், மைந்தன்
ஐயாயுதன் - பஞ்சாயுதங்களை உடைய திருமால்
ஐயானனன் - ஐந்து முகங்களை உடைய சிவன்
ஐவர் - ஐம்பொறிகள், பஞ்ச பாண்டவர்
ஐவர் கொடி } திரௌபதி
ஐவர் தையல் }
ஐவாய் அரவு - ஐந்தலை நாகம்
ஒசித்தது - உடைத்தது
ஒரு நயம் - ஒரு வார்த்தை
ஒழுகும் - பாயும்
ஒற்றி வைத்தல் - சார்த்தி வைத்தல், அடகு வைத்தல்
ஒறுக்கும் - தண்டிக்கும்
ஒறுத்தான் - தண்டித்தான்
ஒன்றி - நெருங்கி
ஒன்றும் - பொருந்தும்
ஒன்னார் - பகைவர்
ஓகை - மகிழ்ச்சி
ஓங்கல் - யானை
ஓங்காரம் - பிரணவ மந்திரமாகிய ஓம்
ஓடை - முக படாம்
ஓடை மா - முக படாம் அணியப்பட்ட யானை
ஓத நீர் - கடல்
ஓதம் - வெள்ளம்
ஓதிமம் - அன்னம்
ஓதை - ஓசை
ஓல் } ஆரவாரம்
ஓலம் }
ஓலிடும் - ஒலிக்கும்
ஔவியம் - பொறாமை, வஞ்சகம்
ககனம் - ஆகாயம்
ககன வில் - வான வில்
கங்குல் - இரவு

கங்கை - கங்கா நதி
கஞ்சம் - தாமரை மலர்
கஞ்சன் - கம்ஸன்
கட்செவி - பாம்பு
கட்டுரைத்தல் - உறுதியாகச் சொல்லுதல்
கடகம் - தோள் வளை
கடகளிறு - மதயானை
கடம்பு - கடப்ப மரம்
கடாகம் - அண்டகோளம்
கடி - வாசனை
கடித்தலம் - இடை
கடு வளி - சுழல் காற்று
கடுவன் - ஆண் குரங்கு
கண்•கலக்கம் - துன்பம்
கண்கொண்ட மலை - முகக் கண்ணையுடைய பருத்த முலை
கண்டகர் - கொடியவர்
கண்ட கனு- கண்டா கர்ணனே
கண்டம் - கழுத்து
கண்டல் - தாழை
கண்டன் - கழுத்தன்
கண்டாகனன்-கண்டா கர்ணன் என்னும் சிவபத்தன்
கண்டார் - செய்தவர்
கண்ணகல் ஞாலம்- இடமகன்ற உலகம்
கண்ணி - தலை மாலை
கண்ணுதல் - சிவன்
கண் மாயம் -கண்கட்டு வித்தை
கண் வளரும் - துயிலும்
கணகணமா - கணகணவென்று ஒலிப்பதாக
கணம் - கூட்டம்
கணை - அம்பு
கதி - வழி, மோட்சம், வேகம்
கதிபட்ட - வேகம் பொருந்திய
கதிர்- கிரணம்
கதிரவன் - சூரியன்
கந்தரம் - கழுத்து
கந்துகம் - பந்து
கபடன் - வஞ்சகன்
கபாலி - பிரம கபாலத்தைக் கையிற்கொண்ட சிவன்
கபி - குரங்கு
கம்புள் - நீர்க்கோழி
கமலத்தவன் - பிரமன்
கமடம் - ஆமை
கமலம் - தாமரை
கமலமுனி - பிரமன்
கமலன் - பிரமன்
கமுகு - பாக்கு மரம்
கயம் - யானை, குளம்
கயல் - கெண்டை மீன்
கயிலாத மலை - கைலாய மலை
கரத்தல் - மறைத்தல்
கரதலம் - கையிடம்
கரந்து - மறைந்து
கரவன் - மாயன்
கரவு - வஞ்சனை
கரளம் - விஷம்
கரன் - ஓர் அசுரன்
கரி - சாட்சி, யானை
கரியும் - கரியாகும்
கரு - பிறப்பு
கருங்குன்று - பெருமலை
கருணை - அருள்
கருணை வாரிதி - கருணைக்கடல்
கரும்பன் - கரும்பு வில்லை உடைய மன்மதன்
கரைவேற்கு - அழுகின்ற எனக்கு
கல்லாரம் - செங்கழுநீர் மலர்
கலவை - சந்தனம், சுண்ணச் சாந்து
கலியன் - திருமங்கை ஆழ்வார்
கலை - வஸ்திரம், சந்திரன் கூறு
கவசம் - இரும்புச் சட்டை
கவந்தம் - தலையற்ற உடல்
கவந்தன் - கவந்தாசுரன்

கவிகை - குடை
கவிப்ப - மூட
கவுத்துவம் - திருமால் மார்பணியாகிய இரத்தினம்
கழல் - பாதம், வீரகண்டை
கழை - மூங்கில்
களி - கட்குடியர் பேச்சு
களியர் - கட்குடியர்
களிறு - ஆண் யானை
களேபரம் - உடல்
கற்கி - கல்கியவதாரம்
கற்பம் - உலக முடிவு காலம்
கறங்கு - காற்றாடி
கறை - விஷம்
கறைக்களத்தன் - நீலகண்டனாகிய சிவன்
கன்னிகை-தாமரைப்பொகுட்டு
கனகம் - பொன்
கனகவரை - மேரு மலை
கனகன் - இரணியன்
கனல் - நெருப்பு
கா - சோலை, கற்பகச் சோலை, காப்பாற்று
காக்கை - காப்பாற்றுதல்
காகம் - காகாசுரன்
காண்கை - பார்த்தல்
காதுதல் - வருத்துதல்
காந்தள் - கார்த்திகைப்பூ
காந்தன் - கணவன்
காமர் - அழகு
கார் - மேகம்
கார்க்குலம் - மேகக் கூட்டம்
கார் காலம் - மழை காலம்
காரணர் - கடவுள்
கால் - காற்று, மரக்கால் என்னும் முகத்தலளவைக் கருவி
காலத் திகிரி - காலச் சக்கரம்
கால மயக்கு - காலமல்லாக் காலம்
காலன் - யமன்
காவதம் - காத தூரம்
காவலன் - அரசன்
காளாசலம் - கரிய மலை
காளியன் - கண்ணபிரானால் அடக்கப்பட்ட பாம்பு
கான் யாறு - காட்டு நதி
கான்றது - வெளி விட்டது
கானம் - காடு
கானல் - கழிக்கரைச் சோலை
கிங்கரர் - வேலையாட்கள்
கிடந்தான் - பள்ளி கொண்டவன்
கிண்கிணி - சிறு மணி
கிள்ளை - கிளி
கிளை - சுற்றம்
கு - பூமி
குகன் - முருகன்
குஞ்சரமுகன் - விநாயகன்
குடக்கனி - பலாப்பழம்
குடகாவிரி - மேலைக் காவேரி
குடகு - மேற்கு
குடந்தை - கும்பகோணம்
குடநடம் - குடக்கூத்து
குணில் - குறுந்தடி
குதலை - மழலைச்சொல்
கும்பம் - குடம்
குமுறும் - முழங்கும்
குமைத்தான் - அழித்தான்
குயின்ற - பதித்த
குரம் - குளம்பு
குரவை - மகளிர் கை கோத்து ஆடும் கூத்து
குருகீர் - நாரைகளே
குருகு - நாரை
குருந்து - குருந்த மரம்
குருபரன் - ஆசாரியன்
குரும்பை - பிஞ்சு
குல பூதரம் - குல மலைகள்
குவடு - சிகரம்
குவலயம் - பூமி

குவலய மடந்தை - பூமி தேவி
குவளை - நீலோற்பல மலர்
குவால் - கூட்டம்
குழல் - கூந்தல், புல்லாங்குழல்
குழவி - குழந்தை
குழற்சூட்டு - கூந்தலிற்சூடிய மாலை
குழாம் - கூட்டம்
குழை - குண்டலம்
குறம் - குறத்தி சொல்லும் குறி
குறியாதவன் - மதியாதவன் (காலயவனன் என்னும் யவன தேசத் தலைவன்)
குறைமதி - குறைந்த புத்தி
கூருகிர் - கூர்மையான நகம்
கூலம் - கரை
கூற்று - சொல், யமன்
கூன் - வளைவு
கெண்டை - சேல் மீன்
கெழு - நிறம்
கெளிறு - கெளிற்று மீன்
கேசம் - தலை மயிர்
கேசவன் - கிருஷ்ணன்
கேட்கை - கேட்டல்
கேதம் - துன்பம்
கேதனம் - துகிற்கொடி
கேழ் - நிறம்
கேழல் - பன்றி
கேள்வன் - கணவன்
கைக்கிளை - ஒருதலைக் காமம்
கைக்குஞ்சரம் - துதிக்கையை உடைய யானை
கைக்கும் - வெறுக்கும்
கைத்து - வெறுத்து
கைப்பிடித்தல் - பாணிக்கிரகணம் (திருமணம்)
கொக்கு - மாமரம்
கொங்கு - தேன்
கொங்கை - முலை
கொச்சை - இழிவு
கொண்டல், கொண்மூ - மேகம்
கொம்பு - பூங்கொடி, பெண்
கொணரீர் - கொண்டுவாருங்கள்
கொள்ளா - கொண்டு
கொற்றம் - வெற்றி
கொற்றவன் - தலைவன், அரசன்
கொறி - ஆடு
கோ - எருது, தலைவன்
கோகனகப்பொறி - இலக்குமி
கோகனகம் - தாமரை
கோகனகை - இலக்குமி
கோசிகை - பட்டாடை
கோட்டுச் சயிலம் - சிகரத்தை உடைய மலை
கோடு - தந்தம், மலைச்சிகரம்
கோதண்டம் - வில்
கோதை - ஆண்டாள்
கோபி - இடைச்சி
கோயில் - திருவரங்கம்
கோலத் திருவுரு - வராகத்தின் அழகிய உருவம்
கோலம் - அழகு, பன்றி
கோவலர் - இடையர்
கோழியர் கோன் - சோழர்க் குத் தலைவரான குலசேகர ஆழ்வார்
கோள் - கிரகம், வலிமை
கோளரி - வலிய சிங்கம்
கோன் - தலைவன்
சகடம் - வண்டி
சகடு - சகடாசுரன், வண்டி
சகடு உதைத்த தாளத்தன் - கண்ணபிரான்
சங்கரன் - சிவன்
சங்கை - சந்தேகம்
சடகோபர் - நம்மாழ்வார்
சண்டநெடுங்கிரி - மிகப் பெரிய மலை

சண்பகாடவி - சண்பகமரச் சோலை
சதமகன் - இந்திரன்
சதுராननன் - பிரமன்
சம்பரன் - இரணியன் அமைச்சருள் ஒருவன்
சம்பிரதம் - இந்திரஜாலம்
சமணர் - ஜைனர்
சயத்தார் - வெற்றி மாலை
சர - அம்பை உடையவனே
சரண் - அடைக்கலம்
சரணாரவிந்தம் - பாதமாகிய தாமரை
சரபம் - இரு தலையும் எட்டுக் காலும் உடைய வலியபறவை
சரம் - அம்பு, அசையும் பொருள்
சரமதசை - முடிவு காலம்
சராசரங்கள் - அசையும் பொருளும் அசையாப் பொருளும்
சன்மவிடாய் - பிறவித் துன்பம்
சனகன தணங்கு - சீதை
சனனம் - பிறப்பு
சாகரம் - கடல்
சாடும் - மோதும்
சாதக நாடு - பரமபதம்
சாதி - இனம், கள்
சாந்திபன் - கண்ணபிரானுக்குக் கல்விகற்பித்த முனிவன்
சாபம் - சபித்தல், வில்
சாமம் - சாமவேதம்
சாமரம் - வெண்சாமரை
சார்ங்கம் - வில்
சால் - தாழி
சாளரம் - ஜன்னல்
சாற்றுகை - துதித்தல்
சானகி - சீதை
சிகாமணி - சிரத்திலணியும் இரத்தினம்
சிங்கப்படி - சிங்க வடிவம்
சிங்கவேறு - ஆண் சிங்கம்
சித்தர் - சித்தி பெற்றவர்
சிதறுபு - சிதறி
சிந்தனை - எண்ணம்
சிரம் - தலை
சிலம்பி - சிலந்தி
சிலம்பு - பாதச்சிலம்பு, மலை
சிலை - கல், வில்
சிறை - சிறகு
சினை - கிளை
சீதம் - குளிர்ச்சி
சீதரன் - திருமால்
சீர் - சிறப்பு, மகிழ்ச்சி
சீரியோர் - சிறந்தவர்
சுடர் இரண்டும் செல்லாத ஊர் - இலங்கை
சுரபி - காமதேனு
சுரம் - காடு, பாலை வனம்
சுரர் - தேவர்
சுருதி - வேதம்
சுவணன் - கருடன்
சுழி - நீரில் உண்டாகும் சுழி
சுறவம் - சுறா மீன்
சூடு - உச்சிக் கொண்டை
சூழ்வினை - சதியாலோசனை
சூழி - யானையின் முகபடாம்
சூழிக்களிறு - கஜேந்திரன்
சூனிய வாதர் - நாஸ்திகர், கடவுள் இல்லை என்பவர்
செஞ்சுடர் - சூரியன்
செந்நீர் - இரத்தம்
செம்பொன் நிறக் குன்று - மேரு மலை
செய்ய - வயலில் உள்ள
செய்யவள் - இலக்குமி
செனு - மீன் செதிள்
செவியறிவுறூஉ - நல்லறிவு புகட்டுதல்
செவிலி - வளர்ப்புத்தாய்
செற்றோன் - அழித்தவன்

செற்று - அழித்து
சென்னி - தலை
சேணுடர் - தேவலோகத்தார்
சேதனன் - உயிர்
சேய் - பிள்ளை
சேல் - கெண்டை மீன்
சேவித்தல் - வணங்குதல்
சேனைத்தலைவர், சேனையர்கோன் - சேனைமுதலியார்; திருமகளின் சீடர்
சேர - வாணாசுரன் நகரம்
சோனை மாரி - விடாமழை
ஞாலத்திகிரி - பூசக்கரம்
ஞாலம் - பூமி
ஞாழல் - புலிநகக் கொன்றை
ஞெண்டு - நண்டு
ஒதக்கோர் - பெரியோர்
தகுவன் - அசுரன்
தஞ்சம் - புகலிடம்
தடம் - வழி
தடவரை - விசாலமான மலை
தடித்து - மின்னல்
தண்கதிர் - சந்திரன்
தண்கா - திருமால் திருப்பதிகளுள் ஒன்று
தண்டம் - கதாயுதம்
தண்டலை - சோலை
தண்டா - குறையாத
தண்டார் - குளிர்ச்சியான மலர் மாலை
தண்டு - தண்டாயுதம்
தண்டுறை - குளிர்ச்சியான நீர்த் துறை
தண்ணளி - குளிர்ச்சியான கிருபை
தத்தமவாய - தம் தம்முடையவை ஆயின
தத்தை - கிளி
ததி பாண்டன் - ஒரு பக்தன்
தந்த மலை - யானை
தந்து - நூல்
தம்பம் - தூண்
தமர்கள் - சுற்றத்தவர்கள்
தமியேன் - திக்கற்ற யான்
தமிழ் வேதம் - நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
தயங்க - விளங்க
தயிர்த்தாழி - தயிர்ப்பானை
தரங்கம் - அலை, கடல்
தரங்கிக்க - நிலை கலங்க
தரணி - பூமி
தரளம் - முத்து
தரா - செம்பும் காரீயமும் கலந்த உலோகம்
தராதலம் - பூமி
தரு - பாரிசாத மரம்
தருக்கா - களித்து
தருக்காவலன் - இந்திரன்
தவர்கள் - தவசிகள்
தவாத - குறையாத
தலை - தலைமை, முன், இடம்
தலைக்கொண்மின் - தலையிற் கொண்டு வணங்குங்கள்
தவனம் - வருத்தம், தவிப்பு
தவிசு - இருக்கை
தழல் - நெருப்பு
தழீஇய - மேற்கொண்ட
தழை - தழையாலான மகளிர் உடை
தளை - கட்டு, பாசம்
தறி - தூண்
தனஞ்சயன் - அர்ச்சுனன்
தனபாரம் - முலைச்சுமை
தனம் - செல்வம், முலை
தனமாதர் - முலைகளையுடையவள்
தனவிலை மாதர் - தாசி
தனியன் - ஆசிரியனைப் புகழ்ந்து கூறுந் தனிச்செய்யுள்

தாது - மகரந்தப் பொடி
தாமதர் - மந்தகுணமுடையவர்
தாமம் - மலர்மாலை, வரிசை
தாயத்தவர் - பங்காளிகள்
தாயன் - தாய் போன்றவன்
தார் - கிண்கிணி மாலை, மலர் மாலை
தாரகை - நட்சத்திரம்
தாரணி - படை வகுப்பு, பூமி
தாரம் - மனைவி
தாழ்த்து - வணங்கி
தாழுகை - வணங்குதல்
தாள் - பாதம், தண்டு
தாளத்தனம் - தாளம்போன்ற முலை
தாற்றுக்கமுகு - குலையின்ற பாக்கு மரம்
தானம் - மதநீர், இடம்
தானவர் - அசுரர்
தானை - சேலை, சேனை
திகிரி - சக்கராயுதம், சூரியன், மலை
திங்கள் - சந்திரன், மாதம்
திசை முகன் - பிரமன்
திரங்கா - தோல் சுருங்கி
திரிக்கின்ற - கடைகின்ற
திரிபுரங்கண்டது - எரித்தது
திரு - இலக்குமி
திருக்கு - குற்றம், மாறுபாடு
திருக்குறள் - ஸ்ரீ வாமனவதாரம்
திருச்சக்கரப்பொறி - திருச்சக்கர அடையாளம்
திரு நயனம் - திருக்கண்கள்
திருப்பாவை - இலக்குமி
திருப்பொற்பாவை - இலக்குமி
திருமாது - இலக்குமி
திருமாமணி மண்டபம் - பரமபதக் கொலு மண்டபம்
திருமாலடியார் - பாகவதர்
திருமாலை - தொண்டரடிப் பொடி ஆழ்வார் பாடிய பிரபந்தம்
திருமுகம் - கடிதம்
திருவாழி - திருச்சக்கரம்
திருவுந்தி - திருக்கொப்பூழ்
திரை - அலை
திலகம் - பொட்டு
திவாகரன் } சூரியன்
தினகரன் } சூரியன்
தீவிகை - விளக்கு
துகள் - தூசி
துகிர் - பவழம்
துங்கக்கிரி - திருவேங்கடமலை
துஞ்சுதல் - தூங்குதல்
துடி - உடுக்கை
துடைப்பது - அழிப்பது
துண்ணெனவு - திடுக்கிடுதல்
துத்தி - புள்ளி
தும்பை - போர் புரிபவர் அணியும் மாலை
துய்க்கும் - அநுபவிக்கும், உண்ணும்
துரக்கும் - செலுத்தும்
துவக்கு - தொடர்பு
துவந்தனை - துன்பம்
துவர் - செந்நிறம்
துவர்த் துப்பு - செந்நிறப் பவழம்
துவராபதி - துவாரகை நகரம்
துவரை - துவாரகை
துவரைப்பட்ட - செந்நிறம் பொருந்திய
துழாய் - துளசி
துளவம் - துளசி
துளவோன் - திருமால்
துற்ற - விழுங்கிய
துற்று - கவளம்
துறை - நீரில் இறங்க அமைக்கும் படி வழி, வழி

தெங்கின் பழம் - தேங்காய்
தெங்கு - தென்னை
தெருமந்து - கலக்கமடைந்து
தெருள் - அறிவு, தெளிவு
தெள்ளா - தெளியாமல்
தென் குருகைப்பிரான் - நம்மாழ்வார்; சேனை முதலியார் சீடர்
தென்றல் - தென்காற்று
தேசம் - இடம்
தேசு - ஒளி
தேமிக்க - தேன் மிகுந்த
தேவிமார், தேவியர் - மனைவிமார்
தேன் - மது, வண்டு
தையல் - பெண்
தொட்டு - தோண்டி
தொடி - வளையல்
தொடை - மலர் மாலை, துடை
தொண்டர் கற்பொடி - தொண்டரடிப்பொடி ஆழ்வார்
தொண்டை - கொவ்வைக்கனி
தொல் கமடத்தலம் - பழமையான கீழுலகம்
தொழும்பன் - வேலைக்காரன்
தோட்டி - அங்குசம்
தோடு - கம்மல், பூவிதழ்
நகை - பல், சிரிப்பு
நஞ்சம் - விஷம்
நண்ணலர் - பகைவர்
நண்ணுவை - அடைவாய்
நதிபதி - கடல்
நந்த - அழிய
நந்தகோபர்தம் காதலி - யசோதைப் பிராட்டி
நந்து - சங்கு
நமன் - யமன்
நயந்தவர் - விரும்பியவர்
நவநீதம் - வெண்ணெய்
நவின்றிடல் - சொல்லுதல்
நளினம் - தாமரை
நளின மடமங்கை - இலக்குமி
நற்றாய் - பெற்ற தாய்
நறவு - தேன்
நறிய - மணமுள்ள
நறை - தேன், வாசனை
நன்னாடு - மண்ணுலகம்
நா - நாக்கு
நாகம் - சுவர்க்கலோகம், திசை, பாம்பு, மலை, யானை
நாசி - மூக்கு
நாதமுனி - சடகோபரின் சீடர்
நாதன் - தலைவன்
நாந்தகம் - வாள்
நாந்தி - பாயிரம்
நாப்பண் - நடுவில்
நாபி - கொப்பூழ்
நாயிறு - சூரியன்
நாரணன் - திருமால்
நாரதி - நாரதர் அடைந்த பெண் வடிவம்
நாவாய் - கப்பல்
நாழி - படி என்னும் அளவைக் கருவி
நாளம் - தாமரைத் தண்டு
நாளும் - எக்காலமும்
நான்முகன் - பிரமன்
நானா போகம் - பலவகைச் செல்வங்கள்
நிகிலம் - எல்லாம்
நிச்சம் - தினந்தோறும்
நிசி சரர் - இரவில் சஞ்சரிப்பவராகிய அரக்கர்
நித்தர் - வைகுண்டவாசிகள்
நிம்பம் - வேம்பு
நியாமகன் - நியமிப்பவன்
நிரந்தரம் - எப்போதும்
நிரயம் - நரகம்
நிருதர் - அசுரர்

நிரை - பசுக்கூட்டம், வரிசை, கூட்டம்
நில மங்கை - பூமி தேவி
நிலமங்கை ஆடை - கடல்
நிறைமதியாளர் - சிறந்த அறிவினர்
நீசம் - இழிவு
நீர்த்தரங்கம் - நீரில் எழும் அலை
நீறு - புழுதி, விபூதி
நுங்க - விழுங்க
நுதல் - நெற்றி
நுதி - நுனி
நூற்றுவர் - துரியோதனாதியர்
நூற்றுவர் பதி - அஸ்தினபுரம்
நெக்கன - உருகின
நெஞ்சு - மனம், மார்பு
நெடிய - நீண்டவை
நெய்த்து - பளபளப்பாகி
நெற்றிக் கண்ணன் - சிவன்
நெறிமான் - நீதிவழியில் நடப்பவன்
நேமி - சக்கராயுதம்
நேமிச் சிலம்பு } சக்கரவாளகிரி
நேமித்திகிரி }
நேமியான் - திருமால்
நையாநிற்பர் - வருந்துவர்
நைவார் - வருந்துவார்
பகடு - யானை
பகிரதி - கங்கை
பங்கயத்தோன் - பிரமன்
பங்கயம் - தாமரை
பங்கயமின் - இலக்குமி
பங்கேருகம் - தாமரை
பசும்புரவி - பச்சைக் குதிரை
பஞ்சானனன் - ஐந்து முகங்களை உடைய சிவன்
பட்டர் - கூரத்தாழ்வான் புதல்வர் ; எம்பாரின் சீடர்
பட்டர் பிரான் - பெரியாழ்வார்
படலை - பூவிதழ்
படாம் - சீலை
படி - பிரதியுரு, பூமி
படைப்பவன்றன் ஊழிப்பொழுது - பிரமகற்பத்தின் முடிவு காலம்
பண் - இசை
பண்டு - முன்பு
பணமுகம் - படத்தோடுகூடிய முகம்
பணி - பாம்பு
பணித்து - சொல்லி
பணிப்பேரகம் - நாகலோகம்
பணிலம் - சங்கு
பணைப்புயம் - பருத்த தோள்
பத்தர் - அடியவர்
பத்தி - அன்பு
பதி ஊர், வீடு
பதின்மர் - பத்து ஆழ்வார்கள்
பதுமம் - தாமரை
பந்தி - வரிசை
பம்புதல் - பரவுதல்
பயந்த - பெற்ற
பயம் - பால்
பரகதி - மோட்சம்
பரசமயம் - அயல் மதம்
பரடு - கணுக்கால்
பரந்தாமன் - திருமால்
பரம்பும் - பரவும்
பரல் - பருக்கைக் கல்
பரவ - துதிக்க
பரவை - கடல்
பரன் - கடவுள்
பராங்கதி - வைகுண்டம்
பராங்குச தாசர் - பெரிய நம்பி; ஆளவந்தாரின் சீடர்
பராங்குசன் - நம்மாழ்வார்
பாராசரன் மாமகன் - வேத வியாசர்
பராமுகம் - அசட்டை
பரி - குதிரை

பரிக்கின்ற - தாங்குகின்ற
பரிசு - பெருமை
பரிதி - சூரியன்
பலி - பிச்சை
பவக்கடல் - பிறவிக் கடல்
பவனம் - காற்று
பழிப்பு - குற்றம், நிந்தனை
பள்ளி - படுக்கை
பற்றலர் - பகைவர்
பற்று - அன்பு
பா - பரப்பு, செய்யுள்
பாசம் - அன்பு
பாண் - பாணச்சாதியான்
பாண் பெருமாள் - திருப்பாணாழ்வார்
பாதகர் - கொடியவர்
பாதபோது - திருவடித்தாமரை
பாதவம் - மரம்
பாதாம்புயம் - திருவடித் தாமரை
பாதாளத்து அனத்தம் - நரகத் துன்பம்
பாதுகை - மிதியடி
பாயல் - படுக்கை
பாயல் வடம் - படுக்கையாகிய ஆலிலை
பார் - பூமி
பாரித்து - சங்கற்பம் செய்து
பாரிப்பது - கொண்டிருப்பது
பாரீர் - உலகீர், பாருங்கள்
பாலன் - குழந்தை
பாலியாது - பாதுகாவாமல்
பாலை - மணல், வெளி
பாவிக்கொணாத - எண்ணவும் இயலாத
பாழி - வலிமை
பாற்றி - அழித்து
பானல் - குவளை மலர்
பிடர் - கழுத்து
பிணை - பெண் மான்
பித்து - பைத்தியம்
பிரசம் - தேன்
பிரான் - தலைவன்
பிலம் - பாதாளம்
பிளிறும் - ஒலிக்கும்
பிறங்குதல் - விளங்குதல்
பிறப்பிக்க - பிறக்கச்செய்ய
பிறை - பிறைச்சந்திரன், சந்திரன்
பின் சினை - பின் புறம்
பின்னை - பின்பு, நப்பின்னைப் பிராட்டி
பின்னை கேள்வர் - கண்ணபிரானார்
பீதகம் - பொன்
பீதகவாடை - பொன்னுடை
பீதாம்பரம் - பொன்னுடை
புக்கு - புகுந்து
புகர்த் தடக்கை மா - ஐராவதம் என்னும் யானை
புகர்த்து - கபில நிறம் கொண்டு
புடவி - பூமி
புடை - பக்கம்
புடைக்கும் - பருக்கும்
புடை பரத்தல் - பக்கத்தில் பரவுதல்
புண்டரிகம் - தாமரை
புண்டரிகை - இலக்குமி
புண்டரீகம் - தாமரை
புண்பட்ட - வருந்தின
புணை - தெப்பம்
புத்தர்காள் - ஞானிகளே
புத்தூரன் - பெரியாழ்வார்
புந்தி - மனம்
புயங்க அணை-பாம்பாகிய படுக்கை
புயங்கம் - பாம்பு
புயங்கமலை - திருவேங்கடம்
புயம் - தோள்
புயல் - மேகம்

புரக்கும் - காப்பாற்றுவன் - ள்
புரந்தரன் - இந்திரன்
புரந்தன - பாதுகாத்தன
புரம் - உடல், நகரம்
புரவி - குதிரை
புரிசை - மதில்
புரிவை - செய்வாய்
புருகூதன் - இந்திரன்
புரைதல் - ஒத்திருத்தல்
புரோகிதர் - பின் வருவன வற்றை முன்னறிந்து உரைப்பவர்
புல்லர் - அற்பர்
புலமை - அறிவு
புலை - இழிவு
புலையர் - இழிந்தவர்
புவனம் - உலகம்
புவி - பூமி
புவி மாது - பூமி தேவி
புள் - பறவை, கருடன்
புளினம் - மணல் திட்டு
புறக்குன்று - சக்கரவாள கிரி
புறவடி - மேற்பாதம்
புன்குதலை-அற்ப மழலைச்சொல்
புன்னைகத் தடங்கா - புன்னைமர மடர்ந்த விசாலமான சோலை
புனம் - கொல்லை
புனல் - நீர்
பூ - மலர், அழகு
பூசல் - வாய்ச்சண்டை
பூண் - ஆபரணம்
பூத்த - உண்டான
பூதர் - மனிதர்
பூதரம் - மலை
பூதலம் - பூமி
பூமகள் - இலக்குமி
பூரியர் - அற்பர்
பெம்மான் - தலைவன்
பேடு } பெண் பறவை
பேடை }
பேர் - புகழ்
பை - பாம்பின் படம்
பைங்கேழ் - பசுமை நிறம்
பைம்பொனார் ஆடை - பீதாம்பரம்
பொங்கர் - சோலை
பொங்கிளமா - உச்சைச் சிரவம் என்னும் குதிரை
பொதியம் - பொதிய மலை
பொதுவர் - இடையர்
பொதுவர் மகள் - நப்பின்னைப் பிராட்டி
பொய்கை - குளம்
பொரு - ஒப்பு
பொருதிய - கொன்று வென்ற
பொருது - போர் செய்து, மோதி
பொருந்தார் - பகைவர்
பொருப்பு - மலை
பொரும் - ஒத்திருக்கும்
பொலம் - அழகு, பொன்
பொழில் - சோலை
பொறித்தல் - எழுதுதல்
பொன் - அழகு
பொன்னி - காவிரி நதி
பொன்னி நாடு - சோழ நாடு
போகம் - செல்வம்
போகவதி - பாதாள கங்கை
போத - மிக
போதம் - ஞானம்
போத மாதர்கள் எழுவர் - சிவ ஞான சத்திமார் எழு பேர்
போதவன் - பிரமன்
போதா - பெரு நாரை
போதாசனன் - பிரமன்
போது - மலர்
போதுமேல் - செல்வோமானால்
போந்தனம் - வந்தோம்
போனகம் - உணவு
மகம் - யாகம்

மகரக் குழை - மகர குண்டலம் என்னும் காதணி
மகரங்கள் - மகர குண்டலங்கள்
மகரம் - முதலை
மகவு - குழந்தை
மகிபன் - அரசன்
மகுடம் - கிரீடம்
மங்கல நாண் - தாலி
மங்குதல் - அழிதல்
மங்கை - திருமங்கை நாடு
மஞ்சு - மேகம்
மடங்க - அழிய
மடங்கல் - சிங்கம்
மடு - பள்ளம்
மடை மாறி - வழி மாற்றி
மண்டலம் - மண்ணுலகம்
மண்டோதரி - இராவணன் மனைவி
மணத்து - வாசனை வீசி
மணவாளர் - கணவர், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
மத்தன் - பித்தன்
மதங்கி - ஆடல் பாடல் வல்ல பாண் மகள்
மதங்கு - மதங்கி சம்பந்தமான கலம்பக உறுப்பு
மதமா - யானை
மதனன் - மன்மதன்
மதி - சந்திரன்
மதி சூடி - சிவன்
மதியா வரும் - கடைந்து உண்டான
மது - தேன், கள்
மதுகரம் - தேனீ
மதுகை - வலிமை
மதுரித்து - இனித்து
மந்தரம் - மலை
மந்தாகினி - ஆகாய கங்கை
மந்தி - பெண் குரங்கு
மந்திரம் - கள், மறை மொழி
மரகதம் - பச்சைக் கல்
மரு - வாசனை
மருங்கு - இடை, பக்கம்
மருத்தின் வெற்பு-சஞ்சீவி மலை
மருத்து - காற்று, மருந்து
மருந்தார் கிரி - சஞ்சீவி மலை
மருந்து - தேவாமுதம்
மருவீர் - அடையுங்கள்
மருவுவை - அடைவாய்
மருள் - மயக்கம்
மரை - மான்
மரைக் கணம் - மான் கூட்டம்
மல் - மல்லன்
மலங்க - கலக்கமடைய
மலர்க்கை - தாமரை மலர் போன்ற கை
மலர்ப்பொய்கை - தாமரைக் குளம்
மலர் மாமாது - இலக்குமி
மலராசனை - இலக்குமி
மலருளாள் - இலக்குமி
மவுலி - கிரீடம்
மழு - கோடரி, பழுக்கக் காய்ந்த இரும்பு
மழுவாளி - சிவன், பலராமன்
மழுவோன் - சிவன்
மழை - குளிர்ச்சி, மேகம்
மழைக் கண் - குளிர்ச்சியான கண்
மற்றோர் தலை - வேறோரிடம்
மறம் - கொடுந்தொழில், தம் குலமகளை மணக்க விரும்பிய அரசனுக்கு மறவர் மறுத்துக் கூறும் கலம்பக உறுப்பு
மறவர் - வீரர்
மறி அலை - சுருளும் அலை
மறிதல் - சுருளுதல்
மறுகுறும் - சுழல்கின்ற
மறை - வேதம்

மறைப்பரி - வேதங்களாகிய குதிரைகள்
மன்றல் - வாசனை
மன்று - சபை
மனை - வீடு, மனைவி
மா - குதிரை, மிருகம், இலக்குமி
மாகம் - ஆகாயம், புவர்லோகம்
மாசு - குற்றம்
மாசுணம் - பாம்பு
மாசுறவு - பெரிய சுறா மீன்
மாதங்கம் - சிறந்த பொன், பெண்ணை ஒரு பாகத்தில் உடைய உடல், யானை
மாதரங்கம் - பெருங்கடல்
மாதவர் - முனிவர், திருமால்
மா மணவாளர் - இலக்குமி கணவர்
மாய்கை - அழிதல், வஞ்சனை
மாயிரு ஞாயிறு - மிகப் பெரிய சூரியன்
மார்க்கண்டன் - மார்க்கண்டேயன்
மாரி - மழை
மாருதப் பாகர் - மாருதம் என்னும் யானைப்பாகர்
மாருதம் - காற்று
மால் - காதல், திருமால், மயக்கம்
மாலை - மயக்கம், சாயங்காலம், மலர் மாலை, வரிசை
மாவலி - மகாபலி சக்கரவர்த்தி
மாறன் - நம்மாழ்வார், சத்துரு, பாண்டியன்
மாறு - மிலாறு
மாணர்கேசன் - கங்கையாகிய பெண் பொருந்திய சடையை யுடைய சிவன்
மானிடர் - மனிதர், மானை இடக் கையில் ஏந்திய சிவபிரான்
மானும் - ஒத்திருக்கும்
மிடல் - வலிமை
மிடறு - கழுத்து
மிடித்து - துன்புற்று
மிடைதல் - நெருங்குதல்
மீளாப் பதம் - பரமபதம்
முக்கணன் - சிவன்
முகடு - உச்சி
முகப்போது - முகமாகிய தாமரை மலர்
முகில் - மேகம்
முகிற்றுளி - மழைத்துளி
முகுந்தன் - திருமால்
முசலம் - தண்டாயுதம்
முடப்பலவு - வளைவான பலா மரம்
முடைத்தலை - புலால் நாற்றம் வீசும் பிரம கபாலம்
முத்தர் - வீடு பெற்றவர்
முத்தி - மோட்சம்
முத்து வடம் - முத்து மாலை
முது நீர்த்திகிரி - நீர்ச் சக்கரம்
முதுமாசுணம் - ஆதிசேடன்
முந்நீர் - கடல்
முயங்கி - தழுவி
முரணிய - வலிய, மாறுபட்ட
முரல் - ரீங்காரம்
முரன் - திருமாலால் கொல்லப் பட்ட ஓரசுரன்
முருகு - வாசனை, தேன்
முழவு - மத்தளம்
முளரி - தாமரை
முளரியாள் - இலக்குமி
முற்றம் - முன்னிடம்
முறுவல் - பல்
முன் புனல்-பழமையான கடல்
முன்னரிது - நினைக்க இயலாதது
மூதண்டம் - பழைய உலகம்
மூதுணர்ந்தோர் - பேரறிஞர்

மூதூர் - பழையவூர்
மூரல் - பல்
மூரிப்புனல் - கடல்
மூலக் கடாகம் - அண்டத்தின் அடி முடி
மூலம் - கிழங்கு
மூவிலை வேல் - திரி சூலம்
மெய் - உடல்
மெல்குதி - மென்மையான குதிக்கால்
மேதக்க - மேன்மை பொருந்திய
மேயினை - பொருந்தினை
மேரு கிரி உடல் அவுணன் - இரணியன்
மேவலர் - பகைவர்
மேவி - பொருந்தி
மைத்தகர் - ஆட்டுக்கிடாய்
மைத்து - கறுத்து
மைந்து - வலிமை
மையல் - மயக்கம், மோகம்
மோட்டுக் கமடம்-பெரிய ஆமை
மோடி - துர்க்கை
மோலி - கிரீடம்
மௌலி - கிரீடம்
யமகம் - செய்யுளின் ஒரு சீர் அல்லது அடியில் வந்த எழுத்துகளே மற்றச் சீர்களி லும் அடிகளிலும் பொருந்தி வரும் 'மடக்கு' என்னும் அணி
யாமம் - மூன்று மணி நேரம்
ராகம் - செந்நிறம்
வகிர் - பிளவு
வகிரிளம்பிறையான் - சிவன்
வகுக்கும் - சிருட்டிப்பன்
வசை - நிந்தனை
வசையளவிட்ட மகிபன் - துரி யோதனன்
வடகுன்றம் - திருவேங்கட மலை
வடபத்திரம் - ஆலிலை
வடம் - ஆலமரம், கயிறு
வடவரை - மேரு மலை
வடவை - வடவாமுகாக்கினி
வடி - கூர்மை
வடிவு - வடிக்கப்பட்ட கள், வடிவம்
வடு - குற்றம், மாம்பிஞ்சு
வதனம் - முகம்
வந்தனை - வணக்கம்
வந்திக்க - வணங்க
வம்பு - பழிச்சொல், வாசனை, புதுமை
வம்பின் - வாருங்கள்
வயினதேயன் - வினதையின் புதல்வனை கருடன்
வரம்பு - எல்லை, வயல் வரப்பு
வராகம் - பன்றி
வருங்கொல் - வருமோ
வருடல் - தடவல்
வரை - மலை
வரைப்பட்ட வேழம் - மலை போன்ற யானை
வல் - சொக்கட்டான் காய்
வல்லி - பூங்கொடி
வலம்புரி - வலப்புறம் சுரிந் துள்ள சங்கு
வலயம் - தோளணி, வட்டம்
வலி - வல்லமை
வலைப்புன் பிறப்பு - சிக்கலான இழி பிறவி
வழும்பு - கொழுப்பு
வள்ளை - வள்ளைக் கொடியின் இலை
வளர்கோயில் - துயிலும் கோ யில்
வளி - காற்று
வளை - சங்கு, வளையல்
வன்மனம் - கடினமான உள் ளம்

வன்னி - நெருப்பு
வனசம் - தாமரை
வனம் - அழகு, காடு
வனிதையர் - பெண்டிர்
வாகினி - சேனை
வாங்கிய - வளைத்த
வாசம் - வாழ்வு, வாசனை
வாசவன் - இந்திரன்
வாடை - வடகாற்று
வாணன் - வாணாசுரன்
வாதித்தல் - அழித்தல்
வாமத்திருக்கரம் - வலக்கை
வாயில் - நுழை வழி
வார் - நீட்சி, முலைக்கச்சு
வார்சடை - நீண்ட சடை
வாரணம் - யானை
வாரல் - வாராதே
வாரிசம் - தாமரை
வாரிதி - கடல்
வால் வளை - வெண்மையான சங்கு
வாலி - சுக்கிரீவனுக்குத் தமையன்
வாலி காலன் - வாலிக்கு யமனை இராமன்
வாலுகம் - மணல் திட்டு
வாவி - குளம்
வாழ்விக்கும் - வாழச்செய்யும், வாழச்செய்வள்
வாள் - ஆயுதம், கூர்மை, ஒளி
வாள் விழி - கூர்மையான கண்
வாளரி - வாள் போலும் பகைவன், சிங்கம்
வாளி - அம்பு
வான்முகடூர் - சத்தியலோகம்
விசயன் - அருச்சுனன்
விசும்பு - ஆகாயம்
விடங்கர் - முதலை
விடை - எருது
விண் - சுவர்க்கம், ஆகாயம்
விண்டலம் - தேவலோகம்
விண்டு - திருமால், வாய்திறந்து
விண்டுசித்தன் - பெரியாழ்வார்
வித்தார் - விதையாயிருப்பவர்
வித்தார அடிசில் - பேருணவு
விந்தை - வித்தை
விபூதி - சித்தி
விமலன் - பரிசுத்தன்
வியப்பு - ஆச்சரியம்
வியன் - விசாலம்
விரகு - தந்திரம்
விரிஞ்சன் - பிரமன்
வில்லிபுத்தூர் வரும் பாவை ஆண்டாள்
விலோசனம் - கண்
விழுத்துணை - சிறந்த துணை
விளக்க - கழுவிச் சுத்தம் செய்ய
விளக்கம் - விளக்கு
விளிம்பு - கரை
விறல் - வலிமை
விஞ்ஞெதிப்பர் - விளையாட்டுக் காட்டுவர்
வீ - மலர்
வீடணன் - விபீஷணன்
வீடு - மோட்சம்
வெகுளி - கோபம்
வெஞ்சமம் - கொடிய போர்
வெஞ்சிலை - கொடிய வில்
வெஞ்சினம் - கடுங்கோபம்
வெஞ்சுரம் - கொடிய பாலைவனம்
வெதும்பினள் - கொதித்தனள்
வெப்பு - காய்ச்சல்
வெய்யவன், வெய்யோன் - சூரியன்
வெருவிட - அஞ்ச
வெருள் - அச்சம்
வெவ்வாய் - கொடிய வாய்
வெள்ளி மால்வரை, வெள்ளி வேதண்டம் - கைலாயமலை

வெளிறு - வெண்மை
வெற்பன் - குறிஞ்சித் தலைவன்
வெற்பு - மலை
வெறி - வாசனை
வென்றி - வெற்றி
வேதண்டம் - மலை
வேதன், வேதா - பிரமன்
வேதாளத்தன் - பூதகணங்களை உடைய சிவன்
வேது - வேதனை
வேய் - மூங்கில், புல்லாங்குழல்
வேர், வேர்வு - வியர்வை
வேரி - தேன்
வேலை - கடல், தொழில்
வேலையுலகு - கடலால் சூழப்பட்ட உலகம்
வேழம் - யானை
வேள்வி - யாகம்
வேனில் - கோடை காலம்
வை - கூர்மை
வைதேகி - சீதை
வைப்பு - பூமி
வையம் - பூமி

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

[எண்—பக்கவெண்]


அக்கர வம்புனைந், 66
அங்கத் தமிழ்மறை, 206
அங்கதிருங், 128
அங்க மலைக்கும், 173
அங்கையின், 125
அங்காக்கைக்கே, 93
அஞ்சக் கரத்தலை, 65
அஞ்சக் கரவட, 170
அடந்தை, 41
அடிகண் டிலர், 43
அடித்தலத்திற், 108
அடித்தலம், 39
அடியவ ராகவு, 76
அடியாராய், 258
அடியா னுல, 264
அடியுங் குளிர்ந்தாள், 279
அடைக்கலந் தாயத், 63
அடைக்கலந் தானை, 241
அடையப்பன் ஞைகங், 66
அண்டப் பந்தரிற், 96
அண்ட மடங்கலை, 75
அண்டமுழு, 19
அண்டர் போற்றுந், 35
அண்ணலை வான்மதி, 244
அத்தனு மன்புள, 76
அத்தனை வேதனை, 65
அத்தா அரங், 51
அத்திரங் காய, 70
அந்த கராசலம், 79
அம்பரந் தாமரை, 163
அம்புலியின், 126
அம்புலி லங்கை, 68
அமர வரம்பையி, 67
அரங்கம் குடந்தை, 184
அரங்க மாளிகைக், 16
அரங்காது வார், 63
அரவி னடித்தா, 8
அரனென் றும், 102
அராவணையில், 50
அரிதா மரைக்கணந், 63
அரிய வரந்தந், 239
அருட்கொண்டல், 48
அருடரு மங்கை, 220
அரும்பா கவதரித், 87
அரும்பா தகன், 204
அரும்பித் தளா, 18
அரும்புண்ட, 36
அரும்புன் ஞைகத், 28
அருமறை, 53
அருவரங்கள், 110
அருளக் கொடியிடை, 247
அரைக்கலை வேலை, 65
அரைசாகி, 275
அல்லலங் காரையுஞ், 249
அல்லிமலர்க், 131
அலங்கார ருக்கு, 252
அலங்காரன், 235
அவத்தப்புன், 105
அழுக்கன் றியகருங், 213
அளப்பது மங்கை, 238
அற்பர தத்து, 173
அறியின், 43
அறுகு தலைப்பெய், 80
அறுகூடு கங்கை, 197
அன்பணிந்த, 284
அன்பென் னும், 100
அன்றே யடைய, 93
ஆக்குவித் தார், 67
ஆகம திக்கு, 75
ஆங்கார மாமின்னை, 94
ஆசு கவிக்கு, 80
ஆட்பட்டேன், 285
ஆடும் அரவில், 42
ஆடும் படநா, 19

ஆடுமுன் னீர்முதல், 88
ஆதரிக் கப்பட்ட, 181
ஆதவ னந்தரந், 66
ஆதித் திருவெழுத், 52
ஆதிதிரு வேங், 157
ஆதி யராவிற், 223
ஆமருவி, 258
ஆமவரைப், 236
ஆயினை மனையை, 16
ஆயுந் துறவறத், 143
ஆர்க்கும் வலம், 268
ஆர்க்குமிது, 296
ஆரணங்கள், 107
ஆரத் தரந்தருந், 75
ஆரமீ தரும், 46
ஆரமுதின் இன்ப, 104
ஆராத னஞ்செய்து, 67
ஆரூக் கிவரை, 42
ஆலத் திலைசேர்ந், 287
ஆவாக னத்த, 63
ஆவும் பயமும், 45
ஆவைக்கல், 56
ஆழ்வார்கள், 112
ஆழ்வார்முன், 1
ஆளாக வந்த, 68
ஆளாய் உனக், 271
ஆளா னவர்கண், 38
ஆளில் அமரர், 52
ஆனந்தமா, 25
இக்கரை யந்திரத், 158
இசையள விட்ட, 49
இடராக வந்தென்னை, 70
இடரான, 258
இடருடையேன், 300
இடவ மலைக்கும், 68
இரங்கத் தனித், 11
இரங்கும் உயிரனைத்தும், 293
இரணிய னாட்ட, 195
இரவியை, 27
இருக்கந் தர, 215
இருக்கா ரணஞ், 160
இருக்குமந் தத்தி, 69
இருகூ லமும், 40
இருங்குங் குமத், 15
இருந்தே னுக, 87
இருந்தை யிலங்க, 69
இருப்ப தனந்தனி, 166
இருபது மந்தரத், 168
இரும்புவனம், 22
இருளினும், 13
இல்லக் குறத்திய, 136
இல்லற மென, 26
இல்லைக்கண்டீ, 178
இலங்கையி, 65
இன்னிசை, 33
ஈருரிப தாஞ்சோழும், 254
உகந்தார்க், 281
உடலம் புயங்கத், 230
உடுக்கு முடைக்கு, 175
உடுத்திரளோ, 106
உடுமாயக், 109
உண்ட மருந்து, 182
உண்டாம் முறைமை, 297
உண்டிறக்கும், 242
உண்டுகேட், 264
உண்டுமிழ், 33
உணராத, 110
உம்பர்க் கரிய, 50
உய்வந் தொழும்பு, 231
உயரவிட்ட, 97
உயிர்க்கும் படிக்கு, 248
உருமாறிப், 24
உரைகலந்த, 288
உரைமாற்ற, 207
உலகந் தரவுந்தி, 188
உலகுதிக்கும், 239
உள்ளமஞ்சாய், 201
உன்னைக் கரிய, 178
உன்னைக் களவில், 46
ஊசல் வடம்போ, 24

ஊர்வேன் மடலை, 268
ஊரும் திரைப், 47
எங்கணு நிறைந், 31
எங்காந்த ளங்கை, 26
எண்ணிற் றிகிரி, 40
எத்திக்குங், 148
எந்த வுலகத்தும், 53
எப்பூ தலமு, 118
எவ்விடமு மாறு, 156
என்றுதாங், 217
என்றுந் துய, 285
என்னப்ப னுகத்து, 194
எனக்காவி, 228
எனக்குப் பணிய, 182
எனக்கே திரு, 5
ஏத்துமின், 210
ஏற்ற மணவாள, 253
ஏறு கடாவுவ, 190
ஏறுங் கரியும், 69
ஐங்கோலும் ஒரு, 104
'ஐய! மருந்திவை, 64
ஐயா துவந்தனை, 164
ஒண்கொம்பிற், 122
ஒண்சிந்துரத்தை, 120
ஒத்தமரர், 270
ஒருதாய் இருந்து, 45
ஒருநயம், 31
ஒருபா லமரர், 251
ஒருபொருள், 36
ஒருமா தவனி, 162
ஒளிக்கும் இரு, 34
ஒற்றைச் சரம், 44
ஓங்கார வட்டத்து, 54
ஓதக்கேள் நெஞ்சே, 255
ஓதப் புனற்பொன்னி, 44
ஓதுமறை யோர், 138
ஓரறிவு மில்லாத், 296
ஓராதார், 289
ஓராழி வெய்யவன், 57
ஓருரு வெற்பை, 42
ஓலப் புனலரங், 44
ஓலப் புனற், 40
ஓலாழி சூழ்புவி, 52
கடமா மலையின், 165
கடல்வழி விட, 11
கடிக்குங் களப், 46
கடிக்கும் பணிநஞ், 71
கண்ட கனவின், 71
கண்டடைந்த, 142
கண்டலங்காரள, 83
கண்டவ னந்தரங், 170
கண்டறிந்தும், 290
கண்டா கனன், 231
கண்ணனை யெனெஞ், 180
கண்ணுல் வெடித்த, 126
கதிபட்ட, 45
கதிராரும் நீள்முடி, 54
கமலங் குவளை, 81
கரணம் தவிர்ந்து, 56
கருத்தா தரிக்கு, 177
கருத்தினல், 265,
கருமலையும், 2.5
கருமா தவா, 183
கரைபொரு, 29
கல்விருந்தான், 256
கலக்கூழைக், 70
கலந்தமா, 300
கவித்தானை, 223
கழலைப் புகுந்த, 218
கழன்றுபோம், 261
கற்றூர் எனினும், 6
கற்றின மாயவை, 81
கறங்காழி, 39
கனக விமான, 80
காண்கின்ற, 280
காண விரும்பு, 283
காணுத புதுமை, 20
காணியும் இல்லமும், 266
காணையிலார், 137
காதலிற் றுச், 134

காதலைப் பத்தினி, 219,
காதலை வாரிமண், 84
காந்த ளிரவலர், 131
காப்பவ னந்த, 230
காமத்தனைப், 232
காமனத் தால்விழ, 82
காயிலை தின்றும், 10
காரக மோகம், 30
காரங்கத், 102,
கால மலைக்கும், 247
கால முணர்ந்த, 28
காலமும் நோயும், 277
காலளவும்போதா, 266
காலா யிரம்முடி, 5,
காவிரிவாய், 37
காவும் சுரபியும், 53,
கானக முண்டதிற், 193
கானே டருவி, 141
கிட்டுநெறி, 144
குருகுறங்கு, 14,
குருகூ ரரங்க, 195
குவலையஞ் சூழ்கடல், 90
குளப்படி நெய்யடி, 90
குறித்தொருவர், 274
குறியானைச் செங்க, 91
குன்று விளைவுடன், 46
குன்றுக ளத்தனை, 202
கூட்டு தவத்தவருங், 152
கூட்டுகைக் குஞ்சர, 209
கூறுங் கிளிமொழி, 139
கூறுபுகழ்த், 265
கூனர் துலாவயற், 47
கூனலிள வெண்குு, 122
கேசீவனையே, 11
கேள்வித் துறவோர், 134
கைக்குஞ் சரமன், 61
கைத்தலு, 179
கைத்துப் பழவினை, 55
கையும் உரையுங், 261
கொங்குண்டு, 45
கொண்ட மருந்துங், 241
கொண்டல்காள், 9
கொண்டலை யா, 216
கொம்பணியுங், 124
கொம்பினிருல், 133
கொய்யுமலர், 154
கொல்லைக் குறவர், 121
கொற்றவன்றன், 21
கொற்ற விராவணன், 246
கோங்கைக்கோ 140
கோடஞ்சுங், 147
கோடலிலா, 135
கோதண்டத்தா, 199
கோலமணிப், 132
கோலியொரு, 117
கோவலன், 217
கோள்கரவு, 140
கோளார் பொறி, 278
சங்கத் தமரர், 86
சந்தாடும், 106
சரணியனைத், 227
சருக ருந்தியைம், 17
சற்பத்துறங்கும், 45
சரகைக்குந் தத்து, 86
சாய்ந்ததிரு, 268
சாரு மருவி, 150
சாற்றுக் கரும்பனை, 214
சிங்கா தனம், 50
சித்திக்கு வித்தது, 174
சிந்தா குலமுய்யக், 94
சிந்திக்கத் தித், 19
சிந்திக்க நெஞ், 46
சிந்திக்க லாரங், 240
சிந்தை யிற்குடி, 26
சிரந்தடி வானிவ, 175
சிரம்சே தனன், 52
சிலமாத வஞ்செய்தும், 256
சிறக்கும் பதந்தரு, 171
சிறப்புடைய செல்வத், 255
சின்னூல், 41

சீதங்கொள், 146
சிதரன் பூமகள், 57
சீர்பூத்த, 3
சீர்வந்த உந்தித், 255
சீரரி தாழ்பொழிின், 242
சீரருளால், 294
சீரறிந்து, 292
சீரேர் தருங்கதி, 267
சீவார் கழலே, 188
சூட்டோதி மஞ், 234
சூழிக் களிறுய்ய, 41
செப்புங்கால், 259
செப்பேன் மனி, 269
செப்போ தனஞ், 215
செம்பதும ராகச், 132
செம்பொன், 20
செய்தவ ராக, 211
செய்ய சடையோன், 262
செய்யவ ளைக்குரு, 59
செயற்கரிய, 263
செல்லுக்கு மேற், 127
செல்லுக் குவளை, 234
செல்லுந் தொறு, 264
செல்வம் உயிருடம்பு, 299
செவித்தலை வன்னி, 194
செறிந்தபணை, 294
சென்மந் தரங்கங், 72
சென்றது காலம், 269
சென்றவ னத்தத், 181
சென்றால் குடை, 52
சென்றுசென்று, 259
சென்றுபுனன், 283
சென்னி யிலங்கை, 165
சேணுலவு திங்க, 129
சேர்ந்து கவிக்கும், 161
சேர்ந்துனக்குக், 262
சேரா தகாத, 213
சேராது முன், 269
சேரு மறுக்கமு, 198
சேலஞ்சுங் கண், 153
சேவடியால், 13
சேவிக்க வாழ், 27
சொன்னேக்கும், 1
சோதித் திருவுரு, 54
சோதிமதி வந்து. 113
சோலையி லாமையில், 250
ஞாலத்திகிரி பக, 54
ஞாலத்திகிரி முது, 51
ஞானக்கண், 194
தக்க மறையோர், 145
தஞ்சந் தன, 224
தடவிக டத்தலை, 192
தண்கமுகின், 128
தண்டா மரைச்சுனை, 155
தண்டுளவம், 49
தண்ணிலைக்கண், 128
தந்த மலைக்குமுன், 59
தருக்காவ லா, 60
தருமம் தவிர்ந்து, 50
தலையிலங் காபுரஞ், 60
தவம்புரிந்த, 286
தவராக வக்கணை, 84
தனக்குடலம், 277
தனக்குரிய, 286
தனத்துக் கரரவிய, 219
தனமாத ரஞ்சொற், 59
தனித்தொண்டை, 183
தரங்கட லாழி, 187
தாட்கடிமை, 297
தாட்கமலப், 142
தாமக் கடை, 54
தாமத் தளை, 192
தாமரை மாத்திரை, 85
தாமரையான், 284
தாரணி தானவன், 60
தாரா கணமண், 85
தாருடுத்துத், 276
தாரேற்ற, 43
தாலத் திழி, 277
தாலேலோ, 289

தாவிவரும், 119
தாழ்ந்த வருக்கந், 190
தாழா திபஞ், 53
தாளத் தனத், 60
தாளாற் சகங், 49
தாளிரண்டும், 24
தாற்றுக் கமுக, 40
தானந் தியாகந், 85
தானவ ராகந், 185
தானவ னுக, 185
தானே சரணமுமாய், 295
தானே தனக், 9
தானே படைத்து, 260
திங்களப் பாநின்ற, 222
திங்களிறு மாந்துலவ, 125
திண்சுட ராழி, 39
திண்பார் புகழும், 112
திரிக்கின்ற, 42
திரிந்துழலுஞ், 294
திருக்கண்டேன், 100
திருக்கலியன், 106
திருக்கா விரிக்கும், 72
திருகவி மங்கை, 206
திருப்பொற், 18
திருமந் திரமில்லை, 204
திருமாலை யாண்டான், 57
திருவடி வைக்க, 196
திருவரங்கம், 18
திருவரங் காவுறை, 58
திருவழுதி வள, 99
திருவாழத், 97
திருவாழி சங்கு, 38
திருவிளை யாடு, 232
திருவேங் கடத்து, 159
திறந்திறமாக், 299
தினகர னுர்கவி, 71
தீங்கட மாலத்தி, 186
தீண்டா வழும்பும், 10
தீரத் தரிங்கப், 94
துய்யசெம்பொற், 116
துளவிலை யார்பொன், 251
துறைமதி யாமல், 21
துன்பங் களையுஞ், 203
தூர விரும்புண், 161
தெங்கிளநீர், 125
தெய்வம் பல, 216
தெள்ளா வரும், 55
தெள்ளியதோர், 117
தெள்ளும் புனற், 50
தெளியும் பசும், 276
தென்றலைக், 35
தேடு கின்றனே, 15
தேமா மலர்க், 51
தேமிக்க பச்சைத், 43
தேரா யிரவு, 221
தேவருடை யைந், 129
தேவரை யாதன், 225
தேவும் உலகும், 281
தேற்றுவித்தாற், 244
தேனந்து சோலை, 19
தேனமருஞ், 12
தேனியலுங், 137
தேனேறித், 121
தொட்டுண்ட, 35
தொடைமாறலும், 55
தொண்டுபடார், 231
தொண்டொடு, 143
தொல்லைக் கமடத், 53
தொலைந்தானே, 243
தொழப்பெறு, 16
தொழும்பாய, 300
தொழும்பா லமரர், 171
நகமுண் டகந்தரித், 89
நகரமு னுடும், 227
நருகதிர் வழங்கு, 6
நடைக்கலங் கார, 172
நண்ணி'ன னுக, 218
நந்த மரங்களை, 64
நம்பிநின் றேனுன், 245
நம்பெரு மாளொழுத், 51

நரகந் தரம்புவி, 64
நரக மடங்கலுஞ், 199
நல்லவந் தாதி, 158
நறைத்துளவம், 48
நன்காமர், 149
நன்கோடு, 146
நன்முலைபோல், 138
நன்னுத லைப்பணி, 243
நாகத்தின் மேற், 132
நாடுதும்வா, 263
நாமங்க ளாவி, 212
நாமம் மிகும்புகழ், 47
நாயக ராத்திரி, 169
நாரியர்தங், 147
நாலவிட்ட, 123
நாலு திசைமுகமு, 114
நாளும் பெரிய, 38
நான்கூட்டில், 254
நான்முகனை, 101
நானடிமை, 270
நானந்த வைகுந்த, 8
நிணக்கோல, 48
நிலையாமை, 212
நிறக்குஞ் செழுஞ், 42
நின்ற பிராணன், 209
நின்று திரியும், 293
நினைப்பரியா, 229
நீசச் சமணர், 36
நீடு கொடுமுடியு, 146
நீடும் திகிரிப், 56
நீர்மைகெட, 292
நீராழி வண்ணனைப், 207
நீரி ருக்கமட, 12
நீரில் புகும், 47
நெஞ்ச முருக்கு, 212
நெஞ்சிலம் பாற்ற, 244
நெஞ்சுகந் தந்தை, 163
நெட்டரவின், 49
நெடுங்கடல், 40
நெடுங்கான், 46
நேசத்தால், 288
நேசந் தழைக்கும், 24
நேர்க்கவலை, 154
நோய வேதனை, 224
நோவினையு, 118
படநாகத் தந்தர, 74
படராகு வால், 222
படுப்பவரை, 38
பண்கொண்ட, 30
பண்டு விழுங்கிய, 45
பண்டேயுன், 290
பண்டை யிருக்கு, 186
பணவா ளரவி, 95
பணிந்தேன், 271
பணிபதி வாடநின், 248
பதக்கம லங்க, 72
பதத்தமிழால், 291
பதின்மர் உரைத்த, 301
பந்திக் கமலத், 41
பரந்தலைக்கும், 108
பரந்தா மரை, 221
பரவையி லன்ன, 74
பருப்பதந், 239
பலகுவ ளைக்குட், 203
பழுத்தெட்டி, 189
பற்றி யிராமற், 167
பறந்து திரிதரினும், 281
பாசமாம் அடியர், 31
பாட்டுக்கும், 41
பாடு மதுகரமும், 156
பாணிபிறை, 114
பாதகங் கைக்கு, 73
பாதக ரத்தனை, 249
பாத மராவுறை, 172
பாதியாய் அழகிய, 9
பாம்புங் குளிர், 150
பாரோடு, 149
பாலனஞ்செய், 73
பாவிக் கமல, 233
பாவிக்கொ ணைத, 48

பாவை யிரங்கு, 201
பாற்கடல், 39
பானிறங்கொ, 124
பிடிக்கும் பா, 2
பித்தரும் பாகின்ற, 208
பித்துமல ருமை, 119
பிழைத்தலை, 225
பிறப்பற்று, 278
பிறவாத பேறு, 253
பிறவியெனும், 36
பிறைமாலை, 184
பின்னிறப் பும், 237
பின்னைக் கினிய, 41
புக்கவரு மாதவ, 145
புடைக்குங் குட, 51
புண்டரிகத், 109
புண்ணார் உடற், 37
புண்ணியங் காமம், 176
புதுவைநகர்ப், 96
புயம்நான்கு, 8
புரண்டுதிக் கும், 191
புரந்தர னுமெனப், 209
புரமா யிரம், 39
புலமையிலே, 245
புலையாம் பிறவி, 10
புள்ளரவம், 116
புறக்குன்று, 40
பூங்கா விரிப், 39
பூசுரரும், 98
பூமரு பொங்கர், 43
பூரண ஞானன், 189
பெண்ணுக்கு விக்கச், 179
பெருமாலை, 28
பெறுவரம் கேசவ, 14
பேச வந்த, 22
பேசவரின், 260
பேணிக் கவித்த, 221
பேய்க்குமொரு, 151
பேரானைக் கோட்டினை, 197
பேரொத்த, 45
பேறு தரினும், 261
பையிலத்தி மூளை, 73
பொங்கர, 50
பொய்கை பூதன், 253
பொய்யாம் வினை, 135
பொருங்கே தன, 49
பொருதரங்கத், 162
பொருளாசை, 285
பொன்கமழுங், 127
பொன்னும் மணியும், 113
போதகத் தானும், 233
போத வெனக்கெளி, 31
போதனார், 103
போதார விந்த, 166
போதாரும், 111
போதா விருசுடரும், 151
போமானை, 257
போயவனி, 9
போற்றி செய, 256
போற்றி யிராம, 237
போனகம் பதி, 14
மகரந் தகாதலை, 77
மசகந் தரமென, 186
மட்டளை தண்டலை, 205
மட்டுவளர், 144
மண்டலமும், 6
மண்ணி லரங்க, 301
மண்மட்டுத், 151
மண்மூலந் தா, 123
மணவாள் அரவிந்தை, 57
மணவாள ராவி, 229
மணியாழி வண்ண, 180
மணிவாசற் றாங்க, 82
மத்தாற் கடல், 298
மதயானைக், 272
மதிக்கவ லைப்புண்ட, 62
மதியா தவன்கதிர், 167
மரகதத் தைக்கடைந், 202
மரணங் கடக்குஞ், 187
மருந்துவந் தார், 214

மருமலர்க் கோயில், 42
மருமாலைப், 102
மருவு தந்தை, 9
மருள்இரிய, 101
மலங்கத் தனத்தை, 177
மலருந்தி மேல்விழ, 82
மலைமகளும், 98
மலையி னரக்க, 200
மழைபிறை, 23
மழைபோல், 34
மழைமுகி, 37
மறக்குமோ, 12
மறந்த மறையும், 43
மறிக்குங்கயற். 44
மறியா எழும்திரை, 48
மறைப்பாற், 2
மறைப்பொரு, 38
மன்னு குடிக், 121
மனந்தலை வாக்குற, 193
மனிதக் கவிமொழி, 56
மாகம் பிலந்திக், 44
மாண்டு பிறக்குங், 117
மாணிக் கனகப், 208
மாதங்கத் தானை, 61
மாதண்டப், 44
மாதம்பத்துக், 78
மாதரம்பொன், 139
மாத ரார்கண், 148
மாத வங்களென், 25
மாதவர் உம்பர், 44
மாதவ ராக, 238
மாதிரங் காதன், 200
மாதுமடக் கன்னி, 120
மாமனங் காந்த, 198
மாயவன் கண்ணன், 160
மாயா தவர்தலை, 89
மாயிரு ஞாயிற, 49
மால்வே ழமுமாவும், 291
மாலாய்ச் சசி, 115
மாலைக் கரும்பு, 250
மாலைக்கல் லார, 62
மாலைக்கோ லித், 113
மாலை மதிக்குஞ்சி, 159
மாலைமுடி நீத்து, 282
மாவிற் குயிலு, 141
மாற்கமுந் தாந், 279
மாறன் பராங்கதி, 58
மாறுபட, 272
மானத் துவண்ட, 92
மானு கவரு, 88
மானுர் கேசன், 31
மானிட ராக, 62
மானை எய்தவர், 13
மின்போல் இடை, 47
மீண்டுந் தெளியார்கள், 287
மீன்பூத்த, 97
முக்கால மில்லா, 254
முத்தரன் றே, 220
முதல்வண்ணம், 280
முதுவிருந் தா, 228
முந்நூன் மறை, 138
முருகனுறை, 109
முலைகொண்ட, 32
முற்றிலைப் பந்தை, 204
முறையிடத் தேச, 174
முன்பால் இலைமக, 55
முன்னம் பிறந்த, 28
முன்னமேழ், 21
முன்னுள் விசும், 39
முன்னே பிறந்திறங், 253
மூலமே என்றகரி, 112
மெய்த்தவம், 191
மெல்லியலைப், 236
மேவலர்வாழ், 34
மொய்வதன, 136
மொழித்தந்தை, 246
மோகத் துயில்புரி, 54
மோதாக வந்தனை, 225
மோதித் திரை, 51
வஞ்ச மடித்திருப், 153

வடமலை தென்மலை, 79
வடமலை யப்பன், 176
வடியாத பவக்கட, 35
வண்ணங் கலிவஞ்சி, 88
வண்மைதிகழ், 133
வணங்கரி யானரங், 83
வணங்கேன் பிற, 267
வந்தனை யேற்றனை, 61
வந்திக்க வந்தனை, 161
வந்தித் திருக்கு, 196
வம்பமரும், 104
வரவேண்டுங், 280
வருந்துவ ரைப்பட்ட, 62
வருமஞ் சனவ, 175
வளையாழி வண்ண, 77
வல்லாம் மூலைத்திரு, 52
வலைப்பால் விடம், 55
வழங்கும் உயிரனைத், 298
வள்ளிபுணர்ந், 115
வளர்ந்தழைக்க, 274
வன்குறிஞ்சி, 130
வனத்திற் சிலம்பி, 91
வாடப் பசித்த, 119
வாடி ஒட, 17
வாடை யாய்இரு, 33
வாய்த்த கருமமினி, 282
வாயால் மலர், 273
வாயி னிரங்கினை, 11
வாயு மனைவியர், 274
வாராக வாமன, 78
வாரித் தலமும், 40
வாரி யரங்கம், 36
வாவுகவின், 130
வாழ்க்கைமனை, 152
வாழ்குமரன் மேற், 295
வாழ்விப்பான், 273
வரிழம் புலியி, 142
வாழரியுஞ் சந், 155
வாழும் அடியார், 267
வாழும் மவுலித், 15
வாழுமின் பங்கய, 226
வான்பார்க்கும், 271
வானவ தாரணி, 235
வானுட ரிற்சிலர், 46
வானிட்ட கீர்த்தி, 2
வானோர் முதலா, 275
விடத்தேரை, 92
விடந்தோய், 48
விடாது பூம, 32
விண்ணிட்ட, 55
வித்தக ரும்பர்க், 210
விரும்பினவை, 257
விலையான திலை, 25
விழிபறித்து, 103
விழுங்கூன், 92
வினைக்குமருந், 211
வினையாட்டி, 228
வீழ மாரமர, 226
வெஞ்ச மங்கரு, 32
வெள்ளியகண், 130
வெறுத்தவரைக், 215
வென்றிவேல், 107
வேங்கடத் தாரை, 164
வேங்கட மாலை, 159
வேதந் தொகுத்துத், 2
வேதா வடமலை, 169
வேலையுல கிற், 22
வைகலந்த, 6
வைகுந்த மாய, 180
வைகுந்தர், 78
வைதா ரையு, 240
வையம் புகழ், 57
வைய மடங்கலு, 168
வையமொரு, 95

18 JAN 1953
MADRAS